## தென்னிந்தியத் திருச்சபை


## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2017

செம்பொருள்

"மன்னிப்புக்கும் ஒப்புரவுக்கும் நேரான திருப்பயணம்"



வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது. திருப்பாடல் 36:9

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

2017

கருப்பொருள்

*மன்னிப்புக்கும் ஒப்புரவுக்கும் நேரான திருப்பயணம்*

***Pilgrimage Towards Forgiveness and Reconciliation***

வெளியீடு

தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்

# ஆசியுரை

***ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!***

*ஆண்டவருடைய திராட்சைத் தோட்டத்தின் பணிவிடைக்காரராகிய உங்களெல்லோரையும் வாழ்த்துகின்றேன்.*

*கடவுள் தமது உபதேசத்தை மழைப் பொழிவிற்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கின்றார் (இச. 32:3) திருமறையின் ஒவ்வொரு வசனங்களும் வானத்து நீராகிய மழை நீர் தருகின்ற ஆசீர்வாதத்திற்கு ஒப்பானது. குடிப்பதற்கு குடிநீரைத் தந்து தாகம் தீர்க்கிறது; வறண்ட நிலத்தை வளமுள்ளதாக்குகிறது; கடலிலே அதிக உப்பு சேராதபடி மழைப் பொழிவு உதவுகிறது. இங்ஙனம் பலநிலை பயனைத் தருகின்ற திருமறை வசனங்களை மக்கள் உள்ளமாகிய நிலத்தில் ஏற்றுக்கொண்டு பலன் கொடுக்கும்படியாக நிலத்தை ஆண்டவருடைய வார்த்தை எனும் ஏரினால் ஆழமாக உழ வேண்டும். 'அகல உழுவதிலும் ஆழ உழுவதே சிறந்தது' என்பது தமிழில் வழங்கப்படுகின்ற முக்கியமான பழமொழிகளுள் ஒன்று. உழவின் போது ஆழமாக ஏரின் கொழு நிலத்திலிறங்கும் போது, மழை நீர் நன்கு இறங்கி வயலின் ஈரப்பதம் காக்கப்படும். அது மட்டுமல்லாது இவ்வாறு செய்வதால் சில களைகளும் வெளியே பிடுங்கப்பட்டு விடுகின்றன.*

*மழை நீராகிய வசனத்தை மக்கள் ஏற்கனவே திருமறையில் படித்திருப்பார்கள். அதை அவர்கள் வாழ்வோடு ஒப்பிட்டு ஏரினால் உழுவது போல ஆழமாக அதன் கருத்துக்களை விளக்கும் போது, அது உள்ளத்திற்குள் மழை நீராகிய வானத்து நீரை இறங்கச் செய்து, ஈரப்பதம் ஏற்படுத்தும் நற்செயல்களாம் பயிர்களை நற்பலனாகத் தருகின்றது.*

*திருமறையை ஆழமாகக் கற்று மக்களுக்குப் போதிக்கின்ற மேன்மையான **'சொல்லேர் உழவர்'** பணியை என் சகோதரர்களாகிய போதகர்களும், திருப்பணிவிடையாளர்களும் நிறைவேற்ற அன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.*

*இவ்வாண்டிற்குரிய அருளுரைக் கையேட்டை தயாரித்த தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்** மற்றும் கன்வீனர் அருள்திரு. **R. சாம் பிரின்ஸ்** ஆகியோரைப் பாராட்டுகின்றேன்.*

*இந்நூல் பயன்படுத்துவோருக்கும் பயன்பெறுவோருக்கும் வளமான நன்மைகளை வார்த்தையென்னும் வானத்து நீரால் பெருக்க வாழ்த்தி ஜெபிக்கும்.*

Rt.Rev.Dr. **G. தேவகடாட்சம்,** M.A.,B.D.,M.Th.,D.D.
*முன்னாள் பிரதமப் பேராயர்* C.S.I. &
*பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்.*

# நன்றியுரை

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!***

*பல நாடுகளிலும், கலாச்சாரங்களிலும் பின்பற்றபடுகிற ஒரு நல்ல மரபு உபசரிப்பு. தேநீர் கொடுத்தும், உணவு கொடுத்தும் உபசரிப்பது வழக்கம். உபசரிப்புகளிலேயே உயர்வான அங்கீகாரமுள்ள உபசரிப்பு என்னவென்றால் ஒரு மனிதரை நம் வீட்டிற்கு அன்போடு அழைத்து நம்மில் ஒருவராக ஏற்றுக்கொண்டு உணவு படைத்து உபசரிப்பதாகும்.*

*பங்குச்சந்தை முதலீட்டாளரான வாரன் பபெட்டுடன் மதிய உணவு சாப்பிட விரும்புவோரைத் தெரிவு செய்ய 2000-ஆவது ஆண்டு தொடங்கி கடந்த 17 ஆண்டுகளாக ஏலம் நடந்து வருகிறது. கிளைட் அறக்கட்டளை இந்த ஏலத்தை நடத்துகிறது. சீனாவின் பெய்ஜிங் நகரத்தைச் சார்ந்த டாலியன் ஜீயன் என்டர்டெயின் மென்ட் நிறுவனத் தலைவர் ஸீயி, 76 பேர் கலந்து கொண்ட ஏலத்தில் வெற்றி பெற்றிருக்கும் இவர் வாரன் பபெட்டுடன் உணவு அருந்த தனது ஏழு நண்பர்களை அழைத்து வரலாம். உணவு அருந்தும் ஐக்கியத்தின் போது அவரிடம் பங்குச் சந்தை தவிர வேறு எதை குறித்தும் உரையாடலாம்.*

*நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மோடு உணவருந்த அவராகவே நம்மை நாடி வந்து மிகப் பெரிய கௌரவம் தருகிறார் (திவெ. 3:20). ஒவ்வொரு ஓய்வுநாளும் திருமறைத் தியானம் வழியாக ஆண்டவரின் வார்த்தையென்னும் மன்னாவை ஆண்டவரோடு அமர்ந்து உட்கொள்கிறோம். அதற்காக அவர் நமக்கு வாய்ப்பை, பல விதங்களில் தருகின்றார்.*

*இவ்வாண்டு அருளுரைக் கையேடு எனும் வார்த்தைப் போஜனத்தைத்* (Word Food) *தயாரிப்பதற்குத் தகுந்த ஆலோசனைகளைத் தந்து ஆசி வழங்கிய பெருமதிப்புமிகு பேராயர்* The Rt.Rev.Dr. ***G. தேவகடாட்சம்*** *அவர்களுக்கும், கன்வீனராக இருந்து செயல்பட்ட அருள்திரு.* ***R.சாம் பிரின்ஸ்*** *அவர்களுக்கும் ஆரம்பகட்டப் பணிகளில் உதவி செய்த திரு.* ***B.சாம் ஜெபசிங்*** *அவர்களுக்கும், அட்டைப்பட வடிவமைப்பிற்கு உதவிய திரு.* ***நிஸ்பர்ட் GM. ஷாலோம், திரு. S. ஜெப யாபேஸ்*** *ஆகியோருக்கும், அச்சிட்ட மார்த்தாண்டம்* C.S.I. *அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.*

*என்றும் அன்புடன்*
*அருள்திரு.* **J. பிரகாஷ் நாயகம்,** M.A.,B.D.,M.Th.
*இயக்குநர், தொடர்புத்துறை.*

## தொகுப்பாசிரியரிடமிருந்து...

*தியாகமும் அன்பும் நிறைந்த வாழ்வின் வழி விசுவாசத்திற்குச் சான்று பகரும் இறை அன்பர்களே!*

*மன்னிப்பையும் ஒப்புரவையும் நோக்கிய திருப்பயணத்தில் நம்மை வழுவாமல் காத்து, நல் அறிவுரைகளைத் தந்து, நடத்துகிற திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உளம் நிறைந்து வாழ்த்துகிறேன். உயிராற்றல் நிறைந்த, இறைவாக்கு குறித்து மெய்யியலாளரான இம்மானுவேல் காண்ட்* (Immanuel Kant), "*திருமறை அனைத்து உண்மைகளின் வற்றாத நீரூற்று, மானுடம் எப்போதும் அனுபவிக்கிற மாபெரும் ஆசி.*" (The Bible is the inexhaustible fountain of all truths. The existence of the Bible is the greatest blessing which Humanity ever experienced) *என்கிறார். சமூக ஊடகங்களின் பயன்பாடும், தாக்கமும் பெருகி வரும் இந்நாள்களில் இறைவார்த்தையின் மீதான நாட்டத்தையும், விருப்பையும் எதிர்நோக்கையும் இறை மக்களிடம் பெருகச் செய்ய கடவுள் திருச்சபைக்குக் கொடையாக வழங்கியிருக்கும் உன்னதமான ஊடகமே அருளுரையாகும்.*

"*மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய நான் திருமறையைப் படிக்கிறேன். அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் எனபதை அறிய செய்தித்தாளைப் படிக்கிறேன்*" I read my Bible to know what people ought to do. I read my newspaper what they are doing) *என்கிறார் கார்டினல் நியூமேன்* (Cardinal Newman) *என்னும் இறையியலாளர். விவிலியத்தை, காலச்சூழலோடு ஒப்பிட்டுப் படிப்பதும், பயிற்றுவிப்பதும் திருப்பணியரின் தலையாயக் கடமையாகும்.*

*என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கு, என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை (எசா 55:11) என்னும் கடவுளின் ஆற்றல் நிறைந்த உறுதிமொழியை முதன்மையாகக் கொண்டு இறைவேண்டலோடும், தகுந்த ஆயத்தத்தோடும் இந்த அருளுரைக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.*

*இப்பணியை என்னிடம் ஒப்படைத்த தென்னிந்தியத் திருச்சபையின் முன்னைய முதன்மைப் பேராயரும், நம் மதிப்பிற்குரிய பேராயருமான பேரருள் பெருந்திரு அறிவர்* ***G. தேவகடாட்சம்*** *அவர்களுக்கும், தொகுப்புப் பணியில் நல் ஆலோசனைகளை வழங்கிய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு.* ***J. பிரகாஷ் நாயகம்*** *அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். இப்பணியில் தலைப்புகளை மெருகூட்டி, பிழை திருத்தம் செய்து உடனின்று உழைத்த திருவாளர்* ***B. சாம் ஜெபசிங்***

*அவர்களுக்கும், அருளுரைகளை வடிவமைக்கும் பணியிலும், மொழியாக்கம் மற்றும் பிழைத்திருத்த பணியிலும் நிலையிலும் உழைத்த அருள்திரு, **R. ஹென்சிலின் நேசராஜ்,** அறிவர் **P. ஏஞ்சல் ஹென்சிலின்** ஆகியோருக்கும், அருளுரைகளை ஒழுங்குப்படுத்தி பதிப்புப் பணியில் நல்ல பங்களிப்பைத் தந்த திருவாளர் **M.R. மில்ட்டன் மார்க்** அவர்களுக்கும், பல நிலைகளில் இப்பணிவிடையில் உதவிய அருள்திருவாளர்கள் **G.S.ஆஸ்வின் ஜெயசிங், T.P. சலீம் தங்ககுமார் R. டேவிட் ஜெபசிங்,** திருவாளர்கள் **S. ஜாண் வினோ ராஜ், J. பிரபின் செல்வமணி, நிஷ்பர்ட் G.M. ஷாலோம்** ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றேன்.*

*விவரிக்க முடியாத மதிப்பைக் கொண்ட விவிலியத்தின் வியத்தகு உண்மைகளை விசுவாச அடித்தளத்துடன் அறிவித்து வீழ்ந்து கிடக்கும் மானிடரின் வாழ்வில் விடியல் உருவாக நம்மையே விண்ணகக் கடவுளிடம் ஒப்படைப்போம். வார்த்தை எனும் விதை இதயம் எனும் தளத்தில் விதைக்கப்பட்டு வேரூன்றி படர்ந்து கனி கொடுக்கட்டும்.*

*அருளுரைக் கையேட்டை நம் கரங்களில் பெற்றிட பல நிலைகளில் இறையியல் பார்வையோடு அருளுரைகளைத் தந்திருக்கும் ஆயர்கள், இறைப்பணியாளர்கள் அனைவருக்கும், மிகுந்த பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் இப்பணியில் செயல்பட்ட **மார்த்தாண்டம்** C.S.I. **அச்சகப் பணியாளர்கள், கணினிப் பணியாளர்கள்** அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்நூல் துரிதமாய் கிடைத்திட உற்சாகப்படுத்திய அச்சக கண்காணிப்பாளர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நல் அறிவுரைகள் தந்து ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். அனைத்து மாட்சியும், மாண்பும் கடவுளுக்கே உண்டாவதாக.*

*இறைப்பணியில்,*
*அருள்திரு.* **இரா. சாம்பிரின்ஸ்**

# பொருளடக்கம்


1. 01-01-2017 அனைவரோடும் தொடரும் இறை உடன்படிக்கை 1

**வார இறைவேண்டல்**

2. 02-01-2017 நெருக்கி ஏவும் நெருக்கமான அன்பு 8
3. 03-01-2017 எல்லாருக்காவும் மரித்த அன்பு 12
4. 04-01-2017 ஊனியல்பின்படி வாழா வாழ்க்கை 16
5. 05-01-2017 புதுப்படைப்பாவோம் 21
6. 06-01-2017 ஒப்புரவாக்கும் கிறிஸ்துவின் திருப்பணி 26
7. 06-01-2017 இயேசுவின் திருமுழுக்கு 31
8. 08-01-2017 உடலை கடவுளின் திருக்கோவிலாக மதித்தல் 33
9. 15-01-2017 அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு 36
10. 22-01-2017 பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பு 39
11. 26-01-2017 நாட்டுக்கட்டுமானத்தில் பங்கேற்பு 43
12. 29-01-2017 உண்மையான பக்தி 46
13. 05-02-2017 கிறிஸ்து : வாழ்வின் பாடல் 49
14. 12-02-2017 மனதுருகும் அன்பும் நலமளித்தலும் 53
15. 12-02-2017 ஓய்வுநாள் : படைப்பின் உச்சம் 59
16. 19-02-2017 வீழ்ச்சி : படைப்பின் நோக்கத்தை மீறுதல் 63
17. 26-02-2017 தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்க காலம் 67
18. 01-03-2017 தவக்காலம் : மனம் மாற அழைப்பு 69
19. 05-03-2017 தூய்மையாக்கும் கிறிஸ்து 73
20. 12-03-2017 மன்னிக்கும் கிறிஸ்து 76
21. 19-03-2017 ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து 80
22. 19-03-2017 நிலைத்திருக்கும் மகிழ்ச்சி 84
23. 26-03-2017 விடுவிக்கும் கிறிஸ்து 87
24. 02-04-2017 சிலுவையும், மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும் 89
25. 09-04-2017 கிறிஸ்து அமைதியின் அரசர் 93
26. 10-04-2017 வெளி வேடத்தை வெறுக்கும் வேந்தர் 96
27. 11-04-2017 அன்பை கற்பிக்கும் அன்பர் 100
28. 12-04-2017 மரபுகளை உடைக்கும் மன்னர் 103
29. 13-04-2017 கிறிஸ்து : வாழ்வருளும் உணவு 106
30. 14-04-2017 சிலுவை:தம்மையே கையளிக்கும் அன்பு (புனித வெள்ளி) 108
31. 15-04-2017 புது வாழ்வுக்கான எதிர்நோக்கு 111
32. 16-04-2017 உயிர்த்தெழுதல்:கிறிஸ்துவில் வாழ்வை கொண்டாடுதல் 113
33. 23-04-2017 கிறிஸ்துவை ஆண்டவராகவும் கடவுளாகவும் உறுதிமொழிதல் 117

| | | | |
|---|---|---|---|
| 34. | 30-04-2017 | கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு | 120 |
| 35. | 01-05-2017 | இறைப்பணியில் பங்கேற்றல் | 123 |
| 36. | 07-05-2017 | அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு | 126 |
| 37. | 14-05-2017 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி | 131 |
| 38. | 21-05-2017 | அருட்பணி : கிறிஸ்துவின் அமைதியை பகிர்தல் | 136 |
| 39. | 28-05-2017 | தூயாவியரின் வாக்குறுதி | 139 |
| 40. | 04-06-2017 | ஞானமும் அறிவும் கடவுளின் அருட்கொடைகள் | 142 |
| 41. | 04-06-2017 | வாரும் தூய ஆவியாரே முழு படைப்பையும் மாற்றுருவாக்கும் | 147 |
| 42. | 11-06-2017 | திரித்துவக் கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம் | 149 |
| 43. | 11-06-2017 | படைப்பு விடுதலைக்காக வேதனையுற்று தவிக்கிறது | 152 |
| 44. | 18-06-2017 | வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம் | 156 |
| 45. | 25-06-2017 | சான்றே சீடத்துவம் | 159 |
| 46. | 02-07-2017 | பொறுப்பாண்மை : பொறுப்புள்ள வளமேலாண்மை | 163 |
| 47. | 09-07-2017 | இறையியல் கல்வி : இறைமக்களை மேம்படுத்துதல் | 166 |
| 48. | 16-07-2017 | இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள் | 168 |
| 49. | 23-07-2017 | அருள்பொழிவு திருப்பணி:மாற்றுருவாக்கப்பெற்றது மாற்றுருவாக்கவே | 171 |
| 50. | 30-07-2017 | திருமணம் உடன்படிக்கையின் கொண்டாட்டம் | 175 |
| 51. | 06-08-2017 | அனைவருக்கும் நற்செய்தி | 179 |
| 52. | 13-08-2017 | திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம் | 182 |
| 53. | 15-08-2017 | நீதிக்கான விடுதலை | 187 |
| 54. | 20-08-2017 | திருவிருந்து என்னும் திருவருட்சாதனம் | 190 |
| 55. | 27-08-2017 | பல்நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்பு நிலை | 194 |
| 56. | 03-09-2017 | ஆசிரியர்கள் : விடுதலையின் பிரதிநிதிகள் | 197 |
| 57. | 10-09-2017 | மகளிர் : மாற்றத்தை உருவாக்குவோர் | 203 |
| 58. | 17-09-2017 | அமைதியும், முரண்பாட்டு தீர்வும் | 206 |
| 59. | 24-09-2017 | முதுமையின் நற்பலன்கள் | 211 |
| 60. | 27-09-2017 | சான்று பகர்வதில் ஒன்றிப்பு | 214 |
| 61. | 01-10-2017 | இறைமக்களின் சான்று | 217 |
| 62. | 08-10-2017 | மாற்றுத்திறனாளிகள் : வாழ்வின் புனிதம் | 220 |
| 63. | 15-10-2017 | தற்கால உலகில் இளைஞர்களின் ஆன்மீகம் | 224 |
| 64. | 22-10-2017 | இறையாளுகைக்காக கடினங்களை (இடர் வரவை) ஏற்றல் | 229 |
| 65. | 29-10-2017 | பற்றுறுதியை திரும்ப கண்டுபிடித்தலும், மீள் வாழ்வும் | 233 |
| 66. | 05-11-2017 | பற்றுறுதியில் வளர்த்தல் | 237 |

| | | | |
|---|---|---|---|
| 67. | 12-11-2017 | மண்பாண்டங்களில் செல்வம் | 241 |
| 68. | 19-11-2017 | பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதிசெய்தல் | 245 |
| 69. | 26-11-2017 | ஆண்டவரின் வருகைக்கான ஆயத்தம் | 249 |
| 70. | 03-12-2017 | கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல் | 253 |
| 71. | 10-12-2017 | இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம் | 257 |
| 72. | 17-12-2017 | மீட்பின் நல் எதிர்நோக்கு | 260 |
| 73. | 24-12-2017 | பேருவுவகை கொள்ளுங்கள் ஆண்டவர் அண்மையிலுள்ளார் | 263 |
| 74. | 24-12-2017 | கடவுள் நம்மிடம் வருகிறார் | 265 |
| 75. | 25-12-2017 | கிறிஸ்து பிறப்பு:அமைதியின் அரசருக்கான இடத்தை கண்டறிதல் | 268 |
| 76. | 31-12-2017 | குடும்பம் கடவுளின் அருட்கொடை | 272 |
| 77. | 31-12-2017 | நன்றிப் படையலோடு ஆண்டவரிடம் வாருங்கள் | 276 |
| | **தவக்கால அருளுரைகள் - புதன்** | | |
| 78. | 08-03-2017 | கல்வாரியும் சீட்டுப்போடுதலும் | 280 |
| 79. | 15-03-2017 | கல்வாரியும் சாபமும் | 283 |
| 80. | 22-03-2017 | கல்வாரியும் ஏற்றுக்கொள்தலும் | 286 |
| 81. | 29-03-2017 | கல்வாரியும் சகிப்புத்தன்மையும் | 288 |
| 82. | 05-04-2017 | கல்வாரியும் அறைகூவலும் | 292 |
| | **தவக்கால அருளுரைகள் - வெள்ளி** | | |
| 83. | 03-03-2017 | அலட்சியமான பார்வையாளர் | 295 |
| 84. | 10-03-2017 | இகழும் பார்வையாளர் | 298 |
| 85. | 17-03-2017 | அன்பின் பார்வையாளர் | 300 |
| 86. | 24-03-2017 | மாற்றுருவாக்கத்தின் பார்வையாளர் | 303 |
| 87. | 31-03-2017 | வலியின் பார்வையாளர் | 306 |
| 88. | 07-04-2017 | நம்பிக்கையின் பார்வையாளர் | 310 |
| | **சிலுவை திருமொழிகள்** | | |
| 89. | முதலாம் திருமொழி | - சிலுவையில் மலரும் மன்னிப்பு | 314 |
| 90. | இரண்டாம் திருமொழி | - சிலுவையில் வெளிப்படும் மீட்பு | 316 |
| 91. | மூன்றாம் திருமொழி | - சிலுவையில் உருவாகும் ஒன்றிப்பு | 318 |
| 92. | நான்காம் திருமொழி | - சிலுவையில் கதறும் பிரிவு | 320 |
| 93. | ஐந்தாம் திருமொழி | - சிலுவையில் தென்படும் தாகிப்பு | 323 |
| 94. | ஆறாம் திருமொழி | - சிலுவையில் நிறைவேறும் பணி முடிப்பு | 325 |
| 95. | ஏழாம் திருமொழி | - சிலுவையில் முழுமையடையும் ஒப்படைப்பு | 327 |

### புதிய மாத தொடக்கத் தொழுகை அருளுரைகள்


96. 01-02-2017 இராகபோத்து : எல்லையை விரிவாக்கும் கடவுள் 332
97. 01-03-2017 பெராக்கா : கண்ணீரை களிப்பாக்கும் கடவுள் 335
98. 01-04-2017 பெத்தேல் : உடனிருப்பை உணர்த்தும் உன்னதர் 337
99. 01-05-2017 கில்கால் : நிந்தையை நீக்கும் கடவுள் 340
100. 01-06-2017 ஏன்ககோரே : புத்துயிர் அளிக்கும் கடவுள் 342
101. 01-07-2017 மிஸ்பா : கண்காணிக்கும் கடவுள் 346
102. 01-08-2017 ஷாலோம் : நல்வாழ்வருளும் கடவுள் 349
103. 01-09-2017 யாவேயிரே : கடவுள் பார்த்துக்கொள்வார் 352
104. 01-10-2017 யாவேராஃபா : நலமருளும் கடவுள் 355
105. 01-11-2017 ஷெமா : செவிகொடுத்து செழிப்படைய அழைக்கும் கடவுள் 357
106. 01-12-2017 ஷெக்கினா : மாட்சியை வெளிப்படுத்தும் கடவுள் 360


### சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்


107. ஆண்டவரே வெற்றி தருவார் 364
108. ஞானிகளை ஞானியாக்கும் ஞானம் 367
109. கொடுங்கள் கொடுக்கப்படும் 371
110. நன்றியுடன் கொண்டாடுவோம் 374
111. இறைவனின் திருவுடலாகிய திருச்சபை 377
112 தூய ஆவியாரின் செயல்கள் 379
113. அருட்பணியின் தகவினை தக்கவைப்போம் 382


### விழாக்கால அருளுரைகள்


114. சிறு பிள்ளைகளை தடுக்க வேண்டாம் 385
115. இளம் முயற்சியாளரின் நம்பிக்கை, பற்றுறுதி, முயற்சி 388
116. தெபோரா 393
117. இறைப்பற்றாளர் கொர்நேலியு 396
118. இணைந்து போற்றுங்கள் 400
119. இரக்கம், இதயத்திலிருந்து கரங்களுக்கு செல்லட்டும் 402
120. வாசித்து சிந்தியுங்கள் 405
121. பிறரோடு ஒப்பீடு செய்யாது மன்றாடுவோம் 407
122. தென்னிந்தியத் திருச்சபை வரலாறு 410

## *LITURGICAL COLOUR - 2017*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| January | 6 | to | February | 28 | - **Green** (Epiphany Season) |
| March | 1 | to | April | 15 | - **Purple** (Lenten Season) |
| April | 16 | to | June | 3 | - **White** (Easter Season) |
| June | 4 | | | | - **Red** (Pentecost Sunday) |
| June | 5 | to | June | 10 | - **Red** (Pentecost Season) |
| June | 11 | | | | - **White** (Trinity Sunday) |
| June | 12 | to | December | 2 | - **Green** (Pentecost Season) |
| December | 3 | to | December | 24 Morning | - **Purple** (Advent Season) |
| December | 24 evening | to | January | 5 | - **White** (Christmas Season) |

01-01-2017

**உடன்படிக்கையின் நாள் & புத்தாண்டு நாள்**

# அனைவரோடும் தொடரும் இறை உடன்படிக்கை

**(GOD'S CONTINUING COVENANT WITH ALL)**

தொ.நூ. 9 : 8-17 கலாத். 4 : 21-31

திபா. 145 லூக். 22:14-20

**"இதோ! நான் உங்களோடும்... என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன்."**
**தொ.நூ. 9:9**

இரு தனி மனிதரிடையேயோ அல்லது இரு கட்சிகளிடையேயோ, ஒரு விவகாரத்தைக் குறித்து உடன்பாடு செய்து கொள்வது ஒப்பந்தம் எனப்படும். உடன்படிக்கை என்பதோ, கடவுளுக்கும், மனிதருக்குமிடையே செய்யப்படுவதாகும். திருமறையில் அநேக உடன்படிக்கைகளும், அதன் விளக்கங்களும் வரையப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் முறிந்து போகலாம் என நாம் நமது அனுபவங்கள் மூலமாகக் காண்கிறோம். உதாரணமாக, விவாகங்கள் பல முறிந்து போகின்றன. ஆனால் உடன்படிக்கைகளோ அவ்வாறு முறிந்து போவதில்லை. மனிதனிடம் உண்மை நலிந்து போவதின் மூலமாக உடன்படிக்கைகள் தோல்வியில் முடிய வாய்ப்புகளுண்டு. கடவுளோ எப்போதும் உண்மையுள்ளவராக, மனிதரோடுள்ள தமது உடன்படிக்கையில் தம்மை இணைத்துக் கொண்டவராகச் செயல்படுகிறார்.

கடவுளின் உடன்படிக்கை யாவும் அறிந்ததாக, எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக, எல்லாப் படைப்புகளையும் ஏற்றுக் கொண்டு, அவைகளை மதித்துக் கொள்வதாகவும், மனித இனங்கள் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் அடக்கிக் கொள்வதாகவும், அமைந்துள்ளது. தொ.நூ. 9:8-10-ல், "பின்னும் கடவுள் நோவாவையும், அவர் குமாரரையும் நோக்கி : நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் சந்ததியோடும், உங்களோடு பேழையிலிருந்து புறப்பட்ட உயிரினங்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப் போகிற சகல உயிரினங்கள் வரைக்கும் பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" என்றார் என்று காண்கிறோம். அப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளபடி மிகப்பெரிய வெள்ளப்பெருக்கிற்குப் பிற்பாடு, கடவுள் தமது உண்மையை உறுதியாக்கி, "இனி மாம்சமானவைகளெல்லாம் வெள்ளப்பெருக்கினால் அழிக்கப்படுவதில்லை யென்றும், பூமியை அழிக்க இனி வெள்ளப்பெருக்கு உண்டாவதில்லை யென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" என்று மறுபடியும் வலியுறுத்திக் கூறுகிறார். (தொ.நூ. 9:11). இந்த 2017 புது வருடத்தில், நாம் கடவுளின் தொடரும் உடன்படிக்கையை உள்ளபடி ஏற்றுக்கொள்வோமாகில், அவர் நம்மில் பிரியமாயிருப்பார்.

## 1. நல்லெண்ண உடன்படிக்கை :

தொ.நூ. 8:21-ல் கடவுள் தமது நல்லெண்ணத்தை ஓர் உயரிய வாக்கு மூலமாக எடுத்துரைக்கிறார். "சுகந்த வாசனையைக் ஆண்டவர் முகர்ந்தார். அப்பொழுது ஆண்டவர் : இனி நான் மனிதர் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனிதருடைய இருதயத்தின் நினைவுகள் அவர்கள் சிறு வயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கின்றன; நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல உயிரினங்களையும் அழிப்பதில்லை". மனிதரின் பெலவீன சுபாவம், நிலையற்ற ஒழுங்கற்ற தன்மை மற்றும் சோதனையில் விழுந்து போகும் பெலவீனம் போன்றவைகளை நன்கு அறிந்து கொண்டதினால், கடவுள் 'உடன்படிக்கை' என்பதை 'நல்லெண்ண உடன்படிக்கை' என மாற்றியமைத்துக் கொண்டார். கடவுளுக்கும் மனிதருக்குமிடையேயான சமநிலைப்பங்கு மிக மோசமான தோல்வியை அடைந்தது. ஆகவேதான் கடவுள், மனிதரிடமிருந்து முழுமையான பக்தியையோ, ஒப்புக் கொடுத்தலையோ எதிர்பாராதபடி, ஒரு குறிப்பிட்ட அளவிலான கூட்டாண்மையை ஏற்படுத்த ஆயத்தமானார். இவ்விதமான உடன்படிக்கையில் கிருபை நிலைத்துள்ளதை நாம் காண்கிறோம்.

கிருபையானது மனிதரின் பெலவீனத்தை மேற்கொண்டுள்ளதை வேத வசனங்கள் அங்கீகரிக்கின்றன. யோவான் 10:10-ல் இயேசு கிறிஸ்து, மிக அருமையான கிருபையுள்ள வசனத்தைக் கூறுகிறதை நாம் வாசிக்கிறோம். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்". இங்கே மந்தையிலுள்ள ஆடுகளின் பலவீனத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் சோதனைக்காரன் 'திருடன்' என வர்ணிக்கப்படுகின்றான். ஆனால் நல்ல மேய்ப்பராகிய இயேசுவோ (யோவான் 10:11), வாழ்வைப் பூரணமாக்கும்படியாகத் தமது கிருபையைப் பொழிந்தருளுகிறார். விபச்சாரத்தில் கையும், களவுமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பெண்ணை, யூதர்கள் கல்லெறிந்து மரணத்தண்டனையை நிறைவேற்ற நினைத்தபோது, நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவோ, வேறு விதமாக தமது எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். அந்தப் பெண்ணைக் குற்றம் சாட்டினவர்களை நோக்கி, அவர்களில் பாவம் இல்லாதவன் எவனோ அவன் முதலில் அவள்மேல் கல்லெறியக்கடவன் என்று சொல்லுகிறார். இவ்விதமாக அவர்கள் யாவரும் மனச்சாட்சியில் தொடப்பட்டு, ஒவ்வொருவராக அந்த இடத்தைவிட்டு நகரத் தொடங்கினார்கள். அப்போது இயேசு தமது பரிவான பார்வையினால் அவரை நோக்கி, "... நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" (யோவான் 8:11), என்று கூறி அவரை விடுவிக்கிறார்.

திராட்சைத் தோட்டத்தில் நடப்பட்ட அத்திமரம் உவமையில் (லூக்கா 13:6-8), கடவுளின் நல்லெண்ணத்தைப் பற்றிய இன்னொரு சான்றைக் காண்கிறோம். அத்திமரத்தைத் திராட்சைத் தோட்டத்தில் நட்ட ஒருவர், அதில் பழங்களை எதிர்பார்த்து, மூன்று வருடங்களாகக் காத்திருந்தார். ஆனால் எந்தப் பலனையும், கனியையும் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தார். இந்த உவமையில் ஒரு பெரிய சத்தியம் நிறைந்த செய்தி அடங்கியுள்ளது. திராட்சைப்பழம் மக்களின் சாதாரண உணவாகும். அத்திப்பழம் நோயைக் குணப்படுத்தும் வலிமையுள்ளது. அத்திமரத்தை நட்டவர் எதிர்பார்த்தபடி எந்தப் பலனும் கிடைக்கவில்லை. ஆகவே அவர் அதை வெட்டி, எறிய நினைத்தார். ஆனால் தோட்டக்காரரோ, ஒரு வருடம் கூட அதை விட்டு வைக்கும்படியாகப் பரிந்துரைத்தார். அதைப்போலவே, நமது குறைகள், குற்றங்கள் எதுவாயிருந்தாலும், கடவுள் அவைகளைத் தள்ளிவிட்டு, நாம் நல்ல பலன்களைக் கொடுக்கும்படியாக, ஒரு வருடம் கூட நமக்குக் கிருபையாக நீட்டிக் கொடுக்கிறார்.

கடவுளது உடன்படிக்கையில் அடங்கியுள்ள நல்லெண்ணம் என்ற கருத்து, நமது வாழ்வில், இந்தப் புது வருடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும். பென்ஜமின் பிராங்கிளின் என்பவர், ஒவ்வொரு நாளும், “இன்று நான் எந்த நற்செயலைச் செய்யலாம்” எனத் தன்னிடமே கேட்டுக் கொள்வாராம். மாசு படிந்துள்ள இவ்வுலகில், மாசின் கொடூரத்தை மட்டுப்படுத்துவதற்காக அறிஞர்களும், ஞானிகளும் பல்வேறு முறைகளை பரிந்துரைக்கிறதை நாம் காண்கிறோம். மரங்களை நட்டு வளர்ப்பது நெகிழிகளின் பயன்பாட்டைத் தவிர்ப்பது, இயற்கையைப் பாதுகாத்து இயல்புத் தன்மைக்குத் திரும்பிச் செல்வது, போன்றவைகள், இந்தப் பரிகாரங்களில் சிலவாகும். இயற்கையைத் தொடர்ந்து மாசுபடுத்திக் கொண்டிருக்கும் கரியமிலவாயு (கார்பன்)வைக் கட்டுப்படுத்தி, பிராண வாயு (ஆக்ஸிஜன்)வை அதிகமாகப் பெருக்குவது என்பதே இதன் சாராம்சமாகும். ஆனால் இந்த எல்லா மாசுக்களையும் விட அதிக ஆபத்தானது, நமது இருதயத்திலும், எண்ணத்திலும், பாவத்தின் மூலமாக விளைவிக்கப்படும் மாசாகும். நமது எண்ணங்களில் காணப்படும் தீமையின் விளைவுகளை மாற்றி, நேர்மறை எண்ணங்களை உருவாக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. ஒரு நல்ல நாளை நம்மில் உருவாக்குவதற்குத் தேவையான சில சிறு குறிப்புகளை இங்கு காணலாம்.

1. To slow down - வேகத்தை மட்டுப்படுத்து
2. Say thank you - நன்றி கூறு
3. Smile - புன் சிரிப்பை வெளியிடு
4. Take a deep breath - ஆழமான மூச்சு எடு
5. Compliment Someone - யாரையேனும் உற்சாகப்படுத்து

6. Appreciate Small things - சின்ன செயல்களுக்கும் பாராட்டுத் தெரிவி
7. Focus on awesomeness - பிரமிப்பில் கவனம் குவி
8. Notice Three things you are thankful - நீ நன்றியோடு நினைவுகூரும் மூன்று காரியங்களைக் கவனி

உரோ. 12:18-ல், பவுல் இந்தச் செயல்களைக் குறித்து, சுருக்கமாக இவ்வாறு எழுதுகிறார். "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனிதரோடும் சமாதானமாயிருங்கள்". ஆகவே நாம் யாவரும் இப்போது நமக்கு அருளப்பட்டுள்ள புதிய வருடத்தில், கடவுளின் நல்லெண்ணம் என்ற உடன்படிக்கையில் நம்மை இணைத்துக் கொண்டு, நல்லெண்ணத் தூதுவர்களாக வாழ முனைவோமாக!

## 2. நித்திய உடன்படிக்கை :

கடவுள் நித்தியமானவர், நீடூழி காலம் வாழ்பவர். அவர் அல்பாவும், ஒமேகாவுமாயிருக்கிறார். அவர் மனிதரோடு நிலைப்படுத்தும் உடன்படிக்கை நீண்டகாலம் தரித்திருக்கும் மூலங்களைக் கொண்டது. நோவாவோடு அவர் செய்த உடன்படிக்கை அவருடைய இந்த உள்ளார்ந்த ஞானத்தைத் தெளிவாக உணர்த்துகிறது. தொ.நூ. 9:12, 13-இல் "அன்றியும் கடவுள் எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல உயிரினங்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக : நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்". இந்த உடன்படிக்கை, எல்லாப் படைப்புகளையும், எல்லாச் சந்ததியாராகிய மானுடரையும் உள்ளடக்கியுள்ளது. 'இது பூமியைக் குறித்த கடவுளின் அவாவின் உச்சநிலை என அழைக்கப்படுகிறது. மேலும் அவர் பூமியைப் பாதுகாக்கும்படியாக அளித்துள்ள அவரின் உறுதிப்பாட்டையும், நிலைப்பாட்டையும் விளக்குகிறது. உலகச் சமூகம் அநேக ஆபத்துகளையும், பயங்கரங்களையும் கடந்து செல்கின்ற நிலையில், மட்டுமே பூமியின் உச்சி மாநாட்டைக் குறித்து எண்ணங் கொள்கிறார்கள். அவர் நம்மோடு செய்துள்ள உடன்படிக்கையை நாம் எச்சரிப்போடு, மீறுதல் நேரிடாதபடி, நினைவு கூருகிறோம். தெய்வீக உடன்படிக்கையின் நியமங்களை விட்டு விலகிப்போன நாம், நமது வாழ்நாளிலேயே, மீறுதல்கள் பாவங்கள் இவைகளின் விளைவுகளைக் கண்கூடாகக் காண்கிறோம். இச. 7:9-ல் "ஆகையால் உன் கடவுளாகிய ஆண்டவரே கடவுள் என்றும், தம்மில் அன்பு கூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள கடவுள் என்றும் அறியக் கடவாய்", என்று சொல்லியுள்ள கடவுள், தமது உடன்படிக்கையை அனைவரோடும் நீட்டித்து, உறுதிப்படுத்தியுள்ளார்.

நித்திய உடன்படிக்கையானது, நமக்கு ஒரு நல்ல அமைதியான வாழ்வை அருளி, சவால்களைச் சந்திக்கவும், அவைகளைத் தாண்டிச் செல்லவும், நமது பெயர்களை நித்திய வாழ்வுக்குப் பதிவு செய்யவும், ஒவ்வொரு நாளும் நம்மைப் பலப்படுத்தி, அதிகாரப்படுத்தி, நமக்குரிய உரிமைகளை நமக்கு வழங்குகிறது. இந்நாட்களில் நமது வழக்கிலுள்ள, உலகப்பொருட்களின் மேல் வைக்கும் மோகம், நுகர்வுப் பொருட்களின் மேலுள்ள மோகம் ஆகிய இச்சைக்குரிய செயல்கள், வாழ்வில் நமக்கு ஏமாற்றங்களையே கொண்டு வருவதாய் அமைந்துள்ளன. மாய்மாலங்கள், மன அழுத்தங்கள், மனச் சோர்வுகள் போன்ற விளைவுகள் வாழ்க்கையில் நம்மைச் சோதிக்கின்றன. கடவுள் கிருபையாய் நமக்கு அருளியுள்ள இந்தப்புது வருடத்தில், நமது கண்கள் நித்தியத்தையும், நித்தியமான கடவுளையும் முனைப்போடு நோக்குவதாக.

'Titanic' என்ற கப்பல் அக்கால பிரிட்டனின் ஆடம்பர, சுகபோகக் கப்பலாகும். ஏப்ரல் 14, 1912-ல் பனிப்பாறையில் மோதி, நடுக்கடலில் இக்கப்பல் அமிழ்ந்து போனதை நாம் அறிந்திருக்கிறோம். இச்சம்பவம் இவ்வுலக சுகபோகச் சிற்றின்பங்களை நினைவில் கொண்டு வருவதாய் அமைந்துள்ளது. Titanic கப்பல் அமிழ்ந்து கொண்டிருந்த வேளையில், உதவிக்கரம் வேண்டி எல்லாத்திசைகளிலும் செய்தி அனுப்பப்பட்டது. அண்மையில் நின்றிருந்த 'கலிபோர்னியா' என்ற கப்பலில், அமிழ்ந்து கொண்டிருந்த பயணிகளைக் காப்பாற்ற, போதுமான வாழ்வை காப்பாற்றும் படகுகள் இல்லாமலிருந்தன. இதுவே உலக வாழ்வின் யதார்த்தமாகும். இந்தப் புது வருடத்தில், நித்திய பொருளடக்கங்களை இணைத்து, கடவுளோடு ஒரு பொருளுள்ள உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வோமாக!

### 3. நினைவில் நிறுத்தும் உடன்படிக்கை :

தமது உடன்படிக்கையில் உண்மையாயுள்ள, சத்திய பரனாகிய கடவுள் தொ.நூ. 9:15-ல் "அப்பொழுது எல்லா உயிரினங்களையும் அழிக்க இனி வெள்ளம் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவு கூருவேன்" என்கிறார். கடவுள் நடத்திய, நடத்தும் எல்லாச் செயல்களும் மாறாதவைகள், நினைவு கூரத்தகுந்தவை. மனிதர் தங்களது பெலவீன நிலைமையில், அநேக செயல்களை மறந்து விடுகிறார்கள். ஆனால் கடவுளோ நாம் நன்றி உணர்வுள்ளவர்களாக, அவர் நம்மை நினைவில் கொண்டுள்ளார் என நாம் நினைவு கூர வேண்டும் என எதிர்பார்க்கிறார். குறிப்பிட்ட சில செயல்களை மாத்திரம் நினைவில் கொண்டு வருவது மனிதரின் ஒருவித மனப்போக்காகும். தனக்கு சாதகமான, லாபகரமான, உபயோகமானவைகளை மாத்திரம் தங்கள் இதயத்திலும், நினைவிலும் தக்க வைத்துக் கொள்வது பொதுவான வழக்கமாகும். தியாகம்,

போன்றவற்றோடு தொடர்புள்ள பொது நலச்செயல்கள், பிறருக்குப் பயன் கொடுப்பவைகள் ஆகியவற்றை வேண்டுமென்றே மக்கள் மறந்து விடுகிறார்கள் அல்லது அவைகளைத் தங்கள் மனதிலிருந்து விலக்கி விடுகிறார்கள். இந்த விதமான, நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஆனால் வேண்டுமென்றே மறந்துவிட்ட செய்கைகள், சொல்லொண்ணா அநேகக் கடினங்களை (Voiceless People) குரலை உயர்த்தித் தங்கள் உரிமைகளைக் கேட்க முடியாத அநேகருக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன. சமீபத்தில் வெளியிடப்பட்ட UNICEFஅறிக்கையின் படி, உலகின் பல்வேறு பாகங்களில் நடை பெற்ற போர்கள், வன்முறைகள் இவைகளின் விளைவாக, 2.8 கோடி குழந்தைகள் அவர்களது வீடுகளிலிருந்தும், நாட்டிலிருந்தும், வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். இன்னொரு அறிக்கை கூறுவதின்படி, ஏழ்மை மற்றும் மனிதநேய உதவிகள் கிடைக்கப் பெறாமை போன்ற நிலைமைகளின் விளைவாக, சுமார் 2 கோடி குழந்தைகள் பலவந்தமாக தங்களது வீடுகளைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். UNICEF-ன் நிர்வாகத்தலைவர் (இயக்குனர்) அந்தோணி லேக் என்பவர், சிரியன் அகதிகள் தங்கள் நாட்டைவிட்டு வெளியேறி, ஐரோப்பாவில் குடியேறச் சென்ற போது, ஆய்லன்குர்தி என்ற பாலகன் படகு கவிழ்ந்து, தனது உயிரை இழந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். (தமிழ் இந்து 08-09-2016). இதைப் போன்ற அநேக துயரச் சம்பவங்கள் மக்கள் பலவற்றை மறந்து வாழ்வதால் ஏற்படுகின்றன. இத்தகைய சம்பவங்கள், அவர்களின் மறந்து போகுதல் என்ற சுபாவத்தினால் நிகழ்த்தப்படுகின்றன. மக்கள் இச்சம்பவங்களை சில நாட்கள் மாத்திரமே மனதில் வைத்துக் கொண்டாலும், கடவுள் இவற்றை எக்காலமும் நினைவில் கொள்கிறார். வேதவசனம் சொல்கிறபடி, “மனிதரைப் பற்றிய கடவுளின் நினைவுகள் மிகப்பெரிய நினைவுகள்” இவைகளாவன:

தி.பா. 144:3

“ஆண்டவரே! மனிதரை நீர் கவனிக்க அவர்கள் யார்? மானிடரை நீர் கருத்தில் கொள்ள அவர்கள் யார்?”.

தி.பா. 8:4

“மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்”.

தி.பா. 103:14

“அவர் நமது உருவத்தை அறிவார்; நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது”.

யோனாவின் வரலாற்றில் கடவுள் யோனாவின் மேல் நினைவாயிருந்தார். (யோனா. 2:10) எனக் காண்கிறோம். அதைப்போலவே, அவர் நினிவே மாநகரத்தின் ஒரு லட்சத்து இருபதினாயிரத்திற்கதிகமான மக்களை மற்றும் பிற உயிர்களைக் குறித்தும் கரிசனையுள்ளவராயிருந்தார் (யோனா. 4:11).

இவ்வாறாக, நமது பெலங்கள், பெலவீனங்களைக்குறித்து நன்கு அறிந்துள்ள கடவுள், நம்மை இம்மட்டும் நடத்தி, அழைத்து வந்துள்ளார். கடவுள் எப்போதும் நம் நினைவாகவே இருக்கிறார். அவரின் நேரடிப் பார்வையில் நம்மை வைத்துள்ளார். மனிதரின் நினைவுகளைக் குறித்து எசாயா இறைவாக்கினர், 49:14-16-ல் இவ்வாறு சொல்கிறார். “சீயோனோ ஆண்டவர் என்னைக் கைவிட்டார். ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள்”. அதற்குப் பதிலாக ஆண்டவர் “பெண்ணானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை”. ‘இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கின்றன’ என்கிறார்.

கடவுளின் மிக மகத்துவமான நினைவு கொள்ளுதலையும், நமக்கு அமைதி நிறைந்த, வளமான வாழ்வை அருளும் அவரின் ஆயத்த ஏற்பாடுகளையும், கடவுளின் நல்லெண்ணத்தையும் மனதில் கொண்டு, 2017 ஆம் ஆண்டை நன்றி நிறைந்த உள்ளத்தோடு புது நம்பிக்கையினால் நிறைந்து, வாழ்ந்து வளம் பெறுவோமாக!

**பேரருள்திரு அறிவர். G. தேவகடாட்சம்,**
**பேராயர்.**

02-01-2017 நாள் 1 வார இறைவேண்டல்

## நெருக்கி ஏவும் நெருக்கமான அன்பு

எசா. 53:4-12

**"கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது". 2 கொரி. 15:14**

ஏவுதல் என்றவுடனே நம் நினைவலைகளுக்கு வருவது ஏவுகணை, ஏவூர்தி, ஏவு வாகனம் ஆகியன. ஏவுகணையை எரிபொருள் நிரப்பி, நெருக்கி ஏவுகிறார்கள். ஆனால் ஏவுகணை (Rockets, Missiles) நன்மையாகப் பயன்பட நெருக்கி ஏவப்படுவதில்லை. மாறாக, i) எதிரிகளை அழிக்கவும், ii) விழாக் காலங்களிலே வான வேடிக்கையாகவுமே பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போதுதான் மனிதன் ஏவுகணையைப் பிற மனிதனுக்கு விரோதமாக ஏவினான். 1926 ஆம் ஆண்டில் Robert Hutchings Goddard என்ற அமெரிக்கப் பேராசிரியர் திரவ எரிபொருளைக் கொண்டு (Liquid Fueled Rocket) இயங்கும் ஏவுகணையைக் கண்டுபிடித்தார்.

இந்த ஏவுகணையில் பெட்ரோலும், திரவ Oxygen-ம் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டன. இது ஏவுகணையை நெருக்கித் தள்ளியதைக் கண்ட ஜெர்மானியர்கள் இந்த உத்தியைப் பயன்படுத்தி இரண்டாம் உலகப்போரிலே ஏராளமான ஏவுகணைகளைத் தயாரித்தனர். இதற்காக Alcohol மற்றும் Oxygen வாயுவைக் கொண்டு தாங்களாகவே ஒரு எரிபொருளை உருவாக்கினார்கள். இந்த எரிபொருள், ஏவுகணையை வெகு தூரத்திற்கு, அதாவது ஏறக்குறைய 3500 மைல்களுக்கு அப்புறத்தில் ஏவியது.

கிறிஸ்துவின் அன்பை, திருத்தூதர் பவுல் நெருக்கி ஏவும் தத்துவத்தோடு தான் ஒப்பிடுகிறார். கிறிஸ்துவின் அன்பு பவுலைச் செயல்படும்படி நெருக்கி ஏவியது. கிறிஸ்துவின் அன்பிலே ஏவுதல் மட்டுமே உண்டு; கணை அவரது அன்பில் கிடையாது.

கிறிஸ்துவின் அன்பின் பண்பு நம்மிலேயும் இருக்க வேண்டும் என்பதற்காக திருத்தூதர்கள் அதை ஆழமாக விளக்குவது வழக்கம். குறிப்பாக, யோவான், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பின் பண்பை 1 யோவா 4:19 இல் கிறிஸ்து நம்மிடத்தில் முந்தி அன்பு கூர்ந்தார் என்கிறார்.

அதாவது கிறிஸ்து இயேசு தாமே வலிய வந்து 'அன்பு' என்றால் என்னவென்று தெரியாத நம்மிடத்திலே அன்பு கூர்ந்தார்.

மனிதர்கள் அவரை விட்டு, தள்ளித் தள்ளி அகன்று போனாலும், கிறிஸ்து அவர்களிடம் வலிய வலியப் போய் அன்பு காட்டுவது தான் மாபெரும் அன்பு.

திருத்தூதர் பவுல் இந்த மாபெரும் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு, தாம் திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்ததாகக் கூறுகிறார்.

நெருக்கி ஏவுகின்ற கடவுளின் அன்பை, நாம் கிறிஸ்துவின் அன்பு வாயிலாகவே அனுபவப்பூர்வமாக உணருகின்றோம்.

'நெருக்கி ஏவுதல்' என்னும் தத்துவத்தில் இயங்கும் கிறிஸ்துவின் அன்பை எசாயா இறைவாக்கினர் எழுதியிருக்கின்ற "துன்புறும் ஊழியர்" என்னும் பகுதியிலிருந்து தியானிப்போம்.

***1. இருக்க விடாத அன்பு :*** எசா. 53:4

மனிதர்கள் பாவத்தினால் பாடுபடப் போவதை ஆண்டவரால் தாங்க முடியவில்லை. பாவத்தினால் பாடுபடுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா அவரால் இருக்க முடியாமல், ஆண்டவர் தாமே முன் வந்து அந்தப் பாடுகளை ஏற்றுக் கொண்டார்.

நமது சரீரத்திலே சும்மாயிருக்காமல் ஓயாமல் செயல்படுகிற இருதயத்தை அன்பின் சின்னமாக உலகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் ஏனைய உறுப்புகள் சும்மாயிருந்தாலும், இருதயத்தினால் சும்மா இருக்க முடியாது.

இருதயம் இரத்தத்தை ஓயாமல் நெருக்கி, சரீரம் முழுவதிற்கும் செலுத்துகிறது. இதனால் கண்ணிற்குத் தெரியாத உறுப்புகள் முதல் கண்ணிற்குத் தெரிகிற உறுப்புகள் எல்லாமே உயிரோட்டமுடன் செயல்படுகின்றன. இருதயம் இயங்காமல் தேங்கி விட்டால், உடலை விட்டு உயிர் நீங்கி விடும்.

ஓயாமல் இயங்குகின்ற இருதயம் பாதிக்கப்பட்டுவிட்டால் அந்த நபர்களுக்கு மாற்று இருதயம் பொருத்தி, உயிர் பிழைக்க வைக்கிறார்கள்.

ஆனால் மாற்று இருதயத்திற்கென்று இறந்த பின் இருதயத்தை தானம் செய்பவர்கள் மிகவும் குறைவு. எனவே வெளிநாடுகளில் செயற்கையாக இருதயம் தயாரித்து பொருத்துகிறார்கள். இந்தியாவில் இதற்கான வாய்ப்பும் குறைவு. ஆகவே ISRO விஞ்ஞானிகள், நோயாளிகளின் பாதிக்கப்பட்ட இருதயத்திற்கு இரத்தத்தை நெருக்கி உந்தித் தள்ளுகிற புதிய கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இது இருதயம் போல செயல்படும். இரத்தத்தை நெருக்கி உடலெங்கும் உந்தி தள்ளுகின்ற இந்த கருவி 100 gram எடை கொண்டது.

1.25 லட்சம் மதிப்புள்ள pump போன்ற இந்த கருவி நோயாளிகளை ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகவும், நீண்ட நாள் செயல்பட வேண்டுமென்பதற்காகவும், நெருக்கி தள்ளும் போது அந்த நெருக்குதல்களுக்கெல்லாம் ஈடு கொடுக்கும் வகையிலே Rocket தயாரிப்பு உலோகமான Titanium பயன்படுத்துகிறார்கள்.

மனிதர்களின் பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக் கொண்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்து,

i) உத்திரவாதம் (Guarantee) தந்து ஏற்றுக் கொள்ளுகிறார்.

எசா. 53:4 - 'மெய்யாகவே' என்னும் வார்த்தை இந்த உத்திரவாதத்தைக் குறிக்கிறது.

ii) வலிய வந்து நம்முடைய பாவங்களையும், துக்கங்களையும் ஏற்றுக் கொண்டார்.

இவற்றை செய்ய அவரில் இருந்த இருதயப்பூர்வமான, இருக்கவிடாத அன்பே அவரைத் தூண்டியது.

ஆண்டவர் மீதான நமது அன்பும் இருதயப்பூர்வமான அன்பாக இருக்கவே இச. 6:5 சொல்லப்பட்டுள்ளது.

அந்த அன்பு நம்மைச் சும்மா இருக்க விடாமல், அவருக்காகவும், மற்றவர்களுக்காகவும் செயல்பட வைக்கும்.

### *2. வழிப்படுத்தும் அன்பு :* எசா. 53:6

உலகத்திலே கடினமான வேலைகளுள் ஒன்று நல்வழிப்படுத்தும் வேலை.

இதனால் பல எதிர்ப்புகளைத் தான் சந்திக்க வேண்டியிருக்கும். இதைத் தொந்தரவாகவும், தனி மனிதச் சுதந்திரத்தைப் பறிப்பதாகவும், சர்வாதிகாரமான அணுகுமுறையாகவும் நினைப்பதுண்டு.

இதனால் தான் நல்வழிப்படுத்துவதற்கு யாரும் எளிதில் முன் வர மாட்டார்கள்.

ஆடுகள் வழிதப்பிப் போவது போல தான் இன்று மனிதர் ஆபத்து தங்களுக்கு வருமென்பதை அறியாமலே தங்கள் கால் போன போக்கிலும், கண் போன போக்கிலும் போகிறார்கள்.

இலக்கிய மொழி நடையிலே ஐம்பொறிகள் எனச் சொல்லுவார்கள். ஏனென்றால் பொறியில் மாட்டிய எதையும் அது தப்பிப் போக விடாதது போல மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறியில் மாட்டிக் கொண்ட எதுவும் தப்ப முடியாது. ஆனால் இவற்றிலிருந்து வருகின்றவை தீயவைகளாக இருக்கும் பட்சத்தில் அவை மனிதனை வழி தப்பிப் போக வைத்து விடுகின்றன. அப்படிப்பட்ட விளைவையே எசா. 53:6 இல் படிக்கின்றோம்.

இப்படி நாம் வழி தப்பிப் போகின்ற நிலையில், வழி தப்பிப் போகக் கூடாதென்றே ஆண்டவர் நம்மை, தம் பக்கமாக இழுக்கின்றார்.

ராக்கெட்டுகளிலே Tetra ராக்கெட்டுகள் என ஒரு வகை உண்டு.

இது விண்கலத்தில் மாத்திரம் பயன்படுத்தப்படுபவை. விண்கலத்திலே தான் விண்வெளி ஆய்வுக்காக விண்வெளி வீரர்கள்

விண்வெளிக்குப் போவதும் வருவதுமாக இருப்பார்கள். விண்கலத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவை தாறுமாறாகப் பறந்து பெரிய விபத்து ஏற்பட்டு விடும்.

விண்கலம் வழிதப்பிப் போகாமலிருக்க Tetra ராக்கெட்டுகள் விண்கலம் பறக்கும் திசைக்கு எதிராக உந்தம் கொடுப்பதால் வேகம் குறைகிறது. விண்கலங்கள் வழிதப்பிப் போகாதபடி கீழே இறங்குவதற்கும் Tetra ராக்கெட்டுகள் தான் உதவுகின்றன.

அக்கிரமங்கள் நம்மை வழி தப்பிப் போக வைக்கின்ற போது, ஆண்டவர் அக்கிரமங்களைத் தாமே எதிர்கொண்டு, அக்கிரமங்கள் இருக்கிற திசைக்கு நாம் போகாதபடிக்கு, நம்மை வழிப்படுத்துகிறார்.

யாரும் எக்கேடு கெட்டுப் போகட்டும் என்றில்லாமல் நெருக்கி ஏவுகின்ற அன்பினால் இதைச் செய்து கொண்டேயிருக்கிறார்.

ஆண்டவருடைய நெருக்கி ஏவும் அன்பு நம்மை அவரைப் போலவே செயல்படச் செய்வதாக.

ஒருவரை நல்வழிப்படுத்தும் போது வருகின்ற வருத்தங்களை அவர் சகித்து, தமது நெருக்கி ஏவுகின்ற அன்பினால் நல்வழிப்படுத்துவது போல நாமும் நல்வழிப்படுத்துவோம்.

**அருள்திரு.J. பிரகாஷ் நாயகம்**

03-01-2017 நாள் 2 வார இறைவேண்டல்

## எல்லாருக்காகவும் மரித்த அன்பு

மீக்கா 6:6-8

**"...அவர் அனைவருக்காகவும் இறந்தார்." 2 கொரி. 5:15**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் தமது அன்பை, பல விதங்களிலே நம்மெல்லாருக்கும் விளங்கப் பண்ணியிருக்கிறார்.

அதிலே சிறப்பான ஓர் உயிருள்ள விளக்கம், நம்மெல்லாருக்காகவும் அவரே மரித்து தம்முடைய அன்பை விளங்கப் பண்ணியிருக்கிறார்.

இதே போல் உலகத்திலே வேறு யாரும் இப்படிச் செய்ததேயில்லை. ஆண்டவர் இயேசு கிறிஸ்து மட்டுமே முதலாவது செய்திருக்கிறார்; எந்தவித சுயநலமோ, எதிர்பார்ப்போ இல்லாமல் இதைச் செய்திருக்கிறார்.

ஆண்டவருடைய சிறப்பான அன்பை, திருமறை வசனங்களினடிப்படையில் விளங்கிக் கொள்ள ஆயத்தப்படுவோம்.

### *1. எல்லோருக்காகவும் மரித்தவர் :* 2 கொரி. 5:15

"... அவர் எல்லோருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்".

ஆண்டவர் இயேசு கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தவர் என்கிற நற்செய்தியிலே பல செய்திகள் உள்ளன.

#### i) *ஒருவரும் கெட்டுப் போகக் கூடாது என ஆண்டவர் எல்லாருக்காகவும் மரித்தார் :*

மனித தண்டனை முறைகளிலே எப்போதும் பின்பற்றப்படும் கடுமையான ஆரம்ப கால முறை ஒன்று உண்டு. அது தான் குற்றங்களுக்குக் கடுமையாகத் தண்டனை கொடுக்கும் முறை.

இதற்குக் காரணம், இதைப் பார்க்கிற ஏனைய மக்கள் இந்தத் தவறைச் செய்து கெட்டுப் போகக் கூடாது. இந்தத் தவறைச் செய்ய யோசிக்க வேண்டும் என்று அவ்வளவு கடுமையாகத் தண்டனை கொடுக்கப்பட்டது.

முற்காலத்தில் மன்னர்கள் ஆட்சியிலும், தற்காலத்திலே அரபு நாடுகளிலும் நடைமுறையிலிருக்கும் தண்டனை முறைகள் இதற்கு உதாரணம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கும் முதலாவது இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் தண்டனை கொடுக்கப்பட்டது. அவரை பார்க்கிறவர்கள் குற்றம் செய்யத் தயங்க வேண்டும் என்னும் நோக்கில் கடுமையான தண்டனை அதாவது மரண தண்டனையைக் கொடுக்க

வேண்டுமென்று பிரதான ஆசாரியனான காய்பா பரிந்துரைப்பதை யோவா. 11:50 இல் காணலாம்.

யாரும் இனிமேல் பாவம் செய்யக் கூடாது என்பதற்காக ஆண்டவர் எல்லோருக்காகவும் மரிக்க முன் வந்தார்.

### ii) *கிருபையைக் கொண்டு வர எல்லாருக்காகவும் மரிக்க முன் வந்தார் :*

சிலர் இறந்து விட்டால், அவர்கள் உலகில் ஏற்படுத்திய பல அரிய செயல்களும் அவர்களோடு இறந்து விட்டதாக நாம் துக்கப்படுகிறோம்.

இன்று எதிரிகள் கடைப்பிடிக்கின்ற மோசமான ஒரு முறை கட்செவி அஞ்சல் என அழைக்கப்படுகின்ற Whatsapp இல் சில பிரபலங்கள் இறந்து விட்டதாகச் செய்தியைப் பரப்பி விடுவார்கள்.

இதைப் பார்க்கும் போது, ஐயோ இனி அவரது பாடலைக் கேட்க முடியாதே; அவரது நகைச்சுவையைக் கேட்க முடியாதே; அவரது சொற்பொழிவைக் கேட்க முடியாதே என ஏங்குகிறோம்.

இதே போல இஸ்ரவேலிலும், உலகமெங்கிலும் தலைப்பிள்ளைகள் என்கிற முதல் பிறந்த பிள்ளைகள் இறந்து விட்டால், தங்களது வம்சமே அழிந்து விட்டது எனப் பெரிதும் துக்கப்படுவார்கள்.

முன்னொரு காலத்திலே எகிப்தியர்கள், எபிரேயர்களுக்கு விரோதமாக, கடுமையாகப் பாவம் செய்த போது, கடைசி தண்டனையாக அவர்களது தலைப்பிள்ளைகளின் மரணம் என்கிற மிகக் கொடூரமான தண்டனை கிடைத்தது.

பாவத்தினால் இதே போன்ற கடுமையான தண்டனை வந்து விடுமோ என உலகத்தின் குடிகள் எல்லோரும் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தார்கள். இதற்கான ஒரு எடுத்துக்காட்டு தான் மீகா 6:7 இல் படிக்கிறோம்.

எல்லாரும் பாவம் செய்தார்கள். உலகில் ஒருவரும் நல்லவர்களாக இல்லை. (தி.பா. 14:3, 53:3) ஆகவே பாவிகள் என தண்டனை கொடுத்து கொன்றால் உலகிலுள்ள எல்லாரையும் கொல்ல வேண்டும் என இருந்த நிலையில் தான், ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது நாம் விரும்புகின்ற உயர் நிலையில் உலக மனிதர் ஒருவர் கூட முழுமையாக வாழவில்லை; எனவே ‘கிருபை’ காட்டலாம்; ‘கிருபை’ கொடுக்கலாம் என நம்மெல்லாருக்காகவும் மரிக்க முன் வந்தார்.

ஆண்டவருடைய கிருபையை நாம் நன்றியோடு நினைக்க வேண்டும்.

கிருபையை உணர்ந்து, நன்றியோடு பாட வேண்டும் என்பதற்காக, தாவீது அரசன், தனி இசைக் கருவிகளை உருவாக்கி கிருபை என்றுமுள்ளது என்று பாடும்படியாக லேவியரைக்கூட ஏற்படுத்தியிருந்தார். (2 குறிப். 7:6).

நாம், நம் நற்கிரியைகளினாலோ அல்லது கிரியைகளினாலோ அவரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர் பார்வையில் நாம் இன்னும் குறைவுடையவர்கள் தான். நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோமென்றால் அது அவரது பெரிய கிருபை தான்.

பரிசுத்தமற்ற நம்மை அவர் தமது கிருபையைக் கொண்டு ஏற்றுக் கொள்ள எல்லாருக்காகவும் மரித்தார்.

அவரது கிருபை வரம் மட்டுமே களைகளாகி விட்ட மனிதர்களைப் பண்படுத்தி, சீர்திருத்தி, தளை உரமாக மாற்ற முடியும் (உரோ. 5:16).

## *2. நன்றிக் கடனோடு பிழைத்திருப்போம் :* 2 கொரி. 5:15 a

“பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி...”

மரணம் தவிர்க்க முடியாதது என்றாலும் நம் மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

மனிதனால் தள்ளிப்போடவோ, வெல்லவோ முடியாத மாபெரும் எதிரி - மரணம்.

உலகில் மனிதனை ஆண்டவர் படைத்த போது ஜீவாத்துமாவாக இருக்கும்படி தான் படைத்தார். அதாவது மனிதனுக்கு ‘மரணம்’ என ஒன்று கிடையாது. தொ.நூ. 2:7 இல் நாம் வாசிப்பது மிகவும் சந்தோஷமான இந்தப் பேராசீர்வாதத்தைத்தான்.

**ஆண்டவரோடு என்றும் ஐக்கியம் கொண்டு வாழுவதற்காகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு மரணம் எப்படி ஏற்பட்டது?**

பாவத்தின் சம்பளமாக மரணம் ஏற்பட்டது. உரோ. 5:12, ஓர் ஆதாமின் பாவத்தினாலே எல்லாருக்கும் மரணம் வந்தது.

உரோ. 5:14 சொல்லுகிறது பாவம் செய்யாதவர்களுக்குக் கூட மரணம் சம்பளமாகக் கிடைத்துவிட்டது.

**சம்பளம் எதற்காகக் கொடுக்கப்படுகிறது?**

மரணம் ஒரு மனிதனுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு விட்டால், அதைச் செலவு பண்ணுவதற்கு இடம் வேண்டும். அதற்கான இடமாக கொடுக்கப்பட்டது தான் பாதாளம்.

பாவம் செய்யாதோருக்கும் பாவத்தின் சம்பளமாகிய மரணம் கொடுக்கப்பட்டு அதைச் செலவு பண்ண பாதாளம் போக வேண்டும் என்ற நிலைமை இருந்ததை ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாற்றும்படியாக தமது மரணத்தின் மூலமாக பாதாளம் சென்று, இனி இந்த நிலை எல்லாருக்கும் தேவையில்லை என்னும் நிலையை ஏற்படுத்தினார். இதற்காக நாம் நன்றிக் கடனோடு இருக்க வேண்டுமென்பதையே புனித பவுல் “பிழைத்திருக்கிறவர்கள்... தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி...” (2 கொரி 5:15a) என எழுதியிருக்கிறார்.

நாம் மரிக்கும் போது கூட நன்றிக் கடனோடு மரிக்க வேண்டும். அதாவது, இந்த மரணம் பாவத்தின் சம்பளமாக எனக்குத் தரப்படவில்லை. இளைப்பாறுதலுக்காக எனக்கு தரப்பட்டிருக்கிறது. இதற்கு நான் என்றும் கடன்பட்டவன்/கடன்பட்டவள் என்னும் நன்றிக் கடனோடு நாம் மரிக்க வேண்டும்.

இதற்காகவே ஒரு மனிதனையோ, ஒரு மனுஷியையோ நாம் அடக்கம் பண்ணும் போது, துயரமான முகத்தோடு அவர்களை அடக்கம் பண்ணாமல், அவர்களை குளிப்பாட்டி, வாசனைத் திரவியங்களோடு வாசனையாய் இருக்கும்படியும், சந்தோஷமான தோற்றத்தில் அவர்களது முகம் இருக்கும்படி வைத்து, அடக்கம் பண்ணுகிறோம்.

கடுமையான இரண்டு அணுகுண்டு வீச்சினால் சிதைக்கப்பட்ட ஒரே நாடான ஜப்பானின் நிலமும் பாதிக்கப்பட்டு விட்டது. மக்களுடைய முகமும், சரீரமும் கூட அதிகமாக பாதிக்கப்பட்டுவிட்டன என்பது நமக்கு தெரியும். ஜப்பானிலே இறந்து விட்டவர்களை அடக்கம் பண்ணுவதற்கு ஒரு வித்தியாசமான முறையைப் பின்பற்றுகிறார்கள்.

அதாவது, இறந்த உடலின் நவ துவாரங்களையும் நன்கு சுத்தம் பண்ணி, உடல் முழுக்க வாசனை திரவியங்களால் துடைக்கிறார்கள்.

அதன் பின்னர் ஒரு முக்கியமான செயலைச் செய்கிறார்கள். அதாவது, அவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில் இனிமையையும், சந்தோஷத்தையும் ஏதாவது ஒரு தருணத்தில் அனுபவித்திருப்பார்கள். அதை புகைப்படமாகவும் எடுத்து வைத்திருக்கலாம்.

அதே முகத்தை கொஞ்சம் அலங்கார ஒப்பனைகள் செய்து, முகத்திலே ஒரு மலர்ச்சியை மரணத்திற்குப் பின் கொண்டு வருகிறார்கள். இது சந்தோஷமாக அவர்கள் இறந்திருக்கிறார்கள், நன்றிப் பெருக்கோடு இறந்திருக்கிறார்கள் என்னும் எண்ணத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்கிறது.

நமது முகமும், அகமும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிற நன்றியுணர்வைப் பிரதிபலிக்க வேண்டும். திருத்தூதர் பவுல் பிழைத்திருப்போர் இனி தங்களுக்காக அல்ல. இறந்த அவருக்காக பிழைத்திருக்க வேண்டும் எனக் கூறுவதில் இது தான் சொல்லப்படுகிறது. நமது நன்றியுணர்வு அவருக்கே முழுமையாக இருப்பதாக.

**அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்**

## ஊனியல்பின்படி வாழா வாழ்க்கை

I சாமு. 16 : 1-12 யோவா. 18 : 19-23

**"...இனி மேல் நாங்கள் எவரையும் மனித முறைப்படி மதிப்பிடுவதில்லை"**
**2கொரி. 5:16**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஊனியல்பின் படி வாழாத மேன்மையான வாழ்க்கைக்கே நம்மை அழைக்கிறார். ஒரு காலத்திலே திருத்தூதர் பவுல் தனது நீண்ட திருப்பணி அனுபவத்தின் விளைவாக இதனைக் கண்டறிந்து, ஊனியல்பின்படி வாழ்கின்ற வாழ்க்கையை மட்டும் எல்லாரும் தவிர்த்தால் கிறிஸ்தவ வாழ்க்கை மிகவும் நன்றாக இருக்குமென்ற ஆவலோடு கொரிந்து திருச்சபைக்கு இதனை எழுதினார்.

இன்று உலகில் நடக்கின்ற பல பிரச்சனைகளுக்கும், பாவங்களுக்கும் அடிப்படையாக இருப்பது ஊனியல்பின்படி நடந்து கொள்ளும் வாழ்க்கை.

பொதுவாக நாம் பல காரியங்களிலே ஊனியல்பின்படி நடந்து கொள்கிறோம். திருமறையினடிப்படையிலே ஆய்வு செய்தால், இரண்டு விதங்களிலே நாம் ஊனியல்பின்படி நடந்து கொள்ளுகிறோம். அவற்றைக் குறித்து தியானிப்போம்.

***1. ஆள் தோற்றத்தின்படி பிறரை நடத்துவதிலே :*** 2 கொரி. 5:16

ஆகவே இனிமேல் நாங்கள் எவரையும் மனித முறைப்படி மதிப்பிடுவதில்லை.

ஊனியல்பின்படி வாழ்கிற வாழ்க்கையின் அடிப்படை அடையாளம் ஆள் தோற்றத்தின்படி ஆட்களை நடத்துவது தான்.

மனிதர் என்றாலே எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு ஆண்டவர், இறைவாக்கினராகிய சாமுவேலுக்குச் சொன்ன விளக்கம் - 1சாமு. 16:7 "... மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்; ஆண்டவரோ அகத்தைப் பார்க்கிறார்".

சாமுவேல் இறைவாக்கினராக இருந்தாலும் அவரும் மனிதர் எல்லாரும் செய்கின்ற முறையான ஊனியல்பின்படி மதிப்பீடு செய்கின்ற முறைப்படி தான் எல்லாரையும் மதிப்பிட்டார்.

ஆள் தோற்றத்தின்படி மதிப்பிடுவது தான் ஊனியல்பின்படி மதிப்பிடுவது.

இன்னொரு மனுஷனை ஊனியல்பின்படி மதிப்பிடுவதும், ஊனியல்பின்படி நடத்துவதும் மிக எளிது. இந்த மதிப்பீட்டு வேலை மிகச் சீக்கிரமாக முடிந்து விடும்.

ஊனியல்பின்படி மதிப்பிட ஒரு மனிதனிடம் நமக்கு பிடித்தமானவைகளை தான் தெரிந்தெடுக்கிறோம். அதில் முதலாவது ஒரு மனிதனின் தோற்றம் குறித்த செய்தி.

அது மூளைக்குச் சென்று ஊனியல்பின்படி நாம் மதிப்பிடுவதெல்லாம் சரி தான் என்னும் நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

தோற்றத்தின்படி மதிப்பிட்டு, அதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தை ஞானியும், பிரசங்கியுமான சாலொமோன் 'மாயை மாயை' என்றே கூறினார்.

ஊனியல்பின்படி மதிப்பிடாமல் ஒரு மனிதனை அவனது உள்ளத்தின் மதிப்பின்படி நடத்துவதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

உள்ளத்து மதிப்பீடு என்பது அதிக காலமெடுத்து செய்யப்படும் வேலையாகும். ஒரு மனிதனின் உள்ளத்தின் மதிப்பீட்டை ஆண்டவர் மட்டுமே மிகச் சரியாகச் செய்ய முடியும்.

ஆண்டவர் மனிதனின் புறத்தோற்றத்தின்படி அல்ல; அகத்தோற்றத்தின்படி தான் மதிப்பிடுவார்.

ஒரு மனிதனைக் குறித்து அதிக காலமெடுத்து ஆண்டவர் செய்கின்ற அவரது உறுதியான, இறுதியான, மதிப்பீட்டையே நாம் நியாயத்தீர்ப்பு என்கிறோம்.

ஊனியல்பின்படி மதிப்பிடாமல், நீதி வழங்குவதற்கு அடையாளங்களாக உலகமெங்கும் சுட்டிக் காட்டப்படுவது, கண்களை கட்டிய ஒரு தூதனும், தூதன் கையிலுள்ள தராசும், வாளும்.

'கண்' எதற்குக் கட்டப்பட்டிருக்கிறதென்றால், உடல் தோற்றத்தின்படி யாரையும் நடத்தி விடக்கூடாதென்று தான்.

'கண்' மட்டுமே கட்டப்பட்டுள்ளது; காது கட்டப்படவில்லை.

மனிதரை ஊனியல்பின்படியல்ல; உள்ளத்தின்படி இறுதித் தீர்ப்பு வழங்குகிற சர்வ வல்லமையுள்ள கடவுளின் நீதி வழங்குதலின் அடையாளங்களாக இருப்பது இரண்டு தன்மைகள். எசா. 11:3 இல் இதை காணலாம். அதாவது, கண் கண்டதைக் கொண்டு மட்டும் அவர் நீதி வழங்கார், காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் அவர் தீர்ப்புச் செய்யார். அதாவது, அவரது கண்கள் பாரபட்சம் காட்டாது. தோற்றத்தின்படி நியாயம் தீர்க்க மாட்டார்.

அவரது காதுகள், மற்றவர்கள் பிறரைக் குறித்து தருகின்ற தோற்றத்தினடிப்படையில் தீர்ப்பு செய்யாது.

நம்மால் ஆண்டவரைப் போல பிற மனிதரை அவர்களது உள்ளத்தின் மதிப்பின்படி நடத்துவது முழுவதும் முடியாத ஒன்று.

ஆனால் ஓரளவிற்காவது ஆண்டவர் பின்பற்றுகிற வழிகளிலே ஒன்றை நாம் பின்பற்றலாம். அதை அவரே நமக்குப் பரிந்துரைக்கிறார். யோவா 7:24-ன்படி தோற்றத்தை வைத்து ஆட்களை மதிப்பிடுவதை நாம் விட வேண்டும்.

இராணுவத்திலே ஆள் தோற்றத்தைப் பார்த்து எதிரிகளில் சிலரைத் தப்ப விடுவதை எல்லாம் கட்டுப்படுத்த அமெரிக்க நாட்டின் Air Force, மற்றும் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான CIA (Central Intelligence Agency) ஆகியன இணைந்து 1990 இல் ஆளில்லா விமானம் (Unmanned aerial vehicle) எனப்படுகிற Drone-ஐ வடிவமைத்தார்கள்.

1995 இல் தீவிரவாதிகளை ஒழிக்க இதைப் பயன்படுத்தினார்கள். இதனால் தோற்றத்தைப்பார்த்து பாரபட்சம் காட்டுவது தவிர்க்கப்பட்டது.

ஊனியல்பின்படி நடந்து கொள்ளத் தூண்டும் தோற்றத்தின் அடிப்படையிலான மதிப்பீட்டை நாம் தவிர்ப்போம்.

இதனால் மகிழ்ச்சியும், அமைதியும் நமக்குக் கண்டிப்பாக ஏற்படும்.

***2. ஆளைப் பாராமலே கருத்துச் சொல்வதில் :*** 2 கொரி. 5:16

முன்பு நாங்கள் கிறிஸ்துவையும் மனிதமுறைப்படி மதிப்பிட்டோம். ஆனால், இப்போது அவ்வாறு செய்வதில்லை.

திருத்தூதர் பவுல் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நேரடியாகப் பார்த்து பேசிப் பழகாதவர்.

அவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து காதால் கேட்டவைகளினடிப்படையில் தான் அவருக்கு விரோதமாக ‘சவுல்’ என்னும் தீவிரவாதியாகச் செயல்பட்டார்.

அதாவது மற்றவர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கொடுத்த தோற்றத்தின்படி தான் பவுல் சவுலாக இருந்து செயல்பட்டார்.

மாசுக்களிலே மிக மோசமான மாசு காற்றிலே கலந்து வரும் மாசு. பெரும்பாலும் இதனை நம் கண்களால் காண முடியாது.

காற்று மாசுக்களிலே சில வகை கரும்புகை மாசுக்களை மட்டுமே நாம் பார்க்க முடியும். உதாரணமாக வாகனங்களிலிருந்து வரும் கரும்புகை - Carbon மாசு மட்டும் தான் பார்க்கிறோம்.

இன்று உலகம் இந்தளவிற்கு வெப்பமயமாகி வருவதற்குக் காரணம், காற்றிலே கலக்கின்ற மாசுக்கள் தான்.

2013 ஆம் ஆண்டிலே வாகனங்களிலிருந்து வந்த கரும்புகை காற்று தனது உடைகளைப் பாழாக்கினதால் இதனை என்ன செய்யலாம் என யோசிக்க Graviky Labs என்னும் நிறுவனம் ஒன்றை Anirudh Sharma என்னும் அமெரிக்க வாழ் இந்தியர் உருவாக்கினார்.

இந்த Graviky Labs விரிவாக ஆய்வு செய்து, கண்களால் நாம் காற்றாகக் காண்கின்ற வாகனக் கரும்புகையைக் கொண்டு சுவரில் எழுதுவதற்கேற்ற (INK) ‘மையை’ தயாரிக்கலாம் எனக் கண்டுபிடித்து (AIR INK) ‘காற்று மையை’ உருவாக்கியிருக்கிறார்கள்.

காற்றிலே ஏற்படும் மாசு கண்ணுக்குத் தெரியாத மாசு போல, நம் காதுகளுக்குக் காற்று வழியாக வந்தடையும் சில செய்திகள் நாம் மாம்சத்திற்கேற்றபடி நடந்து கொள்ள நம்மை மாசுபடுத்தி விடுகின்றன.

Smart Phone, Computer போன்றவற்றிலே Free games download பண்ணலாம் என சில செய்திகள் வருவதுண்டு. அது Free தானே என நாம் download பண்ணினால் நம் தகவல்களையெல்லாம் அதன் வழியாக மற்றவர்கள் எளிதாக எடுத்து விடுவார்கள். அதற்கு தான் Free என வலை விரிக்கப்படுகிறது. ஆகவே Free எனக் கவர்ச்சியாக வரும் எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள் என எச்சரிக்கையாகச் சொல்லுகிறார்கள்.

நமது காதுகளிலும் free-யாக சில செய்திகளை சிலர் download பண்ணி மாம்சத்திற்கேற்றபடி செயல்பட வைத்து விடுகிறார்கள்.

Kashmir இல் சமீப காலமாக நடக்கின்ற உள்நாட்டுக் கலவரம் இப்படித்தான் நடக்கிறது. 2016 July 8 ஆம் தேதி Burhan Wani என்ற மனிதர் பாதுகாப்புப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டதால் காஷ்மீர் பள்ளத்தாக்கின் 10 மாவட்டங்களில் கலவரமாக இருக்கிறது.

இரண்டு மாதமாக காஷ்மீரில் எந்தக் கடைகளும் திறக்கப்படவில்லை. அப்படியே திறந்தாலும் தேவையான பொருட்கள் இருக்காது. July முதல் வாரத்திலிருந்தே சுற்றுலாப் பயணிகளின் வருகை நின்று போனதால் யாருக்கும் வருவாய் இல்லை.

இதற்கு காரணமாகச் சொல்லப்படுவது Home grown militancy - வீட்டிலே வளர்க்கப்படும் தீவிரவாதம். கால் நூற்றாண்டு காலமாக துப்பாக்கிச் சத்தத்தையே கேட்டு வளர்ந்து, படித்த புதிய தலைமுறையினரான இளைஞர்களின் காதுகளிலே அவர்களுக்கு முறையான படிப்பு இல்லை; படித்தாலும் இனி ஒரு போதும் வேலையில்லை போன்ற எதிர்மறையான செய்திகள் சென்று சேர்ந்ததால் ஊனியல்புக்கேற்றபடி நடந்து கொள்ளுகிறார்கள்.

திருத்தூதுவர் பவுலின் முந்தின வாழ்க்கையிலே அவரது காதுகளிலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து எதிரிடையான செய்திகள் போய்ச் சேர்ந்ததால் அவர் முழுமையாக ஊனியல்புக்கேற்றபடி நடந்து கொண்டார். Home Militancy-யைத் தான் அவரும் செய்தார். தி.ப. 8:3.

ஆண்டவருக்கு இடைக்கச்சையாக இருந்த சத்தியம் (எசா. 11:5) திருத்தூதுவர் பவுலின், சவுல் என்னும் தீவிரவாத வாழ்க்கையிலே காணப்படவில்லை.

தான் எந்த வகையில் பாதிக்கப்பட்டிருந்தாரோ அந்த வகையில் தான் அவர் ஊனியல்பின்படி நடந்து கொண்டார்.

'சத்தியம்' - உண்மை என்ன? என அவர் அறிய முயற்சிக்கவில்லை.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் காணாமலே அவரைக் குறித்து மோசமான கருத்துக்களை தனது ஊனியல்பின் பெலவீனத்திற்கேற்றபடி சொல்லிக் கொண்டிருந்த பவுலின் வாழ்க்கையில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை வானத்து ஒளியாக தமஸ்குவின் வீதியிலே சந்தித்த போது, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைத் தன் மனித முறையின்படியல்ல, அவருடைய உள்ளத்தின்படி அவரை அறிந்து கொண்டார். தி.ப. 9:3-6.

தலைமைக்குரு மற்றும் அவரோடிருந்தவர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஊனியல்பின்படி அறியவே முயற்சித்தார்கள். ஆகவே உண்மையை அவர்கள் கடைசி வரை உணரவேயில்லை. உண்மை அவர்களுக்கு அரைக்கட்டாகவுமில்லை. யோவா. 18:19-22. ஆண்டவரைப் புரிந்து கொள்ளாத காவலரும் மாம்சத்தின்படி நடந்து அவரை அறைகிறார்.

ஆண்டவரை நாம் நமது ஊனியல்பின்படி அறியாமல், அவரது சிறந்த, திறந்த உள்ளத்தின்படி அறிந்து கொண்டால் ஊனியல்பின்படி நடந்து கொள்ளவே மாட்டோம். ஒரு முக்கியமான ஆலோசனையை நமக்குத் தருகிறது சஉ. 11:10 மனக்கவலையை ஒழியுங்கள். உடலுக்கு ஊறுவராதபடி காத்துக் கொள்ளுங்கள்.

இருதயத்திலே சஞ்சலமும், 'மாம்சம்' (ஊன்) எனச் சொல்லப்படுகிற மூளையிலே தீங்கும் இருந்தால் நாம் ஊனியல்பின்படி தான் நடந்து கொள்ளுவோம்.

மூளையை நம்மை நிர்வகிக்கப் பயன்படுத்தும் போது பொறுமையாகப் பயன்படுத்துகிறோம். மூளையை அடுத்தவர்கள் கையாளப் பயன்படுத்தும்போது மிகவும் பதட்டமாக நடந்து கொள்ளுகிறோம். இதைத் தவிர்க்கவும், ஊனியல்பின்படி வாழாமலிருக்கவே சஉ. 11:10 சொல்லப்பட்டது.

ஆவிக்குரியவர்களாக வாழ்வோம்.

**அருள்திரு.J. பிரகாஷ் நாயகம்**

05-01-2017 நாள் 4 வார இறைவேண்டல்

## புதுப்படைப்பாவோம்

எசே. 36 : 25-27

கொலோ. 3:9-17
யோவா 3:1-8

**"... ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார்" 2 கொரி. 5:17.**

ஆண்டவர் தினந்தோறும் நாம் புதிதானவர்களாக வாழ வேண்டுமென விரும்புகிறார். வாழ்க்கையிலே புதிது புதிதாக சில அனுபவங்களை அனுபவிக்கும் போதும், புதிது புதிதாகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் போதும் தான் நமது மனம் மகிழுகிறது.

ஆனால் வாழ்க்கையிலே, புதிதாகப் பெற்றுக் கொள்ளும் பொருட்களையும், புதிதான அனுபவங்களையும் நாம் கடைசி வரை புதிதாக வைத்துக் கொள்ளுவதில்லை.

புதிதாக நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் பொருட்களையும் நாம் புதிதாகவே வைத்துக் கொண்டால் அது, அவற்றை தந்த ஆண்டவருக்கு நாம் நன்றியோடு இருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

தேவைக்கு அதிகமாக இருக்கிறது, எல்லாமே இருக்கிறது என நாம் இறுமாப்புடன் இருக்கக் கூடாது.

நன்றியுணர்வோடு 'பொருட்களை' புதியதாகவும் 'அனுபவங்களை' புதுப்பித்தும் வைத்துக் கொள்ளும் போது நமது வாழ்க்கையே புதுப்பிக்கப்படுகிறது. புல. 3:22, 23 வசனங்கள் இதை இன்னும் வலுவாக வலியுறுத்துகின்றன.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய 'புதுப்படைப்பின் முதற்பலனாகிய நாம்' எப்படி புதுப்படைப்பாகவே தொடர்ந்து வாழ வேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென்பதைத் தியானிப்போம்.

### *1. பாரமடையாதபடி புதுப்பித்தல் :* எசே. 36:26

நம்மை நாம் புதுப்பித்துக் கொள்ள, எதை நாம் புதுப்பிக்க வேண்டுமென்பதை தெரிந்திருக்க வேண்டும்.

ஆண்டவர் இதற்கு வழிகாட்டுகிறார். அவர் மனிதனின் இருதயத்தையே புதுப்பித்து, எப்போதும் மனிதரில் முதலாவது புதுப்பிக்கப்பட வேண்டியது அவர்களுடைய இருதயமே என்பதை எசே. 36:26 இல் காட்டுகிறார்.

நமது இருதயம் ஓர் அற்புதமான உறுப்பு. எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உறுப்பின் மாதிரியில் உருவாக்கப்பட்டது தான் கடிகாரம்.

வெளியான அல்லது புற மனிதனை இயக்குகின்ற தலைமைச் செயலகமாக ‘மூளை’ இருப்பது போல நமது உள்ளான மனிதனை இயக்குகின்ற தலைமைச் செயலகமாக இருப்பது ‘இருதயம்’.

இப்படிப்பட்ட முக்கியமான இருதயம் பாரமடைந்து விடக்கூடாது.

நமது உடலில்என்ன பாதிப்பு ஏற்பட்டாலும், எந்த உறுப்பு பாதிக்கப்பட்டாலும், காயப்பட்டாலும், உடனடியாக இருதயம் அதிகமாகப் பாரமடைந்துவிடும். இருதயம் அதிகமான கவலைகளால் பாரமடைகிறது.

எதையும் முன்கூட்டியே எண்ணித் திட்டமிடுகிறவர்களை விட, என்னென்ன நிகழப் போகிறதோ எனக் கற்பனை செய்து கொண்டு கவலைப்படுவோர் பலர்.

கவலைகள் போக்க ஆண்டவரது ஆலயத்திலே நின்று ஜெபிக்கும் போதும், ஆலயத்தின் வாசலில் கழற்றி போடப்பட்ட செருப்புகள் களவு போய்விடுமோ எனக் கவலைப்படுவார் பலர்.

கனவில் மேலதிகாரிகளை கண்டு விட்டால் கூட அடுத்த நாள் என்ன நடக்குமோ எனக் கவலைப்படுவோர் உண்டு.

நம்மைத் தாக்குகின்ற பெருங்கவலைகள் நமது இருதயத்தை அதிகமாகப் பாரமடையச் செய்யாது.

ஆனால் திடுக்கிடும்படியாக அடிக்கடி வருகிற சின்னக் கவலைகள் அதிகமாகி அதிகமாகி, Cortisol என்னும் Harmone-ஐ நம் இரத்த ஓட்டத்தில் சேர்த்து இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் மற்றும் Dry Glyserides ஆகியவற்றை அதிகரித்து இருதயத்தை கல்லாக்கி விடுகிறது. இருதயத்தின் எடையும் அதிகரித்து விடுகிறது.

எசே. 36:26 இல் ஆண்டவர் கல்லாகி விட்ட இருதயத்தை எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தைத் தந்து புதுப்பிப்பது போல, பெருகி வரும் கவலைகளால் நம் இருதயம் கல்லாகாமலிருக்க அன்பைப் பெருக்கி, ஆசைகளைச் சுருக்கி, மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்வுகளிலும், அனுபவங்களிலும் நம் மனதை ஈடுபடுத்தி, இருதயத்தைச் சதையாக்கி, நம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இருதயத்தைப் புதுப்பிக்க ஆண்டவர் கையாளும் இன்னொரு வழியை எசே. 36:27 இல் வாசிக்கிறோம்.

‘இருதயம்’ நம் உடலை இயக்குகின்ற இயந்திரம். இந்த இயந்திரம் உலகிலுள்ள எல்லா இயந்திரங்களையும் விட மிகவும் சிறப்பானது. ‘இரு’

தயம் என பெயரிடப்பட்டுள்ள இந்த இயந்திரம் கொஞ்ச நேரம் கூட இயங்காமல் இருந்து விடக்கூடாது. நன்றாக இயங்கிக் கொண்டிருந்தால் மட்டுமே இது மிகச் சிறப்பாக இயங்கும்.

நாம் ஒன்றுமே செய்யாமல் உட்கார்ந்து இருக்கிறதாலே அது இருதயத்திற்கு மிகப் பெரிய பாதிப்பை அளித்துவிடும். அசையாமல் நாம் ஓரிடத்தில் உட்கார்ந்து இருந்தால் அது இரத்தத்தில் கொழுப்பையும், சர்க்கரை அளவினையும் கூட்டி பாரமடையச் செய்து விடும். நாம் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டேயிருந்தால் இருதயத்தின் இயக்கம் தேக்கமில்லாமலிருக்கும். சுறுசுறுப்பான உடல் உழைப்பு தான் இருதயத்தைப் புதுப்பிக்கும்.

இருதயத்தைச் சும்மா உட்கார வைக்காமல் இயக்கி, அதற்குப் புத்துணர்ச்சி கொடுத்து, புதுப்பிப்பதற்காக எசே. 36:27 இல் "நடக்கவும்..." கைக்கொள்ளவும்... என்று சொல்லப்பட்டுள்ளது.

புதுப்படைப்பாக வாழ்வதற்கு இருதயத்திற்கான இந்த உடற்பயிற்சியைத் தவறாமல் செய்வோம்.

***2. பாவங்களடையாதபடி புதுப்பித்தல் :*** கொலோ. 3:9-10

புது படைப்பாக வாழ்வதற்கு முக்கியமாகச் செய்ய வேண்டிய செயல். பாவங்கள் நம்மில் அடைந்து கொண்டு இராதபடி ஒவ்வொரு காலமும் அதைச் சுத்தம் செய்ய வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையிலே எவ்வளவு பாவங்கள் நம்மை அங்குமிங்கும் சுதந்திரமாக நடமாட முடியாதபடி நமக்குள்ளேயே அடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை யோசித்துப் பார்ப்போம்.

இவற்றிலே பெரிதாக நம்மையடைத்துக் கொண்டிருக்கிற பாவங்கள் உண்டு. சின்ன சின்னதாக நமக்குள்ளே சேகரிக்கப்பட்டு நம்மையே அடைத்துக் கொண்டிருக்கிற பாவங்கள் உண்டு.

கொலோ. 3:5 இல் நமது சுதந்திரத்தையெல்லாம் எடுத்துக் கொள்ளும் நம் வாழ்க்கையிலே அல்லது நம் வாழ்க்கை என்னும் வீட்டை நெருக்கியடித்து, அடைத்துக் கொண்டிருக்கும் பெரிய பாவங்களைப் பார்க்கிறோம்.

கொலோ. 3:8 இல் நமது வாழ்க்கையை அடைத்துக் கொண்டிருக்கும் சிறிய பாவங்களைப் பார்க்கிறோம்.

தற்போது நாம் மின்னணுப் பொருட்களை அதிகம் பயன்படுத்துகிறோம். ஏழைகள், வசதியானவர்கள் என்னும் பாரபட்சமில்லாமல் T.V. Refrigerator, Laptop, Cell Phone, Computer ஆகியவற்றை பயன்படுத்துகிறோம்.

பல குடும்பங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட, கூடுதல் எண்ணிக்கையில் Cell Phone இருக்கின்றன.

இந்த மின்னணுப் பொருட்கள் பழையதாகி தேவையில்லை, பயன்படுத்த முடியாது என்னும் நிலை வரும் போது இவை மின்னணுக் கழிவாகி நம் வீட்டையே அடைத்துக் கொண்டிருக்கின்றன. உற்பத்தி ஏற்றுமதியில் ஒரு நாடு சாதனை படைக்கலாம். ஆனால் தேவையற்ற கழிவுப் பொருட்களை சேகரித்து வைப்பதிலே ஒரு நாடு சாதனை படைக்க முடியுமா? நமது நாடு தேவையற்ற மின்னணு கழிவுப்பொருட்களை சேகரித்து வைப்பதிலே சாதனை படைத்திருக்கிறது. இந்தியாவிலே ஆண்டுக்கு 18.5 லட்சம் Metric Tonne மின்னணுக் கழிவுகள் சேகரமாகின்றன.

கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தலாம். அச்சிடும் காகிதப் பொருட்களை மறுசுழற்சி செய்து சுத்தமாக்கி விடலாம். ஆனால் பெரிய கழிவுகளான மின்னணு பொருட்களை மறுசுத்தம் செய்து பயன்படுத்துவது கடினம். உதாரணமாக கணினியின் முக்கியமான பாகமான C.P.U-விலே உள்ள Cadmium, Lead எனப்படும் ஈயம், போன்ற நச்சுப் பொருட்கள் இருக்கின்றன. இதை மறுசுழற்சி பண்ணும்போது சரியாக கையாளாவிட்டால் நமது உடலுக்கு பெரும் தீங்காகி விடும்.

இதே போல நம்மை அடைத்துக் கொண்டிருக்கும் பெரிய பாவங்களான - விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகியவற்றை நாம் நமக்குள்ளே வைக்காமல் வெளியே எறிந்து விட வேண்டும்.

திருமறை, இதை வெளியே எறிந்தால் கூட ஆபத்து, இவற்றை அழித்து விட வேண்டுமென்று கூறுகிறது. வெளியே Outhouse இல் அல்லது store room இல் போட்டு வைத்தால், மறுபடி நாமே அவற்றை வீட்டிற்குள் எடுத்துக் கொண்டு வந்து விட வாய்ப்பு உண்டு. ஆகவே இவற்றை இரக்கமே காட்டாமல் அழித்து விட வேண்டும். (கொலோ. 3:5) அப்போது தான் புதுப்படைப்பாக முடியும்.

வீட்டிலே நாம் சேகரித்து வைக்கின்ற சிறு சிறு பொருட்களைப் யோசித்துப் பார்ப்போம்.

ஒரு சமயம் ஒரு பத்திரிக்கையிலே நாம் வெளியே எறியாமல் வீட்டிற்குள்ளேயே வைத்திருக்கும் சின்ன சின்ன குப்பை பொருட்களை பட்டியலிட்டிருந்தார்கள்.

- Bulb போடாத, Battery போடாத உபயோகிக்க முடியாத Torch lights.
- Refill தீர்ந்து போன, பார்வைக்கு அழகான Ball Point Pens.

- ஆண்டு முழுவதும் நமக்கு வந்த திருமண அழைப்பிதழ் அட்டைகள்.
- பிள்ளைகளின் பழைய பாடப் புத்தகங்கள், இன்னும் பல நமக்குள் குடியேறி, நம் மனதை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

எப்போதோ ஏற்பட்ட கோபம் வெளியே போகாமல் அப்படியே வாழ்க்கையிலே குப்பையாக அடைத்துக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதோ ஏற்பட்ட மூர்க்கம் அப்படியே தீர்க்கமாக நமக்குள் இருந்து நம் வாழ்க்கையிலே தீர்க்கவே முடியாத பொருளாக வாழ்க்கையை அடைத்துக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதோ யாரைப் பார்த்தோ ஏற்பட்ட பொறாமை நமக்குள்ளேயே அடைத்துக் கொண்டிருக்கிறபடியால், யாரைப் பார்த்தாலும் பொறாமைப்பட வைத்து விடுகிறது.

எப்பொழுதோ நாம் சிறிது சிறிதாக சேகரித்த பாவக் குப்பைகள் நமது வாழ்க்கை என்னும் வீட்டை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

திருத்தூதர் பவுல் அதனால் தான் எப்பொழுதோ நாம் சிறிது சிறிதாக சேகரித்த குப்பைகளை

“இப்பொழுதோ...இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள்” (கொலோ. 3:8) என்கிறார்.

புதுப்படைப்பாக நாம் வாழ இவைகளையெல்லாம் தவிர்ப்போம்.

**அருள்திரு.J. பிரகாஷ் நாயகம்**

06-01-2017 நாள் 5 வார இறைவேண்டல்

## ஒப்புரவாக்கும் கிறிஸ்துவின் திருப்பணி

தொ.நூ. 17:1-8 உரோ. 5:6-11

**"இவை யாவும் கடவுளின் செயலே, அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்." 2 கொரி. 5:18.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்திலே தொடர்ந்து என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்பதை நாம் அவ்வளவு ஆழமாக அறிந்து கொள்ளவில்லை. திருத்தூதர் பவுல் அதைக் கற்று ஆழமாக அறிந்து கொண்டார். ஆகவே உலகத்திலே 33½ வருடங்கள் வாழ்ந்த ஆண்டவர் இயேசு என்ன செய்து கொண்டிருந்தார் என்தை தனது கடிதங்களில் அழுத்தமாக எழுதியுள்ளார் உரோ. 5:10,11; 2 கொரி. 5:18,19. அந்த வேலை உலகத்தை அல்லது உலகத்தின் மனிதரை ஆண்டவரோடு ஒப்புரவாக்கும் வேலையைத் தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். இது எளிதான வேலையல்ல, மிக நுணுக்கமான, கடினமான வேலை.

2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி இங்கிலாந்தின் New Castle நகரத்திலே ஒரு மோசமான விபத்து ஒன்று நடந்துவிட்டது. Tony Cowan என்னும் வாலிபர் தனது காரை வேகமாக ஓட்டிச் சென்றார். அப்போது வழியிலிருந்த ஒரு வேகத்தடையை கவனிக்காததால் கார் தாவிக் குதித்து தாறுமாறாக ஓடி, சாலையோரமிருந்த தொலைபேசி கம்பம் மீது மோதியது. இந்த அதிர்ச்சியான விபத்தில் Tony Cowan-னின் கழுத்தில் அடிப்பட்டு, கழுத்து எலும்புகள் நொறுங்கின. அதை விட மோசமான இன்னொரு சம்பவமும் நடந்துவிட்டது. அதாவது முதுகெலும்பு மற்றும் தண்டுவடத்திலிருந்து மண்டையோடு துண்டிக்கப்பட்டுவிட்டது. எனினும் 'கழுத்து' தசைகளால் பிடிக்கப்பட்டிருந்ததால் தலை தனியாக கீழே விழவில்லை. ரத்த நாளங்கள் சேதமடையவில்லை. இதனால் மூளைக்கு ரத்த ஓட்டம் தடைபடவில்லை. ஆனால் விபத்து கொடுத்த அதிர்ச்சியில் டோனியின் இதய இயக்கம் நின்று விட்டது. ஆகவே மருத்துவ குழுவினர் துண்டிக்கப்பட்டுவிட்ட தொடர்புகளை மறுபடி ஏற்படுத்த முதலாவது முதலுதவியாக டோனியின் மார்பை பலமுறை அழுத்தி, அழுத்தி, இதயத்தை இயங்கச் செய்தனர்.

பின்னர் முக்கியமான ஒப்புரவு போன்ற சிகிட்சை நடந்தது. இது மிகமிக நுணுக்கமான சிகிட்சை. உடலினுள்ளே விட்டு விட்ட இசைவுகளை மறுபடியும் இசைவாக, பொருத்தமாக பொருத்துவது என்பது எளிதானதல்ல. எனினும் இதைச் சவாலாக ஏற்றுக்கொண்ட இந்திய

வம்சாவளியை சார்ந்த Neuro Surgeon Dr. Anand Kamat உலோகத்தகடுகள், திருகாணிகளை பயன்படுத்தி, துண்டிக்கப்பட்ட தலைபகுதியை கழுத்து பகுதியுடன் இணைக்கும் இணைப்பு சிகிச்சையைச் செய்தார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் மனிதர்களின் பாவத்தின் வேகத்தினால் விபத்து போல துண்டிக்கப்பட்டுவிட்ட கடவுளுக்கும் மனிதருக்குமான உறவை தாமே உலகிற்கு வந்து சரிப்படுத்தி, சீர்ப்படுத்தி ஒப்புரவை நமக்கு கிடைக்கப் பண்ணினார். மனிதர்களுடைய தகுதிக்கு இது கிடைப்பதற்குரிய கிருபைதான். அதனால் தான் பவுல் திருத்தூதுவர் கடவுள் நமக்கு தந்த 'ஒப்புரவை' கொண்டாட்டத்திற்குரிய அனுபவமாகக் கூறுகிறார் உரோ. 5:11.

இவ்வளவு கிருபையாக கிடைத்த ஒப்புரவாகுதலை நாம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இதற்காகவே 2017 ஆம் ஆண்டிற்கான பேராயச் செம்பொருள் ஒப்புரவாகுதலை மையமாக வைத்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. Pilgrimage towards forgiveness and Reconciliation - மன்னிப்புக்கும் ஒப்புரவுக்கும் நேரான திருப்பயணம்.

ஒப்புரவு என்பது மிக நுணுக்கமாக சீரமைக்கப்பட்ட உறவு. இதை நமது வாழ்க்கையிலே நிறைவேற்ற ஆண்டவர் எப்படி ஒப்புரவை ஏற்படுத்துகிறார் என்பதைத் தியானிப்போம்.

***1. ஒப்புரவு என்பது உத்தமமான உடன்படிக்கை :*** தொ.நூ. 17:4

நாமெல்லாம் ஒப்புரவையும், சமரசம் என்னும் Compromise-ஐயும் ஒன்று என நினைத்து குழப்பிக் கொள்ளுகிறோம். 'ஒப்புரவு' என்பது ஆண்டவரால் தூண்டப்பட்டு நாம் ஏற்படுத்தும் உறவு.

'சமரசம்' என்பது அப்படியல்ல. அது தீமைகளுக்கும், தனக்கு ஒத்துக் கொள்ளாதவற்றிற்கெல்லாம் ஒத்துப் போகுதலாகும். சமரசம் என்பதைத் தெளிவாக விளக்கும் பகுதி. தி.பா. 50:18-20.

ஒப்புரவிலே ஆண்டவரது தூண்டுதலின்படி நாம் இறங்கிப் போவதினால் இது சமரசமாகாது. எவ்வாறு ஆண்டவர் தமது உத்தமமான, உயர்வான நிலையிலிருந்து இறங்கி வந்து ஆபிராமோடு உடன்படிக்கை செய்தாரோ அதே போன்றது தான் ஒப்புரவினால் நாம் ஏற்படுத்தும் உடன்படிக்கை.

பொதுவாக, சமமான சமூக நிலை உள்ள இருவர் மட்டுமே உடன்படிக்கையை ஏற்படுத்த முடியும். ஆனால் 'ஒப்புரவு' என்பது சமமில்லாதவர்களோடும், தகுதியில்லாதவர்களோடும் நமது உத்தமத்தை சமரசம் செய்யாமல் மேற்கொள்ளுகின்ற உடன்படிக்கையாகும்.

தனக்குச் சிறிதளவும் சமமில்லாத ஆபிராமுடன் உடன்படிக்கையை ஒப்புரவாகச் செய்த ஆண்டவர் உலகத்திலே உத்தமமாக

வாழ்ந்த ஆபிராமிடம் ஒரே ஒரு கட்டளையைத் தான் கொடுக்கிறார். தொ.நூ. 17:1 இல் சொல்லப்பட்டுள்ள அந்தக் கட்டளை "நீ எனக்கு பணிந்து நடந்து மாசற்றவனாய் இரு". இதுவே ஒப்புரவை உத்தமமான உடன்படிக்கையாக உயிர்ப்புடன் வைத்துக் கொள்ள உதவும் என்பதை ஆண்டவர் ஆபிரகாமுக்கு உணர்த்தினார்.

ஒப்புரவுக்கான தேவை என்ன என்பதையும் நாம் புரிந்திருக்க வேண்டும். நமது உத்தமத்தை காத்துக் கொள்ள 'ஒப்புரவு' தேவை. அதனால் தான் ஆண்டவர் மத். 5:34-ஐ சொன்னார். நம் பேரில் எந்தக் குறைவும் இல்லாதிருப்பதே 'உத்தமம்' என அழைக்கப்படுகிறது. ஆகவே உத்தமத்தை கடைசி வரை காத்துக்கொள்ள 'ஒப்புரவு' வாழ்க்கையில் அவசியமானது.

## *2. ஒப்புரவு என்பது உறவாக ஏற்றுக் கொள்ளுவது :*

தொ.நூ. 17:5

'ஆபிராம்' என அழைக்கப்பட்டவரது பெயர் கூட அவரது வாழ்க்கை முறை, 'ஒப்புரவு' வாழ்க்கை முறையாக மாற்றப்பட்டதினால் ஆபிரகாம் என மாற்றப்படுகிறது.

ஆபிரகாம் என்னும் பெயர் வழியாக 'ஒப்புரவு' என்பது உறவாக அனைவரையும் ஏற்றுக் கொள்வது எனக் கற்றுத் தரப்படுகிறது.

ஆபிரகாமை யூதர்கள் தங்களது தந்தை என்று சொன்னார்கள். ஆனால் ஆண்டவர் ஆபிரகாமை அனைவருக்கும் தந்தையாக ஆண்டவரோடும் மனிதரோடுமுள்ள அவரது ஒப்புரவான வாழ்க்கை மூலமாக மாற்றுகிறார்.

இன்று ஒப்புரவை உறவாக மாற்றுவதற்கு உலகமே போராடிக் கொண்டிருக்கிறது. சர்வதேச விளையாட்டுக்கள் மூலமாக, கல்வி மூலமாக, வியாபார நட்புகள் மூலமாக, தூதராக உறவுகள் மூலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒலிம்பிக் விளையாட்டு மூலமாக உலகத்திலே ஒவ்வொருவரும் மற்றுள்ளவர்களோடு நல்லிணக்க உறவோடு வாழ முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஏனென்றால் உலகத்திலே ஒவ்வொருவரும் ஒப்புரவாக உறவோடு வாழவே ஆண்டவர் விரும்புகிறார். Rio Olympics 2016-ல் நடந்த போது பிரேசில் நாட்டைச் சார்ந்த ஒருவர் ஒரு சுவர் சித்திரக் கலைஞர் Eduardo Kobra என்பவர் உலகிலுள்ள ஒவ்வொருவரும் உறவுகளே என்பதை மக்களின் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் Rio-de-Jeniro நகரத்திலிருந்த ஒலிம்பிக் நெடுஞ்சாலையில் கைவிடப்பட்ட ஒரு கிடங்கின் சுவர் மீது Eduardo Kobra தலைமையிலான குழுவினர் திரளான ஜாதிகள் (Ethnicities or Etinas - in Portuguese language) என்னும் தலைப்பில் படங்களை வரைந்தார்கள்.

ஒலிம்பிக் சின்னத்திலே ஐந்து கண்டங்களைக் குறிக்கும் ஐந்து வளையங்கள் உள்ளன. 51 அடி உயரம் 560 அடி அகலம் கொண்ட அந்தக் கிடங்கின் சுவரில் பல்வேறு கண்டங்களிலுள்ள ஐந்து பழங்குடி மக்களின் முகங்களைப் பிரதிபலிக்கின்ற ஓவியத்தை 3 கி.மீ. நீளத்திற்கு 'பீச்சியடிக்கும் வண்ணம்' (Spray Paint) மூலமாக வரைந்தார்கள். இதிலே வரையப்பட்ட Mursi பழங்குடி எத்தியோப்பியாவிலுள்ளது. Kayin பழங்குடி தாய்லாந்திலுள்ளது. Supi பழங்குடி ஐரோப்பாவிலிருக்கிறது. Huli பழங்குடி பாப்புவா நியூ கினியிலிருக்கிறது. Tapios பழங்குடி அமெரிக்காவிலுள்ளது. திரளான ஜாதிகளைக் குறித்து அறிந்து கொள்ளும் போது 'நான்' 'எனது' என்னும் குறுகிய வட்டத்தில் இருந்து வெளிவர முடிகிறது.

ஆண்டவர் ஆபிராமை ஊர் என்னும் அவரது சொந்த ஊரான கல்தேயர் பட்டணத்திலிருந்து வெளியே அழைத்து வந்து பல குலங்களை (இனத்தவரை) அறிந்து கொள்ளச் செய்தார். இது அவருக்குள்ளே 'ஒப்புரவு' என்னும் பரந்த உறவு நோக்கை உருவாக்கியது. ஆபிரகாம் திரளான மக்கள் இனத்தவரோடு வசித்தவர். அவர்களோடு நல்லுறவோடு வாழ்ந்தார்.

ஒப்புரவின் இரண்டாம் பரிமாணம் நாம் வாழுகின்ற இடத்திலே அனைவரையும் உறவாக ஏற்றுக்கொண்டு வாழ்வதாகும். நாம் நமக்கென்று தனி வட்டத்தை ஏற்படுத்தாமல், ஆண்டவர் படைத்த உலகிலே படைப்புகளோடும் அவரது கரிசனையின் கீழாக வாழும் அனைத்து மக்களோடும் ஒப்புரவாக வாழ வேண்டும்.

ஆபிரகாமைப் போல ஒப்புரவாக அனைவரோடும் வாழ்பவர்கள் 'ஆபிரகாமின் பிள்ளைகளாக' பூமியில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் என தி.பா. 47:9 கூறுகிறது.

ஆண்டவர் விரும்பும் ஒப்புரவு உறவை, எல்லாரையும் உறவாக ஏற்றுக்கொள்ளும் நல்லெண்ணத்தினால் ஏற்படுத்தி வாழ்வோமாக.

### *3. ஒப்புரவு என்பது பெலவீனர்களோடு ஏற்படுத்தும் உடன்படிக்கை :*

பொதுவாக உடன்படிக்கை என்பது சமமானவர்களோடே அல்லது தங்களை விட பெலமிக்கவர்களோடே ஏற்படுத்திக் கொள்ளுவதாகும்.

'பெலவீனர்' என்பது உடலில் பெலவீனத்தோடு இருப்பவர்களைக் குறிப்பதல்ல. மாறாக உடலில் பெலத்தோடும், மனதில் பயம் கலந்த பெலவீனத்தோடு அடுத்தவர்களை சந்தேகமாகவும், சங்கடமாகவும் நடத்துபவர்களோடு செய்துக்கொள்ளும் உடன்படிக்கை.

இன்று ஒருவரோடொருவர் ஒப்புரவாக முடியாதபடி பெலவீனமே தடையாக ஏற்படுத்தப்படுகிறது. ஒருவரிடத்தில் என்ன பெலவீனம் இருக்கிறதோ அதைப் பெரிதாக்கி காண்பதினால் அல்லது இன்னொரு

மனிதரால் அந்தப் பெலவீனம் பெரிதாக்கப்பட்டு காண்பிக்கப்படுவதால் ஒப்புரவு ஏற்படாமல் போய்விடுகிறது.

வர்த்தக உளவாளிகள் என்கிற கூட்டம் இன்று Corporate நிறுவனங்கள் என்கிற பெரு நிறுவனங்களில் உளவு வேலைக்காகப் பணியாளர்களைப் போல சேர்ந்து விடுகிறார்கள். இவர்கள் அங்கிருந்து நிறுவனத்திற்கு வரும் Tenders, Formulae போன்றவற்றை திருடி தங்ளை உளவு வேலைக்கு அமர்த்தியவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதோடு அந்த நிறுவன பணியாளர்களைப் பெலவீனப்படுத்தும் வேலையையும் செய்கிறார்கள். அதாவது உடன் பணியாளர்களின் மனதிலே நமது நிறுவனம் நஷ்டத்தில் ஓடுகிறது. சீக்கிரம் இதை மூடப் போகிறார்கள் என்றெல்லாம் சொல்லி ஒரு பெலவீனமான மனநிலையை அவர்களிடம் ஏற்படுத்துகிறார்கள்.

தீயோனாகிய சாத்தானும் அவனது ஆட்களும் ஆண்டவரோடு நாம் ஒப்புரவாக முடியாதபடி பல சந்தேகங்களைக் கிளப்பி பெலவீனமான மனநிலையை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு நாம் பெலனற்றவர்களாக இருக்கும் போது நமது பெலவீனத்தை உணர்ந்து ஆண்டவர் தாமே இறங்கி வந்து, நமக்காக மரித்து நம்மை கடவுளோடு ஒப்புரவாக்கினார். உரோ. 5:6.

இன்றும் நமக்காக பரிந்து பேசி ‘ஒப்புரவு உறவு’ நிலைத்திருக்கும்படியான வேலையைச் செய்து கொண்டேயிருக்கிறார். ஒப்புரவாகுதலை நமக்கு கிடைக்கப் பண்ணின ஆண்டவரை நன்றியோடு கொண்டாடுவோம்.

**அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்**

| 06-01-2017 | திருத்தோற்றத் திருநாள் |
|---|---|

## "இயேசுவின் திருமுழுக்கு"

**BAPTISM OF JESUS**

| | |
|---|---|
| எசா. 43:1-7 | தி.ப. 19:1-7 |
| தி.பா. 2 | லூக். 2:21-28 |

**"....இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர்". தி.ப. 19:5**

திருமுழுக்கு திருச்சபையின் ஓர் முக்கிய நிகழ்வாக எடுத்துக் கொண்டாலும், அது ஓர் முழுமையான வாழ்வின் தொடக்கமும், கிறிஸ்தவ வாழ்வின் தொடர் அனுபவமாகும். "பாப்தோ" (Bapto) எனும் கிரேக்க சொல்லிலிருந்து 'பாப்திஸ்மா' எனும் சொல் கழுவுதல், சூழ்தல், தோய்த்தல், தூய்மைப்படுத்தல் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது. யூதர்கள் தங்களை தூய்மைப்படுத்துவதற்கும், கழுவுவதற்கும் இச்சொல்லையே பயன்படுத்தினர். மாற். 7:4.

திருமுழுக்கு யோவானால் யோர்தான் ஆற்றில் இயேசு கிறிஸ்து திருமுழுக்கு பெற்றதன் நோக்கம் பாடுபடும் மானுடத்தோடு தன்னை தொடர்புபடுத்தி மானுடத்தின் எபி. 2:17. இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வில் கடவுளே தம்மை வெளிப்படுத்தி "இவர் கடவுளின் மைந்தர்" என உறுதிப்படுத்தப்பட்டார். திபா. 2:7; மத். 3:17.

இது கடவுளின் திருப்பணித் துவக்கத்திற்கு ஆதாரமாகவும், பாடுகளினூடே கடவுளின் விடுதலைத் திருப்பணிக்கான அழைப்பு என்பதையும் உறுதிபடுத்தியது.

### *1. இறை இணைவின் அங்கீகாரம் :*

இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு யோவானால் நிறைவேற்றப்பட்டாலும் அதில் கடவுளின் அங்கீகாரம் இருந்தது. இவ்வங்கீகாரம் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, அவரது போதனை, வியத்தகு செயல்கள், பாடு - மரணம், உயிர்த்தெழுதல் அனைத்திற்கும் முன்னோட்டமாகவும், முன்னிலைப்படுத்துவதாகவும் அமைந்தது. இந்த அங்கீகாரம் சோதனைகளையும் வென்றிட உதவியது. கடவுளின் திருவுளம் இந்நிகழ்வில் வெளிப்பட்டன. ஆகவேதான் மத். 26:39-ல் "... என் விருப்பம் அல்ல, உம் விருப்பப்படியே, நிகழட்டும்" என்று துணிவுடன் ஒப்படைக்க துணைபுரிந்தது. திருமுழுக்கின் வாயிலாக இயேசு கிறிஸ்துவும், கடவுளுக்குமிடையேயுள்ள, தந்தை மைந்தர் உறவின் உரிமை வெளிப்படுத்தப்பட்டது. "என் அன்பார்ந்த மைந்தர்" (மத். 3:17) எனும் உறவோடுகூடிய உரிமை இங்கு முன் வைக்கப்பட்டது. ஆக திருமுழுக்கின் வழி நாமும் இறை இணைவின் உரிமையினைப் பெறுகின்றோம். யோவா 1:12-ல் அவரிடம் நம்பிக்கைக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையினை அளித்தார் என காண்கிறோம். எனவே திருமுழுக்கின் வழியாக இறை இணைவின் வழியாக இறை இணைவின் அங்கீகாரம் உறுதிபடுத்தப்பட்டுள்ளன.

## 2. இறைப் பணிக்கான அங்கீகாரம் :

இறைமகன் இயேசு கிறிஸ்து உலகில் வந்ததன் நோக்கம் தம்மை மானுடத்தோடு ஒன்றிணைத்து கடவுளின் திருப்பணியினை முன்வைத்து மானிட மக்களின் பாவத்திற்கு பரிகாரம் தேடித்தருதலை முன் வைப்பதாகும். திருமுழுக்கின் மூலம் பாவமில்லாத கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து பாவமுள்ள மானுடத்தை மீட்பதற்காக தாமாகவே முன்வந்து கடவுளின் திருப்பணிக்கான ஒப்படைப்பினை எடுத்துக்காட்டுகிறது. யோவா. 3:14, 15-ல் திருமுழுக்கு பெற்றுக்கொள்ள முன் வந்த இயேசுவை இறை ஆற்றல் பெற்றவராகக் கண்ட யோவான் அவருக்கு தடைச்செய்து திருமுழுக்கு கொடுத்த தயங்கும் சூழலில், "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" எனும் இறைப்பணிக்கான அங்கீகாரத்தினை திருமுழுக்கின் மூலம் பெற்றுக் கொண்டார். இந்த பின்புலத்தில்தான் தான் சிமியோன் குழந்தையை கையில் எடுத்து ஆசி வழங்கினார். முறைமைகள் நிறைவேற்றப்பட்டது (லூக். 2:21-28).

தூய பவுலார் கூறும்போது, "நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவ நிலை ஏற்கச் செய்தார்" 2கொரி. 5:21. அதன் வெளிப்படையான அடையாளமாகவே இயேசு திருமுழுக்கு பெற்றுக் கொண்டார். ஆகவே தான் மாற். 10:45-ல் "ஏனெனில் மானிட மகன்.... மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" எனும் இறைவாக்கு இயேசுவின் திருமுழுக்கினைத் தொடர்ந்த இறைப்பணி அனுபவங்கள் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன.

## 3. இறைப்பாடுகளுக்கான அங்கீகாரம் :

இயேசு நாதர் பெற்றுக்கொண்ட திருமுழுக்கு அவர் அனுபவிக்க இருக்கிற பாடுகளை ஏற்க ஆயத்தமாகும் அடையாளமாகவும் காணப்பட்டது. பாவிகளோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டது மட்டுமல்ல, அவரது பாடு, மரணம் உயிர்த்தெழுதல் எனும் துன்பத்தின் அடையாளமாகவும் அவர் பெற்றுக் கொண்ட திருமுழுக்கு அமைந்தது. இயேசு எதிர் கொண்ட பாடுகள் அனைத்தும் அவர் சிலுவை சுமக்க ஆற்றல் அளித்தன. ஏசா. 53:23, "அவர் தம்மையே சாவுக்கு கையளித்தார். கொடியருள் ஒருவராகக் கருதப்பட்டார்; ஆயினும் பலரின் பாவத்தைச் சுமந்தார்; கொடியோருக்காக பரிந்து பேசினார்" என ஏசாயா இறைவாக்கினரின் கூற்றுப்படி தன்னை பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்தார்.

ஆக இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு தனிச்சிறப்பு வாய்ந்தது. இறை இணைவுடனான இறைப்பணியின் அங்கீகாரத்தினை அவரது திருமுழுக்கு நமக்கு தெளிவுபடுத்துகிறது. திருச்சபையின் பாரம்பரியத்தில் நாம் ஏற்றுக்கொள்ளுகின்ற திருமுழுக்கு இறை இணைவு, இறைப்பணி (வாழ்வு) இறைபாடுகள் எனும் அங்கீகாரத்தினை நாம் பெற்றுள்ளோம். தளர்வில்லா இறைப்பற்றுறுதியுடன் இறை சான்றாளர்களாக வாழ்ந்திட அற்பணிப்போமாக!

**அருள்திரு. N. ஜாண்ஜெரேஷ்**

08-01-2017

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின் வரும் முதலாம் ஞாயிறு**

# உடலை கடவுளின் திருக்கோவிலாக மதித்தல்

**(HONOURING THE BODY AS TEMPLE OF GOD)**

சஉ. 6:1-12 | 1 கொரி. 3:16-23
திபா. 1 | மத். 5:21-30

**"... கடவுளின் கோவில் தூயது நீங்கள் அக்கோவில்." 1கொரி. 3:17**

இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் எப்படியும் வாழ்வதல்ல இப்படித்தான் வாழவேண்டும் என்கின்ற வரை முறையை இறைவன் வகுத்திருக்கின்றார். "பாஸா" என்ற எபிரெயச் சொல்லும், "சார்க்ஸ்" என்ற கிரேக்கச் சொல்லும் உடல் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொல் தனிமனித உடல், மனிதர்கள், மனுக்குலம் என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனுக்குலம் கடவுளால் படைக்கப்பட்டது. அவர்களது உடலும் உயிரும் கடவுள் தந்தவை என்பதை தொநூ. 2:7 கூறுகின்றது. கடவுள் ஊனுடல் எடுத்து வந்தார் என்பது யோவானின் கருத்து (யோவான் 1:14). இதனால் மனித உடல் கடவுளால் மேன்மைப்படுத்தப்பட்டது. கடவுள் தனிமனித உடலுக்கு மட்டுமின்றி முழு மனுக்குலத்திற்கும் மேன்மை தரும் பொருட்டு இயேசு கிறிஸ்துவாக ஊனுடல் எடுத்து உலகில் வந்தார். ஆகவே இன்றைய திருமறைப்பாடங்களின் வழி உடலை ஆண்டவரின் திருக்கோவிலாக எவ்வாறு மதிப்பது என்பதை நாம் தியானிப்போம்.

## *1. நலமானதைச் செய்து உடலை ஆண்டவரின் திருக்கோவிலாக மதித்தல்* (சஉ. 6 : 1-12)

நலமானவைகளையும், நன்மைகளையும் செய்வதற்கே இறைவன் நம்மை படைத்திருக்கின்றார். இன்றைய முதலாம் திருமறைப்பாடத்தில், கடவுள் ஒருவருக்கு செல்வத்தையும் நல்வாழ்வையும் மேன்மையையும் கொடுக்கின்றார். ஆம், அவர் விரும்புவதெல்லாம் அவருக்கு கிடைக்கின்றன. ஆனால் அவற்றை துய்க்கவோ கடவுள் அவருக்கு வாய்ப்பளிக்கவில்லை. அடுத்தவர் ஒருவர் அவற்றை துய்த்து மகிழ்கிறார். இங்கே பயனின்மையும் கடுந்துயரமும் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் இயேசுநாதர் கூறிய உவமையில் நலமானதையுச் செய்வதும், நன்மைகளைச்செய்வதும் அங்கு இல்லை. மாறாக, என்நெஞ்சமே உனக்கு பல்லாண்டு உண்டு, குடித்து மகிழ்ச்சியில் திளைத்திடு என்ற அறிவற்ற செல்வந்தன் (லூக். 12:13-21). ஆனால் ஆண்டவரின் திருக்கோவிலாக உடலை மாற்றி நலமானவைகளைச் செய்யவேண்டும் என்று திருமறை கூறுகின்றது. ஆண்டவரை நம்பு, நலமானதைச் செய்; நாட்டிலேயே குடியிரு; நம்பத்தக்கவராய் வாழ் என்று திருப்பாடல்கள் 37:5 கூறுகின்றது.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் விற்கப்பட்டும் குழியில் தள்ளப்பட்டும், நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், ஆனால் கடவுள் அதை இன்று நடப்பதுபோல் திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார் (தொநூ. 50:20). சவுல் தாவீதுக்கு தீங்குச் செய்தார் ஆனால் தாவீது சவுலுக்கு நன்மை செய்தார் (Iசாமு. 24:17). பவுல் தீமோத்தேயுக்கு சொல்லும்போது நலத்தரும் போதனையை கற்றுக்கொடுத்தார் (I தீமோ. 4:2-5; Iதீமோ. 1:9-11). இயேசுகிறிஸ்து நலமானவைகளையும் நன்மைகளையும் நல்லவைகளை செய்யவும் நல்ல சமாரியர் உவமை ஒன்றை சொன்னார் (லூக். 10:25-37). நாமும் நலமானவைகளை செய்து நம்முடைய உடலை ஆண்டவரின் திருக்கோவிலாக மதிப்போம்.

## *2. தூய்மையாக வாழ்ந்து உடலை ஆண்டவரின் திருக்கோவிலாக மதித்தல்:* (Iகொரி. 3 : 16-23)

இன்றைய இரண்டாம் திருமறைப்பாடம் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்து உடலை ஆண்டவரின் திருக்கோவிலாகக் கண்ணியப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றது. நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார்; ஏனெனில் கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில். உள்ளமாகிய கோவிலை நாம் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும். யோசேப்பு போத்திபாரின் இல்லத்தில் சிறப்புற்றவராக வாழ்ந்து வந்தார். போத்திபாரின் மனைவி யோசேப்பை தன் பக்கம் இழுப்பதற்காக முயற்சித்தபோது, யோசேப்பு அதற்கு இணங்காமல்தன்னை தூய்மையாக பாதுகாத்து கொண்டார் (தொநூ. 39:1-23). நெபுகாத்னேசர் அரசன் காலத்தில் தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா போன்றோர் அரசனது சிறப்புணவினாலும், அவன் பருகி வந்த திராட்சை இரசத்தினாலும் தம்மை தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதிசெய்து கொண்டார் (தானி. 1:1-21). இன்றைய இளைஞர்கள், போதைப் பொருள்களால் தங்களுடைய உடலை தீட்டுப்படுத்தி, தூய்மையற்றவர்களாக வாழுகின்றனர். பவுலாரின் கருத்து உடல்சார்ந்த தீய செயல்கள் தன்னிலை சார்ந்தும் முன்னிலை சார்ந்தும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன (கலா. 5:19,20). இயேசு கிறிஸ்து, தீய செயல்கள் மனிதரை தீட்டுப்படுத்துகின்றன என்று கூறுகின்றார் (மத். 15:1-20).

## *3. நல்லுறவை ஏற்படுத்தி உடலை ஆண்டவரின் திருக்கோவிலாக மதித்தல் :* (மத். 5 : 21-26)

இன்றைய மூன்றாம் திருமறைப் பாடத்தில் நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு

ஏற்படுத்திக்கொள்ளுங்கள் பின்வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் என்று இயேசு கூறினார் (மத். 5:23,24). காணிக்கை படைப்பதிலே எபிரேயப் பெற்றோர்கள் மிகவும் கவனம் செலுத்தினர். காயீனும், ஆபேலும் ஆண்டவருக்கென்று காணிக்கை கொண்டு வந்தனர். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார் ஆனால் காயீனையும் அவர் காணிக்கையையும் அவர் கனிவுடன் கண்ணோக்கவில்லை. இறுதியாக காயீன் ஆபேலைக் கொன்றான். சகோதர உறவு உடைந்து போய் கொலையில் முடிந்தது. ஆபேலின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து ஆண்டவரை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது. ஆண்டவர் காயீனை நோக்கி, நீ நாடோடியாக அலைந்து திரிவாய் என்று கூறினார். இன்றைக்கும் எத்தனையோ இருதயங்கள் ஆண்டவரை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கின்றது (தொநூ. 4:1-16). கொலைகள், படுகொலைகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. காரணம் நல்லுறவு இல்லாததே. குடும்பங்களில் கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு, உடன்பிறந்தோர்களின் உறவு, உறவினர்களிடையேயுள்ள உறவு, இந்த உறவுகள் எல்லாம் உடைந்து போகாமல் நல்லுறவு ஏற்படுத்த அழைக்கப்படுகிறோம்.

எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக தந்தையே, நீர் என்னுள்ளும் நாம் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக என்று இயேசு கூறினார் (யோவா. 17:21).

இயேசுவே இரண்டு இனத்தவரையும் (சமாரியர்கள், யூதர்கள்) பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரைத் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார் (எபே. 2:11-21). உறவு என்கின்ற வார்த்தை மூன்றெழுத்தின் முனகல் அல்ல. வாழ்வில் மானிடரோடு இணைந்து வாழக்கூடிய ஒன்று. இன்று நாமெல்லாம் சின்ன சின்ன தீவுகளாக சிதைந்து போய்விட்டோம் எங்கு பார்த்தாலும் சண்டைகள் சச்சரவுகள் ஏற்பட்டு உறவுகள் உடைந்த நிலை, மனிதர் உடைந்த சங்கின் ஓசை, நனைந்துபோன தீக்குச்சிகள். வெந்நீரிலும் வேகாத கூழாங்கற்கள், கூட்டுக்குடும்பம் இன்று அபூர்வமாகி விட்டது. முதியோர் இல்லங்கள், அனாதை ஆசிரமங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் பெருகிவிட்டன. காரணம் மனித நேயம் வற்றிப் போனதால் ஏற்பட்ட முற்றிப்போன நோயின் அறிகுறிகள் நாம் சேர்ந்து இருந்தபோது அன்பைப் பகிர்ந்தோம், மகிழ்ச்சியைப் பகிர்ந்தோம். ஆனால் இன்று அப்படி செய்யயாருமில்லை. கணவர் மனைவிக்குள்ளே சண்டை வாய்க்கால் சண்டை, வரப்புச் சண்டை, தண்ணீர் சண்டை ஏற்பட்டு உறவுகள் உடைகின்றன. உடைந்த உறவுகள் உயிர் பெறட்டும். உறவுகளை வளர்ப்போம் உயிர்த்த இயேசுவோடு உறவாடுவோம்.

**அருள்திரு. T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

15-01-2017

N.C.C.I. ஒருமைப்பாட்டு ஞாயிறு &
திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

## அழைக்கப்பெற்றது ஒன்றுபடுவதற்கு

**CALLED TO UNITY**

எசே. 37 : 15-23 எபே. 4:1-6

திபா. 133 யோவா 15:1-12

**"சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது."**
**திபா. 133:1**

ஒற்றுமை (Unity) என்பதற்கும், ஒருமை (Uniformity) என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. அவரவர் சாதி, மத, இன அடையாளங்கள் ஒன்றையும் இழந்து விடாமல் ஒரு பொது நோக்கத்திற்காக ஒன்றுபடுவதுதான் ஒற்றுமை. ஆனால், எல்லாத் தனித்துவ அடையாளங்களையும் தகர்த்தெறிந்து விட்டு மனிதநேயம் என்ற நிலையில் அனைவரும் காப்பது தான் ஒருமை. திருச்சபைக்குள் ஒற்றுமையிலும் மேலானது ஒருமை. அதுதான் சமூகத்தின் உயர்ந்த இலட்சியம். தொடக்ககால திருச்சபையில் இதுதான் நடைபெற்றது. ஆகவே திருச்சபையில் மக்கள் அநேகர் இணைந்து சபையும் வளர்ச்சி அடைந்தது. (தி.ப. 2:44-47) திருப்பாடலாசிரியர் ஒன்றுபட்டு வாழ்வதுதான் நன்மையானது, இனியது என்று கூறுகிறார். நம் ஆண்டவர் இயேசுவும் கூட எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக என்று தம் இறுதி விருப்பமாக, வேண்டுதலாக தந்தையிடம் முன்வைத்தார் (யோவா 17:21).

### *1. ஒன்றுபட்டு வாழ அழைப்பு*

இஸ்ரயேலின் மலைகள் மீது அவர்களை ஒரே நாட்டினர் ஆக்குவேன். அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசன் இருப்பான். அவர்கள் இனிமேல் ஒருபோதும் இரு நாடுகளாகவோ இரு அரசுகளாகவோ பிரிந்திரார் (எசே. 37:22).

சாலமோன் ஆட்சிக்குப்பின்பு இஸ்ரயேல் நாடு யூதா, இஸ்ரயேல் என்று பிளவுப்பட்டது. மக்களிடமும் பிளவு ஏற்பட்டது. அந்நிய நாடுகளுக்கு மக்கள் சிறையாக கொண்டு செல்லப்பட்டனர். எசே. 37 முதல் பகுதியில் இஸ்ரவேலர் சிறையிலிருந்து விடுபட்டுச் சொந்த நாட்டிற்குத் திரும்பி அடையப்போகும் நல்வாழ்வு பற்றி கூறுகிறது. இரண்டாம் பகுதியில் இஸ்ரவேலர், யூதா எனப்பிரிந்திருக்கும் இறைமக்கள் ஒன்று சேர்ந்து ஒரே ஆட்சியின் கீழ் வருவார்கள் என்று எசேக்கியல் கூறுகிறார். இறைவனுடைய ஆணைப்படி எசேக்கியல் இரண்டு கோல்களில் ஒன்றின் மேல் யூதா என்றும் மற்றொன்றின் மேல் யோசேப்பு என்றும் எழுதுகிறார். யூதா தென்நாடான யூதேயாவையும், யோசேப்பு

என்பது வடநாடான இஸ்ரயேல் நாட்டையும் குறிக்கும். இவ்விரு கோல்களையும் எசேக்கியல் ஒன்று போல் இணைத்து மக்களுக்கு அதன் பொருளையும் கூறுகிறார். சிறையிருப்பிற்குப்பின் இஸ்ரவேல், யூதா என பிரிந்திராமல் ஒரே சமூகமாக வாழும் என்பதே அவர் கூறிய செய்தி.

இருளான பிரிவினைச் சிந்தனைகளைக் களைந்து வாழ நாம் அழைக்கப்படுகிறோம். இறைமகன் இயேசு ஒற்றுமையின் தளத்தையும், எதிர்நோக்கையும் நற்செய்தியில் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார். “ஏனெனில் இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோஅங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் (மத். 18:20) என்று சொல்வதன் மூலம் கூடி ஒற்றுமையாக வேண்டுதல் செய்யவும், இணைந்து வாழவும் அழைப்புவிடுக்கிறார். சீடர்களிடமிருந்து தங்களைப் பிரித்து, தங்களை முன்னிலைப்படுத்த விரும்பிய செபதேயுவின் மக்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் மனநிலையை இயேசு கடிந்து கொண்டார்” (மாற். 10:35-45) தனிமனிதர்களாகப் பணிசெய்வதை விட இணைந்து பணி செய்வதே பயன்தரும் என்பதை இயேசு உணர்ந்திருந்தார். ஆகவே அனைவரோடும் இணைந்து வாழ கடவுள் நம்மை அழைக்கிறார்.

## *2) ஒன்றுபட்டு வளர அழைப்பு*

முழுமனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள் (எபே. 4:2, 3).

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மனத்தாழ்மை இன்றியமையாத ஒரு பண்பாகும். தாழ்மை, சாந்தம், பொறுமை முதலிய நற்பண்புகள் எப்பொழுதும் நமது அன்றாட வாழ்க்கையில் சிறந்து விளங்க வேண்டும். இந்தப் பண்புகள் ஆவியின் கனியிலும் சொல்லப்பட்டுள்ளது. கலாத். 5:22-23 சிறந்த குணங்கள் என்பதால் மாத்திரம் சொல்லப்படாமல் இவையன்றி ஓர் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு இருக்க முடியாது என்பதால் இவை வலியுறுத்தப்படுகின்றன. ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்து நற்பண்புகளில் வளர பவுல் எபேசுத் திருச்சபைக்கு கட்டளையிடுகிறார். ஒன்றுபட்டு வாழ்வதினால் பகிர்வுத்தன்மை, பண்பு நலன்களில் வளமை, பற்றுமையில் தெளிவு என எழுச்சி நிலை ஏற்படுகிறது. மட்டுமன்று இறையரசின் இயக்க நிலைக்கும் அழுத்தம் தருகிறது. இதையே இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

## *3) ஒன்றுபட்டு கனி கொடுக்க அழைப்பு*

நானே திராட்சைச்செடி. நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடன் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி கொடுப்பார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.

இயேசு தம்மோடு இணைந்திருந்து கனிகொடுக்க அழைப்பு விடுக்கிறார். நாம் எப்படி அவரோடு இணைந்திருக்க முடியும்? நம்முடைய திருமுழுக்கின் வழியாகவும் (கலா. 3:27), கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு (யோவான் 4:15), அவரது திருவுடலை உண்டு இரத்தத்தை பானம் பண்ணுவதின் வாயிலாகவும் (யோவான் 6:56), அவர் தம் தூய ஆவியாரை நமக்கு அருளியதாலும் (1 யோவான் 4:13), அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும் (1 யோவான் 3:24), நாம் மற்றவரிடம் அன்பு கொண்டிருப்பதாலும் (1 யோவான் 4:12, 16) நாம் கிறிஸ்துவோடு இணைந்து இருக்க முடியும். கிறிஸ்துவோடு இணைந்து இருக்கின்ற அனைவரும் ஒன்றாய் இருக்கிறோம். (கலா. 3:28).

திராட்சைச்செடி கொடியோடு இணைந்திருக்க வேண்டும். கிளை கனிதர வேண்டும். எனினும் கிளையின் குறிக்கோள் கொடியோடு இருப்பது அல்ல. கனி கொடுத்தலே. கனி கொடுப்பதற்கு கிளை கொடியோடு இருந்தாக வேண்டும். நாம் இயேசுவின் சீடர்கள் என்பதைச் செயலில் காட்ட வேண்டும் (யோவா 15:8).

‘ஒற்றுமை இல்லையேல் ஒருமரமாக அழிவோம்’ என்ற அடிப்படை உண்மையைக் கூட மறந்துவிட்டோம். இன்றைய உலகில் மக்கள் தனிமனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களேயொழிய கூடி வாழ்வதையும், கூட்டு முயற்சியையும் ஊக்கப்படுத்தக் கூடியதாய் இல்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்குள் இருக்கும் பிரிவினைகளைக் களைந்து ஒன்றாக வாழ அழைக்கப்படுகிறோம்.

**அருள்திரு. S. ஜாண் பிராங்கிளின் ராஜ்**

22-01-2017 **திருத்தோற்றத் திருநாளுக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு**

# பற்றுறுதியிலும் செய□லும் ஒன்றிப்பு

**UNITY IN FAITH AND ACTION**

யோசு. 3:9-17 | தி.ப. 9:20-25

தி.பா. : 53 | மாற். 1:21-34

**"பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார்; அந்த பேய்கள் அவரை அறிந்திருந்ததால் அவற்றை அவர் பேசவிடவில்லை". மாற்கு 1:34**

இரண்டாம் உலகப்போர் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒரு படம் வெளியிடப்பட்டது. அந்த படம் அனைவரின் மனதையும் தொடக்கூடியதாய் அமைந்திருந்தது. அப்படத்தில் அறுபட்டுப்போன தொலைத்தொடர்பு கம்பி ஒன்றினை ஒரு இராணுவ வீரன் குண்டுகளால் துளைக்கப்பட்டு காயமேற்ற நிலையிலும், தன் இரண்டு கைகளால் இழுத்து ஒன்றாக இணைக்கும் காட்சியாகும். அப்படத்தின் அடியில் எழுதப்பட்டிருந்த வாசகம் "it is thought" என்பதாகும். ஒன்றுபட முடியாதது ஒன்றுபட்டது.

பற்றுறுதி எனும் சொல்லுக்கு உண்மை, நேர்மை, பாதுகாப்பு நிறைந்த, எதற்கும் அஞ்சாத, துணிவுகொண்ட, நம்பகத்தன்மை வாய்ந்த என்று பொருள் கொள்ளலாம். பொதுவாக இந்த அனைத்துப்பண்பு நலன்களையும் ஒரு நல்ல இறைப்பற்றாளரிடம் நாம் காணலாம். இறை பற்றுறுதி ஒருவரை ஒருபோதும் அழிக்காது, ஏமாற்றாது. எவரொருவர் தம் வாழ்க்கையை முழுமையாய் கடவுளிடம் ஒப்படைக்கிறாரோ அவரே உண்மையான இறைப்பற்றாளர் ஆவார்.

ஒருமைப்பாடு என்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரேக்க சொல் "oikumene" என்பதாகும். இதனுடைய வேர்ச்சொல்லான "oikos" என்பதின் பொருள் மானுடரோடு இயற்கையையும் இணைத்துப் புரிந்து கொள்ளப்படுகிறது. எனவே ஒருமைப்பாடு என்பது கடவுளுக்கும், மனுக்குலத்துக்கும், மனுக்குலம் தம்முள்ளும், மனுக்குலம் இயற்கையோடும் கொண்டுள்ள உறவில் உருவாவதேயாகும். இதனை பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்பது என்ற பொருளில் இன்றைய திருமறைப் பாடங்களைச் சார்ந்து தியானிப்போம்.

## *1. ஆலயத்தில் ஒன்றிப்பு :* (யோசுவா 3:9)

யோசுவா இஸ்ரயேல் மக்களிடம், "இங்கே வாருங்கள், உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் வார்த்தைகளைக் கேளுங்கள்".

மனிதன் மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர், கற்றவர், கல்லாதவர் என்னும் பிரிவுகள் இணையும் இடம் இறைவனின்

இருப்பிடமான ஆலயம். அனைத்து நிலை மக்களும் எந்த வேறுபாடுமின்றி சங்கமிக்கும் இடமே இறைவனின் ஆலயம். எல்லா மக்களும் அவரது ஆலயத்திற்கு வரும் நோக்கம் கடவுளின் வார்த்தையால் போதிக்கப்படவும் மன அழுத்தம் நீங்கவும், பாவ சாபங்களிலிருந்து விடுதலை பெறவுமே ஆலயம் வருகின்றனர். நவீன காலத்தில் போதனைகளும், கற்பித்தலும் பலவழிகளில் மானுடத்தைத் தொடும் போது எச்சரிப்பாக இருக்க யோசுவா சொல்லும் கடவுளின் வார்த்தைகளை யோசுவா 3:9-17 இல் அறிய முடிகிறது.

யோர்தான் ஆறு, அறுப்புக் காலத்தில் கரைபுரண்டு ஓடும் ஆறு. இது எரிகோவின் அண்மையில் உள்ளது. சுமார் பத்து அடி ஆழமும், நூறு அடி அகலமும் கொண்டது. தண்ணீர் நிரப்பி ஓடக்கூடியது. கடவுளுடைய பேழை புறப்படுவதைக் காணும் போது அனைவரும் புறப்படுங்கள் என்ற கட்டளை பிறந்தது. இருபது லட்சம் மக்களும் பயணத்தை தொடங்கினர். யோர்தான் எதிரே கண்டபோது எவ்வாறு அக்கரைப் படுவது? என எண்ணினர். யோர்தான் ஆறு பிளக்கும் என்ற அனுபவத்தை பற்றுறுதியாளர்களால் தான் அனுபவிக்க முடியும். ஆற்றினருகே வந்தார்கள், கடவுளுடைய பேழையைச் சுமந்த குருக்களின் பாதங்கள் யோர்தான் நதியில் பட்டவுடன் தண்ணீர் குவியலாக நின்றது. பற்றுறுதி தண்ணீரையும் குவிக்கும். ஆற்றின் தண்ணீர் குவியலைக் கண்டு மனிதர்கள் வியந்தார்கள். பற்றுறுதியிலும், செயலிலும் ஒன்றுபட்ட மக்கள் எரிகோவுக்கு நேர் எதிராக நடந்து சென்றனர். இஸ்ரவேலர் அனைவரும் கடந்து முடிக்கும் வரை ஆண்டவரது உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிச் சென்ற ஆலய குருக்கள் யோர்தான் நடுவே வறண்ட தரையில் நின்றனர். எல்லா இஸ்ரயேல் மக்களும் அவ்வறண்ட தரை வழியாக நடந்தார்கள்.

### *2. அறிவிப்பதில் ஒன்றிப்பு :* (தி.ப. 9:20)

உடனடியாக அவர் இயேசு இறைமகன் என்று தொழுகை கூடங்களில் பறைசாற்றத் தொடங்கினார்.

“லாமெட்” (Lamd) என்பிற எபிரேய வார்த்தை “கற்றுக்கொடு” “போதித்தல்” “பயிற்சி செய்” என்கிற அர்த்தமுடன் உபயோகப் படுத்தப்படுகிறது. “யாரா” (YARAH) என்கிற எபிரேய வார்த்தை “சொல்லிக்கொடு” “வழிகாட்டு” “கற்றுக்கொடு” “போதித்துக்கொண்டிரு” எனப் பலபொருள்களுடன் வருகிறது. இப்பகுதியில் சவுல் தமஸ்குவில் போதித்ததை தி.ப. 9:20-25 இல் அறிய முடிகிறது.

சவுல் சிலிசியா நாட்டின் தர்சு பட்டணத்து யூதர் என்று தன்னை அறிமுகப்படுத்தினார். கி.பி. 1-ல் பிறந்தார் என்று கருதப்படுகிறது. எபிரேயரில் பிறந்த எபிரேயர் எனக் கூறினார். எபிரேயத் தூய்மையை காப்பதில் மிகவும் வைராக்கியமுள்ள குடும்பத்தில் உள்ளவர். இவர் இளமையிலேயே யூத சமய முறைமைகளின்படியும் வைராக்கியமுள்ளவராக

வளர்க்கப்பட்டிருந்தார். செல்வச் செழிப்பு, ஆள்பலம் பெற்ற ரோம குடிமகனாவார். அறிஞர் கமாலியேலிடம் கற்றுத்தேர்ந்தே பவுல் ஒரு சிறந்த பரிசேயராக எருசலேமை விட்டு நாடு திரும்பினார்.

கிறிஸ்துவைப் பற்றிய செய்திகள், திருத்தூதுவர்களின் திருப்பணிகள் பவுலுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அந்தக் கிறிஸ்தவத்தை ஒடுக்க திட்டமிட்டார். ஸ்தேவானின் வல்லமை மிக்க திருப்பணியை அறிந்தார். ஸ்தேவானோடு எதிர்த்து பேசினவர்களுக்கும், பவுலின் ஞானம் சார்ந்த வார்த்தைகளுக்கும் ஸ்தேவான் பதிலடி கொடுத்தார். முடிவில் ஸ்தேவானை நகரின் புறம்பே கொண்டு சென்று கல்லெறிந்து கொன்னர். சவுல் ஆடைகளைக் காத்துக்கொண்டிருந்தார். பரிசேயரான பவுல் இயேசுவின் மார்க்கத்தை ஒழிக்க, வீரத்துடன் முதன்மைக் குருவைச் சந்தித்து, அனுமதிக் கடிதங்களை வாங்கினார். தமஸ்கு நோக்கி விரைந்தார். வழியில் ஓர் ஒளி அவரைச் சந்தித்தது. உடைக்கத் துடித்தவரை உருவாக்க அழைத்தார். பொல்லாங்குகள் புரிய எழும்பினவரை போதிக்கப் புறப்பட வைத்தார். கடவுள் அனனியாவிடம் பேசும் போசு பவுல் வேற்று இனத்தவர், அரசர்கள், இஸ்ரயேலர் ஆகியோருக்கு என்னுடைய திருப்பெயரை அறிவிக்க நான் தெரிந்து கொண்ட கருவி. என்னுடைய திருப்பெயரினிமித்தம் அவன் எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதைக் காண்பிப்பேன் என்று அறிவித்தார். பவுல் நற்செய்தியைப் போதிக்க தமஸ்குவில் தங்கியிருந்தார். இயேசுவே இறைமகன் என்று தொழுகைக் கூடங்களில் பறைசாற்றத் தொடங்கினார். இயேசுவே கிறிஸ்து என்பதை அறிவித்து தமஸ்குவில் வாழ்ந்து வந்த யூதர்கள் அனைவரையும் மனம் குழம்பச் செய்தார். பின்பு இயேசுவோடும் அவரது அடியவர்களோடும் ஒன்றித்து கிறிஸ்துவின் திருப்பெயரைத் தைரியமாய் அறிவித்தார்.

1861 ஆம் ஆண்டு அமெரிக்காவின் அதிபராக ஆபிரகாம் லிங்கன் தெரிந்தெடுக்கப்பட்டார். மக்களுக்காக உழைக்கத் தன்னை அர்ப்பணித்தார். வேத வசனங்களின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். தன் பேச்சுத்திறமையால் வேத வசனங்களை மக்கள் மனதில் பதியச் செய்தார். தன் அலுவலகத்தில் ஆண்டவருக்கு முதலிடம் கொடுக்கும் வண்ணமாக ஜெபத்திற்கென்று நேரம் ஒதுக்கினார். வெள்ளையர்கள், கறுப்பர்கள் என்று பிரிவுபட்ட அமெரிக்காவை ஒன்றாக்க பாடுபட்டார். ஆப்பிரிக்கர்களை அடிமைகளாகப் பயன்படுத்தி வந்த அநியாயத்தை அடியோடு ஒழிக்க சட்டம் ஒன்று இயற்றி அறிவிப்பு கொடுத்தார். மக்களினம் ஒற்றுமையுடன் வாழ உழைத்தார்.

### *3. அற்புதங்களால் ஒன்றிப்பு :* (மாற்கு 1:27)

அவர்கள் அனைவரும் திகைப்புற்று “இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே? இவர் தீய

ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவையும் இவருக்கு கீழ்ப்படிகின்றனவே" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர்.

அடிமைக் கட்டுகள் அவிழ்க்கப்பட்டு, மானுடம் முழு உரிமையுடனும், அன்புடனும் வாழ வேண்டுமென இறைவன் விரும்புகிறார். துன்பப்படும், அடிமைப்படுத்தப்படும் மக்களின் வாழ்வு மலர விடுதலை வேண்டும். வியாதியிலிருந்தும், பிசாசின் கட்டிலிருந்தும், பாவக்கட்டிலிருந்தும் கிடைக்கிற விடுதலையே மனித வாழ்வுக்கு மிக அவசியம். இதைக் குறித்து மாற்கு 1:21-34 இல் அறிய முடிகிறது.

கப்பர்நகூமிலுள்ள தொழுகைக் கூடத்தில் இயேசு போதித்தார். அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அங்கு தீய ஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார். இயேசுவின் ஆவிக்கும் தீய ஆவிக்கும் தொடர்பு இல்லை. தீய ஆவியை இயேசு தமது வார்த்தைகளால் துரத்துகிறார். அப்பொழுது அத்தீய ஆவி அம்மனிதருக்கு வலிப்பு உண்டாக்கிப் பெருங்கூச்சலிட்டு அவரை விட்டு வெளியேறியது. அவரை பற்றிய செய்தி உடனே கலிலேயாவின் சுற்றுப்புறமெங்கும் பரவியது. மேலும் இயேசு சென்ற பாதையில் சீமோன் பேதுருவின் மாமியார் குணமடைந்ததும், இயேசு பலருக்குக் நலமளித்ததையும் (மத். 8:14-17), (லூக். 4:38-41) காணமுடிகிறது. இன்று பற்றுறுதியிலும் செயலிலும் ஒன்றிப்புப் பற்றி பார்க்கும்போது, ஒன்றிப்பின் ஆரம்பத்தை, ஆண்டவரின் ஆலயத்தின் வழியும், அறிவிப்பதின் வழியும், அற்புதங்களின் வழியும் காணலாம்.

ஒருமுறை ஒரு மனிதனின் உறுப்புகளுக்குள்ளாக போட்டி வந்தது. என்ன போட்டி என்றால், யார் பெரியவன் என்பதே. கால் சொன்னது நான்தான். இந்த மனிதனை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்கிறேன். ஆகவே நான்தான் பெரியவன் என்றது. கை சொன்னது நான்தான் அனைத்து வேலைகளையும் செய்வது. குறிப்பாக உணவை ஊட்டி விடுவதும் நான்தான். எனவே நான்தான் பெரியவன் என்றது. வாய் சொன்னது நான்தான் பெரியவன். எது உடலுக்குத் தேவையோ அதை அறிந்து கேட்டு வாங்குகிறேன், உடலுக்குள் அனுப்புகிறேன். எனவே நான்தான் பெரியவன் என்றது. இவ்வண்ணமாக எல்லா உறுப்புகளும் பெருமை பாராட்டி ஒற்றுமை இழந்து காணப்பட்டது. சிறிது நேரத்தில் அந்த மனிதனுக்குப் பசி எடுத்தது. இப்போது மூளை, கைக்கு வேலை கொடுக்க மறுத்தது. அம்மனிதன் பசியால் துடித்தான். எல்லா உறுப்புகளும் சோர்ந்து போனது. முடிவில் கண்டுகொண்ட உண்மை, யாவரும் ஒன்றுபட்டு இயங்கினால்தான் வாழ்வு என்பதைப் புரிந்து கொண்டனர். நாமும் ஒன்றுபட்டு வாழ்ந்து இறைவனை மகிமைப்படுத்தி, இறையாசியைப் பெற்றுக்கொள்வோம்.

**அருள்திரு. M.P. விஜயகுமார்**

26-01-2017

குடியரசு நாள்

# நாட்டுக் கட்டுமானத்தில் பங்கேற்பு

**(PARTICIPATION IN NATION BUILDING)**

நெகே. 2:11-18 1 பேது. 2:13-17
தி.பா. 101 லூக். 3:7-15

**"...வாரும் கட்டுவோம்". நெகேமியா 2:18**

1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 26 ஆம் நாள் இந்திய வரலாற்றில் சிறப்பு வாய்ந்த நாள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததால், மக்களாட்சி மலர்ந்த நன்னாள் அது. எனவே ஆண்டுதோறும் ஜனவரி 26 ஆம் நாளை குடியரசு தினமாகக் கொண்டாடி மகிழ்கின்றோம். அமெரிக்காவின் முன்னாள் அதிபர், ஆபிரகாம் லிங்கன் குடியரசு என்பதை, "மக்களுக்காக, மக்களால், மக்களின் அரசு என வர்ணிக்கின்றார்". நாட்டை நல்ல முறையில் கட்டமைக்க மக்களின் பொறுப்பான பங்கேற்பு அவசியமான ஒன்றாகும்.

நமது நாடு குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப் பெற்றிருந்தாலும் ஊழல், தீவிரவாதம், சாதி வேறுபாடு, சமய அடிப்படை வாதம், வறுமை போன்ற காரணிகளால், பொலிவிழந்த நிலையில் உள்ளது. இத்தகைய சூழலில் பொறுப்புள்ள கிறிஸ்தவராக, நாட்டை கட்டமைப்பதில் எங்ஙனம் பங்கேற்பு செய்யலாம் என்பதைச் சிந்தனை செய்யலாம்.

## *1. ஆண்டவரை வேண்டுவோம்* (நெகே. 2:11-18)

நாட்டின் கட்டுமானப் பணியில், தன்னை இணைத்து கொண்ட தன்னிகரற்றத் தலைவர், நெகேமியா. மன்னர் மாளிகையிவ் பணி செய்தாலும் அவரது எண்ணமும், ஏக்கமும் தாய் நாட்டு மக்கள் பேரிலேயே இருந்தன. இதனால் பாழடைந்து கிடந்த எருசலேம் மதில் பற்றிய செய்தி, நெகேமியாவை நெகிழச் செய்தது. உடைந்த உள்ளத்துடன், இறைபாதம் அமர்ந்து, இறைவேண்டல் செய்தார் (நெகே. 1:4-11). இறைவேண்டலால் பெற்ற, இறைபெலனுடன் மன்னரைச் சந்தித்தார். விண்ணகக் கடவுளின் உதவியும், மன்னரின் உதவியும் அவருக்கு ஒரு சேரக் கிடைத்தன. ஆண்டவரின் அருளினால், பணி செய்ய ஒருங்கிணைத்தார். "என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருக்கிறது" (நெகேமியா 2:18) என உள்ள உறுதியுடன், சான்று பகர்ந்தார். ஆண்டவரை வேண்டியதால் ஆற்றல் பெற்ற நெகேமியா, "வாரும் கட்டுவோம்" என அழைப்பு விடுத்தார். மக்களின் உறுதுணையுடன் 52 நாட்களில் மதில் கட்டி நிறைவு பெற்றது. நெகேமியாவின் இறைவேண்டலுடன் கூடிய முயற்சியே, எருசலேம் மக்களுக்கு மறுவாழ்வுப் பெற்றுத் தந்தது.

"இறைவேண்டல் சேவையே, நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவை", என்பது பவுண்டர் என்பவரின் கூற்று. ஒற்றுமை எனும் மதில் உடைந்து, நாட்டில் பிரிவினைகள் தலைதூக்கும்போது, நமது முழங்கால்களை முடக்குவோம். அமைதி எனும் மதில் உடைந்து, வன்முறைகள் பெருகும் போதும், முழங்கால் யுத்தம் செய்வது, நம்மேல் விழுந்த கடமையாகும். நாட்டில் அமைதியும், மகிழ்வும் பெருக, நாம் கருத்தோடு இறைவேண்டல் செய்வோம். ஆண்டவரின் அளவில்லா அருளைப் பெறுவோம்.

## *2. ஆட்சியாளருக்குப் பணிந்திருப்போம்* (1 பேது. 2:13-17)

நாட்டின் கட்டுமானப் பணியில் பாங்குடன் பங்கேற்க, பொறுப்புள்ள குடிமக்களாக இருத்தல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். யூதர்கள் போராட்டக் குணமுடையோர், கலிலேயர் கிளர்ச்சி செய்யும் தன்மையுடையோர். இன்னும் குறிப்பாக செலோத்தேயர் தீவிரவாத சிந்தையுடையோர் "எங்களுக்கு அரசர் என்று எவருமில்லை, கடவுள் ஒருவரே எங்கள் அரசர்", என்பது செலோத்தே மக்களின் நிலைப்பாடு. இவர்கள் ரோம ஆட்சியாளர்களுக்கு மட்டும் எதிரானவர்கள் அல்ல. ரோமிற்கு வரி செலுத்தும் யூதர்களையும் தாக்குவார்கள், அதோடு அவர்கள் வீடுகளையும் எரித்து விடுவார்கள். இத்தகையோர் சூழலில், கிறிஸ்தவ சமூகத்தை, தீவிரவாத யூதசமூகத்திலிருந்து விடுவிக்கவே, திருத்தூதர் பேதுரு நல்ல அறிவுரைகளை எழுதியுள்ளார். "அனைத்து மனித அமைப்புகளுக்கும் ஆண்டவரின் பொருட்டு பணிந்திருங்கள்... அரசருக்கும்... ஆளுநர்களுக்கும் பணிந்திருங்கள்" (1 பேதுரு 2:13, 14) என்று முத்தான அறிவுரைகளை, மென்மையாய் எடுத்துரைக்கின்றார்.

அதிகாரங்கள் கடவுளால் வழங்கப்படுகின்றன. ஆகையால் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர் எனத் திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதுகின்றார் (உரோமையர் 13:2).

சட்ட திட்டங்களுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் கீழ்ப்படிதல், நமது நலனுக்கும், பாதுகாவலுக்கும் கட்டாயமான ஒன்றாகும். எனவேதான் நம் ஆண்டவர் இயேசுவும், "சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்றார்.

நாம் வாழும் சூழலிலும், அதிகாரத்தில் இருப்போர், 'படிப்பில் குறைந்தவர்', 'அனுபவத்தில் சிறியவர்', 'இதர சமயத்தைச் சார்ந்தவர்' என்றெல்லாம் கூறி எதிர்த்து நிற்காமல், அனைவருக்கும் பணிந்து வாழ்தல் சிறந்தது. நம்மைக் கவனிக்கும் உலகிற்கு, நம்மை ஓர் நல்ல முன் மாதிரியாகக் காண்பிக்க அழைப்பு பெறுகின்றோம். நாம் பணிவான கீழ்ப்படிதலுடன் வாழும் போது, நம் பகுதியில் ஒன்றிணைவு ஏற்படுகின்றது.

இவ்வாறு, அதிகாரிகளுக்கும், ஆட்சியாளருக்கும் நாம் பணிந்திருப்பதன் வழியாக நாட்டுக் கட்டுமானத்தில் பங்கேற்கின்றோம்.

## 3. அநீதியை அகற்றுவோம் (லூக்கா 3:7-15)

நாட்டின் அடிமைத்தனத்தை சிதைக்கும் அநீதிகளைக் களைந்து மறு கட்டமைப்பு செய்வதில் பங்கெடுக்குமாறு திருமுழுக்கு யோவான் மக்களை அழைக்கின்றார். உடமைகளையும், உணவையும் பகிர்ந்து வழங்காமல் பதுக்கி வைப்பது அநீதி. குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக வாங்குவதும், அச்சுறுத்தி பணம் பறிப்பதும், அநீதியானச் செயல்கள். பொய்க்குற்றம் சுமத்துவதும், கையூட்டு வழங்குவதும் அநீதியின் கொடூர வடிவங்கள். எனவே, இத்தகைய அநீதிகளை அகற்றி விடுங்கள் எனத் திருமுழுக்கு யோவான் அறைகூவல் விடுக்கின்றார். (லூக்கா 7:10-14).

மோசேயின் காலத்திலேயே கையூட்டு ஒழிப்பு சட்டம் ஏட்டில் எழுதியிருக்கிறது. கையூட்டு வாங்காதே. "கையூட்டு பார்வையுடையவரையும் குருடராக்கும். நேர்மையாளரின் வழக்கையும் புரட்டிவிடும்". (வி.ப. 23:8) பிறருக்கு பகிர்ந்து வழங்காமையும், பிறருக்குரியதைப் பறித்து வாங்குவதும் ஒரு நாட்டின் கட்டமைப்பைச் சிதைக்கும் ஆயுதங்கள்.

நம் இந்தியத் திருநாடு ஊழல் மிகுந்த நாடுகளில் ஒன்று என்ற அவப்பெயரைப் பெற்றுள்ளது வேதனைக்குரிய ஒன்றாகும். ஆடம்பர வாழ்விற்காகப் பலர் லஞ்சத்திற்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். நேர் வழியில் செல்வதை விட, குறுக்கு வழியை விரும்புவோரும், விரும்பியதை விரும்பும் நேரத்தில் செய்து முடிக்க விரும்புவோரும் பல நோட்டுகளை கையூட்டாக வழங்குகின்றனர். எனவே நம் நாட்டில் எங்கும் அநீதி, எதிலும் அநீதி என்று அணைபோட்டு தடுக்க இயலாத பெருவெள்ளமாக ஊழல் மலிந்து காணப்படுகின்றது.

ஆண்டவர் இயேசுவை சாத்தான் சோதித்து கையூட்டு ஆசை வழங்கிய போது, "அகன்று போ, சாத்தானே" என்று கடிந்து கொண்டார் (மத்தேயு 4:8, 9). இந்த நல்ல மாதிரியைப் பின்பற்றி, நமது பணியிடங்களிலும் தீய சோதனை வரும் அனைத்துச் சூழல்களிலும் நம்மைத் தூய்மையாய் காத்துக் கொள்வது சிறந்ததாகும். அநீதிகளை அகற்றியும், அவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்தும் நல்வாழ்வு கட்டமைக்கப்பட நமதுப் பங்கேற்பினை வழங்குவோம்.

குடியரசு விழாவைக் கொண்டாடி மகிழும் இந்த நன்னாளிலே, நமது நாடு நன்முறையில், பழுதின்றி, உடைவின்றி முழுகட்டமைப்புப் பெற, நமது பாங்கான பங்கேற்பை வழங்க ஆண்டவர் அருள்புரிவாராக.

**திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு**

29-01-2017

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின் வரும் நான்காம் ஞாயிறு

# உண்மையான பக்தி

**TRUE PIETY**

மீக். 6:1-8 யாக். 1:19-27

தி.பா. 42 மத். 6:1-8

**"...நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடத்தில் கேட்கின்றார்?" மீக். 6:8**

பக்தி (Piety) என்பது ஒருவர் இறைவனுக்கு தன்னை முழுமையாக ஒப்படைத்தலும், அவரைப் பணிந்துகொண்டு அவரைச் சேவிப்பதும் ("devoutness" or "reverence for God") ஆகும். பக்தி என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "எயுசேபேயியா" என்பதாகும். இதன் பொருள் கடவுள்பற்று ஆகும்.

இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் எல்லா வாழ்வின் நலன்களையும் நிறைவேற்றி வந்தார். ஆனால் அவர்களோ கடவுளுக்கு நம்பகத்தன்மையற்ற மக்களாக வாழ்ந்து வந்தனர். இம்மக்களை இறைவன் பக்கமாக திருப்பி அவர்கள் பக்தி வாழ்வை புதுப்பிக்க விரும்பின கடவுள் உண்மையான பக்தி எது? என்பதற்கு மீக்கா தீர்க்கர் பக்தியற்ற மக்கள் சார்பாக கேள்வி எழுப்பி அதற்கு விளக்கமும் தருகிறார்.

இக்கால சூழலில் மனிதன் தாம் விரும்பும் வழிகளில் வாழ விரும்புகின்றான். இறை விருப்பத்திற்கு ஏற்ப வாழவேண்டிய மனிதன் இறைவனின் எதிர்பார்பை விட்டுவிட்டு தன் சுய விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்து இறைபக்தியிலிருந்து விலகிச் செல்கிறான்.

இன்றைக்கு மனிதன் பக்தி என்ற போர்வையில் வெளித்தோற்றத்துடன் உண்மையான பக்தி வாழ்ந்து வருகிறான்.

***1) நற்செயலில் வாழ்தல் :*** (மத். 6:1)

ஏழைகளுக்கு உதவுவதும், இறைவேண்டல் செய்வதும், நோன்பிருப்பதும் யூத சமய கடமைகளில் முக்கியமானதாகும். இவைகளை செய்வதில் அதிக ஆர்வம் காட்டினர் பரிசேயர்கள். இறைவார்த்தையைச் சடங்காக தங்கள் வாழ்வில் கடைப்பிடித்தனர். காலப்போக்கில் இது மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகப் பின்பற்றப்பட்டு அதன் உள்ளார்ந்த தன்மையை இழந்துவிட்டன. இயேசு கிறிஸ்து இவ்வழக்கமான செயலைக் கண்டிக்கவில்லை. ஆனால் இவைகளைச் செய்யும்போது நமது உள்ளான சிந்தனைகள் கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும் என எச்சரிக்கிறார்.

மேலும் யாக்கோபு தம் திருமுகத்தில் துன்புறும் ஆதரவற்றோரையும், கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால்

கறைபடாதபடி தங்களைக் காத்துக்கொள்வதுமே இறைவனின் பார்வையில் தூய்மையானதும், மாசற்றதுமான பக்தி எனக் கூறுகிறார். (யாக். 1:27). எனவே நற்செயல் புரிகின்ற வாழ்வையே கடவுள் விரும்புகின்றார்.

இவ்வுலக மக்களின் முன்பு தங்களைப் பக்திமான்களாக காண்பிப்பதால் கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் கடவுளிடம் அன்பு செலுத்துவதும், அவரிடம் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகளில் செயல்படுதும் நம்மை பக்திவாழ்வுக்கு வழி நடத்தும். மக்களிடம் நற்பெயரைப் பெறுவது நமது நோக்கம் என்றால் நம்முடைய செயல்களுக்கு நேராக மக்களின் கவனத்தை திருப்பி அவர்களிடம் நற்பெயரைப் பெற்றுக்கொள்கின்றோம். ஆனால் உண்மையான பக்தியோடு நாம் செய்கின்ற செயல்கள் மட்டுமே கடவுளைத் திருப்திப்படுத்த முடியும். அதன் பலனை இறைவன் தருவார். நம்முடைய செயல்கள் ஆடம்பரமின்றி கடவுளோடு நம் உறவை ஆழப்படுத்தும் நோக்கோடு செய்யும்போது பக்திவாழ்வில் வளர முடியும்.

***2) இறைவார்த்தையில் வாழ்தல் :*** (யாக். 1:21,22)

யாக்கோபு தம் திருமுகத்தில் தீமையான எல்லா அழுக்குகளையும் விட்டுவிட்டு உள்ளத்தில் ஊற்றப்பட்ட வார்த்தையின்படி வாழ அழைப்புவிடுக்கின்றார். கடவுளின் வார்த்தையைக் கேட்டும் அதன்படிவாழாமல், மேலோட்டமான வாழ்வு வாழுகின்றவர்களை கடவுள் விரும்புவது இல்லை. அவர்களின் இறைவேண்டல்களையும், அவர்களின் பலியையும் அவர் ஏற்பதுமில்லை. மேலும் “எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு?” என்கிறார் ஆண்டவர். ஆட்டுக் கிடாய்களின் எரி பலிகளும், கொழுத்த விலங்குகளின் கொழுப்பும் எனக்குப் போதுமென்றாகிவிட்டன; காளைகள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாட்டுக் கிடாய்கள் இவற்றில் இரத்தத்திலும் எனக்கு நாட்டமில்லை என எசாயா வழியாகக் கூறுகிறார் (எசா. 1:11). இறை வார்த்தையின் படி வாழாமல் பக்தியின் வேடத்தை அணிகின்றவர்கள் வெளிவேடக்காரர்கள். இறை வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்பவர்களைப் பாறைமீது தம் வீட்டைக் கட்டினவர்களுக்கு ஒப்பிட்டுள்ளனர் (மத். 7:24). மேலும் இறைவார்த்தையில் வாழுகின்றவர்களே தாயும் சகோதரர்களும் என இயேசு கிறிஸ்து கூறுகிறார் (லூக். 8:21). இறைவார்த்தையில் வாழும்போது நம்மை தவறுக்கு ஏதுவாக இழுத்துக்கொள்ளும் செயல்களைத் தவிர்த்து உண்மையான சமய வாழ்வை வாழ முடியும்.

***3) இறையுறவில் வாழ்தல் :*** (மீக். 6:8)

உண்மையான பக்தி வாழ்வு என்பது இறைவனோடு மானிடர்கள் கொண்டுள்ள உறவில் நிலைத்து வாழ்வதாகும். இதற்கு அடிப்படை மனமாற்றம் ஆகும். மனமாற்றமில்லாத, உள்ளுணர்வைத் தொடாத பகட்டான வழிபாட்டு வாழ்வு, மக்களின் நற்பெயரைப் பெறுவதற்கான செயல்கள். இவைகள் நம்மை இறையுறவிலிருந்து பிரிக்கிறது. மேலும்,

சடங்கான ஆன்மீக வாழ்வை இறைவன் வெறுக்கிறார். மனமாற்றமில்லாமல் ஆன்மீக சடங்குகளைப் பின்பற்றுவதால் இறைவன் மகிழ்ச்சியடைகிறார் என நினைத்துக்கொண்டிருக்கிற மக்களின் சடங்கச்சாரத்தை இறைவன் வெறுக்கிறார் எனவும், இறைவன் தம் மக்களிடம் விரும்புவதெல்லாம் ஆண்டவர்முன் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதுதான் (மீக்கா 6:8) என மீக்கா கூறுகிறார். மீக்கா வாழ்ந்த 8 ஆம் நூற்றாண்டில் இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையை விட்டு கானானிய பாகால் கடவுளர்களைப் பின்பற்றினர். இதைப்பார்த்த ஆண்டவர் மனம் வருந்தினார். எனவே மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட பின்னடைவுகளை சீர் செய்து கொள்ள ஆண்டவர் அவர்களில் எதிர்பார்ப்பது மனமாற்றமே என்பதை மீக்கா விளக்குகிறார். இறைவனின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப வாழும்போது இறை உறவில் நிலைநின்று வாழ முடியும். இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையின் வாயிலாகவே எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும். கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழ்பவர்கள் இறைவன் விரும்பாத செயல்களை செய்பவர்களாக அல்ல. இறைத்திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்பவர்களை நெறிகெட்டவர்களே என இயேசு அழைக்கிறார் (மத். 7:21-27). தன்னுடைய சுய விருப்பம், தன்மையச் சிந்தனை முதலியவ்றறை ஒதுக்கிவைத்து இறைவனது விருப்பத்திற்கு ஏற்ப வாழ்வதே உண்மையான பக்தியாகும்.

கிறிஸ்தவ பக்தி வாழ்வு என்பது செயல்பாடற்ற தேங்கி நிற்கின்ற வாழ்வு அல்ல. உயிரோட்டமுள்ள வாழ்வாக, அணையாத சுடராக, அமைவது தான் கிறிஸ்தவ வாழ்வால் எதிர்பார்க்கப்படுகின்ற வாழ்வாகும். உண்மையான பக்தி ஒருவரது ஆன்மீக வாழ்வின் உயர்வினைத் தருகிறது. அன்பும், இறை நம்பிக்கையும், பிறர்க்கு உதவும் குணமும் ஒருவரின் அனுதின உணவாக அமைய வேண்டும். இவைகள் உண்மையான பக்தியின் பரிமாணங்களாக அமைய வேண்டும். நம்முடைய நற்செயல்கள் இறைவிருப்பத்தை உணர்ந்து செயல்படுகின்ற செயல்களாக இருக்கின்றனவா என சிந்திப்பது அவசியம். தானியேலும் அவரது நண்பர்களும் அடிமைகளாக பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டாலும், தங்களது நம்பிக்கையை விட்டுவிடவில்லை. இறைவார்த்தையிலும், இறையுறவிலும் நிலைநின்று சான்றாக வாழ்ந்தார்கள். நாமும் நற்செயல்களைப்புரிந்து, இறைவார்த்தையிலும், இறையுறவிலும் நிலைநின்று வாழ்ந்து உண்மையான இறைப்பக்தியாளர்களாக வாழுவோம்.

**அருள்திரு. ரமேஷ் டி. தாஸ்**

05-02-2017

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

## கிறிஸ்து : வாழ்வின் பாடல்

**CHRIST : THE RHYTHM OF LIFE**

வி.ப. 15:1-21 எபே. 5:15-20
தி.பா. 149 லூக். 8:26-39

**"... உளமார இசை பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்" எபே. 5:19**

பாடல்கள் பல நிலைகளில் தோன்றுகின்றன. திருமறையிலும் அநேகப் பாடல்கள் உள்ளன. தூதர்களும் பாடல்களைப் பாடத் தவறவில்லை. பாடல்களுக்குச் சூழல், கருத்து, நோக்கம் இவைகள் இருக்கின்றன. பூமியில் அமைதி வேண்டிய தூதர்களின் பாடல் அமைந்தது (லூக். 2:14). தூய பவுலார் ஆவியும் கருத்தும் பாடலுக்கு வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். ஆவியும் கருத்தும் இணைந்த வாழ்வின் பொருள் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்து வாழ்வின் பொருளானவர். கிறிஸ்துவின் தன்மைகள் நம் வாழ்வின் பாடல்களாக அமைகின்றன. பிறர் அப்பாடல் வரிகளைப் படித்து இயேசுவின் அன்பை அறிய வேண்டும். மகாத்மா காந்தி 1930 ஆம் ஆண்டில் சில கிறிஸ்தவ நண்பர்களின் ஆலோசனைப்படி ஞாயிறு தோறும் வெஸ்லியன் (Wesleyan Church) திருச்சபைக்குச் சென்று வந்தார். ஆனால் அங்கு நடந்த எந்தச் செயல்களும் அவருக்கு ஆர்வமூட்டுவதாக அமையவில்லை. சபையார் உலக சிந்தை உடையவர்களாக இருந்ததனைக் கண்டார். ஆலயத்துக்கு பொழுது போக்காகவும் சடங்காச்சாரமாகவும் மக்கள் வருவது அவருக்குத் தெரிந்தது. எனவே, தொடர்ந்து ஆலயத்திற்கு செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நினைத்து ஆலயம் செல்வதை நிறுத்திக் கொண்டதாக தன் சுய சரிதையில் எழுதியுள்ளார். கிறிஸ்துவாகிய பாடல் வரிகளை தம் வாழ்வில் எழுத அநேக வேளைகளில் கிறிஸ்தவர்கள் தவறி விடுகின்றனர். இதனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அநேகர் தயங்குகின்றனர். கிறிஸ்து வாழ்வின் பாடலாக அமைந்திருக்கிறார். அப்பாடல் வரிகளைப் படிக்கும் பிறர் கிறிஸ்துவை காண்கிறார்களா? என்பதை நம் வாழ்வினூடே ஆய்ந்தறிய அழைக்கப்படுகிறோம்.

பாடல் என்பது வாழ்வின் பல நிலைகளோடு ஒன்றிக்கச் செய்து இறைவனின் வியத்தகு செயலுக்கு நன்றி சொல்லும் உன்னத அனுபவமே. மேலும் ராகம், தாளம், சுருதி எவ்வாறு பாடலுக்கு அழகு சேர்க்கின்றனவோ அவ்வாறே நமது சொல், சிந்தை, செயல் ஆகியவை கிறிஸ்துவின் நறுமணமாகப் பிணைக்கப்பட்டு சான்றாக வெளிப்பட வேண்டும். அவ்விதமாக மட்டுமே கிறிஸ்து நமது வாழ்வின் பாடலாக முடியும். கடவுளின் மாட்சிமையின் மேன்மையைக் கண்டு வியந்த

இறைவாக்கினராகிய எசாயா உளம் நிறைந்து, தன் நிலை உணர்ந்து, அர்ப்பணித்து புகழ்ந்து போற்றின அனுபவம் (எசா 6:5-8) ஆன்மிகத் தொடுதலின் வெளிப்படையான அடையாளமாகும். இதன் பின்னணியத்தைத் தியானிப்போம்.

### *1) அக்களிப்புடன் பாட வேண்டும் :* (வி.ப. 15:1)

கடவுளுடைய மக்களாகிய இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாய் இருந்தனர். இந்த எகிப்து அடிமைத்தனத்தின் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் இஸ்ரயேல் மக்களின் வாழ்வின் அனுபவமாய் இருந்தன. மந்தை மேய்ப்பவராகிய இஸ்ரயேலர் எகிப்தியருக்கு அருவருப்பாய் இருந்தனர் (தொ.நூ. 46:34). எனவே, எகிப்தியர் இஸ்ரயேலரைக் கொடுமைப்படுத்தினர். ஊருக்கு வெளியே குடியிருக்கச் செய்தனர். இஸ்ரயேலரின் இறைநம்பிக்கையும் எகிப்தியரின் இறை நம்பிக்கையும் வேறுபட்டதாயிருந்தன. எகிப்தியர் சந்திரக் கடவுளைக் கொண்டிருந்தனர். இஸ்ரயேலருக்கு கடவுள் இருக்கிறவராக இருக்கிறேன் (வி.ப. 3:14) என்று துன்புறும் மக்களுடன் இருப்பவராக இஸ்ரயேலரின் அனுபவத்தில் வெளிப்படுத்தினார். கிறிஸ்துவும் இம்மானுவேலாக நம்முடன் இருப்பவராய் வெளிப்படுத்தப்பட்டு (மத். 1:23) உலகத்தின் முடிவு பரியந்தம் நம்முடன் இருப்பவராய் காட்டப்படுகிறார் (மத். 28:20). கிறிஸ்தவ வாழ்வு என்பது கடவுளும், மனிதரும் பிரிந்து நிற்கும் அனுபவம் அல்ல, கிறிஸ்துவில் இணைந்திருக்கும் வெளிப்பாடாகும். இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் செங்கடல் பாதையில் பாசிகள் நிறைந்த பகுதியில் பார்வோனின் இரதங்கள் சிக்கிக் கொண்டு அழிந்த நிகழ்வையும் கடவுளால் இஸ்ரயேல் மக்கள் காப்பாற்றப்பட்ட செயலையும் நினைத்து அனுபவப்பாடலைப் பாடியுள்ளனர். இப்பாடலை ஆண்கள் மட்டுமன்று பெண்களும் இணைந்து பாடியுள்ளனர் (வி.ப. 15:20). இவ்வனுபவம் இஸ்ரயேலரின் மீட்பை அடிப்படையாகக்க கொண்டதாகும். இஸ்ரவேலர் செங்கடல் அனுபவத்திலிருந்து மீட்கப்பட்டதனைப் போன்று கிறிஸ்து பாவத்திலிருந்து நம்மை மீட்கிறார். இம்மீட்புக்காக கிறிஸ்து தம் உடலை உலக மக்கள் அனைவருக்காகவும் பங்கிட்டு கொடுத்த போது (மத். 26:30) சீடர்கள் துதியின் பாட்டைப் பாடினர். கிறிஸ்துவின் உடலையும் உதிரத்தையும் உட்கொண்டு கிறிஸ்துவை வாழ்வின் அனுபவமாகக் கொள்ளும் நாம் கிறிஸ்துவை வாழ்வின் பாடலாகக் காட்டுவோம். அப்பாடல் வரிகள் கிறிஸ்துவின் அனுபவத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள ஏதுவாக அமையட்டும்.

### *2) ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டுப் பாட வேண்டும் :* (எபே. 5:18)

ஆவியாரின் முக்கியமான வேலைகளில் ஒன்று கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுப்பது (யோவா 15:26). கடவுளின் ஆவியார்

முன்னுரைக்கப்பட்டிருந்தார். தூய ஆவியார் இயேசுவில் விடுதலைப்பணி செய்ய நிரப்பப்பட்டிருந்தார் (லூக். 4:18). இந்த ஆவியாரின் நிரப்புதலால் இயேசு விடுதலைப்பணிக்காய் தம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தார். ஒவ்வொருவரும் ஆவியாரால் நிறைவுடன் வாழ வேண்டும் (எபே. 5:18). ஆவியினால் நிறைந்து என்ற சொல் கிரேக்க மொழியில் "திரும்ப திரும்ப நிரப்பப்படுதல்" என்னும் பொருள் தருகிறது. ஆவியாரால் நிரப்பப்படுகின்ற அனுபவம் கிறிஸ்துவின் வாழ்வியலை நம்மகத்தே ஏற்றுக்கொள்வது ஆகும். கிறிஸ்துவில் உண்மையான நம்பிக்கை கொண்டிருப்பதின் வாயிலாக இறைப்பற்றாளர் தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட அனுபவத்தைப் பெறுகிறார். தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட மனிதன் தூய ஆவியாரின் கனியுடன் (கலா. 5:22-23) வாழும் வாழ்வு பெறுவர். தூய ஆவியாரின் தன்மைகளை கனி கொடுப்பதின் வாயிலாக அறியலாம். இக்கனிகள் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டன. கடவுளின் ஆவி இருக்குமிடத்தில் விடுதலை இருக்கும் (2 கொரி. 3:17). இங்கு அடக்குமுறையோ அதிகாரமோ இருக்க முடியாது. கிறிஸ்து கடவுளின் ஆவியுடன் ஆதிக்கக் கலாச்சாரப் பிடியிலிருந்தும் அடிமைத்தனத்தினின்றும் பாவங்களிலிருந்தும் விடுதலை அருளுகிறார்.

### *3) ஆச்சரியமான அனுபவத்தில் பாட வேண்டும் :*

(லூக். 8:39)

இயேசுவும் அவரது சீடரும் கலிலேயாக் கடலுக்கு எதிரேயுள்ள கதரேனருடைய நாட்டிற்கு சென்றனர் (லூக். 8:26). அப்பகுதி தீமைகள் நிறைந்த பகுதியாக (மத். 9:28) கூறப்பட்டுள்ளது. ஒருவரும் கதரேனருடைய பகுதி வழியாய் செல்ல முடியவில்லை. அங்கிருந்தவர்கள் தங்கள் ஆற்றல்களை அழிவுக்குரியதாய் பயன்படுத்தி தங்களை தாங்களே காயப்படுத்தும் நிலையில் இருந்தனர் (மாற். 5:5). ரோம அரசோ, அதிகாரிகளோ யூதச் சமயக் குழுக்களோ அவர்களை கண்டுகொள்ளாத போதும் இயேசு அவர்களுக்கு உதவி செய்தார். பிறருக்கும் தனக்கும் பயனற்ற தீயோன் பிடியிலிருந்த மனிதனுக்கு ஆண்டவர் விடுதலை அளித்தார். இத்தீயோன் பிடியிலிருந்த மனிதன் பெற்றுக்கொண்ட விடுதலை பிறருக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை. அவ்வூர் மக்களுக்கு ஆண்டவரின் சாயலாக படைக்கப்பட்ட மனிதரின் உயிரைவிட சாதாரண உடைமைகளே (பன்றிகள்) முக்கியமானதாக தோன்றின (லூக். 8:33, 34). அம்மக்கள் தீயோன் பிடியிலுள்ள மனிதரின் விடுதலைக்காக தங்கள் சிறு உடைமைகளைக் கூட (பன்றிகள்) இழக்க விரும்பவில்லை. விடுதலையளித்த இயேசுவுக்கு அங்கே இடமும் கொடுக்கவில்லை (லூக். 8:37). லேகியோன் என்ற தீயோனைக் கொண்ட மனிதன் புத்தி தெளிவடைந்ததைக் கண்டு அவ்வூரார் பயமடைந்தனர் (லூக். 8:35). பொதுவாக, புத்தி மாறியிருக்கும் மனிதரைக்கண்டு அச்சப்படுவோர்

உள்ளனர். ஆனால் புத்தி சரியான நிலையிலுள்ள மனிதைக் கண்டு பயப்படுவது விந்தையே! இன்றைய சமூக நிலையிலும் இச்சூழலைக் காணலாம். ஏமாற்றப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் புத்தி தெளிவடைவதைக் கண்டு ஏமாற்றுவோரும் சுரண்டுவோரும் அச்சப்படுகின்றனர். ஆனால் மறுபுறம் விடுதலையான மனிதனின் உள்ளம் ஆனந்தக் களிப்பினால் மகிழ்ந்தது. வீட்டுக்குச் சென்று கடவுளின் செயலை விவரித்தார். பட்டணங்களில் சென்று இயேசுவை அறிவித்தார். இன்றும் ஆண்டவர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து புத்தி தெளிவு பெற்றவர்களாய் ஆண்டவரைப்பாடி அவரை சான்றாய் பிறருக்கு அறிவிப்போம். அவரே அறிவிக்கப்பட வேண்டிய பாடல். இலங்கையில் யாழ்ப்பாணம் பகுதியில் கோவிந்தசாமி என்றொருவர் கொலைக்குற்றத்துக்காக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் ஆண்டவரின் ஊழியம் செய்த நற்செய்தி பணியாளர்கள் இயேசுவைக்குறித்து சொல்லிக் கொடுத்தனர். முதலில் ஏற்க தயங்கினாலும் பிற்பாடு இயேசுவை ஏற்றுக்கொண்டார். திருமறையையும் படிக்கலானார். அவரது குடும்பத்தினர் எப்படியாவது குற்றவாளியை விடுவிக்க வேண்டுமென்று அனேக பணத்தை செலவிட்டனர். ஆனால் தீர்ப்பு வருவதற்கு முன்னால் கோவிந்தசாமி நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினார். நான் ஒரு கொலையல்ல, மேலும் சில கொலைகளை செய்திருப்பதாக ஒப்புக்கொண்டார். நீதிபதியும் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனையை விதித்தார். அன்று மாலை நீதிபதி குற்றவாளியை தன் அறைக்கு அழைத்து எந்த குற்றவாளியும் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதை கண்டதில்லை. நீ எப்படி ஒப்புக்கொண்டாய்? அதற்கு குற்றவாளி நான் இயேசுவை ஏற்றுக்கொண்டேன் என்று பதில் கூறினார். குற்றவாளி தூக்கிலிடப்பட்டார். ஆனால் அந்த குற்றவாளி எழுதிய பாடல் இன்றும் பேசிக்கொண்டிருக்கிறது, அப்பாடல் தான் "இயேசு நேசிக்கிறார் ... ..." என்று கீர்த்தனையில் இடம் பெற்றிருக்கிறது. குற்றவாளி மரித்தாலும் அவர் எழுதிய பாடல் இயேசுவை இன்றும் அறிவித்துக் கொண்டிருக்கிறது. நாம் பாடும் பாடல்களும் இயேசுவை அறிவிப்பதாய் அமையட்டும். இயேசுவே வாழ்வின் பாடல். ஆம் இயேசு அனுபவப்பாடலாய் ஆவியாரின் பாடலாய் அறிவிக்க வேண்டிய பாடலாய் இருக்கிறார், ஆமென்.

**அருள்திரு. S. கிரீஸ்குமார்**

12-02-2017

குணமாக்கும் திருப்பணி ஞாயிறு

## மனதுருகும் அன்பும் நலமளித்தலும்

**COMPASSIONATE LOVE AND HEALING**

எசா. 42:1-9 யாக். 5:13-18
தி.பா. 103:1-14 மாற். 7:31-37

**“நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்பு பெறுவார்.” யாக். 5:15**

இந்த நாளை தென்னிந்தியத் திருச்சபை குணமளிக்கும் ஞாயிறாக ஆசரிக்கிறது. மனிதனுக்கு நோய்கள் என்பது இன்று ஒரு சாதாரண அனுபவம் தான். ஆனால் நோயுற்ற மனிதனின் வேதனையை ஒருவர் எண்ணிப் பார்ப்பது என்பது ஒரு தெய்வீகப்பண்பாகும். கடவுள் தம் படைப்பான மனிதரை நோயுற்றவராகக் காண விரும்பாமல் அவரை ஆரோக்கியமுள்ளவராகவே காண விரும்புகிறார் என்பதை “எகிப்திற்கு வரச் செய்த கொள்ளை நோய்களை உன்மேல் வர விடமாட்டேன். ஏனெனில் நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர்” (வி.ப. 15:26) அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் (தி.பா. 103:3). எல்லா நோயாளர்களையும் அவர் குணமாக்கினார் (மத். 8:16) ஆகிய இறைவார்த்தைகளிலிருந்து அறியலாம்.

இயேசு இறையரசை நிறுவும் தம் பணியின் முக்கியப் பணியாக குணப்படுத்துதலைக் கொண்டிருந்தார் (மத். 4:23). அவர் மனிதரை மனதுருக அன்புடன் சந்தித்தார் (மத். 14:13-21, மத். 15:32-39, மாற். 1:40-45, மத். 20:29-34, லூக். 7:11-17). குணமளித்தலைப் பொறுத்தமட்டில் இயேசுவின் பெயரை இரக்கமுள்ளவர் என்று அழைக்கலாம். அந்த அளவிற்கு இயேசு இரக்கத்தை தம்முடைய போதனையிலும், வாழ்விலும் வெளிப்படுத்தினார். கடவுளின் இரக்கத்தைத் திருப்பாடலாசிரியர் “என்றுமுள்ளது அவரது பேரன்பு” என்று குறிப்பிடுகிறார். (தி.பா. 136:1).

இயேசு நாதர் வார்த்தையால் (மாற். 10:52), பாவ மன்னிப்பால் (மாற். 2:5), மருந்தால் (மாற். 7:33) நோயுற்றோருக்கு நலமளித்தார். அவரது மனதுருக்க அன்பால் நோய் குணமடைந்து அதிக காலம் வாழ்ந்தவர்களுண்டு (2 அர. 20:6). அதிக காலம் நோயுற்று வாழ்ந்து அற்புத குணமடைந்தவர்களுமுண்டு (யோ. 5:6).

கடவுளின் மனதுருக்க அன்பை வெளிப்படுத்தும் சூழல்களை திருமறை சார்ந்து சிந்திப்போம்.

## 1. கடவுளின் மனதுருக்கம் அவருடைய அன்பின் பணிவிடையில் வெளிப்படுகிறது : (எசா. 42:1-9)

கடவுள் தம் மக்களிடத்தில் கொண்டிருக்கும் கரிசனையை இஸ்ரயேலரின் சிறையிருப்பின் அனுபவங்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதாகக் காணலாம். இந்நாளுக்குரிய முதலாம் திருமறைப்பாடத்தில், மனிதர் தம் இயல்பில் பலவீனர். எனவே கடவுள் தம் பரிவிரக்கத்தால் அவர்களை பாதுகாப்பதாக (எசா. 42:3) தீர்க்கர் குறிப்பிடுகிறார். வரவிருக்கும் மேசியாவோ பணிவிடை செய்யும் பணியாளர். அவர் தம் அரும்பணிகளை பலவீனரைப் பலப்படுத்துவதிலே கரிசனையாய்ச் செய்வார் என்று குறிப்பிடுவதை (வ. 6) இயேசு நாதர் எருசலேம் ஆலயத்திலே தம் திருமறைப்படிப்பிலே தெளிவாக வாசித்து பிறர் புரிந்து கொள்ளும்படிச் செய்தார் (லூக். 4:18,19). ஏழைகளுக்கு நம்பிக்கை ஊட்டுதல், சிறைப்பட்டோரை விடுதலை செய்தல், பார்வையற்றவருக்குப் பார்வை வழங்குதல், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புதல், அருள்தரும் ஆண்டை முழக்கமிடல் என்பவைகள் நலமார்ந்த வாழ்வுக்கு அடிப்படையானவைகள். அதைத் தாழ்மையுடன் கரிசனையுடன் நிறைவேற்றுவதாக வாக்களித்துள்ளார்.

மனிதர் தாம் எதிர்பார்க்கும் ஆசீர்வாதங்களில் ஒன்று தன்னை ஒடுக்கும் கட்டுகளிலிருந்து விடுதலை பெறுவது என்பதாகும். தன்னைத் துன்புறுத்தும் செயல் ஒன்றாக நோயைக் காண்கிறான். நோய்கள் மனிதனின் அனுதின வாழ்வில் ஓர் அங்கமாகிவிட்ட நிலையில் நோயுற்றவர் கடவுளை நோய்க்கான ஓர் நிவாரணியாகக் காண்பதைவிட அவரை நோயினின்று நிரந்தர விடுதலை தருபவராகக் காண்பது அவரை பாக்கியத்தில் நடத்தும்.

ஒருநாள் மருத்துவ உதவி அருட்பணியாளர் ஒருவர் மருத்துவமனையில் தொழுநோயாளர் ஒருவரின் புண்களைக் கழுவிக்கொண்டிருந்தார். அவர் மிகவும் வாஞ்சையுடனும், உண்மையுடனும் அந்த மனிதரை பராமரித்துக் கொண்டிருந்தார். அவ்வேளையில் அவரைக் காண்பதற்காக அவரது சகோதரர் ஒருவர் அங்கே வந்தார். தன் சகோதரன் என்பதால் அவள் பணி செய்யும் அறைக்கு நேராக அவரை அழைத்துச் சென்றார். அந்தச் சகோதரர் தன் சகோதரி தொழுநோயாளரின் புண்களைச் சுத்தம் செய்வதைக் கண்டு அவர் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அப்போது அவர், "ஒரு கோடி ரூபாய் சம்பளம் தரலாம் என்று சொன்னாலும் நான் இந்தப் பணியைச் செய்ய மாட்டேன் என்று சொன்னார். அதற்கு அவருடைய சகோதரியான அருட்பணியாளர் நானும் அப்படிச் செய்யமாட்டேன்; ஆனால் பணத்திற்காக செய்யாததை கடவுளின் மகத்துவத்திற்காகச் செய்வேன்" என்று கூறினார்.

இயேசு மனிதரின் நலமற்ற வாழ்வில் அவர்களை ஆற்றுபவராக ஆறுதல் செய்பவராக விளங்குவதால் இயேசு நலமற்றோர் வாழ்விற்கு ஓர் ஆசீர்வாதம். நலமற்றோரிடம் மனதுருகும் அன்பை வெளிப்படுத்தின இயேசுவிடம் ஒருவர் கொள்ளும் விசுவாசம் அவரை நலம் நிறைந்த வாழ்வுக்கு வழிநடத்தும்.

### 2. கடவுளின் மனதுருக்கம் அவரை நம்பும் அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்படுகிறது : (மாற். 7:31-37)

உலகத்தின் அனைத்து மனிதர்களுக்காகவும் வந்த இயேசு (லூக். 2:10) யூதரல்லாத புற இனத்தார் மத்தியிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு செயலை (மாற்கு 7:31-37) மாற்கு குறிப்பிட்டுள்ளார். கடவுளின் மனதுருக்க அன்பு இயேசுவின் மூலம் கிறிஸ்தவரல்லாதவர்களையும் சந்திக்கிறது என்பதை இந்த நிகழ்வின் மூலம் அறியலாம். காரணம் மனித உயிர் அல்லது மனித நலன் என்பது விலை மதிப்புமிக்கது என்பதுவாகும். இறையரசைக் கட்டியெழுப்பும் அவரது பணியில் எல்லா மனிதரும் நலமுடன் விளங்குவது தேவை என அவர் உணர்ந்துள்ளார். எனவே இயேசுவை யூதரோ, கிறிஸ்தவரோ மாத்திரமல்ல எவரும் அவரை விசுவாசத்துடன் அணுக முடியும் என்பதற்கு இந்தத் திருமறைப்பகுதியும், இதற்கு இணையாக உள்ள கானானியப் பெண்ணின் மகள் சுகம் பெறும் நிகழ்வும் (மாற். 7:24-30) சான்றாக உள்ளது. திமிர்வாதக்காரன் (மாற். 2:1-12), பார்வையற்ற மனிதன் (மாற். 7:22-26) ஆகியோரை அவர்களைச் சார்ந்தவர்களே இயேசுவிடம் கொண்டுவந்தது போல காது கேளாத இந்த மனிதனையும் அவரைச் சார்ந்தவர்களே விசுவாசத்துடன் இயேசுவிடம் கொண்டுவந்தார்கள் என்றும் குறிப்பாக இவர் ஓர் புற இனத்தவர் என்றும் புற இனத்தார் பகுதியான பத்துப்பட்டணங்கள் அடங்கிய தெக்கப்போலி என்னும் பகுதியை சார்ந்தவர் எனவும் அறியமுடிகிறது.

இந்த மனிதனுக்கு இரண்டுவித பிரச்சனைகள் இருந்தன. ஒன்று அவர் காதுகேளாதவர் என்றும், இரண்டாவதாக அவர் திக்கிப் பேசுகிறவராகவும் காணப்பட்டார். இந்த நிலையை குறிப்பிட மாற்கு நற்செய்தியாளர் 'மொகிலாலோஸ்' என்னும் வார்த்தையைக் குறிப்பிடுகிறார். இதன் பொருள் அது சாதாரண பெலவீனமாயிருக்கவில்லை என்பதுவாகும். இந்தக் கடினப் பிரச்சனையைக் கொண்டிருக்கும் இம்மனிதனை இயேசு அதன் புற இனத்தார் என்றும் பாராமல் தம் மனதுருகும் அன்புடன் அவருக்கு நலமளிக்க முன்வருகிறார். அதற்காக அவரை மக்கள் கூட்டத்தினின்று தனியே அழைத்துக் கொண்டுபோய் அவர் காதுகளில் விரலையிட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார். குணமளித்தல் என்பது தேவ சித்தம் என்பதால் இயேசு தம் விண்ணகத் தந்தையிடம் பெருமூச்சுடன் வேண்டிக் கொண்டு திறக்கப்படுவாயாக (எப்பத்தா) என்று கூறி காதுகேளாத இந்த மனிதருக்கு சுகமளித்தார்.

எல்லாவற்றையும் நன்றாகச் செய்த ஆண்டவர் (தொநூ. 1:4-31) இவருக்கும் நன்மை செய்தார் (வ. 37) இஸ்ரயேலருக்கு வாக்குப்பண்ணின ஆசீர்வாதத்தை (எசா. 35:5, 6) விசுவாசத்துடன் தம்முன் கொண்டுவரப்பட்ட இந்த புற இனத்தாரும் பெற்றுக்கொள்ள அருள்செய்தார். அவரோ தடையை மீறி சாட்சியிட்டு பிறரையும் இயேசுவின் நலமளிக்கும் இரக்கச் செயலில் ஈடுபடுத்தினார் (மாற். 7:30).

பானி என்ற ஐம்பத்திரண்டு வயதுடைய இஸ்லாமிய சமய நம்பிக்கையுடைய ஒரு பெண் மனம்மாறி கிறிஸ்தவத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். முதுகெலும்பிலும் கால்களிலும் கடுமையான வேதனையினால் அவதியுற்று பல மருத்துவர்களையும் சந்தித்தார். அவர் விரிவான நுட்பமான பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டார். கடைசியில் அவருக்கு 'மல்ட்டிப்பிள் மயலோமா' என்னும் எலும்புப் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாக மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். இந்த நோய் பாதித்தவர் சில மாதங்களுக்குள் அல்லது ஒரு வருடத்திற்குள் மரணமடைவது நிச்சயமான ஒன்று. இவருக்கு இந்த நோயைக் கண்டறிந்த மருத்துவர் ஸ்டெயின்பர்க் நோயின் முழு விவரத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தினார். அவர் கூறினார் "கர்த்தர் என்னைப் பார்த்துக் கொள்வார்". சென்ற இரவில் நான் வேதாகமத்தைப் படித்த போது திருமறையின் ஒரு வசனம் என்னைத் தொட்டது. அது "முழு இருதயத்தோடு கர்த்தரை நம்பு. உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாமல் நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்து செய்". அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார் (நீதி. 3:5,6) என்று கூறிய உடன் மருத்துவர், நோயின் கடுமையான தன்மையில் அவர் புரியாமல் பேசுகிறார் என்று நினைத்துக் கொண்டார். அவர் இன்னொரு வசனத்தைக் குறித்துக் கூறியபோது அவர் ஆச்சரியமடைந்தார். அப்பொழுது உன் உடல், நலம் பெறும். உன் எலும்புகள் உரம் பெறும் (நீதி. 3:8). இதனால்தான் என் ஆண்டவர் பார்த்துக் கொள்வார் என்று கூறினேன் என்றார். அப்பொழுது மருத்துவர், நீங்கள் ஒன்றோ இரண்டோ வருடத்திற்கு மேல் வாழலாம் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறியபோது "கடவுள் என்னை அனுமதிக்கும் காலம் முழுவதும் வாழ்வேன் என்று பதிலளித்தார்". அதன்பின் அவர் இருபது வருடம் உயிரோடிருந்து, நோயினின்று முற்றிலும் விடுதலையாகி சாட்சியாக வாழ்ந்தார். பானியிடம் ஓர் இளம் மருத்துவர் ஒரு தடவை குணப்படுத்த முடியாத இருந்த ஆட்கொல்லி நோயை எப்படி ஜெயித்தீர்கள் என்று கேட்டபொழுது அவர் இப்படியாகப் பதிலளித்தார் "விசுவாசத்தாலும், ஆன்மிகத்தாலும்" எனக்கு அவ்வளவு தான் தெரியும் என்றார்.

### 3. கடவுளின் மனதுருக்கத்தைத் : திருச்சபை செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது :

இழப்பு, நோய் மற்றும் துன்பங்களால் பாடுபடும் மனிதரோடு கடவுள் கொண்டிருக்கும் மனதுருக்கமான அன்பை யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடும்போது அழுவாரோடு அழுங்கள் என்கிறார் (யோவா. 11:35). இதனைக் குறித்து திருதூதர் யாக்கோபு குறிப்பிடும்போது துன்பம் அனுபவிப்பவர்கள் மகிழ்ச்சி கீதம் பாட வேண்டும் என்றும், துன்பப்படுபவரும் அவரைச் சார்ந்தவர்களும் கடவுளின் இரக்கத்துக்காக ஜெபம் பண்ண வேண்டுமென்ற பொறுப்பையும் வழங்குகிறார் (யாக். 5:13). காரணம், வாழ்வில் ஒரு மனிதன் சுகமான செழிப்பான அனுபவத்தை அடைகிறதினால் ஆண்டவரை மறுதலித்து ஆண்டவர் யார் என்று சொல்ல வாய்ப்புண்டு (நீதி. 30:9) என்று சாலமோன் கூறுகிறார். எனவே, நமக்கு கிடைக்கும் சுக செளகரியங்களெல்லாம் கடவுள் தருவது என்ற சிந்தை நம்மை ஆட்கொள்ளும்போது துன்ப காலத்தில் ஜெபம் பண்ணுகிறவர்களாயும், மகிழ்ச்சி காலத்தில் துதிகீதம் பாடுகிறவர்களாயும் இருப்போம்.

நோய் உலகில் எப்படிப் பிரவேசித்தது என்றால் அதற்கு முன்னோடியாக பாவம் உலகில் பிரவேசித்தது. அதைத்தொடர்ந்து நோய் உலகில் பிரவேசித்தது. பல நோய்களின் அடிப்படையான காரணம் நோயாளியின் பாவமனநிலையே (சங். 103:3). இதை நவீன மருத்துவ உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. பொறாமை, எரிச்சல் போன்ற உணர்வுகள் ஒருவரின் சொந்த சரீரத்திற்கே துன்பம் ஏற்படுத்துகிறது. மன அமைதி உடல் நலம் தரும்; சினவெறியோ எரும்புருக்கியாகும் (நீதி. 14:30) என்று சாலமோன் கூறுகிறார். எவ்வளவு சிகிட்சையளித்தாலும் அவன் மனம் மாறாமல் அவன் நோய் குணமாவதில்லை.

நோயுற்றோரின் நலனில் அக்கறை கொண்டுள்ள நம் ஆண்டவர் தம் சரீரமாகிய திருச்சபையை மனிதனின் முழு நல வாழ்வுக்காக ஈடுபடுத்துகிறார் (லூக். 6:36). சபையானது ஒரு சமூகத்தின் நலனை விரும்புவதுதான் காரணம். நோயுற்றோர் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து ஜெபம் பண்ணவேண்டும் (வ. 14) சபை மக்களிடம் அதைக்குறித்துப் பகிர்ந்து கொள்ள வேண்டும் (வ. 16). கடவுளின் சரீரமாகிய திருச்சபையின் ஆற்றலுள்ள அங்கங்கள் (சுகவாழ்வை அனுபவிப்போர்) ஆற்றலற்ற அங்கங்களுக்காக (நோயுற்றோர்) மனதுருக்கத்துடன் செயல்படும்போது இதன் பலனை திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் காண இயலும்.

டாக்டர். ஐடா சோபியா ஸ்கடர் என்பவர் இந்தியாவில் தங்கி அருட்பணியாற்றும் தன் பெற்றோரை சந்திக்க ஒரு தடவை இந்தியா வந்திருந்தார். ஒரு நாளில் தன் வீட்டில் தனியாகத் தங்கியிருக்கும் போது,

மூன்று வேளைகளிலுமாக பிராமண குலத்தைச் சார்ந்த ஆண்கள் வந்து தங்கள் மனைவிக்கு பிரசவ வேளையில் அவர்களுக்கு உதவி செய்ய அவசரமாய் விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் ஐடாவோ தனக்கு அதற்குரிய பயிற்சி ஏதுமில்லையென்றும், வெளியே சென்றிருக்கும் தன் தந்தை வந்தபின் அவர்களை அனுப்பி விடுகிறேன் என்றும் கூறினார். அப்போது அவர்கள் எங்கள் கிராம, குல வழக்கத்தின்படி பெண்களின் பிரசவ வேளையில் ஆண்களுக்கு அனுமதியில்லை என்று கூறி ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மறுநாள் காலையில், ஐடா, கிராமம் ஒன்றில் பறை அடிக்கும் சத்தத்தைக் கேட்டு இது என்ன என்று விசாரித்த போது மூன்று பெண்கள் பிரசவத்தில் மரித்துப் போனார்கள், அவர்களது மரணத்தை அறிவிப்பது தான் இந்த ஓசை என்றார்கள். இதைக் கேட்டு ஐடா மிகவும் வருந்தினார். அவர் தனக்குள் ஒரு தீர்மானம் செய்து கொண்டார். தான் மருத்துவம் படித்து நோயுற்றவருக்காக உதவுவதாக தீர்மானம் கொண்டு தன் தாய் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார். மருத்துவக் கல்வியை முடித்து இந்தியா திரும்பினார். தன் தந்தை பணியாற்றின வேலூருக்கு வந்து தன் பணியை எளிமையாய் துவங்கினார். இந்தப் பணி இன்று ஆல்போல் தழைத்து வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியாக பரந்து உயர்ந்து இறைப்பணிக்கு சான்றுபகர்ந்து கொண்டிருக்கிறது.

இக்காலத் திருச்சபை தன் நலமளிக்கும் பணியில் கருத்துடன் செயல்படுகிறது என்று நம்மால் கூறமுடியுமா? கடவுளின் நலமளிக்கும் அருட்பணியைத் திருச்சபையாக அதை இறைப்பணியென்று கருதி நல்மனதுடன் செய்ய முன்வருவோம்.

**அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தோமஸ்**

12-02-2017

உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

## ஓய்வுநாள் படைப்பின் உச்சம்

**SABBATH AS THE CULMINATION OF THE CREATION**

எசா. 65:17-25 எபி. 4:1-13

தி.பா. 8 மாற். 2:23-28

**"கடவுள் தாம்செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவுபெறச் செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்."** எபி. 4 : 4

படைப்புகள் அனைத்தும் கடவுளின் திட்டத்தில் நேர்த்தியாய் படைக்கப்பட்டவை. அதனை பண்படுத்தி பாதுகாத்து பராமரித்திட மனிதன் பணிக்கப்பட்டான் (தொ.நூ. 2:15 ) ஆறு நாட்களில் கடவுள் அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார். ஓய்வுநாள் படைப்பின் உச்சமாகக் கருதப்படுகிறது. காரணம்

1. படைப்பின் நிறைவில் ஆண்டவர் ஓய்ந்திருந்த நாள்.
2. ஆண்டவர் ஆசீர்வதித்த நாள்
3. ஆண்டவரால் தூய்மையாக்கப்பட்ட நாள் (தொ.நூ 2:3;வி.ப 20:11).

'ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக' என்று (வி.ப.20:8) கடவுள் மோசேயின் வழியாய் கொடுத்த பத்துக் கட்டளைகளில் குறிப்பிடுகிறார். ஓய்வுநாள் இஸ்ரயேலருக்கும் இறைவனுக்குமுள்ள உடன்படிக்கை நிலையானது என்பதைக் குறிக்கும் அடையாளம் என வி.ப. 31:16 குறிப்பிடுகிறது.

எபிரேயர் 4 ஆம் அதிகாரம் ஓய்வுநாளை இளைப்பாறுதலின் நாள் என்றும் குறிப்பிடுகிறது. விசுவாசத்தினால் நற்செய்தியை ஏற்றுக் கொண்டவர்களுக்கே இளைப்பாறுதல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இளைப்பாறுதல் என்பது ஓய்வுகாலம். கடவுள் ஆறுநாள் வேலை செய்து பின்னர் ஓய்ந்திருந்தது போல உலக வேலையை விட்டு அந்த ஓய்வு காலத்தை அவர்கள் அடைவர். பரம கானானே இளைப்பாறுதலுக்குரிய இடம். இஸ்ரயேலரில் கீழ்ப்படியாதவர்கள் கானானை எதிர்நோக்கியிருந்தும் அதை அடையவில்லை. அவிசுவாசத்திலும், கீழ்ப்படியாமையிலும் வாழ்பவர்கள் கடவுளின் இளைப்பாறுதலில் பிரவேசிக்க முடியாது. எனவே மெய்யான இளைப்பாறுதலை இழந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க எபிரேய நிருப ஆக்கியோன் நம்மை அழைக்கிறார்.

ஆண்டவர் தம் அருளால் வழங்குகின்ற இளைப்பாறுதலின் அனுபவத்தை நாமும் சொந்தமாக்கிக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதை இன்றைய திருமறைப் பகுதிகளினூடாய் சிந்திப்போம்.

### *1. தூயவாழ்வு முன்னிறுத்தப்பட வேண்டும் :*

ஆண்டவர் தூய்மை நிறைந்தவர். அவர் தூய்மையில் மகத்துவமுள்ளவர் (வி.ப. 15:11). இஸ்ரயேலரின் கடவுள் யாவேக்கு

அளிக்கப்பட்ட ஒரு பெயரே தூயவர் என்பதாகும். எசாயா இறைவாக்கு நூலிலும் ஏனைய திருமறை பகுதிகளிலும் இதனை காணலாம் (எசா. 1:4, 5:19,24; 10:20; 40:25; 2அரச. 19:22; திபா. 71: 22). புதிய ஏற்பாட்டில் இப்பெயர் மேசியாவுக்கு சாற்றி கூறப்படுகிறது (மாற் 1 : 24 1 யோவா 2:20). தூயவாழ்வு நிலைகுறித்தும் திருமறை தெளிவுடன் கற்றுத்தருகிறது. ஆண்டவர் தூயவராய் இருப்பதுபோல் அவரை நம்பி பற்றுறுதியுடன் வாழ்வோரும் தூயவர்களாய் வாழவேண்டும் என்பதே உண்மை. இஸ்ரயேல் மக்களைப் பார்த்து நான் தூயவர் ஆகையால் நீங்களும் தூயவர்களாயிருப்பீர்களாக (லேவி.11:45; 19:2; 1பேது. 1:16) என்று கட்டளை கொடுக்கிறார். தூய்மையின்றி ஒருவரும் கர்த்தரை காண இயலாது என எபிரேயர் 12:14 குறிப்பிடுகிறது.

ஆக இளைப்பாறுதலின் வாழ்வை அடைந்திட தூய வாழ்வு முன்னிறுத்தப்பட வேண்டும். தூய்மையற்ற வாழ்வு வாழ்பவர்கள் இறையாட்சியைச் சுதந்தரிப்பதில்லை (1 கொரி 6:9,10). தூய்மையற்ற வாழ்வால் யூதாஸ் வாழ்வின் முழுமையை அடையாமறபோனான். பாவம் இன்று மனிதனை தூய வாழ்விலிருந்தும் கடவுளிடமிருந்தும் பிரித்துவிடுகிறது. மனமாற்றம் இல்லையேல் தூய வாழ்வை சொந்தமாக்கிடவோ கிறிஸ்துவுடன் பங்குள்ளவர்களாகவோ வாழ இயலாது. நம் பாவங்களுக்காக மரித்து சிலுவையில் சிந்திய உதிரத்தால் நம்மை மீட்டெடுத்திருக்கிற ஆண்டவரிடம் நித்தமும் மனமாற்றம் பெற்றவர்களாய் புதுவாழ்வுக்குள் வர வேண்டும். இன்றய கிறிஸ்தவ தலைவர்களும் கிறிஸ்தவர்களும் தங்களை ‘Super Saints’ என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். வாழ்வின் பின்னணியில் அத்தனை முறைகேடுகளும் தீமைகளும் நிறைந்திருக்கும். ஆனால் தங்களை அதி தூயவர்களாய் பிரகடனப்படுத்திக் கொள்வார்கள். சிம்சன் என்ற தேவமனிதர் “தூய்மை என்பது இயேசுவே” என்று சொல்லுகிறார். இயேசு கிறிஸ்துவை மீட்பராகக் கொண்டு வாழ்பவர்கள் அவர் வாழ்ந்த தூயவாழ்வை முன்னிறுத்தி முன் மாதிரிகளாய் வாழ அழைக்கப்படுகிறார்கள்.

### *2. பணிவிடைகள் நிறைவுபடுத்தப்பட வேண்டும் :*

இளைப்பாறுதலின் நாளை முன்குறிப்பதற்காக படைப்பின் வரலாறு முன்னிறுத்தப்படுகிறது. ஆறு நாட்களில் கடவுள் அனைத்தையும் படைத்து நிறைவு செய்தார். ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். ஆண்டவர் படைத்த அனைத்துவித படைப்புகளையும் பண்படுத்தி பாதுகாக்கும் பொறுப்பினை நம்முடைய கரங்களில் கொடுத்திருக்கிறார். மனிதனின் சுயநலத்தால் இன்று படைப்புகள் அனைத்தும் பாழ்ப்படுத்தப்படுகின்றன.

நவீனமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளால் காடுகள் அழிக்கப்பட்டு நவீன நகரங்கள் உருவாக்கப்படுவதையும் இயற்கை விவசாய முறைகளும் உழவு வகைகளும் புறந்தள்ளப்பட்டு

செயற்கைத் தயாரிப்புகள் உலகை ஆக்கிரமித்து நிற்கும் நிலையும் பெருகி வருகிறது. இதனால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் பட்டணங்களில் மனுக்குல வாழ்வு கடினமாகி வருவதைக் காணமுடிகிறது.

இந்தியாவின் தலைநகரமான டில்லியில் ஏற்பட்ட காற்று மாசினால் சுவாசிக்க இயலாச் சூழல் ஏற்பட்டு பள்ளிக்கூடங்களுக்கு சிலநாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளதையும், We need natural air to breath/ Give us air to breath/ Don’t pollute air - போன்ற வாசகங்களுடன் பள்ளி மாணவர்கள் பேரணி நடத்தியதையும் (2016 நவம்பர் 5) செய்தி ஊடகங்கள் வெளிப்படுத்தின. மனித ஆடம்பர வாழ்க்கையால், நவீன மயமாக்கல் முயற்சியால் ஏற்படும் வாகனப் பெருக்கமும் தொழிற்சாலைக் கழிவுகளும் தண்ணீரையும் காற்றையும் மாசுப் படுத்திவிடுகின்றன.

ஆண்டவரால் அழகாய் படைக்கப்பட்ட உலகைப் பண்படுத்திப் பாதுகாக்கும் (தொ.நூ. 2:15) பொறுப்பினை ஆண்டவர் நம் கரங்களில் தந்திருக்கிறார். திருச்சபை, திருப்பணிகளில் பங்கெடுக்க ஆண்டவர் பலவித தாலந்துகளை அனைவருக்கும் கொடுத்திருக்கிறார். உண்மையாய் வாழ்வதற்கும், இறைச்சான்றுடன் வாழ்வதற்கும் ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். பெற்றோர் பிள்ளைகளை கிறிஸ்தவ சான்றுடன் வாழ வழிகாட்டுவதும் பிள்ளைகள் கீழ்ப்படிதலுடன் வாழ்ந்து பெற்றோரை கனப்படுத்துவதும் கடமையாகும். ஆண்டவரின் பணிவிடைகளை அனைவரும் சேர்ந்து நிறைவேற்றி மீட்புக்கு வழிகாட்டுவதும் நமது கடமை. ஆண்டவரின் திட்டங்களை ஏற்று அவர் பணிவிடைகளை நிறைவாக்கி அவர்கரங்களில் தந்து இளைப்பாறுதலின் பங்கினை அடைவோம்.

### *3. தூய நாளைக் கனப்படுத்தவேண்டும்:*

ஓய்வுநாள் படைப்பின் உச்சம் என்பது படைப்பின் வரலாறு சொல்லும் உண்மை. ஏனென்றால் அது ஆண்டவரால் தூய்மையாக்கப்பட்ட நாள், அது நிறைவின் நாள் மட்டுமல்ல மாட்சிமையின் நாள். அத்தகு நாளை தூய்மைமிகு நாளாய் நாம் கனப்படுத்துவதே சிறப்பு. ஓய்வுநாளை தூயதென ஆசரிப்பாயாக என்று 10 கட்டளைகளில் நான்காம் கட்டளையாய் ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியை நடப்பிப்பாயாக ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருடைய ஓய்வுநாள் (வி.ப. 20:9,10). என் ஓய்வு நாளை கனப்படுத்துகிறவர்களுக்கு என்றும் அழியாத நித்திய நாமத்தை அருளுவேன் என்று எசாயா தீர்க்கர் வழியாய் ஆண்டவர் உரைக்கிறார் (எசா. 56:4,5). ஓய்வுநாளில் வேலை செய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன் (வி.ப. 31:15; 35:2).

ஓய்வு நாளின் முறைமைகளினின்று விலகிச் செல்லாது, என் புனித நாளில் உன் விருப்பம் போல் செய்யாதிருந்து ஒய்வுநாள் மகிழ்ச்சியின் நாள் என்றும் ஆண்டவரின் மேன்மை மிகு புனித நாள் எனச் சொல்லி

அதற்கு மதிப்புத் தந்து உன் சொந்த வழிகளில் செல்லவோ உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுக்களைப் பேசவோ செய்யாதிருந்தால், அப்பொழுது ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய். நானோ மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம் வரச் செய்வேன் ; உன் மூதாதையராகிய யாக்கோபின் உரிமைச் சொத்தின் மூலம் உனக்கு உணவளிப்பேன்; ஆண்டவரின் வாய் இதை உரைதததது. (எசா. 58:13,14). ஓய்வுநாளைக் கனப்படுத்துவதின் ஆசீர்வாதங்களை ஆண்டவர் இங்கே குறிப்பிடுகிறார். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களோ ஓய்வு நாளின் முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்தி திருச்சபைத் தொழுகைகளை, திருப்பணிகளை வெறுத்து தங்களுக்கு விருப்பமானதை ஓய்வுநாளில் செய்து நன்மை செய்ய மனமற்று, ஓய்வுநாளில் நன்மை செய்வது நியாயம் (மாற். 3:4; லூக். 6:9). என்ற இயேசுகிறிஸ்துவின் கட்டளையையும் புறந்தள்ளி ஆண்டவரை விட்டு விலகிச்செல்கிறவர்களாய் மாறிவிடுகின்றனர்.

ஓய்வுநாளைத் தூயநாளாய் நாம் கனப்படுத்தி திருச்சபைத் திருப்பணிகளில் பங்கெடுத்து நன்மைசெய்யப் பழகி நற்சான்றாய் வாழ்வதே ஆண்டவரில் மனிதனில் வைத்திருக்கும் நோக்கம். ஆனால் இன்றைய நம்முடைய வாழ்வு எப்படி இருக்கிறது என்பதை ஆய்வு செய்திட அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் இளைப்பாறுதலை நாம் அடைந்திட அவர் காட்டும் வழியில் பயணித்து அதனை சொந்தமாக்கிக் கொள்வோம்.

**அருள்திரு. J. வின்சென்ட் றாபர்ட்**

19-02-2017

**உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு**

## வீழ்ச்சி : படைப்பின் நோக்கத்தை மீறுதல்

**FALL AS THE VIOLATION OF THE PURPOSE OF CREATION**

தொ.நூ. 6:1-13 உரோ. 7:14-25
தி.பா. 32 மத். 7:15-23

**"கடவுள் மண்ணுலகை உற்று நோக்கினார். இதோ அது சீர் கெட்டுப் போயிற்று". தொ.நூ. 6:12**

ஒரு பாமரருக்குக் கடவுள் தோன்றினார். அவர் மகிழ்ந்தார். கடவுளிடம் தன் நீண்ட நாள் சந்தேகம் ஒன்றைக் கேட்டார். "உயிர்களை எல்லாம் மகிழ்ச்சியாக வாழத்தானே நீர் படைத்தீர்? ஆனால் பலருக்கும் நீர் ஏன் மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை?" என்றார். கடவுள் சொன்னார், "மக்கள் என்னிடம் கேட்பதைத்தானே நான் தர முடியும்". ஒரு நாள் என்னோடு இருந்து, மக்கள் என்னிடம் வைக்கும் விண்ணப்பங்களைப் பார் என்றாராம். பாமரர் ஒத்துக்கொண்டு கடவுளோடு இருந்தார். மக்கள் வரிசையாக வந்தார்கள். ஒருவர் பணம் கேட்டார், ஒருவர் வேலை கேட்டார், ஒருவர் பதவி கேட்டார், ஒருவர் நகை கேட்டார். சிலர் தேர்வில் வெற்றி வேண்டி விண்ணப்பம் செய்தனர். பலர் பக்கத்து வீட்டுக்காரர் மீது குற்றம் சுமத்தினார்கள். கணவர்கள் மனைவி மீது குற்றம் சுமத்தினார்கள். கணவனின் கொடுமை தீர வேண்டும் என்று மனைவியர் சொன்னார்கள். இளம் பெண்கள் திருமணம் ஆக வேண்டும் என்று விண்ணப்பம் செய்தனர். முதலாளி அழியமாட்டாரா என்று தொழிலாளி கேட்டார், தொழிலாளி பணியமாட்டாரா? என்று கேட்டார் முதலாளி. உற்று கவனித்துக் கொண்டிருந்த பாமரரிடம் கடவுள் கூறினார், "நான் தந்த நல்ல வாழ்வை நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் செலவிட வேண்டும் என்று யாரும் கேட்கவில்லையே". பாமரர் தெளிவடைந்து, கடவுள் தந்த நல்லவாழ்வை நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் செலவிட அருளை, ஆற்றலை கடவுளிடம் கேட்காமல் தேவையற்றதைத் தேடி கடவுளின் திட்டத்தையும், வார்த்தையையும் மீறி வாழ்வில் வீழ்ச்சியடைந்து மகிழ்ச்சியிழந்து போகிறது மனுக்குலம் என உணர்ந்தார். கடவுள் உருவற்று வெறுமையாக இருள் பரவியிருந்த மண்ணுலகில் அனைத்தையும் உருவாக்கினார். பின் அனைத்தையும் நோக்கினார். "அவை, மிகவும் நன்றாய் இருந்தன" (தொ.நூ. 1:31). என்பதைக் கண்டு மகிழ்ந்தார். ஆனால் மனிதனோ, இறைவனது கட்டளைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த போது படைப்பனைத்தும் வீழ்ச்சியையும், துன்பத்தையும் கண்டது, மனிதனும் மகிழ்ச்சியை இழந்தான். முன்போல மண்ணுலகை கடவுள் உற்று நோக்கிய போது "இதோ அது சீர்கெட்டுப் போயிருந்தது" (தொ.நூ. 6:12) எனக் கண்டார். "எனவே இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன்" (6:7) எனத் துயரப்பட்டார். படைப்பின் "மணி மகுடமாகிய மனிதன்", இறைவன் படைத்த படைப்பின் நோக்கத்தை மறந்த மனிதன்,

நோக்கத்தை மீறி தீயவைகளுக்கு அடிமையானான். அதன் விளைவாக வீழ்ச்சியையும் கண்டான். இன்று வீழ்ச்சிக்கு வித்திட்ட தீயவைகளைக் குறித்து தியானிப்பது நன்மையைத் தரும்.

## *1. தீயச் சிந்தனையால் ஏற்படும் வீழ்ச்சி :*

ரிச்சர்ட் சிபெஸ் என்பவர் "நினைவுகள் தான் செயல்களின் வித்து" என்கிறார். சிந்தனைகள் சொற்களைப் பிறப்பிக்கிறது. சொற்கள் செயல்களைப் பிறப்பிக்கிறது. மட்டுமல்ல, சிந்தனை தான் "நல்லதுக்கும்", "தீயதுக்கும்" வேர். தூய பவுலார் உரோ. 11:16-ல் "வேர் அர்ப்பணிக்கப்பட்டால் / பரிசுத்தமாயிருந்தால் அதன் கிளைகளும் அர்ப்பணிக்கப்பட்டவையாகும்/பரிசுத்தமாயிருக்கும்" என்கிறார். நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களின் இருதயத்தின் சிந்தனைகளெல்லாம் தீய சிந்தனைகளாகவே இருந்தன. தொ.நூ. 6:5-ல் "மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இருதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார்". (Every inclination of the thoughts of his heart was only evil all the time). நாள் முழுவதும் தீமையை உருவாக்கும் தீய சிந்தனைகளாக இருந்தது. இந்தத் தீயச் சிந்தனையே மண்ணுலகு சீர்கெட்டுப் போகக் காரணமாயிற்று. அதாவது வீழ்ச்சியை ஏற்படுத்தியது. உண்மையாகவே, மனிதனுடைய இதயம் அவ்வளவு தீய சிந்தனைகளால் மோசமாயிருந்ததால், மகிபனுடைய இதயம் அவ்வளவு விசனப்பட்டது (6:6) என்றும் தெளிவாகிறது.

மேலும், சமாரிய அரசன் ஆகாபின் மனைவி ஈசபேல் ஏழை மனிதர் நாபோத்தின் உரிமைச் சொத்தை அபகரித்துக் கொள்ளும்படியான தீயச் சிந்தனையுடன் (1 அரசர்கள் 21:25) தனது கணவனைத் தூண்டிவிட்டாள். இதன் வழியாக ஆகாபின் தலைமுறையினர் பெரும் வீழ்ச்சியினை சந்தித்தனர். திருத்தூதர் பவுல் தன்னைக் குறித்து ஒளிவு மறைவின்றி குறிப்பிடும் போது "நான் செய்வது என்னவென்று எனக்கே தெரிவதில்லை. எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்" (உரோ. 7:15) காரணம் என்னுள் குடிகொண்டிருக்கும் பாவமே (7:17) என்கிறார். அதாவது உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் பாவத்தாலான தீயச் சிந்தனை தீமைக்கு வழி வகை செய்கிறது. கடவுள் மனுக்குலம் தூய வாழ்வு வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு படைத்ததை, உணர்ந்து பாவத்தால் வடிவம் பெறும் தீயச் சிந்தனைகளை விட்டுவிட வேண்டும். John Stott (ஜாண் ஸ்டாட்) என்பவர் "தூய வாழ்வின் இரகசியம், தூய சிந்தனை" என்கிறார். ஆகவே வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படும் வீழ்ச்சிக்குக் காரணம் தீயச் சிந்தனைகள் தாம் என்பதை உணர்ந்து தீயச் சிந்தனைகளை விட்டுவிட முயற்சி செய்வோம்.

## *2. தீய வழியில் ஏற்படும் வீழ்ச்சி :*

கடவுளின் ஆளுகையில் இருந்த மானிடர் தீயவனின் ஆளுகைக்கு மாறிவிட்டபடியால் தீய வழியில் நடந்து வந்தனர்.

இவ்வுண்மையை ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிவேடக்காரரிடம் உரையாடும் போது "சாத்தானே உங்களுக்கு தந்தை, உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம்" (யோவா 8:44) என உணர்த்துகிறார். அப்படியே நோவா காலத்து மக்கள் தீயவனின் ஆலோசனைபடி தீயவழி நடந்ததை கடவுள் கண்டார். தொ.நூ. 6:12-ல் "கடவுள் மண்ணுலகை உற்று நோக்கினார் இதோ! அது சீர்கெட்டுப் போயிற்று, மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடந்து வந்தனர்" எனத் துயரப்பட்டார். ஒருவர் மட்டுமல்ல அனைவரும் தீய வழியில் நடந்தனர். (all the people on earth had corrupted their ways). இவர்களது தீய வழியே வீழ்ச்சியை ஏற்படுத்தியது, மண்ணுலகு சீர்கெட்டது.

தன் சுய விருப்பத்திற்கும், சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்து தூய வழியாகிய கடவுளின் வழியை நிராகரித்து சுயதிட்டங்களை வகுத்து தீயவழிச் சென்ற நெபாற்றின் மகன் எரொபவாமின் வாழ்வு ஒரு பாடமாக அமைந்துள்ளது. 1 அரசர்கள் 13:33, 34-ல் 'எரொபவாம் தன் தீய வழியை விட்டு விலகாமல் சாதாரண மக்களைத் தொழுகை மேட்டுக் குருக்களாக அமர்த்தினான்...' இச்செயல் எரொபவாமின் வீடு பாவத்திற்கு உள்ளாவதற்கும் மண்ணிலிருந்து அழிந்து போவதற்கும் காரணமாயிற்று. கடவுள் தன்னை வடநாடான இஸ்ரவேலின் அரசனாக தெரிவு செய்த பின்னணியத்தையும் திட்டத்தையும் மீறி தீய வழியால் சந்தித்த விபரீத முடிவு மிக வேதனையானதாகும். மேலும் லூக். 15-ல் இளைய மகன் பிற்போக்குத்தனமான வாழ்வு வாழ்ந்தவன். நண்பர்களால் வஞ்சிக்கப்பட்டவன். தான் தெரிந்தெடுக்கும் வழி தீய வழி என்பதை உணராமல், அவனுக்குரிய பங்கு அனைத்தையும் அப்பாவிடத்திலிருந்து திரட்டிக்கொண்டு தொலை நாட்டில் பயணித்து (15:13) தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் இழந்து ஆதரவின்றி, ஆகாரமின்றி அலைந்து திரிந்த வேளையில் அதாவது வீழ்ச்சியைக் கண்டபோது தான் பயணித்து வரும் வழியானது தீய வழி என்பதை உணர்ந்தான். இறைமக்களாகிய நாம் தீய வழியிலிருந்து திரும்பினால் கடவுள் அருளும் நலமானவை வாழ்வைப் பெற்றுக்கொள்ள இயலும். தீய வழியிலிருந்து திரும்பாமல் வாழ்வோமாயின் கடவுள் நம் வாழ்வைச் சிதறடிக்கப்பண்ணுவார். எரே. 15:7-ல் "நாட்டின் வாயில்களில் நான் அவர்களை முறத்தால் தூற்றி சிதறடித்தேன், அவர்களைத் தனியாக தவிக்கவிட்டேன், என் மக்களை அழித்துவிட்டேன். ஏனெனில் அவர்கள் தங்கள் தீயவழியிலிருந்து திரும்பவில்லை" என்று யூதாவுக்கும் எருசலேமுக்கும் எரேமியா வழியாக குறிப்பிடப்பட்ட வார்த்தையை நாமும் நினைவில் கொள்ளுவோம்.

## *3. தீயச் செயலால் ஏற்படும் வீழ்ச்சி :*

தொ.நூ. 6:11-ல் படிக்கும் போது, "கடவுள் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது. பூவுலகு வன்முறையால் நிறைந்திருந்தது" (full of violence) என அறிகிறோம். ஆகவே கடவுள் நோவாவிடம் எமது

முன்னிலையிலிருந்து மனிதர் எல்லோரையும் ஒழித்துவிடப் போகிறேன். ஏனெனில், அவர்களால் மண்ணுலகில் வன்முறை நிறைந்திருக்கின்றது (6:13) என மிகவும் வருத்தத்தோடு கூறுகிறார். நோவாவின் நாட்களில் வாழ்ந்த மானிடர் வன்முறை ஒழுக்கக்கேடு போன்ற தீயச்செயல்களுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால் "தீச்செயல் அனைத்தும் பாவமாகும்" (யோவா 5:17) என்பதை உணராதிருந்தனர். அவர்களது தீயச்செயலாகிய வன்முறையில் வீழ்ச்சி கண்டனர். மண்ணுலகு சீர்கெட்டுப் போனது.

இஸ்ரயேலின் அரசனாகிய சவுல், "சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார். தாவீதோ பதினாயிரம் பேரைக் கொன்றார்" (1 சாமு 18:7) என்ற பாடலைக் கேட்டு தாவீது மீது சினமுற்றார். அவ்வேளையில் தீயச் ஆவி சவுலை ஆட்கொண்டது (18:10), மட்டுமல்ல, "நான் தாவீதைச் சுவரோடு சேர்த்துக் குத்துவேன்" (18:11) என்ற தீயச் சிந்தனை சவுலின் இருதயத்தில் உருவானது. இந்தத் தீயச் சிந்தனை சவுலை வன்முறையாகிய தீயச் செயலுக்குத் தூண்டியது. அதாவது "சவுல் தம் ஈட்டியைத் தாவீதின் மேல் எறிந்தார்" (18:11). கடவுள் தன்னை அரசனாக ஏற்படுத்திய திட்டத்தை மறந்து கடவுளுடைய கட்டளைக்கு மீறி தீயச் செயல் செய்ய முன்வந்ததால் சவுலின் வம்ச ஆட்சியே முடிந்து போயிற்று. சவுல் வீழ்ச்சியைக் கண்டார். போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும், மசோதாக்களும், தகவல் உரிமை சட்டங்களும் வந்தாலும் நான் செய்வதைத்தான், செய்து கொண்டிருப்பேன் என்ற மனநிலையோடு வன்முறை, அடக்கமுறை, அத்துமீறல், ஊழல், கொலை, கொள்ளை, அநீதி, அடிமைத்தன ஊக்குவிப்பு போன்ற தீயச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்நாட்களில் "இதோ ஆண்டவர்... இறைப்பற்றில்லாதவர்கள் செய்த அனைத்துத் தீயச் செயல்களுக்காகவும்... தன்டனை வழங்குவார்" (யூதா 1:15) என்னும் வார்த்தையைக் கருத்தில் கொண்டு தீயச்செயல்கள் செய்யாமல் நற்செயல் புரிந்து வாழ்வோம்.

"நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னை விட்டு அகன்று போங்கள்" (மத். 7:23) எனத் தீயோரை வெறுக்கும் ஆண்டவர் முன் தீயவைகளை விட்டுவிலகி வாழ முயற்சிப்போம். மனுக்குலத்தை, தீயச் சிந்தனை, தீய வழிக்கும், தீயச் செயலுக்கும் நேராக வழி நடத்திச் செல்லும் என்பதை உணர்வோம், கடவுளால் நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை மீறி இறையச்சமின்றி வாழ்ந்தால் வீழ்ச்சி உறுதியே. ஆகவே இறைவனோடு இணைந்து இறையுறவில் ஒன்றித்து வாழுதல் சிறப்பிற்குரியது என்பதைப் புரிந்துகொண்டு முன்னேறுவோம்.

**அருள்திரு. G.S. ஆஸ்வின் ஜெய்சிங்**

26-02-2017

உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு

## தவக்காலம் : ஒரு மாற்றுருவாக்க காலம்

**LENT : A TIME OF TRANSFORMATION**

எசா. 44:21-28 உரோ. 11:13-26
திபா. 6 யோவா. 2:1-11

**"...அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்".** யோவா. 2:5

துலக்கப்படாத பாத்திரமும், புதுப்பிக்கப்படாத கிறிஸ்தவ (மனித) வாழ்வும் கறைபடியும். புறம்பான மாற்றத்தை இச்சொல் குறிப்பிடாது உள்ளத்தின் மாற்றத்தைச் சுட்டுகிறது. பாம்பு தன் மேல் தோலை மாற்றி கவர்ச்சியாக மாறினாலும், விஷத்தன்மையில் மாற்றமிராது. மானிடர் தன் உடலை மட்டுமன்று, எண்ணங்களையும், செல்பாடுகளையும் கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் போதனையின் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும் (Christ Like Way). இவைகள் நடைபெறுவது, நமது செயல்களினால் அல்ல, இறையருளினாலே (தீத்து. 3:5) அதற்கு இந்த அருள்காலம் துணை நிற்கிறது.

### *1. மாற்றுருவாக்கத்திற்கு வழி : சுய உணர்வு*

நீண்ட தூரம் ஓடிய வாகனம் இயற்கையாகவே உராய்வும், பழுதும் உண்டாகும். தொடர்ந்து ஓடவேண்டுமென்றால் எண்ணெய் வேண்டும் (Lubrication). இப்படி செய்யாவிட்டால், திடீரென ஓடாது. வாழ்வும் இப்படியே. எசாயா கூறுகிறார் (44:22) என்னிடத்தில் திரும்பு. மனித வாழ்வு பாவ வாழ்வோடு இணைந்ததே. சேறு இருக்கும்வரை குமிழி உண்டு. அதுபோல உடல் உள்ளவரை உலக ஈர்ப்பு இணைந்திருக்கும் என்பது மாற்ற முடியாத உண்மை. பாவத்தை உணர்தல், தீமை செய்யும் சிந்தையிலிருந்து நம் எண்ணங்களை மாற்றலாம். (The whole change of attitude is the salvation). ஆக அனைத்து உள்ளத்தின் எண்ண அலைகளை அலையவிடாதே. இதைத்தான் St. அகஸ்டின் "Un examined life is not worth living. சோதிக்கப்படா வாழ்வு வாழத்தகுந்ததல்ல". இராஜாராம் மோகன் ராய் 'சதியை' அகற்ற முதன் முதலில் குரல் கொடுத்தவர். இது எப்படியெனில், தனது சகோதரன் இறந்தான். இதனால் தன் சகோதரன் மனைவியைக் கட்டி, தீயில் போட இழுத்து வந்தனர். அவள் பயத்துடன் என்னை விட்டுவிடுங்கள் என கத்தினாள். இதனைப் பார்த்த இராஜாராம், அண்ணியை விட்டுவிடுங்கள் என்றார். உடனே மக்கள் இவரைப் பார்த்து நகைத்து ஓகோ, "நீ இவளை விவாகம் செய்ய எத்தனிக்கிறாயோ?" என்ற வார்த்தை இவரை உணர்ச்சி வலைக்குள் அகப்படுத்தியது. பின் சதியை மாற்ற போராடினார். வெற்றியும் கண்டார். உண்மையான உள்ள மாற்றம் தீமையை விட்டு நன்மை செய்யும் எல்லைக்குள் நம்மை கொண்டுவிடுகிறது.

### *2. மாற்றுருவாக்கம் புதிய உண்மைகளைக் கற்கும் வழி :*

கிறிஸ்துவின் நெருங்கிய மாணவன் பேதுரு எதற்கும் முந்தி நிற்பார். கடினம் என்றால் பின் வாங்கிவிடுவார். மீட்பு சிலுவைவழி என்பதைப்

புரியவில்லை, இதனால் உமக்கு இது நேரிடக்கூடாது என்றார் (மத். 16:22) சிலுவை குறித்த வேதனை இயேசுவை இரத்த வியர்வை சிந்தவைத்த போது இவர் தூங்கிக் கொண்டிருந்தார் (மத். 26:40). இயேசுவைப் பிடித்த போது ஓடி ஒளித்தார் (மத். 6:56). சிலுவையின் உபத்திரவம் இயேசுவைத் தொட்டபோது தூரத்தில் நின்றார் (மத். 26:69). புற இனமக்களை இறைமக்கள் எனப் புரியவில்லை (தி.ப. 10). ஆனால் உள்ளான மாற்றுருவாக்கம் துணிந்து நிற்க தூண்டியது. அவரது மாற்றுருவாக்கம் துணிந்து தீமையை எதிர்த்த போது யூதத் தூண்கள் ஆட்டம் கண்டன. உண்மை நிலையை கற்றபோது 'எந்த மனிதனையும் தீட்டுள்ளவன்' என்று சொல்லக் கூடாது என கற்றுக் கொண்டார். அவருடைய எண்ண அலைகளின் வெளிச்சம் புதுமைகளைக் கற்க உதவியது. இந்த மாற்றுருவாக்கம் ஒருநாள் நிகழ்வு அன்று. ஒவ்வொரு நாளும் உள்ளான மனிதனை புதுமையாக்கும் நிகழ்ச்சியாகும். இது ஒரு Life long experience இதனை இயேசு கிறிஸ்து முடிவு பரியந்தம் நிலைத்திருத்தல் என்கிறார்.

### 3. மாற்றுருவாக்கம் உலகை மாற்றும் ஆற்றல் நிறைந்தது:

இயேசு கிறிஸ்து தூயவர் என்று தம்மை வேறுபடுத்தவில்லை. பாவிகள் என்று நம்மை ஒதுக்கவும் இல்லை. தூயவர், பாவிகளோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஒதுங்கி வாழ்வது தூய வாழ்வின் பொருளல்ல. விடுதலை பெற்ற லேகியோனிடம், தெக்கபோலிக்குப்போய் நற்செய்தி சொல்லப் பணிக்கிறார். சமாரியா பெண்மணி தான் பெற்ற மாற்றத்தை சமாரியருக்கு அறிவிக்கிறார். கண்பார்வை பெற்ற மனிதனிடம் தமக்குப் பின்வர அழைக்கிறார் (மாற்கு 10:52) ஆகவே எல்லா மனிதரும், எப்படிப்பட்ட வேலையிலிருப்போருக்கும் ஊழியம் வாழ்வின் ஒரு பகுதியாகும். ஒருவருடைய மாற்றுருவாக்கம், மற்றவரையும் மாற்ற உதவுகிறது. சகேயுவைக் கண்ட கடவுள் அவர் வீட்டாரையும் கண்டார். சிறைச்சாலை மனிதர் இயேசுவை ஏற்றவுடன், அவர் வீட்டையும் இரட்சித்தார். அதாவது ஒலிவ மரத்தில் காட்டொலிவமரம் ஒட்டப்படும்போது அது நல்ல மரமாகிறது. மீட்பு பெற்ற சமூகம் மற்ற மக்களுக்கு புளித்தமாவாகிறது. மாற்றுருவாக்கப்பட்ட மனிதனுக்கு நிறம், இனம், மொழி, கலாச்சாரம் குறுக்கே நின்று தடைசெய்ய இயலாது அனைவரும் இறைமக்கள் என்று பற்றுறுதியாளர் நிறைந்த சமூகமாகும். (Community of belivers).

இந்த அருட்காலங்கள் நம்மை பின்னோக்கிப் பார்த்து, முன்னோக்கி நடக்கத் தூண்டும் சமயம். மனிதனை இலக்கில்லாமல் வாழ விடக்கூடாத சமயம். நல்ல எண்ணம் நம்மை மட்டுமன்று, சமூக மாற்றத்தையும் உருவாக்கும். இங்கு தீங்கு செய்வாரில்லாத மாற்றுருவாக்கத்தின் சமூகமாகத் திகழும். இப்பணிவிடையில் மாற்றுருவாக்கத்தின் அடையாளத்தோடு ஒன்றிணைந்து செயல்படுவோம்.

**அருள்திரு. V. டேவிட்**

01-03-2017

சாம்பல் புதன்

# தவக்காலம் : மனம்மாற அழைப்பு

**LENT : CALL TO REPENTANCE**

| | |
|---|---|
| எசா. 1:16-20 | 2 கொரி. 7:8-16 |
| தி.பா. 51 | மாற். 1:12-15 |

**"காலம் நிறைவேறிவிட்டது இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்." மாற். 1:15**

இந்நாள் சாம்பல் புதன் கிழமை. தவக்காலத்தின் முதல்நாள். இறைவேண்டுதலோடு ஆண்டவரைத் தேடவும், நம்மை ஒழுங்குப்படுத்தவும் தரப்பட்டிருக்கும் காலம். தீய இயல்புகள் உதிர்ந்து நற்பண்புகள் துளிர் விடுகின்ற காலம். ஆன்மீக வாழ்வின் வசந்த காலம்.

கிரேக்கத்தில் 'ஸ்போதோஸ்' என்ற சொல்லும் எபிரேயத்தில் 'எபேர்' என்ற சொல்லும் சாம்பல் என்று பொருள். சாம்பல் புதன் 8-ம்நூற்றாண்டு முதல் முறைப்படுத்தப்பட்டு பின்படுத்தப்பட்டு வருகிறது. "மண்ணிலிருந்து தோன்றிய மானுடர் மண்ணிலே புதைந்து சாம்பலாகி விடுவார்கள்" என்ற உண்மை சாம்பல் புதன்கிழமையில் உணர்த்தப்படுகிறது.

ஆகவே நமக்குத் தரப்பட்டிருக்கும் வாழ்வை அழகு படுத்துவதும், சரிப்படுத்துவதும் அவசியம். இவ்வாழ்க்கை ஒரு பூவைப் போல, புல்லை போல, நீர் குமிழியைப் போல, புகையைப் போல, போல சீக்கிரமாய் கடந்து போய்விடும்.

அமெரிக்காவில் ப்ளோரிடா என்ற பட்டணத்தில் அழகிய பூந்தோட்டம் ஒன்று இருந்தது. அதில் அழகான செடிகளும் மலர்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அதில் காய்ந்து சருகுபோல் காட்சியளித்த ஒரு செடியின்மேல் "உயிர்த்தெழுதல் செடி" என்று எழுதி வைக்கப்பட்டிருந்தது. அதைக்கண்ட ஒருவர் உயிர்பெறும் தன்மையைச் சோதிப்பதற்காக வாங்கிச் சென்று அதன்மேல் தண்ணீர் தெளித்ததால் காய்ந்து சருகுபோல் காட்சியளித்த செடி உடனே உயிர் பெற்று அழகிய செடியாகக் காட்சியளித்தது. காய்ந்து சருகு போல் காட்சி அளிக்கும் நம்வாழ்வு துளிர்விடும் வாழ்வாக விளங்க இறைவன் நம்மை அழைக்கிறார். அது எப்படி? சிந்திப்போம்.

***1. மாசினை அகற்றுங்கள் :*** எசாயா 1:16

உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னின்று அகற்றுங்கள்; தீமை செய்தலை விட்டொழியுங்கள்.

கண்காட்சி ஒன்று நடைபெற்றது. ஒரு இடத்தில் இதற்கு பல்லில் விஷம் என்று எழுதப்பட்டிருந்தது. அருகில் சென்று பார்த்தால் ஒரு பாம்பு

இருந்தது. இன்னொரு இடத்தில் இதற்கு கொடுக்கில் விஷம் என்று எழுதப்பட்டிருந்தது. உள்ளே பார்த்தால் தேள் ஒன்று இருந்தது. இன்னொன்றில் இதற்கு தோலில் விஷம், நாக்கில் விஷம் என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தது. இறுதியாக ஒரு இடத்தில் இதற்கு உடம்பெல்லாம் விஷம் என்று எழுதப்பட்டிருந்தது. உள்ளே பார்த்தால் ஒரு மனிதனின் உருவம் வைக்கப்பட்டிருந்தது. ஆம் மனிதன் தீயவன்.

ஆண்டவர் சுத்தக் கண்ணர். தீயவற்றிற்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லை. தீய உள்ளத்தோடு இறைவன் முன்நின்று கைகளை விரித்தாலும், செபம் செய்தாலும் அது வெறுத்து தள்ளப்படுகிறது. தூய மனத்தோடு இறைவனை தேடுவது இன்பம் தரும். தீயவை துன்பம் தரும். அதன் முடிவு அழிவு.

இ.ச. 30:19-ல் நீயும் உன் வழிதோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள் என்றார் இறைவன். சகேயு தீயவை உணர்ந்த போது "இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே" என்றார் இயேசு. (லூக். 19:9) உடல்நலமற்றவர் நலமடைந்த போது இயேசு அவரிடம் "இதோ பாரும் நீர் நலமடைந்துள்ளீர்; இதை விடக்கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதீர்" என்றார். (யோவா 5:14)

அனிச்சம் என்ற ஒருவகை மலர் உண்டு. அம்மலரைக் கையில் எடுத்து வாசனையைப் பிடிக்க முயலும் போது, மூக்கிலிருந்து விடும் வெப்பக் காற்றால் அம்மலர் வாடிவிடும். மனிதன் அவ்வளவுக்கு தீயவனா? தீய நோக்கம் பாவமே.

நமக்கு தரப்பட்டிருக்கும் கொஞ்ச காலத்தில் நன்மை செய்து, நீதியை நிலைநாட்டி, பிறருக்குக் கொடுத்து தீயவை திருத்தி வாழ்வோம். எதை விதைக்கிறோமோ அதைத் தான் அறுவடை செய்வோம்.

***2. மாற்றுருவாக்கம் பெறுங்கள் :*** 2 கொரி. 7:9

உங்கள் மனவருத்தம் மனம்மாறச் செய்தது என்பதற்காகவே மகிழ்ச்சியடைகிறேன்.

சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு உரை நிகழ்த்துவதற்காக ஆயர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். 'மனம்மாறி புதிய மனிதர்களாய் வாழுதல்' என்ற தலைப்பில் அந்த ஆயர் தன்னுடைய உரையை தயாரித்திருந்தார். இருப்பினும் உரையை எப்படி ஆரம்பிப்பது என்று அவருக்குள் குழப்பமாக இருந்தது. இந்த குழப்பத்தோடு உயரமாக இருந்த மேடையை நோக்கி நடக்கி ஆரம்பித்தார். அவரது சிந்தனை முழுவதும் உரையில் இருந்ததால் படியில் தடுமாறி மேடையில் முகம் குப்புற விழுந்தார். அங்கிருந்த கைதிகளில் சிலர் 'கொல்' என்று சிரித்தனர். ஆயர் அவமானத்தால் கூனி குறுகிப்போய் விட்டார். இருந்தாலும்

மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மீண்டும் எழுந்து தன்னுடைய உரையை இவ்வாறு ஆரம்பித்தார். அன்புக்குரிய சகோதரர்களே, நான் சொல்ல வந்த செய்தி இதுதான். சந்தர்ப்ப வசத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ தடுமாறி கீழே விழுந்து ஒரு மனிதன் அங்கேயே விழுந்து கிடக்க வேண்டிய அவசியமில்லை. அல்லது தான் வீழ்ந்ததைப் பற்றி எண்ணி, எண்ணி எதிர்கால வாழ்வை பாழாக்க வேண்டியதுமில்லை. மாறாக, மீண்டும் எழுந்து தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தைத் தொடர முடியும். தொடர வேண்டும்.

மனித இயல்பு பலவீனத்தின் காரணமாக தடுமாறி வீழ்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. நீதிமான் ஒருநாளைக்கு ஏழுமுறை வீழ்வதாக விவிலியம் கூறுகிறது. (நீதிமொ. 24:16) தான் செய்ய விரும்புவதைச் செய்ய முடியாமலும், செய்ய விரும்பாததையே செய்வதாகவும் அதற்கு காரணம் தனக்குள் இருக்கும் பாவ இயல்பு என்றும் புனித பவுல் கூறுகிறார். (உரோ. 7:15) இருப்பினும் மனம்மாறி திருந்தி வருவதே இறைவனது விருப்பம்.

தன்னுடைய பாவத்திற்காக மனம்வருந்தி அதை விட்டுவிட தயாராக இருந்தவர் தாவீது அரசர். நாத்தான் இறைவாக்கினர் தன்னுடைய பாவத்தைச் சுட்டிக்காட்டியவுடன் கொஞ்சமும் அகந்தையின்றி “இறைவா, என் குற்றங்களை நான் உணர்கின்றேன். உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்” என்று அறிக்கையிடுகின்றார். (தி.பா. 51:3) ஆனால் பாவம் செய்த பின்னும் அதற்காக மனம்மாறாமல் பாவத்தில் நிலைத்திருந்து அழிவை தேடி கொண்டவள் யேசபேல் அரசி. நாபோத் என்பவரின் திராட்சைத் தோட்டத்தை அபகரிக்க நாபோத்தை சூழ்ச்சியாகக் கொலை செய்த யேசபேல் தண்டிக்கப்பட்டாள். (I அர. 21:1-26) நாம் யாரைப்போல இருக்கிறோம். மனம் மாறி புதிய மனிதனை தரித்து வாழ்வோம்.

### *3. மறைவாக்கினை நம்புங்கள் :* மாற். 1:15

“காலம் நிறைவேறி விட்டது; இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார்.

மனம் மாறுங்கள் அதோடு நின்றுவிடாமல் நற்செய்தியை நம்புங்கள் என்று இயேசு கிறிஸ்து அழைப்பு விடுக்கிறார். நற்செய்தியை நம்புவது என்பது இயேசு தரும் புதிய வாழ்வைத் தழுவிக்கொள்வதே. புதிய வாழ்வைத் தழுவிக்கொள்ள மறுக்கும் எந்த மனிதனின் வாழ்வும் அர்த்தமற்றதும் பயனற்றதுமே.

முள்மரத்தை நாம் பார்த்திருப்போம். இந்த முள்மரத்தால் யாருக்கும் அதிக பலனில்லை. அதே வேளையில் யாராவது அருகில் சென்றார்கள் என்றால் அவர்களைத் தன் முள்ளால் குத்திக் கீறி துன்பத்தைத் தரவல்லது. சில மனிதர்களும் இப்படியே, கடவுளின்

வார்த்தை மீது எந்த ஆர்வமும் காட்டுவதில்லை. எந்த பலனையும் தருவதுமில்லை. பிறரை குத்திக் கொண்டிருப்பார்கள், குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் நினிவே மக்கள், கடவுளுடைய வார்த்தை அறிவிக்கப்பட்ட போது மனிதரும் விலங்குகளும் நோன்பிலிருந்து சாக்கு உடை உடுத்தி கடவுளிடம் மன்றாடினர். அழிவிலிருந்து காக்கப்பட்டனர்.

சகாரா பாலைவனத்தில் ஆராய்ச்சி செய்யும்படி சென்ற ஆராய்ச்சியாளர்களின் கூட்டம் பல எலும்புக் கூடுகளைக் கண்டது. ஒவ்வொரு எலும்புக்கூடும் தன் கைகளில் பல விலைமதிப்புள்ள தங்கக் கட்டிகளைப் பற்றிக் கொண்டு பாலைவனத்தில் கிடந்தது.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தங்கக் கட்டிகளை தேடிச் சென்று சேர்ப்பதில் குறியாக இருந்து மீள முடியாமல் வனாந்தரத்தில் தண்ணீரற்றுத் தங்கள் உயிர்களை விட்டவர்கள். சேர்க்க வேண்டும் என்ற ஆசை ஜீவனைக் குறித்துக் கவலையற்று அதை அனுபவிக்க முடியாமல் போனது.

உலக செல்வத்திலும், பணத்திலும் அதிக ஈடுபாடு காட்டுவோர் இறைவார்த்தையை தங்களில் பலன் தர அனுமதிப்பது இல்லை. அதற்கு மாறாக இவ்வுலகில் நிலையற்ற தன்மையை உணர்ந்து, உலக இன்பங்களில் உள்ள ஈடுபாட்டைக் குறைத்து கொண்டோமென்றால் இறைவார்த்தை நம்மில் பலன்தரும்.

நல்ல வாழ்க்கை பேரழகானது. நல்லவர்களின் உள்ளமும் புனிதமானது. களங்கமற்ற வார்த்தைகள் தேவாமிர்தத் துளிகள் போன்றவை. மாடமாளிகையா? மண்குடிசையா? என்பதல்ல, நல்ல மனிதர்களாக வாழுகிறோமா என்பது தான் முக்கியம்.

**அருள்திரு. S. சுஜின் பிரிட்டோ**

05-03-2017

தவக்கால முதலாம் ஞாயிறு

## தூய்மையாக்கும் கிறிஸ்து

**THE CLEANSING CHRIST**

செக். 13:1-9 1 யோவா. 5:1-10
திபா. 130 மாற். 1:40-45

**"அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும்". 1 யோவா.1:17**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என விவிலியம் குறிப்பிடுகிறது. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பதற்கு சிலுவையில் அறையப்பட்ட இயேசு எனப் பொருள்படும். இயேசுவுக்கு மரணத்தீர்ப்பு வழங்கப்பட்ட போது முள்முடி ஒன்றை தலையில் வைத்து வாரினால் அடித்தனர். சிலுவை மரத்தை முதுகில் ஏற்றி எருசலேம் தெருவெல்லாம் இழுத்து சென்றனர். கல்வாரி மலையில் இயேசுவை சிலுவை மரத்தில் வைத்து ஆணிகளால் அடித்த போது அவரது உடல் முழுவதும் இரத்தம் வடிந்து கொண்டேயிருந்தது. இந்த இயேசுவின் இரத்தம் அனைத்து பாவங்களிலிருந்தும் மனுக்குலத்தை தூய்மையாக்கும் என யோவான் திருமுகத்தின் ஆக்கியோன் குறிப்பிடுகிறார்.

இஸ்ரயேல் மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விலங்குகளை பலியிடுவதின் வழியாக தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெறலாம் என நம்பினர். ஆனால் குற்றங்கள் குறையாததால் கடவுள் இயேசுவை குற்ற நிவாரணப்பலியாக மாற்றி மனிதரை பாவத்திலிருந்து விடுவிக்கிறார். திருச்சபையின் தொடக்கக் காலத்தில் அறிவு நெறிக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்தவர்கள் தங்களுடைய ஞானத்தினால் இரட்சிப்பை அடைய முடியும் எனக்கூறி சாமானிய மக்களை தாழ்வாக கருதினர். ஆனால் இக்கடிதத்தில் ஆக்கியோன் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலின் வழியாகத் தான் மக்கள் மீட்பை அடைய முடியும் என அழுத்தம் திருத்தமாக கூறுகிறார்.

இவ்வாறு இரத்தம் சிந்துதல் வழியாக மனிதரை தூய்மையாக்கும் கிறிஸ்துவின் பண்புகளை தியானிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### *1. பரிந்து பேசுபவர் :*

"ஆயினும் ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் இருக்கிறார்" (1 யோவா. 2:1)

தங்களது வலுவின்மையால் பாவம் செய்யும் மனிதர்கள் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. ஏனெனில் பாவத்தில் விழுந்த மனுக்குலத்துக்காக பரிந்து பேச கிறிஸ்து இருக்கிறார். இதனை

எபி.7:25 - இல் ஆக்கியோன் கூறும் போது தம் வழியாய் கடவுளிடம் வருவோரை மீட்பதற்கும், அவர்களுக்காக பரிந்து பேசுவதற்கும் அவர் உயிர் வாழ்கிறார் என்கிறார். இந்த இயேசு மனிதர்களின் பாவத்துக்கு அவரே பரிகாரமாக மாறுகிறார். பரிந்து பேசுகிறவராகிய கிறிஸ்து இறுதி வருகையில் தீர்ப்பிடுகின்ற இறைவனிடம் இடைவெளியில்லாமல் மனிதனின் வலுவின்மையைக் குறித்தும், மீட்புக்கான தேவையைக் குறித்தும், பேசிக்கொண்டேயிருக்கிறார். இயேசு கிறிஸ்து மனிதனின் வலுவின்மையைக் குறித்தும், மீட்புக்கான தேவையைக் குறித்தும் பேசிக்கொண்டேயிருக்கிறார். இயேசு கிறிஸ்து மனிதனின் இரட்சிப்புக்காக இறைவனால் நியமிக்கப்பட்டவர். இவர் மனித பாவத்தினால் மனம் உடைந்து உதிரம் கொட்டும் நிலையிலும் மனிதருக்காக இறைவனிடம் பரிந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்.

## *2. பரிவு காட்டுபவர் :*

“இயேசு அவர் மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக என்றார்” (மாற். 1:41)

இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தும் போது அவரது இரக்கத்தின் உச்சகட்டம் வெளிப்பட்டது. இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை மீட்டெடுக்கும் நிகழ்வுகளிலெல்லாம் அவருடைய இரக்கமும் இணைத்தே கூறப்படுகிறது. இலாசருவை மரணக்குழியிலிருந்து எழுப்பி விட்ட இயேசு ஏன் கண்ணீர் சிந்த வேண்டும். காரணம் மனிதன் மரணத்திற்கென்று படைக்கப்படவில்லை, ஆனால் பாவம் மனிதனில் நுழைந்த போது அவன் மரணத்துக்குரியவனாக மாறிவிட்டான். இந்த கொடுமையை உணர்ந்த இயேசு மனதுருகி மரணக்குழியிலிருந்து விடுதலை வழங்குகிறார். (யோவா.11:18-45) . மாற்கு 1:40-45 இல் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தன்னை இறைவனின் கரங்களில் ஒப்படைத்த போது அவர் மிகவும் பரிவு கொண்டார். தொழுநோயாளியை இயேசு தொடுவது அவரது இரக்கத்துக்கு அடையாளமாக மாறுகிறது. இறைவனின் ஆற்றலும் இயேசுவின் தொடுதலும் தொழுநோயாளியை அடைந்த போது நோயின் அடையாளமே இல்லாத அளவிற்கு அவரது உடல் தூய்மையடைந்தது.

## *3. தூய்மையாக்குபவர் :*

“அந்நாளின் பாவத்தையும் தீட்டையும் நீக்கித் தூய்மையாக்கும் நீரூற்று தாவீதின் குடும்பத்தாருக்கெனவும், எருசலேமில் குடியிருப்போருக் கெனவும் தோன்றும்” (செக். 13:1)

பாவம் இறையுறவுக்கு முதல் எதிரி. பாவம் ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. ஒருசிலர் நாங்கள் பாவத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கூறினாலும் அனைவரும் குற்றம் புரிந்தவர்களே.தானி.9:3-14 இல்

தானியேல் நோன்பிருந்து இறைவனிடம் மன்றாடும் மன்றாட்டு இஸ்ரயேலின் பாவத்தை உணர்த்துகிறது. நாங்கள் பாவம் செய்தோம், வழிதவறி பொல்லாதவர்களாய் வாழ்ந்தோம், கட்டளைகளையும் நீதிநெறிகளையும் கைவிட்டோம், உமது குரலுக்கு கீழ்படியவில்லை, கடவுளுக்கு உகந்தவர்களாய் நடக்கவில்லை என்னும் வார்த்தைகள் இஸ்ரயேலின் பாவத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நிலையில் சகரியா 12:10-13:1 வரையுள்ள வசனங்களில் சிலுவையில் ஊடுருவிக்கொல்லப்பட்ட இயேசுவே மெசியா என்பதை அறிந்து கொள்ளும் போது இறைவன் இஸ்ரயேலரை தூய்மையாக்கும் நீரூற்றாக இருப்பார் என்று கூறுகிறார். இவ்வாறு தூய்மையாக்கப்பட்டவர்களைத்தான் தி.வெ. 3:10-இல் சோதனைக் காலத்தில் தப்புவிக்கப்பட்டவர்கள் என கூறுகிறது.

இன்று இவ்வுலகில் வாழும் மக்களின் பாவங்களிலிருந்து விடுதலையாக்கவும், தூய்மைப்படுத்தவும் கிறிஸ்துவினால் மாத்திரமே முடியும். தீவினைக்கு வேரான பாவத்தில் இருந்து நம்மை மீட்டு தூய்மைப்படுத்தும் இயேசுவின் கரங்களில் நம்மை ஒப்புக்கொடுத்து இந்த தவக்காலத்தை பொருளுடன் கொண்டாடுவோம்.

**அருள்திரு. S. கிறிஸ்டோபர் விஜயன்**

12-03-2017

தவக்கால இரண்டாம் ஞாயிறு

# மன்னிக்கும் கிறிஸ்து

**THE FORGIVING CHRIST**

தொ.நூ. 4:8-16 | உரோ. 5:6-11
திபா. 25 | மாற். 2:1-12

**"...மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன." மாற். 2:5**

மகாத்மா காந்தி தனது மனைவி கஸ்தூரிபாயுடன் தென்னாப்பிரிக்காவில் தங்கியிருந்தபோது இருவருக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டது. காரணம் காந்தி, தன்னைப் பார்க்க வந்த நண்பர்கள் பயன்படுத்திய கழிவறையை மனைவியிடம் தூய்மைப்படுத்தச் சொன்னார். அதற்கு அவர் மறுத்துவிட்டார். கோபம் கொண்ட காந்தி இரவு வேளை, குளிர்காலம் என்றும் பாராமல் மனைவியை வீட்டிற்கு வெளியே தள்ளி கதவை மூடிவிட்டார். வீட்டிற்குள்ளிருந்த காந்தியால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. உடனே கதவைத் திறந்து மனைவியை உள்ளே அழைத்து செய்த தவறுக்காக மனைவியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். அவரும் மன்னித்துவிட்டார். மன்னிப்பு இருக்கும் இடத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். புத்தரின் கூற்றுப்படி எல்லாவற்றையும் புரிந்துகொண்டோமானால் எல்லாவற்றையும் மன்னித்துவிட முடியும் என்றார். புனித பிரான்சிஸ் அசிசியார் தனது கடைசி காலத்தில் தன்னை சுமந்த கழுதையிடம் நான் உன்னை ஏதாகிலும் சூழலில் காயப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிடு என்றாராம். மன்னிப்புக் கேட்பதும் மன்னிப்பு வழங்குவதும் எல்லை கடந்த ஒன்று. மன்னிப்பு செயல்படும் இடத்தில்தான் மனிதனும் படைப்புகளும் வாழமுடியும். மன்னிப்பு மறுக்கப்படும் இடங்களில் வாழ்வுக்கான சூழல் பாதிக்கப்படுகிறது. கடந்த 2012 அக்டோபர் மாதம் அதிர்ச்சித் தகவல் உலக சுகாதார அமைப்பு 18 நாடுகளிவ் 89,000 மக்களிடம் நடத்திய ஆய்வு முடிவை அந்த வலைதளத்தில் வெளியிட்டிருந்தது. உலகிலேயே மன அழுத்த நோயால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியர்களே என்பதுதான் அந்தச் செய்தி. உலகளாவிய விதத்திலும் இந்நோய் அதிகமாக பரவிவருகிறது. இந்நோய் மனிதனை கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் ஆற்றல் கொண்டது. உடல் உறுப்புகளை செயல்பட விடாமல் முடக்கும் ஆற்றலும் உண்டு. மன அழுத்தத்தை உருவாக்கும் பல காரணங்களில் ஒன்றுதான் நான் பாவி என்ற தாழ்வு மனநிலை. இந்நிலை மனதிற்குள் அழுத்தத்தை or குற்ற உணர்வை அதிகரிக்கச் செய்து உறவுகளை குறித்து தனிமைப்படுத்தி முதிர்ச்சி நிலை அடைந்து தற்கொலை சாவில் கொண்டு போய் நிறுத்துகிறது. எனவே இந்நிலையிலிருப்போர் விடுதலை வாழ்வைப் பெற, இவர்களை மன்னிக்கவும், தாழ்வு நிலையிலிருந்து வெளியே

கொண்டு வரவும், ஏற்றுக்கொள்ளவும், நம்பிக்கையைக் கொடுக்கவும் ஆதரவாளர்கள் தேவை. மாற். 2:5-ல் இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாதமுற்றவரிடம் மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்ட என்றார். இந்த வார்த்தை முடங்கிக் கிடந்த மனிதனில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தியது. மன்னிக்கும் கிறிஸ்துவில் கற்றுக் கொள்ளும் உண்மை.

**1. மன்னித்து விடுதலை வழங்குகிறார் :** மத். 2:5, 11,12

திருமறை காட்டும் கடவுள் மன்னித்து விடுதலை வழங்கும் கடவுளாகவே வெளிப்படுகிறார். ப.ஏ-ல் தொ.நூ. 4:8-16. காயின் பொறாமையினால் உடன்பிறப்பு ஆபேலை கொலை செய்கிறான். திருமறை வரலாற்றில் முதல் கொலை. கொலையுண்ட ஆபேலின் இரத்தம் ஆண்டவரை நோக்கி முறையிட கடவுள் காயினை கண்டித்து தண்டனை வழங்குகிறார். (தொ.நூ. 4:11-14). கடவுள் வழங்கிய தண்டனையின் வீரியத்தை உணர்ந்த காயின் கடவுளிடம் உயிர்வாழ வாய்ப்பு கேட்டார். தொ.நூ. 9:6-ன் படி, ஒரு மனிதரின் இரத்தத்தை எவர் சிந்துகிறாரோ அவரது இரத்தம் வேறொரு மனிதரால் சிந்தப்படும். பழிக்குப்பழி, கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல் என்ற நிலை இருந்த காலம். முறைப்படி ஆபேலின் இரத்தத்திற்குப்பதில் காயின் இரத்தம் சிந்தப்பட வேண்டும். ஆனால் கடவுள் மனம்மாறி காயினை மன்னித்து விடுதலை வழங்கி பாதுகாப்பு அடையாளத்தைக் கொடுக்கிறார். (தொ.நூ. 4:15). மனிதன் பாவத்திற்குத் தண்டனை பெறுவது இறை விருப்பமல்ல. குற்றம் செய்தவனும் மனிதனே. அவனும் மனம்மாறி பாவத்திலிருந்து விடுதலை அடைந்து சுதந்திரமாய் வாழ வேண்டுமென விரும்புகிறார். பாவியான காயின் கடவுள் கொடுத்த அடையாளத்தின் வழியாக கடவுளின் உடமையாகிறார். காயின் குற்றமற்றவராய் வாழ வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

இறையாட்சியின் பணியாளராய் வந்த ஆண்டவர் இயேசுவும் தந்தையின் செயலையே வாழ்வில் பிரதிபலித்தார். தனக்குமுன் கொண்டு வரப்பட்ட முடக்குவாதமுற்றவரிடம் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று கூறி விடுதலை வழங்குகிறார். அப்படியெனில் நோயாளர்களெல்லாம் பாவிகளா? இல்லை நோய் உருவாக பல காரணங்கள் உண்டு. ஊட்டச்சத்துக்குறைவு, சுகாதாரமின்மை, தவறான உணவுபழக்க வழக்கங்களால் etc. யோவா 9:3-ன் படி கடவுளின் செயல் வெளிப்படவும் நோய் காரணமாய் அமைந்தது. இங்கு முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மனிதர் பாவத்தால் இந்நோய்க்கு ஆளானவர். அவர் செய்த பாவம் அவருக்குள்ளேயே மன அழுத்தத்தை ஏற்படுத்தி அதன் முதிர்ச்சி முடக்குவாதத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அலெக்ஸ்சாந்திராய் (கி.பி. 270) கூற்றுப்படி "பிணியாளன் தன் பாவங்கள்

பொறுக்கப்பட்டாலன்றித் தன் பிணியிலிருந்து குணம் பெற இயலாது என்றார். எனவே முடக்குவாதமுற்றவருக்கு முதல் தேவை உள்ள விடுதலை. தன் குற்றங்கள் மன்னிக்கப்பட்டது என்ற உறுதி தேவை. இவரின் நிலை உணர்ந்த இயேசு மாற். 2:5 "மகனே" என உறவு சார்ந்து அழைத்து உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று மன்னிப்பின் உறுதியை அளித்தார். முடக்குவாதமுற்ற மனிதர் உள்ள விடுதலையையும், உடல் விடுதலையையும் அடைந்து புதுவாழ்வோடு எல்லாரும் காணவெளியேச் சென்றார் (மாற். 2:12). கிறிஸ்துவின் இச்செயல் வந்துவிட்ட இறையாட்சியின் தன்மையையும், மன்னிக்கும் கிறிஸ்துவின் விடுதலை வழங்கும் இரக்க குணத்தையும் காட்டுகிறது.

## *2. விடுதலை வழங்கி வாழ்வு தருகிறார் :* மாற். 2:11

கத்தோலிக்கா திருச்சபை மரபில் வழிபாட்டு நிறைவில் "சென்று வாழுங்கள்" என்று மக்களுக்கு ஆசிவழங்குவார்கள். பொருள், சமூகத்தில் சென்று இறைவார்த்தையின்படி வாழுங்கள் என்பதுதான் ஆண்டவர் இயேசு முடக்குவாதமுற்றவரின் பாவத்தை மன்னித்து விடுதலை வழங்கி சென்று வாழ அனுப்புகிறார். மாற். 2:11 நான் உனக்குச் சொல்கிறேன். "நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு உனது வீட்டுக்குப் போ" என்றார். குடும்பத்துடன் இணைந்து, சமூகத்துடன் இணைந்து வாழக் கட்டளைக் கொடுக்கிறார். கட்டளைப் பெற்றவர் உடலும் உள்ளமும் புத்துயிர் பெற்று புதுவாழ்வுடன் சென்றார். கண்டவர்கள் வியந்து கடவுளைப் புகழ்ந்தனர். காயினுக்கு கடவுள் வழங்கிய அடையாளம் அவர் பாதுகாப்புடன் வாழ்வதற்கான அடையாளம். தூய பவுல் உரோமை சபைக்கு கடவுளுக்கு ஏற்புடையவராக எப்படி வாழ்வது என்பதைச் சொல்லும்போது உரோ. 5:9-ன் படி கிறிஸ்துவின் இரத்தத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகி அவர் வழியாய் தண்டனையிலிருந்து மீட்பு பெறுவோம் என நம்பிக்கைக் கொடுக்கிறார். இங்கு ஆண்டவர் இயேசுவின் இரத்தம் மீட்புக்கான அடையாளமாயிருக்கிறது. உரோ. 5:10-ன் படி கிறிஸ்துவின் உயிர் தியாகம் கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குகிறது. கடவுளோடு ஒப்புரவாகும்போது அமைதியும், மகிழ்ச்சியும் அருளுகிறது. அதாவது நிறை வாழ்வை லூக். 15:11-லிருந்து வரும் காணாமற்போன இளைய மகன் உவமையிலும், மகன் திரும்ப வரும் போது மகனை நிவந்தனை இன்றி ஒப்புரவாக்கி வாழ்வு வழங்குகிறார். அங்கு அமைதியும் மகிழ்ச்சியும் உருவாகிறது. இதற்கு அடையாளமாக விருந்து வைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட அமைதி வாழ்வைப் பெற 25 ஆவது தி.பாடலில் திருப்பாடகராகிய தாவீது தனது தவறை உணர்ந்து கடவுளிடம் வாழ்வுக்காக மன்றாடுகிறார். கடவுள் மன்னிக்க வேண்டும், கடவுள் வழி நடத்த வேண்டும், கடவுள் பாதுகாக்க வேண்டும். கடவுளின் அமைதியையும் மகிழ்ச்சியையும் தர வேண்டும். நிறைவாழ்வுக்கான

மன்றாட்டு. கடவுளுடன் இருப்பதால் வரும் மகிழ்ச்சி. ஆண்டவர் இயேசுவும் தனது காலத்தில் பாவிகள் என்று சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களுடன் விருந்துண்டு மகிழ்ந்தார். இச்செயல் மன்னிக்கும் கிறிஸ்துவையும், மன்னிப்பு பெறும் மக்கள் நிறைவாழ்வில் எப்படி இருப்பார்கள் என்பதையும் அடையாளப்படுத்துகிறது. மன்னிக்கும் கிறிஸ்துவின் செயல் விடுதலை வழங்கி வாழ்வைத்தந்து நிறைவாழ்வை, அமைதியை மகிழ்ச்சியை அருளுகிறது. ஆண்டவர் இயேசுவின் மன்னிப்பு நிபந்தனையற்ற அவர் மன்னிப்பதில் மகிழ்ச்சி அடைகிறவர். இயேசு பேதுருவிடம் சொல்லும் போது மத். 18:22, எழுபது முறை ஏழு தடவை என்பது மன்னிப்பதில் தளராமலிருக்க ஆலோசனை வழங்குகிறார். நிபந்தனையற்ற மன்னிப்பை இயேசு சிலுவையின் வழி வழங்கினார். லூக். 23:34-ல் தவறிழைத்தோரின் அறியாமையைப் பொறுத்து "தந்தையே இவர்களை மன்னியும் என்றார். மன்னிக்கும் கிறிஸ்து அறிவுறுத்துவது மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள். பிறரை மன்னிப்பதிலே தான் மன்னிப்பு பெறுகிறோம். மத். 6:15-ல் மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார். எனவே மன்னிப்பு வழக்கு மன்றங்களில் பணத்திற்காக வழங்கும் மன்னிப்போ, கட்டாய மன்னிப்போ அல்ல. நிபந்தனையற்ற தளரா மனநிலையுடன் கூடிய மன்னிப்பு. இன்றைய நவீன உலகில் உறவுகள் முறிந்து, தனிமை வாழ்வில் மன அழுத்தத்தால் பல நோய்களுக்கு ஆளன மக்கள் நாம் வாழும் சூழலில் உண்டு. அப்படிப்பட்ட மக்களை அடையாளம் கண்டு மன்னிக்கும் கிறிஸ்துவின் தன்மையான நம்பிக்கை, ஆறுதல், மன்னிப்பு வழங்கி அவர்களும் அமைதி மகிழ்ச்சி அடைய கிறிஸ்துவின் பதிலாளாய் செயல்படுவோம். இத்திருப்பணியில் கிறிஸ்து உடனிருப்பார்.

**அருள்திரு. ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

19-03-2017 **தவக்கால மூன்றாம் ஞாயிறு**

# ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து

**(THE ACCEPTINGCHRIST)**

ஓசி. 2:14-23 பிலிப். 1:12-21
தி.பா. 87 மாற். 15:21-28

**"...சிலுவையை சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்." மாற். 15:21**

சிமிர்னா சபையின் மிக முக்கிய நிகழ்வுகளை சித்தரிக்கும் கடிதம் ஒன்று, கண்ணீர் மல்கும் நிகழ்ச்சியாக திருச்சபைத் தந்தை போலிகார்ப்பின் வரலாற்றினை கூறுகிறது.

சிமிர்னா சபையில் கி.பி. 70 முதல் 155 ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்து பேராயராக பணியாற்றியவர் தான் திருச்சபை தந்தையாகிய போலிகார்ப். துன்புறுத்தலின் காலமாயிருந்ததால் போலிகார்ப் கைது செய்யப்பட்டு சிமிர்னா கவர்னருக்கு முன் நிறுத்தப்பட்டார். பலவித விசாரணைக்குப்பின் கவர்னர் போலிகார்ப்பினிடம் சீக்கிரமாய் இயேசு நாதரை மறுதலித்து, உறுதிமொழி எடுத்து கொள், நான் உன்னை விடுதலை செய்கிறேன் என்றார். கிறிஸ்துவில் பலப்பட்ட போலிகார்ப், "86 வருடங்களாக நான் அவரை சேவிக்கிறேன். அவர் எனக்கு ஒருபோதும் தவறானதை செய்யவில்லை. அப்படியிருக்க எப்படி என்னை மீட்ட என் அரசரை மறுதலிப்பேன்" என்று கூறினார். சாகும் தருவாயில் போலிகார்ப் வானத்தை அண்ணாந்து பார்த்து ஜெபித்தார். இவ்விதமாக எல்லா காரியத்திலும் நான் உம்மை துதிக்கிறேன்; நான் உம்மை வாழ்த்துகிறேன். நாம் உம்மை நித்திய மோட்ச வாழ்வை தரும் பிரதான ஆசாரியனாகிய உமது நேச மகன் இயேசு கிறிஸ்து வழியாக மகிமைப்படுத்துகிறேன். அவர் தம்மாலும் தூய ஆவியராலும் உம்மை இப்பொழுதும் அவருடைய வருகையின் வழியாகவும் மகிமைப்படுத்துகிறவர். ஆமேன்.

போலிகார்ப்பின் உயர்ந்த நம்பிக்கை கிறிஸ்து என்னை ஏற்றிருப்பதால் நானும் அவரை ஏற்றுக் கொள்கிறேன் என்பதாகும். எனவே தான் 86 வருடம் என் தலைவர் இயேசு எந்த தீங்கும் செய்யவில்லை என்று அவரால் கூற முடிந்தது.

இங்கே பிலிப்பியர் நிருபத்தில் புவுலடியார்களால் கிறிஸ்து தன்னை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கையை பலப்படுத்தி கொண்டு பிலிப்பியர் 1:20-ல் என்ன நேர்ந்தாலும் நான் கிறிஸ்துவைப் பற்றி வெட்கமுறமாட்டேன் என்றும், கிறிஸ்துவை என் உடலால் பெருமைபடுத்துவேன் என்றும் கூறுகிறார். இந்த கருத்தமைவு சார்ந்து பவுலடிகளாரை ஏற்று கொண்ட இயேசு நாதரை, அவரை ஏற்றுக் கொண்ட பவுலடிகளாரை குறித்து இரு தலைப்புகளில் தியானிப்போம்.

## 1. வெட்கமுறமாட்டேன் :

பவுலடிகளார் கிறிஸ்தவத்தை வெட்கக் கேடாக எண்ணியவர். சட்டதிட்டங்களை கற்றுத் தேர்ந்திருந்த அவருக்கு "மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன்" உபா. 21:23 என்ற வாக்கு தெரியாததொன்றல்ல. அப்படி சபிக்கப்பட்ட சிலுவை மரத்தில் தூக்கப்பட்ட ஒருவர் மீட்பர் கிறிஸ்து என்று சொல்லுவதை பவுலடிகளார் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது. அப்படி சிலுவையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட இயேசுவை ஒரு கூட்டம் மக்கள் கிறிஸ்து என்றும், அவரே எங்கள் மீட்பர், தலைவர் என்றும் சொல்லுவது அவருக்கு வெட்கக் கேடான ஒன்றாய் இருந்தது. அதனால் தான் அந்த கூட்டத்தையே அழித்து விட வேண்டும் என்று அதிகார பத்திரத்துடன் தமஸ்குவிற்கு செல்கின்றார். அப்போஸ்தலர் 9:1-4.

இப்படி கிறிஸ்து இயேசுவை பற்றும் நம்பிக்கை வெட்கக்கேடானது என்றிருந்த பவுலடிகளாரின் தமஸ்கு பாதையில் ஏற்பட்ட மனமாற்றம் இயேசுவே ஆண்டவர் என்பதனை உறுதிப்படுத்தியது. நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்ற உயர்ந்த ஆண்டவரின் வாக்கு பவுலடிகளாரின் வாழ்வில் கிறிஸ்து இயேசுவே வாழ்வு என்ற நிலைக்காகிவிட்டது. தி.ப. 9:5. அதுவரை சிலுவையை புறக்கணித்த பவுலடிகளார் சொல்லுகிறார். சிலுவையே எனக்கு மேன்மை. உலகம் எனக்கு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது என்கிறார். கலாத்தியர் 6:14.

கிறிஸ்து இயேசுவிலிருந்த வெட்கம் அகன்று உலகின் கடையெல்லை வரை அவரை பறைசாற்றுவேன் என்ற உறுதியோடு மூன்று தூது பணி பயணங்களை செய்கின்றார் பவுலடிகளார். ஏதென்சில் எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் போன்ற மெய்யியல் அறிஞர்களோடு கூட இயேசுவை நற்செய்தியாக அறிவிக்க அவர் வெட்கப்படவில்லை. அப்போஸ்தலர் 17:18.

இயேசு நாதரை சிலுவையில் அறைந்த ரோமானிய பேரரசுக்கு முன்பாக பவுலடிகளார் இயேசு நாதர் உயிரோடிருப்பதாக சாதித்தார். (அப். 25:19) அகிரிப்பா அரசனுக்கு முன் தன் இறைப்பற்றை விளக்கிய போது பெஸ்து பவுலடிகளாரைப் பார்த்து பவுலே! உனக்கு பித்து பிடித்து விட்டது, அதிக படிப்பு உன்னை பைத்தியக்காரனாக மாற்றி விட்டது என்கிறார். அதற்கு பவுலடிகளார், வெட்கபடாது துணிவோடு, நான் வெட்கப்படாமல் உண்மையோடும், அறிவு தெளிவோடும் பேசுகிறேன். என்றதோடு தன்னை கட்டியிருந்த விலங்குகள் தவிர தன்னைப் போல் பேரரசனும் ஆக வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றான் (அப். 26:24-32).

1 கொரி. 4:1-ல் தன்னை கிறிஸ்துவின் ஊழியன் என்றும் அதனால் பொறுப்புக்குரியவன் என்றும் தன்னிலை உணர்ந்து கூறுகிறார். அதைப் போன்று எந்த நிலையில் நாம் இருக்கிறோமோ அந்த நிலையில் வெட்கப்படாமல் நமக்குக் கிடைத்த ஆண்டவரின் அழைப்பை, பொறுப்புணர்ந்து நிறைவேற்ற பவுலடிகளார் அறிவுரை கூறுகிறார். (1 கொரி. 7:17-24).

## 2. பெருமைப்படுத்துவேன் :

தன்னை ஏற்று கொண்ட கிறிஸ்துவுக்காக அவரை பெருமைப்படுத்துவேன் என்ற உறுதியோடு பவுலடிகளாரும் செயல்படுவதை காண்கிறோம்.

உயிர்த்த ஆண்டவரை சந்திக்குமுன் கிறிஸ்தவ விசுவாசிகளை துன்புறுத்தி நோகச் செய்வதிலும், அவர்களை தலை குனிய செய்வதிலும் பெருமை கொண்டிருந்தார் பவுலடிகளார். அதற்குக் காரணம் பவுலடிகளார் இந்த உலகத்தின் மிகப்பெரிய பெருமையாகவும், அங்கீகாரமாகவும் தனது படிப்பு. அதிலும் கமாலியேல் என்ற கல்விமானிடம் கற்றுக் கொண்டதை, தன் பரிசேயப் பிறப்பை, ரோமானிய குடியுரிமையை பெருமையாக கொண்டிருந்தார். இந்த பெருமைகளுக்கு ஈடாக எதுவும் இல்லை என்ற எண்ணம் கொண்டிருந்தார் (பிலிப்பியர் 3:5).

அப்படிப்பட்ட பவுலடிகளார் கிறிஸ்துவுக்குள் வந்த பின்னர் கிறிஸ்து தான் எனக்கு எல்லாம் என்று பெருமைப்பட்டு கொள்கிறார். கலாத்தியர் 2:20-ல். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்பு கூர்ந்தார். எனக்காக தம்மையே ஒப்புவித்தார். எனது கிறிஸ்து இயேசு நம்மீது அன்பு கூர்ந்து தன்னை ஒப்புவித்தார் என்று கிறிஸ்துவின், அவரது ஏற்றுக்கொள்ளும் அன்பை பவுலடிகளார் உணர்ந்து அவ்வன்பின் தானும் தன்னை பிணைத்துக் கொள்கிறார். இனி "நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்" என்று பெருமைபடுகிறார் பவுலடிகளார்.

வாழும் கிறிஸ்துவின் ஆற்றலிலும், செயலிலும் பெருமைப்படும் பவுலடிகளார் 2 கொரி. 13:3, 4 வசனங்களில் கூறுகிறார். "கிறிஸ்து உங்களிடையே என்னைப் போல வலுவற்றவராக இல்லை. மாறாக, அவர் வல்லமையோடு செயல்படுகிறார். ஏனெனில், அவர் வலுவற்றவராக சிலுவையில் அறையப்பட்டவர். ஆனால் கடவுளின் வல்லமையினால் அவர் உயிர் வாழ்கிறார். அவருடைய வலுவின்மையில் பங்கு பெறும் நாங்களும் உங்கள் பொருட்டு கடவுளின் வல்லமையால் அவரோடு வாழ்வோம், என்று சிலுவையில் பங்கு பெறுவதை மேன்மையாக கருதி பெருமைபடுகிறார்". இதையே கலா. 6:14-ல் நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதை பற்றியும் பெருமை பாராட்டமாட்டேன் என்று சிலுவையை கிறிஸ்துவுக்காய் துன்பப்படுதலை, நீதிக்காய் போராடுவதை பெருமை எனக்கூறி கிறிஸ்துவை பெருமைபடுத்துகின்றார்.

1 கொரிந்தியர் 1:30 மற்றும் 2 கொரி. 10:17 போன்ற வசனங்களில் மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்ட கடவன் என்கிறார்.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை முதன்மைபடுத்தி அவரது ஆற்றல் அற்புதங்களிலோ, வேறெந்த ஆற்றல்களிலோ அல்ல. சிலுவையில் கிறிஸ்து தன்னை இறக்கி கொண்டதில் தான் அமைகிறது என்பது பவுலடிகளாரின் நிலை. எனவே தான் பிலிப். 2:6-11 வசனங்களில்

கிறிஸ்து சிலுவையில் அடிமையாய் தாழ்த்தினார். ஆனால் கடவுளோ அவரை உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே, இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் என்று பெருமைப்படுத்தி பேசுகிறார். 1 கொரி. 1:23-ல் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறைசாற்றுகிறோம். சிலுவை யூதருக்கு தடைக்கல், கிரேக்கருக்கு மடைமை, ஆனால் தனக்கோ பெருமை என்கிறார் பவுலடிகளார்.

அன்புக்குரியோர்களே! நம்மை ஏற்றுக்கொண்ட இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது இன்றும் சிலுவை அதாவது, நீதிக்காக பாடுகளை ஏற்று கொள்ளுதல் தவிர்க்க முடியாததே.

நாங்கள் நம்புகிற இஸ்ரவேலின் கடவுள் இஸ்ரவேலின் கடவுள் எங்களை தப்புவிக்காவிடினும் அரசன் அமைத்த சிலையை வணங்குவதில்லை என்பதில் தான் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகாவின் கடவுளை ஏற்கும் சிறப்பு வெளிப்படுகிறது.

சட்டத்திற்கு அரச முத்திரை வைக்கப்பட்டதை அறிந்தும் திடனோடு தினமும் மூன்று முறை எருசலேமுக்கு நேராய் ஜன்னல்கள் திறக்க இறைவேண்டல் செய்தாரே தானியேல் அதில் தான் அவனது பற்றுறுதியின் மேன்மை படியோங்கி நிற்கிறது.

இருக்கும் மாவில் அப்பம் சுட்டு தானும், தன் மகனும் உண்டு விட்டு மரிப்பது என உறுதியாக நின்றிருந்தும், எலியா தீர்க்கரின் வேண்டுதலுக்கு செவிமடுத்து, முதல் அப்பம் தந்தாளே சாரிபாத்தூர் விதவை அதுவே பெருமை.

தன்னையும், தன் நாட்டையும் அடிமைப்படுத்தின நாகமானிடம் தான் வணங்குபவரே உண்மைக்கடவுள் என அடிமைத்தனத்தின் நிலையிலும் உறுதிப்படுத்தினாளே சிறுமி அவளது பற்றுறுதி மேலானது.

இன்று கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பதித்தும் சிலுவையை மறுதலித்து விட்டு அற்புதத்திற்காகவும், ஆடம்பர சுகபோகங்களுக்காகவும் கடவுளே என வேண்டி நிற்பவர்களாக அல்ல.

பாடுகள் நடுவே (தன் சிலுவையை எடுத்துக்கொண்டு) பரமனைப் பற்றிக் கொள்வோம். சிலுவையின் நாதரை எங்கும் பறைசாற்ற பெருமைப்படுவோம்.

கிறிஸ்துவை பறைசாற்ற பவுலடிகளாரைப் போன்று நானும் வெட்கமுறமாட்டேன் என்போம்.

கிறிஸ்துவை பவுலடிகளாரைப் போன்று சிலுவையை பற்றி கொண்டு பெருமைப்படுத்துவேன் என்போம்.

அதற்காகவே பவுலடிகளார் நமக்குச் சொல்கிறார். நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளுங்கள். நற்செய்தியில் கொண்டுள்ள நம்பிக்கைக்காக ஒரு மனதோடு போராடுங்கள். எதிரிகளின் முன் மருளாதிருங்கள். பிலிப்பியர் 1:27, 28.

இறையாசி நம்மோடிருப்பதாக.

**அருள்திரு. A. ஜெப சுஜி**

19-03-2017

H.M.S. ஞாயிறு

## நிலைத்திருக்கும் மகிழ்ச்சி

**JOY THAT ENDURES**

யோபு 38:1-14 தீத்து. 3:1-7
தி.பா. 41 லூக்கா 15:1-10

**"அவ்வாறே மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்லுகிறேன்." லூக்கா 15:10**

அருள்திரு. ஹாக்கர் ஐயர் அவர்களின் ஆலோசனையின்படி தென்திருவிதாங்கூர் சுதேச மிஷனெறிச் சங்கம் 1900 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆத்தும அறுவடை மற்றும் ஆலயம் கட்டியெழுப்புதல் ஆகிய தரிசனங்களை இரு கண்களாகக் கொண்டு 116 வருடங்கள் குமரி மாவட்டத்தில் HMS தமது அருட்பணியால் உருவாக்கிய சபைகளில் 98 சபைகள் நமது பேராயத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, தற்போது சபைகள் மற்றும் புதுக்களங்களாக 65-ஐ தனக்குள் வைத்து இந்த சங்கம் ஆண்டவரின் கட்டளைக்குக் நாட்களுக்குக் கீழ்ப்படிந்து செயலாற்றி வருகின்றது.

கிறிஸ்தவ சமயம் ஒரு மகிழ்ச்சியின் சமயம். காணாமல் போன ஆடு உவமை ஒரு மகிழ்ச்சியின் உவமை. பாலஸ்தீனாவில் ஆடுகள் கொல்லப்படுவதைவிட மயிர்கத்தரிப்பதற்காக வளர்க்கப்படுவதால் ஒரே மந்தையில் ஆடுகள் 9 வருடங்கள் வரை வளரும். ஒருவருக்கு நூறு ஆடுகள் இருப்பது என்பது வளமை. ஆனால் 99 ஆடுகளை திறந்தவெளியில் விட்டுவிட்டு காணாமல் போன ஓர் ஆட்டைத் தேடும் ஆட்டிடையர் எத்தன்மையுடையவர்! ஏன் ஓர் ஆடு முக்கியமானது? அனைத்து ஆடுகளும் ஆட்டிடையருக்கு முக்கியமே. அவர் அனைத்தையும் நேசித்துப் பராமரிக்கின்றார். இழத்தலால் வரும் மன உளைச்சலையும், கண்டுபிடிப்பதால் வருகின்ற மகிழ்ச்சியையும் இப்பகுதியில் காண்கிறோம்.

### *1. இழந்து போனவரின் வழி :*

அன்புத் தன்மை கொண்ட இறைவிருப்பம் யாதெனில் மனிதன் தனது கீழ்ப்படிதலினாலும், தொழுகையினாலும் அவரோடு மகிழ்ந்திருக்க வேண்டும் என்பது. ஆனால், மனிதன் தீமைக்குக் கீழ்ப்படிந்து, சுயத்தை ஆராதித்த போது தன் வாழ்வின் ஒரு பகுதியாக இறைவன் இருப்பதை இழக்க ஆரம்பித்தார். உரோ. 11:21 இல் அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை. நன்றி செலுத்தவுமில்லை. அதற்கு மாறாக அவர்களின் எண்ணங்கள் பயனற்றவையாயின. உணர்வற்ற அவர்களது உள்ளம் இருண்டு போயிற்று.

இழந்தல் என்பது வீழ்ச்சி, நாசம், இடிபாடு எனலாம். அதாவது தனது பாதையை கண்டுகொள்ள இயலாமல் அலைந்து திரிபவன் (எசாயா 53:6). இன்றைய போர், இச்சை, குற்றம் போன்றவை இழப்புத் தன்மையின் வெளிப்பாடு. Westminister பாவ அறிக்கை, ஆதாமும், ஏவாளும் மனித இனத்தின் இதயத்தில் பாவத்தின் வேரினை புகுத்தி வைத்தனர். ஆகையால் அனைவரும் நல்லதிற்கு எதிராகின்றனர் என்கின்றது. இன்றைய சமூகத்தினுடைய பிரச்சனைகளை ஆராயும் போது கடவுள் இதற்காக சான்றாக தருபவற்றை உரோ. 4:1-22 வரையிலான வசனங்களில் தருகின்றார். இழந்து போன மனிதனின் பரிதாப நிலையையும், அவர் மீட்புக்காக கெஞ்சுவதையும் உரோ. 7:24-ல் காண்கிறோம். அந்த, இரக்கத்தக்க மனிதன் நான்.

### 2) இழந்து போனவரின் மீட்பு :

பாவம் செய்து இழப்பை ஏற்றுக்கொண்ட மனிதன் மீட்பை தேடுவது போல இறைவன் இழந்து போனவனைத் தேடுகின்றார். இழந்து போனதைத் தேடவும், மீட்கவுமே மனித குமாரன் வந்திருப்பதாக இயேசு கூறினார். நானே பாதையும், உண்மையும், வாழ்வுமாக இருக்கிறேன் என இயேசு கூறிய போது மீட்புக்கு மாற்றுத்திட்டம் இல்லை என்பதை இயேசு உறுதிபடுத்தினார். இங்கிருந்து அருட்பணி ஆரம்பமாகிறது. பில்லி கிரகாம் தனது செய்தியில் அருட்பணிக்கான விளக்கமாக இங்கிலாந்து சபையின் ஆர்ச் பிஷப் கமிட்டி தந்ததை பின்வருமாறு கூறினார். “மனிதன் தனது நம்பிக்கையை கிறிஸ்துவின் வழியாக இறைவனிடம் வைக்க பரிசுத்தாவியின் ஆற்றலுடன் கிறிஸ்துவை அவர்களுக்கு கொடுத்து அவரையே தங்கள் மீட்பராக ஏற்றுக்கொள்ள செய்வதும், சபையின் கூட்டுறவின் வழியாக அவருக்குப் பணிவிடை செய்வதுமே அருட்பணி”. அருட்பணிக்கு இறை ஆற்றல் தேவை (தீத்து 3:5). அனைத்தையும் காணும் இறைவன் மீட்பின் திட்டத்தைச் வகுக்கின்றார். அனைத்து ஆற்றலும் கொண்ட இறை மீட்பின் திட்டத்தை செய்து நிறைவேற்ற ஊடுருவிச் செல்வோரை நியமிக்கின்றார். அருட்பணிக்கென கட்டளை பெற்றவர்கள் 1 கொரிந்தியர் 9:22-ன் படி “ஒரு சிலரையாகிலும் மீட்கும்படி, எல்லாருக்கும் எல்லாமாகிறார்கள்” யோவான் 6:37 இல் எவரையும் புறம்பே தங்கிவிடக்கூடாதென்றும், யோவான் 3:16 இல் நம்பிக்கை கொள்வோர் எவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்றும் போதித்து அருட்பணியின் இன்றியமையாமையை அறிவுறுத்துகின்றது. Voltain தத்துவ ஞானிகளையும் திருத்தூதர்களையும் குறித்து வேறுபடுத்தி கீழ்வருமாறு கூறுகின்றார். ஞானிகள் செருப்பு தைப்பவனுக்கும், வேலைக்காரிக்கும் அறிவொளி ஊட்டமாட்டோம். அது திருத்தூதர்களின் பணி. அருட்பணியாளர்கள் மீட்பின் திட்டத்தைச் செயல்படுத்தி கனம் பெறுகின்றன. மனம் திரும்புதலால் நீடித்த மகிழ்ச்சி உருவாகின்றது.

### 3) மகிழ்ச்சி பொறுப்பாண்மையின் அடையாளம் :

மகிழ்ச்சி கடவுளின் மக்களுடைய ஓர் அடையாளப் பண்பு. கிறிஸ்தவப் பொறுப்பாண்மைப் பயணத்தின் படிக்கல் (யோபு. 38:7). இயேசு கிறிஸ்துவால் உருவாக்கப்பட்ட திருமேசை (பந்தி) சந்தோஷ விருந்து எனலாம். தந்தையான கடவுளின் அருட்கொடையான கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் வரும் சந்தோஷம் ஆண்டவரின் பந்தி அவரது நீதியை பங்கிடுகிறது. இங்கு மிக முக்கியமாக ஒருவரின் பொறுப்பாண்மையை அனுபவிக்கின்றோம். உண்மையான மகிழ்ச்சி இறைவனிடமிருந்து பகிர்தல் வழியாகவும், இழந்து போனவரை மீட்டுக் கொள்பவரின் வழியாகவும் கிடைக்கின்றது. இது நிலைத்து நிற்கும் மகிழ்ச்சி.

“வெறும் கைகளினுடைய திருமேசை” குறித்து Thomas G. Pettepiece கீழ்வருமாறு கூறினார். இந்த நற்கருணை பத்தாயிரம் அரசியல் சிறைக்கைதிகளைக் கொண்ட சிறையில் ஓர் உயிர்த்தெழுதல் திருநாளில் நடந்தது. சிறையில் காணப்பட்ட கிறிஸ்தவர்கள் இந்தத் தூய நாளில் நற்கருணை நடத்த விரும்பினர். ஆனால் அப்பம், ரசமும் இல்லை. கிறிஸ்தவர் அல்லாத பலரும் அங்கு காணப்பட்டனர். கிறிஸ்தவர்களில் ஒரு நபர் வெறும் கையை, அடுத்தவர் கையில் வைத்து ‘இது உங்களுக்காக பிடப்பட்ட என்னுடைய உடல்’ என்று கூற அது தொடர்ந்தது. அதுபோன்று வெறும் கையில் ரசமும் கொடுத்தனர். இறுதியில் அனைவரும் சேர்ந்து, “எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு அவருடைய விலைமதியாத திருவுடலும், இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களை போஷித்திருக்கிறார்... என்று கூறி அதிக சந்தோஷத்துடன் மகிழ்ந்து கொண்டாடினர். இதைக்கண்ட கிறிஸ்தவர் அல்லாத ஒரு சிறைக்கைதி அவர்களைப் பார்த்து”, நீங்கள் வித்தியாசமானவர்கள், உங்களிடம் சிறப்பான ஒன்று இருக்கிறது, நானும் அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன் என்றார் தனது மகனை இழந்த ஒரு தகப்பனார், இது ஓர் உண்மையான அனுபவம், உண்மையான இறைப்பற்று என்ன என்பதை இன்று கண்டு கொண்டேன். இன்று முதல் நாள் அந்த பாதையில் செல்கின்றேன் என்றார்.

கிறிஸ்து இழந்து போனவர்களை மனம் திரும்ப செய்யுமாறு, தான் பெற்றுக்கொண்ட அதே மகிழ்ச்சியை அருட்பணியின் வழியாக உண்மையான பொறுப்பாண்மையைப் பெறமுடியும். இந்த மகிழ்ச்சி நீடித்திருக்கின்ற மகிழ்ச்சி.

**அருள்திரு. E. ஸ்டான்லிராஜ்**

26-03-2017

தவக்கால நான்காம் ஞாயிறு

# விடுவிக்கும் கிறிஸ்து

**LIBERATING CHRIST**

வி.ப. 3:1-10
தி.பா. 82

கலாத். 5:1-12
லூக். 13:10-17

**"அம்மா, உமது நோயி-ருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" லூக். 13:12**

கி.பி. 1865 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் கறுப்பு வெள்ளையின மக்களின் உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த போது பேசுகிறார்; நாம் அனைவரும் படிப்பது ஒரே திருமறை, நாம் வேண்டுதல் செய்வது ஒரே இறைவனை, ஏன் அந்த இறைவனை வேதனைப்படுத்துகிறீர்கள்? அவர் காட்டின அன்பை ஏன் காட்டவில்லை? இந்த வார்த்தைகள் அமெரிக்காவில் மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தின. மாத்திரமல்ல, சமாதானத்தையும் நிறுவின.

இத்திருமறைப் பகுதி இறைவனுடைய அரசு எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறது. 18 வருடங்களாய்ப் பாடுபட்ட, சிறுமைப்படுத்தப்பட்ட பெண்ணின் வாழ்க்கையில் விடுதலை அளித்தது. இறைவனின் வார்த்தைகள். இந்த பெண் கடந்து வந்த பாதை, எதினால் விடுதலை கிடைத்தது? விடுதலை கிடைத்ததினால் ஏற்பட்ட மாற்றம் என்ன என்பதைக் காண்போம்.

## *1. பாடுபடும் பெண் :*

சிறிதும் நிமிரக்கூடாதபடி கூன் விழுந்த நிலையில், உடலளவில் பாதிக்கப்பட்டு இருந்தார். இவளால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. வானத்தில் உள்ள அதிசயங்களையோ, அதன் அழகையோ இவரால் பார்க்க முடியவில்லை. வ. 11-ல் பெண் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து இயைறரசு ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் உரியது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். வ. 16 ஆபிரகாமின் மகள் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து இப்பெண்ணிற்கு ஆபிரகாமின் குடும்ப அங்கத்தினர், இவர் வேறு குடும்பத்தைச் சார்ந்தவர் அல்லர் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இவரை 18 ஆண்டுகளாய் சாத்தான் கட்டி வைத்திருக்கிறான் என்றால், குடும்பம், சமுதாயம் திருச்சபையால் ஓரங்கட்டப்பட்டு இருக்கலாம். காரணம் இவரால் பயன் இல்லை. உடலளவில், மனதளவில், பாதிக்கப்பட்ட பெண். ஆனால் இவர் 18 வருடங்களாய் தொழுகைக்கூடம் சென்றிருக்கிறார். விசுவாசத்தோடு இறைவனிடம் மன்றாடுகிறார். உரோ. 8:28-ல் கடவுளிடம் அன்பு கூருகிறவர்களுக்கும், அவரது திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும் அவர்கள் நன்மைக்காகவே அனைத்திலும் ஆவியார் ஒத்துழைப்பு செய்கிறார். இப்பெண்மணி யாரும் துணை இல்லாத நிலைமையிலும், வேதனையின் மத்தியில் விசுவாசத்தோடு கடந்து வருகிறார்.

## 2. பரமனின் அன்பு :

கண்டு கொள்ளப்படாத பெண்ணை இயேசு கிறிஸ்து கண்டு அருகிலேயே வர அழைக்கிறார் (வ. 12). அன்பு வார்த்தையைப் பொழிகிறார். வேதனையில் இருப்போர்க்கு அன்பு வார்த்தைதான் முக்கியமானது. வ. 12. "அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறி விடுதலையின் வாழ்வை அருளுகின்றார். யாக். 1:27-ல் தூய்மையானதும், மாசற்றதுமான பக்திவாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும், கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் தம்மைக் கறைபடாதபடி காத்துக் கொள்வதும் ஆகும். இயேசு கிறிஸ்துவின் குணமாக்குதல் விரைவாக, நிறைவாக, நிரந்தரமாக எல்லோரும் காணும்படி இருந்தது. வ. 13 தம் கைகளை அவர் மீது வைக்கிறார். இதிலிருந்து அரவணைக்கும் இறைவன் என்பதைக் காண்கிறோம். உடைவை மாற்றி இறைவனில் பற்றுறுதியை ஏற்படுத்துகிறார். வ. 14. தொழுகைக்கூட தலைவர் கோபம் கொள்கிறார். அதிகாரத்தில் வாழ்கிறார்கள், ஆன்மீகத்தில் ஈடுபாடு இல்லை. வெளிவேடக்காரர்கள், உள்ளார்ந்த அன்பு இல்லை. சட்டத்தைப் பின்பற்றுகின்றனர். மனிதாபிமானம் இல்லாதவர்கள் இத்தனை போராட்டங்கள் மத்தியிலும் அன்புள்ளோராய், அன்பு செய்து துன்புறும் மானிடத்தோடு இணைந்து தன்னையும் துன்புற ஒப்புக் கொடுக்கிறார். இறையரசு இத்தகைய தகவுகளோடு இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்துகிறார் ஆண்டவர்.

## 3. பாரினில் ஏற்பட்ட மாற்றம் :

அன்பற்று இருந்த தொழுகைக்கூட தலைவருக்கு ஓய்வுநாள் என்றால் என்ன? என்பதையும், தவறான கண்ணோட்டத்தோடு இருந்த மக்களை மாற்றி, அவர்கள் மகிழ்ச்சியுறச் செய்கிறார். நிமிர இயலாதிருந்தவர் உலகத்தை நோக்கிப் பார்க்கிறார். மட்டுமல்ல பரமனை போற்றுகிறார். உரோ. 12:1-2-ல் இறைவனுக்கு நம்மை படைப்பது உள்ளார்ந்த வழிபாடு, உள்ளம் புதுப்பிக்கப்பட்டு மாற்றம் அடைய வேண்டும். அப்போது தான் உள்ளத்தில் தெளிவு பிறக்கும் என்கிறார். 2 கொரி. 10:3-5-ல் பணிபற்றிய குற்றச்சாட்டின் மறுமொழியாக பவுலடியார், நாங்கள் பயன்படுத்தும் கருவிகள் உலகம் சார்ந்தது அல்ல. மாறாக கடவுளின் வல்லமையைச் சார்ந்தது என்கிறார். இங்கு கூடியிருந்த மக்கள் உலகம் சார்ந்து சிந்தித்தனர், பேசினர். ஆனால் அருள்நாதர் இறையரசில் விடுதலைதான் முக்கியம் என்பதை உணர்த்துகிறார். நிமிர முடியாத பெண்ணின் வாழ்வில் காணப்பட்ட வேதனை, கண்ணீர், நோய் இவற்றை கண்டு கொள்ளாத சமுதாயத்தில் இறைவன் அவர் மீது இரக்கம் காண்பித்து விடுதலை தருகிறார். நிமிர்ந்து நின்று இறைவனைப் போற்றுகிறார். அறியாமையில் இருந்த மக்கள் தவறையுணர்ந்து இறைவனில் மகிழ்ந்தனர். இறைவனின் அன்பு, விடுதலைக்கு ஏங்கும் மக்களை நோக்கிப் பார்க்கிறது. விடுதலை தருகிறது. மாற்றுருவாக்கம் செய்கிறது. இத்தரணியில் பாடுபடும் மனிதர்களை, பரமனின் அன்பினால் தாங்கி, மாற்றுருவாக்கம் செய்யும் செயல்தான் விடுவிக்கும் இறைவனின் செயல்.

**திரு. S. ஜாண் வினோராஜ்**

02-04-2017 | Passion Sunday & உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு

## சிலுவையும் மீள்நிலைப்படுத்தும் கிறிஸ்துவும்

**CROSS AND THE RESTORING CHRIST**

யோபு. 42:10-17 எபே. 2:1-10
திபா. 126 மாற். 10:46-52

**"குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே." எபே. 2:5**

மூன்று நாட்களாக ஒரு வாலிபனை காணவில்லை, தேடிப்பார்த்தனர். கடைசியில் ஊரில் உள்ள கிணற்றிலிருந்து ஒரு முனகல் சத்தம் கேட்டது. பார்த்த போது இந்த வாலிபன் தான் என்று உறுதி செய்யப்பட்டது. உடனே தீயணைப்புப் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, மயங்கிய நிலையில் மீட்கப்பட்டார். மருத்துவ மனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டு, கடைசியில் பிழைத்துக் கொண்டார். சாவின் விழிம்பிலிருந்து மீள் வாழ்வு பெற்றுக் கொண்டார். பாவத்தில் வீழ்ந்து போன மனுக்குலத்தை இணைக்கின்ற மீட்பின் பாலமாக கிறிஸ்துவின் சிலுவை வெளிப்பட்டது. கிரேக்க உரோம கலாச்சாரத்தில் சிலுவை என்பது அநீதியின் சின்னமாகவும், அச்சுறுத்தும் சின்னமாகவும் இருந்தது. மக்களை மீட்கும் மீட்பராய் பணியாளராய் இயேசு சிலுவையில் இறந்ததால் அநீதியின் சின்னம் மீட்பின் சின்னமாக மாறியது. மீள்நிலைப்படுத்துதல் என்பது ஒரு பொருளை மீண்டும் அதன் முன்னிருந்த நல்ல நிலைக்கு சரி செய்தல் எனப்பொருள்படும். மீள்நிலைப்படுத்துதல் மிகமுக்கியமான பணி. கடவுள் நம்மோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நமக்குரியதாக்கிக் கொள்ளுதல் ஆகும். மீள்நிலைப்படுத்துதல் சற்றுக் கடினமான பணி. லெந்து நாட்கள் இறைவன் திருச்சபைக்கு அருளும் கிருபையின் நாட்கள் இந்நாட்களில் நாம் நமது விசுவாசத்தை உறுதி செய்து கொள்ளவும், கிறிஸ்துவின் சிலுவை வெளிச்சத்தில் மீள்நிலைப்படுத்தப்படவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### *1. உன்னத உறவுகளை மீள்நிலைப்படுத்துதல் :* யோபு 42:11

...அவருடைய எல்லா சகோதரர்களும், சகோதரிகளும் அவரை முன்பு தெரிந்திருந்த அனைவரும் அவரிடம் வந்தனர். அவரது இல்லத்தில் அவரோடு விருந்துண்டனர்.

இறைவன் தமது மக்கள் மேல் அன்பு செலுத்துகின்றவராய் தமது அன்பின் உறவைப் புதுப்பித்துக் கொள்ளுகிறார். தமக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையேயான நீண்டகால உறவினை அவரே முன்வந்து மீள் நிலைப்படுத்துகிறார். வெட்டப்பட்ட உறவை மீண்டும் அவரே சீர்படுத்துகிறார். பழைய வாழ்வு அதாவது இருளடைந்த வாழ்வு மாறி

புதிய வாழ்வு அதாவது உண்மையான நீதியிலும், தூய்மையிலும், வெளிப்படும். இறைவன் மனிதனின் உயர்வையே விரும்புகிறார். அதற்காகவே தண்டிக்கவும் செய்கிறார். மனிதர்களின் செயல்களையும், விசுவாச நிலைகளையும் சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்பிடுகிறார்.

யோபுவின் நூலில் நீதிமானின் துன்பம் பற்றிச் சொல்லுகிறார். சோதனைகளில் கடுமையைக் காண்கிறோம். யோபு தனது கொடுமையான உடல் துன்பத்தாலும், மிகுந்த மனத்துயரத்தாலும், அவதிப்பட்டும் இறை நீதியில் நம்பிக்கை இழக்கவில்லை. யோபுதான் குற்றவாளி என்பதை மீண்டும் மீண்டும் மறுக்கிறார். தாம் குற்றமற்றவர் என்பதை அவர் நன்கு அறிவார். தான் அனுபவிக்கும் துன்பங்களை பெற காரணமாக எக்காரியத்தையும் தான் செய்துவிடவில்லை என்று உறுதியாக அறிந்திருந்தார். பிரச்சனையை எதிர்கொள்ள வீரத்தோடு போராடுகிறார். வழி ஒன்றும் தெரியாமல் அலைகிறார். அவரது சிலுவையாகிய துன்பம் முழுவதும் பொருளற்றதாக தெரிகிறது. துன்பம் என்னும் இருளில் அலைந்து திரிகிறார். இச்சூழலில் உறவுகள் எல்லாம் பிரிந்து தனிமைப்படுத்தப்பட்டார். நண்பர்களின் வார்த்தைகள், உறவினர்களின் வார்த்தையும் யோபுவுக்கு ஆறதல் அளிப்பதற்கு பதிலாக எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தனவாக அமைந்தது. இச்சூழலில் யோபுவின் ஆன்மீக வளர்ச்சியின் உச்ச நிலை. ஆண்டவர் அவருடைய செல்வ சிறப்புக்களை மீண்டும் தந்தருளினார். யோபுவின் உறவுகள் எல்லாம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அவருடைய எல்லாச் சகோதரர்களும், அவரை முன்பு தெரிந்திருந்த அனைவரும் அவரது இல்லத்தில் வந்து அவரோடு விருந்துண்டனர். யோபு தனது துன்பத்தை வெற்றிகொண்டு உறவுகளை மீள்நிலைப்படுத்தினார். துன்பமாகிய சிலுவை மனிதனைத் திருத்துகிறது. பயிற்சி தருகிறது, தூய்மைப்படுத்துகிறது, உறவுகளை புதுப்பித்து மேலான வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது. இயேசுவின் சிலுவையும் இழந்து போன உறவுகளை மீண்டும் சரி செய்து மீள் நிலைப்படுத்துகிறது.

### 2. *உயிராற்றல் வழங்கி மீள்நிலைப்படுத்துதல் :* எபே. 2:5

“குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார்...”.

சாது சுந்தர்சிங் சாவின் நிலையிலிருந்து மீள் வாழ்வினை பெற்றபின்பு, தன் மேன்மை, ஆஸ்தி எல்லாவற்றையும் விட்டுவிட்டு சிலுவையில் காட்சி அளித்த இயேசுவைப் பின்பற்றி தன் வாழ்வை அவருக்கு அர்பணித்து, இரத்தம் படிந்த பாதங்களோடு பணி செய்து, அநேகரை சாவின் விழிம்பிலிருந்தும், பாவத்திலிருந்தும் மீட்டு கிறிஸ்துவின் அன்புக்குள் கூட்டி சேர்த்தார். இறைவன் தன்னை வாழ்கிற இறைவனாகக் காட்டுகிறார். நம்மை பொய்யிலிருந்து உண்மைக்கு நேராக

நடத்துகிறார். எனவே பழைமைவாத சிந்தனைகளை நம்மைவிட்டு அப்புறப்படுத்துவது அவசியம். இழப்பு இல்லாமல் ஒன்றும் கிடைப்பது இல்லை. இழந்தால்தான் நாம் பலவற்றை பெற முடியும். அர்ப்பணிப்பு இல்லாமல் முடியாது. மேலை நாட்டு நற்செய்தியாளர்கள் தங்கள் சுகபோகமான வாழ்வை இழந்தவர்களாய் பாவத்தில் வாழ்ந்து வாழ்ந்து வந்த நம்மீது அன்பு கொண்டு நம்மை சாவிலிருந்து மீட்டு எடுத்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினார்கள். நாம் மீள்வாழ்வு பெற்றிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆடுகளுக்கு வாழ்வு தரும்படி தம் வாழ்வை அர்ப்பணித்து சாவின் விழிம்பில் நின்ற நம்மை மீட்டெடுத்தார்.

எபேசு நகர இறைமக்களுக்கு, கடவுளின் திருவுளத்தால் திருத்தூதராயிருக்கும் பவுல் எழுதும் போது பாவங்களை முன்னிட்டு இறந்தவர்களாய் இருந்தீர்கள், இவ்வுலகப் போக்கின்படி, அதிகாரம் செலுத்தும் தலைவனுக்கு ஏற்ப வாழ்ந்து வந்தீர்கள். இறைவனுக்கு கீழ்ப்படியாமல் தீய ஆற்றலுக்குப் பணிந்து நடந்தீர்கள். இவ்வாறு தீய நாட்டங்களின்படி வாழ்ந்து, உடலும், மனமும் விரும்பியவாறு செயல்பட்டு, இறைவனின் சினத்திற்கும் ஆளாகி உறவுகளில் சிதைந்து நின்றீர்கள். இப்படிப்பட்ட உங்களை இறைவன் இயேசு கிறிஸ்துவின் வழியாக அன்பு கொண்டு குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நம்மை சிலுவை வழியாக மீள் நிலைப்படுத்தினார் என்று கூறுகிறார். ஆம் கிறிஸ்துவின் சிலுவை நம்மை சாவிலிருந்து மீட்டுள்ளது. நாம் மீட்கப்பட்டுள்ளது அவருடைய அருளால் ஆனதே.

### 3. *உடைவுகளை ஒன்றாக்கி மீள்நிலைப்படுத்துதல் :*

மாற். 10:52 b

“...அவர் மீண்டும் பார்வைப் பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழிநடந்தார்”.

“ரிபுத்” என்னும் எபிரேய சொல்லுக்கு “குணமாக்குதல்” என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. **குணமாக்குதல்** என்ற சொல்லுக்கு பொருள்: உடைந்ததை ஒன்று சேர்த்தல் (அல்லது) பழுதடைந்ததை பழுது நீக்கி சரிப்படுத்துதல் (அல்லது) மீட்பு ஆகும். குணமடைதல் என்பது ஆயுள் காலத்தின் நீட்சி, உள்ளத்தில் வெளிச்சம், சமூக நிலையில் முழுமை இந்த மூன்றில் ஏதேனும் ஒன்று குறைவுபடும் போது, அதை சரிசெய்து மீண்டும் முதல் நிலைக்குக் கொண்டு வருதல் ஆகும். இயேசு கிறிஸ்துவின் திருப்பணிகளில் ஒன்று குணமாக்குதல் திருப்பணி ஆகும். இயேசு கிறிஸ்து இந்த மண்ணில் திருப்பணி செய்த நாட்களில் இந்தத் திருப்பணியை நிறைவேற்றி புதிய வாழ்வை கொடுத்தார்.

மாற்கு 10:46-52. பகுதியில் பார்வையற்ற பர்திமேயு பார்வை பெறும் நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. திமேயுவின் மகன் பர்திமேயு இவன் பார்வையற்ற மனிதன். இவருடையத் தொழில் வழியருகே உட்கார்ந்து பிச்சை எடுத்து, அந்த பிச்சை பொருள்களில் வாழ்ந்து வந்தான். பிறருடைய உதவியினால் தான் வாழ்ந்தான். நாசரேத்து இயேசு தாம் போகிறார் என்று அவர் கேள்விப்பட்டு "இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று கூப்பிட்டு பார்வை பெற்றவன். அவனுடைய நம்பிக்கை பார்வையடையச் செய்தது. இயேசுவிடம் வருவதற்கு பல தடைகள் இருந்தன. இந்தத் தடைகளைத் தாண்டி இயேசுவிடம் வந்து, பார்வை பெற்ற உடன் இயேசுவுக்குப் பின் சென்றான். இயேசுவோடு நடந்தான். இதுவரை வாழ்ந்த வாழ்விலிருந்து இயேசுவினால் மீட்கப்பட்டு, புதிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டான்.

மனித இனத்திற்கு எல்லாக்காலத்திலும் ஒரு நம்பிக்கையின் நங்கூரம் தேவைப்படுகிறது. அது ஒருவருடைய சுய பெலத்தால் பெற இயலாது. ஒரு வெளிப்புற தூண்டுதல் அல்லது ஆற்றல், அதாவது இறைவனின் ஆற்றல் நமக்கு அவசியம் தேவை. இந்த ஆற்றல் மனித இனத்தின் பாவத்தழும்புகளை அனுபவித்து, அதை மேற்கொண்ட கிறிஸ்துவின் ஆற்றல் ஆகும். இயேசு சுமந்த சிலுவையால் உன்னத உறவுகளோடும், உயிராற்றலின் மேன்மையோடும், நிலையிலிருந்து, உடைவுகளிலிருந்து ஒன்றிக்கப்பட்ட அனுபவத்தோடும் மீள்வாழ்வுப் பெற்றுக் கொண்டவர்களாய் விசுவாசத் தடத்தினில் முன்னேறுவோம்.

அருள்திரு. **S.G. *பீபின்***

09-04-2017 **குருத்தோலை ஞாயிறு**

## கிறிஸ்து அமைதியின் அரசர்

**CHRIST : THE KING OF PEACE**

| | |
|---|---|
| செக். 9:1-12 | எபே. 2:11-22 |
| திபா. 24 | மாற். 11:1-11 |

**"மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்". செக். 9:9**

எருசலேம் யூதேயாவின் தலைமை இடம். பஸ்கா ஆசரிக்க உலகெங்கிலும் இருந்து வந்த யூதர்களால் பரபரப்பாக இருந்தது. நெருக்கடியாகக் கூட்டம் இருந்தபடியால் சுற்று வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் தங்கி இருந்தனர். இயேசு (மத். 21:17) பெத்தானியாவில் தங்கினார். இயேசுவுக்கு விலை பேசப்பட்டு இருக்கிறது என்பதை அறிந்ததும் துணிச்சலாக எருசலேம் நோக்கி பேரணி சென்றார். இறைவாக்கினர் சகரியா கி.மு. 540 ஆம் ஆண்டில் இயேசுவை அரசராக முன்னறிவித்தார். எருசலேம் வெற்றிப் பேரணிக்கு இயேசு எளிய விலங்காகிய கழுதையை தெரிந்து கொண்டார். இயேசு தாவீதின் சிங்காசனத்தை பெற்றுக் கொள்வார் என்பது மக்களின் எண்ணம். 'ஓசன்னா' என்று உரக்கக் குரல் எழுப்பினர். எங்களை மீட்டருளும் ஆண்டவரே (தி.பா. 118:23) எங்களுக்கு ரோமப் பேரரசின் அதிகாரிகள் ஏற்படுத்தும் பிரச்சனைகள், நெருக்கடிகள் ஏராளம். இப்போதே விடுவியும், காப்பாற்றும் என்று குரல் எழுப்பினர்.

உலக அரசர்கள் தங்கள் குடிமக்களை பாதுகாக்க போர்க்களத்தில் போரிடுவர். இயேசு ராஜா பாவத்தின் சம்பளமாகிய மரணத்தில் இருந்து விடுதலை வழங்க தம்மை அர்ப்பணித்த ராஜாதி ராஜா. எருசலேம் நகரவாசிகள் மற்றும் உலகமனைத்தும் இரட்சகராக ஏற்றுக் கொள்ள குருத்தோலை பவனியில் நித்திய ராஜா என்று வெளிப்படுத்தினார். (I தீமோ. 6:15) யூதருக்கு ராஜாவாக பிறந்து இருக்கிறவர் எங்கே (மத். 2:2) என்று கேட்டார்கள் ஞானிகள். பிலாத்து இயேசுவின் சிலுவையில் (யோவா 19:19) நசரேயனாகிய இயேசு, யூதருக்கு ராஜா என எழுதுவித்தான். இந்த ராஜா சமத்துவம் ஏற்படுத்தும் சமாதான ராஜா. இக்குருத்தோலை ஞாயிறில் நாம் கற்றுக் கொள்ளும் ஆவிக்குரிய சிந்தனைகளாக அகமகிழ்விக்கும், ஆளுகை செய்யும் ஆத்தும மீட்பராம் ராஜாவைத் தியானிப்போம்.

### *1. அகமகிழ்விக்கும் அரசர் :*

செக். 9:9 ... மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு. மக்கள் மகிழ்ச்சி வெளிப்படும் எருசலேம் பேரணி வாயிலாக முடிவில்லாத அமைதியை

தருகிறார். சோர்புற்று, அடிமைப்பட்டு வாழ்ந்த மக்கள் நீதியினால் வரும் அமைதியை கண்டடைய (மத். 21:4) இதோ உன் ராஜா சாந்த குணமுள்ளவராய் வருகிறார். பஸ்கா பண்டிகைக்காக அலங்கரிக்கப்பட்ட எருசலேமைப் பார்த்தார், கண்ணீர் விட்டழுதார் (லூக். 19:41) மக்களின் இருதயத்தின் துயரங்களை நோக்கிப் பார்த்தார். வெளியே பகட்டான வாழ்வு; உள்ளத்திலோ அமைதியற்ற நிலை. நிரந்தரமான அமைதி ஏற்படுத்த எருசலேம் பேரணி லூக். 18:31-ல் மனுஷ குமாரனைக் குறித்து தீர்க்கர்களால் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் எருசலேமில் படப்போகும் பாடுகள். பரிகாரங்கள், இழிநிலைகள் குறித்துப் பேசினார். மனித உள்ளங்கள் அமைதி கண்டு கொள்ள இயேசு பாடு படப் போகிறார். (எசா. 26:3) உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பி இருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். மலையின் நடுவில் இருந்த நீர் வீழ்ச்சியில் தண்ணீர் அதிவேகமாக பாய்ந்து கொண்டு இருந்தது. அந்த நீர் வீழ்ச்சியின் அருகில் ஒரு பாறை இடுக்கில் ஒரு சின்னப்பறவை தன் கூட்டைக்கட்டி, குஞ்சுக்களுடன் அமைதியாக வாழ்ந்து வந்தது. அங்கே ஆர்ப்பரித்துக் கொட்டிய நீர் வீழ்ச்சியின் இரைச்சலோ, வேகமோ எந்த பாதிப்பையும் அந்த குருவிகளுக்கு ஏற்படுத்தவில்லை. இவ்வுலகில் நம்மை ஆட்கொள்ளும் மன இறுக்கங்களை அகற்றி போராட்டங்களை விலக்கி இயேசு ராஜா, அமைதியின் அரசராக இருந்து சமாதானமாய் நம்மை வழி நடத்துவார்.

## 2. ஆளுகை செய்யும் அரசர்

(மத். 21:9) “தாவீதின் மகனுக்கு ஓசன்னா...” தாவீதின் குமாரன் என்று அறிந்து கொண்டவர்கள் இயேசுவின் அரசின் தன்மையை புரிந்து கொள்ளவில்லை. எனது அரசு இவ்வுலகத்துக்குரியது அல்ல என்றார். இன்றைய சமய, அரசியல் தலைவர்கள் தங்களை முடிசூடா மன்னர்கள் என பிரகடனப்படுத்தும் இந்நாட்களில் எளிய விலங்காகிய கழுதையின் மேல் உட்கார்ந்து எருசலேம் பேரணியில் வருகிறார். இறை நீதியை நிலை நாட்டும் இவருக்கு நீதி நிலை பெயராது வளையாத செங்கோல்; மக்களின் பேருவுகையில் வருகிறார். அநீதியை வெல்பவர், புதிய சமூகம் ஏற்படுத்தும் அரசர். (மத். 21:9). முன்னும் பின்னும் நடப்பவர்கள் “ஓசன்னா” என்றார்கள். ஆயுதங்களால் ஆளுகை செய்கிறவர் அல்ல. அன்பினால் ஆளுகை செய்து நம்முடன் இருக்கும் இம்மானுவேலர். (I சாமு. 17:47) ஆண்டவர் வாளினாலும், ஈட்டியினாலும் மீட்கின்றவர் அல்லர். பரிசேயர் எப்போது வரும் என்று கேட்டபோது “இதோ உங்களுக்குள்ளே இருக்கிறதே” என்றார். நியாயம் தீர்க்க வராமல் அன்புடன் ஆளுகை செய்ய வந்தார். வெற்றியின் அரசராகிய இயேசு தீயவனின் ஆளுகையை உடைத்து எறிந்தார். சிலுவையின் கீழ் நசுக்கினார். ஆகவே பரிசுத்தவான்கள் (வெளி. 7:9) குருத்தோலைகள் பிடித்து ஓசன்னா பாடி இறை சமூகத்தில் வெற்றி முழக்கமிடுகிறார்கள்.

## 3. ஆத்தும மீட்பின் அரசர் :

"உடன்படிக்கையின் இரத்தத்தை முன்னிட்டு சிறைப்பட்டிருக்கும் உன்னைச் சார்ந்தோரை நீரந்ந படுகுழியிலிருந்து விடுவிப்பேன்". இறைமக்களின் ஆன்மீகமையமான எருசலேமில் ஒரு புதிய உடன்படிக்கையை மனுக்குலத்திற்கு ஏற்படுத்த பவனியாக வருகிறார். கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே பலியினால் ஏற்பட்ட உறவை மாற்றி தாமே பலியாகி புதிய உடன்படிக்கை உறவை ஏற்படுத்துகிறார். மண்ணையும் விண்ணையும் இணைக்கிற அரசர். தங்கள் சுய நீதியாகிய மேல் வஸ்திரத்தை களைந்து இறை நீதியை ஏற்றுக் கொண்டு செயல்பட வருகிறார். பொருளாசை மாம்ச இச்சை பொறாமை, பெருமை, மாய்மாலம், வன்முறைக்கட்டுகள் அகற்ற கட்டப்பட்ட கழுதையை (மத். 21:2) கட்டவிழ்க்கச் செய்தார். இரு வழிச்சந்தியில் (மாற்கு 11:4) கட்டப்பட்ட கழுதை. இது இருமனமுள்ளவர்களாக பாவ, தீய வாழ்வில் இருந்து விடுதலை அடைவதைக் குறிப்பிடுகின்றது. இயேசு மரியாளின் வயிற்றில் கருவாக இருக்கும் போது கழுதை சுமந்தது. இப்போது ஆத்ம இரட்சகராக எருசலேம் பவனியில் கட்டவிழ்க்கப்பட்ட கழுதை சுமந்து வருகிறது.

இயேசு பாவத்தை மன்னிக்க மட்டுமல்ல பாவத்தில் இருந்து விடுதலை தந்து மீட்கவும் வந்த அரசர். சாது சுந்தர் சிங் கூறும்போது கிறிஸ்துவின் வழியாய் துன்பம் ஏற்கும் அன்பு ஆன்மீகத்தின் உயர்ந்த நிலை என்றார். ஆன்மாவிற்கு உயிரூட்ட வெள்ளியோ, பொன்னோ போதாது. இயேசுவின் பலியினால் தான் முடியும் என்றார். கிறிஸ்துவில் இருந்து புறப்படும் ஒளி அலைகள் ஆத்துமாக்களை மகிழ்வூட்டும் என்றார். மீட்பு அருளும்படியாக எருசலேமிற்குப் பேரணியாகச் சென்றார். ஆத்துமா அழிந்து போக விடப்படுவதில்லை. பாவ வியாதியினால் துன்புறவுவோர் சுகமடைய இரட்சிக்கும் அரசர். இந்த ராஜா ஸ்தோத்திரத்துக்குரியவர் (யோவா. 12:13).

குருத்தோலைத் திருநாளாகிய இன்று கிறிஸ்து என்னை சந்தித்து இருக்கிறார். இக்காலம் இரட்சிப்பின் காலம். அலட்சியப்படுத்தாமல் பகட்டான வாழ்விற்கு மட்டும் இடம் தராமல் ஆத்துமாவைக் குறித்த பாரம் தந்து தூய வாரம் அர்த்தமுடையதாக அமைய இயேசுவின் எருசலேம் பேரணி நம் வாழ்வில் அமைதியையும், அவர் அருளுகிற ஆசீர்வாதத்தையும் அனுபவிக்கும் காலங்களாக ஆண்டவர் இயேசு தந்தருள்வாராக.

**அருள்திரு.T. ஜாண் பீற்றர்**

10-04-2017



## வெளிவேடத்தை வெறுக்கும் வேந்தர்

மத். 21:18-22

**"இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்." மத். 21:19**

ஜாண் லென்னன் என்பவர் மிகச்சிறந்த ஆங்கிலக் கவிஞராகவும், பாடகராகவும் அறியப்பட்டவர். பாடல் எழுதுவதும், பாடுவதும் அவருடைய தொழிலாக இருந்தாலும், சமூகம் சார்ந்த, மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் பங்கேற்றவர். நாடுகளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், அமைதி வேண்டியும் பல நாடுகளுக்குச் சென்று பரப்புரை ஆற்றியுள்ளார். ஆதலால் அமைதியின் தூதுவர் என அழைக்கப்பட்டார். 1980, டிசம்பர் 8 ஆம் நாள் மார்க் டேவிட் சாப்மேன் என்ற இளைஞனால், ஜாண் லென்னன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது இறப்புக்குப் பிறகு அவரைப் பற்றி வெளிவந்த தகவல்கள் அவரது வெளிவேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. உலக அமைதி குறித்து உரையாற்றி வந்த ஜாண் லென்னன் IRA (Irish Republican Army) என்ற தீவிரவாத இயக்கத்தோடு அதாவது தங்களது உரிமையை வன்முறையின் வாயிலாகவும், பயங்கரவாதச் செயல்கள் வழியாகவும் அடைய முயன்ற அமைப்போடு தொடர்பு வைத்திருந்தார் எனவும் அவ்வியக்கத்தின் பொருளாதாரத் தேவைக்காக இசை நிகழ்ச்சி நடத்தினார் எனவும் தகவல்கள் பரவின. IRA இயக்கத்தினரே இதை ஒத்துக் கொண்டனர்.

பேச்சு, அமைதியை வலியுறுத்தி, ஆனால் செயல்பாடுகளோ, வன்முறையை ஆதரித்து. இத்தகைய முரண்பட்ட வாழ்க்கை முறையைத் தான், நாம் ஒவ்வொரு மனிதரிலும் காண்கிறோம்.

பாவனை புரிதலும், பாசாங்கு செய்தலும் திருமறைக்கும் கடவுளுக்கும் எதிரானது என்பதைத் தான் மத். 21:18-22 வரை அடங்கியுள்ள வசனங்களின் வழியாக நாம் அறிந்து கொள்கிறோம்.

வில்லியம் டெல்ஃபோர்டு (William Telford) என்பவர் "The Barren Temple and the Withered Tree" என்னும் நூலில், ஆண்டவர், எருசலேம் கோவிலைத் தூய்மையாக்கிய நிகழ்வையும், கனியற்ற அத்திமரத்தைச் சபித்த நிகழ்வையும் ஒப்புமைப்படுத்திப் படிக்க வேண்டும் என்கிறார்.

எருசலேம் பவனியின் வழியாக, விடுதலையருளும் வேந்தராகத் தம்மை அறிமுகம் செய்த ஆண்டவர், தாம் அருளும் விடுதலையைச் சொந்தமாக்குவோர் வெளிவேடக்காரர்களாக அல்ல, சான்றுள்ள வாழ்வில் வெளிப்படைத் தன்மையுடைவர்களாக இருக்க வேண்டுமென இவ்வத்தி மரத்தின் வாயிலாக வலியுறுத்துகிறார்.

கனியற்ற அத்திமரத்தைக் குறியீடாகச் சித்தரித்து, ஆண்டவர் நமக்குக் கற்றுத்தருவது என்ன? என்பதைக் குறித்து தியானிப்போம்.

## *1. வெறுமையை வெளியரங்கமாக்கும் ஆண்டவர் :*

மத். 21:18 இல் ஆண்டவருக்குப் பசி உண்டாயிற்று எனச் சொல்லப்பட்டுள்ளது. "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல கடவுளின் வாய்ச் சொல்லாலும் வாழ்வர்" (மத். 4:4) என்று கூறிய ஆண்டவர், உண்மையிலேயே பசிக்குக் கனி தர மறுத்ததால் தான் மரத்தைச் சபித்தாரா?

உணவையும், உண்பதையும் ஒரு பொருட்டெனக் கருதாமல் ஊழியம் செய்த உன்னதர் (மாற். 3:20) தம் பசியாற்ற பழம் தரவில்லை என்பதுதான் சபித்தலுக்கான காரணமா?

அன்பு செய்யும் இலாசரும், ஆகாரம் தரும் மார்த்தாவும், அளவளாவும் மரியாவும் இருக்கிற பெத்தானியாவிலிருந்து 1.5 மைல் (2.4 km) தொலைவிலுள்ள எருசலேமுக்கு வரும் வழியில் ஆண்டவருக்குப் பசியுண்டாயிற்றா?

ஆண்டவருக்குப் பசிதான் உண்டாயிற்று. ஆனால் அப்பசி, அவருடைய காலத்தில் வாழ்ந்த ஏழைகளின், வறுமையில் வாடுவோரின் பசியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாய் உள்ளது. ஆண்டவருக்கு ஏற்பட்ட பசி, அது ஏழைகளின் பசி, துன்புறுவோரின் பசி, இவ்வுலகில் ஒருவேளை உணவு கூட கிடைக்கப் பெறாமல் மடிவோரின் பசி. அந்தப் பசியைப் போக்குவதற்கான வழி ஆன்மிக மையமான ஆலயத்தில் உண்டா? என்பதைக் காட்ட அத்திமரத்தைக் குறியீடாகக் காட்டி, ஏழைகளை, ஒடுக்கப்பட்டோரைப் பேணாத, வாழ்விக்காத, செயலற்ற வெறுமையான ஆன்மிகத்தை வெளியரங்கமாக்குகிறார் ஆண்டவர்.

ஒருநாள் சீடர் ஒருவர், உலகத்தார்க்கு உண்மையை விளக்க ஓர் உரை நிகழ்த்தப் போவதாக அறிவித்தார். உடனே குரு, அச்சீடரிடம், நானும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்பேன். உன் உரையை வைத்து உனது அறிவு முதிர்ச்சியை அறிந்து கொள்ளலாம் என்றார்.

குறித்த நாளில் சீடர், உணர்வுப்பூர்வமாக அற்புதமான ஓர் உரையை ஆற்றினார். அவ்வுரை, கூட்டத்தினரை மெய்சிலிக்க வைத்தது. சொற்பொழிவு முடிந்ததும் ஒரு பிச்சைக்காரர் மேடைக்கு வந்தார். அவரைக் கண்டதும் அச்சீடர் தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிக் கொடுத்தார். இச்செயல் அனைவரையும் கவர்ந்தது. எல்லோரும் அந்தச் சீடரின் உரையை மட்டுமன்று பரிவுமிக்க அவரது செயலையும் புகழ்ந்தனர்.

ஆனால் குரு சொன்னார், உனது உரையில், உயர்வு நவிற்சித் தனமும் (மிகைப்படுத்திக் கூறல்) பசப்பு வார்த்தைகளும் நிறைந்திருந்தன. அவை இயல்பிலிருந்து வரவில்லை. ஏனென்றால் நீ இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்றார்.

ஏன் இல்லை? என்று ஏமாற்றத்தோடு சீடர் கேட்டார்.

இரண்டு காரணங்கள், அந்தப் பிச்சைக்காரனுக்குத் தன்னுடைய தேவையைச் சொல்வதற்கு நீ வாய்ப்பு வழங்கவில்லை. இரண்டாவது, உதவி செய்ததன் வழியாக உன்னைக் குறித்து நீயே கர்வப்பட்டுக் கொண்டாய்.

இவ்விரு காரணங்களும் ஏழைகளுக்கு உதவும் தற்காலத் திருச்சபைகளின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒருபோதும் நாம் ஏழைகளின் தேவை என்ன என்பதைச் செவிகொடுத்துக் கேட்பதில்லை. மாறாக, அவர்களுக்கு எது தேவை என்பதை நாம் தான் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கிறோம். மேலும் உதவி செய்வது கர்வம் கொள்வதற்காக அல்ல, அதுவே நம் வாழ்வின் நோக்கமும் கடமையுமாக வேண்டும். ஏழைகளுக்குத் தகுதி பாராமல் உதவவும், ஏழ்மையை இல்லாமலாக்கவும் எச்செயலையும் புரியாமல் காணப்படும் நம் ஆன்மிக அலங்காரம் ஆண்டவரின் பார்வையில் வெறுமையாகவே கருதப்படும். ஆகவே நம் திருச்சபை ஏழைகளுடையதாக மாற்றம் பெற வேண்டும். நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள் என்னும் ஆண்டவரின் வார்த்தைகள் எப்போதும் நினைவில் நிறுத்தத்தக்கவை (மத். 25:35).

## *2. வெளிவேடத்தை வெறுக்கும் ஆண்டவர் :*

மத். 21:19 இல் ஆண்டவர், இலைகளைத் தவிர வேறு எதையும் அந்த அத்திமரத்தில் காணவில்லை என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மாற்கு நற்செய்தியாசிரியர், அது "அத்திப்பழக் காலம் அல்ல" என்று குறிப்பிடுகின்றார் (மாற். 11:13).

பொதுவாக, பாலஸ்தீனாவில் காணப்படும் அத்திமரங்களில் கனி தரும் காலத்தின் தொடக்கத்திலோ அல்லது மரம் முழுவதும் கனி விளைந்த பிறகோதான் அதில் இலைகள் உருவாகி மரத்தை நிறைக்கும்.

ஓர் அத்திமரம் இலைகள் நிறைந்து காணப்படுகிறதென்றால் அதில் கனிகளும் நிறைந்துள்ளன என்று பொருள். ஆகவேதான், ஆண்டவர், இலையடர்ந்த அவ்வத்திமரத்தில் ஏதாகிலும் கிடைக்குமா என்று தேடினார். (மாற். 11:13). அதில் இலைகளைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது வழக்கத்திற்கு மாறான ஒன்று.

இலைகள் நிறைந்த அத்திமரத்தின் வெளிப்புறத் தோற்றம் கனிருப்பது போலக் காட்சியளித்தது. D.A. கார்சன் (D.A. Carson) என்ற திருமறை அறிஞர், "இந்த அத்திமரம் அதில் நிரம்பியிருந்த இலைகளால் தனித்து நின்றது. அதன் இலைகள், தன்னில் கனி இருப்பதாக விளம்பரப்படுத்தியது. ஆனால் அந்த விளம்பரம் தவறானது, போலியானது" (The tree stood out, because it was in leaf. Its leaves advertised that it was bearing, but the advertisement was false) என்கிறார்.

இலையடர்ந்த அத்திமரம் (Leafy fig tree), ஆரவாரமான எருசலேம் கோவிலை (Bustling Temple) உருவகப்படுத்தி நின்றது. இலைகளடர்ந்த மரம், காற்றில் சலசலத்துக் கொண்டே இருக்கும். எருசலேம் கோவிலும் அதன் வளாகமும் ஆரவாரமும், சலசலப்பும் நிறைந்து காணப்பட்டது. அதிக இலையும், ஆரவாரமும் மரம் உயிரோடிருப்பதன் அடையாளம். ஆனால் இங்கோ கனி இல்லை.

ஆண்டவர், இத்தகைய பாவனையை, பாசாங்கை, வெளிவேடத்தைக் கண்டிக்கின்றார். இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய் என்று சபிக்கின்றார்.

தற்காலங்களில், நம் திருச்சபைகளில், அத்திமரத்தில் காணப்பட்ட இலைகளைப் போன்று, எத்தனை! எத்தனை! வெளிப்புற அலங்காரங்கள், கலைநயமிக்க கோபுரங்கள், வகை வகையான வழிபாடுகள், ஆரவாரத்திற்கு (இலைகளுக்கு) அளவேயில்லை. ஆனால் கனிகள் (நற்செயல்கள்) உண்டா?

போலியாக, வேடம்புனைந்து வாழ்வாரை இஸ்ரயேலரை முன்னிறுத்தி கடவுள் எச்சரிக்கின்றார். “நான் கனிகளை ஒன்று சேர்க்க விரும்பினேன். ... அத்திமரங்களில் கனிகள் இல்லை. இலைகள் கூட உதிர்ந்து போயின. நான் அவர்களுக்குக் கொடுத்தது, அவர்களிடமிருந்து நழுவிப் போயிற்று” (எரே. 8:13). இந்த அவல நிலை நமக்கு ஏற்படா வண்ணம் நமது வாழ்வை இலைகளால் மட்டுமல்ல, கனிகளாலும் அலங்கரிப்போம்.

**திரு. B. சாம் ஜெபசிங்**

## அன்பைக் கற்பிக்கும் அன்பர்

மத். 22:34-40

**"...உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து...உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக..." மத். 22:39,40**

அன்பை ஆதாரமாகவும், அடித்தளமாகவும், ஆயுதமாகவும் கொண்டு அகிலத்தில் இறையாட்சியை நிறுவிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் போதனை சாமானிய மக்களை தம் வசம் இழுத்தது. மக்கள் திரள் ஆண்டவர் சென்ற இடமெல்லாம் திரண்டது. ஆனால் சமயப்பற்றாளர்கள் எனத் தங்களைத் தாங்களே மெச்சிக் கொண்ட பரிசேயர்கள், சதுசேயர்கள், திருச்சட்ட அறிஞர்கள் கேள்விக் கணைகளோடு ஆண்டவரை நெருங்குகிறார்கள்.

சிக்க வைக்கும் கேள்விகளோடு, வந்தவர்களை சிந்திக்க வைத்து செயல்படத் தூண்டிய இயேசு கிறிஸ்துவின் அன்பு போதனையால் இன்று ஈர்க்கப்படாதவர்கள் யார்?

"என்ன பேசுவது? எப்படிப் பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம் நீங்கள் பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் அருளப்படும்" (மத். 10:19). என்றும் உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும், எதிர்த்துப் பேசவும் முடியாது என்றும் கூறிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மை கூரிய அம்பு போல் தாக்கிய கேள்விகளுக்குத் தகுந்த பதில் கொடுத்து தலைகுனிய வைத்தார்.

அவற்றில் பரிசேயர் கூட்டம் கேட்ட கேள்விக்கு ஆண்டவர் கொடுக்கும் பதிலை மட்டும் தியானித்து இந்தப் புனிதவாரத்தில் நம்மை புனிதமாக்கிக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

### *1. அன்பை மறந்த பரிசேயர்*

பரிசேயர் என்பதற்குப் "பிரிந்து இருப்பவர்கள்" என்று பொருள். அசமோனியப் பரம்பரையினரின் ஒழுக்கக்கேடான வாழ்வையும், அவர்கள் யூதர்களிடையே கிரேக்கக் கலாச்சாரத்தைப் புகுத்தினதையும் எதிர்த்து எழுந்ததால், இப்பெயர் இவர்களுக்கு பட்டப் பெயராக இவர்களுடைய எதிரிகளால் வழங்கப்பட்டிருக்கலாம் எனப் புரிந்து கொள்ள முடிகிறது.

யூத முறையைச் சாராத பிற நாட்டுப் பண்பாடுகளிலிருந்தும், மறை ஒழுக்கத்திற்கும், சட்டத்திற்கும் முரண்பட்ட அனைத்திலிருந்தும் பிரிந்து வாழ்ந்தவர்கள் பரிசேயர்கள். இவர்கள் யூத இனத்தை கடவுள் ஆட்சி செய்கிறார் எனக் கூறினர். கடவுளே தங்கள் அரசர்; மற்றய ஆட்சிமுறை யூதர்கள் மேல் புகுத்தப்பட்டால் அது ஓர் உரிமை பறிப்பாகும் எனக்

கருதினர். அவர்களது மதம் மோசே அளித்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

இப்பரிசேயர் குழுவினர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு பல இடங்களில் தொடர்பு கொள்கின்றனர். நற்செய்தியின் தொடக்கத்திலிருந்தே இருவருக்குமிடையே எதிர்ப்பும் பகைமையும் இருந்து வருகிறது. ஏன் என்றால் தாங்கள் கொண்டிருந்த சமயத்தலைமைப் பதவியை இயேசுகிறிஸ்து கைப்பற்றிக் கொள்வார் என்ற அச்சம்தான் ஆண்டவரை பரிசேயர் பகைக்கு காரணமாயிருந்திருக்கலாம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடிக்கக் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். அவரது பேச்சில் குற்றம் கண்டுபிடிக்க முயல்கின்றனர் (மத். 22:15, மாற். 12:13, லூக். 20:20). அந்நோக்குடன் சட்டம், மெசியா, இறையரசின் வருகை இவற்றைப்பற்றிய விளக்கம் கேட்கின்றனர் (மத். 22:34). பரிசேயர்கள், திருச்சட்டத்தின் அன்புமயப் போதனைகளைப் புறந்தள்ளிவிட்டு, மக்களை அடிமைப்படுத்தும் நோக்கோடு திருச்சட்டத்தை எழுத்துக்கு எழுத்தாக பொருள் கொண்டனர். ஆண்டவரையும் அத்தகைய நோக்கோடுதான் அணுகினர். ஆனால் ஆண்டவரின் எதிர்வினை என்ன?

## *2. அன்பை கற்பிக்கும் ஆண்டவர் :*

இப்பகுதி மத்தேயுவிலும், மாற்குவிலும் ஒரே சூழலில் காணப்படுகின்றன (மாற். 12:28-34). ஆனால் லூக்காவில் எருசலேம் பயணச் சூழலுக்கு முன்பே இடம் பெற்றுவிடுகின்றது (லூக். 10:25-28). மாற்குவில் கேள்வி எழுப்புவது ஒரு சட்ட அறிஞர் மட்டும், அவர் உண்மையான ஆர்வத்துடன் கேள்வி கேட்கின்றார். மத்தேயுவிலோ பரிசேயர்கள் ஒன்று சேர்ந்து அவரை மடங்கடிக்க வேண்டும் என்ற நோக்கோடு கேள்விகளை எழுப்புகின்றனர்.

"போதகரே திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?" என்று கேட்டார்.

ஆண்டவர் கூறும் ஆழமான வாழ்வு சார்ந்த போதனை.

"கடவுளை அன்பு செய்; மனிதனை அன்பு செய்" என்பது. இவை ஒன்றோடொன்று தொடர்பற்ற கட்டளைகள் போன்று தோன்றினாலும், ஆழமாக நாம் தியானித்தால் இரண்டுமே வெவ்வேறான கட்டளைகள் அல்ல. அதாவது ஒரு கட்டளையில் மற்ற கட்டளை பொதிந்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

'கடவுளை அன்பு செய்' என்ற கட்டளையை எடுத்துக்கொண்டால் கடவுளுக்கு இரு பரிமாணங்கள் உண்டு. ஒன்று கடந்து நிற்கும் தன்மை (Transcendent). மற்றொன்று மனிதருக்குள்

இருக்கும் தன்மை (Immanence). எனவே கடவுளை அன்பு செய்தல் என்றால் எங்கோ இருக்கின்ற கடவுளை அன்பு செய்வது மட்டுமல்ல மனிதனுக்குள் தம்மை மறைத்து வைத்திருக்கிற கடவுளையும் அன்பு செய்வதும்தான்! இன்னும் தெளிவாகச் சொன்னால் மனிதனை அன்பு செய்யாமல் அவனுக்குள் இருக்கின்ற கடவுளை அன்பு செய்வது சாத்தியமில்லை.

அதேபோல 'மனிதனை அன்பு செய்' என்ற கட்டளையைப் பற்றி தியானிக்கும்போது; மனிதனை அன்பு செய்யும்போது அவனுக்குள் உறைகின்ற கடவுளை அன்பு செய்யாமல் இருக்க முடியாது.

கடவுள் இல்லை என்பவர்கள் கூறும் விளம்பரக் கவர்ச்சி வாசகம், 'கடவுளை மற; மனிதனை நினை.' உண்மையில் இது அடிப்படையற்ற வாதமே! சுருங்கச் சொன்னால் கடவுளன்பு இல்லாமல் மனித அன்பு இல்லை. மனித அன்பு இல்லாமல் கடவுள் அன்பு இல்லை. இவை இரண்டில் ஏதாவது ஒன்றுதான் நம்மிடம் உண்டு என்று எண்ணினோம் என்றால் அந்த அன்பு உண்மையான அன்பு இல்லை.

இத்தகைய பொருள்பட ஆண்டவர் இயேசு கிறிஸ்து திருச்சட்ட அறிஞர்களுக்குப் பதில் தந்து, அவர்கள் வாயை அடைத்தார்.

அன்பர்களே! "கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட கட்டளை. (1 யோவா 4:21).

இறைவனை அன்பு செய்வது என்பது ஒரு கட்டளை அல்ல; மாறாக ஒரு பாக்கியம். இறைவனை முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் அன்பு செய்யும்போது இறைவன் நம்மை முழுமையாக அன்பு செய்வதை உணர முடியும். இறைவனின் அன்பை சுவைக்கத் தொடங்கும் போது நாம் எதைக்குறித்தும் கவலைப்படத் தேவையில்லை. காரணம், இறைவனே நம் சார்பாக இருக்கிறார் என்ற உண்மையைப் புரிந்து இந்தப் புனித வார நாட்களுக்குள்ளே பயணிப்போம். இயேசு கிறிஸ்துவின் சிலுவை வழி உயிர்ப்பின் உயர்வை நமதாக்குவோம், ஆமென்.

**அருள்திரு. S.M. டேனியல் தேவதாசன்**

12-04-2017



## மரபுகளை உடைக்கும் மன்னர்

மத். 26:6-13

**“... இவரும் நினைவு கூரப்படுவார்.” மத். 26:13**

இந்தியாவில் புகழ்பெற்ற திரைப்பட நடிகராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் விளங்குபவர் அமீர்கான். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது ஒரு நிருபர் அவரிடம், நீங்கள் தேர்ந்தெடுத்து நடிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் திரைப்படங்களும், அதற்கு நீங்கள் அளிக்கும் முழு ஈடுபாட்டுடன் கூடிய அர்ப்பணமும் நீங்கள் ஒரு “Perfectionist” (முழுமையான ஒப்படைப்போடு எந்த ஒரு செயலையும் நேர்த்தியாகச் செய்பவர்) என்பதைக் காட்டுகிறது. இது குறித்து உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார். அதற்கு அவர், இப்படி எந்த ஓர் அடையாளத்திற்குள்ளோ, பட்டப் பெயர்களுக்குள்ளோ என்னை நான் அடைத்துக் கொள்ள விரும்பவில்லை. என்னைப் பொறுத்த வரையில் மனிதரில் முழுமை என்பது இயலாத ஒன்று. அதுவும் கலைப் படைப்புலகில் Perfection என்பதற்கான வாய்ப்பே இல்லை. எந்த ஒரு கலையையும் படைத்தபின்னர், மனிதர் மத்தியில் அப்படைப்பு குறித்து வித்தியாசம், வித்தியாசமான கருத்துகள் எழுவது இயல்பு. இப்படியிருக்கையில் எப்படி ஒரு Perfect Idea என்ற ஒன்று இருக்க முடியும்.

ஆகவே, Perfectionist என்று அழைக்கப்படுவதற்கு நான் தகுதியானவன் அல்ல, வேண்டுமானால் நீங்கள் என்னை “Passionate” (உணர்வுமிக்கவன்) என்று அழைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இவ்வுலகில் கடவுளைத் தவிர வேறு எவரும் நிறைவுள்ளவர் (Perfectionist) இல்லை. ஆனால் மனிதர்களாகிய நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்பு, நாம் கடவுளைப் போல நிறைவுள்ளவர்களாக வேண்டும் என்னும் அழைப்பாகும் (மத். 5:48). நிறைவுள்ளவராவதென்பது ஒரே செயலால் நடந்து விடுவதன்று; மாறாக இது ஒரு தொடர் முயற்சியாகும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சீடர்களிடையே கூட தங்களுக்குள்ளே யார் சிறந்தவர்? (Who is the greatest) என்ற போட்டி மனநிலை இருந்துள்ளது (மாற். 9:33, 34).

ஆனால் மத். 26:6-13 பகுதியில் சொல்லப்பட்டுள்ள நிகழ்வு, ஆண்டவருக்காக சிறந்த செயலைப் புரிந்த (great deed) ஒரு பெண்மணி அவரால் பாராட்டப் பெற்று மேன்மைப்படுத்தப் பெற்றார். ஆண்டவர், மதிப்புமிக்க (Valuable) விலைமதிப்பற்ற (Priceless) செயல் எனப் பாராட்டிய “ஆண்டவர் அருட்பொழிவு” செய்யப்பட்ட நிகழ்வின் வாயிலாக அவர் நமக்குக் கற்பிக்கும் உண்மைகளைத் தியானிப்போம்.

### 1. நிந்தையா? விந்தையா? :

மத். 26:6-13 வரையுள்ள பகுதியில் பெண் ஒருவர் ஆண்டவரின் தலைமீது நறுமணத் தைலம் ஊற்றியது குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நடைபெற்ற இடமும் ஆண்டவரை அபிஷேகம் செய்த பெண்ணும் பல உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றனர்.

மத். 26:6 இல் தொழுநோயாளர் சீமோனின் இல்லம் என்று மத்தேயு நற்செய்தி ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இந்தச் சீமோன் தொழுநோயிலிருந்து நலம் பெற்றவர். ஆயினும் இவரை மத்தேயு, தொழுநோயாளர் சீமோன் என்றே குறிப்பிடுகிறார். ஒருவர் தொழுநோயிலிருந்து நலம் பெற்ற பிறகும் அவரை முழுமனதோடு அன்றைய சமூகம் ஏற்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. இப்படிக் கருதப்பட்டிருப்பது சீமோனுக்கு நிந்தையைத் தந்திருக்கக் கூடும்.

மத்தேயு, "ஒரு பெண்" (மத். 26:7) என்று குறிப்பிடுபவரை லூக்கா "பாவியான பெண்" (லூக். 7:37) என்று அறிமுகம் செய்கின்றார்.

தொழுநோயை அளவீடாக வைத்து சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு நிந்தையை அனுபவிக்கும் சீமோனையும் பாலின பாகுபாட்டால் பாவி என முத்திரை குத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்ட பெண்ணையும் ஆண்டவர் ஒரே இடத்தில் சந்திக்கின்றார்.

ஆண்டவர், அவர்களோடு இருப்பதன் வாயிலாக அவர்களின் நிந்தையை அறிகின்றார். அதை அகற்றி, அவர்கட்கு அங்கீகாரம் வழங்கி விந்தைக்குரியவர்களாக மாற்றுகின்றார்.

சீமோன் கூட ஒரு கட்டத்தில், இவர் இறைவாக்கினராயிருந்தால், ஏன் பாவியான பெண்ணை அண்மையில் வரவும், அவரைத் தொட்டு அபிஷேகம் செய்யவும் அனுமதிக்கவும் வேண்டும் எனத் தமக்குள்ளே எண்ணுகின்றார் (லூக். 7:39).

ஆனால் ஆண்டவரோ, தம்மை அபிஷேகம் செய்யும் வாய்ப்பை ஒரு பெண்ணுக்குத் தந்து அவரைக் கனப்படுத்தி வியப்பை ஏற்படுத்துகின்றார்.

ஆண்டவரின் வாழ்வில் மூன்று முக்கிய நிகழ்வுகள். பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு. ஆண்டவரின் பிறப்பு வெளிப்படையாக முதலில் அறிவிக்கப்பட்டது ஒரு பெண்ணுக்கு (லூக். 2:31). அவருடைய இறப்புக்கு (அடக்கம் செய்யப்படுவதற்கு) அடையாளமாக அவரை அபிஷேகம் செய்யும் வாய்ப்பும் ஒரு பெண்ணுக்குத் தரப்படுகிறது (மத். 26). உயிர்த்த ஆண்டவரை முதலில் கண்டதும் ஒரு பெண்தான் (யோவா 20). இப்படி ஆண்டவர் தம் பணியிலும், இறைவெளிப்பாட்டிலும் நிந்தைக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமையளித்து அவர்களை விந்தைக்குரியவர்களாக மாற்றுகின்றார்.

ஆண்டவரை அபிஷேகம் செய்யும் போது உடைக்கப்பட்டது படிகச் சிமிழ் மட்டுமல்ல, காலம் காலமாக பெண்களை இரண்டாம்

பட்சமாக பாவித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக சமூகம் ஏற்படுத்தி வைத்திருந்த தடைகளும், மரபுகளும் இப்பெண் கிறிஸ்துவை அபிஷேகம் செய்ததன் வாயிலாக உடைக்கப்பட்டன.

இப்பெண் ஆண்டவரை அபிஷேகம் செய்வதைக் கண்டதும், பரிசேயராகிய சீமோன், யூதாஸ் மற்றும் ஏனைய சீடர்கள் தங்களுக்கே உரிய ஆணாதிக்க மனோபாவத்தோடு இப்பெண்ணைக் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால் ஆண்டவர், "ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்?" (Why do you trouble the women) என்றும் "இவளை விட்டு விடு" (Leave her alone) என்றும் கூறுவது பெண்ணடிமைத் தனத்தை எதிர்ப்பதாயும், பெண்விடுதலையை வலியுறுத்துவதாயும் உள்ளது.

Women in general have the sense of the person much more than men have. This means that they have a special missions, which is to reintroduce love, to give back its humanity to a world which remains so glacial when men alone have build it". என்ற பால் டூர்னியரின் (Paul Tournier, Swiss Psychiatrist) வரிகள் பெண்களின் மேன்மையை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

### *2. விரயமா? கிரயமா? :*

விலையுயர்ந்த நறுமணத் தைலத்தால் ஆண்டவரை அபிஷேகம் செய்வதைக் கண்ட சீடர்கள் கோபம் கொண்டு ஏன் இதை விரயமாக்க வேண்டும்? நல்ல கிரயத்திற்கு விற்று ஏழைகளுக்கு உதவலாமே என்று கூறினார் (மத். 26:8, 9).

ஆனால், ஆண்டவரோ, இப்பெண் செய்ததுவே மதிப்புமிக்கதும், அழகானதும், விலையேறப் பெற்றதுமான செயல் என்று பாராட்டுகின்றார்.

இது விரயமோ அல்லது கிரயம் சார்ந்த ஒன்றோ அல்ல. இது அப்பெண் தம் மீது கொண்ட அதீத அன்பின், நன்றியுணர்வின் வெளிப்பாடு என்று அப்பெண்ணின் செயலை மெச்சுகின்றார்.

உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் எடுத்துக் கூறப்படும் இவரும் நினைவு கூரப்படுவார் என்று இப்பெண்ணுக்கு ஆண்டவர் அளித்த அங்கீகாரம் திருமறையில் வேறு எவருக்கும் கிடைக்கப் பெறாத ஓர் ஆசியாகும்.

இத்தவக்காலத்தில் ஆண்டவரை நெருங்கிச் சேர்வதற்கும், அவரது அருளாசியை அனைவரும் எவ்வித வேறுபாடின்றி பெறுவதற்கும் தீய மரபுகளை உடைத்து வாழ்வின் விலையேறப் பெற்றவைகளைக் கிரயப் பொருளாகப் (வியாபாரப் பொருளாக) பாராமல் ஆண்டவருக்காக அவைகளைத் தருவோம்.

**அருள்திரு. R. ராஜபால்**

13-04-2017

வியாகுல வியாழன்

# கிறிஸ்து : வாழ்வருளும் உணவு

**CHRIST : THE LIFE GIVING BREAD**

| | |
|---|---|
| வி.ப. 12:12-20 | 1 கொரி. 11:23-29 |
| தி.பா. 116 | யோவா. 6:47-58 |

**"... வாழ்வு தரும் உணவு நானே." யோவா 6:51**

இஸ்ரயேலர் வரலாற்றில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையும் நாளுக்கு முன் இறைவன் மோசே வழி ஒவ்வொரு இஸ்ரயேல் குடும்பத்தினர் தாங்கள் எகிப்திலிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமாகி தங்கள் உடமைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். பின் குடும்பத் தலைவர் 1 வயது நிறைந்த ஆண் ஆட்டுக் குட்டியை அடித்து அதன் இரத்தத்தைத் தங்கள் வீட்டின் கதவின் இருநிலைகளிலும் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். அதன்பின் ஆட்டுக் குட்டியின் மாம்சத்தை சுட்டு புளிப்பில்லா அப்பத்துடனும் கசப்பான கீரையுடனும் புசிக்க வேண்டும். இந்த உணவை காலில் காலணி அணிந்து கையில் தடியை பிடித்துக் கொண்டு புசிக்க வேண்டும். அப்போது சங்காரதூதன் வாயிலாக எகிப்தின் மக்களில் தலையீற்றுக்கள் தலைப்பிள்ளைகள் சங்கரிக்கப்பட்டதால் அழுகையின் குரல் கேட்கப்பட்டது. உடனே பார்வோன் மோசே, ஆரோனை அழைத்து மக்களை இறைவனை ஆராதிக்க அனுப்பினான். இந்த உணவு பஸ்கா உணவாக மக்கள் உட்கொண்டு இஸ்ரவேலரை இறைவன் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த செயல்களை நினைவுகூர்ந்து ஆசரிக்க வேண்டும். பஸ்கா அனுசரிக்கும் நாள் நினைவுகூருதலின் நாளாய் இருத்தல் வேண்டும். இந்த பஸ்காவை ஒவ்வொரு இஸ்ரயேலரும் ஆசரிக்க வேண்டும் என்பது இறைக்கட்டளை. இயேசுவும் அரவது சீடர்களும் பஸ்கா விருந்தில் கலந்து கொண்டனர். அந்தப் பஸ்காவை ஆசீர்வதித்து தம் சீடர்களுக்கு தங்களுக்குள் பங்கிட்டு உண்ண கட்டளையிட்டார். அவ்வேளையில் புளிப்பிலா அப்பம், திராட்சை ரசம் வைத்திருந்த பாத்திரத்தையும் எடுத்து ஆசீர்வதித்து சிறப்பு உணவாகவும், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தம் பணியில் புதுவாழ்வின் அடிப்படை உணவாகவும் அமைத்தார்.

## *இந்த உணவு எத்தன்மையுடையது...*
## *1. ஆசீர்வதிக்கப்பட்ட உணவு"* (லூக். 22:19)

இயேசுவின் சீடர்களுடன் பஸ்கா அனுசரித்தபோது, புளிப்பில்லா அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்கு கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற எனது சரீரம். இந்த உணவு உட்கொள்பவர்கள் வாழ்வு பெறுவார்கள். இந்த அப்பத்தை உண்பவர் மரணத்திலிருந்து விடுதலை பெற்று நிலையான வாழ்வை சுதந்தரிப்பார். இந்த அப்பம் வாழ்வுக்காக பகிர்ந்து கொடுக்கப்பட்ட எனது சரீரம் எனத் தெளிவுபடுத்துகின்றார். யோ. 6:48-ல் நமது பாவத்தின் ஆக்கினைகளை, சுமந்து தீர்க்கவும் பாவத்தின் தண்டனைக்காய் அடிக்கப்பட்டு பிட்கப்படும் தம் உடலுக்கு ஒப்பாக

அப்பத்தை ஆசீர்வதித்தார், இந்த அப்பத்தில் பங்குபெறும் நாம் கடவுள் தந்த விடுதலை வாழ்வுக்காக நன்றி செலுத்தும் உணவாக அனுசரித்தால் மீட்பின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். நம் நித்திய வாழ்வுக்காய் பகிரப்பட்ட அப்பம், பிட்கப்பட்டு மக்கள் வாழ்வின் மேன்மைக்காய் ஆசீர்வதிக்கப்பட்டது. இந்த அப்பம், புசிப்போரை இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு பங்காளிகளாக மாற்றுகிறது. இந்த உணவு அனைத்து மக்களும் புதுப்படைப்பாக வாழ்வு பெற இறைவன் கொடுத்த ஈவு என்று சுட்டிக்காட்டுகிறார் யோவான்.

### *2. புது உடன்படிக்கையின் உணவு :*

இயேசு கிறிஸ்து ஏற்படுத்திய திருவிருந்து அனைத்து மக்களுக்காய் அருளப்பட்ட புதிய உடன்படிக்கையின் அங்கீகார உணவு. அப்பம் பகிரப்பட்டபின் திராட்சை ரசம் இருந்த பாத்திரத்தை எடுத்து தம் சீடர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுவோர் கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தால் பாவ மன்னிப்பை சுதந்தரிக்க புது உடன்படிக்கையின் உணவாயிற்று. இந்தப் புது உடன்படிக்கை வாழ்வின் மெய்மையை வெளிப்படுத்துகிறது. இந்த புதிய உடன்படிக்கையின் உணவு, பாதுகாப்பை அருள்கிறது. அடிக்கப்பட்ட ஆட்டின் இரத்தம் நிலைக்கால்களிலும், நிலையின் மேல் சட்டத்திலும் தெளிக்கப்பட்டதை கண்ட தூதன் விலகி செல்கின்றார். அழிவிலிருந்து இஸ்ரயேலரை பாதுகாத்தது நிலையில் பூசப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம். அதேபோல் இந்த புது உடன்படிக்கையின் வாயிலாக பாதுகாப்பும், நிலையான வாழ்வையும் நாம் சுதந்தரிக்க உதவி செய்கிறார். புதிய உடன்படிக்கை வழி நாம் மீட்பு பெறவும் தம்மையே கிரயமாக்கினார்.

### *3. பொதுவுடைமையின் உணவு :*

கிறிஸ்துவின் சரீரம், இரத்தம் ஒரு மனிதர்க்கோ ஒரு குலத்தார்க்கோ உரிமையுடையது அல்ல. இந்த உணவு இயேசு கிறிஸ்துவை மீட்பராகக் கொள்ளும் அனைத்து மக்களுக்கும் வாழ்வு தரும் உணவு. இந்த உணவால் பெறும் புதுவாழ்வு இறைமக்கள் என்ற புது உறவு. சாதி, மதம், நிறம், மொழி, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகியவைகளைக் கடந்து இயேசு கிறிஸ்துவுக்குள் நம்மை ஒன்றுபடுத்துகிறது. இந்த உணவு கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அங்கமாக மாற்றுகின்றது. எனவேதான் யூதர்கள் அனுசரித்த பஸ்காவில் அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதித்து அனைத்து மக்களும் கிறிஸ்துவில் ஒன்றிணைக்கும் பொதுவுடைமையின் உணவாயிற்று. இவ்வுணவால் பகை தகர்க்கப்பட்டு மக்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையுமாக்கப்படுகின்றோம்.

பஸ்கா விருந்து கிறிஸ்து ஏற்படுத்திய சிறப்பு விருந்து, அது வாழ்வு தரும் உணவு, நன்றி கூறும் உணவாக உடன்படிக்கை உணவாக, பொதுவுடமையின் உணவாக திருவிருந்து இன்றும் என்றும் நம்மில் செயல்படுகிறது.

**அருள்திரு. J. ஜேம்ஸ் ஞானறோஸ்**

14-04-2017

**புனித வெள்ளி**

## சிலுவை: தம்மையே கையளிக்கும் அன்பு

**CROSS : SELF-GIVING LOVE**

எசா. 52:13-53:12 — 1பேது. 2:21-25

தி.பா. 22:1-5 — மாற். 15:22-41

**"சிலுவையின் மீது தம் உடல் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார்".**

**1 பேது. 2:24**

கிறிஸ்தவத்தின் அழுத்தம் அன்பாகும். இதனையே இயேசு கிறிஸ்து சிலுவையின் வழியாக வெளிப்படுத்தினார். மானுடத்தின் பாவங்களை ஆண்டவர் தம்மேல் ஏற்றுக் கொண்டு பாவத்திற்கும், சாபத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்து சிலுவை மூலமாக தமது அன்பை வெளிப்படுத்திய நாளே புனிதவெள்ளியாகும். இவ்வுலகை விட்டு மரித்து போன நம் முன்னவர்கள் மற்றும் அன்பிற்குரியவர்களின் படங்களைப் பார்க்கும்போது அவர்களின் அன்பு, கடினங்கள் பாடுகள், தியாகங்கள் அனைத்தும் நமது நினைவில் வருகின்றதல்லவா அவ்வாறே நம் மீட்பரான இயேசுகிறிஸ்துவின் பாடுகள், சிலுவை மரணம் சிலுவை வாக்குகள் அனைத்தையும் நினைவு கூர கடமைபட்டுள்ளோம்.

***1. பாடுகளை ஏற்றவர் :*** (மாற் 15 : 29-32)

சிலுவை என்பது முட்கிரீடம், ஆணிகள் சாட்டை, பழிச் சொற்கள் அவமானங்கள், நிந்தைகள், துரோகங்கள் போன்ற பல்வேறு நிலைகளால் உருவானது. இயேசுவை விடுதலை செய்ய பிலாத்து பலமுறை முயன்றும் முடியவில்லை. மக்களை பிரியப் படுத்த அவரை சிலுவையில் அறைய ஒப்புகொடுத்தான். பிலாத்து தீர்ப்பிட்டதும் அரண்மனையிலிருந்து இயேசுவை சிலுவையில் அறைய கொல்கதா மேட்டண்டைக்குக் கொண்டு சென்றனர். சிலுவை சுமக்க பெலனற்றவராக தள்ளாடி விழுந்தார். சிலுவை சுமக்க சிரேனே ஊரானாகிய சீமோன் பலவந்தம் பண்ணப்பட்டான் ஏனெனில் எந்த யூதனும், ரோமனும் சிலுவையை தொடமாட்டான். சிலுவை மரணத்தை இழிவாக எண்ணுபவர்கள். கொலை பாதகர்களும், அடிமைகளுமே சிலுவையில் அறையப்படுவார்கள். மரத்தில் தூக்கிப் போடப்பட்டவன் சபிக்கப் பட்டவன் என யூதருக்கு மோசே கற்பித்திருந்தார். இது ரோமருக்கு சட்டமாக இருந்தது. இயேசுவை சிலுவையில் அறைந்தனர், செங்குத்தாக நாட்டினர், இவன் யூதருடைய ராஜா என்ற குற்றப்பலகையை சிலுவையின் உச்சியில் தொங்கவிட்டனர். இவ்வார்த்தைகள் கிரேக்கு, லத்தீன், எபிரேய மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. பரியாச குற்றபடுத்தும் வார்த்தைகளாக இருந்தது. ரோம சேவகர்கள், கள்வர், போர்வீரர்கள், சமயத்தலைவர்கள் பிரதான

ஆசாரியன், பகைத்தவர்கள் இயேசுவை தூசித்தனர். அனுதாபப் பட்டவர்கள், நண்பர்கள், பெண்கள் மௌனமாக நின்றனர். கொல்கொதா மக்கள் போக்குவரத்துள்ளப் பெரும் பாதை. அனேகர் அவ்வழி செல்வார்கள். அவர்களும் தங்கள் தலைகளை குலுக்கி உன்னை நீயே இரட்சித்துக் கொள் சிலுவையிலிருந்து இறங்கிவா என நிந்தித்தார்கள் மட்டுமல்ல எதிர் பார்த்தனர். இயேசு இறங்கி வராததற்கு காரணம் அவர் நம் மேல் வைத்த அறிவுக்கு எட்டாத அன்பே. நமக்காக நிந்தைகளை ஏற்ற இயேசுவை நோக்கிப் பார்ப்போம். அவரன்பையே உணருவோம்.

***2. பாவங்களைச் சுமந்தவர் :*** (1 பேது. 2:24)

ஆண்டவர் சிலுவையில் பட்ட பாடுகள் அளவிட முடியாதவை. தியாகத்தின் செம்மல் அவர். உடலின் காயங்கள் அவரை அழுத்த இரத்தம் வழிந்தோட தள்ளாடச் செய்தது. ஆனாலும் கூக்குரல் இடவில்லை. சத்தம் வீதியில் கேட்கவும் இல்லை, துக்கம் நிறைந்தவராக அழகுள்ளநேசர் அலங்கோலமானார். தமது சரீரத்திலே நமது பாவங்களையும், மனப்பாரங்களையும் சுமந்தார். இது நம்மேல் வைத்த அன்பின் மூலம் ஏற்றுக் கொண்டார். அவரைச் சிலுவையில் அறைந்தபோதும் மகா வேதனையுற்றபோதும். தூஷிக்கவோ, சபிக்கவோ இல்லை. அத்தனையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டார். இது அவர் நம்மேல் வைத்த உண்மையான அன்பை வெளிப்படுத்துகிறது. உலகத்தின் பார்வையில் இயேசுவின் சிலுவை மரணம் ஒரு இழிவு சாவாக சாபமாக காணப்படலாம், ஆனால் அதில் இணைந்திருப்பது அவரன்பே. சிலுவையிலிருந்து வெளிப்பட்ட அன்பினால் மனிதன் வாஞ்சிக்கும் பாவ மன்னிப்பாகிய மீட்பு கிடைக்கின்றது. பாடுகள் இன்றி மற்றவர்களுக்கு இன்பம் இல்லை. சிலுவை யூதருக்கு இடறல் கிரேக்கருக்கு பைத்தியம், ரோமருக்கு அருவருப்பு, நமக்கோ அது அளவில்லாத அன்பின் பரிணாமம். இயேசு தமது சரீரத்தில் பட்டபாடுகளையும், அடைந்த மரணத்தையும் நம்முடைய இருதயத்தில் ஏற்றுக் கொண்டபடியால் பாவமன்னிப்பையும், நித்திய ஜீவனையும் அடைகிறோம். எனவே இது ஓர் அன்பின் மண்டலமாக விளங்குகிறது.

***3. பாதகருக்காய் தன்னையே கொடுத்தவர்*** : (ஏசா. 53:6)

ஆடுகளைப்போல வழிதப்பி நம்முடைய விருப்பமான வழிகளில் நடந்தோம். ஆயனின் குரலைக்கேளாத புத்தியற்ற ஆடுகளானோம். அக்கிரமம் மிகுதியினால் அன்பைத் தணித்தோம். அன்பற்றவர்களாய் மாறிச்சிலுவையை கொடுத்தோம். சிலுவையை ஏற்றுக்கொண்ட இயேசு வேதனைப்படுத்திய மக்களுக்காக மன்னிக்கும் படி பிதாவை நோக்கி மன்றாடினார். தம்முடைய அன்பு கடைசிவரை மாறவில்லை. அதே வேளையில் சீஷர்களின் அன்பு மாறின. ஓசன்னா எனக்குரல் எழுப்பிய மக்களின் அன்பு மாறிக் கொண்டேயிருந்தது. இயேசுவின் அன்பு

பெருகிக்கொண்டே இருந்தது. இதனால் தம்மையேச் சிலுவையில் கொடுத்தார். இதற்கு எல்லையில்லை. இயேசு கடைசிவேளை வரையும் அன்பை பற்றி சீஷர்களிடம் போதித்து தமது உள்ளத்தின் பாரத்தை பகிர்ந்து கொண்டார். மனம்மாறாதபடியினால் தன்னையேச் சிலுவையில் கொடுத்து தியாகமாக்கினார். இது மாபெரும் தியாக அன்பே, மறுதலித்த பேதுருவை இயேசு கோபத்தோடும், வெறுப்போடும் நோக்கிப் பார்க்கவில்லை. அன்புள்ளத்தோடு நோக்கிப் பார்க்க மனம்கசந்தான். அவனை அரவணைத்தார். சிலுவையின் முதற்பரியந்தம் சீஷர்களின் மனுமக்களின் பெலவீனங்களையும், குறைகளையும் தாண்டி அவரன்பு ஒவ்வொருவர் மேலும் பாய்ந்து சென்றது. சந்தேகித்த தோமாவை அவரன்பு சந்தித்தது. தம்மையே கொடுத்த அன்பு அழிவில்லாதது. நித்திய காலமாக வாழும் அன்பு.

சீக்கியக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சுந்தர் சிங், கிறிஸ்துவையும், திருமறையும் வெறுத்து புதிய ஏற்பாட்டை எரித்தார். சிலுவை நாதரைக் கண்ட மாத்திரத்திலே அவருடைய கடின இருதயம் உடைக்கப்பட்டது. அன்றே இயேசுவின் சீடராக வாழத் தீர்மானித்து தன்னை ஒப்புக் கொடுத்தார். இந்தியாவிலும், அகில உலகமெங்கும் சென்று தான் கண்ட கிறிஸ்துவையும் அவரன்பையும் சாட்சியாக அறிவித்தார். எபேசுத் திருச்சபையைப் பார்த்து, உன் செயல்பாடுகள் அனைத்தும் போற்றத் தக்கவைகளே ஆனால் அன்பு இல்லையே என்றார். மனம் திரும்பி பழைய அன்புக்குவா இல்லாவிட்டால் உள்ளதும் போய் விடும். இயேசு சிலுவையில் வெளிப்படுத்தின அன்பை நோக்கிப்பார்த்து இதயத்தை மெழுகுபோல உருக்கி அவரன்பை உலகெங்கும் பாய்ந்தோடச் செய்வோம்.

**திரு. T.S. ஏசையன்**

15-04-2017

புனித சனிக்கிழமை

## புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு

**HOPE FOR THE NEW LIFE**

தானி 12 : 1-4 — 1 பேது 4 : 12-19

திபா. 4 — மத். 27 : 62-66

**"முறையான ப-களை செலுத்துங்கள் ஆண்டவரை நம்புங்கள்".** திபா. 4:5

திருச்சபை நாட்காட்டியில் லெந்து கால முடிவு நாளே புனித சனிக்கிழமை. இயேசுவை கல்லறையில் வைத்துக் காவல் காத்தனர். மரணம் என்பது முடிவல்ல, அது நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் வாசலே. ஆண்டவரை நம்பி, பழைய வாழ்வை விட்டு புதிய வாழ்வை ஏற்பதே சிறப்பான நோக்கமாகும்.

### *1. ஆண்டவரை நம்புங்கள் :* (தி.பா. 4:5)

இயேசு கல்லறையில் அடக்கம்பண்ணப் பட்ட போது எல்லா நம்பிக்கைகளும் இல்லாமல் போனதாக எண்ணப்பட்டது. மூன்றாம் நாள் உயிரோடு எழும்புவார் என்பதை சீஷர்கள் மறந்தார்கள், பகைத்தவர்கள் மறக்கவில்லை. ஆண்டவரின் சரீரத்தை சீஷர்கள் கல்லறையிலிருந்து களவாய் எடுத்துக் கொண்டு போவார்கள்; எனவே அதை பத்திரப்படுத்த வேண்டுமென பிலாத்துவிடம் வேண்டினர், அனுமதி வழங்கினான். காவல் காத்தனர். ஆனால் இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இதுவே புதுவாழ்விற்கு எதிர்நோக்காய் அமைகிறது. மரித்ததற்கும், உயிரோடு ஏழுந்திருப்பதற்கும் இடைப்பட்ட காலத்தில் இயேசுவின் ஆவியானது மரித்தோர் ஸ்தலமாகிய ஆதேஸ் எனும் காவல் கூட்டத்தில் அடைப்பட்டிருந்த ஆவிகளண்டைக்குச் சென்று சிலுவையில் செய்த தியாகத்தை வெளிப்படுத்தி மீட்பை கூறினார். ஆண்டவரின் பிள்ளைகள் மரணத்திற்கு பயப்பட வேண்டிய தேவையில்லை. மரணம் ஓர் அருமையான நிகழ்ச்சி. அது ஆண்டவரிடம் வழிநடத்தும் நிகழ்ச்சியாகவும் வாசலாகவும் இருக்கின்றது. மரணபயத்தால் பாழான நம்மை இரட்சிக்க விரும்பி மரணத்தோடு போராடி வெற்றியடைந்தார். ஒரு தேவனுடைய பிள்ளை மரித்து அடக்கம் பண்ணப்படும் பொழுது நம்பிக்கை அற்றுப் போகவில்லை. நித்திய ஜீவன் அடைய உயிர்த்தெழுதல் உண்டாகும் என்கிற நம்பிக்கையோடு அவன் பூமிக்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறான். பேராயர் அசரியா மரிக்கும்போது மகிழ்ச்சியாய் நான் ஒரு பெரிய ஒளியை காண்கிறேன் என நம்பிக்கையோடு மரணத்தைச் சந்தித்தார்கள். ஆண்டவரை நம்புவோம்.

### *2. பழைய வாழ்வை விடுங்கள் :* (மத். 27:63,64)

இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் போதும் பாவத்தின் குழியாகிய கல்லறைக்குள் இருக்க விரும்பவில்லை. நாற்றம் தரும் பாவ அனுபவத்துக்குள் அவரால் இருக்க முடியவில்லை. எனவே கல்லறை அவரை வெளியே செல்ல வழி விட்டது. நேபுகாத்நேச்சர் பூமியில்

புகழ்பெற்ற ராஜா; தன்பாவங்களை விட்டு நீதி செய்ய எச்சரிக்கப்பட்டான். அவனோ அலட்சியம் செய்தான். அவன் மனுஷனின்று தள்ளப்பட்டான். இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் நம்மை நாமே தேவனுக்கு பிரியமான பலியாக ஒப்புக்கொடுப்போம். இதுவே நீதியின் பலி. மாயமான அன்பு, பெற்றோரை கொன்றுவிடும் பிள்ளைகளாக, சிறுவர்களை துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தும் துணிகரமானவர்களாக கொடுமை காரர்களாக இயேசுவை மறுதலித்து சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்து கல்லறையில் புதைக்கிறவர்களாக பழைய மனுஷர்களாகவே வாழுகிறோம். கோடை காலத்தில் தாவரங்கள் பழைய இலைகளை உதிர்த்து விடுவது போலும் பண்டிகைகாலம் வந்ததும் வீடுகளை வெள்ளையடித்து தேவையற்ற பழைய பொருட்களை அகற்றி வீட்டைச் சுத்தம் செய்வது போலும் நமது பழைய பாவ வாழ்விலிருந்து புதிய வாழ்வுக்கு அடியெடுத்து வைப்போம்.

### *3. புதிய வாழ்வை ஏற்றுக்கொள்வோம் :* (1பேது. 4:16)

இயேசுகிறிஸ்துவுக்கு அடைக்கப்பட்ட கல்லும், போடப்பட்ட காவலும் ஒதுங்கி நின்றது. இது தரும் நன்மை புதிய பழக்கவழக்கங்கள், புதிய பண்புகளையுமே உள்ளடக்கியது. புதிய வாழ்வை ஏற்றுக்கொள்ளும் போது பாடுகள் வரும் கிறிஸ்துவுக்காக பாடுகளை, பாரங்களைச் சுமக்கின்றபோது தான் புதுவாழ்வுக்குள் கடந்து வருகிறோம். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் பேதுருவுக்குப் புதிய அனுபவத்தைத் தந்தது அதுவரையிலும் தெளிவற்ற, உறுதியற்ற தன்மையில் திருப்பணியில் ஈடுபட்ட பேதுரு இயேசுவின் பாடுகளைக் கண்ணுற்றபோது பாடுகளைத் தனக்காக காண்கிறார். இப்போதும் சுயசித்தம் அனைத்தையும் மாற்றுகிறார். ஆண்டவரோடுள்ள உறவில் உண்மையாக இருக்கவும், ஆண்டவர் விரும்பும் முழுமையான வாழ்வை வெளிப்படுத்தவும் இயேசுவின் சிலுவை பாடுகள், மரணம் உயிர்த்தெழுதல் பேதுருவுக்கு புதிய நம்பிக்கையையும் ஆற்றலையும் கொடுத்தது. வசந்த காலம் வந்ததும் புதிய இலைகள், பூக்கள் ஆகியவற்றுடன் தாவரங்கள் திகழும். அது போல புதியவாழ்வை ஏற்போம்.

கல்லறை பரிசுத்தவான்கள் இளைப்பாறும் இடம். மரித்தவர்கள் அடக்கம் பண்ணப்படும்போது எல்லாம் முடிந்துவிட்டதாக எண்ணப்படுகிறது. ஆனால் பூலோக வாழ்வுக்கு முடிவு உண்டு. ஆனால் அது நித்திய வாழ்வுக்கான தொடக்கம். மோசேயை தேவன் அடக்கம் செய்தார். மோசேயின் கல்லறையில் ஒருகல் வைத்திருந்தால் அக்கல்லில் 'என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்' என எழுதி வைத்திருப்பார். அவ்வளவு மோசே நம்பிக்கையுடையவராக பழைய வாழ்வை விட்டு புதிய வாழ்வை ஏற்றுக்கொண்டு விளங்கினார். நாமும் புது வாழ்வுக்கான எதிர்நோக்கோடு வாழ்வோம்.

**திரு. T.S. ஏசையன்**

16-04-2017



## உயிர்த்தெழுதல்:கிறிஸ்துவில் வாழ்வைக் கொண்டாடுதல்

**RESSURRELTION : CELEBRATING LIFE IN CHRIST**

| | |
|---|---|
| 1 அரசர் 17:17-24 | Iகொரி. 15:42-58 |
| தி.பா. 118:1-4; 14-17 | யோவான் 20:1-18 |

**“மகதலா மரியா சீடரிடம் சென்று, நான் ஆண்டவரைக் கண்டேன் என்றார். தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்”.** யோவான் 20:18

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமே உயிர்த்தெழுதல். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் (1கொரி. 15:14). என்பது பவுலடிகளாரின் கூற்று. வாழ்வு என்பது இவ்வுலகுடன் முடிந்து விடுவதல்ல மரணத்திற்கு பின்னரும் வாழ்வு உண்டு, அதுவே நிலையான வாழ்வு. கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெறுபவர்களே அதாவது பாவத்திற்கு சாகும் நிலையுடையோரே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் பங்கு பெறுவர்.

கிறிஸ்துவில் வாழ்வைக் கொண்டாடுதல் என்பது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை இவ்வுலகில் வாழ்ந்து காட்டுதல் என்பதாகும். இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்ட சீடர்கள் இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (தி.ப. 3:15) என்றனர். இயேசுவை வாழ்ந்து காட்டுதலே உயிர்த்தெழுதலின் கொண்டாட்டம். இதனை 3 நிலைகளில் நாம் வெளிப்படுத்தலாம். (1) அறிவித்தல் (2) அறியாமை அகற்றுதல் (3) அனுபவமாக்குதல்.

### *1. அறிவித்தல் :*

உயிர்த்தெழுதல் நிகழ்வில் முக்கியமான கொண்டாட்டம் என்பது உயிர்த்தெழுதலை அறிவித்தலாகும். உயிர்த்தெழுதலின் நிகழ்வில் அறிவித்தல் என்பது இறைகட்டளையாகவே தரப்பட்டுள்ளது. நீ என் சகோதரர்களிடம் சென்று.....சொல் (யோ. 20:17). நான்கு நற்செய்தி நூற்களிலும் உயிர்த்தெழுதல் நிகழ்வுடன் அறிவித்தலும் பின்னிப்பிணைந்து காணப்பட்டுள்ளதை நாம் அறிந்து கொள்ளலாம். மட்டுமல்ல அறிவிப்பதற்கான அவசரத்தையும் நாம் புரிந்துகொள்கிறோம். அதிக இருட்டோடே மகதலலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்தாள் அங்கு கல் அகற்றப்பட்டிருப்பதைக்கண்டு அதனைச் சீடர்களிடம் அறிவிக்க ஓடினாள். (யோ. 20:2). தனிமை, இருள் சூழலில் ஒரு பெண்மணியின் தீரம் நம்மை வியக்கவைக்கிறது. மரியாளின் அறிவிப்பினைக்கேட்டு அதனைக் காண வருகின்ற சீடர்கள் யார் முந்தி என்பது போல கல்லறையிடம் ஓடுகிறார்கள்.

மத். 28:8 அவர்கள் (பெண்கள்) அச்சமுற்றாலும் அதேவேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்.

மாற்கு 16 : 15 இயேசு அவர்களை (சீடர்கள்) நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்றார்.

மாற்கு 16:20 அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர்.

லூக்கா 24:35 அவர்கள் (எம்மாவு சீடர்கள்) வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டு கொடுக்கும் போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது தீரமாக, தீவிரமாக அறிவிக்கப்படவேண்டியது அவசியமே. கத்தினா புயல் அமெரிக்க நாடுகளைத் தாக்கிய போது தரப்பட்ட எச்சரிப்புக்களையும் உதாசீனப்படுத்தி கிறிஸ்மாரெட்ஸ் எனும் மனிதர் Wave land-ல் உள்ள தனது இல்லத்தில் தனித்திருந்தார். ஆனால் வெள்ளம் பெருக்கெடுத்து தனது இல்லத்தில் நிரம்பிய போது மாடியிலுள்ள ஜன்னலை உடைத்து வெளியே வந்தவர் உதவிக்கு கூட எவருமில்லாததால் அதிர்ச்சியடைந்தார். அருகில் இருந்த ஒருபடகைக்கண்டு அதனுள் தஞ்சமடைந்தார். தான் உயிரோடிருப்பதை Tuscon ல் உள்ள தனது சகோதரனுக்கு தெரிவிக்க விரும்பினார். தொலை தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் மூழ்கிப்போன தனது இல்லத்தின் மேற்கூரையில் இவ்விதமாய் எழுதினார் “C. Moretz is alive, Pass it on to Ariz” தொலைபேசி எண்ணும் அதில் எழுதப்பட்டிருந்தது. புயலின் பாதிப்புகளை படம் எடுத்துக் கொண்டிருந்த தொலைக்காட்சி நிறுவனத்தார் கண்களில் இச்செய்தி பட்டது. அவர்கள் அதனை ஒளிப்பரப்பு செய்ய அதனைப் பார்த்தவர்கள் அனைவரும் Tuscon-ல் உள்ள சகோதரருக்கு இச்செய்தியை அனுப்பினர். “கிறிஸ்மோரட்ஸ் உயிரோடிருக்கிறார்”.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சந்திக்கும் நம் அனைவருக்கும் ஒரு கடமை உண்டு. இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்பது உலகிற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

## *2. அறியாமை அகற்றுதல் :*

உயிர்த்தெழுதல் அறிவிப்பில் நாம் காணும் இன்னொரு உண்மை அறியாமை அகற்றுதலாகும். உயிர்த்தெழுதலின் கொண்டாட்டத்தை அனுபவிக்க முடியாததன் காரணம் அறியாமையே. அதிகாலையில் கல்லறைக்கு வந்த மரியாள் உயிர்த்தெழுந்த ஆண்டவரை அல்ல, சிலுவையில் மரித்த இயேசுவின் சடலத்திற்கு சுகந்தவர்க்கமிடவே வந்தார் என்பது திருமறைதரும் செய்தி (மாற்கு 16:1; லூக்கா 24:1). எம்மாவூருக்கு சென்ற சீடர்களும் தங்களுடன் பயணம் செய்வது உயிர்த்தெழுந்த

ஆண்டவரே என்பதை அறியாதபடி மந்த இருதயமுள்ளவர்களாய் நடந்து சென்றனர் (லூக்கா 24:16).

சீடர்கள் இயேசுவுடன் மூன்றரை ஆண்டுகாலம் உடனிருந்து அவரது போதனைகளைக் கேட்டிருந்தும், மூன்று உயிர்த்தெழுதலைக் கண்டிருந்தும் (யவீருவின் குமாரத்தி, நாயீன் ஊர் விதவையின் மகன், இலாசரு), இயேசுநாதர் தனது உயிர்த்தெழுதலை முன்னதாகவே அறிவித்திருந்தும் (மத். 16:21), இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பமுடியாதவர்களாகவே இருந்துள்ளனர். இன்றைய நற்செய்தி பாடத்திலும் கல்லறை திறந்திருப்பதைக்கண்ட மரியாவும் சீடர்களும் இயேசுவின் உடலை திருடிச் சென்றிருக்கிறார்கள். என்று தான் உறுதிப்படுத்தினார்களேயன்றி இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்று உறுதியாக்க அவர்களால் இயலவில்லை (யோ. 20:8). எனவே தான் மரியாள் இயேசு அருகே நின்றிருந்தும் அவரைத் தோட்டக்காரராகக் காண்கிறாள். அறியாமையுடன் இணைந்த மரியாளின் அவிசுவாச அறிவிப்பு உயிர்த்தெழுதலின் செய்தியை ஏற்க மறுத்ததுடன், கொண்டாட வேண்டிய நிகழ்வினை துக்கம் மிகுந்த, அழுகை மிகுந்த ஒன்றாகவே மாற்றி விட்டது. களிப்புற வேண்டிய பெண்களின் அழுகையும் அறிவிப்பும் உயிர்த்தெழுந்த ஆண்டவரை உலகிற்கு மறைத்தே நிற்கின்றது.

அறியாமை மிகுந்திருந்த இவர்கள் பெந்தெகொஸ்தே நாள் அன்று புதிய அறிவினைப் பெற்றனர்; தூய ஆவியானவரே அவர்களை ஆட்கொண்டு ஆற்றல்படுத்தினார், புதிய அறிவினைத் தந்தார். கல்லாதவர்களெனப்பட்ட அவர்கள் கடவுளின் மகத்துவங்களைப் பேசினர். அனைவரும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றல்களை உணர்ந்தனர். நமது வாழ்வு உயிர்த்தெழுந்த ஆண்டவரை தூய ஆவியாரின் துணையுடன் அறிவிக்கும் ஊடகமாய் அமையட்டும்.

### *3. அனுபவமாக்குதல் :*

தோட்டக்கரராக தான் எண்ணியிருந்தவரே உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்பதைப் புரிந்து கொண்ட மரியா சீடரிடம் சென்று நான் ஆண்டவரைக் கண்டேன் என்றார். தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார் (யோ. 20:18). நான் கண்டேன் என்பது அனுபவத்திலிருந்து வருவது.

இயேசு நாதர் மரியாவிடம் கூறிய வார்த்தைகள் இன்றியமையாதவை. “நீ என் சகோதரர்களிடம் சென்று என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன் எனச்சொல்” (யோ. 20:17).

இயேசு தமக்கும் கடவுளுக்கும் உள்ள உன்னதமான பிரிக்கவியலாத உறவினைக் காட்டவே என் தந்தையும், என் கடவுளும் என்று கூறிவிட்டு உங்கள் தந்தையும், உங்கள் கடவுளும் என்று சீடர்களும் இந்த உறவில்

வளர வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். பேதுருவிடம் திபேரியா கடற்கரையில் தனித்து உரையாடி தமது கரிசனையை வெளிப்படுத்தினார். தமது காயங்களைப் பரிசோதித்து தெளிவு பெறும்படி தம்மை வெளிப்படுத்துகிறார். தோமாவிடம் உயிர்த்தெழுந்த ஆண்டவர் நாம் அவரைத் தட்டித் தடவியாகிலும் கண்டுபிடித்துவிட வேண்டும் என்பதற்காகவே நமது வாழ்வின் சூழ்நிலைகளிலே தம்மை வெளிப்படுத்துகிறார்.

அவரை அனுபவித்து அறிவிப்பதே உயிர்தெழுந்த கிறிஸ்துவில் வாழும் வாழ்வாகும்.

**அருள்திரு. D. ஜஸ்டின் தேவதாசன்**

23-04-2017

உயிர்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

# கிறிஸ்துவை ஆண்டவராகவும், கடவுளாகவும் உறுதி மொழிதல்

**AFFIRMATION OF CHRIST AS LORD AND GOD**

விப. 3:13-17 கொலோ. 1:15-23
திபா. 93 யோவா. 20:24-29

**"...அவர் தோமாவிடம் "இதோ! என் கைகள் இங்கே உன் விரலை இடு உன் கையை நீட்டி என் விலாவில் இடு, ஐயம் தவிர்த்து நம்பிக்கைக்கொள்" என்றார்.** யோவா. 20:27

கிறிஸ்தவம் எப்படிப் பழமையானதோ அது போன்றே இந்தியக் கிறிஸ்தவமும் பழமையானது. பல வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வின் படி கி,பி 52 இல் கிறிஸ்தவத்தை முதன்முதலாக இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான தூய தோமா மலபார் கடந்கரையில் உள்ள கிரங்கனூரில் சுமந்து வந்தார் என்றும் பின்னர் கி.பி 72 இல் சென்னையில் உள்ள சின்ன மலையில் வைத்து ஈட்டியால் கொலை செய்யப்பட்டார் என்றும் மரபுவழி செய்தி கூறுகிறது.

தோமா என்பது அரமேயச் சொல் திதிம் என்பது கிரேக்கச் சொல், இவை இரட்டை எனப் பொருள்படும். இவர் இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர். இவர் இயேசுவின் சீடர் பிலிப்புவின் வழியாக இயேசுவுக்கு அறிமுகமானார். இவர் முதலில் தச்சுத் தொழிலைச் செய்பவராகவும் பின் மீன் பிடிப்பவராகவும் கடைசியில் மானிடரைப் பிடிப்பவராகவும் மாறினார். இந்நாளின் மறைப்பாடமாகிய தூய யோவான் எழுதிய நற்செய்தி நூலில் தூய தோமாவின் செயல்பாடுகள், பற்றுறுதி அறிக்கை இவைகளைப் பற்றி மிகத் தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைக் குறித்து ஆழமாகச் சிந்திப்போம்.

## *தோமாவின் தைரியமிக்கச் செயல்பாடுகள் :*

தோமா இயேசு கிறிஸ்துவிடம் ஆழ்ந்த பற்றுறுதியும் தளராத நம்பிக்கையும் கொண்டவர். இவர் மிகவும் துணிச்சலுடையவர் அதற்கு நற்செய்தி நூல்களில் சில சான்றுகள் உள்ளன. குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னர் மற்ற சீடர்கள் பயந்து பூட்டிய அறையில் இருந்த நேரங்களில் தோமா வெளியில் நடமாடிக் கொண்டிருந்தார்.

(1) ஒரு முறை இயேசு சீடர்களிடம், வாருங்கள் நாம் யூதோவிற்கு போவோம் என்று அழைத்த போது மற்ற சீடர்கள் அனைவரும் அஞ்சிய போது கூறிய கூற்றும் (யோவா 11:7-16)

(2) இயேசு கிறிஸ்து தமது கடைசி இரவு விருந்தின் போது கூறிய வார்த்தைகளால் கலக்கமுற்றிருந்த சீடர்கள் நடுவில் தோமா கேட்ட கூற்றும் (யோவா 14: 1-6)

(3) உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டோம் என்று உடனிருந்த சீடர்கள் கூறிய போது நம்ப மறுத்து கூறிய வாக்கும் (யோவா 20: 24, 25) காட்டுகின்றன.

## *தோமாவின் சவாலை உயிர்த்தெழுந்த இயேசு ஏற்றுக் கொள்ளல் :*

தோமாவின் வாழ்வினை முழுமையாக புரிந்து கொண்ட இயேசு கிறிஸ்து தோமாவின் சவாலையும் ஏற்றுக் கொண்டு எட்டு நாட்களுக்குப் பின் சீடர்கள் பூட்டிய அறையில் இருக்கும் போது தோமாவும் அவர்களுடன் இருந்தார். அந்நேரத்தில் தோமா சற்றும் எதிர்பாராத விதமாக தம்மை அவருக்குக் காண்பித்தார். ஆவியாக எழவில்லை மாறாக, உடலுடன் தான் உயிர்த்தெழுந்தேன் என்பதனை வெளிப்படுத்தினார். ஏனென்றால் அக்காலத்தில் இறந்தவர்கள் உடலில்லாமல் ஆவியாகச் சுற்றித்திரிவர் என்ற நம்பிக்கை மக்களிடம் பரவலாகக் காணப்பட்டது, அத்தகைய சிந்தை தோமாவிடமும் காணப்பட்டது. எனவே தான் தோமா இயேசு ஆவியாக இருக்கிறாரா? இல்லை உடலுடன் தான் இருக்கிறாரா? அப்படி உடலுடன் இருந்தால் அவரைத் தொட்டுப்பார்க்க வேண்டும் என விரும்பினார்.

இங்கு சவால் நிறைந்த வேலையை இயேசு நிறைவேற்றினார். காரணம் இதற்கு முன் கல்லறையில் இருந்து இயேசு மரியாளுக்குத் தரிசனமான போது அவர் அவரைத் தொட்டுப்பார்க்க எண்ணியபோது இயேசு அவரிடம் என்னை இப்படிப்பற்றிக் கொள்ளாதே என்று திட்டமாகச் சொன்னார். (யோ :20:17) ஆனால் இங்கு தோமாவின் சவாலை ஏற்று, தோமாவிடம், இதோ! என் கைகள், இங்கு உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்றார். அப்போழுது தோமா அவரை தொட்டுப் பார்த்ததாகத் தெரியவில்லை, மாறாக, தோமா இயேசுவைப் பார்த்து நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்! ! என்றார்.

## *என் ஆண்டவரே! என் கடவுளே! :*

தோமாவின் ஆழமான பொருள் பொதிந்த பற்றுறுதி இன்றும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அழுத்தமாக அறிக்கை செய்ய வேண்டிய பற்றுறுதி அறிக்கை ஆகும். என் ஆண்டவரே! என் கடவுளே! என்கின்ற தமிழ் சொற்கள் கிரேக்கத்தில் குரியோஸ் (Kyrios), தியோஸ் (Theos) என்கின்ற பதங்கள் செப்துவஜிந்தில் சேர்ந்து வருகின்றன. இது ஆண்டவராகிய கடவுள் என்றும் பழைய ஏற்பாட்டில் யாவே, எலோகீம் எனும் எபிரேய மொழிப் பெயர்ப்பு ஆகும். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர், கடவுள் என்ற வார்த்தைகள் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. (யாவே - ஆண்டவர் - கடவுள்) மோசே உமது பெயர் எதுவென்று கேட்ட போது (வி.ப. 3:14) 'இருக்கிறவராகவே இருக்கின்றேன்' என்று மோசேக்கு வெளிப்படுத்தினார். யாவே என்பது எபிரேயத்தில் கடவுளின் பெயராகும்.

சம நோக்கு நற்செய்தி நூல்களில் கடவுளையும், கிறிஸ்துவையும் சுட்டும் சொல்லாக ஆண்டவர் என்கின்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, உரோமை அரசின் காலத்தில் சீசரே ஆண்டவர் என்கின்ற எண்ணம் பரவியது. சீசரை வழிபட கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்நேரத்தில் மேசியாவை எதிர்பார்த்த மக்கள் இயேசுவின் இறைத்தன்மையை உணர்ந்து அவரை ஆண்டவர் என அழைத்தனர். யூதர்கள் தங்கள் கடவுள் யாவேயை ஆண்டவர் என்றும் அழைத்தனர். ஆக புனித தோமா உயிர்த்தெழுந்த இயேசுவை என் ஆண்டவரே ! என் கடவுளே! என்று அறிக்கையிட்டதில் ஒரு கலப்பற்ற முழுமையான தெளிவான இறையியல் பொதிந்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து தொடக்க கால திருச்சபை மக்களும் தங்கள் அறிவிப்பில் இயேசுவை ஆண்டவர் என அழைத்தனர்,

இன்னும் இயேசுநாதர் தோமாவிடம் ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்றார் (யோவான் 20:27). இதற்கு கிரேக்கத்தில் அபிஸ்டாஸ் , பிஸ்டாஸ் என்கின்ற இரு பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இந்த இரண்டு பதங்களும் யோவான் நற்செய்தி நூற்களில் வேறோரு இடத்திலும் வர வில்லை, இந்த வார்த்தைகள் தூய பவுலடிகளாரின் கடிதங்களாகிய கொரிந்தியர், தீமோத்தேயு, தீத்து ஆகியவற்றில் அதிகமாக வருகிறது. தொடக்கால திருச்சபை மக்களைத் திடமான நம்பிக்கையில் கொண்டு வர பயன்படுத்தப்பட்டது.

தோமா இரண்டும் கெட்ட நிலையில் காணப்பட்டார் என்பதனை இயேசு உணர்ந்து கொண்டார். இயேசு ஒரு முழு நம்பிக்கையை எதிர்பார்த்தார். தோமாவை ஒரு முழு நம்பிக்கையாளராக மாற்றினார். அத்தோடு இயேசு தோமாவிடம், நீ என்னைக் கண்டதனால் நம்பினாய் காணாமல் நம்புவோர் பேறு பெற்றோர் என்றார் (யோவான் 20:29). இவ்விடம் 21-ஆம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது எதுவென்றால் நாம் இயேசுவின் சீடர்களை விட பேறு பெற்றோர். காரணம் நாம் அவரைக் காணாமலே நம்புகின்றோம்.

நிறைவாக, என் ஆண்டவரே! என் கடவுளே! என அறிக்கை செய்த தோமா இயேசுவின் சிலுவையைத் தொட்டுத்தூக்கி இந்தியாவில் நற்செய்தி பணி செய்தார். தான் எந்த இயேசுவின் காயங்களைத் தொட்டுப்பார்க்க நினைத்தாரோ அவருக்காகத் தன் நெஞ்சிலே காயங்களை ஏற்றார். சென்னை மயிலாப்பூரில் தோமாவின் நற்செய்திப் பணியை விரும்பாத பூசாரிகள் அவரை கொல்ல நினைத்து பெரிய மலைப்பகுதியில் வைத்து பூசாரி ஒருவன் தோமாவின் இதயப்பகுதியில் குத்திக் கொன்றான். தோமா இயேசுவுக்காக இரத்த சாட்சியாக இந்த மண்ணில் விதையானார். நாமும் விசுவாசத் தடயத்தைப் பதித்த தோமா போன்று நம்பிக்கையில் வலுவுடன் முன்னேறுவோம்.

**அருள்திரு. K. பிறின்ஸ் குமார்**

30-04-2017

உயிர்ப்புக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு

# கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு

**INVITATION TO CHRIST'S HOSPITALITY**

தொ.நூ. 18:1-10 எபி. 13:1-8
தி.பா. 15 யோவா. 21:1-14

**"... உணவருந்த வாருங்கள்".** யோவா 2:12

இறைவன் மானுட உறவில் நாட்டமுடையவர், மானுடம் இறையுறவை சிதைக்கும் போது, துடித்துப் போகிறார் (தொ.நூ. 3:9) இறைவனின் இதய துடிப்பான மானுட உறவு, இறை மகன் இயேசு கிறிஸ்துவில் நிறைவுறுகிறது. தூய யோவான் நற்செய்தி நூலில் தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது (யோவா. 1:1) வாக்கு மனிதரனார் நம்மிடையே குடி கொண்டார் (யோவா. 1:14) என்பதில் உறுதி செய்கிறார். கலிலேயாவைப் பணிக்களமாக்கி பன்னிரண்டு சீடர்களுடன் இறைப்பணி செய்த இறைமகன் இறையரசு குறித்த செய்தியை சீடர்களுக்கும் மக்களுக்கும் போதித்தார். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் சீடர்கள் கூட்டத்துக்குள் ஓர் அதிர்வை உண்டாக்கியது. உயிர்த்தெழுந்த இயேசு தம்மை வரலாற்றில் வாழ்பவராகக் காட்டியும் மீன் பிடித்து வாழும் வாழ்வை தங்களுடையதாக்கிக் கொண்டு பழைய நிலைக்குச் சென்று விட சீடர்கள் முனைந்தனர். இந்நிலையில் இயேசு திபேரியா கடற்கரையில் தம்முடைய சீடர்களை சந்தித்தார். இந்த சந்திப்பு நிகழ்ச்சி வழி காட்டப்படும் இயேசுவைக் காண்போம்.

## *1. உறவோடு ஒன்றிக்கும் உன்னதர் :*

இயேசுவின் சீடரான சீமோன் பேதுருவின் தலைமையில் திதிம் எனப்படும் தோமா கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தானியேல் செபதேயுவின் குமாரர்கள் மேலும் இயேசுவின் சீடர்கள் இருவர் சேர்ந்து எழுவர் திபேரியா கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இந்தக் கடல் யோர் தான் நதியின் சுத்த தண்ணீராலான கடல். இது 21 கி.மீ நீளமும் 13 கி. மீ அகலமும் உடையது இது கலிலேயாக்கடல் என்றும் கெனசரேத்து கடல் (லூக். 5:1) என்றும் அழைக்கப்படுகிறது. மீன் பிடிக்கச் சென்ற சீடர்கள், இயேசுவால் அழைக்கப்படும் முன் மீன் பிடித் தொழில் செய்தார்கள் (மத். 4:18). இறையரசுப் பணிக்காய் சுமார் மூன்றரை ஆண்டு பயிற்சி பெற்றவர்கள். இயேசு, மக்களைப் பிடிப்பதே இவர்களின் பணியென்றார் (மாற். 1:17). மீன் பிடித்து உழைத்துப் பிழைக்க சென்றுள்ள சீடர்களைப்பார்த்து இயேசு கரிசனையுடன் உள்ளன்புடன் பிள்ளைகளே!

மீன் ஒன்றும் கிடைக்க வில்லையா? என்று கேட்டார். (யோவா. 21:5) பெற்றோர் பிள்ளைகள் பாசமாய் அழைப்பது போல் இயேசு அழைத்தார், எகிப்தில் நலிவுற்ற மக்கள் என் மக்கள் என்று அழைக்கும் (விப. 1:3) இறைவனின் ஒரே மகன் பிள்ளைகளே என்று இன்றும் பாசச் சொற்களால் அழைக்கிறார், குருடு, செவிடு, நொண்டி, குஷ்டரோகம் போன்ற கடினச் சொற்கள் தவிர்ப்போம், பாசச் சொற்களால் நொந்த இதயங்களுக்கு இதம் கொடுப்போம்.

## 2. ஊக்கப்படுத்தி அறிவுரை வழங்கும் உன்னதர் :

சீடர்கள் படகைப் பயன்படுத்தி மீன் பிடிக்க விரும்பினர். இரவு முழுவதும் மீன் பிடிக்க முயற்சித்தும் மீன் ஒன்றும் கிடைக்க வில்லை. விடியற் காலை இயேசு கரையில் வரும் போதும் மீன்கள் கிடைக்காததால் விரக்தியோடிருந்தார் இயேசு. மீன் ஒன்றும் கிடைக்க வில்லையா? என்று கேட்ட போது இல்லை என்றே பதில் கூறினார் (யோவா. 21:4). மானுட முயற்சி எதிர் பார்த்த பலன் கொடுக்கவில்லை. இயேசு இவர்களின் பணியில் குறுக்கிட்டார். பணி மாற்றம் செய்ய சொல்லவில்லை. அதே பணியில் படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும் என்றார். (யோவா. 21:6) இயேசுவின் ஆலோசனை இழுக்க முடியாத அளவு மீன்கள் பெறுவதற்கு வழி வகுத்தது, நூற்று ஐம்பத்து மூன்று பெரிய மீன்களிருந்தன. (யோவா. 21:11) இறைவாக்கினர் எசாயா மேசியாவைக் குறித்து சொல்லுகையில் வியத்தகு ஆலோசகர் வலிமை மிகு இறைவன் என்கிறார். (எசா. 9:6) (Wonderful counseller N.S.V) இயேசு கிறிஸ்துவின் நிலையானதும் நித்தியமானதுமாகும். இவரது ஆலோசனையை ஏற்று அதன் படி செய்தால் கடைநிலை மக்கள் களிப்புடன் திராட்சை ரசம் குடித்து மகிழ்ந்து சென்றது போல் (யோவா. 2:7) மானுடம் மகிழ்ந்து வாழ இயலும். அவர் அருளும் ஆலோசனை எல்லாம் மனிதரை முழு மனிதராக்கும் (யோவா. 9:7). நாமும் பல வேளைகளில் தீய மனிதர்களின் ஆலோசனைக்கு முதலிடம் கொடுக்கிறோம். இறை மகனின் ஆலோசனையை ஏற்போம்.

## 3. உணவூட்டி மகிழ்விக்கும் உன்னதர் :

காயங்களுடன் உயிர்த்தெழுந்த உன்னதர் காயங்களை தன் சீடர்களுக்குக் காட்டினார் (யோவா. 20:27) காயங்களுடன் துன்புறும் இயேசுவை விவிலியம் காட்டுகிறது (தி.ப. 9:5). உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்றார். தூய யோவான் ஐம் பெரும் காயங்களுடனும் எண்ணிறந்த காயங்களுடனும் நிற்கும் இயேசு கரியை கொண்டு வந்துள்ளார். நெருப்பைக் கொண்டு வந்துள்ளார். தாயைப் போல நெருப்பு மூட்டியுள்ளார். அத்துடன் தம்மவர்கள் உண்ணுவதற்கு

மீன்களையும் அப்பங்களையும் கொண்டு வந்துள்ளார். தங்களுக்கும் உண்ண ஒன்றுமில்லை அடுத்தவர்க்கு கொடுக்கவும் ஒன்றுமில்லை சீடர்கள் நிறைவடைய சாப்பிட வாருங்கள் என்றார் (யோவா. 21:12) தம் திருவுடலையும் உதிரத்தையும் உணவாக மானுடத்திற்கு ஈந்தார். மேலும் பாடுகளின் பாதைகளில் பாடனுபவிப்பவர்களுக்கு இரவல் வாங்கியாவது இனியது செய்கிறார்.

இயேசுவைப் போல இதயம் ஆற்றும் இனிய பாசச் சொற்கள் பயன்படுத்துவோம், ஆண்டவரிடமிருந்து ஆலோசனை பெற்று ஆலோசனையாளர்களாவோம், பாடுகளோடும் தேவைகளோடும் இருப்போரின் தேவையறிந்து மற்றவர்கள் மகிழ உடமைகளைப் பகிர்வோம் மகிழ்வான சமுதாயம் காண்போம், படைப்போம்.

**அருள்திரு. பாலஸ் செல்வமணி**

01-05-2017 உழைப்பாளர் திருநாள்

## இறைப்பணியில் பங்கேற்றல்

**PARTICIPATION IN GOD'S WORK**

விப. 36:1-13 தி.ப. 9:36-43

தி.பா. 104:23-35 யோவா 4:34-38

**"ஆண்டவர் கட்டளையிட்டபடி வேலை செய்யட்டும்"** வி.ப. 36:16

கி.பி. 18-ம் மற்றும் 19-ம் நூற்றாண்டில் உயர் மக்கள் உழைக்கின்ற மக்களை ஒடுக்கி அவர்களை 12 முதல் 18 மணி நேரம் வேலை வாங்கினார். இதனால் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து மேய் மாதம் 1-ம் நாள் 10 மணி நேரம் உழைப்பு மற்றும் 6 கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடி வெற்றி பெற்றனர். இதனை உழைப்பாளர் தினம் என்று மகிழ்ச்சியோடு கொண்டாடினர். இது மேய் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

வி.ப. 3:9-ல் ஆண்டவரும் ஒடுக்கப்படுகிற மக்களுக்கு குரல் கொடுக்கிறவராய் காணப்படுகிறார். இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரை உழைப்பு என்ற பெயரிலே ஒடுக்கின வேளை உணவளிக்காத வேளை, அதிகமாக உழைக்க கட்டாயப்படுத்திய வேளை, சர்வவல்ல ஆண்டவர் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களை புதிய வாழ்வுக்கு வழிநடத்துகிறார்.

இந்த உழைப்பாளர் தினத்திலே உழைப்பு உயர்வு தரும் என்ற தலைப்பில் எப்படிப்பட்ட உழைப்பு உயர்வு தரும் என்பதை திருமறை கண்ணோட்டத்தில் மூன்று குறிப்புகளில் தியானிப்போம்.

### *1) உண்மை உழைப்பே உயர்வு தரும் :*

"நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் அமர்த்துவேன்" (மத். 25:21).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 25-ம் அதிகாரத்தில் தாலந்து உவமையினை கூறுகின்றார். எஜமான் தனது செல்வத்தை மூன்று வேலைக்காரர்களை அழைத்து 5, 2, 1 என்ற முறையில் தாலாந்துகளாக கொடுக்கிறார். 5, 2 தாலந்துகள் பெற்றவர்கள் உண்மையாக உழைத்து பெருக்கினர். அவர்கள் உயர்ந்த அதிகாரிகளாக உயர்வு பெற்றனர். உழைக்காதவன் தண்டனை பெறுகின்றான்.

ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தும் மகாராஷ்டிரா பகுதியைச் சார்ந்த பிரபாகர் என்பவர் உண்மை உழைப்பாளி. ஒருநாள் இவரது ஆட்டோவில் பயணம் செய்த பயணி ஒருவர் 1.5 லட்சம் ரூபாயை ஆட்டோவிலே தவறவிட்டார். ஆனால் நேர்மை மிகுந்த அந்த ஆட்டோ ஓட்டுநர் அந்த பணத்தை காவல்துறை மூலம் உரிய நபரிடம் ஒப்படைத்தார். உயரிய பாராட்டும் பெற்றார். இது 12-07-2016 அன்று நடைபெற்ற உண்மை நிகழ்வு ஆகும்.

எஸ்தர் 2:21-ல் அகஸ்வேரு ராஜாவின் பணிவிடைகாரராக பணிபுரிந்த பிக்தான் தேரேசஸ் என்பவர்கள் தங்கள் எஜமானுக்கு விரோதமாக வாழுகின்ற போது நேர்மையற்ற வாழ்வின் மூலம் அழிக்கப்படுகிறார்கள்.

அன்பானவர்களே! உண்மையாக உழைக்கும் போது கடவுள் உயர்வை தருகின்றார். எனவே உண்மையாக உழைத்து இறை ஆசியைப் பெறுவோம்.

### *2) உறுதியான உழைப்பு உயர்வு தரும் :*

இந்திய தேசத்திலே லக்னோ பகுதியிலே வாழ்ந்த பெண்மணி அருணிமா சின்ஹா. இவள் தேசிய லீக் கைப்பந்து வீராங்கனை. ஏப்ரல் 1, 2011 அன்று இரவு இரயில் பயணத்தின் போது நடந்த விபத்தில் இவளுடைய கால் 2 துண்டாக உடைந்தது. இரவு நேரம் யாரும் கவனிக்கவில்லை. எனவே சுமார் 7 மணி நேரம் அதே ரயில்வே தண்டவாளத்திலே படுத்திருக்கிறாள். பின்னர் AIIMS மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு மருத்துவர்களினால் அவளது உயிரினை மட்டும் காப்பாற்ற இயன்றது. ஆனால் அவளது கால் ஊனமாகவே மாறிவிட்டது. செயற்கை காலுடன் வலம் வந்த அருணிமா சின்ஹாவைப் பார்த்து உலகம் சிரித்தது. மருத்துவர்களிடம் அருணிமா சின்ஹா 8848 m உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தை ஏறுவேன் என்று கூறினாள். ஊனமான சில நாட்களில் ஒரு மனிதன் சராசரியாக 2 நிமிடத்தில் கடக்கும் சாலையினை 2½ மணி நேரம் எடுத்துக் கடந்தேன் என்று சின்ஹா கூறுகின்றார். கடினமாக உழைக்கின்றார். வலிகளின் மத்தியிலே உறுதியான உழைப்பின் வழியாக செயற்கைக் காலுடன் எவரெஸ்ட் சிகரத்தை மே 21, 2015 அன்று ஏறினார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண்மணி இவர் என்ற பெயர் கிடைத்தது. இந்த உலகில் யார் ஒருவர் உறுதியான மன பக்குவத்தோடு போராடுகிறாரோ அவர்கள் இந்த உலகத்தில் உயர்வு பெறுகிறார்கள். 2015-ம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம ஸ்ரீ விருதினை பெற்றுக்கொண்டார்.

செயற்கை காலின் வழியாக ஒரு பெண்மணி உறுதியான உழைப்பின் வழியாக எவரெஸ்ட் சிகரத்தை தொட்டிருக்கிறார். உழைப்பாளர்கள் உறுதியான மனப்பக்குவத்தோடு செயல்படுகின்றபோது உயரிய வாழ்வு பெறுகின்றார்கள்.

இஸ்ரவேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் சிறந்ததோர் வாழ்க்கையாகிய கானானின் வாழ்க்கையை கண்டடைகிறார்கள். இதற்கிடையில் எத்தனையோ சோதனைகள் எத்தனையோ வேதனைகள் எத்தனையோ தடுமாற்றங்கள். திரும்பிப் போகலாம் என்று சொல்லுகின்ற மக்களுடையச் சூழ்சிலைகளிலோ உறுதியான நோக்கோடு கடினமான உழைப்போடு இறைவனுடைய காருண்யத்தோடு மோசே செயல்படுகிறார். விளைவு கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள்.

நாம் உறுதியாக உழைப்பது உயர்வு தரும் என்பதை உணர்ந்து இறை ஆசி பெறுவோம்.

### *3) உற்சாக உழைப்பே உயர்வு தரும் :*

உற்சாகத்திற்கு எதிர்மறையான வார்த்தைச் சோம்பேறி. திருமறையில் 17 இடங்களில் சோம்பேறி என்ற வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சோம்பேறியாய் இருக்கிறவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள் என்பதை நீதிமொழிகள் ஆக்கியோன் அழகாக கூறுகின்றார். அப்படியென்றால் எவன் ஒருவன் உற்சாகத்தோடு உழைக்கிறானோ அவன் வாழ்வில் வெற்றி பெறுகிறான். திருமறையில் ஈசாக்கு என்ற மனிதனை நாம் பார்க்கின்ற வேளையிலே அவன் எகிப்துக்குப் போக வேண்டும் என்று சிந்தனை கொள்ளுகிறான். ஆண்டவர் அவனை நீ எகிப்துக்குப் போகாமல் நான் காட்டுகின்ற தேசத்துக்குப் போ என்று கூறுகின்றார். எகிப்தின் வாழ்வு என்று சிந்திக்கின்ற வேளையிலே அது அடிமைத்தன வாழ்வு மனிதனின் கண்ணோட்டம் அடிமைத்தனத்தைத் தேடுகிறது. ஆண்டவர் அவனை விடுதலையின் பாதையில் நடத்திச் செல்லுகிறார்.

தொ.நூ. 26:12 ஈசாக்கு கேராரில் விதை விதைக்கின்றான். இறை ஆசியினை பெறுகின்றான்.

நாம் இன்று உணவு உண்ணுகின்ற அரிசி பெற்றுக்கொள்ள அந்த நிலத்தை முதலாவதாக உழ வேண்டும். உழுத 21-லிருந்து 30-ம் நாளுக்குள் அந்த நெற்கதிரை உழுத நிலத்தில் ஊன்ற வேண்டும். அதிலிருந்து 100-வது நாள் செழித்து வளருகிறது. உழுத நாளிலிருந்து 120-ம் நாள் அறுவடை செய்யப்படுகிறது. நெல்லாக பிரித்து எடுக்கின்றனர். பின்பு அது அரைத்து மாற்றி உணவாக நாம் உட்கொள்ளுகின்றோம்.

ஒரு அரிசி வருவதற்கு விவசாயி 130 நாட்கள் கடினமாக உழைக்கின்றான்.

ஈசாக்கு விதைவிதைத்தான் அதிக ஆசியினை பெறுகின்றான். விதை விதைத்து உற்சாகத்தோடு உழைத்து இறை காருண்யத்தோடு செயல்பட்ட போது அவன் ஆசியினை பெற்றுக்கொண்டான்.

“Dreams Don’t Work Unless You Do|”

இந்த உலகத்திலே உயர்வு பெற வேண்டுமென்றால் கடினமாய் உழைக்க வேண்டும். உண்மையாய் உழைப்போம், உறுதியாய் உழைப்போம். உற்சாகமாய் உழைப்போம். இறைவன் ஆசிபெற்று, புதியதோர் எழுச்சியினை பெற்று சமுதாயத்தில் உயருவோம். ஆண்டவர் அருள் என்றும் நம்மோடு இருக்கட்டும்.

**திரு. S.V. உதய் நிர்மல் சிங்**

07-05-2017

உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு

**COMMUNION WITH THE RISEN CHRIST IN DAILY LIFE**

| | |
|---|---|
| வி.ப. 40 : 34-38 | பிலி. 3:8-16 |
| திபா. 23 | லூக். 24:13-33 |

**"...எங்களோடு தங்கும்; ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று; பொழுதும் போயிற்று" என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்க வைத்தார்கள்.**
**லூக். 24:29**

உலகில் உறவுகள் பலவுண்டு... உருக்குலைந்து போன உறவுகளால் தான் உருவாகின்றன, பிரிவினைவாதம், தீவிரவாதம்! உயிர்கள் அழிக்கப்படுகின்றன. உறவுகள் ஒழிக்கப்படுகின்றன. நாட்டுக்கு நாடு... வீட்டுக்கு வீடு... உறவுகளில் தொல்லை நாட்டமாய் வந்தோரை... நாசவூருக்கு அனுப்பும்.

நம்பிக்கைத் துரோகம், நயவஞ்சகக் குரோதம். நாளெல்லாம் மலிந்துவிட்டன நானிலமெங்கும்...! அன்றாட வாழ்வில் கூட்டுறவு எனக்கூறி கூட வருவோரின் குரல்வளையை நெரித்துக் கொல்லும்... கொடூரர்களின் கைகளில் சிக்கிப் பலியாகும் மானிடத்துக்கு உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு எனும் செம்பொருட்செய்தி... புத்துயிரூட்டும் சவாலாக அமைந்திடல் வேண்டும்.

### 1. *அவர்களுடனே கூட நடந்து போனார்!*

(லூக். 24:15) இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனே கூட நடந்து போனார்".

உறவுகாட்டி, உரையாடிச் செல்கிறார்!

உயிர்த்த இயேசுவின் உறவை விட்டுப்பிரிந்து பயணித்த சீடர்களின் சோகங்களைக் கேட்டறிகிறார்.

மோசே போன்ற சகல இறைவாக்கினர்களும் எழுதின மறைவாக்குகளை எல்லாம் ஒன்றாக்கி அவர்கள் அனைவரும் இயேசுவைக் குறித்துச் சொன்னவைகளை அவர்களுக்கு விவரித்துக் காட்டுகின்றார்! (லூக். 24:27).

அப்படிப்பயணித்த இறையடியவர்களைவிட்டு... அப்புறம் போகிறவர்போல் காண்பிக்கிறார்! (லூக். 24:28).

இன்றைய உலகில் நமது வாழ்க்கைப் பயணத்தில்... நம்முடன் நடைதொடரும் இயேசு... நம்முடன் வருகிறாரா? நம்மைவிட்டுக் கடந்து போகிறாரா? என்ற பார்வை வேண்டும் நமக்கு!.

இயேசு நம்மோடு இல்லையேல், நமது வாழ்வு... தொல்லையே! என்னும் நற்சிந்தை வேண்டும் நம்மிடம்!

இங்கே... இப்போது... "இயேசு அப்புறம் போகிறவர்போலக் காண்பித்தார்". அப்போது கதிரவனும் கடந்து போனான் மாலைவேளை! கடவுளை விட்டுப் பிரிந்து வாழும் தனிமை வாழ்வு... இனிமை தராது... என்பதை வலியுறுத்தித்தான்... இயேசு அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்... ஆனால் அப்புறம் போகவில்லை என்பதுதான் உண்மை!

எம்மாவூர் பாதையில் எம்மோடு இயேசு நடந்து வருகிறார் என்றால் எத்துணை நன்மை! இல்லையேல் பயணம் எம்மாத்திரம்? இங்கே இயேசுவுடன் கூட்டுறவில்லாத்தனிக் குடித்தனம். குளறுபடிகள் கொண்டதெனக் கண்ட சீடர்கள் தங்களுடன் நடந்து வருவது மட்டுமல்ல. கூட்டுறவில் தங்கியிருக்க வேண்டும் எனக் கூப்பிடுகின்றனர்!

அருள்திரு. ஆ. தேவதாசன் ஐயர் அவர்கள் கீர். 286-ல் பாடுகின்றார்!

***சரணம்***

நாம் நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா... தனியனை
நட்டாற்றில் விட்டாரையா எளியனுக்கு

***பல்லவி***

ஆதாரம் நீர்தானையா, என் துரையே
ஆதாரம் நீர்தான், ஐயா!

## 2. *அவர்களோடு தங்கும்படிப் போனார்!*

லூக். 24:29 "அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்".

கூட்டுறவை நாடி கூட வாழ வேண்டும். தங்களுடன் கூடி வாழ வேண்டும் என விரும்பி அழைத்த சீடர்களுடன் போனார் பரமர் இயேசு!

இக்கால உலகில் கூட்டுறவின் பொன்மொழிகள், "கூட்டுறவே நாட்டுயர்வு" என்றும், "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்றும் வார்த்தையில் கூறிடக் கேட்கலாம். வாழ்க்கையில் வாழ்ந்திட எவர்தான் முன்வருவர்?

இன்பர் இயேசு இவ்வுலக வாழ்வில் நடை தொடர்ந்த நாட்களில்... தமது நிறைவு ஜெபத்தில் "தந்தையே... நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல... அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறோம்" என்கிறார் கூட்டுறவை வலியுறுத்தி. யோவான் 17:21-ல் கண்டிடலாம்.

அன்றியும்... பவுலடியார்... கி.பி. 61-62-ல் ரோமைச் சிறை அறையில் தங்கியிருக்கும் போது, தீமோத்தேயுடனிருந்த நிலையில் பிலிப்பி பட்டணத்திற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவது என்னவெனில் "ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போம்" (பிலி. 3:16).

தொடக்கக் காலத்திருச்சபைக் குடும்பங்களில் நடந்ததென்னவென்பதைத் தொட்டுப்பார்ப்பார் இல்லை! தொடர்ந்து உயிர்த்த இயேசுவின் குடும்பத்தின் மக்கள் எனக்கூடி வாழும் நிலை இல்லை... இதனால் தான் தொல்லை! (தி.ப. 2:42).

***பல்லவி***

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை... பணக்காரனில்லை...
இராஜாதி இராஜா இயேசு...
என்றென்றும் வாழ்ந்திடுவார்...

இயேசுவின் நற்செய்தியாளர் லூக்கா... கிரேக்கர்! சிறந்த கல்விமிக்க, கலாச்சாரமிக்க குடும்பத்தவர்! மருத்துவர், லூக்கா, திருத்தூதவர் பணிகள் நூல்களை எழுதியவர். இயேசுநாதர்... உயிர்த்தெழுந்த புதுப்பொலிவுடன் பல்வகைப்பட்ட தொழில்கள் குடும்பச்சூழல்கள், சமுதாய அமைப்புகளைச் சார்ந்த இறையடியவர்களுடன் இறையியல் பயணம் தொடர்ந்து அவர்தம் அழைப்பினை ஏற்று அவர்களுடனே கூடத் தங்கும்படிப் போனார்! இத்தகைய சவாலைப் பெற்றிருக்கும் இறைமக்கள் நாம்.. இன்பர் இயேசுவுடன் இறைமக்கள் அனைவரும் இறைவனின் ஒரே விசுவாச வீட்டார் எனக் கொண்டு வாழ்தல் தனிச்சிறப்புடைமையாகும்.

## 3. *அவர்களுடனே பந்தியமரப் போனார்*

லூக்கா 24:30 "அவர்களோடே அவர் பந்தியிருக்கையில் அவர் அப்பத்தை எடுத்து; ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்".

குவலயத்தில் கூட்டுறவு மிக இன்றியமையாதது! இன்பமானது! உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குக் கூட்டுறவை வலியுறுத்தி... உணவை ஆசீர்வதித்துக் கொடுக்கிறார்! உடனிருந்தோர் உவகையுடன் வாங்கி உண்டனர்! மகிழ்வு கொண்டனர்!.

இன்றைய உலகிலும் இத்தகைய செயல்கள் தொடர்ந்திட இயேசுவே முன்னோடி! கூட்டுறவு நிலையங்கள் மூலம் உணவு வழங்கல் மற்றும் உணவு உட்கொள்தல் போன்றவை எத்துணை நன்று!.

அன்றொரு நாள் 5 அப்பங்களும் இரண்டு மீன்களும் கொண்டு 5000 பேர்களுக்கு மேல் வயிறார வழங்கினார் உணவு! பசியுற்றோரை... பசும்புல் மேல் பந்தியமரச் செய்தார்... இயேசு! - மாற்கு 6:41, 42.

தொடக்கக்காலத் திருச்சபையில், பேதுருவின் அருளுரையால் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்! அவர்கள் எல்லாரும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் கூட்டுறவில் விசுவாசத்தை வளப்படுத்தினர்.

“பசும் புல் வெளி மீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்”. தி.பா. 23:2-ல் குறிப்பிட்டிருக்கிறார்!.

இயேசுதம் சீடர்களோடு பஸ்காவை மேல்வீட்டறையில் பகிர்ந்து கொண்டார். விருந்துண்ணும் வேளை அப்பத்தைப்பிட்டு சீடர்களுக்குக் கொடுக்கிறார். அங்கோர் அவல நிகழ்வு... இயேசுவின் கூட்டுறவில் இயேசுவுடன் பந்தியமர்ந்து... அப்பத்தை வாங்கி பிரிந்து சென்றான். உறவை விட்டு விலகிப்போனான் யூதாஸ்! “உண்ட உணவுக்கு இரண்டகம் செய்துவிட்டான்! கூடி வாழ்ந்த உறவுக்கு ஊறு விளைவித்தான்!” (மத். 26:20, 26).

எறும்புகள் கூட தலைவனுக்குக் கட்டுப்பட்டு கூட்டுறவில் வாழ்ந்து உணவைக் கூட பகிர்ந்துண்ணுகின்றன! காகங்கள் கூட கரைந்துண்ணுகின்றன. கூடிப்பாடி கடவுளைத்தேடி! காரணம் என்ன?

“அவர் கூப்பிடுகிற காக்கைக்குஞ்சுகளுக்கும் உணவூட்டுகிறார்”. எனவேதான் பக்தர் பாடுகிறார்... “காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பி விடுமே”-என கீர். 298-ல்,

அப்படியெனில்... உணவூட்டும் கடவுள்... நமக்கு உண்டு! மனிதன் இந்த உண்மையைப் புரிந்திடாமல், உணவூட்டியும் உயிர்த்தெழுந்த இயேசுவைத் தெரிந்திடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இயேசுவின் உவமையினூடே இயம்பிடும் உண்மைதான் என்ன? களஞ்சியத்தை இடித்துப் பெரிதாய் கட்டி... தானியத்தை அதிலேகூட்டி.. “என் ஆன்மாவே நீ நெடுநாள் புசித்து சுகித்திடு” எனத்தனக்குத்தானே கூறிக்கொண்டான்! கடவுள் அவனை எச்சரிக்கிறார்! “மனிதா! இன்றிரவு உன் உயிர் இல்லாமல் போனால்... நீ சம்பாதித்ததெல்லாம் என்னவாகும்” என்றார்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் உலகில் சுற்றி நடந்து உணவற்றோருக்கு உணவும், உறவற்றோர்க்கு உறவும் அருளி உயிரூட்டினார்!

உலகில் உயிர்வாழ்வுக்கு உதவும் வாழ்வாதாரம் உணவு. இந்த உணவை இல்லார்க்கும், எல்லார்க்கும் கூட்டுறவின் வழி நின்று வழங்குவோம்!.

“பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்.
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே”
- தாசரே...

என கீர். 405-ல் மதுரையை சார்ந்த அருள்திரு. வே. சந்தியாகு ஆயர் அவர்கள் இதழுடன் இதயம் களிகூர இறையியல் மெருகேற இயற்றுகிறார் பாடல்!

"எருசலேமில் பதினொருவரும், அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக்கண்டு". லூக். 24:33-ல் கூட்டுறவின் மாட்சி, காட்சி... இங்கே கண்டிடலாம்.

"பொரித்த மீன் கூடையையும், தேன் கூட்டுத்துணிக்கையும் அவர் வாங்கி, அவர்களுக்கு முன்பாகப் புசித்து", - எனக் கண்டிடலாம்.

இன்றைய உலகில்... நமது அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு கொண்டு அவருடனே நடப்போம்! அவரோடு தங்குவோம். அவரோடு பந்தியமர்ந்து போஜனம் பண்ணுவோம். அவரும் நம்முடன் நடந்து வருவார். நம்முடன் தங்குவார். நம்முடன் பந்தியமர்வார்!.

வாரும், யேசு நாதாவாரும்;
வானம் பூமி ஆளுவீர்;
உம்மை நம்பினோரெல்லாரும்
வாழ்வு காணச் செய்குவீர்;
பேரானந்தம்
தந்து பூரிப்பாக்குவீர்.

**அருள்திரு. D.S. செல்வராஜ்**

14-05-2017

**உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

## கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : வழி

**BELIEVING IN CHRIST : THE WAY**

விப. 14:10-20
திபா. 116
திப. 16:19-34
யோவா 14:1-7

**"வழியும் உண்மையும் வாழ்வும் நானே"** யோவா 14:6

வழி என்ற சொல் சாலைகளையும் வீதிகளையும் குறிக்கிறது. நல்ல வழியைக் கண்டு பிடித்தல் கடினமான அனுபவம் ஆகும். இன்று வழியைக் கண்டுபிடிக்க வரைபடங்களை பயன்படுத்துகின்றோம். வழியைக் காண்பிக்க ஆங்காங்கு வழிகாட்டிப் பலகைகள் இருக்கின்றன. இவைகளைப் பயன்படுத்தி சரியான வழியில் சென்று மகிழ்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து காட்டும் வழி இந்த எல்லா வழிகாட்டிகளை விட வேறுபட்டது. ஏனெனில் அவர் வழிகாட்டியல்ல. அவரே வழியாக இருக்கின்றார்.

இன்றைய நற்செய்திப் பகுதியில் இயேசு கிறிஸ்து விரைவில் தங்களைவிட்டுச் சென்றுவிடுவார் என்ற உணர்வு சீடர்களுக்குப் பெரிய வேதனையையும், கலக்கத்தையும் அளித்தது. எனவே இயேசு கிறிஸ்து அவர்களுக்கு ஆறுதல் கூறி ஊக்கப்படுத்தினார். இந்நேரத்தில் தம்மையே வழி என்று சொல்கிறார். இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளும் போது வழி பிறக்கிறது என்று தெளிவாக விளக்கியுள்ளார்.

இன்றைய திருமறைப்பகுதிகளை மையப்படுத்தி இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் போது எவைகளில் வழி பிறக்கின்றது என்பதை மூன்று குறிப்புகளில் தியானிப்போம்.

### *1. இடுக்கண் வேளைகளில் வழி :*

விப. 14:16 "இஸ்ரயேல் மக்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து செல்வார்கள்".

இஸ்ரயேலர்கள் யோசேப்பு காலத்தில் எகிப்துக்குச் சென்றார்கள். மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்த சூழலில் யோசேப்பின் இறப்பிற்கு பின் இடுக்கண் ஏற்படத் தொடங்கியது. யோசேப்பைப் பற்றி கேள்விப்படாத பார்வோன் எகிப்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இஸ்ரயேலர்களின் வளர்ச்சியைப் பார்த்து பயந்து அவர்களை அடிமையாக்கினார். இதனால் சொல்லொண்ணா வேதனையடைந்த இஸ்ரயேலர்கள் கடவுளை நோக்கி முறையிட்டார்கள். இதனால் கடவுள் விடுதலையாளராக மோசேயை எழுப்பி, ஆயத்தப்படுத்தி அனுப்பினார். விடுதலையைப் பெற்று தங்கள் நாடு நோக்கித் திரும்பி வருகிறார்கள். இந்த நேரத்தில் எகிப்தியப் படை பின்னால் துரத்தி வந்தது. கடவுள் பகலில் மேகத்தூணையும், இரவில்

நெருப்புத்தூணையும் கொண்டு பாதுகாத்தார். மகிழ்ச்சியாக வந்த பயணத்தில் இடைஞ்சல் ஏற்பட்டு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ஏனென்றால் செங்கடல் குறுக்கே நின்றது. பின்னால் எகிப்திய படை முன்னால் செங்கடல். இத்தகைய இடுக்கண் வந்தபோது மோசேக்கு எதிராகவும், கடவுளுக்கு எதிராகவும் முறுமுறுத்தார்கள். இந்த நேரத்தில் கடவுள் மீது நம்பிக்கைக் கொண்ட மோசே கடவுளை வேண்டினார். கடவுள் இடுக்கண் வேளையில் வழிகாட்டினார். செங்கடலை இரண்டாகப் பிளக்கச் செய்தார். கடல் உலர்ந்த தரையாகியது. இஸ்ரயேலர்கள் நடந்து சென்றனர். வழியாகிய கடவுள் இடுக்கண் நேரத்தில் இடுக்கண் நீங்க வழி செய்தார்.

I சாமு. 17-ல் இஸ்ரயேலை சவுல் ஆட்சி செய்து கொண்டிருந்த போது பெலிஸ்தியனாகிய கோலியாத் இடுக்கண் கொடுத்து வந்தான். ஒருவராலும் கோலியாத்தை எதிர்க்க முடியவில்லை. இந்த நேரத்தில் கடவுளை நம்பிய மக்களை மீட்க கடவுள் தாவீதை வழியாகப் பயன்படுத்தினார். தாவீது அரசர் சவுலிடம் உம் அடியானாகிய நான் என் தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது, சிங்கமோ அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டைக் கவ்விக் கொண்டு ஓடினால் நான் பின்தொடர்ந்து ஓடி, அதை அடித்து அதன் வாயினின்று ஆட்டை விடுவிப்பேன். அது என் மீது பாய்ந்தால் அதன் தாடியை பிடித்து நன்றாக அடித்துக் கொல்லுவேன். சிங்கங்கத்தையும், கரடியையும் கொன்றவன் நான். இந்தப் பெலிஸ்தியனும் அதைப் போலதான். சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்த பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார் (I சாமு. 17:34-38) என்றுக் கூறி கோலியாத்தை எதிர்த்துச் சென்றார். கோலியாத் கொல்லப்பட்டார் (I சாமு. 17:49, 50). இக்கட்டு நேரத்தில் இடுக்கண் வந்த வேளையில் தம்மை நம்பியவர்களுக்குத் தப்பித்துக் கொள்ள கடவுள் வழியை ஏற்படுத்தினார்.

திருப்பாடகர் தாவீது சொல்லும் போது "நீதிமான்கள் மன்றாடும் போது ஆண்டவர் செவி சாய்க்கின்றார். அவர்களை அனைத்து இடுக்கண்ணினின்றும் விடுவிக்கிறார்". (தி.பா. 34:17).

தொழுநோயால் பிடிக்கப்பட்ட மனிதர் ஒருவர் தன் இடுக்கண் நீங்க இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கையோடு வேண்டினார். நம்பிக்கையால் இடுக்கண் நீங்க வழி பிறந்தது. அம்மனிதர் நலம் பெற்றார். (லூக். 5:12-14). அன்பர்களே! நம் வாழ்வில் இடுக்கண் வேளைகளில் வழியாம் கிறிஸ்துவில் நம்பிக்கையோடு வாழ்ந்து இடுக்கண் நீங்கி முன்னேறிச் செல்வோம்.

## *2. இரட்சிப்பு வழங்கும் வழி :*

"ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்". (தி.ப. 16:31).

இரட்சிப்பு என்ற சொல் மீட்பு, விடுவித்தல், விடுதலை, ஒப்புரவு ஆகிய சொற்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு யாஷஹ் (yashah), கோயெல் (goel), காபார் (kaphar), பாதா (padah), பெதீன் (pedin) ஆகிய எபிரேயச் சொற்கள் விளக்கம் தருகின்றன. (யாஷஹ் - போரில் வெற்றியடைவது, கோயெல் - மீட்பதற்குரிய உரிமையுடையவர், காபார் - மூடுதல், பெதீன் - மீட்கும் பொருள்) பாவத்திலிருந்து விடுபடுவது இரட்சிப்பு.

இன்றைய திருமுகப் பகுதியில் படிக்கும் போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கைக் கொள்ளும் போது இரட்சிப்பு கிடைக்கிறது என்று படிக்கின்றோம்.

குறிசொல்லும் பெண் ஒருவர் பவுலாரின் திருப்பணியில் மீட்புப் பெற்றார். இதனால் அப்பெண்ணை அடிமையாக வைத்து பணம் சம்பாதித்தவர்கள் தங்கள் ஆதாயத்தை இழக்க நேரிட்டதால் பவுலாரையும், சீலாவையும் பிடித்து அதிகாரிகள் முன் இழுத்துச் சென்றனர். அவர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களைப் புனைந்தனர். நன்றாக அடிக்கப்பட்ட பின்பு சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டனர். அவர்களை உட்சிறையில் தள்ளி அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டி வைத்தனர். நடு இரவில் பவுலாரும் சீலாவும் இறைவேண்டல் ஏறெடுத்து இறைவனைப்போற்றிப் புகழ்ந்து பாடினர். சிறையின் கதவுகள் திறந்தன. திடுக்கிட்டு விழித்த சிறைக்காவலர் அனைவரும் தப்பித்திருப்பார்கள் என்று பயந்து தற்கொலை செய்ய முயன்றார். கைதிகளில் ஒருவரும் தப்பி ஓடவில்லை என்பதற்கு பவுலார் உறுதியளித்தார். மரண பயம் நீங்கியது. தொடர்ந்து தான் இரட்சிக்கப்பட வழி என்ன என்று வினவுகிறார் (அப். 16:30). “அதற்கு அவர்கள் ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் அப்பொழுது மீட்படைவீர்” (அப். 16:31) என்று இரட்சிப்பைப் பெற வழியைச் சொல்லுகின்றார்கள். இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கைக் கொண்டு மீட்பைப் (இரட்சிப்பை) பெற்றார் அந்தச் சிறைக்காலவர். இயேசு கிறிஸ்துவில் புதிய வாழ்வு பெற்றார்.

தி.பா. 3:8-ல் “விடுதலை அளிப்பவர் ஆண்டவர்” என்று திருப்பாடகர் தாவீது கூறுகிறார்.

எசாயா 12:2-ல் “இறைவன் என் மீட்பர், அவர் மேல் நம்பிக்கை வைக்கிறேன்” என இறைவாக்கினர் எசாயா கூறுகிறார்.

புலம்பல் 3:26-ல் “ஆண்டவர் அருளும் மீட்புக்காக அமைதியுடன் (நம்பிக்கையோடு) காத்திருப்பதே நலம்” என எரேமியா இறைவாக்கினர் புலம்புகின்றார்.

உரோமையர் 1:16-ல் “கடவுளின் மீட்பளிக்கும் நற்செய்தியை நம்பும் ஒவ்வொருவருக்கும் மீட்பு உண்டு” என்றும் I தீமோ. 1:15-ல் பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார் என்றும் பவுலார் தெளிவுபடுத்துகிறார்.

தி.ப. 4:12-ல் "இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை" என்றும், I பேதுரு 1:5-ல் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாய் மீட்புக்காகக் கடவுளுடைய வல்லமையால் பாதுகாக்கப்பட்டு வருகிறீர்கள்" என்றும் தூய பேதுரு குறிப்பிடுகின்றார்.

லூக். 19-ல் சக்கேயு என்னும் பெயரையுடைய செல்வர் ஒருவர் இருந்தார். இவர் வரி தண்டுவோருக்கு தலைவர். இவர் இயேசு கிறிஸ்து செல்லும் வழியில் காட்டு அத்திமரம் ஒன்றின் மேல் ஏறிக்கொண்டார். இயேசு கிறிஸ்து அத்தி மரத்தின் கீழ் வந்த உடன் சகேயுவை கீழே இறங்கச் செய்து, அவர் இல்லத்திற்குச் செல்கிறார். அப்போது தனது குற்றத்தை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்கிறார். இரட்சிப்பிற்கு வழியாம் இயேசு கிறிஸ்து அவர் குற்றங்களை மன்னித்து "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக். 19:9) என்று கூறி மகிழ்வித்தார்.

நம் வாழ்வில் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வது நாம் மீட்பையும் (இரட்சிப்படையும்) வழி ஆகும். இதை உணர்ந்து மீட்பை, இரட்சிப்பை, விடுதலை வாழ்வை நாம் சொந்தமாக்குவோம்.

### *3. இறையரசிற்கு அழைத்துச் செல்லும் வழி :*

"வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவா 14:6).

இறையரசு என்பது பரலோக ராஜ்யம், கடவுளின் அரசு, விண்ணக வாழ்வு, இறைவனின் ஆளுகை என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

"இயேசு கிறிஸ்து தமது கடைசி காலத்து நிகழ்வுகளைச் சீடர்களிடம் சொல்லும் போது கடவுளிடமும் என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்" (யோவா 14:1) என்று கூறுகின்றார். அதைத் தொடர்ந்து என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான் போய் இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வருவேன். உங்களை என்னுடன் அழைத்துச் செல்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகுமிடத்திற்கு வழி உங்களுக்கு தெரியும். (யோவா 14:1-4) என்று கூற தோமா இயேசு கிறிஸ்துவிடம் ஆண்டவரே! நீர் போகும் இடம் எது என்றும், அதற்குரிய வழியும் தெரியாது என்றும் கூறினார் (யோவா 14:5). வழி தெரியாது என்ற தோமாவிற்கு நானே வழி என்று கூறினார் இயேசு கிறிஸ்து. நான் இறையரசிற்கு வழிகாட்டி அல்ல. நான் வழி என்று கூறுகிறார்.

பத்து கற்பனைகளோ, பொன்னான விதிமுறையோ, சமயச் சடங்குகளோ, திருச்சபையில் உறுப்பினராக விளங்குவதோ இறையரசிற்கு செல்வதற்கு வழி அல்ல. இயேசு கிறிஸ்துவே வழி. காணிக்கை கொடுத்து விட்டால், இறைவேண்டல் ஏறெடுத்துவிட்டால் இறையரசு செல்லலாம் என்று நாம் நினைத்தால் தவறு. இயேசு கிறிஸ்து காட்டிய வழியில் நடத்தல்

வேண்டும். உண்மைக் கிறிஸ்தவராக மாற இயேசு கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

“ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவர்களுடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்” (யோவா 13:14, 15) என்று இயேசு கிறிஸ்து தமது மாதிரி வாழ்வைக் குறித்துக் கூறுகின்றார். அவரிடம், பணிவு, பொறுமை, அன்பு, கரிசனை, மன்னிப்பு, சகிப்புத் தன்மை வெளிப்பட்டது. இத்தகு தன்மைகளே வாழ்வில் கிறிஸ்துவைப் பிரதிபலித்தல் ஆகும். பிலிப்பியர் 2:5-ல் “கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மன நிலையே (சிந்தையே) உங்களிலும் இருக்கட்டும்” என தூய பவுலார் கூறுகின்றார். பவுலாரின் கூற்றுப்படி இயேசு கிறிஸ்துவின் மனநிலை நம்மிடம் இருக்க வேண்டும். அவரது மனநிலை குறித்து இயேசு கிறிஸ்து சொல்லும் போது “என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு” (யோவா 4:34) என்றார். அத்துடன் “என்னை நோக்கி, ‘ஆண்டவரே, ஆண்டவரே’ எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்” (மத். 7:21) என்கிறார். எனவே இயேசு கிறிஸ்துவின் சிந்தையாகிய தந்தையின் விருப்பை செய்து, ஏழை எளியவர்க்கு உதவி செய்து கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு அவர் வழியாக இறையரசை நம் சொந்தமாக்குவோம்.

அன்பர்களே! கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் சிறந்த வழியாக உள்ளது. எனவே இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு இடுக்கண் வேளைகளில், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும், இறையரசிற்கு அழைத்துச் செல்லும் வழியைப் பற்றிக் கொண்டு மகிழ்ந்து வாழ்வோம். வழியாம் கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**அருள்திரு. R. டேவிட் ஜெபசிங்**

21-05-2017

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு**

## அருட்பணி : கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தல்

**MISSION AS SHARING CHRIST'S PEACE**

| | |
|---|---|
| மீக். 4:1-7 | பிலி. 4:4-9 |
| திபா. 85 | லூக். 24:36-49 |

**"அவர்களுள் ஒவ்வொருவரும் தம் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும் அத்தி மரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பார். அவர்களை அச்சுறுத்துவோர் எவருமில்லை ஏனெனில் படைகளின் ஆண்டவரது திருவாய் இதை மொழிந்தது". மீகா 4: 4**

கடவுள் அமைதியை விரும்புகின்றவர். அமைதி என்பது குழப்பம், போர், வன்முறை, கோபம் போன்றவை இல்லாத சூழல் ஆகும். இறைவன் விரும்பும் அமைதி மீகா 4: 4 -ல் இறைவாக்கினர் கூறும் பொழுது அவர்களுள் ஒவ்வொருவரும் தம் திராட்சை தோட்டத்தின் நடுவிலும் அத்தி மரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பார். அவர்களை அச்சுறுத்துவோர் எவருமில்லை. ஏனெனில் படைகளின் ஆண்டவரது திருவாய் இதை மொழிந்தது.

அமைதி என்பதற்கு "ஷாலோம்" என்னும் எபிரேயச் சொல்லும் "ஐரேனே" என்னும் கிரேக்கச் சொல்லும் அமைதி அல்லது சமாதானம் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் அமைதி (சமாதானம்) என்பதற்கு தியானத்திற்கேற்ற மனநிலை என்ற பொருளும் உண்டு. போர் இல்லாத உலகையும் இது குறிக்கிறது. ஒருவர் அமைதியாக சுகமாக வாழும் பொழுது அவர்கள் வாழ்க்கை ஷாலோம் ஆக இருக்கும், யோசேப்பு தனது சகோதரர் தன்னிடம் பொருட்கள் வாங்குவதற்கு வேண்டிய பணம் கொண்டு வந்தோம் என்று அச்சத்தோடு கூறிய பொழுது தொ.நூ. 43:23-ல் அவன் உங்களுக்கு அமைதி உண்டாகுக! அஞ்ச வேண்டாம்! உங்கள் கடவுளும் உங்கள் தந்தையின் கடவுளுமானவர் உங்கள் கோணிப்பைகளில் அந்தப் பணத்தை உங்களுக்குப் புதையலாகத் தந்திருப்பார். உங்கள் பணம் தான் என்னிடம் வந்ததே என்று சொன்னார் என்று சொல்லி அவர்கள் அச்சத்தை விட கோரினான்.

### *1. அமைதியின் அரசர் மெசியா :*

இஸ்ரவேல் மக்கள் அமைதியின்றி, அடிமைத்தனத்தின் நுகத்தடியை சுமந்த பொழுதும் பிற அரசர்களால் துன்புறுத்தப்பட்டும் வேதனையில் அமைதியின்றி அலைந்த பொழுதும் எசாயா இறைவாக்கினார் தாங்கள் எதிர் நோக்கி இருக்கும் மெசியா அமைதியின் அரசர் என்று இறைவாக்கு உரைக்கின்றார், எசாயா 9:6 ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார் ஆட்சிப்பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும் அவர் திருப்பெயரே வியத்தகு ஆலோசகர். வலிமை மிகு இறைவன் என்றுமுள தந்தை

அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும். கடவுளைப் போன்று மனுக்குலமும் அமைதியை நிலை நாட்டும் காரணிகளாக விளங்க வேண்டும். திருப் பாடல் 85:10 பேரன்பும், உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் இறை வாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும். இவ்வுலகில் அமைதி நிலவ வேண்டுமெனில் மனிதர்களிடையே நல்லுறவு மலர வேண்டும். 1 அரசர் 5:12-ல் சாலமோனின் ஆட்சிக் காலத்தில் மன்னர் ஈராமோடு நல்லுறவு வைத்திருந்தார். இருவரும் அமைதியின் உடன்படிக்கைச் செய்து கொண்டனர். ஈராம் ஆலயம் கட்டுவதற்கான கேதுரு மரங்களைக் கொடுத்தார். இரு நாட்டின் பணியாளர்களும் இணைந்து மரத்தை வெட்டி தொப்பம் தொப்பமாகக்கட்டி கடல் வழியாகக் கொண்டு வர உதவினர். சாலமோன் ஈராமின் வீட்டாருக்கு இருபதாயிரம் கலம் கோதுமையையும் இரு நூறு குடம் பிழிந்து வடிகட்டிய ஒலிவ எண்ணையையும் ஆண்டுதோறும் கொடுத்தார். இரு தரப்பினரிடையே நட்பு, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஏற்படுமாயின் அங்கு அமைதி நிலவும். கடவுள் அமைதியின் உடன்படிக்கையை மனிதனோடு செய்ய விரும்புகிறார். எசாயா 48:18-ல் கடவுளின் இறைவார்த்தைகளுக்கு மனிதன் செவி சாய்க்கும் போது உன் நிறை வாழ்வு ஆற்றைப் போலும் உன் வெற்றி கடல் அலை போலும் பாய்ந்து வந்திருக்கும்.

## *2. அமைதியை ஏற்படுத்துவோர் ஆண்டவரது மக்கள் :*

மனிதர் அமைதியின் ஊடகமாய் தங்களைப் புத்தாக்கம் செய்ய வேண்டும். குடும்பம், சமூகம், திருச்சபை, மாநிலம், நாடு, அண்டை நாடுகள், உலக நாடுகளுக்குள் அமைதியில்லாச் சூழ்நிலை வன்முறை தலை விரித்தாடிக் கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்கிறோம். இறைவனின் அருட்கொடையாம் தண்ணீரை தமிழ் நாட்டிற்கு பகிர்ந்து கொடுக்க கர்நாடக அரசு மறுப்பது மட்டுமல்லாமல் வன்முறைகளில் ஈடுபட்டு பேரழிவை ஏற்ப்படுத்தியதை நாம் அறிவோம். மத். 5:9-ல் ஆண்டவர் மலைப் பொழிவில் மக்களுக்கும் அவர் தமது சீடர்களுக்கும் கற்றுக் கொடுக்கின்றார். மனிதன் அமைதியாக வாழ அறநெறிக் கோட்பாடுகளைக் கற்றுக் கொடுக்கின்றார். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். போர் இல்லாத தீவிர வாதமில்லாத உலகை நாம் ஏற்படுத்தும் போது தான் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவோம். 2016-ம் ஆண்டு கொலம்பிய அதிபருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. 8-10-2016 தினத்தந்திப் பத்திக்கையைப் பார்த்தோமென்றால் 52 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர ஜீவான் மேனுவல் சாண்டோசு உழைத்திருக்கிறார். கொலம்பிய நாட்டில் அரசுப் படைகளுக்கும் பார்க் கிளர்ச்சியாளர்களுக்கும் (மார்க்சிஸ்ட் கொரில்லா படையினர்) இடையே 1964 -ம் ஆண்டு தொடங்கி 52 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வந்தது இதில் 2 லட்சத்து 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். ஜீவான் 4 ஆண்டுகள் அமைதிக்கான பேச்சு நடத்தி அதில் வெற்றி

கண்டார் இவர் அண்மையில் பார்க் கிளர்ச்சியாளார்கள் குழுவின் தலைவர் டிமோ செங்கோ ஜிமெனசுடன் அமைதி உடன்பாட்டில் கையெழுத்திட்டார், அமைதிக்காக இவர் உழைத்த உழைப்பிற்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. புயல் காற்றை பூந்தென்றலாக மாற்றுகின்றவரே நம் கடவுள் (திபா. 107:29,30)

மியான்மர் நாட்டில் அடக்குமுறையை கையாண்டுவந்த ராணுவ ஆட்சிக்கு எதிராக குரல் கொடுத்து உலகின் கவனத்தை ஈர்த்தவர் ஆங்சான் சூகி. 15 ஆண்டுகள் வீட்டுக் காவலிலே சிறை வைக்கப்பட்டார். புற்று நோயால் பாதிக்கப்பட்ட கணவரைக் கூட ராணுவம் அனுமதிக்க வில்லை. மியான்மர் நாட்டில் குடியாட்சி மலர புரட்சியில் ஈடுபட்ட வீரப் பெண்மணிக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது. மட்டுமல்லாமல் அமெரிக்க அரசு மன உறுதியைப் பாரட்டி உயர்ந்த குடி மக்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற தங்கப் பதக்கத்தை வழங்கி பெருமைப்படுத்தி சிறப்பித்துள்ளது. இவ்வாறே நம்முடைய அருட்பணிகள் கிறிஸ்துவில் அமைதியைப் பகிர வேண்டும்; அப்படியெனில் நாமும் சிறப்பிக்கப்படுவோம்.

### ***3. அமைதியே இறையரசின் அடையாளம் :*** மீக். 4: 1 -5

கடவுளை குறித்த அச்சம் வரும் போது போர்க்கருவி, விவசாயக் கருவிகளாக மாறும் பட்டயங்கள், மண் வெட்டிகளாகவும் ஈட்டிகள் அரிவாள்களாக மாற்றப்படும் ஓர் இனத்துக்கு எதிராக இன்னொரு இனம் பட்டயம் எடுக்காததால் போர் தேவையில்லை. இன்று மனிதன் வீரியமிக்க அணு குண்டுகள், நியூட்ரான் குண்டுகளை, உருவாக்கி மனிதனை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறான், ஆண்டவர் படைத்த அழகிய உலகமாகிய இந்த உலகம் அமைதியின் உலகமாக மாற்றப்பட வேண்டும். 1 அரச. 4:25 சாலேமோனுடைய நாட்களிலெல்லாம் தாண் துவங்கி பெயர் செபா மட்டும் யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் திராட்சைச் செடியின் நிழலிலும் தங்கள், தங்கள் அத்தி மரத்தின் அடியிலும் சுகமாய் குடியிருந்தார்கள். சகரியா 9:9,10 அமைதி என்பது கடவுளின் ஆட்சியைக் குறிக்கும் கடவுளின் ஆட்சியில் தேர்ப்படையில்லாமல் போகச் செய்வார். போர்க் கருவியான வில் ஒடிந்துப்போம் வேற்றினத்தார்க்கு அமைதியை அறிவிப்பார். அவரது ஆட்சி ஒரு கடல் முதல் மறு கடல் வரை பேராறு முதல் நிலவுலகின் எல்லைகள் வரை செல்லும். ஆண்டவர் அமைதியின் அரசர் ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் உலகின் அமைதிக்காக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவின் உண்மை அடியார்களாகிய நாம் நம் அருட் பணியின் மூலம் அமைதியை நிலை நாட்ட வேண்டும் இவ்வுலகம் அமைதியும் நீதியும் நிறைந்ததாய் இருக்கும் போது தான் விண்ணகத்தை இவ்மண்ணுலகில் உருவாக்க முடியும். விண்ணுலக அமைதியை மண்ணுலகில் ஏற்படுத்த தம்மையே தியாகமாக்கிய இயேசு கிறிஸ்துவின் பாதச் சுவடுகளைப் பின்பற்றுவோம், அமைதியின் ஊடகங்களாவோம்.

**அருள்திருமதி. சார்லெட் சவுந்திர ராஜன்**

28-05-2017

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு**

# தூயாவியாரின் வாக்குறுதி

## PROMISE OF THE HOLY SPIRIT

| | |
|---|---|
| யோவே. 2:28-32 | கலாத். 5:22-26 |
| திபா. 42 | யோவா. 14:15-21 |

**" நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியை பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும், புதல்வியரும் இறை வாக்கு உரைப்பர் உங்கள் முதியோர் கனவுகளையும் உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் காண்பார்கள்".**

**யோவே. 2:28**

வாக்குறுதி தான் குடும்ப வாழ்வின் அஸ்திபாரம். வாக்குறுதி தான் நிறுவனங்கள் உறவுகள், நாடுகள் ஒன்றிணைய, இணைந்து பல்வேறு சாதனைகள் புரிய அடிப்படையான அச்சாணியாகின்றது. வாக்குறுதி எனும் அச்சாணியில் குடும்பங்கள் ஒன்றிணைந்து சமூகங்கள், மாநிலங்கள் இணைந்து நாடுகள் எனவும் கட்டியெழுப்பப்பட்டு வரலாறு ஆகின்றது. வாக்குறுதியின் அடையாளங்களாக மோதிரங்கள், மாலைகள், பாத்திரங்கள், கையொப்பங்கள் பரிமாறப்படுகின்றன.

நம் விவிலியத்தில் கடவுள் நோவாவுடன் வாக்குறுதி அல்லது உடன்படிக்கை செய்த போது வானில் வானவில் ஓர் அடையாளமாக வைக்கப்பட்டது. (தொ. நூ. 9:13) ஆபிரகாமுடன் கடவுள் உடன்படிக்கை செய்வதற்கு அடையாளம், ஆண் மக்களின் உடலில் விருத்தசேதனம் ஓர் அடையாளமாக்கப்பட்டது தொ. நூல் 17:11 மோசேயுடன் உடன்படிக்கை செய்ததற்கு அடையாளமாக இரு கற்பலகைகள் கையளிக்கப்பட்டன. இச்செயல்கள் இறைவாக்கினர்கள் எலியா, எலிசா எனவும் அரசர்கள் சவுல், தாவீது எனத் தொடர்ந்து வந்துள்ளன.

மனிதர் மற்றும் மன்னுயிர் அனைத்தின் வாக்குறுதிகளும் வாழ்வு எனும் வரையறைக்குட்பட்டதே. அனைத்துயிர்களின் வாழ்வையும் கடந்து இழந்த மனித வாழ்வை மீட்டிடவே கடவுள் இயேசு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார். சிலுவை மரத்தில் மனிதரானவரின் பாவத்திற்குமான தண்டனையை ஏற்றார். இவரில் பாவமே இல்லை என அரசுத் தலைவர்கள் சமயத் தலைவர்கள் அறிக்கையிட்டனர். நாம் தொடர்ந்து மீட்கப்பட்டவர்களாக வாழ, கடவுள் தூயாவியரை நமக்கு அருளியிருக்கின்றார்.

### *1. இறை வாக்குரைக்கும் அங்கீகாரம் :* யோவே. 2:28

சிறுவன் சாமுவேல் ஏலி என்ற குருவிடம் பயிற்சியாளராயிருந்த போது ஆண்டவர் சாமுவேல் வழியாக இறைவாக்குரைக்கச் செய்தார். (1 சாமுவேல் 3:1-21).

ஆட்டு மந்தையை மேய்த்து வந்த இளைஞரான மோசேயை ஆண்டவர் பெயர் சொல்லியழைத்து இறை வாக்குரைப்பதை (வி.ப. 3) காணலாம்.

சிரியா படைத்தலைவரின் தொழு நோய் நலம் பெற அடிமை நாட்டிலும் இறை வாக்குரைத்து நாடு மகிழ்வுறச் செய்தார் (2 அரசர் 5) காணலாம்.

8 வயதில் யோசியா, 9 வயதில் யோவாஸ் இளவயதிலேயே இறைவாக்குரைக்க, நாட்டில் ஆளுகை செய்ய ஆண்டவர் தெரிந்தெடுத்தார்.

இங்கிலாந்து நாட்டில் ஒரு சிறுவன், ஐசக் நியூட்டன், ஆப்பிள் மரமொன்றின் அருகில் அமர்ந்திருந்தார். அப்போது மரத்திலிருந்து பழமொன்று கீழே விழுந்தது. ஆனால் அது அவரை சிந்திக்க தூண்டியது பழுத்த ஆப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்? ஏன் அது மேலே போக வில்லை என சிந்தித்தார். எந்த ஒரு பொருளையும் தன் பால் ஈர்க்கும் ஆற்றல் பூமிக்கு இருப்பதைக் கண்டுபிடித்தார். ஆராய்ச்சியில் அதுதான் புவி ஈர்ப்பு விசை என்றார். அறிவியல் மேதை, கணித மேதை மற்றும் வானவியல் அறிஞர் சர் ஐசக் நியூட்டன் என இன்றும் பாராட்டப்படுகிறார்,

***2. இறைக் காட்சி காணும் அனுபவம் :*** யோவே 2:28

இளைஞரான யோசேப்பு கனவுகள் வாயிலாக எதிர் கால நிகழ்வுகளைக் காண்கிறார்.

தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா எனும் நான்கு இளைஞர்கள், அரசர் நெபுகத்னேசர் கண்ட கனவையும் அதன் உட் பொருளையும் விளக்கி இறைவன் தந்த காட்சிகளையும் அதன் வழியாக இறைச் செய்தியையும் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

ஒரு வாலிபன் தன் வறுமை நிலையில் உணவுக்காக கூலி வேலை செய்தான். அவனுக்கு அலுவலகப் பணி கிடைத்தது. அம்மாவுக்கு கடிதம் எழுதியவர் இவ்வேலையையும் ராஜினாமா செய்து விட்டேன். ஆனால் கடவுள் எனக்குக் கொடுத்துள்ள ஒரே ஒரு வாழ்க்கையை ஒரு நாளும் வீணாக்கமாட்டேன் என்று உறுதியாய் எழுதியிருந்தார். அதன் பின் தொடர் வாழ்வில் வாழ்க்கைப்போராட்டத்தைச் சலிப்பின்றி தொடர்ந்தார். உலகமே போற்றும் நாடகாசிரியர் என்ற உயர்வினை பெற்று இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றுயர்ந்தவர் நாடகாசிரியர் பெர்னாட்ஷா.

***3. இறை மேன்மைக்குரிய அடையாளம் :*** யோவே. 2:28

ஆபிரகாமுக்கு 99 வயதில் இறைவன் தோன்றி வருங்காலத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறார். (தொ.நூ. 17:1-8) மட்டுமின்றி 18-ம் அத்தியாத்தின் தொடக்க முதல் ஆபிரகாமுக்கு முன் தோன்றி காட்சிகள் தந்து வாக்குறுதிகள் வழங்குகின்றனர்.

ஆபிரகாம் லிங்கன் பாடுகள் நிறைந்த ஏழையானவர். தம் முதலாம் வகுப்பைக் கூடப் படித்து வெற்றி பெற முடியாதவர். அரசியலில் நுழைந்து தோல்விகளைத் தான் பல சாதனையாகக் கொண்டவர். எனினும் தளராது அரசியலில் போட்டியிட்டவர் 1860-ல் அமெரிக்கா நாட்டின் ஜனாதிபதியானார்.

இறைவாக்கினர் யோவேல் பெற்ற வாக்குறுதிகள் திருத்தூதர் பவுலடிகளார் காலத்தில் தொடக்க கால திருச்சபையில் செயல் வடிவம் பெற்றதைக் காண்கிறோம். இறுதி நாட்களில் இறை வாக்குரைக்கும் அங்கீகாரத்தை எல்லா நிலையிலும் பெற்றுக் கொள்வதென்றும் இறைக் காட்சி காணும் அனுபவத்தால் நிரம்பி விடுவதென்றும் இறை மேன்மைக்குரிய அடையாளத்தால் உன்னத நிலையைப் பெறுவதென்பதும் சிறப்பான சிந்தையாகும். விசுவாச வாழ்வில் தளர்வின்றி முன்னேறிட தூய ஆவியாரின் வாக்குறுதியினூடாக வளம் பெறுவோம் வாழ்வினை மறு உருவாக்கம் செய்யும் தூய ஆவியாரின் நடத்துதலுக்கு ஒப்படைப்போம். இறையாளுகையின் சிறப்பில் தளைத்தோங்குவோம்.

அருள்திரு. **செல்வ காட்பிரே சாமுவேல்**

04-06-2017

**மாணவர் ஞாயிறு**

# ஞானமும், அறிவும் கடவுளின் அருட்கொடைகள்

**WISDOM AND KNOWLEDGE : GIFTS OF GOD**

நீதி. 2:1-12 யாக். 3:11-18
தி.பா. 119:9-16 லூக். 2:41-52

**"விண்ணி-ருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும்; பொறுமை கொள்ளும். இணங்கிப்போகும் தன்மையுடையது; இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது; நடுநிலை தவறாதது; வெளிவேடமற்றது". (யாக். 3:17)**

கடவுளின் அருட்கொடைகளே மானுட வாழ்வின் ஆசிக்கு ஆதாரமாக அமைகின்றன. அவ்வகையில் ஞானம், அறிவு என்னும் கடவுளின் அருட்கொடைகளை விருப்பத்துடன் நாடி பெற்றுக்கொண்டு வாழ்வது நமது கடமையாகும். 'ஞானம்' என்னும் கடவுளின் கொடை நல்ல தலைமைத்துவத்திற்கு மிக அவசியமானது என பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே புரிந்து கொள்ளப்படுகிறது. கடவுளிடம் சாலமோன் விடுத்த மன்றாட்டு (I அர. 3:5-13) அதனை தெளிவுபடுத்துகிறது. மேலும், வாழ்வின் பல்வேறுபட்ட சூழல்களில் புத்தி சாதுர்யத்துடன் நடந்து கொள்ளும் சிறப்பியல்பாக ஞானம் புரிந்து கொள்ளப்படுகிறது. 'அறிவு' என்னும் கடவுளின் கொடை, கடவுளை சுவைத்தறியும் அறிவில் ஆரம்பித்து உலகின் விவசாயம், அறிவியல், மருத்துவம், வரலாறு, புவியியல், இலக்கியம், இன்ன பிறவற்றையும் கற்றறிந்து கொள்ளும் அறிவைச் சுட்டுகிறது. வாழ்வாதாரத் தேட்டத்திற்கான போட்டி உலகில் அறிவு நாட்டத்தை நம்மிடம் அதிகமாக தூண்டியுள்ளது. எனவே, இறையறிவு நாட்டம் வாட்டமான நிலையிலுள்ளது. ஞானமும், அறிவும் மானுட முயற்சியின் பலன் அல்ல; அவை கடவுளின் கொடைகளே என்ற புரிந்து கொள்ளுதல் மட்டுமே நமது அறிவுத் தேட்டத்தை சரியான பாதையில் நடத்தவியலும்.

ஞானமெல்லாம் ஆண்டவரிடமிருந்தே வருகின்றது; அது என்றும் அவரோடு இருக்கின்றது (சீராக்கின் ஞானம் 1:1). ஞானத்தின் உறைவிடமும், ஆதாரமும் ஆண்டவர் தாம் என்ற புரிதலை இங்கு காண்கிறோம். ஞானம் கடவுளின் ஆற்றலிலிருந்து புறப்படும் ஆவி; எல்லாம் வல்லவரின் மாட்சியிலிருந்து எழும் தூய வெளிப்பாடு. எனவே மாசுபட்டது எதுவும் அதனுள் நுழைய முடியாது (சாலமோனின் ஞானம் 7:25). அனைத்து ஆற்றலுமுடைய கடவுளிடமிருந்து வரும் தூய வெளிப்பாடாய் அமைந்த ஞானத்தினுள் தீங்கான எதுவும் நுழையவியலாது எனக்காண்கிறோம். யாக்கோபு அடிகளாரும் கடவுளிடமிருந்து வரும் ஞானம் தூய்மையானது

என்று அதன் சிறப்பினைச் சுட்டுகிறார். கடவுளிடமிருந்து வரும் ஞானத்தின் சிறப்பியல்புகளையும், அதனை அடைய வேண்டியதின் அவசியத்தையும் இம்மாணவர் ஞாயிறுக்கான தியானமாகக் கொள்வோம்.

## *1. நல் அமைதி நாடும் அறிவு :*

...அது அமைதியை நாடும்; பொறுமை கொள்ளும். (யாக். 3:17a)

தற்காலத்தில் எல்லா மக்களும் வேகத்தை விரும்புகின்றனர். ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குச் செல்ல ஆகும் பயணநேரம் எவ்வாகனத்தில் பயணித்தால் மிகக்குறைவாக இருக்குமெனக் கணக்கிட்டு பயணிக்கின்றோம். இதனால் பதற்றமும், பரபரப்பும் அன்றாட வாழ்வின் நீங்காத அங்கமாகிவிட்டன. இளையோர் பலர் விவேகமில்லாத வேகத்தை சாதனை எனக் கருதுகின்றனர். பயண வாகனங்களை சாகசக் கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். இது விபரீதங்களுக்குக் காரணமாகிறது. மருத்துவர்களும், சமூக ஆர்வலர்களும், ஆன்மீகவாதிகளும் மனதை அமைதிப்படுத்துங்கள். நிதானமாக இருங்கள் என அறிவுறுத்துகின்றனர்; மனதை ஒருமுகப்படுத்தும் பல்வேறு பயிற்சிகளையும் பரிந்துரைக்கின்றனர்.

'அமைதியினை நாடும்' என்பதைக் குறிப்பிட eirenikos என்ற கிரேக்கச் சொல் கையாளப்பட்டுள்ளது. இதன் பொருள் மானுடர் தமக்குள்ளும், மானுடர் கடவுளோடும் நல்ல உறவு நிலையுடன் வாழ்தலாகும். இன்றைய சமூகத்தில் உறவுநிலைகள் சீரடைய அமைதி நாடும் அறிவு மிகவும் அவசியமாகும். மாணவர்கள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், மூத்தோருக்கும் உரிய மரியாதையளித்து நல்லுறவுடன் செயல்படுதல் வேண்டும். வேகமான விவேகமில்லாத செயல்கள் கடவுளிடமிருந்து மானுடரையும், மானுடர் தமக்குள்ளும் பிரிவினை கொள்ளும் அறியாமைக்கு நடத்தும்.

அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது (யாக். 3:18). அமைதி இன்றைய உலகின் மிக அவசரத் தேவை. இறையறிவு உள்ளவர்கள் அமைதி விதை விதைத்து நீதியின் கனிகளை விளைவிப்பர். அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் (மத். 5:9). அமைதியும், பொறுமையும் அருளும் கடவுளின் அறிவு பெற நாடுவோம். அதுவே கடவுளின் மக்கள் எனும் அடையாளத்தை நமக்குத் தருவதாக அமையும்.

## *2. நற்செயல் விரும்பும் அறிவு :*

... இணங்கிப்போகும் தன்மையுடையது; இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. (யாக். 3:17a)

இறையறிவு எப்போதும் பணிவுடனும், இணக்கத்துடனும் செயல்படத்தூண்டுவதாய் உள்ளது. அது இறைவாக்குகளைக் கவனிக்கத்தூண்டுவதாகவும், அதனடிப்படையில் நற்செயல் செய்வதாகவும் அமைகிறது. தற்கால சமூகத்தில் உலகியல் அறிவு பெருகியிருக்கிறது. நற்செயல் புரியும் நற்பண்பாகிய இறையறிவு அருகியிருக்கிறது. நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தும் செயல்கள் மங்கிப் போய்விட்டன. 'நான்' என்ற ஆணவமும் 'எனக்கே' என்ற சுயநலமும் இளையோரிடம் செழித்திருக்கின்றன. அண்மை நாட்களில் ஊடகங்களை ஆக்கிரமித்த செய்திகள், விரும்பியவள் தன்னை விரும்பவில்லை என்றதாலும் விரும்பிவிட்டு பின்னர் வெறுப்பை வெளியிட்டதாலும் நிகழ்ந்த கொலைச் சம்பவங்கள். உதாரணமாக உள்ளன. அந்நிகழ்வுகளின் உண்மை நிலவரங்கள் நமக்குத் தெளிவாகத் தெரியாவிடினும், ஒன்று மட்டும் தெளிவு; அது இளைய சமூகம் நற்செயல் புரியும் நற்பண்பாகிய அறிவிலிருந்து அகன்று நிற்கிறது என்பதே. இரக்கமில்லாக் கல்நெஞ்சத்தோராய் கணப்பொழுதில் மாறிடும் அறியாமைக்குக் காரணம் நற்செயல் விரும்பும் அறிவு இல்லாததே ஆகும்.

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இதைத் தெரிந்து கொள்ளுங்கள்; ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும், பேசுவதிலும் சினங்கொள்வதிலும் தாமதமும் காட்ட வேண்டும் (யாக். 1:19). 'கேட்டல்' அல்லது 'கவனித்தல்' மாணவர்களிடம் அதிகரிக்க வேண்டும். எல்லாம் எனக்குத் தெரியும் என்ற எண்ணம் கவனித்தலைத் தடுத்துவிடும். பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் அறிவார்ந்த ஆலோசனைகளை எப்போதும் கேட்டு செயல்பட வேண்டும். ஆலோசனைகளைத் தவிர்ப்பது நற்செயல் நாட்டத்துக்கு இடையூறாகிவிடும். பேசுவதற்குமுன் பலமுறை யோசிக்க வேண்டும். சினங்கொள்ளுதலைத் தவிர்க்க வேண்டும். இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் (லூக். 2:52). நாம் கடவுளுக்கும், பெற்றோருக்கும் மற்றுமுள அனைவருக்கும் உகந்தவர்களாய் வாழ்ந்திட இயேசுநாதர் சான்றாகி கற்றுத் தருகின்றார்.

கல்வியில் எத்துணை உயர்வு பெற்றாலும், நற்செயல்கள் இல்லையெனில் பெற்ற கல்வியறிவு பயனற்றதாகிவிடும். சிறந்த கல்வியறிவும், உயர்ந்த பட்டங்களும் பெற்றவர்கள் கொலை, கொள்ளை, தீவிரவாதம், பாலியல் வன்கொடுமைகள் போன்ற தீமைகளுக்குட்படுதல் வழக்கமான செய்தியாகிவிட்டது. அறிவு புகட்டும் கல்வியுடன் நற்செயல்களைப் போதிக்கும் நன்னெறிக் கல்வியும் மிகவும் அவசியமானது. கல்வியை வளம் தரும் வேலைவாய்ப்புக்கான அடித்தளம் மட்டுமெனக் கருதாமல், நற்பண்புகளை வெளிப்படுத்தும் வளர்ச்சிப்படியாக மாணவர்கள் ஏற்க வேண்டும்.

## 3. நடுநிலை தேடும் அறிவு

... நடுநிலை தவறாதது; வெளிவேடமற்றது. (யாக். 3:17c)

இறையறிவு வெளிப்படையானது, நடுநிலை தவறாதது, பேய்த்தன்மை வாய்ந்த அறிவு (யாக். 3:15,16) வெளிவேடமானது. தெரியாததைத் தெரியும் என்பதும், புரிந்து கொள்ளாததைப் புரிந்து கொண்டேன் என்று கூறுவதும் வெளிவேடமானது. இயேசுநாதர் தம் சீடர்களிடம், நான் செல்லும் இடமும் அதற்குரிய வழியும் உங்களுக்குத் தெரியும் எனக்கூறினார். தோமாவைத்தவிர மற்றவர்கள் அமைதியுடனிருந்தனர். தோமா அவரிடம், நீர் எங்கு செல்கிறீர் என்பதும் அதற்கான வழியும் எங்களுக்குத் தெரியாது என வெளிப்படையாய் கேட்டார். அதன் காரணமாக இயேசு தெளிவாக விளக்கமளித்தார்; (யோவா 14:4-7). எதையும் ஐயமற கற்றுத்தெளிவடைவதே மாணவர்களின் சிறப்பு.

அரசர் சாலமோனிடம் நீதிகேட்டு வந்த இரு பெண்களுக்கு மிகுந்த ஞானத்துடன் அவர் தீர்ப்பளித்தார். உயிருடனிருக்கும் குழந்தை யாருடையது என்பதைக் கண்டறிய அவர் கையாண்ட யுக்தி மிகச்சிறப்பானது. உண்மையான தாய் உயிருடனிருக்கும் தன் குழந்தை கொல்லப்படுவதற்குக் கடுகளவேனும் சம்மதம் சொல்லமாட்டாள் என்பதைத் தீர்ப்பிற்கு அவர் ஆதாரமாக்கினார். இதனால் நடுநிலையுடன் தீர்ப்பிடும் அவரது அறிவுத்திறன் பளிச்சிட்டது (Iஅர. 3:16-28).

இக்கால சமூகத்தில் செல்வத்தாலும், செல்வாக்காலும், சொல்லாற்றலாலும் நடுநிலையைச் சாய்த்திடும் சூழல்கள் உண்டு. மேற்கூறியவற்றால் அநீதியை நீதியென சாதித்தவை அறிவென எண்ணும் அறிவிலித்தனம் அகன்றிட ஆண்டவரின் அறிவு அவசியம். இளைய சமூகம் இத்தகு நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, நடுநிலைநாடும் அறிவாளிகளாக மாறவேண்டும். படித்துயர்ந்து பணிகளில், பதவிகளில் செல்லும்போது நடுநிலை தவறாத நீதியாளர்களாய் இறைப்பண்புடன் வாழ வேண்டும். உம் வாயினின்று வரும் நீதித்தீர்ப்புகளை எல்லாம் என் இதழால் எடுத்துரைக்கின்றேன் (தி.பா. 119:13). கடவுளின் நடுநிலையான நீதித்தீர்ப்புகளையே நான் என் வாயினால் அறிவிக்கிறேன் என உணர்வுப்பூர்வமாக அறிக்கையிடுகிறார் திருப்பாடலாசிரியர். ஊழல், கையூட்டு, வரதட்சணை போன்ற தீமைகள் சமூகத்திலிருந்து ஒழிய நடுநிலையைத் தேடும் அறிவு நாட்டமுள்ள இளையோரின் துடிப்புள்ள செயல்பாடு காலத்தின் கட்டாயமாகும்.

காய்ச்சலால் அவதியுற்ற தாய், தனது 4 வயது மகளுடன் மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவர் பரிசோதித்துவிட்டு $102.3^0F$ காய்ச்சல் இருக்கிறது. மருந்து தருகிறேன். திரும்பவும் நாளை வாருங்கள்

எனக் கூறினார். குழந்தை மருத்துவரிடம் ஐயா, எங்கள் திருமறைப் பள்ளி ஆசிரியர் சுகமில்லாமலிருந்தால் இறைவேண்டல் செய்யக்கூறினார். எனவே, நான் அம்மாவுக்காக மன்றாடுவேன் எனக் கூறியது. மருத்துவரும் சரி எனக் கூறியனுப்பினார். மறுநாள் மருத்துவமனைக்கு வந்தனர். மருத்துவர் குழந்தையிடம் நேற்று நீ மன்றாடினாயா? என்று கேட்டார். ஆம், அம்மாவுக்கு $0^0$F ஆக மாறவேண்டுமென ஜெபித்தேன். மருத்துவர் அக்குழந்தையிடம் மனிதர்களின் உடல் வெப்பநிலை $0^0$F ஆகிவிட்டால் மரணம் நேரிடும்; மனித உடலின் சராசரி வெப்பநிலை $98.6^0$F, பின்னர் இதைக் கற்றுக்கொள்வாய் எனக் கூறினார். குழந்தையும் தெளிவடைந்தது போல் சிரித்தது.

கல்வியறிவு தெளிவு தருவதாயும், அறியாமையை அகற்றுவதாயும் இருக்க வேண்டும். இறையறிவு நல் அமைதியையும், நற்செயல் விருப்பத்தையும், நடுநிலை தேடுதலையும் அருளுகிறது.

ஞானத்தைப் புறக்கணியாதே; அது உன்னைப் பாதுகாக்கும். அதை அடைவதில் நாட்டங்கொள்; அது உன்னைக் காவல் செய்யும். (நீமொ. 4:6). கடவுளின் அருட்கொடைகளான ஞானத்தையும், அறிவையும் அடைய நாம் எப்போதும் ஆவலுள்ளோராய் இருக்க வேண்டும். அதுவே நம் வாழ்வுக்கு பாதுகாப்பு. ஞானம் தரும் பணிவும், நன்னடத்தையும் நம்மை ஞானமும், அறிவாற்றலுமுடையோர் என வெளிப்படுத்தும் (யாக். 3:14).

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் பாடல் வரிகள். இறையறிவு நாடுவோம், தெளிவுடன் கற்போம். நல்வாழ்வு பெறுவோம்.

**அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ்**

04-06-2017

பெந்தக்கோஸ்து ஞாயிறு

## வாரும் தூய ஆவியாரே முழு படைப்பையும் மாற்றுருவாக்கும்

**COME HOLY SPIRIT TRANSFORM THE WHOLE CREATION**

| | |
|---|---|
| எசே. 36:24-36 | தி.ப. 2:1-13 |
| தி.பா. 29 | யோவா. 20:19-23 |

**"அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்".** தி.ப. 2:4

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளிலிருந்து 50 ஆவது நாளை தூயாவியார் திருநாள் அல்லது பெந்தக்கோஸ்து நாள் என்று திருச்சபை கொண்டாடுகிறது. பெந்தேக்கோஸ்து என்றால் ஐம்பது என்று பொருள். பாஸ்கா விழா கொண்டாடப்பட்ட நாளிலிருந்து ஏழு வாரங்கள் (49 நாள்கள்) வாரங்களின் பண்டிகையை இஸ்ரயேலர் கொண்டாடினர். இந்த ஏழு வாரங்களும் வாற்கோதுமை அறுவடை செய்வார்கள். 50-வது நாள் அறுவடை செய்த வாற்கோதுமையிலிருந்து காணிக்கையாக ஆலயத்தில் படைத்து பெந்தக்கோஸ்து விழாவாக ஆசரித்தனர். (இச. 16:9-14, லேவி. 23:15,16).

இப்படி, பெந்தக்கோஸ்து விழா கொண்டாடுவதற்காக சீடர்கள் எருசலேமில் கூடி வந்திருந்த போது பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறத் தக்கதாக தூயாவியரால் நிரப்பப்பட்டாலும், தங்களுக்கு அருளப்பட்ட வரங்களினாலே மாற்றுருவாக்கம் பெற்று சாட்சிகளானார்கள் என்று காண்கிறோம். (எசே. 36:26, 27. யோவே. 2:28, 29, யோவா. 16:8,11, தி.ப. 1:8) இன்றும் அந்தத் தூயாவியார் நம்மில் மாற்றுருவாக்கம் ஏற்படுத்த வல்லவராய் இருக்கிறார். எப்படி நம்மில் மாற்றுருவாக்கம் ஏற்படும் என்பதை இங்கு சிந்தனை செய்வோம்.

### ***1. இறைவனில் ஒன்றித்த வாழ்வு :*** தி.ப. 2:1-12

இதுவரைக்கும் பயத்தோடு இருந்த சீடர்கள் பயம் மாறி சாட்சிகளாயினர். பலத்தோடும் வல்மையோடும் அரிய பெரிய செயல்களைச் செய்தனர். பல நாட்டு மக்கள், மொழி பேசுபவர்கள் தங்கள் தங்கள் மொழியில் பேசுவதைக் கேட்டார்கள். புரிந்து கொண்டனர். ஒழிவு மறைவின்றி ஒன்றிணைந்து எல்லாவற்றையும் பொதுவாக வைத்து பகிர்ந்து வந்தனர். (தி.ப. 2:44-45, தி.ப. 4:32-35). தங்களில் யார் பெரியவர் எனச் சண்டையிட்ட வாழ்வு மாறி கிறிஸ்துவை உயர்த்திக் காட்டி சாட்சியாய் வாழும் வாழ்வு ஏற்பட்டது. (தி.ப. 4:20, 5:32, கலா. 2:20) இன்றும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்கும் போது தூய ஆவியார் வல்லமையாய்ச் செயல்படுவார் (தி.ப. 1:4).

### *2. இறைமைந்தராய்ச் செயல்படுவோம் :* உரோ. 8:11-16

தூய ஆவியரால் நடத்தப்படுகிறவர்கள் கடவுளின் புத்திரராயிருப்போம். அப்பா தந்தையே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரம் நமக்கு கிடைக்கும். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியார் சாட்சி கொடுக்கிறார். தி.ப. 8:9-24 வசனங்களில் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்தில் பிலிப்பு நற்செய்தி அறிவித்து வந்தார். அங்கிருந்த மாய வித்தைக்காரனாகிய சீமோன் பிலிப்பு மூலமாக நடந்த அற்புத அடையாளங்களைக் கண்டு பிரமித்து விசுவாசித்து திருமுழுக்கு பெற்று பிலிப்புவை பின்பற்றினான். சமாரியாவில் பேதுருவும் யோவானும் வந்து தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மேல் கைகளை வைத்து மன்றாட அவர்கள் தூய ஆவியரைப் பெற்றுக் கொண்டார்கள். இதைப் பார்த்த சீமோன் அவர்களிடம் பணத்தைக் கொண்டு வந்து நான் எவர்கள் மேல் கைகளை வைக்கிறேனோ அவர்கள் தூய ஆவியரைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற போது பேதுரு கடிந்து அவனது துர்க்குணத்தை விட்டு மனந்திரும்ப செய்கிறார். அதன் மூலம் அவர் தேவ புத்திரராய்ச் செயல்பட்டார். இன்று ‘தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே’ என்று பாடல் பாடும் நாம் அதன்படி வாழ, இறைமைந்தர்களாச் செயல்பட ஆயத்தமாயிருக்கிறோமா?

### *3. இறை வல்லமையோடு செயல்படுவோம் :*

தூய ஆவியரைப் பெற்ற பெசலெயேலும் அகோலியாவும் தூய தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலைகளையும் ஞானத்தோடும் புத்தியோடும் விவேக இருதயத்தோடும் செய்தனர். (வி.ப. 35:30; 36:1).

தூய ஆவியாரைப் பெற்ற யோசேப்பு பார்வோனால் புகழப்படுவதையும், எகிப்து தேசமுழுமைக்கும் அதிகாரியாக்கப் பெற்றதையும் காண முடியும். (தொ.நூ. 41:38-43). இதனால் வரவிருந்த பஞ்ச காலத்தில் எகிப்தியரும், யாக்கோபின் சந்ததியாரும் காக்கப்பட்டார்கள். (தொ.நூ. 49:25; 50:20).

பாபிலோனில் அடிமையாகக் கொண்டு போகப்பட்ட தானியேலுடன் தூய ஆவியர் இருந்தபடியால் எல்லா வேதனைகளிலும் தண்டனைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டது மட்டுமல்ல, அரசு முழுமைக்கும் அதிகாரியாக்கப்பட்டு தானியேல் சீரும் சிறப்புமாயிருந்தார் (தானி. 5:11; 6:3-28).

இன்று நாமும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட வாழ்வு வாழும்போது இப்படி வல்லமையாய் செயல்களை செய்வதோடு அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு மாற்றுருவாக்கப்படுவோம் என்பதில் ஐயமில்லை.

**அருள்திரு. J. ஜெயக்குமார்**

11-06-2017

**திருத்துவ ஞாயிறு &**
**பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு**

# திரித்துவக் கடவுளில் நம்பிக்கை கொள்கிறோம்

**WE BELIEVE IN THE TRIUNE GOD**

| | |
|---|---|
| எசே. 1:4-28 | 2 கொரி. 13:11-13 |
| திபா. 98 | மத். 28:16-20 |

**"ஆண்டவர் இயேசு கிறிஸ்தவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!"** 2கொரி. 13:13

நாம் நம்பும் இறைவன் நிறைவானவர், அவரது நிறைவை விவரிப்பது இயலாத ஒன்று என்பதை நாமறிவோம். இறைவன் ஒருவரே என்றும், அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின என்றும், மனிதர் அனைவரும் அவரைச் சார்ந்து தான் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம் (திப. 17:28) என்றும் திருமறை மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் வெளிப்படுத்தியுள்ளது. இறைமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பிறப்பு முதல் இறப்புவரை, தந்தையாம் இறைவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, தூய ஆவியாராம் இறைவன் என்றறியப்படும் மூவொரு இறைவனில் கொண்ட விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம். இம்மூவரும் ஒருவரே, ஒரே கடவுளே. இப்படி ஒரே கடவுளில் மூன்று நபர்கள் எனப்படும் மறைபொருளைத் திரித்துவம் (TRINITY) அல்லது மூவொரு இறைவன் (TRIUNE GOD) என்று அழைக்கிறோம். இம்மூவரில் காணப்படும் நல்லிணக்கம், ஒற்றுமையுணர்வு நம் ஒவ்வொருவருக்குள்ளும் தோன்ற வேண்டும். தொடக்க கால திருச்சபையின் போதனையும், எழுத்தும், வாழ்த்தும் மூவொரு இறைவனை மையப்படுத்தியே அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. மூவொரு இறைவன் வரலாற்று இறைவனாகிறார். வழிபாட்டின் மையமாகிறார், வாழ்வின் இலக்காகிறார்.

## *1. வரலாற்றில் :*

மூவொரு இறைவன் மனித வரலாற்றில் செயலாற்றிக்கொண்டே இருந்தார். இருக்கிறார், இருப்பார் என்பதுதான் இறைமக்களின் ஆழமான நம்பிக்கையும், திருமறையின் அழுத்தமான போதனையுமாகும். எங்கோ அமர்ந்திருந்து எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறவராக அல்ல (விப. 3:8). மனித நிலையில் இறங்கி வந்து "இருக்கிறவர் நானே" (விப. 3:14) என்று தம் இருப்பு நிலையை உறுதி செய்து தம்மை வெளிப்படுத்திய ஆற்றல் நிறைந்த முற்பிதாக்களின் இறைவன் அவர். பூர்வகாலத்தில் இறைவாக்கினர் வழியாகப் பேசிய இறைவன், இந்தக் கடைசி காலத்தில் தம் குமாரன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். (எபி. 1:1-2) ஆக இவர் வரலாற்றுக் கடவுள். இதிகாச, புராண, கற்பனைக்

கடவுளாக இராமல் வரலாற்றில் செயலாற்றியதுடன், வரலாற்றை கி.மு., கி.பி. என்று இரண்டாகப் பிரித்து இன்றளவும் மனுமக்களை வழிநடத்துகிற கடவுள்.

வரலாற்று இறைவன் பாடுபடும் தம் மக்களோடும், அவர்களின் விடுதலைக்காக உழைப்பவர்களோடும் உடனிருக்கிறார். இத்தகைய அனுபவத்தில் மும்மைக் கடவுளை உணர முடியுமேயன்றி, கணித அடிப்படையில் விளக்க இயலாது. பெயரைக் கேட்ட யாக்கோபுக்கு பெயர் வெளிப்படுத்தப்படவில்லை. பதிலாக அவரது பெயர் புதுப்பிக்கப்பட்டு, புது ஆசீர்வாதம் கிடைத்தது (தொநூ. 32:29). தூயவர், தூயவர், தூயவர் என்று முக்காலத்துக்கும் உரிய துதியுடன் இறைவனின் மாட்சியை எசாயா ஆலயத்தில் முழுமையாகக் கண்டார் (எசா. 6:3). இதன் விளைவு "என்னை அனுப்பும்" (6:8) எனும் முழுமையான அர்ப்பணிப்பாகும். வரலாற்றில் தம்மை ஆற்றல் பொருந்தியவராய் வெளிப்படுத்திய, செயலாற்றிய மூவொரு இறைவனை முழு மனதுடன் தொழுது அர்ப்பணத்துடன் வாழ்வது இறைமக்களின் கடமை.

### *2. வாழ்க்கையில் :*

மூவொரு இறைவனை வெளிப்படுத்தியது இயேசு கிறிஸ்துதான். மரியாள் தூயாவியாரால் கருத்தரித்து இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்தார். யோர்தான் நதிக்கரையில் "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று தந்தை தம்மை வெளிப்படுத்தியதும், புறா வடிவில் தூய ஆவியார் இறங்கியதும் மூவொரு இறைவனை அடையாளப்படுத்திய திருமறை நிகழ்வுகளாகும். இயேசு தமது பணி வாழ்வில் தந்தையைப் பற்றியும், தூயாவியரைப் பற்றியும் பேசுகிறார் (மத். 10:19, 20).

தந்தையாம் இறைவனுடனான இயேசுவின் ஒன்றிப்பும் தூய ஆவியாரின் உடனிருப்பும் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் பணித்திட்டத்தை எளிதாக்கியது எனலாம். எனவே தான் தந்தை, மைந்தன், தூயாவியாரின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் என்று மூவொரு இறைவனை மையப்படுத்திய செயல் திட்டத்தினை சீடர்கள் முன் வைத்தார். (மத். 28:19) ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் என்று ஆரம்பித்து நாசரேத் அறிக்கையில் விடுதலைப் பணித்திட்டத்தினைப் பட்டியலிட்டார் (லூக். 4:18-20). விடுதலைப் பணியினை வரலாற்றில் தம் தந்தை செய்து வந்ததையே தாமும் மனித வாழ்வில் செய்து வருவதாக இயேசு கூறினார். (யோவான் 5:16-23) மூவொரு இறைவனின் ஒருங்கிணைந்த செயல்பாடு இங்கு தெளிவு பெறுகிறது. மூவரும் ஒருவரையொருவர் அன்பில் ஏற்றுக்கொண்டு அரிய, பெரிய செயல்களை மனித வாழ்வில் செய்து நிறைவேற்றுகிறார்கள் (யோவா. 5:20-21). ஒருவரையொருவர் கனம் பண்ணுகிறார்கள். நாமும் ஒன்றாயிருக்க வேண்டும், நம்மிடையேயும் நல்லிணக்கம் வளர வேண்டும் என மூவொரு இறைவன் விரும்புகிறார் (யோ. 17:21).

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்றவர் வரலாற்றின் இறைவனாயிருந்து, நமது விசுவாச வாழ்வின் இலக்காயிருந்து வழிபாட்டின் மையமாய் செயலாற்றுகிறார் எனும் பேருண்மையை நமது பற்றுறுதி வாழ்வுப் பயணத்தில் தெளிவுபடுத்தி சாட்சி பகர்வோம். "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக" (2 கொரி. 13:13).

**அருள்திரு. D. ஜாண் ஜெபதாஸ்**

11-06-2017



# படைப்பு விடுதலைக்காக வேதனையுற்றுத் தவிக்கிறது

**CREATION GROANS FOR LIBERATION**

எசே. 36:24-36 உரோ. 8:18-25
திபா. 29 யோவா 20:19-23

**“இந்நாள் வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது”** உரோ. 8:22

இந்த உலகில், இந்நாட்களில் எபோலா, எய்ட்ஸ், சுனாமி ஆகியவற்றைவிட உலகத்தை அச்சுறுத்தும் ஒன்று இருக்கிறது என்றால் அது சுற்றுச்சூழல் சீர்கேடு. அதை தடுத்து உலகத்தை காப்பாற்ற, படைப்புகளை பாதுகாக்க எண்ணற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசுகள் முயன்று வருகின்றன. ஆனால் தனிமனிதனின் உதவி இல்லாமல் படைப்பைப் பாதுகாப்பது அரிதான செயல். காரணம் மனிதன் படைப்பை அழித்து வருகிறான். படைப்புக்கு மாறான பல்வேறு பொருட்களை தயாரித்தால் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட காரணமாயிற்று. மழையின் அளவும் குறைந்து பூமி வெப்பமடைந்து மனிதன் வாழத்தகுதியற்ற பகுதியாக மாறி வருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து, பூமி வெப்பமடைவதால் உலகெங்கும் உள்ள பனிப்பாறைகள் உருகும், கடல் மட்டத்தை ஒட்டிய நாடுகள் அழியும் என்ற அதிர்ச்சித் தகவல்கள் வெளிவர தொடங்கியன. உடனே ஐ.நா. சபையும் விழிப்படைந்தது. 1972 ஆம் ஆண்டு ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக் ஹோமில், மனித குடியிருப்பும், சுற்றுச்சூழல் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க. உலக மாநாட்டைக் கூட்டியது. அதில், உலக சுற்றுச்சூழல் முக்கியத்துவம், இயற்கை வளங்கள் அதன் பயன்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டது. மாநாட்டின் நிறைவில் ஜூன் 5 ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினமாக (World Environmental Day) அனுசரிக்க பிரகடனம் செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி இயற்கையைப் பாதுகாக்கும் நிகழ்வுகள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. அவ்வாறாக இருந்தும் படைப்புகள் வேதனையின் பாதையில், அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இயற்கை படைக்கப்பட்ட நோக்கத்தை இழந்து வருகின்றன.

இயற்கை என்பது கடவுளின் அருட்கொடை. இயற்கையை கடவுள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு படைத்து, மனிதன் இயற்கையின் நற்பலன்களைப் பெற்று வாழ்வைத் திருப்திப்படுத்த அடித்தளமிட்டார். படைப்பின் வரலாற்றை தொடக்க நூலில் காணும் போது, இறைவன் இயற்கை மீது கொண்ட பற்றைக் காண முடிகிறது.

இந்தப் படைப்புகள் அனைத்தும், கடவுளின் திட்டப்படியே நேர்த்தியாய் படைக்கப்பட்டவை. அனைத்தையும் நல்லதென்று கண்டார் (தொ.நூ. 1:31). ஆனால் மனிதனை மண்ணுலகில் உருவாக்கினதற்காக மனம் வருந்தினார் (தொ.நூ. 6:6). ஏன் மனம் வருந்தினார்? கடவுளின் நோக்கம் ஒன்று. மனிதனின் செயல்பாடு ஒன்று. காரணம் படைப்பைப் பண்படுத்திப் பாதுகாக்க மனிதனை உருவாக்கினார். ஆனால் மனிதனோ திசை மாறினான். இயற்கையைச் சுரண்டினான். படைப்பை, படைத்த நோக்கத்தை மாற்றினான். ஏன் இந்த நிலை? என்பதைச் சிந்திப்போம்.

## *1) மனிதனின் மீறுதல் :*

படைப்பைப் பாதுகாக்க வேண்டிய அரியதொரு பொறுப்பினை கடவுன் மனிதனுக்கு வழங்கினார். ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் கடவுள், மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார் (தொ.நூ. 2:15). தொடர்ந்து தோட்டத்தில் இருக்கும் மரத்தின் கனிகளை விருப்பம் போல் உண்ணலாம் எனக்கூறி படைப்பை அனுபவிக்க வாய்ப்பு கொடுத்து வாழ்வில் கட்டுப்பாட்டுடன் நடக்க கட்டளையும் கொடுக்கிறார். நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தின் கனியை மட்டும் உண்ணக்கூடாது. உண்டால் சாகவே சாவாய் எனக் கட்டளையிட்டு எச்சரிக்கிறார். மனிதன் படைப்பைப் பாதுகாக்க வேண்டிய அழகான, அரிதான பொறுப்பினைப் பெறுகிறான். ஆனால் கடவுளின் கட்டளையை மீறுகிறான். கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் தீயோனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான். கடவுளின் கோபத்துக்கு ஆளாகிறான். ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விடப்படுகிறான். காரணம், மனிதனின் மீறுதல்.

நல்ல மகசூலை இயற்கையினால் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக இயற்கைக் காரணிகளை விட்டுவிட்டு, செயற்கைக் காரணிகளை நாடுகிறான். உணவுப்பொருட்களில் கூட நச்சுத்தன்மையை ஏற்படுத்தி உயிருக்கு உலை வைக்கிறான். செய் என்பதைச் செய்யாமல் செய்யக்கூடாததைச் செய்து படைப்பை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

## *2) மனிதனின் சுயநலம் :*

கடவுள் மனிதனுக்காய், மனிதன் ஆண்டு கொள்வதற்காய்ப் படைத்த படைப்புகளை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான். இயற்கை பாழ்படுத்தப்படுவதைச் சுட்டிக் காட்டும் ஒரு புள்ளி விவரம் இது. சுதந்திரம் வாங்கியது முதல் இந்தியாவில் அணைத்தடுப்புகள், நீர்த்தேக்கங்கள் அணைக்கட்டுகள் ஆகியவற்றிற்காக 600 ஆயிரம் ஹெக்டேர் காடுகளும், சாலைகளுக்காக 55 ஆயிரம் ஹெக்டேர் காடுகளும், தொழிற்சாலைகளுக்காக 125 ஆயிரம் ஹெக்டேர் காடுகளிலும், இதைப்

பயன்பாட்டுக்காக 388 ஆயிரம் ஹெக்டேர் காடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. இந்நிலை தொடர்வதன் காரணமாக, இன்று மனித இனமே தன் வாழ்வை இழந்து கொண்டிருக்கிறது.

2015 ஆம் வருடம் சென்னையில் பெருவெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவுக்குக் காரணம் ஏரிகளையும், ஆறுகள், வாய்க்கால்களையும் அழித்து குடியிருப்புகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றியதே. இயற்கையை அழித்த மனிதனை இயற்கை அழிக்க ஆரம்பித்திருக்கிறது. வறட்சியும், வெள்ளமும் தனித்தனியே உச்சத்தை அடைந்து உயிரை எடுக்கின்றன. சுற்றுப்புறம் சுடுகாடாக மாறுவதற்குக் காரணம் என்ன? மனிதன் இயற்கையை அழிக்க காரணம் என்ன? மனிதனில் இருக்கின்ற பேராசை, சுயநலம் மற்றும் அக்கறையற்ற தன்மை. கடவுள் மனம் வருந்தும் அளவுக்கு மனிதன் சுயநலம் நிறைந்தவனாய்க் காணப்படுகிறான்.

மனிதனின் மீறுதல் மற்றும் சுயநலத்தினால் படைப்புகளெல்லாம் இன்று விடுதலைக்காய் ஏங்கித்தவிக்கிறது. எனவே படைப்பாளராகிய ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் பொறுப்பாண்மையுடன் நடந்து கொள்வோம்.

### i) ***பண்படுத்தும் பண்பாளர்களாவோம் :***

இயற்கையை கடவுள் நம் கையில் தந்திருக்கிறார். பண்படுத்தும் பொறுப்பினை மனிதனிடம் வழங்கியிருக்கிறார் (தொ.நூ. 2:15). கடவுள் மனிதனுக்கு வழங்கிய பொறுப்பினை உணர்ந்து, இயற்கையைப் பண்படுத்தி நல்ல வளமுள்ள, செழிப்புள்ள சூழலை ஏற்படுத்தக்கூடிய பண்பாளர்களாக வாழ அழைக்கப்படுகிறோம்.

### ii) ***பாதுகாக்கும் பாதுகாவலராவோம் :***

ஓர் இல்லத்தை அல்லது குடும்பத்தைப் பாதுகாக்க பல முயற்சிகள், தேசத்தை பாதுகாக்கவும் பல முயற்சிகள். காரணம் சேதங்கள், இழப்புகள் வரக்கூடாது என்பதற்காக. ஆனால் கடவுள் நமக்கு தந்த படைப்புகளைப் பாதுகாக்கத் தவறுகிறோம். படைப்பைப் பாதுகாக்காமல் சுயநலவாதிகளாக செயல்படுகிறோம். அழிந்து கொண்டிருக்கும் படைப்புகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினையும் நமக்கு வழங்கியிருக்கிறார். படைப்பை, அழிந்து போகும் உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும். படைப்புகள் அழிவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, சமூகத்தில் படைப்பைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

### iii) **புத்தாக்கம் செய்து பூவுலகின் நண்பராவோம்**

- கடவுள் படைத்த உலகத்தில், படைப்புகளை மதித்துப் பேணி வளர்க்க வேண்டும்.

- ✸ இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.
- ✸ இயற்கை விவசாயம் உயிர்பெற வேண்டும். பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தவிர்த்து, இயற்கை உரங்களைப் போட வேண்டும்.
- ✸ மரங்கள், செடிகள், காய்கறிகள், கனி வகைகள் ஆகியவற்றை நாமே தோட்டங்களில் வளர்த்து, நல்ல பலனை பெறுவோம்.
- ✸ காடுகளை அழிக்காமல் மரங்கள் வளருவதற்கு இடமளிப்போம்.

அன்பார்ந்தவர்களே! இயற்கையைப் பாதுகாப்பது, பண்படுத்துவது திருச்சபை மற்றும் நமது இன்றியமையான கடமையாகும். படைப்புகள் அனைத்தும் விடுதலைக்காக வேதனையோடு தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், படைப்புகள் மீது கரிசனை கொள்வோம். இயற்கையோடு நல்ல உறவு கொண்டு வாழ்ந்தால், இயற்கையும் நமக்கு உதவியாயிருக்கும்.

"இன்று நீங்கள் எங்களைக் காப்பாற்றுங்கள்
நாளை நாங்கள் உங்களைக் காப்பாற்றுகிறோம்"

- மரங்கள்

**திரு. M.R. மில்ட்டன் மார்க்**

18-06-2017

பெந்தக்கோஸ்துக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு

## வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையின் கொண்டாட்டம்

**WORSHIP : CELEBRATION OF PEOPLE'S FAITH**

எசா. 6:1-8 | தி.வெ. 4:1-11
தி.பா. 148 | யோவா 4:16-26

**"கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும் என்றார்". யோவான் 4:24.**

கடவுளை வழிபடுதல் மானுட வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளதோர் முக்கிய செயலாகும். தொடக்க காலத்திலிருந்தே மக்கள் கடவுளை வழிபடும் குறிப்புகள் திருமறையில் காணக்கிடக்கின்றன. காயீன், ஆபேல் கடவுளுக்கு காணிக்கை படைத்து பணிந்தனர் (தொ.நூ. 4:3, 4). ஆபிரகாமின் பணிவிடைக்காரர் ரெபேக்காவை சந்தித்தபோது, கடவுளை வணங்கி வழிபட்டார் (தொ.நூ. 24:26, 27). 'வழிபாடு' என்ற சொல் பணிதல், படைத்தல், பணிவிடையாற்றுதல் என்று பல்வேறு காரணிகளை உள்ளடக்கியதாகும். வழிபாடு இறைமக்களின் விசுவாசக் கொண்டாட்டமாய் அமைந்திட அவசியமான கூறுகளை தியானிப்போம்.

### *1) வழிபாடு : தூய கடவுளைக் காணுதல் :*

"... மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன்" (எசா. 6:1).

கடவுளுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமான மாற்றங்களை நம் வாழ்வில் ஏற்படுத்தவல்லது. கடவுளைக் காணும் ஆவல் கொண்ட எசாயா அரியணையில் அமர்ந்திருந்த அவரைக் கண்டார். இயேசுவுடன் உரையாடிய சமாரியப்பெண் ஊருக்குள் சென்று மக்களிடம், என் செயல்களைப் பற்றி கூறியவரை வந்து பாருங்கள், அவர் மெசியாவாக இருப்பார் என்று உலக இரட்சகரை கண்டு தெளிவடைந்து, பிறர் காண வழி செய்தார். இஸ்ரயேலரின் கண்டும் காணாத நிலையை எசாயா இறைவாக்கினர் வாயிலாக கடவுள் கடிந்துரைக்கிறார் (எசா. 6:9).

யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாட்டில் அவர்கண்ட விண்ணக வழிபாட்டுக்காட்சி நான்காம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. அரியணையில் அமர்ந்திருக்கும் ஆண்டவரின் திருமுன்னிலையில் நின்று அவரைத் தரிசித்து தூயவர், தூயவர், தூயவர் என புகழ்ந்து பாடும் நான்கு உயிர்களும், இருபத்திநான்கு மூப்பர்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர் (தி.வெ. 4). திருக்கோயிலை விட்டு நீங்காமல் கடவுளை வழிபட்ட பெரியவர் சிமியோன், இயேசு குழந்தையை கையில் ஏந்தி, கடவுளே நீர் ஏற்பாடு செய்துள்ள மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன என மகிழ்கிறார் (லூக். 2:30, 31). கடவுளை விருப்பத்துடன் தேடுவோர், அவரது மீட்பின் செயலை கண்டு கொள்வர்.

உன்னதர் வழங்கிய வாழ்வின் செழுமை அவரைக் காணவிடாமல் கண்களை மூடும் பரிதாப நிலைக்கு இடம் தராதிருப்போம் (எசா. 7:10). ஆலயத்தில் இறைமக்கள் அனைவரும் இணைந்து ஒரே மனத்துடன் கடவுளை வழிபடுதலே அவரைக் காணும் வழி. பிரிவினை எண்ணங்கள், ஆணவச் சிந்தனைகள் கடவுளைக் காணவிடாமல் பார்வையை மங்கலாக்குகின்றன. தூய்மையான உள்ளமே கடவுளைக் காணும் பேற்றினை நமக்கருளும் (மத். 5:8). நம்மில் வெளிப்படும் தாழ்மை, கடவுளை மாட்சியுள்ளவராய் உயர்ந்த அரியணையில் அமர்ந்திருப்பவராய் நமக்கு வெளிப்படுத்தும். நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டுமென்ற கூற்றே நமது அனுபவமாகட்டும்.

## *2) வழிபாடு : தூய வாழ்வுக்குத் திரும்புதல் :*

"...ஐயோ நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்" (எசா. 6:5).

கடவுளைக் கண்ட எசாயா, கடவுள் தூயவர் என்றுணர்ந்த போது தமது தூய்மையின்மையை அறிக்கையிட்டார். தூய்மையின்மையில் நாம் வீழ்ந்து கிடக்க கடவுள் ஒருபோதும் விரும்புவதில்லை. தூயவரான அவரிடம் திரும்பிவர வேண்டுமென அழைக்கிறார். நீ ஆண்டவரிடம் திரும்பிவா, அவரது குரலுக்குச் செவி கொடு (இ.ச. 30:8).

"திரும்பி வாருங்கள்" என்ற அழைப்பு, இன்று உலகெங்கும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. விவசாயத்தில் அதிக விளைச்சல் பெற்றுக்கொள்வதற்காக இரசாயன உரங்களும், வீரியமிக்க பூச்சிக் கொல்லிகளும், களைக்கொல்லிகளும், மரபணுமாற்றம் செய்யப்பட்ட விதைகளும் அறிமுகம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. தற்போது வேளாண் அறிஞர்களும், இயற்கை ஆர்வலர்களும் பாரம்பரிய முறைகளான இயற்கை முறை விவசாயத்துக்கு திரும்ப அழைக்கின்றனர். காரணம், அதிக இரசாயன பயன்பாடு நிலத்தை பாழாக்குவதோடு பல்வேறு நோய்களுக்கு வாசலைத் திறந்துவிட்டுள்ளது. வேற்றுக் கலாச்சாரம் சமூக சீரழிவுகளை ஏற்படுத்துவதால் மண்ணின் கலாச்சாரத்துக்கு திரும்புங்கள் என மக்கள் நலம் விரும்பிகள் வருந்தியழைக்கின்றனர். தீமையினை உணரும் போது தூய்மைக்கு திரும்ப வேண்டியது வாழ்வின் கட்டாயமாகும். எனக்கெதிராக கலகம் செய்வதில் ஆழ்ந்து விட்டவர்களே திரும்ப வாருங்கள் (எசா. 31:6). தூயவர், கலகம் செய்யும் செயல்களை விட்டு அமைதி ஏற்படுத்தும் தூய செயலுக்குத் திரும்ப நம்மை அழைக்கிறார். தீயவர், என்னிடம் திரும்பி வரட்டும். ஏனெனில் நான் மன்னிப்பதில் தாராள மனத்தினர் (எசா. 55:7) என நம்மை அழைக்கிறார்.

## *3) வழிபாடு : தூய பணிவிடைக்கு அர்ப்பணித்தல் :*

"... இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" (ஏசா. 6:8).

கடவுளை வழிபடுதல் என்பது கடவுளுக்குப் பணிவிடை செய்தலாகும். அவரது சொந்த மக்களாக நம்மை அவர் ஏற்றுக்கொண்டு உறவு பாராட்டி உரிமை வழங்கியுள்ளதால் நாம் அவருக்குப்

பணிவிடையாற்ற வேண்டும். “யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?” என்ற கடவுளின் அழைப்பு எசாயாவை அசைத்தது, அர்ப்பணத்துக்கு நடத்தியது. கடவுளுக்குப் பணிவிடையென்பது அவரது திருவுளத்தின்படி வாழவும், செயல்படவும் முன்வருதலாகும். எருசலேமின் நிலை குறித்து விசாரித்தறிந்த நெகேமியா, அதன் பரிதாப நிலையினை எண்ணி அழுது, துக்கம் அனுசரித்து நோன்பிருந்து மன்றாடினார் (நெகே. 1:4). எருசலேமைக் கட்டும் பணிக்காய் முழு மூச்சாய் உழைக்க முன்வந்தார். கடினங்களைக் கண்டு மனந்தளராமல் உழைத்து இறைவனை மாட்சிப்படுத்தினார். சன்பலாத், தோபியா போன்றோரின் ஏளனமும், எதிர் சிந்தனையும் நெகேமியாவுக்குத் தடையாய் அமையவில்லை.

இனி நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலாத். 2:20) என்ற பவுலாரின் ஒப்படைப்பு பெருந்திரள் கூட்டத்தினரை கடவுளிடம் நடத்த வாய்ப்பாய் அமைந்தது. கடவுளுக்கு நம்மை தூய உயிருள்ள பலியாகப் படைக்க வேண்டும்.

1919 ஆம் ஆண்டு துருக்கிப் படையினர் நாற்பது ஆர்மேனிய வீரர்களை சிறைபிடித்தனர். அவர்கள் தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையை விட்டுவிடவேண்டுமென துருக்கிப் படையினர் ஆணையிட்டனர். ஆனால் ஆர்மேனிய வீரர்கள் கிறிஸ்துவை வழிபடுவதை விட்டுவிட முடியாது என உறுதியாயிருந்தனர். துருக்கியர் அவர்களை ஒரு பனிக்கட்டி ஏரிக்கரையில் கொண்டு சென்றனர். உங்களுக்கு ஒரு வாய்ப்பு தருகிறோம். இயேசுவை மறுதலிக்கிறீர்களா? எனக் கேட்டனர். அதற்கு அவர்கள் முடியாது என உறுதியாய் மறுத்தனர். பனி ஏரிக்குள் அவர்கள் இறக்கப்பட்டனர். மகிமையின் கடவுளுக்கு எங்கள் வாழ்க்கை அர்ப்பணம் எனக் கூறினர் ஆர்மேனிய வீரர்கள்.

அந்த நிமிடம் அவர்களில் ஒருவர் உடல் மரத்துப்போய் கீழே விழுந்தார். அப்பொழுது காயப்பட்ட கரங்களுடன் ஒருவர் தோன்றி, அவருக்கு ஒளிமயமான கிரீடம் சூட்டியதை துருக்கி நாட்டு அதிகாரி கண்டார். இப்படி ஒவ்வொருவராக கீழே விழ அனைவருக்கும் கிரீடம் சூட்டப்பட்டது. நாற்பதாவது கிரீடம் மட்டும் விண்ணுக்குத் திரும்பியது. ஏனெனில் நாற்பதாவது வீரர் கிறிஸ்துவை மறுதலித்து கரையேறி குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அந்த அதிகாரி அந்த நாற்பதாவது கிரீடத்தை, தான் பெற்றுக்கொள்ள விரும்பினார். தனது பணியை உதறிவிட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார், அவரை உண்மையாய் வழிபட்டார்.

அன்பர்களே, நாம் கடவுளை வெளிவேடமாக வழிபடாமல், உள்ளுணர்வுடன் உண்மையாய் வழிபடுவோம். அதுவே, நம் விசுவாசக் கொண்டாட்டமாய் அமையும்.

**அருள்திரு. R. சாம் கிறிஸ்டோபர்**

25-06-2017

பெந்தகோஸ்துக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## சான்றே சீடத்துவம்

**DISCIPLESHIP AS WITNESS**

2 அர. 2 : 1-15 தீத். 2 : 1-15
தி.பா. 119 : 33-48 யோவா. 3 : 22-30

**“நான் மெசியா அல்ல; மாறாக அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன் என்று நான் கூறியதற்கு நீங்களே சாட்சிகள்.” யோவா 3:28**

‘கடவுளுக்காக அழகான ஏதாவது செய்வோம் என்ற வாசகம் அன்னை தெரசா அவர்களின் அன்புப் பணி நிலையங்களின் முகப்பில்-நுழை வாயிலில் காணப்படும் வார்த்தைகள். மாற்றுத்திறனாளி குழந்தைகள், மனநலம் குன்றிய குழந்தைகள், ஆதரவற்ற நோயாளிகள், முதியவர்கள் என்று அனைத்துப் பணிகளிலும் அவர் செய்த்து கடவுளுக்கு அழகானதே.

‘ஒரு காலத்தில் நான் ஆசிரியையாய் இருந்தேன், மற்ற பணிகளிலும் ஈடுபட்டேன். ஆனால் இப்போது தான் கிறிஸ்துவின் அன்புக்குச் சான்று உரைக்க முடிகிறது.’ என்று சொல்லி வந்த அவர் நோபல் பரிசு பெற்றபோதும், இந்திய அரசு ‘பாரத ரத்னா’ பட்டம் சூட்டிப் பாராட்டிய போதும் அன்னை சொன்னார் ‘நான் ஒரு சமூகச் சேவகி அல்ல, நான் கிறிஸ்துவின் சேவகி. நான் செய்யும் பணிகள் எல்லாம் அவருக்காகவே, அவர் பொருட்டே செய்கிறேன். உண்மையில் இயேசுவின் பெருமை அவரது சீடர்களின் அன்புச் செயல்களிலே விளங்குகிறது. ஒருவர் கிறிஸ்தவர் என்பதற்கு என்ன அடையாளம் ?. அன்பு ஒன்றே கிறிஸ்தவர் என்பதற்கு அடையாளம். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் என்றார் (யோவா 13:35). தொடக்க காலத் திருச்சபையில் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்தனர் (திப. 4:33) என்றால் நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். (திப. 4:32). அன்பே தொடக்க காலத்திருச்சபையின் சிறப்புக்குக் காரணம். அதைப்பார்த்துத்தான் மக்கள் மனம் மாறித் திருச்சபையில் இணைந்தனர்.

செயற்கைப் பூ வெறும் பகட்டு. உண்மையான இயற்கைப்பூ மிகச் சிறியதாய் இருக்கலாம். மறைவான இடத்தில் கண்ணில் படாமல் இருக்கலாம். ஆனால் வண்டுகள் அதனை எப்படியும் அறிந்து விடும். மொய்த்து தேனருந்தி மகிழும்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பாடங்களின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக நாம் வாழ்வது எங்ஙனம் என்பதைச் சிந்திப்போம்.

### *1. இறைப்பணியில் சாட்சி* (2 அர. 2:1-15)

அரசர்கள் நூலில் பல இடங்களில் இறைவாக்கினர் குழுக்களைப்பற்றி நாம் படிக்கிறோம். ஒரு புகழ்பெற்ற இறைவாக்கினரை மையமாகக் கொண்டு. அவருடைய சீடர்களாகப்பயிற்சி நிலையில் இருப்பவர்கள் என நம்ப இடமிருக்கிறது. நாடு முழுவதும் பல இடங்களில் இந்தக் குழுக்கள் இருந்தன. எரிகோவிலிருந்து எலியாவையும் எலிசாவையும் தொடர்ந்து வந்த இறைவாக்கினர் குழுவினர் எலியாவிற்குப்பின் எலிசா இறைவாக்குரைப்பதையும் பார்க்கிறார்கள். அதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

எலியா விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்வு கடவுளின் பேராற்றலையும் அவருடைய நடத்துதலின் இரகசியத்தையும் வெளிப்படுத்துகிறது. இந்நிகழ்வு முன்னதாகவே எலிசாவுக்குத் தெரிந்திருந்தது (2அர. 2:3,5) உமது ஆவி என்மீது இரு மடங்காக இருப்பதாக என்று எலிசா எலியாவைப் பார்த்துக் கேட்கிறார். தலை மகனுக்குச் சொத்தில் இரண்டு பங்கு கொடுக்கப்பட வேண்டும் என ஐந்திருநூல் (இச. 21:17) கூறுகிறது. அப்படியானால் எலிசா தலைமகன் உரிமையைக் கேட்கிறார். அதனால் இறைவாக்கினர் குழுவின் தலைவராகவும் ஆகின்றார். மேலும் எலியாவிடமிருந்து விழுந்த போர்வையை எடுத்து எலிசா பயன்படுத்துகிறார். இதன் வழியாக எலியாவிடமிருந்து ஆற்றலும் அதிகாரமும் எலிசாவுக்கும் வருகிற தென்பதை எரிகோவிலிருந்து வந்திருந்த இறைவாக்கினர் குழுவினர் கண்டு அவர்முன் தரையில் வீழ்ந்து வணங்கி அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர் (2 அர. 2:14,15).

### *2. இல்லற உறவின் வழி சாட்சி :* (தீத் 2:15)

கிறிஸ்தவக் குடும்பத்தின் ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் ஒழுங்கு முறைகள் உருவாகாத நிலையில் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் அன்றைய வழக்கிலிருந்த விதிமுறைகளை ஏற்றுக் கொண்டார்கள். இவ்விதிமுறைகள் கிரேக்கர், ஸ்தோயிக்கர் படிப்பினைகளிலிருந்து பெறப்பட்டவை. சில வேளைகளில் இவை கிறிஸ்தவ மனப்பான்மையை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. அன்றைய சமூகம், தலைவர்கள்- அடிமைகள், ஆண்கள் - பெண்கள், இளையோர்- முதியோர் எனும் வேறுபாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டிருந்தது. இன்று இத்தகைய வேறுபாடுகள் களையப்பட்டு சமத்துவ, சகோதரத்துவ சமூகம் காணும் நோக்குடன் வாழ்வில் ஒவ்வொருவரும் தம் பொறுப்புகளை உணர்ந்து ஏற்பது அவசியம். கிறிஸ்து நமக்காகத் தம்மையே தியாகப்பலியாக ஒப்புக் கொடுத்தாரெனில், அது பயனற்றுப்போக விடுதல் முறையல்ல. "மனிதர்

அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது" (தீத். 2:11) எனவே இக்கொடை நன்னயம், ஒப்புரவு போன்ற பலன்களை விளைவித்து மனிதரை முடமாக்கும் தன்னலத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டும். இறைப்பற்றின்மையையும், உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்து வாழ பயிற்சி பெறுகிறோம். (தீத். 2:13) நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாக தூய்மைப்படுத்த இயேசு கிறிஸ்து தம்மையே தியாகப் பலியாக ஒப்புக் கொடுத்தார் (தீத். 2:14) இயேசுவின் பலியின் நோக்கம் தம் மக்களைத் தூய்மைப்படுத்துவதாகும். பலியான இயேசுவை உற்று நோக்குவதன் மூலம் நமக்குள் தீமையும் வன்முறையும் சிறிது சிறிதாகக் களையப்பெறுகின்றன.

எப்போது ஒருவரையொருவர் மதித்து மாண்போடு ஏற்றுக் கொண்டு வாழ்கிறோமோ, எப்போது ஒருவரையொருவர் தீர்ப்பிடாமல் இணைந்து வாழ்கிறோமோ, பிறரை எப்போது போற்றி வாழ்த்துகிறோமோ, அப்போது நம் உறவின் அன்பு வெளிப்படும். அன்பு சவால்கள் நிறைந்தது. உண்மையில் பிறரை அன்பு செய்யும் போது நாம் நமக்குள்ளதை மட்டுமல்ல, நம்மையே இழக்க வேண்டியிருக்கிறது. இது அன்பிற்கே உள்ள சிறப்பான வரையறை. இவ்வுலகை மீட்க வந்த இறைமகன் இயேசுகூட இந்த வரையறைக்கு உட்பட்டார். இதனால் அன்பு செய்யத் துணிச்சலும் வேண்டும் என்பது தெளிவாகிது. திருமண முறிவுகள் அதிகரித்து வருதலும், பிள்ளைகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை விட தங்கள் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குதலும், அதிகரித்து வருகின்றன. சுயக்கட்டுப்பாடு, தூய்மை வாழ்வு, அன்புச் செயல் ஆகியவையே குடும்பத்தில் இருக்க வேண்டிய முக்கியத் தகவுகள் ஆகும். கிறிஸ்தவர்களைப் பிறர் இழிவாகப்பேசாத அளவில் கிறிஸ்தவர்களின் பேச்சில் நேர்மையும், கருத்துச் செறிவும் இருத்தல் வேண்டும்.

### *3. இறைவனை மேன்மைப்படுத்துவதில் சாட்சி :*

(யோவா. 3:22-30)

திருமுழுக்கு யோவானும் இயேசுவும் சமகாலத்தில் பணியாற்றியவர்கள் என்பது இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது (2:23). இயேசுவே இறைமகன், திருமுழுக்கு யோவான்அவரது முன்னோடி என்னும் பார்வை இயேசுவின் பணிக்காலத்தில் தெளிவாக இருந்திருக்காது (லூக். 7:18-23). இத்தெளிவு காலப்போக்கில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் இயேசுவை விட தான் கீழானவர்தான் என்பதை திருமுழுக்கு யோவானே ஒத்துக் கொள்கிறார். "மணமகள் மணமகனுக்கே உரியவர். மணமகனின் தோழரோ அருகில் நின்று அவர் சொல்வதைக் கேட்கிறார். அதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். என் மகிழ்ச்சியும் இது போன்றது. இம்மகிழ்ச்சி என்னுள் நிறைந்துள்ளது". (யோவா. 3:29). அத்துடன் திருமுழுக்கு யோவானின் இறுதிச் சான்றும்

இப்பகுதியில் இடம்பெறுகிறது. “அவரது செல்வாக்குப் பெருக வேண்டும். எனது செல்வாக்குக் குறைய வேண்டும்” (3:30) என்னும் கூற்றுடன் திருமுழுக்கு யோவான் மறைந்து விடுகிறார். ஆனால் அவரது சான்று கிறிஸ்தவச் சமூகத்திற்குத் தொடர்ந்து தேவை.

நற்செய்தியாளர் ராபர்ட் மொரேக்கு கடிதம் ஒன்றில் “ஐயா, நான் உங்களுடைய அருளுரையைக் கேட்டு இரட்சிக்கப்பட்டவன் அல்ல. ஒரு நாள் நீங்கள் நடந்து சென்றபோது உங்கள் முகத்தில் தெய்வீகக் கலையும், பிரகாசமும் இருந்ததைக் கண்டேன். அந்தப் பரிசுத்த அலங்காரம் என்னைக் கிறிஸ்துவுக்கு நேராய் நடத்திற்று” என ஒரு நபர் குறிப்பிட்டிருந்தார்.

ஆம்! இத்தகைய சாட்சியுடன் கூடிய கிறிஸ்தவ வாழ்வு நடத்தும் பேற்றினைப் பெற கடவுள் நமக்கும் அருள் புரிவாராக!

**அருள்திரு. S. ஜாண் சகாயம்**

| 02-07-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு & **பொறுப்பாண்மை ஞாயிறு** |
|---|---|

## பொறுப்பாண்மை : பொறுப்புள்ள வளமேலாண்மை

**STEWARDSHIP : RESPONSIBLE RESOURCE MANAGEMENT**

| | |
|---|---|
| வி.ப. 18:13-27 | 2 கொரி. 8:1-15 |
| திபா. 147:1-11 | மத். 25:14-30 |

**"இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது; அவர்களுடைய குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும் போது உங்கள் குறையை நீக்குவார்கள்." 2 கொரி. 8:14**

மனிதர் கடவுளின் படைப்பின் மகுடம் ஆவர். அனைத்தையும் படைத்த ஆண்டவர் அவற்றை நன்று என்று கண்டதுடன் அனைத்தையும் மனிதரிடம் தந்தார். அவற்றை பண்படுத்தவும் பாதுகாக்கவும் பொறுப்பினை தந்தார். (தொ.நூ. 2:15). உலகத்திலுள்ள அனைத்துப் படைப்புகளுக்கும் வளங்களுக்கும் உரிமையாளராகிய கடவுள் (தி.பா. 24:1), அவ்வளங்களின் மேல் மனிதர் பொறுப்புள்ள மேலாண்மையாளராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எல்லாவற்றையும் மனிதரின் கரங்களில் தந்தபின் இன்று அதைப் பகிரவும், பகிர்ந்து மகிழவும் மனம் இல்லாமல் சுயநலம் சார்ந்து வாழ்கின்றனர். இந்த அருளுரை வழியாக பொறுப்புள்ள வளமேலாண்மையைக் குறித்து கற்றுக் கொள்வோம்.

### 1. *பொறுப்பாண்மை : பணிவிடையின் அடையாளமாக வேண்டும் :* வி.ப. 18:13-27

வளங்கள் என்பவை பல வகைப்படும். செல்வம் மட்டும் வளம் என்று நினைப்பாரும் உண்டு. வளங்களில் மிகவும் முக்கியமானது தலைமைத்துவம். கடவுள் தந்த படைப்புகளின் மேல் மனிதனுக்கு சிறப்பான உரிமையை தந்தார். அங்கு தான் தலைமைத்துவம் உருவானது. இந்த தலைமைத்துவம் பண்படுத்தவும், பாதுகாக்கவும் தரப்பட்டது. இஸ்ரயேலரின் விடுதலை பயணத்தின் போது திரளான மக்கள் கூட்டத்தை வழி நடத்தி வந்த மோசே அனைத்து மக்களையும் இறைவார்த்தையின் படி வழிநடத்தவும், குறிப்பிட்ட சூழல்களில் அவர்களை நியாயம் விசாரிக்கவும் செய்தார். ஆனால் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபடியால் இங்கு தலைமைத்துவத்தை பகிர இத்திரோ ஆலோசனை தந்தார். அப்படியே மோசே தனது தலைமைத்துவத்தை பகிர்கின்றார். தனது தலைமைத்துவத்தில் காணப்படும் குறையை காண்கிறார். பொறுப்பை பகிர முன்வருகிறார்.

### மோசேயில் நாம் கற்றுக்கொள்வது :

a) நல்ல பண்புள்ள தலைவர்களை தெரிவு செய்கிறார். வி.ப. 18:21
b) பொறுப்பினை பகிர்கிறார். வி.ப. 18:21
c) தனக்கு கீழ் இருக்கும் தலைவர்களை கண்காணிக்கிறார். வி.ப. 18:26

மோசேயின் தலைமைத்துவப் பொறுப்பில் அவர் நல்ல தலைவர்களை தனக்கு உதவியாக நியமித்தார். இன்றைய சமூகத்திலும், திருச்சபையின் பணியிலும் நல்ல தலைமைத்துவம் வேண்டும். நாம் அதை உண்மையுடன் நிறைவேற்றுகிறோமா? நல்ல பண்புள்ள, கணக்கு ஒப்புவிக்கும் தலைவர்களைத் தெரிவு செய்கிறோமா?

### 2. பொறுப்பாண்மை : நற்பண்புகளின் மையமாக வேண்டும் : மத். 25:14-30

மத்தேயு நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்து சொல்லும் தாலந்துகளின் உவமையை படிக்கிறோம். லூக்கா நற்செய்தியாளரும் இவ்வுவமையை வித்தியாசமாகக் கூறுகிறார். லூக்கா, தாலந்து என்பது உயர்ந்த மதிப்புள்ள தொகையாக காட்டும் ராத்தல் என்ற சொல்லை பயன்படுத்துகிறார். ஆனால் மத்தேயு சொல்லும் தாலந்து என்ற சொல் இறையரசுக்குரிய நற்பண்புகளாகிய நீதி, அன்பு, உண்மை போன்றவற்றை குறிக்கும். இந்த நற்பண்புகள் மனிதனுக்குள் இயல்பாகவே காணப்படும் திறமைகளை கடந்து நிற்பது. மத்தேயு நற்செய்தியாளர் சொல்லும் உவமையில் தூரதேசம் புறப்பட்ட மனிதர் தன் ஊழியக்காரரை அழைத்து ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட எண்ணிக்கையில் தாலந்துகளை பகிர்ந்தனர், புறப்பட்டு சென்றனர். அதை பெற்றுக் கொண்ட இருவர் அதை இரட்டிப்பாக பெருக்கினர். ஒருவர் அதை மறைத்து வீணாக்கினார். திரும்பி வந்த தலைவர் கணக்குக் கேட்கிறார். அதற்கான பரிசினையும் தருகிறார். இப்பகுதியில்,

1. நற்பண்புகள் கடவுளால் தரப்படுகின்றன.
2. நற்பண்புகள் சமூகத்தின், திருச்சபையின் மாற்றத்திற்குப் பயன்பட வேண்டும்.
3. நற்பண்புகளின் பயன்பாட்டிற்கு ஏற்ற பரிசும் தரப்படுகிறது.

யோவான் 6:1-13-ல் காணப்படும் நிகழ்வில் சிறுவன் ஒருவன் தனக்கென்று கொண்டுவந்ததை பகிர்ந்ததால் ஒரு பெருங் கூட்டமக்கள் திருப்தியடைந்தனர்.

இன்று கடவுள் தந்த இறையரசுக்குரிய நற்பண்புகளை வளர்த்து, பகிர்ந்தால் ஒரு சமூகம் மாற்றுருவாக்கம் பெறும். கடவுள் கணக்கு கேட்கிறவர் என்பதையும் மறக்க வேண்டாம். நாம் உண்மையுள்ளவர்களா? என்பதை இறைவன் பார்க்கிறார். நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமா?

## 3. *பொறுப்பாண்மை : பகிர்தலின் ஊற்றாக வேண்டும் :*

2 கொரி. 8:1-15

அனைத்து உடைமைகளுக்கும் ஆதாரமானவர் கடவுள். நாம் பெற்ற உடமைகள் நமக்குரியது மட்டுமல்ல. நம்மை சுற்றி வாழ்வோருக்கும் அவை சொந்தமானவை. பதுக்கல் நிறைந்த உலகில் பட்டினியால், வறுமையால் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒரு நிகழ்வை இப்படிச் சொல்வார்கள்.

பசியினால் வாடிய மனிதன் செல்வந்தன் வீட்டில் வந்து பசியாற 'கருப்பட்டி வேண்டும் எனக் கேட்டார். தனது பண்டக சாலையில் சேர்த்து வைத்திருந்த கிறிஸ்தவ செல்வந்தர் சொன்னார் உனக்குத் தர இல்லை. ஆனால் கருப்பட்டி கையில் இருப்பது போல் நினைத்து நக்கி தண்ணீரைக் குடி என்றாராம்". பகிரும் பண்பு இல்லாததால் இன்று பட்டினி மரணம் அதிகரித்து வருகின்றன. இங்கு பவுல் சொல்லும் மாசிதோனிய சபையினரின் உடமைகளின் மேலிருந்த பொறுப்பாண்மையைக் காண்கிறோம்.

மாசிதோனியத் திருச்சபையினர்

a. உபத்திரவத்தில் பகிர்ந்தனர்
b. கொடிய வறுமையில் பகிர்ந்தனர்
c. முழுமையான மகிழ்வுடன் பகிர்ந்தனர்
d. தங்களது திராணிக்கு மிஞ்சி பகிர்ந்தனர்
e. தங்களை கடவுளுக்காய் பகிர்ந்தனர்

இவ்வாறு ஒரு சமூகத்தின் வாழ்வுக்காய், மாற்றத்திற்காய், புத்தாக்கத்திற்காய் தங்களை, தங்களுக்குரியதை பகிர முன்வந்தனர். இன்றைய சமூகத்தின் மாற்றத்திற்காய் நம்மை, நமது உடமைகளை பகிர ஆயத்தமா?

I அர. 17:1-16 - சாரிபாத் ஊர் கைம்பெண் வறுமையில், வெறுமையில் தனக்கென்றிருந்ததை தந்தார், வாழ்வு பெற்றார், அவரும் குடும்பமும் வாழ்வு பெற்றது.

கடவுள் அனைத்து ஆசிக்கும் ஆதாரமானவர். அவர் நமது பொறுப்பாண்மையை உற்று நோக்குகிறார். நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமா? உயர்வை பெற விரும்பும் நம்மில் உண்மையான கணக்கை தலைவரின் கையில் தர இயல்கிறதா? இல்லை கடவுள் தந்த நன்மைகளை, நற்பண்புகளை தவறாக பயன்படுத்துகிறோமா? கணக்கு கேட்கும் கடவுள் வருகிறார். நீதிபதியாய் வருகிறார். நியாயம் தீர்க்க வருகிறார். கணக்கினை ஒப்புவிக்க ஆயத்தமாவோம்.

**அருள்திரு. Y. லாறன்ஸ்**

09-07-2017

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு &
**இறையியல் கல்வி ஞாயிறு**

# இறையியல் கல்வி : இறைமக்களை மேம்படுத்துதல்

**THEOLOGICAL EDUCATION : EQUIPPING THE PEOPLE OF GOD**

| | |
|---|---|
| இச. 6 : 1-17 | எபே. 4:7-16 |
| திபா. 119 : 89-104 | மத். 7:24-29 |

**"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்த கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் நிறைவேற்றுவதில் கருத்தாய் இருங்கள்." இச. 6:17**

இறைவனைப் பற்றி அறிவதே இறையியல் கல்வியின் நோக்கம். இறையியல் கல்வியின் வழி இறைவனின் விருப்பத்தை அறிந்து, அதன்படி இறை மக்களை தகுதிப்படுத்தி, இறையரசின் தகவுகளை வெளிப்படுத்தச் செய்வதே இந்த இறையியல் கல்வி ஞாயிறின் முக்கியத்துவமாகும். நாம் நம்மில் தகுதியுடையவர்கள் அல்ல. நம்மை இறைவன் தகுதிப்படுத்தி அவரது சித்தத்தை நிறைவேற்றிட உதவி செய்கின்றார். இன்று தியானத்திற்குரிய திருமறைப் பகுதிகளில் இறைவன் நம்மை என்ன நோக்கத்திற்காக தகுதிப்படுத்துகின்றார் என்பதனை தியானிப்போம்.

## 1. *கட்டளைகள் மற்றும் கற்பனைகள் வழியாக மேம்படுத்தும் கடவுள் :*

உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கற்றுக்கொடுத்த கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் நிறைவேற்றுவதில் கருத்தாய் இருங்கள் (இச. 6:17).

நாம் வழக்கமாக ஒரு பொருளை வாங்கும்போது அதன் தகுதியையும், உழைப்பையும் அறிந்த பின்பே வாங்க விரும்புவோம். அதுபோல இறைமக்களாகிய நம் கடவுளின் கட்டளைகளையும், கற்பனைகளையும் மற்றும் சாட்சிகளையும் கைக்கொள்ள அவர் நம்மை மேப்படுத்துகின்றார். திருவெளிப்பாடு 1:3. வசனத்தில் "இந்தத் தீர்க்க தரிசன வசனங்களை வாசிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் காலம் சமீபமாயிருக்கிறது". எனவே இறைமக்கள் இறைவார்த்தையின் படி வாழ கடவுள் விரும்புகின்றார்.

## 2. *கனத்துக்குரிய பணியைச் செய்ய மேம்படுத்தும் கடவுள் : (எபே. 4:7-14)*

கடவுளின் பணியை அருட்பணி அல்லது இறைப்பணி என்று அழைப்பது வழக்கம். இந்த அருட்பணியின் சொந்தக்காரர் கடவுளே.

நாம் எல்லோரும் இறைமக்களாக அவருடன் இணைந்து உடன் வேலை செய்கின்றவர்களாக இருக்கின்றோம். இறைவனின் திட்டம் இந்த உலகில் நிறைவேறிட அவரது பணியினை அல்லும் பகலும் செய்கின்றோம். இந்த மகா உன்னதமான பணியினை செய்திட அவர் பல்வேறு நிலையில் இறைமக்களை அழைத்து தகுதிபடுத்துகின்றார். எபேசியர் 4:13. அவர், சிலரை திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், சிலரை நற்செய்தியாளராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். எனவே அவரது அழைப்பிலும் அவரது திட்டம் நிறைவேற்றிட நம்மை மேம்படுத்துகிறார்.

### 3. *கட்டும் பணி செய்ய மேம்படுத்தும் கடவுள் :*

ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளை கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம்வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார் (மத். 7:24).

சிறுவனாக இருந்த நாட்களில் "கட்டிடம் கட்டிடும் சிற்பிகள் நாம்" என்ற ஒரு பாடல் வரியினை அடிக்கடி நினைப்பதுண்டு. சிலையை வடிவமைக்கின்ற சிற்பி தனது விருப்பத்தினை நிறைவேற்ற உளியால் அந்தச் சிற்பத்தினை செதுக்கி வடிவமைப்பது போல, கடவுளின் வார்த்தையால் மனித வாழ்வு சிறப்புற செதுக்கப்பட வேண்டும், வடிவம் பெற வேண்டும் என்பதே கடவுளின் கட்டும் பணி ஆகும். மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காகவே உயர்ந்த மேன்மைகளை உதறித்தள்ளி நம்மில் இருப்பவராக, நம்மில் இணைந்து, நமது வாழ்வு என்னும் கட்டிடம் கட்டப்பட அனுதினமும் உதவுகின்றார்.

இந்த மனிதம் கட்டப்பட தகுதியான சகல, சமூக நற்பண்புகளை இறை வார்த்தைகளினால் தருகின்றார். நாம் வாழும் நிலையில் கடவுளின் வார்த்தைக்கு அடங்கி பிற சமய, சமூக மக்களுடனும் மற்றும் இறைவனின் படைப்போடும், இணக்கமாக, சமச் சீராக, மதிப்புயர்வாக, மனித நேயத்தோடும் மற்றும் சகிப்புத் தன்மையோடும் வாழ கடவுள் மேம்படுத்துகின்றார்.

இந்த விதமான அறிவினை இறைவனைப்பற்றிய வார்த்தையால் நாம் பெற்றுக்கொள்ளும் சமூகமாக உள்ளோம். ஆடு, மாடு தான் பெற்றுக்கொண்ட உணவினை அசைபோட்டு, திரும்ப மென்று உடலுக்கு சக்தியாக மாற்றுவதுபோல, கடவுளின் வார்த்தையினை கேட்கின்ற நாம் அதை அசைபோட்டு, சுவாசித்து வாழ்வின் ஆற்றலுக்கு அர்ப்பணிப்போம்.

**அருள்திரு. அறிவர் A.R. செல்லையா**

16-07-2017

பெந்தகோஸ்துக்குப் பின்வரும்
ஆறாம் ஞாயிறு

## இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள்

**PEOPLE OF GOD : AMBASSADORS OF CHRIST**

யோசு. 1 : 1-9
திபா. 18 : 1-6, 20-30
2 கொரி. 5 : 16 - 6 : 10
மாற். 6 : 7-13

**"நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார்." 2கொரி. 5:20** a

மானிடர்கள் அனைவரும் இறைமக்களே. ஆனால் திருமறை தரும் தெளிவு அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் (யோவா 1 : 12). சீர்திருத்த திருச்சபையின் தந்தையான மார்டின் லூதர் 'Preisthood of all Believers' என்றது போல இறைமக்கள் யாவரும் இறைத் தூதுவர்கள் என்பது மிகவும் சிறப்பானது. ஆண்டவரின் சீடர்கள், பவுல் போன்றோர் திருத்தூதுவர்கள் என அழைக்கப்படுகின்றனர். தூதுவர்கள் தமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. தூது அனுப்புகிறவருக்கும், தூதுக்கும் சொந்தம். தூது வழியாக இரு முனைகள் ஒன்றுபடுகின்றன. இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு வழியை ஆயத்தம் செய்வார் (மல்கியா 3 : 1). திருமுழுக்குநர் யோவான், வான தூதர்கள், திருத்தூதுவர்கள் தூதுப் பணி புரிந்தனர். நமக்கு கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளில் காணப்படும் தூதுவர்கள், தூதுப்பணி குறித்து சிந்திப்போம்.

### *1. நல்வழியில் நடத்துகிறவர்கள் :* யோசுவா 1 : 2

இஸ்ரயேலரின் விடுதலைப் பயணத்தின் போது மோசேக்கு. பின் கடவுள் நூனின் மகனாகிய யோசுவாவைத் தெரிந்து கொண்டு இந்த மக்கள் அனைவரோடும் நான் இஸ்ரயேலருக்கு கொடுக்கும் நாட்டுக்குச் செல் என்றும் இந்த மக்களை முன்னின்று நடத்திச் செல் எனவும் கூறுகிறார். ஏனெனில் இவர்களுக்கு நல்ல தலைமைத்துவத்தைக் கொடுத்து வழி நடத்துவது தான் அவரது திருவுளமாகும். ஏனெனில் இம்மக்களின் முன்னோருக்குக் கொடுப்பதாக நான் வாக்களித்த நாட்டை இவர்கள் உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்பதாகும் (யோசு. 1:6). இந்த நாடு பசுமையானதும் வலிமை மிக்க இனங்கள் நிறைந்ததும், வாக்குரைக்கப்பட்டதுமான நல்ல நாடாகும். இதை அடையச் செய்வது தூதுவர் பணி ஆகும். இம்மையில் இரண்டு வாசல்கள் அது வழியாகச் செல்லும் இரண்டு இடங்கள் ஒன்று வாழ்விற்கு போகும். இடம், மற்றொன்று கேட்டுக்கு போகும் இடம் (மத். 7:13-14 ). கிறிஸ்துவின் தூதுவர்கள்

இத்தகைய நல்ல நாட்டிற்கு வழி நடத்திச் செல்லுகிறவர்கள். இந்த நாடு ஒளிமயமான இன்ப நாடு, பசி, பட்டினி இல்லாத நாடு, ஆட்டுக் குட்டிக்கு முன்பாக ஆனந்தம் அடையும் நாடு. மீட்கப்பட்டவர் சென்று அடையும் நாடு. இதுவே விண் வீடு, நிலை வாழ்வின் இடம் (தி.வெ. 21:23,25, 22:14; எசா. 35:10) உலகின் மீட்பர் இயேசு இந்த இன்ப வீட்டிற்கு வழி, வாய்மை, வாழ்வு என்றார். நான் இருக்கும் இடத்தில் உங்களைச் சேர்த்துக் கொள்வேன். (யோவா 14:16) இறை இயேசுவின் தூதுவர்கள் இம்மையின் செழுமைக்கு நேராக அல்ல நிலைவாழ்வின் வீட்டிற்கு நேராக ஆன்மாக்களை ஆதாயப்படுத்த வேண்டும். தாங்களும் அவர்களோடு விண் வீடு அடைய வேண்டும்.

### ***2. நற்செயல் செய்கிறவர்கள் :*** 2 கொரி. 5:18,19

நற்செயல் என்பது இப்பகுதியில் ஒப்புரவுத் திருப்பணியைக் குறிக்கிறது. ஒப்புரவு மூலம் உறவுகள் ஏற்படுகின்றன. ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படுகின்றன. ஒற்றுமை தழைத்தோங்குகிறது. இப்பணி அருள் நாதர் ஆண்டவர் இயேசு சிலுவையில் நிறைவேற்றியத் தூதுப்பணி. யூதர்கள் எனவும் புற இனத்தவர் எனவும் விருத்தசேதனம் பெற்றவர்கள், பெறாதவர்கள் எனவும் வேறுபாடு காணப்பட்டது. இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை தமது உடலில் ஏற்ற துன்பத்தால் தகர்த்தெறிந்து ஒன்று படுத்தினார். இரு இனத்தவரும் நம் தந்தையை அணுகும் பேறு பெற்றோம். (எபே. 2:11-18) இந்த ஒருமைப்பாடு, ஒற்றுமை உருவாக அருள்நாதர் இறைவேண்டல் புரிந்தார். (யோவா 17) இறைவனோடு இறை மக்கள் தங்களுக்குள் ஒன்றாக வேண்டும். இன்றைய சமுதாயத்தில் பல இனம், பல மொழி, பல சமயம், பல இடம் என எண்ணற்ற வேறுபாடுகள். இந்த வேறுபாடுகள் அகன்று ஒரே ஆயரும் ஒரே மந்தையும் ஆக வேண்டும் (யோவா 10:16) ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட இயல்புடைய உயிரினங்களும், இயற்கையும், மானுடமும் ஒன்றாக வேண்டும். (எசா. 11:6,7) இத்தகைய ஒப்புரவுப் பணியின் மூலம் நாம் வேறுபட்டவர்களாயிராமல் கடவுளுடைய ஒரே இல்லமாக, புதிதாகப் படைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். இப்பணியை நிறைவேற்று கிறவர்கள் தான் தூதுவர்கள்.

### ***3. நற்செய்தியை அறிவிக்கிறவர்கள் :*** மாற். 6 : 7

மாற்கு 6:7-13 இதற்கு இணையான நற்செய்திப் பகுதி மத். 10:10-15. அருள் நாதர் இயேசு தாம் தெரிந்து கொண்ட சீடர்களை திருத்தூதுவர்களாக அனுப்பும் போது அவர்களுக்கு கொடுத்த போதனை இப்பகுதியில் உள்ளது. நீங்கள் வீட்டுக்குள் செல்லும் பொழுதே வீட்டாருக்கு வாழ்த்துக் கூறுங்கள். வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால் நீங்கள் வாழ்த்துக் கூறிய அமைதி தங்கும் (மத். 10:12,13). ஒருவரை மனமார வாழ்த்துவோமானால் அங்கு அமைதி நிவவும், பவுல், பேதுரு யோவான்,

யாக்கோபு போன்ற திருத்தூதுவர்கள் எழுதியுள்ள எல்லா கடிதங்களும் ஆரம்பத்தில் வாழ்த்து தான் கூறியுள்ளனர். வான தூதுவர் காபிரியேல் மரியாவைப் பார்த்து அருள்மிகுப் பெற்றவரே என முதற்கண் வாழ்த்தினார் (லூக். 1:28). மரியா எலிசபெத்தைச் சந்தித்த போது வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்ட பொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று (லூக். 1:40,41). இறைமக்கள் தூதுவர்கள் இன்றைய உலகில் வாழ்த்துக் கூற கடமைப்பட்டவர்களே தவிர சபிக்கக் கூடாது. சபிப்பது தூதுவர் பணியல்ல. வாழ்த்து கூறும் போது ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதை தூது அனுப்பியவர் பார்த்துக் கொள்வார் (மாற் 6:11 b; மத். 10:15). வானதூதர் அவர்களிடம் அஞ்சாதீர்கள். இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக். 2:10,11) இத்தகைய நற்செய்தியை அறிவிப்பவர் மட்டுமே தூதுவர்கள். இவர்களே இறை மக்கள்.

வன்முறையும், பொருளாதார நெருக்கடியும், அன்பற்ற சூழலும் நிறைந்துள்ள இந்த நாட்களில் இப்படிப்பட்ட தூதுவர்கள் உண்டோ என்பது கேள்வியாக அமைகிறது. தங்களை முன்னிலைப்படுத்திய நிலையில் சுய நலத்தை நாடி மக்களை மிரட்டியும் சாடியும் சபித்தும் பொருள் சேர்த்து உலகத்துக்கு ஏற்ற வேடமணிந்து ஆடம்பர வாழ்வும் சுக வாழ்வும் வாழ்கின்றனர். எங்களை ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார். அதிகாரப்படுத்தியிருக்கிறார் என குரல் கொடுக்கிறார்கள். அருள் நாதர் இயேசு இவர்களுக்கு முன் மாதிரியாக அடிமையின் நிலை எடுத்து மனித உருவானார். அதனால் மக்களை நல்வழிப்படுத்தினார். நன்மைகள் பல செய்தார், நல்ல வார்த்தைகளைக் கூறினார். அவருடைய வார்த்தைகளைக் கேட்க மக்கள் பெருங்கூட்டமாக கூடினார்கள். இன்றைய தூதுவர்கள் உலக மீட்பர் இயேசுவை மட்டும் நோக்கிப் பார்க்க வேண்டும், அப்போது தான் தங்களை ஆய்ந்தறிய முடியும், அதுவே வாழ்வில் தெளிவினை தரும். இறை நோக்கத்தையும் அறிந்து நிறைவேற்ற ஒப்படைக்க நம்மைத் தூண்டும். மட்டுமன்று இறையரசின் உண்மைத் தூதுவர்களாக நிலை நிற்கும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**அருள்திரு J. ஜெபசிங்**

| 23-07-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிறு |
|---|---|

## அருட்பொழிவுத் திருப்பணி : மாற்றுருவாக்கப் பெற்றது மாற்றுருவாக்கவே

**ORDAINED MINISTRY: TRANSFORMED TO TRANSFORM**

| | |
|---|---|
| எசேக். 33:1-9 | 1 திமொ. 3:1-13 |
| தி.பா. 99 | யோவா. 21:15-19 |

**"...இயேசு அவரிடம், என் ஆடுகளை மேய்" என்றார். யோவா. 21:17-19ஆ**

திருச்சபைத் திருப்பணிகளை நிறைவேற்றி வரும் சூ ழலில் வாழ்ந்து வரும் விசுவாசிகளாகிய நமக்கு தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்கு தம் மறை பொருளை வெளிப்படுத்தாமல் தலைவராகிய ஆண்டவர் ஏதும் செய்வதில்லை ஆமோஸ் 3:7 என்ற திருமறை வாக்கியம் மிக அர்த்தமுள்ளதாகும். திருத் தொண்டாற்ற சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற் செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும் போதர்களாகவும் கடவுள் ஏற்படுத்தினார். (எபே. 4:11-12) அருள்பொழிவு திருப்பணி (Ordained Ministry) உட்பட அனைத்து திருப்பணிகளுக்கும் இறைமக்களை அழைத்து தகுதிப்படுத்துபவர் கடவுள் தான் . இறை மக்களை இறைவனுக்காய் ஆயத்தப்படுத்துவதும், சபையாகிய கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவுதும் தான் (எபே. 4:13) திருப்பணிகளின் நோக்கமாகும்.

இறைவனால் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மக்களைக் கொண்ட திருச்சபையின் பணிகளில் அடிப்படையானது ஆயர்பணி அல்லது மேய்ப்புப் பணியாகும் திருச்சபை மக்களை தம் திருப்பணியால் கடவுளின் அருட்பணியில் பங்கேற்க தூண்டி அவர்களை வாழ்க்கை நடத்தச் செய்வதே ஆயர் பணியின் சிறப்பாகும், கான்ஸ் கீங் என்னும் இறையிலாளர் தவறான கொள்ளைகளைப் புறக்கணித்து, திருத்தூதுவர் மரபைக் காத்து, மக்களை ஆயர்கள் வழி நடத்தவேண்டும் என்கிறார். ஓர் ஆயனுடைய தன்மைகளை கிருபையில் அதிகம் காணலாம் (தொ.நூ. 33:13). பிரதான மேய்ப்பன் இயேசுவே என்ற அடிப்படையில் ஆயர்கள் மந்தையாகியத் திருச்சபையை நடத்த வேண்டும். ஆயர்களுடன் இணைந்து மக்கள் தலைவர்களும் செயலாற்றுதல் திருப்பணியை வலுப்படுத்தும். கொடுக்கப்பட்டுள்ள திருமறைப்பகுதிகளிலிருந்து ஆயர்பணியின் தன்மைகளைச் சிந்திப்போம்.

### ***1. பாதுகாத்தல் :*** எசேக். 33:7

கடவுளின் திருக்கூட்டத்தார் என்று கருதப்பட்ட இஸ்ரயேல் மக்கள், கடவுளின் நீதி நெறியினின்று விலகி, அவருக்கு ஏற்புடையதல்லாதவற்றைச்செய்து வேற்று தெய்வ வழிபாட்டைக்

கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். அதன் மூலம் கடவுள் மோசேயின் வழியாகக் கொடுத்த பத்துக் கட்டளைகளில் முதலாவது கட்டளையை மீறினார்கள் (வி.ப. 20:23). இவ்வாறு திருச்சட்டத்தை இஸ்ரேயேல் மக்கள் மீறியது கடவுளின் பார்வையில் தீமையாகத் தோன்றியது. அவர்களைத் தீமையினின்று பாதுகாக்கும்படி கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினரைத் தம் திருப்பணிக்காக அழைத்து அதை உண்மையாய்ச் செய்யும்படி ஆயத்தம் பண்ணுகிறார். எசேக்கியேலை உற்சாகப்படுத்தும்படி தம் கட்டளைகளையும் வார்த்தைகளையும் சொல்லுகிறார். கடவுளின் வெளிப்பாடு எசேக்கியேலுக்குக் கிடைத்தது. கடவுள் எசேக்கியேலிடம் மானிடா நான் உன்னை இஸ்ராயேல் வீட்டாருக்குக் காவலாளனாக நியமித்துள்ளேன். என் வாயின் வார்த்தைகளைக் கேட்டு அவர்களை என் பெயரால் எச்சரிக்கை செய் என்று சொல்லுகிறார். எசேக்கியேல், இஸ்ரயேலர் அழியாதபடி அவர்களை பாதுகாக்க இறைவனின் வார்த்தைகளைச் சொல்வது அவசியமாகும். கடவுளின் வார்த்தையைத் தெளிவாக எடுத்துரைக்காவிடில் இஸ்ராயேலர் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள இயலாது எனவும் அதனால் வரக்கூடிய விளைவு தீர்க்கரையே சாரும் எனவும் கடவுள் கூறுகிறார்.

திருமறையின் கடவுள் எப்பொழுதும் மனுமக்களைப் அழிவிலிருந்து காப்பாற்றும் சிந்தையுடையவராகச் சுட்டிக் காட்டப்படுகிறார் (தி.பா. 68:20, எசா. 45:22, 60:16, எரே. 30:3, 39:18). தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டு, திருநிலைப்படுத்தப்பட்ட திருப்பணியாளர் வழியாக மக்களை அழிவிலிருந்து பாதுகாக்கின்ற பணியை கடவுள் செய்கிறார். நித்தமும் இறைமக்கள் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள ஆயருக்கு கீழ்ப்படிவதும் ஒத்துழைப்புத் தருவதும் இன்றியமையாததாகும். ஆடுகள் ஆயருடைய சத்தத்தைக் கேட்டு செவி மடுத்தால் நல்ல செழிப்பான வாழ்வு உண்டாகும்.

***2. பாசமாயிருத்தல் :*** யோவா . 21:15

இயேசு நாதரின் உயிர்த்தெழுதலுக்குப் பின், பயந்த நிலையில் வாழ்ந்த சீடர்களின் பயம் மாற்றப்பட்டு,தொடர்ந்து பணி செய்ய அதிகாரப்படுத்தப்பட்டனர் (மத். 28:18-20). நற்செய்திப் பகுதியான யோவா. 21:15-19 வரை சொல்லப்பட்டுள்ள இயேசுவுக்கும் சீடர் பேதுருவுக்கும் நடைபெற்ற உரையாடல் இறைமக்களின் ஆயர்திருப்பணியின் அடித்தளம் எனலாம். திருப்பணிக்கு அனுப்பபட இருக்கின்ற பேதுருவின் அருட்பொழிவு நிகழ்ச்சி என்று கூட இந்த உரையாடல் நம்பப்படுகிறது. தமது மந்தையை மேய்க்க திருப்பணியாளரிடம் மிக முக்கியமாக இருக்க வேண்டிய பண்பு அன்பு. அப்பண்பு பேதுருவிடம் இருக்கிறதா? எனச் சோதித்தறிந்து தம் ஜனமாகிய ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பை இயேசுநாதர் ஒப்படைக்கிறார். இயேசுநாதர்

மீது பேதுரு கொண்ட அன்பு சேவை வழி வெளிப்பட வேண்டும். அது தான் கடவுளின் விருப்பம். 2014 மேய் மாதம் வத்திகானில் நடைபெற்ற அருட்தந்தையர்கள் அருட்பொழிவு வழிபாட்டில் போப்பிரான்சிஸ் அவர்கள் கூறிய... கிறிஸ்துவின்... இல்லையெனில் நீங்கள் நல்ல ஆயர்களாக இருக்க இயலாது... என்ற உண்மையை ஆயர் பணி செய்வோர் மனதில் கொள்ள வேண்டும். கடவுளில் அன்பு கூர்தலிலும் கடவுளுக்காய் நம்மை அர்ப்பணிப்பதிலும் தான் வெற்றியுள்ள திருப்பணி அமைகிறது. மந்தையை மேய்க்கின்ற மேய்ப்பன் பொறுமையாய் அன்புடன் நடத்திச் செல்லும் போது ஆடுகள் முழுமனதாய் மேய்ப்பனில் அன்பு கூர்ந்து செழுமையுள்ள வாழ்க்கை வாழ ஆயத்தப்படுதல் வேண்டும்.

***3. பாடனுபவித்தல் :*** 1 திமொ. 4:5

ஆயர்பணியை நிறைவேற்றும்போது பாடனுபவித்தல் த விர்க்க இயலாததாகும். அநீதியினைக் கண்டித்து நல் உபதேசத்துடன் புத்திச் சொல்லி நீதியினை நிலைநாட்ட முயற்சி செய்வது தான் இறைப்பணி (2 திமொ. 4:2). இது நீதிக்கான ஒரு போராட்டம் எனலாம். ஆதலால் துன்பங்கள் வருவது இயல்பானது. அந்தப் பாடுகள் மேய்ப்புப் பணியின் முழுமையினைக் காட்டுகிறது. மக்களிடம் இறைவாக்குகளைச் சொல்லி, அறைகூவி அழைத்து, எச்சரித்து, அவர்கள் தவறுகளை அன்பால் சுட்டிக் காட்டிய எரேமியாவைப் பாழுங்கிணற்றில் போட்டனர் (எரே. 38:6), பட்டினிப் போடப்பட்டார் (38:8), அடிக்கப்பட்டார் (20:2), பொறுப்புள்ளப் பணியைப் பெற்ற பேதுரு அடிகளார் பிற்காலத்தில் திருப்பணியினிமித்தம் தலைகீழாக சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். இயேசுநாதர் மனிதனை அழிவிலிருந்து பாதுகாக்க நீதிக்காய் துன்பமேற்றார். Dr. ஐடாஸ்கடார், கிரகம் ஸ்டெயின்ஸ், அன்னை தெரெசா போன்ற மேலை நாட்டு மிஷெனறிகள் இந்திய மக்களுக்காய் பாடனுபவித்தனர். யூதமதத்தினர் சார்பாக நின்று, ஜெர்மானிய பாசிச கொள்கை வெறிபிடித்த ஹிட்லரின் தவறுகளைச் சுட்டிக்காட்டிய இறையியலாளர் பான்காபர் (Bonhofer) அவர்கள் சித்திரவதைச் செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். இநதிகழ்வுக்ளெல்லாம் ஆயர் பணியின் சிறப்புக்கு இ ன்றும் சவாலாக உள்ளது.

2005 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் நாள் சென்னை வெள்ள நிவாரணத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 43 பேர் உயிரிழந்தனர். 15 -க்கும் மேற்பட்டோர் காயமடைந்தார். அந்நகரை அடுத்துள்ள சத்திய மூர்த்தி பவனில் ஒரு வாடகை வீட்டில் 28 வயது சக்திவேல் என்பவர் வசித்து வந்தார். இவர் ஒரு வாடகைக் கார் ஒட்டுநர். சம்பவத்தன்று தூஙகிக் கொண்டிருந்த அவரை நண்பர்கள் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எம்.ஜி.ஆர் நகரில் ஏற்பட்ட நெரிசல் குறித்து தகவல்

தெரிவித்தனர். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த சக்திவேல் உதவிக் கரம் நீட்ட தனது காரில் அந்த இடத்துக்குச் சென்றார். தன்னைக் கண்டவுடன் காப்பாற்றுமாறு கைகளை அசைத்தவர்களைத் தனது பெலம் கொண்டமட்டும் வெளியே இழத்து நெரிசலில் இருந்து காப்பாற்றினார். ஒருவர்பின் ஒருவராக 15 பேரைக் காப்பாற்றினார். கடைசியாக ஒரு மூதாட்டியைக் காப்பாற்ற முயன்ற போது பின்புறமாக கும்பல் நெருக்கி தள்ளியதால் இவரும் நெரிசலில் சிக்கினார். தரையில் மிதிபட்டு சில நிமிடங்களில் 15 பேரைக் காப்பாற்றிய சக்திவேல் பரிதாபமாக உயிரிழந்தார்.

அருள்பொழிவு திருப்பணி என்பது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் உன்னதப்பணி. ஆரோனைப்போல கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்தான் அந்தப்பணியைச்செய்ய முடியும் (யாக். 5:4). தென்னிந்தியத் திருச்சபையில் இத்தகைய கனமான பணியை நாம் பெற்றிருப்பது நமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய ஆசீர்வாதம் என்றே சொல்லலாம். இத்திருப்பணி மூலமாய் அழிவிலிருக்கும் மக்களுக்கு அன்புடன் இறை வாத்தையைத் தயக்கமின்றி கூறி அவர்களை வாழ்வுக்கு நேராய் வழிநடத்துவோம். அதனால் ஏற்படும் எத்தகைய துன்பங்களையும் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாவோம்.

அருள்திரு. **P. *ராஜா ஜெயசிங்***

| 30-07-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு |
|---|---|

## திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம்

**MARRIAGE : CELEBRATION OF COVENANT**

| | |
|---|---|
| தொ.நூ. 2:18-25 | எபி. 13:1-16 |
| தி.பா. 127 | மத். 19:3-6 |

**"திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள்." எபி. 13:6**

திருமணம் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை. முதல் திருமணத்தை ஏதேனில் கடவுள் ஏற்படுத்தினார். ஆண் பெண் இணைப்பில் கடவுள் நடுவர். முப்புரிநூல் சீக்கிரம் அறாது என்று திருமறை கூறுகிறது. திருமணத்திற்கு ஆண்டவரே சாட்சியாயிருக்கிறார். "உனக்கும் உன் மனைவிக்கும் உன் இளமையில் நிகழ்ந்த திருமணத்திற்கு ஆண்டவர் சாட்சியாயிருந்தார்.... உங்களை ஒன்றாக இணைத்தவர் அவரே, வாழ்வின் ஆதாரமும் அவரே" (மல்கியா 2:14, 15). உடன்படிக்கையின் இரகசியம் என்னவெனில் படைப்பாளருக்குக் கீழ்ப்படிவதும் உடன்படிக்கையின் விதிமுறைகளின்படி கட்டளைகளை கடைப்பிடிப்பதும் கடமையாகிவிடுகிறது. திருமணம் ஓர் ஆணும் பெண்ணும் மன அளவிலும், உடல் அளவிலும், ஆன்மீக அளவிலும், சமூக அளவிலும் ஒன்றிணைந்து அன்பிலும், தோழமையிலும் நாள் தோறும் வாழ இறைவன் முன்னிலையில் வாக்குறுதிகளை கொடுத்து உடன்படிக்கை செய்ததை கடவுள் கேட்டார். நாங்களும் கேட்டோம் என்று அறிவிப்பதாகும். இருமனங்கள் சுதந்தர மனப்பான்மையுடன் இணைந்து மேற்கொள்ளும் நித்திய உடன்படிக்கையாகும். மணவாழ்க்கை என்பது மனிதனை தூய்மைப்படுத்தி சிறைப்படுத்தும் ஒன்றாகும். மட்டுமன்றி மனிதனை, முழுவாழ்வுநிலைக்கென வடிவமைப்பதும் திருமண ஒன்றிப்பாகும். இந்தத் திருமண உடன்படிக்கையின் கொண்டாட்டத்திற்கு வேண்டியதாக உறவும், அன்பும், தியாகமும் இருக்க வேண்டும். இதை குறித்து சற்று தியானிப்போம்.

### *1. உறவுகளின் உறைவிடம் :*

மனிதன் தனிமையாய் பிறக்கிறான், தனிமையாய் இறக்கிறான். இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு பெரும் உறவு தேடலாகவே அவனது வாழ்க்கை அமைகிறது. துணையும் தோழமையுமின்றி இவ்வுலகில் அவன் வாழ இயலாது. தனிமை என்பது அவனால் அதிகம் தாங்க முடியாத ஒன்று. ஆண்டவராகிய கடவுள் "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார் (தொ.நூ. 2:18). சிரித்தால் தன்னுடன் சிரிப்பதற்கு, அழுதால் தன்னுடன் அழுவதற்கு, தன் வெற்றிகளை

கொண்டாடுவதற்கு, தன் தோல்விகளில் உடன் இருந்து தாங்கி கொள்வதற்கு உறுதுணையொன்றை தந்து உறவை ஏற்படுத்துகின்றார். திருமணம், உறவுகள் என்னும் சங்கிலிகளால் பின்னிப் பிணைந்துள்ளது. சங்கிலியில் ஒரு வளையம் பலவீனமானாலும் சிதைந்துவிடும். முதல் திருமணத்தை கடவுள் ஏதேனில் நடத்தி வைத்தார். ஆதாமின் எலும்பில் இருந்து ஏவாளை படைத்து ஆண்டவரே ஆதாமிடம் அழைத்து வருகிறார். ஆதாம் கண்ட பொழுது "இதோ! இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள்". தொ.நூ. 2:23 உணர்வுப் பூர்வமான உன்னதமான வார்த்தை வழி வெளிப்படுத்துகின்றார். எலும்புகள் இணையவில்லையெனில் அது ஊனம். சதைகள் இல்லையெனில் அது கூடு. இதில் ஒன்றுக்கொன்றுள்ள இணைவு, உறவு வெளிப்படுத்தப்படுகிறது. மனிதனின் விலா எலும்பில் இருந்து ஏவாளை படைக்கிறார். இது மனிதன் மிக நெருக்கமான உறவில் இருக்க வேண்டுமென்ற உயர்வான எண்ணத்தினால் கடவுள் இவ்வாறு செய்திருக்க வேண்டும். அவர்களின் உறவின் ஆழத்தை வெளிப்படுத்தும் வண்ணமாகக் "கணவன் தன் தாய்தந்தையை விட்டுவிட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்". (தொ.நூ. 2:24) என்று கணவன் மனைவி உறவை ஆழப்படுத்தி ஆண்டவர் கூறினார்.

கணவன் மனைவி உறவு என்பது வெளியார்ந்த உறவு அல்ல. இது உள்ளான உறவின் பந்தம். அது வாழ்நாள் பந்தம். இது மிகவும் புனிதமானது, அனுபவமானது, ஆக்கப்பூர்வமானது, ஒருவருக்கொருவர் தங்கள் உடலையும், மனதையும் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி கொடுப்பதாகும். பல சூழல்களில் இருந்தவர்களை உயிருக்கு உயிரானவர்களாகவும் வெவ்வேறு வாழ்வுப் பாதைகளில் வழிப்பயணம் செய்து கொண்டிருந்த ஈர் உயிர்களை ஒன்றிணைத்து ஒரு குடும்பமாக வாழச் செய்கின்றதும் திருமண உறவாகும். எனவேதான் கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்க முடியாது மத். 19:6-ன் மூலம் கிடைக்கும் அன்புறவு வாழ்வின் மகிழ்வினை இரட்டிப்பாக்குகிறது. பாரங்களைக் குறைக்கிறது. ஆக திருமண உடன்படிக்கை என்பது உறவுகளை ஒருமைப்பாட்டின் மூலம் இறைபிரசன்னத்தை உணர முடியும். (மத். 19:18) என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

## *2. உன்னத அன்பின் வாழிடம் :*

ஒரு ஆணும் பெண்ணும் திருமண அன்பால் இணைந்து வாழும் அடிப்படை சமூக அமைப்பே குடும்பம். குடும்ப வாழ்வின் முதலும் முடிவும் மையமும் அன்பே. அன்பு நிறைந்து நிலவும் குடும்பம் மகிழ்வின் பிறப்பிடம். அன்பில்லாத குடும்பம் வறண்ட பாழ் நிலம். என்மீது நான் கொண்டுள்ள அக்கறையும், உன் மீது எனக்குள்ள அக்கறையும் ஒன்றே என்பதே தான் திருமண அன்பு. இந்த அன்பில் ஒருவருக்கொருவர் முழுமையாக

மனமுவந்து அர்ப்பணம் செய்துவிடுகின்றனர். தனிமையை தவிர்த்து உறவு பிணைப்பினை வலுப்படுத்துகிறது. கலையை மாற்றி கண்ணீரை துடைக்கிறது. திருமண அன்பே மனிதனை மனிதனாக மலர வைக்கிறது. குடும்பம் என்பது "அன்புள்ளங்களின் சங்கமம்" என்பார்கள். "அன்பையே கொண்டிருங்கள்". (கொலே. 3:14), அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை (1கொரி. 13:2) அன்பு நிறைந்த குடும்பம் இவ்வுலக மகிழ்வுகளில் இணைப்பற்றது மட்டும் அன்று. அது மறுமை வாழ்வின் முன் சுவையும் ஆகும். அன்புறவில் ஒன்றிணைவது கணவனும் மனைவியும் மட்டுமல்ல அதில் இறைவன் மனிதரைச் சந்திக்கிறார். மண்ணுடன் விண்ணகமே சங்கமமாகின்றது. திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும். திருமணமான ஆண்களே உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள் கொலே. 3:18, 19-ல் கணவன் மனைவி வாழுமிடம் அன்பின் விளைவிடம் என்பதை உறுதிபடுத்தியுள்ளார். இன்னும் மேலாக, கிறிஸ்து திருச்சபையின் மீது நிபந்தனையற்று அன்பு செய்வது போல ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள் என்று "திருமணமான ஆண்களே கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள்" (எபேசி. 5:25).

உங்களுள் ஒவ்வொருவரும் தம்மீது அன்பு கொள்வது போல தன் மனைவியின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். (எபே. 5:33) அன்பு செய்தால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்போம். நல்லெண்ணம் கொண்டிருப்போம். மதித்து நடப்போம். வார்த்தைகளால் காயப்படுத்த மாட்டோம். நற்செயல்களால் எரிச்சலூட்டமாட்டோம். நன்றியுடையவர்களாக இருப்போம். அன்பு இல்லாக் குடும்பங்கள் சின்னாபின்னமாய் சிதறிப் போகும். அன்பை அடித்தளமாகக் கொண்டிராதவர்கள் வீடு மணல் மீது கட்டப்பட்ட வீடாகச் சிதைந்து போகும். கற்பாறையாகிய கிறிஸ்து இயேசுவில் கட்டப்படும் இல்லம் உன்னத அன்பின் வாழிடமாகவும், வளமையின் பிறப்பிடமாகவும் அமைந்துவிடும். ஆகவே நல்ல தகவுகளில் குடும்பப் பிணைப்புகள் உருவாக வேண்டும்.

### *3. உயர்தியாகத்தின் இருப்பிடம் :*

இயல்பாகவே மனிதன் சுய நலகுணம் நிறைந்தவன். எல்லாம் தனக்கு என்றே சுழல்பவன். அவன் பிறருக்காக தன் சுயநலத்தை, உரிமையை இழக்கமாட்டான். ஆனால் திருமணத்தின் மூலம் சுயநலம்விட்டு, உரிமையை இழக்கக் கற்றுக்கொள்கிறான். ஆணவம், அகந்தை இழந்து விடக் கற்றுக்கொள்கிறான். திருமணம் என்பது வாழ்வு சக்கரத்தை தடம் புரண்டு விடாமல் காப்பது போன்றதாகும். இதற்கு ஆதாரமாக இருப்பது ஒருவருக்கொருவரிடையே இருக்கின்ற தியாகமே.

இருவரிடமும் தியாக மனப்பான்மையும், விட்டுக்கொடுக்கும் தன்மையுமிருந்தால் சுமைகள் கூட பாரமாக தெரிவதில்லை. தியாகத்தால் மிளிர்வது ஒருவருக்கொருவர் மன்னித்து ஏற்றுக்கொள்கின்ற அனுபவமாகும். இருவரோடு வந்தால் கூட ஒருவராக வாழ்ந்து காட்டுகின்ற வாழ்க்கை "இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல்" மத். 19:5 படி தியாகமிருந்தால் தான் இருவரில் ஒருவரை காண முடியும். இதனால் ஒருவருக்கொருவர் தாழ்மையும், நன்றியும், நம்பிக்கையும் மேலோங்கி நிற்கும். யோசேப்பு மரியாள் திருக்குடும்பம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. யோசேப்பு மரியாள் இணைவில் இருந்து இயேசு குழந்தை பெற்றெடுக்கும் வரையிலும் ஏரோதுவுக்கு பயந்து எகிப்தில் தங்கியது, ஏழ்மையில் உழன்றது என பல இன்னல்களில் சிக்கி தவித்தபோது ஒருவருக்கொருவர் தியாக மனப்பான்மையுடன் செயல்பட்டனர்.

தியாகம் இல்லாத வாழ்வு உப்பு இல்லாத உணவுக்கு சமம். மெழுகுதிரி கரைந்தால் தான் வெளிச்சம் தருகிறது. சந்தனக்கட்டை மாவாக்கப்படும் போதுதான் மணம் பரப்புகிறது. ஒன்றையிழந்தால் தான் மற்றொன்றைப் பெற முடியும். எனவே சுயநலம், ஆணவம், அதிகாரம், அகங்காரம், தற்பெருமை, பழிவாங்கும் எண்ணங்களை இழந்தால் தான் வாழ்வு பெற முடியும். எனவே திருமண வாழ்வின் கொண்டாட்டத்திற்கு தியாகம் முக்கியமாக இருக்கிறது. மட்டுமன்றி மலர்ந்து மணம் பரப்பி கனிகளைத் தந்திட அதன் வளர்ச்சியில் முன்னோக்கமாக இருப்பது உயர்தியாகமே. தன்னலத்தை உடைத்து தன்னம்பிக்கையினை வளர்த்த தயாபரனின் ஒளியில் தனித்துவத்தை இழந்து விடாமல் வாழ்ந்து காட்டுவதே உடன்படிக்கையின் கொண்டாட்டமாகும். அதுவே தலைமுறையினருக்கு வாழ்வைக் குறித்து கற்றுத்தரும் பாடமாகவும் அமையும்.

வருத்தங்களும், வலிகளும் நிறைந்த வாழ்க்கைப் போராட்டத்தில் கிறிஸ்தவ திருமணம் நறுமணம் நிறைந்ததாக அமையட்டும். முரண்பாடுகள் நிறைந்துள்ள இக்கால கட்டத்தில் இறை அறிவுரையும், ஆலோசனையும், நடத்தலும் முக்கியமானது என்பதை உணர்ந்து இறை திருவுளத்திற்கு ஒப்படைப்போம். அதன் வாயிலாக வாழ்வின் மேன்மையைச் சொந்தமாக்குவோம்.

அருள்திரு. **N. ஜாண் பென்டிங்**

| | |
|---|---|
| 06-08-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஒன்பதாம் ஞாயிறு & **அருட்பணி ஞாயிறு** |

# அனைவருக்கும் நற்செய்தி

**GOOD NEWS TO ALL**

| | |
|---|---|
| எசா. 55:1-6 | தி.ப. 10:34-43 |
| திபா. : 146 | மத். 4:17-25 |

**"இயேசு கிறிஸ்து...அனைவருக்கும் ஆண்டவர்." தி.ப. 10:36**

கடவுள் அனைவருக்கும் உரியவர் என்பதே இன்றைய திருமறைப்பாடங்கள் தருகின்ற நற்செய்தி ஆகும். ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் மிக்க உலகினில் வாழ்கின்றோம். வட்டம், நாடு, மொழி, இனம், நிறம், சாதி, சமயம் மற்றும் பாலினம் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை பிரித்துபார்கிறது உலகம். ஆனால் இறைவனோ அனைவரையும் சமமாகப் பார்கிறார்.

"யூதரென்றோ கிரேக்கரென்றோ வேறுபாடில்லை. அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே; அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களை பொழிகிறார்". (உரோ. 10:12).

பிளவுச் சிந்தனையுடன் மானுடர்களை பார்க்கும் மனித சிந்தனைக் கட்டமைப்புகளை உடைத்திடல் வேண்டும் என்ற வீரியத்துடன் வெளிப்படுகின்ற நற்செய்தியினை இறைவார்த்தை துணைகொண்டு காண்போம்.

## *1) அனைவருக்கும் பேரிரக்கத்தின் நற்செய்தி :*

"தாகமாய் இருப்பவர்களே நீங்கள் அனைவரும் நீர் நிலைகளுக்கு வாருங்கள். கையில் பணமில்லாதவர்கள் நீங்களும் வாருங்கள். தானியத்தை வாங்கி உண்ணுங்கள். வாருங்கள் காசு பணமின்றி திராட்சை ரசமும் பாலும் வாங்குங்கள்". (எசாயா 55:1).

எசாயா 55-ம் அதிகாரத்துக்கு ஆண்டவரின் பேரிரக்கம் எனத் தலைப்பிடுகிறது திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பு. இப்பகுதி யூதாவின் மக்கள் பாபிலோனில் சிறைப்பட்டு நம்பிக்கை இழந்து இருந்த சூழலில் எழுதப்பட்டது.

தண்ணீரின்மையும், உணவின்மையும் தண்டனையின் குறியீடுகள். தண்ணீரும், தானியமும், திராட்சை ரசமும், பாலும் இறைவனின் இரக்கத்தின் அடையாளங்கள். சிறைப்பட்ட மக்களுக்கு ஆண்டவர் இவைகளைத் தருகிறார்.

இவ்விரக்கத்தைப் பெற இறைவனின் நிபந்தனையாய் மனமாற்றம் முன்வைக்கப்படுகிறது. எனக்கு செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள், கேளுங்கள், அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். (எசாயா 55:3).

இவ்விடத்தில் இறைவன் சிறைப்பட்ட இஸ்ரவேலருக்கு தருகின்ற நற்செய்தி அவர்களுக்கானது மட்டுமல்ல மாறாக அனைத்து இனத்தாருக்கும் பகிரப்பட வேண்டியது (எசாயா 55:5) என்பது அழுத்தம் பெற வேண்டிய முக்கிய நற்செய்தி ஆகும்.

## 2) அனைவருக்கும் அமைதியின் நற்செய்தி :

"இயேசு கிறிஸ்து வாயிலாக அமைதி உண்டு எனும் நற்செய்தியை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு அனுப்பினார் அவரே அனைவருக்கும் ஆண்டவர்" (தி.ப. 10:36).

இங்கே கூறப்படுகின்ற அமைதி என்பது இறைவனுடன் ஒப்புரவு மற்றும் மீட்பு என்பவைகளுடன் தொடர்புடையது. மானுடத்தின் பாவம் இறை உறவில் குறைவை ஏற்படுத்தியது. இதன் விளைவாய் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு நெருடல், அமைதியற்ற நிலை உருவாகியது. இந்நிலையினை சரிசெய்திட மனிதன் இயலாதவனாய் (Incapable) இருந்தான். பாவத்தின் மூலம் பகைவர்களான தான் அன்பு செலுத்தும் மக்களுடன் ஒப்புரவு வழி அமைதியை ஏற்படுத்த இயேசுவை இவ்வுலகத்துக்கு அனுப்பினார் கடவுள். சமாதானத்தை உண்டாக்கும் ஆக்கினை அவர்மேல் வந்தது. எனவே இயேசு தம்மைச் சாவுக்கு ஒப்புக்கொடுத்து, அனைத்து உலகத்தின் பாவத்தையும் சுமந்து தீர்த்தார். இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே நல்லுறவு வழி அமைதியை ஏற்படுத்தும் நடுவரானார்.

பேதுரு கொர்நேலியுவின் இல்லத்தில் உரை நிகழ்த்திய காலம் ஒரு யூதர் பிற குலத்தவரோடு செல்வதும் அவர்களுடன் உறவாடுவதும் முறைக்கேடு (தி.ப. 10:28) என்ற அடிப்படை வாதச்சிந்தனை வலுப்பெற்றிருந்த காலம். யூதர்களுக்காகவே இயேசு பிறந்தார் என்று எண்ணிய யூதக் கிறிஸ்தவர்கள் மிகுந்திருந்த காலம். இத்தாலியப் படைப்பிரிவின் நுற்றுவர் தலைவன் இல்லத்தில் செல்ல பேதுருவுக்கு கிடைத்த இறைவழி நடத்துதலும், கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை, எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடப்போர் அவருக்கு ஏற்புடையவர். பாவ மன்னிப்பு அனைவருக்குமானது. அனைவருக்கும் உரிய ஆண்டவரால் உருவாக்கப்பட்ட அமைதியும், அனைவருக்கும் உரியது எனும் நற்செய்தி பேதுருவின் உரையில் தெளிவுப்படுத்தப்படுகிறது (தி.ப 10:34-43).

## 3) அனைவருக்கும் விண்ணரசு பற்றிய நற்செய்தி :

"அவர் கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார்... விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார்".

இயேசுவின் திருப்பணி மக்கள் நெருக்கம் மிகுந்த, ஏழ்மையும், வறுமையும் மிக்க கலிலேயப்பகுதியில் இருந்து தொடங்கியது. 'விண்ணரசு' பற்றிய நற்செய்தி இயேசுவின் கலிலேயப் பணியின் தொடக்கத்திலேயே முக்கியத்துவம் பெறுகின்றது.

விண்ணரசு எனும் பதம் சுட்டும் பொருளும் அதன் விளக்கங்களும் எண்ணில் அடங்காதவைகள் எனினும் விண்ணரசு என்பது 'இறையாட்சி' எனப் பொதுவாய்ப் புரிந்து கொள்ளலாம்.

விண்ணரசு என்பது இவ்வுலக ஆட்சியினை போன்றது அல்ல (யோவா 18:36). இது மக்கள் நடுவே செயல்படுகிறது (லூக்கா 17:21). இறையாட்சி என்பது உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல, மாறாக, தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது (உரோ. 14:17). தீங்கு இழைப்போருக்கு இறையாட்சியில் உரிமை இல்லை (I கொரி. 6:9).

மத். 4:23-ல் விண்ணரசு பற்றிய நற்செய்தியினைத் தொடர்ந்து, மக்களிடம் உள்ள நோய் நொடிகளைக் குணமாக்கினார் இயேசு. மத். 9:35-லும் விண்ணரசு பற்றிய செய்தியும், நோய் நொடிகள் குணமாக்குதலும் இடம் பெறுகின்றன. இவைகள் நோயாளர், பேய் பிடித்தோர், மதிமயங்குவோர், முடக்குவாதமுற்றோர் போன்ற சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டோருக்கு விண்ணரசில் இடமுண்டு எனும் எண்ணத்தை முன்வைக்கிறது. இதுபோலவே கலிலேயா, தெக்கபோலி, எருசலேம், யூதேயா, யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பகுதி என மக்கள் பலர் விண்ணரசின் நற்செய்தியைப் பறைசாற்றிய இயேசுவைப் பின் தொடர்ந்தனர் எனும் செய்தி விண்ணரசின் நற்செய்தி நாடுகளின் எல்லையைக் கடந்து அனைவருக்கும் உரியது என்பதை தெளிவுபடுத்துகிறது (மத். 2:23-25). இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்கிறார் இயேசு (மாற்கு 1:15).

ஆண்டவர் அனைவருக்கும் உரியவர், ஆண்டவரின் இரக்கம், ஆண்டவரின் அமைதி மற்றும் ஆண்டவரின் ஆளுகையும் எல்லோருக்குமானது. இதுவே அனைவருக்குமான நற்செய்தி. இனம் கடந்து, குலம் கடந்து பிரிவினைக் காரணிகள் அனைத்தையும் கடந்து இறைவன்பால் மனமாற்றம் அடைந்து திரும்புவோர் அனைவருக்கும் இந்நற்செய்தியின் பலன் உண்டு என்பது பொதுவான நிபந்தனை ஆகும். (எசாயா 55:3, தி.ப. 10:35, மத். 4:17).

இறைவன் யூதர்களுக்கானவர் மட்டுமே எனும் மனப்போங்கை கடவுள் மாற்றி தாம் அனைவருக்கும் உரியவர் என்பதைத் தம் மகன் இயேசுவை முன்னிறுத்தித் தெளிவுபடுத்தினார்.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்". (மாற்கு 16:15) எனும் இறைக் கட்டளையை ஏற்று ஒடுக்கப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், ஏழைகள், கைம்பெண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் படைப்புகள் என அனைவருக்கும் உரியவர் ஆண்டவர் எனும் நற்செய்தியை உரக்கச் சொல்லுவோம்.

**அருள்திரு. T. சுதிர்**

13-08-2017

பெந்தக்கோஸ்துவுக்குப் பின்வரும்
பத்தாம் ஞாயிறு

# திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம்

**SACRAMENT OF BAPTISM**

| | |
|---|---|
| வி.ப. 14 : 15-31 | தீத். 3 : 3-8 |
| திபா : 32 | யோவான்: 3 : 1-8 |

**“இயேசு அவரைப் பார்த்து ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறத்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது. என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்.” யோவான் 3:5**

யூதர்களின் அதிகாரியான நிக்கதேமிடம் இயேசு கூறிய வாக்கு இதுவே (யோவா 3:1) இவர் பெயரில் பொருள் என்னவெனில் “வெற்றியடைந்தவர்” என்பதாகும். பழைய ஏற்பாட்டின் பின்னணியத்தை நன்கு கற்றறிந்து அதனை தன் வாழ்வில் செயலாக்கம் செய்யும் நிக்கதேமுடன் இயேசு கிறிஸ்து பல்வேறு உருவங்களின் வழியாக இப்பகுதியில் பேசுகிறார். கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ளாதவர் கிறிஸ்துவுடன் உரையாடின பின் மிக தெளிவாக அறிந்து கொண்டு அவருக்காக வாழ ஒப்படைக்கிறார்.

யோவான்: 19 : 39-42 இயேசுவின் திரு உடலை அடக்கம் பண்ணும் முன் வெள்ளைப் போளமும் கரிய போளமும் (சந்தனத்தூள்) கொண்டு வந்து அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்போடு இணைந்து யூதர்கள் அடக்கம் செய்யும் முறைப்படி நறுமணத் தைலமிட்டு துணிகளில் சுற்றிக்கட்டி அதன் பின் கல்லறையினுள் வைப்பதற்கு உதவியவர் நிக்கதேம். இது இவரது இறைப்பற்றை வெளிப்படுத்துகிறது. திரு முழுக்கு எப்படி திருவருட்சாதனமாக மாறுகிறது என்பதைப் பற்றி சிந்திப்பது நம் ஆன்மீக வாழ்வுக்கு துணை செய்யும். எபே. 4:5 இல் ஒரே ஆண்டவர் ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு ஆகியன குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமறையில் திருமுழுக்கு பெற்றுக் கொண்டதற்கு கிறிஸ்து அடையாளமானவர் (மத். 3:16). இவர் திருமுழுக்கினர் யோவனிடமிருந்து திரு முழுக்கு பெற்றார். மத். 28:19 இல் கிறிஸ்துவின் மாறாத கட்டளை என்னவென்றால் நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை மகன் தூ ய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் என்பதாகும். தொடக்க கால திருச்சபையிலிருந்து இன்று வரை திருமுழுக்கு ஊற்றி, மூழ்கி, தெளித்து, கழுவி என பல்வேறு முறைகளில் கொடுக்கப்படுகிறது.

பவுலின் கூற்று திருமுழுக்கிற்கு அடுத்த நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. I கொரி. 1:13-ல் கிறிஸ்து இப்படிப் பிளவுபுட்டாரா?...

பவுலின் பெயரிலா நீங்கள் திருமுழுக்கு பெற்றுக் கொண்டீர்கள் என வினா எழுப்புகிறார். Iகொரி. 1:13 -ல் திரு முழுக்கு கொடுப்பதற்கு அல்ல, நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார், என்கிறார். ஆகவே திருமுழுக்கு எப்படிக் கொடுக்க வேண்டும்? அது கட்டாயமானது தானா? எதற்குக் கொடுக்க வேண்டும்? என்பன போன்ற கேள்விகள் கருத்துப் பரிமாற்றங்கள் தவிர்த்து திருமுழுக்கின் தூய திருவருட் சாதனத்தை உள்வாங்கி அதன் உண்மைப் பொருளை அறிந்து நிலை வாழ்வுக்கென்று நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம். ஒருவர் திருமுழுக்குப் பெற்றால் தூயவராகி விட்டார் எனப்பொருள் கொள்ள முடியாது. இது ஒரு வெளிப்படையான அடையாளம் ஆனால் திருமுழுக்குப் பெற்றோர் நாள்தோறும் கிறிஸ்துவின் அன்பு, தாழ்மை, தூய்மை, சாட்சி வாழ்வு இவைகளை வெளிப்படுத்தி திருமுழுக்கு என்னும் திருவருட் சாதனத்திற்குரியவர்கள் ஆகின்றனர்.

## *1. திருமுழுக்கினால் மீள் பிறக்கும் அனுபவம் :*

யோவா 3:3 -இல் இயேசு அவரைப் பார்த்து மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியை காண இயலாது. இத்திருவாசகத்தில் கூறப்பட்ட 'மறுபடியும்' என்ற சொல்லை 'மேலிருந்து' எனவும் மொழி பெயர்க்கலாம்.

கிறிஸ்தவர்களிடையே நிலவி வரும் கேள்வி என்னவென்றால் மறுபடியும் பிறந்தீர்களா? என்பதாகும். இக்கேள்வியில் சந்தேகமும், குழப்பமும் ஏற்படுவது உண்டு. கிறிஸ்துவின் பதிலுரை, இதுவல்ல யோவா. 3 : 5 இல் தண்ணீரால், தூய ஆவியரால் பிறந்தாலன்றி என்பதில் வரும் தண்ணீரும், தூய ஆவியும் இறை மகிமையின் உருவகங்கள் எசா. 44:3 இல் தாகமுற்ற நிலத்தில் நீரை ஊற்றுவேன்...என் ஆவியைப் பொழிவேன் என்கிறார்.

மறுபடியும் பிறக்கும் அனுபவத்திற்கு இளைய மகன் திருமறையில் சொல்லப்பட்ட சிறந்த எடுத்துக் காட்டு இளைய மகன் மனமாற்றம் பெற்ற அனுபவமாகும் (லூக். 15:12-32).

ஒரு மனிதனுக்கு இரண்டு மகன்கள் அதில் இளையமகன் தனக்குரிய தந்தையின் செல்வத்தை பெற்றுக் கொண்டு தொலை தூரம் புறப்பட்டு, அங்கு நெறி தவறி வாழ்ந்து, அனைத்தையும் இழந்தான். அந்த நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட போது, இளைய மகன் வறுமையில் வாடினான். பன்றி மேய்க்கும் பணியைப் பெற்று, அந்த பன்றிகளுக்குக் கொடுக்கும் உணவு தனக்கு கிடைக்காததால் ஏக்கமுற்றான். அப்போது தந்தையின் அன்பை எண்ணி, தந்தையிடம் திரும்பி வந்தான்.

ஒருவரையெருவர் தழுவி அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் என்று கூறத் தகுதியற்றவன் என்று தவறிழைத்த தன் நிலையை கூறி மன்னிப்பை

பெற்றுக் கொண்டான். இங்கே தந்தையின் கூற்று மிகச் சவாலானது இவன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணமாற் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்.

திருமுழுக்கு பெறும் போது நாம் கடந்த காலங்களில் செய்த இறைவன் விரும்பாத தவறுகளை விட்டு விட்டு நம்மை புதுப்பிக்க விரும்புகிறார். மறுபடியும் பிறக்கும் அனுபவத்தில் நம் வாழ்வானது மன அமைதி, இறை அச்சம் இறைப்பற்று, மனித நேயம் ஆகியனவற்றைப் பெற்று நல்லதொரு கனிதரும் வாழ்வாக அமைய வேண்டும்.

## *2) திரு முழுக்கினால் மாசற்ற வாழ்வு வாழ்தல் :*

(யோவா 3:6)

மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியாரால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்

திருமுழுக்கினால் மறுபடியும் பிறக்கும் அனுபவம் உடைய இறை மக்களை தூய ஆவி ஆட்கொள்கிறது. அவர்கள் தூய ஆவியால் வழி நடத்தப்படுகிறார்கள். இறை அச்சம் இல்லாத தீமை நிறைந்த உலகில் மாசற்றவர்களாக வாழ்வதற்கு தூய ஆவியவர் துணை செய்கிறார்.

தீத்து 3:3-இல் அறியாமையில் இருந்தோம். கீழ்ப்படியாமல் இருந்தோம் நெறி தவறிச் சென்றோம் தீய நாட்டங்களுக்கும் பல் வகை சிற்றின்பங்களுக்கும் அடிமைப்பட்ட நிலையில் தீமையிலும், பொறாமையிலும் உழன்றோம். காழ்ப் புணர்ச்சி கொண்டவராய் ஒருவர் மற்றவரை வெறுத்தோம்.

கலாத்தியர் 5:16 - இல் தூய ஆவியின் வழி நடத்தல்களும் ஊனியல்பின் செயல்களும் மிகத் தெளிவாகக் கூறப்படுகின்றன. திருமுழுக்கின் நம்மை மாசற்றவர்களாக வாழத் தூண்டுவதுடன் ஆவியின் கனியான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை. பரிவு, நன்னயம் நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியன தழைத்து இறைமக்களிடம் கனி கொடுக்கும் அனுபவம் ஏற்பட்டு மாசற்ற வாழ்வு வாழ வழி காட்டும்.

திருமுழுக்கு என்னும் திருவருட் சாதனம் குற்றமற்று வாழ்வதற்கு வழிகாட்டியாகவும், திசை காட்டும் ஒளி விளக்காகவும் கலங்கரை விளக்காகவும் உள்ளது. இறை விளக்காகிய திருவசனத்தை நினைவில் நிறுத்தி அதனடிப்டையில் வாழ வேண்டும்.

ஒரு முறை இருண்ட கண்டம் என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவில் இறைப் பணி செய்து வந்த Dr. C.T. ஸ்டட் அவர்களை ஒரு நண்பர் சந்திக்க சென்றார். சந்தித்து உரையாடி இரவு உணவை உட் கொண்டார். இரவில் ஏற்பட்ட மங்கலான வெளிச்சத்தை கண்ணுற்ற அந்நண்பர் பார்த்த காட்சி அவரை வியப்படையச் செய்தது. அக்காட்சி என்னவென்றால் Dr. C.T. ஸ்டட் அவர்கள் மெழுகு ஒளி வெளிச்சத்தில் திருமறையைப் படித்து

தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது Dr. C.T. ஸ்டட்டின் நண்பர் அவரிடம் நீங்க பல வருடங்களாக திருமறையை படித்து வருகிறீர்கள் இன்னும் என்ன படிக்க வேண்டி உள்ளது என வினவினார். அதற்கு பதில் கொடுத்த Dr. C.T. ஸ்டட் மாசற்ற வாழ்வு வாழ்வதற்கு தடையாக ஏதாவது உள்ளனவா என்பதை ஆய்ந்தறிய திருமறையை வாசித்து வருகிறேன். என்றார். ஆகவே திருமுழுக்கு பெற்றவுடன் நம் ஆன்மீக வாழ்வு உறுதிபட்டது என்று எண்ணாது திருமறை வாசிப்பு இறை வேண்டல் என்ற தகவுகளுடன் நாள்தோறும் கிறிஸ்துவுக்குள் மாசற்ற வாழ்வு வாழ்வோம்.

### 3) திருமுழுக்கினால் மகிமையான நிலைவாழ்வை பெற்றுக் கொள்ளல் : யோவா. 3:15

அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெறுவர். உலகில் வாழும் அனைவரும் இறைவன் அருளிய மாபெரும் அருட் கொடையாகும் இது மனிதர்கள் கணித்த அறுதியிட்டு சொல்ல இயலாத இறை மறை பொருளாகும் எனலாம். இறைவன் நமக்குத் தந்த வாழ்வு காலங்களில் தீமையினின்றி விடுபட்டு மீட்பை பெற கிறிஸ்து தம்மையே நமக்காக கொடுத்தார்.

தீத்து : 3 : 5-இல் நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப் பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார். மேலும் தீத்து 3:5-இல் தூய ஆவியை நம்மீது நிறைவாகப் பொழிந்தார். தீத்து 3:7-இல் நாம் அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவர்களாகி நாம் எதிர் நோக்கி இருக்கும் நிலை வாழ்வை உரிமைப் பேறாக பெறும் பொருட்டே இவ்வாறு செய்தார்.

திருமுழுக்கின் வழியாக நம் உள்ளம் மகிமையான நிலை வாழ்வை பெற்றுக் கொள்ள தகுதிப்படுத்துகிறது, கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் இவற்றில் பங்கு கொள்ளதிருமுழுக்கு அடையாளமாகிறது.

சீனாவில் வாழும் மக்கள் கிறிஸ்து அருளும் நிலை வாழ்வை பெற்றுக் கொள்ள பல அருள்பணியாளர்கள் தியாகத்துடன் செயல்பட்டனர் இந்நிலையில் ஆதரவற்ற நிலையில் 5 மகன்களுடன் வாழும் அம்மாவுக்கு சீனாவில் அருட்பணி செய்ய ஆயத்தமா? என்ற அறைகூவல் கிடைக்கப்பெற்றது. அதற்குக் கீழ்ப்படிந்து தன் மூத்த மகளை கப்பல் மூலம் சீனாவுக்கு அனுப்பினார். சில மாதங்களில் இரத்த சாட்சியாக அந்த மூத்த மகள் மரித்துப் போனாள் இதைக் கேள்விப்பட்ட அம்மா தனது இரண்டாவது மகளை அனுப்பினார். இரடண்டாம் மகளுக்கும் அதே நிலை துவண்டு விடாத அம்மா மூன்றாம், நான்காம், ஐந்தாம் மகளையும் ஒருவர் பின் ஒருவராக அனுப்பினார், நான்கு மகள்கள் இரத்த சாட்சியாக மரித்த போது கண்ணீர் விடாத அம்மா ஐந்தாம் மகள் மரித்த போது கதறினார், கண்ணீர் விட்டார், கலங்கினார். ஆறுதல் சொல்ல வந்த உறவினர்கள்

இந்த அம்மாவிடம் 4 மகள்கள் மரித்த போதும் கலங்காத நீங்கள் 5-ம் மகள் மரித்த போது மட்டும் ஏன் கண்ணீர் விட்டு துயரத்தில் இருக்கிறீர்கள் என்று வினவினர். அப்போது அந்த அம்மா சீனாவில் வாழும் மக்களுக்கு இனி நற்செய்தி சொல்ல இனி யாரை அனுப்புவேன் என்று தான் வருந்துகிறேன் என்று சொல்லிய அம்மா தானே சீனா செல்ல தன்னை அர்ப்பணித்து சீனாவில் இறைப்பணியாற்றினார். அப்போது சீனாவில் உள்ள மக்கள் இவரை அடையாளம் கண்டு, இங்கிருந்து திரும்பி செல்லுங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட நிலை உங்களுக்கும் வரும் என எச்சரித்தனர் ஆனால் அந்த அம்மாவோ நான் உங்களை அன்பு செலுத்துகிறேன் நீங்கள் நரகத்திற்கு சென்று விடக் கூடாது அது தான் என் ஆவல் என்றார். (Because I love you and don't want you go to hell) இந்த வார்த்தை அவர்களை உணர்வடையச் செய்தது. தங்களை திருமுழுக்கு பெற ஒப்படைத்தனர். அத்திருமுழுக்கின் வழியாக சீன மக்கள் மகிமையான நிலை வாழ்வை ஏற்றுக் கொள்ள இந்த அம்மாவை கடவுள் ஒரு கருவியாக பயன்படுத்தினார். நம்மையும் இதற்காகவே இறைவன் அழைக்கிறார்.

திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம் கருத்து பரிமாற்றங்களால் கோட்பாடுகளினால் விடை காண முடியாது ஒரே திருமுழுக்கு என்னும் வெளிப்புற அடையாளம் வழியாக கிறிஸ்து உயிர் பெற்று விண்ணுக்கெழுந்தார், மறுபடியும் பிறக்கும் அனுபவத்தினூடே மாசற்ற வாழ்வு வாழ்ந்து மகிமையான நிலை வாழ்வை பெற்றுக் கொள்வோம், நம்முடன் வாழும் அனைத்து மக்களையும் கிறிஸ்துவிடம் அழைத்துச் சென்று அவருடைய கட்டளையை நிறைவேற்றுவோம்.

**அருள்திரு. S. டேவிட் ஜோசப் ராஜ்**

| 15-08-2017 | **இந்திய விடுதலை பெருநாள்** |
|---|---|

## நீதிக்கான விடுதலை

**FREEDOM FOR JUSTICE**

| | |
|---|---|
| வி.ப. 23:1-9 | கலாத். 5:1-6 |
| தி.பா. 18:16-24 | லூக். 6:20-26 |

**“கிறிஸ்து அடிமை நிலையி-ருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.” கலாத். 5:1**

19-ஆம் நூற்றாண்டின் இத்தாலி தேசத்து பெருந்தலைவர், கரிபால்டி சில ஆயிரம் இளைஞர்கள் மத்தியில் தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக யுத்தம் செய்ய எழுச்சிமிகு உரையை ஆற்றினார். அப்போது ஒரு இளைஞன் அவரிடம், ஐயா இந்த யுத்தத்தில் பங்கேற்றால் எனக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டான். அதற்கு கரிபால்டி, காயங்களும் தழும்புகளும், ஒருவேளை மரணமும் கிடைக்கும். ஆனால் நினைவில் வைத்து கொள்; உன் காயங்கள் வழியாக இத்தாலி விடுதலை பெறும்.

இந்திய நாட்டின் விடுதலைப் பெருநாளைக் கொண்டாடும் நாம், இவ்விடுதலை இலகுவாய் கிடைத்ததன்று. இதற்காக, பலர் தங்கள் உறவை, உடமையை, உயிரைத் தியாகம் செய்துள்ளனர். அத்தகைய ஒப்படைப்பாலும், தியாகத்தாலும் பெற்ற விடுதலை வாழ்வை பொறுப்பாண்மையோடு பயன்படுத்துவது குறித்து தியானிப்போம்.

### *1) விடுதலை வாழ்வில் நீதி செய்தல் :*

யாத்திராகமம் 23:1-9 அடங்கிய வசனங்கள் நீதிபதிகளுக்குரிய கற்பனை என திருமறை அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஒரு மனிதன் செல்வந்தனாய் இருப்பதால் தயை பாராட்டப்பட வேண்டியவனும் அல்ல. அதே வேளையில் ஒருவன் ஏழை என்பதால் அவனும் தயை பாராட்டப்பட வேண்டியவன் அல்ல. நீதி அனைவருக்கும் சமமானதே.

பரிதானம் வாங்கி நீதியை திரிப்பது கடவுளுக்கு ஏற்புடைய செயல் அல்ல; மாறாக, கடவுளின் சினத்தைக் கொண்டு வரும் செயலே. அநியாயமாய் நீதிமான் மேல் பொய் சாட்சியோ, தீர்ப்போ சொல்ல வேண்டாம். பணம் இருப்பதாலோ, சமுதாயத்தில் அந்தஸ்து மிக்கவராய் இருப்பதாலோ முகதாட்சணியம் காட்டுவது தீமை என்கிறார் ஆண்டவர்.

இன்றைய சமுதாயத்தில் நீதிமன்றங்களின் செயல்பாடுகள் கேள்விக்குறியாக மாறிவிட்டன. பணம் இருந்தால் நீதியை விலைக்கு வாங்கலாம் என்பதை சமீபத்திய சில தீர்ப்புகள் புலப்படுத்தியுள்ளது.

தன் நீதியை அல்லது நிலைமையை சமுதாயத்தில் எடுத்துரைக்க சத்தம் இல்லாத எளியோர்க்கு விரோதமாய் செயல்படுவதை விட்டுவிட்டு அவர்க்கு நீதி செய்ய கடவுள் அறிவுறுத்துகிறார்.

உடன் வாழும் அயலானை தாழ்வாய் எண்ணி அநீதி செய்வதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அடிமையாய் அந்நியனாய் பட்டபாடுகளை நினைத்து அவர்களை அநீதியால் ஒடுக்காமல் நீதியாய் நடத்த வேண்டும். கடவுள் நமக்கு தந்திருக்கும் இந்த விடுதலை வாழ்வில் நீதியாய் நடப்பதையே விரும்புகிறார்.

## *2) விடுதலை வாழ்வில் நிலைத்திருத்தல் :* (கலா. 5:1-6)

உரிமை வாழ்வை கடவுள் நமக்கு ஈந்துள்ளார். அந்த விடுதலை வாழ்விலே நிலைத்திருப்பது நம் செயலே. புவுல் கலாத்தியருக்கு சொல்லும்போது உரிமையின் வாழ்வை கடவுள் தந்திருக்கிறார் அதிலே நிலைத்திருக்க வேண்டும். பழைய அடிமைத்தன வாழ்வை விட்டு புதிய வாழ்விலே கடவுள் காட்டும் நீதியின் பாதையில் முன்னேறிட வேண்டும்.

கலாத்திய திருச்சபையில் சில யூத கிறிஸ்தவர்கள் பவுல் பறைசாற்றின போதனைக்கு விரோதமாய் பேசினர். கிறிஸ்துவுக்கு முதலிடம் தருவதை விட்டுவிட்டு திருசட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் என வாதிட்டனர்.

பவுலின் மீதும் பல குற்றச்சாட்டுகளை சுமத்தினர். இச்சூழலில் கிறிஸ்தவத்தின் அடித்தளமாகவும், இறை வெளிப்பாட்டின் உச்சமாகவும் விளங்குபவர் கிறிஸ்துவே. திருச்சட்டம் பாவத்தை சுட்டி காட்டுமே தவிர அதினின்று விடுதலை தராது.

ஆனால் பாவத்தை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் அதினின்று விடுதலை தருபவர் கிறிஸ்து. அவராலேயே இந்த விடுதலை வாழ்வு நமக்கு தரப்பட்டிருக்கிறது. அந்த விடுதலை வாழ்வில் நிலைத்திருக்க வேண்டும்.

இந்த உலகம் சார்ந்த மனிதர்களே தவறான போதனைகளே தீயோனே கிறிஸ்து அருளி இருக்கிற விடுதலை வாழ்வில் இருந்து நம்மை பிரிக்க முடியாது என்கிற உறுதிப்பாடு நமக்கு இருக் வேண்டும் என்று புவுல் வலியுறுத்துகிறார்.

## *3) விடுதலை வாழ்வில் நிறைவுபெறுதல் :* லூக். 6:20-26

லூக். 6:20-26 வரையுள்ள பகுதி சமவெளி பொழிவாக லூக்காவால் பதிவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு சமூக அளவேடுகளினால் ஓரங்கட்டப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஊக்கமாக ஆண்டவர் தருகின்ற ஆற்றல் மிகு வார்த்தைகள்தான் இவை. கடவுள் புறக்கணிக்கப்பட்ட மக்களால் தம் தெய்வீக திட்டத்தை வெளிப்படுத்துகிறார். அவர்களோடு தம்மை ஒன்றுபடுத்துகிறார். தம் அருட்பணியை செய்ய அவர்களை அழைக்கிறார்.

ஆண்டவரின் அரசு அத்தகைய மக்களின் அரசாகவே இருக்கும் என ஆண்டவர் வலியுறுத்தி கூறுகின்றார். உலகத்தில் பட்டினியாயிருப்போர், அழுது கொண்டிருப்போர் உலகத்தால் வெறுத்து ஒதுக்கப்படுவார். தங்கள் இயலாமையை குறித்தும் இல்லாமையை குறித்தும் கலங்க வேண்டியதில்லை.

உலகத்தின் பார்வையில் குறைவுள்ளவர்களாய் இருந்தாலும் கடவுளின் பார்வையில் இவர்களே நிறைவானவர்கள். ஏனெனில் ஏழ்மையும் எளிமையும் இறைவனுக்காக இழத்தலும் இறையரசின் இன்றியமையா பண்புகள். அத்தகைய பண்பை கொண்டிருப்போரே நிறைவானவர்கள்.

நிறைவு என்பது உலகு சார்ந்த பொருட்களாலோ, பொருளாதாரத்தைலோ, உறவுகளாலோ வருவது அல்ல. அது உள்ளம் சார்ந்தது. ஆகவே உலகில் நமக்கிருக்கிற ஏழ்மையைக் குறித்தும் இல்லாமையைக் குறித்தும் நாம் கலங்காமல் கடவுள் அருளிய விடுதலை வாழ்வில் நிலைத்திருந்தால் ஆண்டவருடைய நாளில் மிகுதியான கைம்மாறு அடைவோம் என்று ஆண்டவர் வலியுறுத்துகிறார்.

**திரு. J. பிளசிங் சாமுவேல்**

| 20-08-2017 | பெந்தக்கோஸ்துவுக்குப் பின்வரும் பதினோராம் ஞாயிறு |
|---|---|

## திருவிருந்து என்னும் திருவருட்சாதனம்
### SACRAMENT OF LORD'S SUPPER

| | |
|---|---|
| தொ.நூ. 14:17-24 | 1 கொரி. 10:15-17 |
| தி.பா. 104:14-30 | மாற். 14:12-26 |

**"இது எனது உடன்படிக்கையின் இரத்தம்." மாற். 14:24**

திருவருட்சாதனம் என்பது கடவுள் அருளும் கண்ணுக்குப் புலப்படாத உள்ளான கிருபையின், கண்ணுக்கு புலப்படும் வெளிப்படையான அடையானம் (Sacrament is an Outward and visible sign of an inward and in visible grace) என புனித அகஸ்டின் குறிப்பிடுகின்றார். Sacrament என்னும் வார்த்தை Sacramentum என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து பிறந்தது. Secret (ரகசியம்) Sacred (பரிசுத்தம்) முதலிய வார்த்தைகளும் இதனோடு தொடர்புடையவை. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீகக் கடமையாகத் திருவருட்சாதனம் சித்தரிக்கப்படுகிறது. வைதீகத் திருச்சபை 7 காரியங்களை திருவருட்சாதனமாக ஏற்றுக்கொண்டுள்ளது. 1) Baptism (திருமுழுக்கு), 2) Eucharist (நற்கருணை), 3) Confirmation (திடப்படுத்துதல்), 4) Reoance (பாவமன்னிப்பு), 5) Marriage (திருமணம்), 6) Ordination (அருட்பொழிவு), 7) Unction (மரண நேரத்தில் எண்ணெய் பூசி, நற்கருணை பெறுதல்) நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் செய்யும்படி நமக்கு கட்டளையிட்ட திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரண்டினை மட்டும் சீர்திருத்தச் சபையின் சாக்கிரமெந்தாக நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். திருவிருந்து, ஆண்டவரின் பந்தி, ஆண்டவரின் இராப் போஜனம் (Lord's Supper) (Lord's Table), தூய நற்கருணை (Holy Eucharist) என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. திருவிருந்து நமக்கு கற்றுத்தரும் பாடங்கள் பல, தரப்பட்டுள்ள, திருமறை பகுதிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு திருவிருந்து குறித்த சில உண்மைகளை அறிந்து கொள்ள விழைவோம்.

### *1. ஆலயத்தின் அருளாசியை உருவகப்படுத்துகிறது*

"சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு அப்பமும், திராட்சை இரசமும் கொண்டு வந்தார். அவர் உன்னத கடவுளின் அர்ச்சகராக இருந்தார். அவர் ஆபிரகாமை வாழ்த்தினார்..." தொ.நூ. 14:18, 19.

ஆபிரகாம் தனது குடும்பத்தினருக்கு எதிராக வந்த சத்துருக்களை முறியடித்து, வெற்றி வாகையுடன் திரும்பி வரும்போது, சாலேமின் அரசனாகவும், ஆசாரியனாகவும் இருந்த மெல்கிசேதேக்கு, ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சை ரசமும் கொடுத்து அவரை ஆசீர்வதிக்கிறார்.

இந்நிகழ்வில் ஆசாரியராகிய மெல்கிசேதேக்கை கடவுளின் மற்றும் ஆலயத்தின் பிரதிநிதியாய் நாம் காண்கிறோம். திருவிருந்தில் பகிரப்படும் ஞான அனுமானங்களாகிய அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் ஆசாரியனாகிய மெல்கிசதேக்கு ஆபிரகாமுக்குக் கொடுத்தது. ஆலயப் பிரகாரங்களில் ஆசரிக்கப்படும் திருவிருந்தையே நமக்கு நினைப்பூட்டுகிறது. அக்காலத்தில் திருவிருந்து போன்ற பழக்கம் இல்லையெனினும் இறைச் சமூகத்தில் பணிவிடை செய்யும் ஆசாரியர் ஒருவரால் தரப்படும் இந்த அப்பமும் திராட்சை ரசமும் ஆசீர்வாதமும் ஆலயத்தின் வழியே வரும் அருளாசியையே சித்தரிப்பதாக உள்ளது. இந்த ஆசாரியரிடத்தில் ஆபிரகாம் கடவுளுக்கான தசமபாகக் காணிக்கையையும் கொடுக்கிறார். கடவுளிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களையும், நாம் கடவுளுக்குக் கொடுக்கும் காணிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் மையமாக ஆலயம் திகழ்கிறது. மலா. 3:10 இதனை தெளிவாக விளக்குகிறது. கடவுளின் அருளாசியை பெறும்படி காணிக்கைகளை ஆலயத்தில் கொண்டு வாருங்கள். எனவே கடவுளுக்குக் கொடுப்பது என்பது ஆலயத்திற்குக் கொடுப்பது; ஆலயத்திலிருந்து பெறுவது என்பது கடவுளிடமிருந்து பெறுவது. ஆலயம் / திருச்சபையினால் அல்லாமல் மனிதனுக்கு மீட்பு இல்லை (There is no salvation outside the church) எனும் கருத்து திருச்சபை பிதாக்களிடம் உறுதியாயிருந்தது. கடவுள் நமது ஆசீர்வாதங்களை ஆலயத்தின் வழியே அருள்கிறார் என்பதை நாமும் திருமறை வழியே அறிந்து கொள்கிறோம். "ஆண்டவர் தூய தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசை அனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக". (தி.பா. 20:2). "ஆண்டவர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்" (தி.பா. 128:5). "ஆண்டவரின் ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்" (தி.பா. 118:26); "ஆலயத்திலிருந்து என் சத்தத்தை கேட்டார்". (தி.பா. 18:6; 2 சாமு. 22:7). இந்தத் திருவசனங்கள் ஆண்டவரின் அருளாசிகள் ஆலயத்திலிருந்து அருளப்படுகின்றன என்பதை எடுத்துரைக்கின்றன. ஆபிரகாமுக்கு ஆசாரியரால் அளிக்கப்பட்ட அப்பமும் திராட்சை ரசமும் ஆலயத்திலிருந்து அருளப்படும் கடவுளின் அருளாசியை உருவகப்படுத்துவதாய் அமைந்துள்ளது. திருவிருந்தில் பங்கு பெறும் நாமும் ஆலயத்திலிருந்து ஆண்டவரின் அருளாசியை பெற்றுக்கொள்வதற்கான உணர்வைப் பெறுகிறோம்.

## 2. ஆராய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது

"சீடர்கள் வருத்தமுற்று, ஒருவர்பின் ஒருவராக, நானோ? நானோ? என்று இயேசுவிடம் கேட்கத் தொடங்கினார்கள்" (மாற். 14:16).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களிடம் தம்முடைய நினைவாக இதைச் செய்யுங்கள் என்று சொல்லி திருவிருந்து என்னும் தூய நியமத்தை ஏற்படுத்தும் சூழலில், தம்முடன் பந்தியில் பங்குபெறும் தம் சீடர்களிடம் "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்"

(வ. 18) என்று கூறினார். உடனே சீடர்கள் அவனா? இவனா? என மற்றவர்களைக் குறித்து கேட்காமல் நானோ? நானோ? என ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தனர். தான் யார்? எப்படிப்பட்டவர்? என்னில் சூது, சூழ்ச்சி, வஞ்சகம், வாது உண்டா? நான் காட்டிக் கொடுப்பவனா? என்று ஒவ்வொருவரும் தங்களைக்குறித்து தாங்களே ஆராய்ந்ததன் வெளிப்பாடே நானோ? நானோ? எனும் கேள்விகள். இறைவனின் சந்நிதியில் வரும்போது நம்மை நாமே ஆராய்ந்து தன்னிலை உணர வேண்டியது அவசியம். ஆராய்ந்து அறியாமல், தன்னிலை உணராமல் ஏறெடுக்கப்படும் ஆராதனைகளும், ஜெபங்களும், காணிக்கைகளும் அங்கிகரிக்கப்படாது என்பதனை மத். 5:23, 24 வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. ஆண்டவரின் பந்தியில் பங்கு பெறுபவர்கள் தங்களை ஆராய வேண்டியது அவசியம். பவுலடியாரும் எந்த மனிதரும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன் (1 கொரி. 11:28) என்று அறிவுரை கூறுகிறார். மற்றவர்கள் நம்மை யார்? என்றும் எப்படிப்பட்டவர்கள்? என்றும் சுட்டிக்காட்டும் பொழுது நாம் எரிச்சலும் கோபமும் கொள்கிறோம். எனவே நம்மை நாமே ஆராய்ந்து அறிவது அர்த்தமுள்ள ஆன்மீக அடிப்படையை உருவாக்கும். கிரேக்க தத்துவ அறிஞர் சாக்ரட்டீஸ் அவர்களின் புகழ்பெற்ற வாசகமாகிய “உன்னையே நீ அறி” (Know yourself) என்னும் வார்த்தைகளின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். பிறரை குறித்து அதிகம் அறிய விரும்பும் நாம் நம்மைக்குறித்த அறிவில்லா திருப்போமானால் கடவுளின் பார்வையில் நாம் வெளிவேடக்காரர்கள் (லூக். 6:42; மத். 7:3-5). நம்மை நாமே ஆராய்ந்து ஆண்டவரின் சந்நிதியில் திருவிருந்தில் பங்கு பெறும் போது மாய்மாலமான பக்தியோடு அல்ல, “கடவுளே பாவியாகிய என் மீது இரங்கியருளும்” (லூக். 18:13) என்ற மனத்தாழ்மையுடன் திருப்பீடத்தண்டை வர அழைக்கப்படுகிறோம். எனவே தான் திருவிருந்து தொழுகை முறைமையில் மனத்தாழ்மையின் மன்றாட்டு முக்கிய இடம் வகிக்கிறது. நம்மை ஆராய்ந்து நமது தகுதியின்மையை உணரும் போது மட்டுமே இந்த மனத்தாழ்மையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

### 3. ஆண்டவருடனான ஐக்கியத்தை உறுதிப்படுத்துகிறது.

“...திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா? அப்பத்தை பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா!” 1 கொரி. 10:16.

பவுலடியார் கொரிந்து திருச்சபைக்கு தனது திருமுகத்தில் திருவிருந்து என்னும் பரிசுத்த நற்கருணையில் பங்கு பெறும் போது கிறிஸ்துவுடன் நாம் ஐக்கியமடைகிறோம் என்று கூறுகிறார். மூன்றாம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்த தூய சிரில் (St. Cyril of Jerusalem), திருவிருந்தைப்பற்றிக் கூறும் போது “Reception of the Eucharist makes the

Christianas Christ bearer” என்கிறார். அதாவது பரிசுத்த நற்கருணையைப் பெற்றுக்கொள்ளுதல் கிறிஸ்தவனை, கிறிஸ்துவை தன்னில் சுமக்கிறவனாக்குகிறது. கிறிஸ்துவோடு ஐக்கியப்படுதலை தூய சிரில் அழகாக கூறுகிறார். கிறிஸ்துவுடன் இணைதலே கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம். கிறிஸ்துவினுடைய வாழ்விலும், பணிகளிலும் நாம் இணையும் பொழுது மட்டுமே கிறிஸ்துவை உடையவர்களாக உலகில் சாட்சி பகர இயலும். கிறிஸ்துவை தன் வழியாக உலகிற்கு அடையாளங்காட்ட இயலாதவன், தன்னை கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளுவது போலியானது. கிறிஸ்துவோடு ஐக்கியப்படாதவன் கிறிஸ்துவை உலகிற்கு காட்ட இயலாது. கிறிஸ்துவோடு ஐக்கியப்படாதவன் கிறிஸ்தவன் அல்ல. கிறிஸ்துவுடன் இணையும் பாக்கியத்தை, அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாகிய அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் பெற்றுக்கொள்வதன் மூலம் நாம் அடைகிறோம். என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று இந்த திருவருட்சாதனத்தை நியமித்த இயேசு கிறிஸ்து கூறும் Remember என்பது நினைவில் கொள்ளுதலை மட்டும் குறிக்காமல் தவறவிட்ட, இழந்துபோன, பிரிந்து சென்ற நிலையில் Re+memberதிரும்பவும் அங்கமாதல், திரும்ப இணைதல் என்னும் பொருளையும் வலியுறுத்துகிறது. திருவிருந்துக்கு நாம் பயன்படுத்தும் Holy Communion என்னும் வார்த்தை Holy + Come + union என தூயவருடன் ஐக்கியப்படுத்துவதற்கான ஒரு தளமாக இத்திருவருட்சாதனைத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கான அழைப்பாகும். 1 கொரி. 10:17-ல் “அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்” என்னும் வசனத்தில் நம்மை ஒன்றிணைப்பதற்கான ஆதாரம் கிறிஸ்துவே. நாம் ஒவ்வொருவராக கிறிஸ்துவுடன் திருவிருந்தின் மூலம் ஐக்கியப்படுவதன் மூலம், பலரான நாம் ஒன்றாய் இணைக்கப்படுகிறோம். எனவே திருவிருந்து இறைமக்களை ஒன்றிணைப்பது மட்டுமல்ல, இறைவனோடு ஒன்றிணைப்பதாகும். “எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” (யோவா. 6:56). கிறிஸ்துவில் இணைந்திருக்கும் பொழுது மட்டுமே கனி கொடுக்க முடியும், கடவுளை மகிமைப்படுத்த முடியும் (யோவா. 15:4, 5, 8).

திருவிருந்து எனும் திருவருட்சாதனத்தின் அடிப்படை உண்மைகளை அறிந்து கொண்டவர்களாய் ஆண்டவரின் பந்தியில் பங்கு பெறவும், கடவுளின் திருப்பெயருக்கு புகழ் சேர்க்கவும் கடவுள் நமக்கு அருள்தருவாராக! இறை ஆசி நம்முடன் தங்குவதாக!! ஆமென்!!!

**அருள்திரு. M. இம்மானுவேல் கின்சன்பெல்**

27-08-2017 பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பனிரெண்டாம் ஞாயிறு

## பல்நம்பிக்கைச் சமூகத்தில் கிறிஸ்தவ இருப்புநிலை

**CHRISTIAN PRESENCE IN A MULTI FAITH SOCIETY**

| | |
|---|---|
| தானி. 1:1-21 | தி.ப. 10:9-16 |
| தி.பா. 67 | மத். 13:31-33 |

**“....தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார்...” தானி. 1:8.**

நாம் வாழும் இந்தியத் திருநாடு பல்சமய, மொழி, இனம், கலாச்சாரம் கொண்ட மக்களை உள்ளடக்கியதாகும். வேறுபட்ட எண்ணங்களையுடையோர் ஒருவரையொருவர் தாங்குவதும், உறவுகளை ஏற்படுத்தி வாழ்வதும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கு ஐயமில்லை. அதிலும் வேறுபட்ட சமய நம்பிக்கையுடையோர் இணைந்து செயல்படுவது அற்புதமானதேயாகும். 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது இசுலாமிய சமயத்தைச் சார்ந்தவர்களை இன்முகத்தோடு ஏற்று உணவளித்த இந்து, கிறிஸ்தவர்கள், இந்து கோயிலைத் தூய்மைப்படுத்திய இசுலாமியர்கள், பல சமயத்தவர்களுக்கும் அடைக்கலம் அளித்த ஆலயங்கள், என்கிற செய்திகள் பத்திரிகைகளில் தலைப்பு செய்திகளாக அலங்கரித்தன. அவ்வாறே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவினுடையவர்களாக வாழ்கின்ற ஒவ்வொருவரும் தங்கள் சான்று வாழ்வின் மூலம் கிறிஸ்துவை இந்தச் சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். மாறாக, பிறசமயத்தவர்கள் அதிகமாக வாழும் இடங்களில் பெரிய கூம்பு வடிவ ஒலி பெருக்கிகளை அமைத்து நற்செய்தியை அறிவிப்பதாகக் கூறி முழங்கிக் கொண்டிருந்தால் அது அமைதியை கெடுத்து வன்முறைகளை ஏற்படுத்தி ‘இரைச்சலின் மக்கள்’ என்ற பட்டப் பெயரைத் தந்து விடுமேயொழிய உண்மையான சான்றாய் அமைவதில்லை. நமது சான்று வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இன்றைய திருமறைப் பகுதிகள் சார்ந்து தியானிப்போம்.

### ***1. தீமைகளைத் தீண்டாத வாழ்வு :*** (தானி. 1:8)

கி.மு. 605 இல் யூதா அரசர் யோயாக்கீம் மீது பாபிலோன் அரசர் போர் தொடுத்து அங்கிருந்த ஆற்றல் மிக்க இளைஞர்களைச் சிறைப்பிடித்துச் சென்றார். இவ்விளைஞர்கள் உடல் ஊனமற்றவர்களாகவும், அழகுமிக்கவர்களாகவும், அறிவில், ஆற்றலில் சிறந்தவர்களாகவும், அரச அரண்மனையில் பணியாற்றும் திறமை பெற்றவர்களாகவும் இருந்தனர் (தானி. 1:4). இவர்களது பெயர்கள் மாற்றப்பட்டு, புதிய மொழி கற்பிக்கப்பட்டது. புதிய கலாச்சாரம், அரச

உணவு என்று வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஆனாலும் யாவே கடவுள் நம்பிக்கையிலிருந்து அவர்கள் எவ்வளவும் விலகிச் செல்லவில்லை. எந்தத் தீமைகளும் தங்களைக் கெடுத்து விடாதபடி உறுதியாயிருந்தார்கள். இதனால் இவர்கள் வாழ்வில் ஏற்பட்ட சோதனையில் கடவுள் அவர்களோடு இருந்தார். அந்நிய நாடாகிய பாபிலோனில் யாவே கடவுள் உண்மையானவர் என்று பறைசாற்றப்பட்டது. (தானி. 3:29, 6:26, 27). இன்று கண்ணிற்கிமையாய் காட்சி தரும் வலைதளங்கள் (Websites) உயிரைப்பறிக்கும் போதைப் பொருட்கள், தவறான பழக்கவழக்கங்கள், பண்பாட்டைச் சிதைக்கும் கலாச்சாரங்கள் இவற்றில் மிகுந்த எச்சரிக்கையுடன் வாழ வேண்டும். வாழ வேண்டிய இளைஞர்களின் உயிரைப் பறித்துள்ள வலைதளங்களைப் பயன்படுத்துவதில் விழிப்புணர்வு தேவை. தீமைகளுக்கு நடுவிலும் தங்களைக் காத்து கொண்ட தானியேலைப் போல, யோசேப்பைப் போல (தொ.நூ. 39) ஒவ்வொருவரும் வாழ வேண்டும். இதனை தூய பவுலாரும் தீமோத்தேயு என்ற இளைஞருக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறார். (1 திமொ. 4:12).

## *2. அன்பு செய்து வாழும் வாழ்வு :*

பிற இனத்தவர் அனைவரும் மீட்பிற்குத் தூரமானவர்கள் என்பது யூதர்களுடைய சிந்தனையாகும். இயேசு கிறிஸ்துவின் சீடர்களுக்கும் இச்சிந்தனை இருந்தது என்பதனை கானானியப் பெண்மணியின் மகளுக்குச் சுகமருளிய நிகழ்வினூடாய் இயேசு கிறிஸ்து தெளிவுபடுத்தினார் (மத். 15:21-28). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் திருப்பணியை நிறைவேற்றி வந்த தூய பேதுரு போன்றோரிடமும் இப்பேர்ப்பட்ட சிந்தனை இருந்தது. அவ்வாறே ரோமர்களை வெறுத்திருந்த வேளையில், கடவுள் படைத்த அனைத்தும், அனைவரும் தூய்மையானவர்கள்; அவர்கள் மீட்பிற்குத் தூரமானவர்கள் அல்ல என்பதனைத் தூய பேதுருவுக்குக் காட்சி மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. இதனால் கொர்னேலியு என்ற நூற்றுவர் தலைவரின் பணியாட்களுடன் பேதுரு புறப்பட்டுச் சென்றார். யூத கிறிஸ்தவர்களால் மீட்பு பெறத் தகுதியற்றவர் என்று அறியப்பட்டிருந்த கொர்னேலியுவினுடைய வாழ்வின் தகவுகள் நோக்கற்பாலது. அவர் இறைப்பற்றுள்ளவர்; கடவுளுக்கு அஞ்சி நடந்தவர். இரக்கச் செயல் புரிபவர், இடைவிடாது மன்றாடி வந்தவர் எனத் திருமறை கூறுகிறது. (தி.ப. 10:2). இன்றும் பிற சமயத்தவர்களைக் குறித்தோ, அவர்களது நம்பிக்கைகளைக் குறித்தோ ஆழ்ந்து கற்றுக் கொள்ளாமல் அவர்களைக் குறைத்து மதிப்பிடுவதும், தவறாகச் சித்தரிப்பதுமுண்டு. ‘‘எழுந்திடும்; நானும் ஒரு மனிதன் தான்’’ என்று கூறிய தூய பேதுருவின் அறிக்கையை மனதில் கொண்டு அனைவரிடமும் அன்பு செய்து வாழ்வோம்.

### *3. சுவை தரும் வாழ்வு :* (மத். 13:31-33)

இன்றைய நற்செய்தி பகுதியில் இயேசு கிறிஸ்து கூறிய இரண்டு உவமைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்று சிறிய விதையாக இருந்தாலும், வளர்ந்து பலன் தருவதுடன், பல இனப்பறவைகளுக்கு அடைக்கலம் தரும் செடியாக வளரும் கடுகுவிதை. மற்றொன்று, பெரிய பானையில் இருக்கும் மாவு முழுவதையும் புளிக்க வைக்கும் கொஞ்சம் புளித்த மாவு. இந்த இரண்டு உவமைகளும் எந்த ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும் இல்லாமல் அமைதியாகச் செயல்படும் தன்மையை வலியுறுத்துகிறது. பானைக்குள் இருக்கும் புளிப்பில்லாத மாவைப் புளிப்பாக்கி சுவையான உணவாக மாற்றுவதற்குக் காரணமாய் செயலாற்றுகின்ற புளிப்பு மாவைப் போல கிறிஸ்தவ வாழ்வு சமூகத்திற்குச் சுவை தரக்கூடியதாக, பயன்தரக்கூடியதாக அமைய வேண்டும். அதே வேளை இதில் எந்த ஆர்ப்பாட்டமோ, ஆரவாரமோ தேவையில்லை. அதுவே உண்மையான சான்று வாழ்வாகும். இதைத்தான் பக்தர் ஒருவர் தம் பாடல் வரிகளில் "இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே..." என்று அழகாகப் பாடுகிறார்.

எனவே தீமைகளுக்கு ஒத்துப்போகாமல் நம்மைக் காத்துக்கொண்டு, அனைவரிடமும் அன்பைப் பகிர்ந்து, சமூகத்திற்கு பயன்தரும் வாழ்வு வாழ்வதுமே பல நம்பிக்கை கொண்டிருப்போரிடம் நமது உண்மையான சான்று வாழ்வாக அமையும்.

**அருள்திரு. அ. பிரைட் சாலமோன்**

03-09-2017

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதிமூன்றாம் ஞாயிறு
**கல்வி ஞாயிறு & ஆசிரியர்கள் நாள்**

## ஆசிரியர்கள் : விடுதலையின் பிரதிநிதிகள்

**TEACHERS : AGENTS OF LIBERATION**

நீதி. 8:1-12 | தி.ப. 8:26-38
தி.பா. 119:97-104 | மாற். 6:34-44

**"நீர் வாசிப்பதின் பொருள் உமக்குத் தெரிகின்றதா?... யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்து கொள்ள முடியும்?" தி.ப. 8:30,31**

நம் நாட்டில் செப்டம்பர் 5-ஆம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. நமது நாட்டின் இரண்டாவது குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த மாண்புமிகு சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளையே ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். ஒருமுறை அவரது மாணவர்கள் சிலர், அவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு அனுமதி கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார். "எனது பிறந்தநாளைத் தனிப்பட்ட முறையில் கொண்டாடுவதைவிட, அதையே ஆசிரியர் தினமாகக் கொண்டாடினால், நான் பெருமையாக உணர்வேன்" என்றார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க, கடந்த 1962-ம் ஆண்டு முதல் இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆசிரியரைக் குறிக்கும் Teacher என்ற வார்த்தைக்கு Telling Each Art Carefully Having Effective Result என்ற விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது, நல்ல விளைவு கிடைக்கும் என்ற நோக்கோடு, தான் கையிலெடுக்கும் ஒவ்வொரு கலையையும் கவனமாகச் சொல்லிக்கொடுப்பவர் தான் ஆசிரியர் என்பவர். ஆசிரியர் என்பது பணி அல்ல, ஒரு தொண்டு. மாணவர்களின் அறியாமை எனும் இருளை நீக்கி அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றுகின்றனர் ஆசிரியர்கள். எழுத்தறிவித்தவன் இறைவன், மாணவர்கள் கல் என்றால், ஆசிரியர்கள் சிற்பிகள் போன்ற பொன்மொழிகள் ஆசிரியர்களுக்குப் புகழ் சேர்க்கின்றன. மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் தான் ஆசிரியர்கள்.

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது என்பது உண்மை. தாய், தந்தையை விட, ஆசிரியரிடம் தான் ஒரு குழந்தை அதிக நேரம் செலவளிக்கிறது. எனவேதான், ஆசிரியர்கள் இரண்டாவது பெற்றோர் என அழைக்கப்படுகின்றனர். தன்னிடம் படிக்கும் மாணவர்களை, சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் மனிதனாக மாற்ற வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. மாணவருக்கு சமூகத்தில் கிடைக்கும் வெற்றிதான் கற்பித்த ஆசிரியரின் வெற்றி. வேறு எந்தத் துறையை விடவும் அதிகப் பொறுப்புகளும், அதிக முக்கியத்துவமும் நிறைந்தது ஆசிரியப் பணி. மாணவர்களுக்கு என்றென்றுமான ஊக்கமும், தன்னம்பிக்கையும் நன்னெறிகளும் அதிகம் தேவைப்படுகிறது.

ஆசிரியர்களுடைய பணியின் மதிப்பு அளவிடப்பட முடியாதது. ஏனெனில், ஒரு மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்துவது, மிருகங்களை மீறிய சிறப்புப் பண்புக்கூறுதான். அந்தச் சிறப்புப் பண்புக்கூறு சிறந்த கல்வியின் வழியாகவே கிடைக்கிறது. அந்த சிறந்தக் கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. மகா அலெக்ஸாண்டர் தன் ஆசிரியரான அரிஸ்டாட்டில் பற்றிக் கூறும்போது நான் வாழ்வதற்காக என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், நான் நன்றாக வாழ்வதற்காக என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றார். (I am indebted to my father for living, but to my teacher for living well). எனவே, ஆசிரியர்களை மதித்து, அவர்களுடன் நல்லுறவில் வாழ வேண்டும்.

ஒரு முறை அரிஸ்டாட்டில் தம் மாணவருடன் ஆற்றின் கரைக்கு வந்தார். மாணவர்களை கரையில் நிற்க வைத்தவர், “நான் ஆற்றின் அக்கரை வரையில் சென்று ஆற்றில் ஏதாவது சுழல்கள் உள்ளதா என பார்த்து வருகிறேன்” என்றார். அவர் ஆற்றில் செல்ல ஆயத்தப்பட்ட வேளையில், அவருடைய ஒரு மாணவர் தண்ணீரில் நீந்தி செல்வதைக் கண்டார். மறு கரை வரை சென்று திரும்பிய மாணவர், “குருவே, சுழல்கள் இல்லை. நாம் தைரியமாய் ஆற்றை கடக்கலாம்” என்றார். அந்த நிலையில் அரிஸ்டாட்டில், “உன்னை சுழல்கள் எடுத்து சென்றிருந்தால் என்னவாகி இருக்கும்” என்றார். அதற்கு அந்த மாணவர், “இந்த அலெக்சாண்டர் போனால், ஆயிரம் அலெக்சாண்டர்களை உருவாக்கும் வல்லமை உள்ளவர் நீங்கள். ஆனால் ஒரு அரிதான குருவை இழந்தால் நாங்கள் பரிதவித்துப் போவோம்” என்றார். இப்படி ஆசிரியர்-மாணவர் உறவு அமைவது நல்ல சமூகத்துக்கு புது ஆற்றலைத் தரும்.

ஆசிரியர் என்பவர் கடவுளின் பிரதிநிதி. ஆசிரியர் அல்லது குரு என்பவர் “இருள் அகற்றுபவர்” ஆவார். ஆசிரியர் கொடுக்கும் ஞான வாழ்வுக்கான போதனைகள் வாழ்வின் இருள் அகற்றி, விடுதலை வாழ்வுக்கு நேராக மனிதனை நடத்த வேண்டும். இயேசு கிறிஸ்து ஒரு நல்ல குருவாக இருந்து, தம்முடைய ஞானபோதனைகளைக் கேட்டு, பின்பற்றியவர்களை விடுதலை வாழ்வுக்கு நடத்தினார். இன்றைய திருமறைப் பகுதிகள் சார்ந்து எவைகளைக் கற்றுக்கொடுக்கவும், கற்றுக்கொள்ளவும் வேண்டும் என்ற சிந்தனைகளை ஆராய்வோம்.

### *1) விவேகத்தைக் கற்றுக்கொடுங்கள் :* (Teach prudence)

(நீதி. 8:1-12)

“முன்மதியற்றோரே! விவேகமாயிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்...” (8:5)

விவேகம் என்பதற்குப் பகுத்தறிவு, புத்திக்கூர்மை, மதிநுட்பம் என்று பொருள் கொள்ளலாம். மனிதர் பல தீமைகளில் சிக்குண்டு, அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய

நிலையில் வாழ்கின்றனர். இத்தகைய சூழலில் தீமையைக் குறைத்து நன்மையை நாடுவதே விவேகம் ஆகும். கடும்போட்டிகளும், சவால்களும் நிறைந்த உலகில் வெற்றி வாழ்வை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்களில் ஒன்று விவேகம். அடுத்து என்ன செய்வது? என்று எல்லாக் காலகட்டங்களிலும் தெளிவாக அறிந்து இருப்பதுதான் விவேகம். தெரிந்ததை, தெரியாததிலிருந்து பிரிக்கிறது விவேகம். அறிய வேண்டியதை அறியும். செய்யத்தக்கச் செயல்களையே செய்யும். கடலின் ஆழத்தில் முத்தைக்கண்டு பிடிப்பது போல பிரச்சனைகளின் ஆழத்தில் முடிவை, தீர்வைக் கண்டுபிடிப்பது விவேகம். ஒரு மனிதன் தான் செய்யும் செயலை, எப்போது? எப்படி? எங்கே? ஏன்? செய்கிறோம் என முதலில் சிந்திக்க வேண்டும். இந்த அறிவே விவேகம். எது சரி? எது தவறானது? எனச் சிந்தித்து முடிவு செய்வதே விவேகமாகும். விவேகம், ஞானம் என்கிற வெளிச்சமோ உற்சாகம் தருகிறது. அபரிமிதமான நம்பிக்கையைத் தருகிறது. விடியலைக் காண்கிறது. எனவே, விவேகம் என்பது ஞானத்தின் செயலாக்கம் ஆகும்.

பிரேசில் நாட்டில் விடுதலைக்கான கல்வி முறையை வடிவமைத்த பாலோ ஃபிரைரே என்பவர் வாழ்வுக்கான கல்விக்கு வழிகாட்டினார். கல்வி என்பது மனித உள்ளத்தை, பொருள் அல்லது பணம் போட்டு நிரப்பி, சேமிக்கும் ஒரு வங்கி முறையைப் போல அறிவைத் திணிக்கும் முறையாக மாற்றக்கூடாது. மாறாக, மனித பிரச்சனைகளை முன்வைத்து, விவாதித்து, மாணவர்களுக்கு அதிலுள்ள தொடர்பை, அதற்கு தீர்வு காணும் வழியைக் காட்ட வேண்டும். மனிதனின் உள்ளுணர்வைத் தெளிவுபடுத்தி, (Conscienti Busness) சரியானதைத் தெரிந்தெடுக்க வழிசெய்ய வேண்டும். கற்றுக் கொள்பவர்களும் கல்வியின் வழி தங்கள் வாழ்வுக்கான விடியலைக் காண விவேகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். விவேகம் காட்டும் வழியை விட்டு விலகிச் செல்பவர், செத்தாரிடையே தங்க விரைபவர் ஆவார் (நீதி. 21:16). அறிவும் சிந்திக்கும் ஆற்றலும் இணைந்து செயல்படும்போது கடவுள் தரும் ஞானம் விவேகமாய் செயலாக்கம் பெறும். கற்றுக்கொள்பவர் தான் வாழும் சூழலைக் குறித்த தெளிவான அறிவு பெற்று, சரியான வழியில் செயல்பட முடியும். இது மனிதனை விடுதலை வாழ்வுக்குக் கொண்டுவரும். எனவே, ஆசிரியர்கள், பேதையர்களான, முன்மதி இல்லாத மக்கள் விவேகமாயிருக்கக் கற்றுக்கொடுத்து, இருளின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கும் கருவியாக வேண்டும்.

### 2) தெரியாத உண்மையைக் கற்றுக்கொடுங்கள் :

(Teach the unknown truth) (தி.ப. 8:30, 31)

“நீர் வாசிப்பதின் பொருள் உமக்குத் தெரிகின்றதா?”... “யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்து கொள்ள முடியும்?” (தி.ப. 8:30, 31).

உண்மை என்பது வாய்மை, மெய்மை என்றும் அறியப்படுகின்றது. உள்ளத்தில் பொய்யின்றி வாழ வேண்டும். உள்ளத்தில் உள்ள உண்மை மாறாமல் பேச்சாக வெளிப்பட வேண்டும். உண்மையாய் வார்த்தை மாறாமல் செயல்பட வேண்டும். உண்மையால் மனிதர் தவறின்றி வாழ வேண்டும்.

கடவுள் மனிதனாக இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டதன் நோக்கமே மனிதனைப் பாவங்களில் இருந்து விடுவிக்கவே, சிறைப்பட்டோரை, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்ய கடவுள் தம் மைந்தர் இயேசுவை உலகிற்கு அனுப்பினார் என்பது தூய லூக்கா தரும் செய்தியாகும் (4:18). இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட விடுதலை திருமறையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து வாழ்வு கொடுக்கவே வந்தார் என்பது திருமறை நமக்குத் தரும் நற்செய்தியாகும். ஒவ்வொரு மனிதரும் அவரவர் இக்கட்டிலிருந்து விடுதலை பெற்றே ஆகவேண்டும்.

எத்தியோப்பிய நிதியமைச்சர் எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக்கொண்டிருந்த போது அதன் பொருள் தெரியாமல் படித்துக் கொண்டிருந்தார். தான் படித்த பகுதியில் அடங்கியிருக்கும் உண்மை என்ன என்று அவருக்குத் தெரியவில்லை. விளக்கிக் கூறவும், தெளிவு படுத்திக் கற்றுக்கொடுக்கவும் யாருமில்லை. ஆனால், பிலிப்பு ஓர் ஆசிரியராக வந்து, எத்தியோப்பிய நிதியமைச்சர் படித்தும் தெரியாத உண்மையைத் தெளிவாக விளக்கினார். விடுதலையாளராம் இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியாகிய மாபெரும் உண்மை அவருக்கு வாழ்வு கொடுத்தது. இயேசு கிறிஸ்துவில் நிலை வாழ்வு உண்டு என்ற உண்மையை அறிந்து கொண்டார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையை அறிந்தவர்களாய் இருக்க முடியும். அந்த உண்மை நமக்கு விடுதலை தரும் (யோவா 8:32).

இங்கு விடுதலை என்பது தீமையின் பயங்களில் இருந்தும், கலக்கங்களிலிருந்தும் வெளிவருவது ஆகும். ஒடுக்கப்பட்டவர்கள், அறியாமையினால் தீமைகளில் சிக்குண்டவர்களுக்கு அவர்கள் அறியாத உண்மையைக் கற்றுக்கொடுக்க வேண்டும். வாழ்வின் உண்மையான சூழலை அறிந்து, தீமைக்கு எதிர்த்தெழ அது உதவும். உண்மை வாழ்வோடுள்ள தங்கள் உறவை உறுதிப்படுத்தி, தங்களை உணர்ந்து, சொந்த விடுதலைக்காகப் போராட இந்த உண்மை வழிகாட்டும். இந்த விடுதலையை உண்மை கொண்டு வரும்.

தன்னுடைய பொய்யான செயல்களால் பணம் சம்பாதித்த விடுதிக் காப்பாளர் ஒருவர் கணக்கு வழக்குகளை ஒழுங்காக வைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அந்த ஆண்டில் கடைசியில் அவர்

கணக்குகளைச் சரிபார்த்த போது வரவும் செலவும் சரியாக வரவில்லை. எனவே, பொய்யான ரசீதுகளை மாற்றி மாற்றி எழுதிச் சேர்த்துப் பார்த்தார். கணக்கை முடிக்க முடியவில்லை. இதனால் மன அமைதி கெட்டது. தூக்கம் வரவில்லை, குற்ற உணர்வுடன் இருந்தார். முடிவில் உண்மையான ரசீதுகளை வைத்துக் கணக்கு எழுதினார். கணக்கு சரியானது, குழப்பம் நின்றது. பயத்திலிருந்து விடுதலை கிடைத்தது. அறிஞர் ஒருவர், "உண்மையைத் தேடு தளைகளிலிருந்து அது உன்னை விடுவிக்கும்" என்று கூறுகிறார். எனவே, ஆசிரியர்கள் கற்பவர்களுக்கு அவர்கள் அறியாத உண்மையைக் கற்றுக்கொடுத்து விடுதலைக்கு வழி காட்ட வேண்டும்.

### *3) மனநிறைவைக் கற்றுக் கொடுங்கள் :* (Teach Satisfaction)

(மாற்கு 6:34-44)

"...நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்..." (மாற்கு 6:37)

நிறைவு, மனநிறைவு, திருப்தி (Satisfaction or contentment) என்பது தாம் நினைத்த ஒன்றை சரிவரச் செய்தாலோ, இயற்கையாகவே நிகழ்வுகள் எதிர்நோக்கின்படி அமைந்தாலோ உண்டாகும் உணர்ச்சியாகும். இதற்கு மேல் எதுவும் தேவையில்லா நிலையினையும் திருப்தி எனக்கூறலாம். இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதே இன்பம். போதும் என்ற மனநிலை இல்லாவிட்டால் வாழ்வு துன்பமயமாகிவிடும்.

பசி என்பது இன்று மனிதனின் அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்றாக மேலோங்கி நிற்கிறது. கடந்த 25 ஆண்டுகளில் இந்தியாவில் ஊட்டச்சத்து விகிதத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், பட்டினிப் பிரச்சனை இன்னும் தீவிரமாக உள்ளது. நாட்டின் 15 சதவீத மக்கள் இன்னும் பட்டினியில் தான் வாடுகின்றனர். ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடான இந்தியா, பசி, பட்டினியால் வாடும் நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் 97-வது இடம் பெற்றுள்ளது. பொருளாதார உயர்வுக்கெனப் பல திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், பசி என்ற அடிப்படைப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாமல் இருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் விடுதலை என்பது ஒரு கனவாகவே இருந்து விடும்.

இன்றைய நற்செய்திப் பகுதியில் பசியும், பட்டினியும் ஒரு சமுதாயப் பிரச்சனையாக இயேசு கிறிஸ்து கொண்டு வருகிறார். ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தம் போதனையைக் கேட்க வந்திருந்த போது அவர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பைத் தம் சீடர்களிடம் கொடுக்கின்றார். கொஞ்சமானாலும் உள்ளதைப் பகிர்ந்து, மனநிறைவுடனிருக்க (திருப்தியாயிருக்க) வழி காட்டுகிறார். சிறுவன் தன்னிடம் இருந்த உணவைப் பகிர்ந்தான். அனைவரும் உண்டு மனநிறைவடைந்தனர் (மாற்கு 6:42). உணவு வைத்திருப்பவர்கள் இல்லாதவர்களோடு பகிர்வது அனைவருக்கும் மனநிறைவைத் தரும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இன்னமும் பசி, பட்டினி கொடுமை நீடிக்கிறது. அந்த அவலத்தைப் போக்க வேண்டும். பசி, பட்டினி இல்லாத புதிய உலகை உருவாக்க வேண்டும். உணவு போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான வளங்கள் பகிரப்படும்போது திருப்தியான வாழ்வு உண்டாகும். பகிரப்படவில்லையெனில், சுரண்டல்கள், கொள்ளைகள், ஏமாற்றுதல், கொலைகள் போன்ற குற்றச்செயல்கள் சமுதாயத்தில் அதிகரிக்கும். பிறரிடம் இருப்பது தனக்கு வேண்டும் என்ற மனநிலை மனநிறைவுக்கு எதிரானதாகும். அது வன்முறை சார்ந்த தீயச் செயல்களுக்கு மனிதனை இட்டுச்செல்லும். மனநிறைவு என்பது போதும் என்ற நிலையை உருவாக்கி, தீமைகளுக்கு விலக்கும். இறைப்பற்று மனநிறைவுள்வர்களுக்குத் தான் பெரும் ஆதாயம் தரும் என்பது தூய பவுலின் கூற்று (1 திமொ. 6:6). எனவே, தீமைகள் உருவாவதைத் தடுக்கவும், தீமைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் மனநிறைவைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

கற்றல் - கற்பிக்கும் என்ற சிந்தனையோடு அறப்பணியாகிய ஆசிரியப்பணி புரியும் ஆசிரியர்கள் சமுதாயச் சீர்கேடுகள் அழிக்கப்பட்டு, சமுதாயத்தைக் கட்டியிருக்கும் அடிமைத்தனங்கள் உடைக்கப்பட்டு, விடுதலை என்னும் வாழ்க்கை முறை அனைவரிலும் நிலைத்திட விவேகத்தையும், அறியாத உண்மையையும், மனநிறைவுடன் வாழும் முறையையும் கற்றுக்கொடுக்க வேண்டும். நாமும் இவைகளைக் கற்றுக்கொண்டு விடுதலையின் மக்களாய் வாழ முயற்சிப்போம்.

**அருள்திரு. T.P. சலீம் தங்க குமார்**

10-09-2017

பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினான்காம் ஞாயிறு &
**மகளிர் ஞாயிறு**

## மகளிர் : மாற்றத்தை உருவாக்குவோர்

**WOMEN AS CHANGE MAKERS**

எண். 27:1-11 திப. 16:11-15

லூக். 1:46-55 யோவா 4:27-30, 39-42

**"... நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார்." யோவா 4:39**

"மாற்றம் ஒன்றே மாறாதது" என்பது உலக வழக்குச் சொல். பெண்களால் ஒன்றும் செய்ய இயலாது, அவர்கள் பலவீனமானவர்கள், பெண்கள் அடங்கிதான் இருக்க வேண்டும் என்றெல்லாம் பெண்களைக் குறித்த தவறான எண்ணங்கள் எல்லாம் தற்போது மாறி இருக்கின்றன. பெண்களால் பல மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்பதற்கு தற்காலத்தில் பெண்களால் புரியப்படும் சாதனைகளே அதற்கு சான்றாக நிற்கின்றன.

2015-ம் ஆண்டு ஜனவரி, 26, குடியரசு தினவிழாவிற்கு சிறப்பு விருந்தினராக பங்குப் பெற்றவர், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா. இவர் டெல்லியில் வந்தபோது ஜனாதிபதி மாளிகையில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில் முப்படையின் சிறப்பு வரவேற்பாக (GUARD OF HONOUR) அணிவகுப்பு மரியாதை அவருக்கு அளிக்கப்பட்டது. பொதுவாக இந்த முப்படையை தலைமையேற்று நடத்துபவர் ஓர் ஆண் இராணுவ அதிகாரி ஆனால் இந்திய வரலாற்றில் முதன்முறையாக, இந்த சிறப்பு நிகழ்வில் விமானப்படை பெண் அதிகாரி விங் கமாண்டர் பூஜா தாகூர் இந்த முப்படை அணிவகுப்பை தலைமையேற்று வழிநடத்தினார். இது குறித்து பூஜா தாகூர் கூறும்போது... "உலகில் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் பெரும் சக்திவாய்ந்த படைகளின் தளபதியானவருக்கு (GUARD OF HONOUR) அணிபகுப்பு மரியாதை அளித்ததில் நான் பெருமையடைகிறேன்..." என்று கூறினார்.

இந்நிகழ்வு பெண்களால் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே என்பதில் ஐயப்பாடு இல்லை. பெண்கள் முடங்கி கிடந்த காலம் மாறி, "சீறி எழுந்தால் எரிமலையும் வழிவிடும்" என்ற மனநிலைக்கு வந்திருப்பதால், இன்று அநேக சமூக மாற்றங்களை கொண்டுவர இயலுகின்றது. எனவே பெண்கள் இத்தகைய சமூக, மாற்றங்களோடு இணைந்து, குடும்பம், திருச்சபை, தனிப்பட்ட வாழ்வு நிலைகளில் மாற்றம் கொண்டு வர பாடுபடுவது அவசியமானது.

மாற்றம் கொண்டு வர துணிந்து செயல்பட்ட 5 பெண்களை, பழைய ஏற்பாட்டுப் பகுதி **எண்ணாகமம் 27-ம் அதிகாரம்** காட்டுகின்றது. செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், நக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் தங்கள் தந்தைவழி தங்களுக்கு சேர வேண்டிய பங்கிற்காக துணிந்து போராடுகின்றார்கள். நல்ல ஒரு மாற்றமும் அவர்களால் உருவானது.

மாற்றத்தை உருவாக்கும் பெண்களாய் செயல்பட அழைப்பு பெற்றவர்கள், மூன்று உண்மைகளை நினைவில் பதித்துச் செயல்படுதல் அவசியமானது.

## 1. இறை அன்பினால் மாற்றத்தை உருவாக்குவோம்

ஆங்கில குறுஞ்செய்தி ஒன்றின் வரிகள் இங்ஙனம் சொல்லுகின்றது.

| | | |
|---|---|---|
| BIRTH | - | Given by others... |
| NAME | - | Given by others... |
| EDUCATION | - | Given by others... |
| INCOME | - | Given by others... |
| RESPECT | - | Given by others... |
| FIRST and LAST BIRTH | - | Given by others... |
| FUNERAL SERVICE | - | Given by others... |

இந்த குறுஞ்செய்தி இங்ஙனம் நிறைவு பெறுகிறது. "Let us all simplify our life and love and live with others pacefully" மாற்றத்தை உருவாக்கும்போது அந்த மாற்றத்தின் வேகத்தில் அன்பு அழிந்துவிடக் கூடாது. குடும்பங்களில் மாற்றம் தேவை தான் இனி நான் இப்படி இருக்கப் போவதில்லை. இனியும் நான் சகித்து கொண்டிருப்பதில்லை என்றெல்லாம் கூறி மாற்றம் செய்வதாக நினைத்து அன்பை தொலைத்துவிடுகின்றோம். தூய பவுலடிகளார் கூறும்போது... "அன்பு சகலத்தையும் தாங்கும்" (1கொரி. 13:7) என்று கூறுகின்றார். வாழ்வில் வரும் போராட்டங்களையும், நெருக்கங்களையும் தைரியமாய் எதிர்கொண்டு இறையன்பை பிரதிபலித்தே மாற்றத்திற்காய் உழைப்பது அவசியம். செய்ய விரும்பும் மாற்றத்தால் உறவுகள் உடைந்துபோகும் நிலை வராமல் பார்ப்பதில் கவனம் தேவை.

உறவுகள் உடைந்து போகாமல் மாற்றம் உருவாக்கிய அல்லது தன் வாழ்வில் மாற்றத்தை பெற்ற ரூத் நல் உதாரணம். வாழ்வின் கடுமையான சூழலிலும் தன் மாமியாரை விட்டுவிட்டுப் புறப்படவில்லை, அவர் உடனிருந்தார். அவர் வார்த்தைகள் அவ்வுறவின் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு (ரூத். 1:15-17). ரூத்தின் இந்நிலையை தனிப்பட்ட ஒரு நபருக்குக் கொடுக்கும் அன்பின் வெளிப்பாடாக அல்ல, ஓர் உறவுக்கு கொடுக்கும் அன்பின் வெளிப்பாடாகப் பார்ப்பது அவசியம். ரூத் தன் வாழ்வில் சிறந்த மாற்றத்தை, புதுவாழ்வைச் சொந்தமாக்கினார்.

## 2. இறை ஆற்றலினால் மாற்றத்தை உருவாக்குவோம்

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு..." (பிலி. 4:13) என்று பவுலடிகளார் கூறுகின்றார். தனக்கு எல்லா நிலையிலும் ஆற்றல் தருகின்றவர் கடவுள் என்பது அவர் வார்த்தையில் வெளிப்படும் தெளிவு. கடவுள் ஒருவரே நல்ல ஆற்றலை எல்லாச் சூழல்களிலும் தந்து நாம் விரும்பிய மாற்றத்தை செயல்படுத்த உதவுவார் என்ற புரிதல் அவசியமானது. "மருத்துவச்சிகளோ, கடவுளுக்கு

பயந்ததினால், எகிப்தின் அரசர் தங்களுக்கு சொன்ன கட்டளைப்படி செய்யாமல் ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்…" (வி.ப. 1:17) சிப்பிராள், பூவாளுக்குக் கொடுக்கப்பட்ட அரசக்கட்டளை "…ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள்…" இந்த கட்டளையை எதிர்க்கும் ஆற்றல் அவர்களுக்கு கடவுளால் தரப்பட்டது. காரணம் அவர்கள் கடவுளுக்குப் பயந்தவர்கள்…இன்று மாற்றத்தை செய்ய விழையும் போது, போதுமான மாற்றத்தை உருவாக்க அதிக அறிவு, அதிக ஆற்றல், அதிக அழகு, அதிக திறமை எனக்கிருக்கிறது என்பதை விட, கடவுள் பயத்தோடு அவர் தருகின்ற ஆற்றலோடு மாற்றத்தை உருவாக்க முயல்வது, நல்ல மாற்றங்களோடு நமக்கும் அது ஆசீர்வாதமாய் அமையும்… மருத்துவச்சிகள் இதைச் சொந்தமாக்கினார்கள். வி.ப. 1:21b-ன்படி "…அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்…".

## *3. இறை அர்ப்பணிப்பினால் மாற்றத்தை உருவாக்குவோம்*

நற்செய்திப் பகுதி (யோவான் 4:8-30, 39-42) இயேசு நாதர் சமாரியப் பெண் சந்திப்பை விளக்குகின்றது. இயேசு நாதர் கொடுக்க விரும்பிய ஜீவ தண்ணீரைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாகிறார் சமாரியப் பெண். ஆனால் அவரின் ஆரம்பநிலை வார்த்தையில் முழுமையான அர்ப்பணிப்பு வெளிப்படவில்லை. "நான் இங்கே மொண்டுகொள்ள வராமலிருக்கும்படி…" (4:15) தனக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்… அவரின் அர்ப்பணம் உலகம் சார்ந்த நிலையில் அமைந்தது. பின்னர் இயேசு நாதரின் வார்த்தைகளால் அதிகமாய் ஆட்கொள்ளப்பட்டாள். இப்போது சுயநலமான உலக சிந்தையை விடுத்து, தன் ஊருக்குள் சென்று அவரை அறிவித்தார். அந்த ஊர் அவர் வழியாய் இயேசு நாதரைச் சந்தித்தது (யோவான் 4:39) மாற்றம். தன் கணவன், தன் பிள்ளைகள் என்ற குறுகிய நிலையில் சுயநலமாக யோசிப்பது அல்ல, நம்மைச் சார்ந்தவர்களும் நாம் கடவுளால் பெற்ற நல்ல மாற்றத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று நினைப்பதும், செயல்படுவதுமே முழுமையான இறை அர்ப்பணம். இதையே கடவுளும் எதிர்பார்க்கின்றார்.

**அன்னை தெரசா அவர்களின் வார்த்தைகள் "உலகின் பிளவு, குடும்பத்தில் ஆரம்பிக்கிறது".** இன்று குடும்பத்தில் விழுகின்ற விரிசல்களின் வழியாய் பல பிளவுகளை திருச்சபையும், சமூகமும் சந்திக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட விரிசல்கள் குடும்பங்களிலிருந்தால் அதை மாற்றியமைக்கும் பொறுப்பு பெண்களுக்குத் தரப்படுகின்றது. இறை அன்போடு, இறை ஆற்றலோடு, இறை அர்ப்பணிப்போடு செயல்பட்டு, நல்ல மாற்றங்களை கொண்டு வரும் கருவிகளாகச் ஜெபத்தோடு செயல்படுவோம்.

**திருமதி. லலிதா தேவகடாட்சம்**

| 17-09-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினைந்தாம் ஞாயிறு |
|---|---|

# அமைதியும், முரண்பாட்டுத் தீர்வும்

**PEACE AND CONFLICT RESOLUTION**

| | |
|---|---|
| தொ.நூ. 13:2-12 | தி.ப. 6:1-6 |
| தி.பா. 16 | மத். 20:1-16 |

**"...எங்களோடு இவர்களையும் இணையாக்கிவிட்டீரே." மத். 20:12**

மத். 5:9-ல் அமைதிக்காகச் செயலாற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். அவர்கள் இறை மக்கள் எனப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. மோதல்கள் எழும் சூழல்களைக் கண்டறிந்து அவற்றை ஆராய்ந்து அமைதிக்கான முயற்சிகள் மேற்கொள்வது இறைமக்களின் இயல்பாகும். இன்று உலகில் நிலவி வரும் அமைதியற்ற சூழல்கள் பல்வேறு காரணங்களை உள்ளடக்கியது. சமயம், கல்வி, பொருளாதாரம், சமூகம் ஆகியவை அவற்றுள் சில, அத்தகைய காரணிகள் உருவானதின் நோக்கம் மறந்து செயலாற்றும் பொழுது அமைதியற்ற சூழல் உருவாகிறது. விவிலியம் இதைக் குறித்து தெளிவாக எடுத்துரைக்கிறது. அமைதி மற்றும் மோதல் தவிர்த்தல் அதன் மேன்மைகள் சார்ந்த மூன்று நிலைகளை விவிலியம் சார்ந்து தியானிப்போம்.

## *1. செல்வம் தந்த சிரமம் :* (தொ.நூ. 13:2-12)

இறையழைப்பு பெற்ற ஆபிரகாம் தனது சகோதரரின், மகன் லோத்து இருவருக்குமுரிய உடமைகள் மற்றும் கால்நடைகளோடு எகிப்திலிருந்து கானானுக்கு பயணம் புறப்பட்டார். (தொ.நூ. 13:13). ஆபிரகாமும், லோத்தும் மிகப்பெரிய செல்வந்தர்களாக விளங்கினர். அரேபிய மேய்ப்பர் சமுதாயத்தில் குறைந்தது 100 முதல் 200 கூடாரங்கள், 60-100 ஒட்டகங்கள், 1000 ஆடுகள், 1000 செம்மறி ஆடுகள், தங்கம், வெள்ளி, வேலையாட்கள் உடைய மனிதரே செல்வந்தர் என கருதப்பட்டார். ஜோசிபஸ் எனும் திருமறை வரலாற்றாசிரியர், ஆபிராமின் உலகியல் ஆசீர்வாதத்தின் ஒரு பகுதி அவர் எகிப்தியர்களுக்கு கலை மற்றும் அறிவியல் கற்பித்தலினால் உருவான வருவாயின் விளைவாகும் என கூறுகிறார். மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும் போது ஆபிராமும், லோத்தும் மிகப்பெரிய செல்வந்தர். ஆகவேதான் பெத்தேலில் அவர்கள் மந்தைகள் மேய்ச்சலில் ஈடுபடுவதற்கு போதுமான இடம் இல்லாமற் போயிற்று. இடமில்லாததற்கு மற்றுமொரு காரணமும் கூறப்படுகிறது. கானானியர் போன்றோர் அந்த பகுதியில் வாழ்ந்து, குறிப்பிட்ட பகுதிகளை பயன்படுத்தி வந்ததால் போதிய இடம் இல்லாமற் போயிற்று. விளைவாக இவரது வேலையாட்களிடையே மோதல்

வாக்குவாதம் உருவாயிற்று. இங்கு மோதலின் காரணிகள் போதிய இடமின்மை, செல்வத்தின் சுமை ஆகும். செல்வத்திற்குரிய எபிரேய வார்த்தை 'சுமை' என்பதாகும். திரளான ஆஸ்தி தனிப்பட்ட மற்றும் குடும்ப அமைதியை கெடுத்துவிடும். செல்வத்தை பாதுகாப்பது ஒரு சுமை, அதை குறித்த பயம் ஒரு சுமை, இழந்துவிட்டால் ஒரு சுமை, உருவாக்கியதில் ஏற்பட்ட குற்ற உணர்வு ஒரு சுமை. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆக, பொருள் ஆசீர்வாதங்கள் அடிக்கடி தார்மிக மற்றும் ஒழுக்க நெறிகள், மக்கள் தொடர்பு ஆகியவற்றில் குழப்பங்கள், பின்னடைவுகளை ஏற்படுத்தும். மட்டுமல்ல சச்சரவுகள், மோதல் என விரிவடையவும் வாய்ப்பு உண்டு. ஆனால் அத்தகைய தருணங்களில் முன்கூறாக தடுப்பு நடவடிக்கை என்பது அவசியம். ஒருபுறம் நட்பு மற்றும் எல்லைகள் உடைபட்டன. மறுபுறம் இருகுடும்ப உறவு, அமைதி சீர்குலைந்து போட்டி ஏற்பட்டது. ஆபிராம் தடுப்பு நடவடிக்கையாக பிரிவு ஏற்படுதலின் அவசியத்தை உணர்ந்தார். ஆபிராம் வயதில் மூத்தவர், கோத்திரத் தலைவர் ஆயினும் லோத்துவை தனக்கு சமமாகப் பாவித்து அமைதி முயற்சியில் ஈடுபட்டார். தனது சகோதரன் மகனுக்கு விட்டுக்கொடுத்து பரந்த மனப்பாங்கை நிலைநாட்டினார். அமைதிச் சீர்குலைவு விட்டுக் கொடுத்தலில் முறியடிக்கப்பட்டது. போட்டி மனப்பாங்கு, பழிவாங்குதல் அமைதி குறைவுக்கு வழிவகுக்கும். கூடி வாழ்ந்தால் ஏற்படும் இயல்பான மோதல்கள் தவிர்க்க பிரிவு முறை கையாளப்பட்டது. மோதலால் சண்டையிட்டுப் பிரிவது, தவிர்க்கப்பட்டு பிரிந்து ஒற்றுமையுடன் வாழ வழிகாட்டினார். எதிர்கால நட்பு பேணிக் காக்கப்பட்டது. அன்பு வார்த்தைகள், தாராள குணம், உண்மை உள்ளத்தை வெளிக்காட்டியது. விளைவு - நீடித்த அமைதி, உறவு, பாதுகாப்பு, கடவுள் அமைதிக்காய் முயற்சி செய்பவர்களுடன் இருக்கிறார். ஆனால் அமைதிக்கான வழிமுறைகளாக தியாக உள்ளம், பொது நலனில் அக்கறை போன்றவற்றை நாம் உடைமையாகக் கொள்ள வேண்டும்.

## 2. பொறுப்புகளின் பகிர்வும் பிரிவினைகளின் தகர்வும் :

(தி.ப. 6:1-6)

வேகமாக வளர்ந்து வந்த திருச்சபையில் ஒரு விவாதம். கிரேக்க மற்றும் எபிரேய மொழி பேசும் சீடர்களுக்கிடையில் கைம்பெண்களுக்கு பொருளுதவி கொடுப்பதில் தகராறு. யூத மற்றும் கிரேக்க தொடர்பு அலெக்சாண்டர் படையெடுப்பு முதல் ஏற்பட்டது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அவர் யூதர்களை அலெக்சாந்திரியா மற்றும் தெபாயிஸ் போன்ற பட்டணங்களில் குடியேற்றினார். யூதர்கள் எகிப்திலிருந்து படிப்படியாக ஆப்பிரிக்காவின் மத்திய கடற்கரை வரைக்கும் பரவினார்கள். பின்னாளில் செலூ ஷியா நிகேடர் என்பவரால் பாபிலோனிலிருந்து ஆயிரக்கணக்கில் வெளியேற்றப்பட்டு அந்தியோகியா

மற்றும் செலூக்கியாவுக்கு அனுப்பப்பட்டனர். Antiochus Epiphanes என்பவரால் மேலும் துன்புறுத்தப்பட்டபடியால் ஆசியா மைனர், கிரீஸ், மாசிடோனியா மற்றும் ஏகன் தீவுகளில் சிதறி வாழ்ந்தனர். சிதறி வாழ்ந்தவர்கள் எபிரேய மற்றும் அரமேய மொழிக்கு பதிலாக கிரேக்க மொழி பேசினர். கிரேக்கம் மற்றும் புற இனத்தவர் கலாச்சாரத் தாக்கமும் ஏற்பட்டது. ஆகையால் இவர்கள் 'Helline' அல்லது 'கிரேக்கர்' என்று புதிய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டனர். (உரோ. 1:16). இவர்கள் வெளிநாடுகளில் வளர்ந்த யூதர்கள் ஆதலால் புற இனத்தவர்களுக்கு இணையாகக் கருதப்பட்டனர். எபிரேயர்களோ அரமேய மொழிபேசினர். யூத சமயம் மற்றும் பண்பாடுகளை கைக்கொண்டு வந்தனர் (பிலி. 3:5; 2கொரி. 11:22). திருமறைப்பகுதியில் கூறப்பட்டுள்ள மோதல் உதவி வழங்குவதில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு ஆகும். கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் எருசலேம் திருச்சபையை சேர்ந்தவர்கள். விதவைகள் ஆலயப் பொது நிதியிலிருந்து உதவி பெற்று வந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறிய பின்பு தேவைக்கான ஆலய பொது நிதி உதவி ஒதுக்கப்படவில்லை. இதனால் திருச்சபையில் இரு பிரிவினருக்கிடையே சலசலப்பு எழுந்தது.

ஏற்கனவே கலாச்சார அடிப்படையில் இரண்டாம் தர குடி மக்களாக கருதப்பட்ட கிரேக்க மொழி பேசும் யூதர்கள் நிதி ஒதுக்கீட்டில் வேறுபாடு நிலவியதால் முறுமுறுத்தார்கள். அன்றாட விசாரணையில் தங்கள் கைம்பெண்கள் கைவிடப்பட்டதால் கவலையடைந்தனர். இந்த குழப்பம் வளர்ந்து வரும் திருச்சபை நலனுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. திருத்தூதர் கவனத்திற்கு கொண்டு சென்றதன் விளைவாக உலகியல் சேவைகளை முன்னின்று நடத்துவதற்கு ஏழு பேரை தேர்வு செய்தனர். (6:3). அவர்கள் இறைவேண்டலிலும், இறை வார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம் என்று கூறினர். (6:4). திருத்தொண்டர் அருட்பொழிவு பெற தகுதியுள்ளவர்களாக - ஜனங்கள் மத்தியில் நற்சாட்சி ஆவியால் நிரப்பப்படுதல், ஞானத்தின் நிறைவு ஆகிய நற்பண்புகள் வேண்டுமென கருதினர். நிறுவப்பட்ட திருத்தொண்டர் அலுவலகப் பொறுப்பு மற்றும் அதிகார பகிர்வுக்கு வழிவகுக்க வேறுபாடுகள் அகன்று உயர்வு தாழ்வு அற்ற சமத்துவ சமுதாயம் உருவாக அடித்தளம் அமைக்கப்பட்டு இணைந்து செயலாற்றுதலால் ஏற்படும் பங்களிப்பு உணரப்பட்டது. வேலைப் பகிர்வு முறை பணிச்சுமை அகல உதவியது. பிரிவினை உணர்வுகள் நீங்கியது. பணியமர்த்தப்பட்ட ஏழு திருத்தொண்டர்கள் அனைவரும் கிரேக்க மொழி பெயர்களை உடையவர்கள். இவர்களை சபையார் தெரிந்தெடுத்தனர். ஆவியின் அருட்பொழிவுடன் பணியமர்த்தப்பட்ட திருச்சபையின் பிரிவினைகள் நிரந்தரமாக மாறிட தூய ஆவியாரின் அருள் திருத்தூதரின் பொறுப்புகளை பகிர்ந்திடும் பரந்த மனப்பாங்கு உதவின. பொறுப்புகள் பகிர்தல் பணிச் சுமை அகன்று நியாயம் நீதி நிலைநாட்டப்படவும், அமைதி மற்றும் சீரான நிர்வாகம் மலர்ந்திடவும் வழி பிறந்தது. இதனால் தவிர்க்கப்பட்டது.

### 3. கூலி பெறுவதில் எழுந்த மோதல் : (மத். 20:1-16)

இயேசு கூறிய இந்த உவமை தோட்ட வேலைக்கு அழைக்கப்பட்ட வேலையாட்கள் கூலி பெறுவதில் எழுந்த மோதல் குறித்து விளக்குகிறது. கிருபையளிப்பதில் அல்லது தகுதிப்படுத்துவதில் கடவுள் எவ்விதம் நடந்து கொள்கிறார் என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது. தோட்டக்காரர் ஒருவர் தோட்ட வேலைக்கு ஆட்களைம் தேடிச் சென்றார். பாரசீக வழக்கப்படி ஜனங்கள் அதிகாலை முதல் குறிப்பிட்ட இடங்களில் வேலை வாய்ப்பிற்காய் காத்திருப்பர். சந்தைவெளி என்பதைப் பலநிலைகளில் புரிந்து கொள்ளலாம். அது கிரேக்கர்கள் கூடுமிடமாகவும், உரோமையர் கருத்துக்களை பரிமாறுமிடமாகவும், சந்தை கூடுமிடமாகவும் விளங்கியது. இங்கு நிற்பவர்கள் சோம்பேறிகள் என்றும் வேலைத்தேடுபவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். தோட்டக்காரர் அதிகாலை வேளையில் வந்து வேலைக்கு ஆட்களை அழைத்துச் சென்றார். நியாயமான முறைப்படி ஒருநாள் கூலியாக ஒரு வெள்ளிக்காசு என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருபிரிவும் ஒப்புக்கொண்டனர். வேலை தொடங்கியது மீண்டும் தோட்டக்காரர் 9 மணி, 12 மணி, பிற்பகல் 3 மணி, மாலை 5 மணிக்கும் சென்று வேலைக்கு ஆட்களை அழைத்து வந்தார். அவர்களிடம் நியாயமான ஊதியம் அளிக்கப்படும் என உறுதியளித்தார். 1 வெள்ளிக்காசு 1 உரோமைக் காவலரின் ஒருநாள் ஊதியத்திற்குச் சமம். மேலும் கிரேக்க திராக்மாவுக்கு சமமாகும். மாலையில் கூலி வழங்கும் நேரத்தில் அனைவருக்கும் சமமான ஊதியம் அளித்தார். முதலில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வேலையாட்கள் தோட்டக்காரரிடம் முறையிட்டனர். ஆனால் தோட்டக்காரர் தனது கொடையின் நோக்கம் மற்றும் நியாயம் குறித்து விளக்கினார். அனைவரும் அவர்களுக்கு வாக்கு கொடுக்கப்பட்டபடி/ஒப்பந்தபடி கூலிபெற்றனர். அதற்கு மேலும் கொடுப்பது என்பது தோட்டக்காரரின் ஈகை ஆகும். இந்த உவமையில் பல இறையியல் உண்மைகள் பொதிந்துள்ளன. ஆண்டவர் பார்வையில் அக்கறை, உதவி போன்ற பரந்த மனப்பாங்கு அடங்கியுள்ளது. புற இனத்தவர், யூதர்கள், கிரேக்கர்கள், முதலில் நற்செய்தியை ஏற்றுக் கொண்டவர்கள், நற்செய்திக்கு உதவியவர்கள், அல்லாதவர்கள் போன்ற வேறுபாடுகள் அகன்றது. கடவுள் தேடிவந்து தகுதிப்படுத்துகிறார். இரண்டாவது மற்றும் பின்பு அழைக்கப்பட்டவர்கள் சந்தை வெளிக்கு உரிய நேரத்தில் கூட வர இயலாதவர்கள் (வந்திருந்தால் முதல் முறையிலேயே பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பர்). தோட்டக்காரர் அதையும் மன்னித்தார். மேலும் முதலில் வேலையில் சேர்ந்தவர்கள் தங்களுக்கு குறைவாக கொடுக்கப்பட்டது என்று குறை கூறவில்லை. மாறாக, மற்றவர்கள், அதாவது தாமதமாக வந்தவர்கள், குறைவான நேரம் வேலை செய்தபடியால் குறைவான கூலி பெறவேண்டும் என விரும்பினர். இறை எதிர்பார்ப்பின் உண்மை நிலவரம் புரிந்து கொள்ள இயலாததால் பல

மோதல்களும், குழப்பங்களும் ஏற்படுவதுண்டு. 'நன்பனே' என்று அழைத்த தோட்டக்காரர் கடவுளின் நீதி குறித்து விளக்கினார். கடவுள் பார்வையில் முதலில் வந்தவர், இறுதியில் வந்தவர் என்ற வேறுபாடு இல்லை. யூதர் - புற இனத்தவர் என்ற பாரபட்சம் இல்லை. அநீதியில்லை ஆனால் கிருபை உண்டு. ஒப்புக்கொண்ட கூலி அளிப்பது நியாயம். ஆனால் அடுத்தவர்களுக்கும் சம அந்தஸ்து அளிப்பது அவரது ஈவு, கிருபை. இரக்கம், கிருபை போன்றவை சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட்டால் மோதல் தவிர்க்கப்பட்டு, அனைவரும் இறையரசுக்காய் இணைந்து பணியாற்ற முடியும்.

மோதல்கள் பல விதங்களில் பல காரணங்களால் உருவாகி அமைதிச் சீர்குலைவுக்கு வழிவகுக்கிறது. செல்வ மிகுதி, குடும்ப மற்றும் மனிதருக்கிடையில் அமைதி குலைவிற்கு வழிவகுக்கும். ஆனால் தாராள மனதுடன் விட்டுக்கொடுத்து அமைதிக்காய் முயற்சித்தால் ஒற்றுமை ஏற்படும் என்பது ஆபிரகாம் லோத்து சமாதான பகிர்வு மூலம் புரிந்து கொள்ளலாம். இன்றும் சிலவேளைகளில் பணிச்சுமை சேவை செய்வதன் வாய்ப்புகளை மழுங்கடித்து விழுகிறது. திருத்தூதர்கள் போன்று பொறுப்புகளை பகிர்ந்து அளிக்கும்போது நியாயமான நிர்வாகம் அமைந்திடவும், அமைதி, மகிழ்ச்சி ஏற்படவும் வழிவகுக்கும். இறுதியாக கடவுள் சித்தம் அருள் பொதிந்த ஒன்று. அனைத்து பாரபட்சங்களுக்கும் அப்பாற்பட்டது. அதை உணர்ந்து கடமைகளை நிறைவேற்ற முனையும்போது அனைவரும் வாழலாம். ஏற்றத் தாழ்வுகள் அகலும் என்ற உண்மையும் புலப்பட்டது. அமைதி கடவுளின் அன்புக் கட்டளை. அனைவரும் அதைத் தேடி மோதல் தவிர்த்து வாழ இறைவன் அழைக்கிறார்.

**அருள்திரு. முனைவர் M. ஜஸ்டின் மோசஸ்**

| 24-09-2017 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினாறாம் ஞாயிறு & **முதியோர் ஞாயிறு** |
|---|---|

## முதுமையில் நற்பலன்கள்

**FRUITFULNESS OF THE ELDERLY**

தொ.நூ. 17:1-8 பில. 1:8-22
தி.ப. 92 மத். 7:13-20

**"எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன்".**
**தொ.நூ. 17:5**b

மனித வாழ்வில், குழந்தைபருவம், இளமை பருவம், முதுமை பருவம் ஆகிய பருவநிலை வளர்சிகளை மனிதன் சிந்தித்துதான் ஆகவேண்டும். இதில் முதுமை பருவம் வளர்ச்சி, அனுபவம் நிறைந்த பருவம் 1999 ஆம் ஆண்டை 'முதியோர்' ஆண்டான ஐ.நா. சபை அறிவித்தது. ஏனெனில் இன்றைய சூழலில் முதியோர் சமூகத்தில் முக்கியப்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். முதியோர் தங்கள் வாழ்வில், எப்படி நற்பலன்கள் கொடுக்க முடியும் என்பதை சிந்திப்போம்.

### *1) இறையுறவில் நிலைத்திருக்கும் முதியோர் :*

கடவுள் ஆபிரகாமுக்கு முதிர்ந்த வயதில் தரிசனமாகி, உனக்கும் எனக்கும் இடையே ஓர் உடன்படிக்கையை நான் ஏற்படுத்திக் கொள்வேன்; உன்னை மிக மிக பெருகச் செய்வேன் என்றார். ஆபிரகாம் அவரை பணிந்து வணங்கினான் (தொ.நூ. 17:1-3). கடவுளின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளவும், பின் சந்ததியார் அதை கண்டு மகிழவும், இறையுறவில் நிலைத்திருப்பது மிக முக்கியம். ஆபிரகாம் தனக்கும் கடவுளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை, உறவை உறுதிபடுத்திக் கொண்டான். தொ.நூ. 12:1-4-ல், ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு செல் என்ற போது, தனக்கு பழக்கமான இடத்தை விட்டு சற்றும் நகரமாட்டேன் என்றல்ல, இறை அழைப்பிற்கும் அடிபணிந்து எந்த இடம் என்று கேள்வி கேட்காமலே இறை நம்பிக்கை மிகுதியால், புறப்பட்டு போனார். (எபிரேயர் 11:8). தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டு சென்றார். ஆபிரகாம் இறைதிட்டத்திற்கும், இறைவிருப்பத்திற்கும் இசைந்து வாழ்ந்தார். ஆண்டவர் தம் விருப்பத்திற்கு இணைந்து வாழ்வோரிடம், இறையுறவில் நிலைத்திருப்போரிடம் உடன்படிக்கை செய்கிறார். (தொ.நூ. 15:6, 7). ஆபிரகாம் தான் சென்ற இடமெல்லாம் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து, பணிவோடும், பக்தியோடும் தொழுது கொண்டான். அவர் கடவுளோடு உடன்படிக்கையின் பாத்திரவானாய் நடந்து கொண்டு, இறையாசிக்கு காரணமாய் திகழ்ந்தார்.

## 2) இறையாசியை வெளிபடுத்தும் முதியோர் :

இஸ்ரயேல் சமூகத்தில், முதியோர் வழங்கும் ஆசீர்வாதத்தை மிக சிறப்பானதாக கருதினர். கடவுள் ஆபிரகாமிடம், நீ என் குரலுக்கு செவி கொடுத்ததினால், உலகின் அனைத்து இனத்தவரும், உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக் கொள்வார். (தொ.நூ. 22:18). இறையாசீர்வாதம் வரும் தலைமுறைகள் தொடர ஆபிரகாமின் வாழ்வு காரணமாகிறது. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை ஆசீர்வதித்தார். ஈசாக் தன் முதிர்வயதில், தன் மகன் யோக்கோபை ஆசீர்வதித்தார் (தொ.நூ. 27:27-29). தொ.நூ. 48:8-16 வரை படிக்கும்போது, யோசேப்பையும் அவன் பிள்ளைகளையும், ஆசீர்வதிக்கும் போது, "என் தந்தையரான ஆபிரகாமும், ஈசாக்கும் எந்த கடவுள் திருமுன் நடந்து வந்தனரோ, அந்த கடவுளே என் வாழ்நாள் முழுவதும் என்னை வழிநடத்திவந்தார் என்று கூறி, முற்பிதாக்களின் வாழ்வில் செயல்பட்ட கடவுளின் பெயரால் ஆசீர்வதித்தார்.

முதியோரின் ஆசீர்வாதம் இளந்தலைமுறைக்கு தேவை. முதியோர், ஆபிரகாமை போல ஆசீர்வாத்தின் வடிகாலாய் திகழ வேண்டும். தங்கள் பிள்ளைகளை ஆசீர்வாதத்தின் பாதையிலே நடத்த வேண்டும். முதியோர், முதுமைபருவத்தில் தங்கள் பிள்ளைகளை சாபமிடுபவர்களாக அல்ல, கடவுளின் பெயரால் மனதார ஆசீர்வதிப்பவர்களாக வாழ்ந்து, இளந்தலைமுறையை வழிநடத்த வேண்டும்.

## 3) இயல்பான மனித உறவு தொடர வழிகாட்டும் முதியோர் :

இஸ்ரயேலர் சமூகத்தில் முதிர்வயது என்பது கடவுளின் கட்டளைகளை ஏற்று வாழ்வதால் கிடைக்கும் பெரும் ஆசி என நம்பினர். (இ.ச. 30:19-20). இஸ்ரயேலர் கடவுளை குறிப்பிடும் போது, ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என முற்பிதாக்களின் பெயரோடு இணைத்து கடவுளை அழைத்தனர். ஏனெனில் முற்பிதாக்களின் வாழ்வு, மற்றவர்களுக்கு விழிகாட்டுதலாக அமைந்தது.

(தொ.நூ. 13:7, 8, 3) படிக்கும் போது, ஆபிரகாமின் மேய்பருக்கும், லோத்தின் மேய்பருக்கும் இடையே தகராறு எற்பட்டு, பிரச்சனையும் பகையும் உருவாக கூடிய சூழலில், ஆபிரகாம் லோத்துவிடம் நமக்குள்ளும், நம் மேய்பருக்குள்ளும் வாக்குவாதம் வேண்டாம். ஏனெனில், நாம் சகோதரர்கள் / உறவினர்கள். நீ வலது பக்கம் போனால், நான் இடது பக்கம் போகிறேன். நீ இடது பக்கம் போனால், நான் வலது பக்கம் போகிறேன் என விட்டுக்கொடுக்கும் மனநிலையோடு செயல்படுகிறான். ஆபிரகாம் நல்ல உறவு நிலை தொடர வேண்டும்; பணம், செல்வம், பொருட்கள் இவைகளைக் காட்டிலும், இவைகளுக்காக சண்டையிட்டு உறவு நிலைகளை இழப்பதைக் காட்டிலும், மனித உறவு (குடும்ப உறவு,

சகோதர உறவு, சமூக உறவு) மிக முக்கியம் என்பதை தன் செயலில் வெளிப்படுத்தினார். இன்றைய முதியோர் சிறிய காரியங்களுக்காக உன்னதமான உறவுகளை உடைத்துவிடக் கூடாது என்பதை கற்றுக்கொள்கிறோம். நல்ல உறவுநிலைகள் தொடரவும், மனித உறவுகள் மேம்படவும் முதியோர் முன்மதியோடும், விட்டு கொடுக்கும் மனநிலையோடும், நற்செயல்களை வெளிப்படுத்துபவராய் வாழ்வதற்கு ஆபிரகாமின் நற்செயல் வழிகாட்டுகிறது.

ஒருமுறை அபிமெலேக்கு, ஆபிரகாமை நோக்கி, "நீர் செய்கிற யாவற்றிலும் கடவுள் உம்முடனே இருக்கிறார்" (தொ.நூ. 21:22) என்று பாராட்டுமளவிற்கு ஆபிரகாமின் வாழ்வு, முன்மாதிரியான நற்செயல்கள், இறையுறவு சிறப்பானதாக அமைந்தது.

இன்றைய முதியோர், முதுமை இறைவன் தந்த ஆசி என்பதை மனதில் கொண்டு, இறையுறவில் நிலைத்திருந்து இறையாசி வெளிப்பட பாத்திரவான்களாய் நடந்து, இயல்பான மனித உறவு தொடர வழிகாட்டுபவர்களாய் வாழ ஆண்டவர் அருள்புரிவாராக!

**அருள்திரு. R. பாபின் போஸ்**

27-09-2017

தென்னிந்தியத் திருச்சபை உருவான நாள்

## சான்று பகர்வதில் ஒன்றிப்பு

**UNITY IN WITNESSING**

எசேக். 37:15-22 எபே. 4:1-6
தி.பா. : 122 யோவா. 17:20-26

**"தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாயிருப்பார்களாக".**

ஒன்றிப்பு என்றால் ஒன்றோடு ஒன்று இணைகிற நிகழ்வைக் குறிப்பிடுகிறது. தென்னிந்தியத் திருச்சபை திருச்சபைகளின் இணைதலின் வழியாக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் நதிகள் இணைப்பு என்பது மக்களின் நீண்ட நாள் கனவாகவும், எதிர்பார்ப்பாகவுமே இருக்கிறது. இந்தியாவின் நதிகளை இணைத்து மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வண்ணமாக இந்திய அரசு நதிகள் இணைப்பு திட்டத்தை வகுத்துள்ளது. கென் (Ken), பெட்வா (Betwa) ஆகிய இருநதிகளை இணைக்க முயற்சிகளை எடுத்து வருகிறது. கென்நதி மத்திய பிரதேசத்தில் பண்டல்கண்ட் வட்டத்தில், ஜபனிபூர் மாவட்டத்தில் கய்மூர் அருகே அக்ரிகாவன் கிராமம் அருகே உற்பத்தியாகிறது. இந்நதி 427 கி.மீ பாய்கிறது. மத்திய பிரதேசத்தில் விந்திய மலைத்தொடரில் ஹோசன் கபாத்திற்கு வடக்கே பெட்வா நதி உற்பத்தியாகிறது. இந்த நதி 590 கி.மீ பாய்கிறது. இந்த இரண்டு நதிகளின் இணைப்புக்குப் பிறகு 6 மாவட்டங்களில் சுமார் 6 லட்சத்தி 35 ஆயிரத்தி 661 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும். இதன் ஊடாக பல கோடிபேர் வாழ்வு பெறுவார்கள். ஒன்றிப்பு நிகழும் போது நல நன்மைகள் நடக்கின்றன. தென்னிந்தியத் திருச்சபை எப்பிஸ்கோப்பலின் (Episcopalin), மெதடிஸ்ட் (Methodist) மற்றும் S.I.U.C. எனப்படும் பெரும் நதிகளின் ஒன்றிப்பினால் செப்டம்பர் 27-1947 அன்று உருவாக்கப்பட்டது. இந்த ஒன்றிப்பு பலகோடி பேர் கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்கவும், வாழ்வு பெறவும் உதவிற்று. அதன் வாயிலாகவே அமைதி எனும் நல்லுறவு அனைத்து உள்ளங்களிலும் நிரம்பி ஒன்றிப்பிற்கான ஊற்றாக நிரம்பி பாய்ந்தோடத் தொடங்கியது. நாமும் ஒன்றிப்பில் சான்று பகர்ந்திட வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படும் உண்மையாகும். அத்தகைய நிலையைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

### *1) இணைக்கிறார் :*

எசே. 37:17 "அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச் சேர்".

கோல் என்பது தலைமைத்துவத்தின் அடையாளம். இன்றைய சூழ்நிலைகளில் இதை போப் மற்றும் பேராயர்கள் ஒரே மந்தையை

வெளிப்படுத்தும் வண்ணமாக பயன்படுத்துகிறார்கள். பல பேராயர்கள் இணைந்து நடத்தும் கூடுகைகளிலும் அந்த நிகழ்வை தலைமையேற்று நடத்தும் பேராயர் மட்டும் கோலைப் பயன்படுத்துவார். இது நாங்கள் ஒன்றே, கிறிஸ்துவில் நாங்கள் ஒரே மந்தை என்பதை வெளிப்படுத்துகிறது. இத்திருமறைப் பகுதியில் இஸ்ரயேலர், யூதா எனப் பிரிந்திருக்கும் இறைமக்கள் ஒன்று சேர்ந்து ஒரே ஆட்சியின் கீழ் வருகிறதை கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினர் வழி அடையாளச் செயல் மூலமாக குறிப்பிடுகிறார். யூதா நாட்டினர் சிறைப்படுவதற்கு முன்னரே இஸ்ரயேல் நாட்டினர் சிறைப்பட்டதால் யூதாவினர் அவர்களை விட தாங்கள் நல்லவர்கள் எனப் பெருமைப் பாராட்டினர். இப்பொழுது இரு நாட்டினரும் சிறையுற்று, எருசலேம் ஆலயமும் அழிவுற்று, ஏற்றத்தாழ்வுக்கு இடமின்றி ஒரே நேரத்தில் இருவரும் விடுதலையாகி வருகின்றனர். கடவுள் எசேக்கியேல் இறைவாக்கினர் வழி இரு கோல்களின் இணைதல் அடையாளம் வழியாக மக்களை ஒரே அரசாக இணைக்கிறார். கடவுளின் மக்கள் ஒன்றே, அவருடைய இறையரசின் பங்காளிகள் என சான்று பகர வேண்டும். பிரிவினைகளைத் தகர்த்து கிறிஸ்துவின் மந்தை என ஒன்றுபட்டு சான்று பகர்ந்திடுவோம்.

### *2. இறை அமைதியைத் தருகிறார் :*

எபே. 4:3 "அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள்".

திருச்சபை என்பது பல்வேறு வகை ஆற்றல் உள்ள மக்களால் ஆனது. இறைவன் எல்லோரையும் தனித்தன்மைகளோடு படைத்தார். அத்தன்மைகள் திருச்சபை கட்டப்படவும் சான்று பகரவுமே பயன்பட வேண்டும். சமாதானம் எனும் அடித்தளத்தில் திருச்சபைகள் கட்டப்பட வேண்டும். பல்வேறு ஆற்றல்களோடு படைக்கப்பட்ட நாம் அமைதியுடன் இணைந்து வாழ்ந்து திருச்சபையை உருக்குலைக்கிறவர்களாக அல்ல உருவாக்குகிறவர்களாகச் செயல்பட வேண்டும். எபே. 4:4 இறைவாக்கியத்தில் ஒருமைப்பாட்டின் நிலை விவரிக்கப்படுகிறது. மனிதனுக்கு உடல் ஒன்று அதை இயக்குகிற உயிர்த்தன்மையும் ஒன்று. அதுபோல் திருச்சபையும் ஒன்று அதை இயக்குகிற கிறிஸ்துவும் ஒருவரே. பல தன்மைகளுடைய மக்கள் கிறிஸ்துவின் தன்மையைத் தரித்து கொண்டு அதை வெளிப்படுத்தும் போது இறை மாட்சியை எடுத்துரைக்க முடியும்.

இறைமக்கள் அனைவரும் ஒரே நன்னம்பிக்கையில் அழைக்கப்பட்டவர்கள். நாம் அனைவரும் மூன்று உண்மைகளை அறிக்கை செய்து இணைக்கப்பட்டவர்கள்; ஒரே கடவுள், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு இதன் அடிப்படையில் கிறிஸ்துவோடு இணைந்த நாம் திருச்சபையிலும் ஒரே தன்மையை வெளிப்படுத்த அழைக்கப்பட்டவர்கள், நாம் சமாதான தகவுகளால் நிறைந்து ஆவியின் ஒருமையை வெளிப்படுத்துவோம்.

### *3. இறை ஒன்றிப்பை விரும்புகிறார் :*

யோ. 17:23 "நான் அவர்களுள்ளும், நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக"

இத்திருமறை வாக்குகள் வருங்காலப் பற்றுறுதியாளர்களுக்கான மன்றாட்டாக அமைந்திருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசித்து அவர் மந்தையாகிய திருச்சபைக்கான மன்றாட்டு கடவுளின் இறைமந்தையாகிய நாம் ஒருமைப்பாட்டில் நிறைவு பெற்றவர்களாக இருக்க கடவுள் விரும்புகிறார். தந்தை, மைந்தர் ஒன்றாயிருப்பது போல நாமும் கிறிஸ்துவோடு ஒன்றாயிருக்க வேண்டும். ஒருமைப்பாட்டின் நிறைவு என்பது, கடைசி மட்டும் நிலைத்து நிற்பது. ஓட்டப்பந்தைய வீரர் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள தடத்தில் கடைசி வரை தடம் மாறாமல் ஓடினால் மட்டும் வெற்றி பெற முடியும். அவ்வாறே நாமும் கடைசி மட்டும் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட வேண்டும். ஏனெனில் நமது ஒன்றிப்பு விண்ணையும், மண்ணையும் படைத்த கடவுளிடமும் அவரது திருமைந்தரிடமும் உள்ளது. ஆகவே எந்நிலையிலும் பின்வாங்காமல் காத்துக் கொள்ள வேண்டும்.

நாம் தென் இந்தியத் திருச்சபையில் இறை மக்களுடன் இணைந்து வாழ்ந்து சான்று பகர அழைக்கப்பட்டிருக்கிறோம். பல இடங்களிலிருந்து ஒன்றாக்கப்பட்ட ஆறு கடலில் இணையும் போது முழுமையாக வெறுமையாக்கி கடலில் இணையும். அவ்வாறே பலதரப்பட்ட சூழலில் வந்த நாம் இணைந்து வாழவும், சான்று பகரவும் நம்மை வெறுமையாக்கி ஒரே திருச்சபையாக வெளிக்காட்டுவோம். இறையரசை உறவுகளின் பிணைப்பில் ஊன்றக்கட்டுவோம். ஆன்மத் தாகத்துடன் ஆண்டவரின் பணியாற்றுவோம். தொழுவத்திற்கு வெளியே உள்ள ஆடுகளைப்போன்ற இறைமக்களை இறை இல்லத்திற்குள் ஒன்றுபடுத்துவோம். வளமான வருங்காலத்தைப் படைப்போம், வல்லவரால் கனம் பெற்று மகிழுவோம்.

**திரு. G.M. நிஷ்பர்ட் ஷாலோம்**

| 01-10-2017 | இறைமக்கள் ஞாயிறு |
|---|---|

## இறைமக்களின் சான்று

**(WITNESS OF THE PEOPLE OF GOD)**

| | |
|---|---|
| தானி. 3 : 12-30 | திப. 18 : 24-28 |
| தி.பா. 15 | லூக். 10:1-20 |

**"...... நாங்கள் உமக்கு மறுமொழி கூறத் தேவையில்லை...... இது உமக்கு தெரிந்திருக்கட்டும்." தானி. 3:16**

இஸ்ரவேல் புத்திரர்களில் உடல் ஊனமற்ற, அழகுமிக்க, எல்லா ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற, அறிவிலும், உணர்விலும், கல்வியிலும், சிறந்த, அரச அரண்மனையில் பணியாற்ற திறமை பெற்ற வாலிபரை சிறைப் பிடித்து கொண்டு வரவும், அவர்களுக்கு அரச உணவு வழங்கவும், கல்தேயர் மொழியில் எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுக்கவும், மூன்றாண்டு பயிற்சிக்கு பின் நெபுகத்னேசர் முன் நிறுத்தவும், கட்டளையிட்டான் (தானி. 1:4,5) சிறைப் பட்டுவந்த இளைஞர்கள், தங்களை அரச உணவினால் கறைப்படுத்தலாகாது என உறுதி கொண்டு (தானி. 1:8) பருப்பு, காய்கறிகள் தண்ணீர் கொடுத்தால் போதும் என்று கூறி அதனையே உண்டு செழிப்புடன் காணப்பட்டனர். சோதனைக்கென மன்னன் முன் நிறுத்த, கல்தேயர் மனிதர்களை விட 10 மடங்கு (தானி. 1:20) சிறந்தவர்களாய் அவர்களைக் கண்டனர். இவர்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும், தீயோர்கள் முன்பு சான்றாய் விளங்கினார்கள். அதனைக் குறித்து இன்று ஆழமாய் சிந்திப்போம்.

### *1. தீயோனுக்கு தலை வணங்காது சான்று:* தானி. : 3:11-21

தானி. 3:15 நான் நிறுவியுள்ள பொற்சிலையினை தொழத் தயாராயிருக்கிறீர்களா? இல்லையேல் தீச் சூளையினுள் தூக்கி வீசப்படுவீர்கள் உங்களை என் கைக்கு தப்புவிக்கும் கடவுள் யார்?

வாழ்வுதரும் கடவுளின் மக்கள் துணிவுடன், நீர் நிறுவிய பொற்சிலையை வணங்கப் போவதேயில்லை இது உமக்குத் தெரிந்திருக்கட்டும் இது துணிவு கொண்ட இறை மக்களின் சான்றாகும். ஆணவம் படைத்த அரசன், அதிகாரம் படைத்தவன், பொற்சிலையினை நிறுவியவன், வணங்கும்படிக் கட்டளை பிறப்பித்துள்ளான். அகம்பாவம் கொண்டவன், தீயோர்களின் தூண்டுதல் பெற்றவன். தான் நிறுவிய பொற்சிலையினை வணங்க கட்டளையிட்டவன். தன்னை கடவுளுக்கும் மேலாக கருதியவன் என் கைக்கு தப்புவிக்கத் தக்க தெய்வம் ஒன்று உண்டோ? என்றவன். இத்தகைய தீயோனுக்கும் தீமையான முடிவுக்கும் துணை போகாது, மாற்றான் தேசத்தின் கைதியாக இருந்தும் மெய்க்கடவுளின் புத்திரர்கள் என்ற வைராக்கியத்துடன், நாங்கள் உமக்கு

மறுமொழி சொல்லத் தேவையில்லை. அப்படியே நிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள் எங்களை எரிகின்ற தீ சூளையினின்றும் மீட்க வல்லவர் (தானி. 3:17). அவரே எங்களை உம் கையினின்றும் விடுவிப்பார். அப்படியே அவருக்கு மனமில்லாது போனாலும் நாங்கள் உம்முடைய தெய்வங்களை வழிபட மாட்டோம், நீர் நிறுவிய பொற்சிலையை நாங்கள் தொழப் போவதில்லை, இது உமக்கு தெரிந்திருக்கட்டும் (தானி. 3:18). சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் பற்றுறுதியில் பின்வாங்காது நிலைத்து சான்றாயினர்.

தரியு மன்னன் காலத்தில் 30 தினங்கள் மன்னனிடம் மட்டுமேயன்றி வேறெந்தத் தெய்வத்திடமோ, மனிதனிடமோ யாதொரு விண்ணப்பம் செய்கிற எந்த மனிதனும் சிங்கக் கெபிக்குள் தள்ளப் படுவான் என்ற சட்டம் (தானி. 6:8) பிறப்பிக்கப் பட்ட போதிலும் தானியேல் வழக்கத்தின் படி தினமும் 3 வேளை கடவுளை நோக்கி முழங்காலிட்டு நன்றி செலுத்தினர் (தானி. 6:10) சிங்கக்குகைக்குள் தள்ளப்பட்ட போதிலும் கலங்காது உறுதியுடன் கடவுளை வழிபட்டச் சான்றானார்.

ஜனதா ஆட்சி காலத்தில் மத உரிமை மசோதா ஒன்றினை சட்டமாக்க துடித்தன. இறைமக்களின் முழங்கால்யுத்தம் 1 ½ ஆண்டிலேயே ஆட்சி நிறைவுற்றது மீண்டும் ஆட்சியமையவில்லை.

பல் சூழலில் உரிமைகள் பறிக்கப்படலாம், ஒடுக்கப்படலாம், சட்டங்களும் மாற்றியமைக்கப் படலாம் தீயோனுக்கு தலை வணங்காது சான்றான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற நண்பர்களை போல், ஒரு தானியேலைப் போல் சான்றாவோம்.

***2. துன்பத்தை ஏற்பதில் சான்று:*** தானி. 3 : 21

மன்னனின் கட்டளைப்படி அவ்வாறே அந்த வீரர்கள் அவர்களை மேற்போர்வையோடும் உள்ளாடையோடும், தலைப்பாகையோடும், மற்ற ஆடைகளோடும் சேர்த்து கட்டி, எரியும் தீச்சூளைக்குள் தூக்கி போட்டார்கள்

சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ தீச்சூளையினுள் துன்பங்களை ஏற்க தங்களை அர்ப்பணித்தனர். தீச்சூளையினைக் கண்டு கலங்காது துன்பம் சகிக்க தங்களை விசுவாசத்தில் திடப்படுத்தினர். தீச்சூளையில் வீசும் படி வந்த வீரர்கள் தீயில் கருகினர். ஆனால் விசுவாச நண்பர்கள் கருகாதபடி ஆண்டவர் காத்தார். திமிர் பிடித்த மன்னன் நெபுகத்னேசர் உங்களை என் கையிலிருந்து தப்பிக்கக் கூடிய தெய்வம் ஒன்று உண்டோ? என்று கேட்க உமக்கு பதில் சொல்ல தேவையில்லை நாங்கள் வழிபடும் தெய்வம் எங்களை எரிகிற தீச்சூளையின்றும் மீட்கவல்லவர். எனவே நீர் நிறுவிய பொற்சிலையையும் உமது தெய்வங்களையும் நாங்கள் வழிபட மாட்டோம் என்பது மன்னனாகிய உமக்கு தெரிந்திருக்கட்டும் என்ற மறு மொழியின் நிமித்தம் தூக்கி வீசப்பட்ட நண்பர்கள் தீச்சூளையின் உலாவும்

காட்சி கண்டு கலங்கி தீச்சூளையின் வாசல் அருகில் சென்று உன்னத கடவுளின் ஊழியர்களே வெளியே வாருங்கள் என்றாடா. தீச்சூளையினுள் நால்வராக உலாவியதும், வெளியே வந்த போது அவர்களில் தீயின் எவ்வித தாக்கமும் ஏற்படாததும் கண்டு ஆச்சரியப்பட்டார். துன்பத்தைச் சகிக்க துணிந்த நண்பர்கள் உன்னத கடவுளின் வல்லமைக்குச் சான்றாயினர். பல்சமயச் சூழலில், நாமும் அவர்களைப் போன்று தயங்காது துணிவுடன் துன்பம் சகித்தால் சான்றாவோம். ஒடிசா மாநிலத்தில் ஸ்டெயின்ஸ், அவர்களின் இரு புதல்வர்களுடன் தீக்கிரையாக்கப்பட்டனர். இத்துன்பத்தை ஏற்று அவரது மனைவி இன்றும் தொழு நோயாளிகளுக்கு நற்பணியினைச் செய்து சான்று பகர்கின்றார். நாம் எங்ஙனம் சான்றாவோம்?

***3. தீமை செய்வோரையும் மீட்கும் சான்று :*** தானி. 3 : 26-29

தீயோனுக்கு தலை வணங்கா நிலையில் தீமையினை சகித்துக் கொண்டனர். தீமை செய்தவர் மனம் மாற இச் செயல்கள் காரணமாயின.

தீச்சூளையினுள் போடப்பட்ட நண்பர்கள் மூவர் நால்வராக உலாவும் அற்புத காட்சியினை அரசரின் கண்கள் கண்டன. வியந்தார். செய்வதறியாது திகைத்து தீச்சூளையின் வாசலண்டை ஓடி வந்தார். தன்னையே உயர்வாகவும், தனக்கு மேல் எந்த அதிகாரம் இல்லை யெனவும், தன்னால் இயற்றப்பட்ட சட்டம் இவை அனைத்தையும் மறந்து (தானி. 3 : 26 ) உன்னத கடவுளின் ஊழியர்களாகிய சாத்ராக்கு, மேஷாக்கு, ஆபேத் நேகோ என்போரே வெளியே வாருங்கள் என்றார். உன்னத கடவுளின் மக்கள் அக்கடவுளுக்கு உண்மைச் சான்றாக, உப்பாக, ஒளியாக வாழ்ந்தனர்., மனம் மாற கேட்கவில்லை, வாழ்வால் ஈர்க்கப்பட்டு மன்னன் மனம் மாறினார். இறைமக்களின் இறைவன் (3 : 28) புகழப்படுவாராக, தங்கள் கடவுளைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பணிந்து தொழ மறுத்து, அரசனது கட்டளையையும் பொருட்படுத்தாது தங்கள் உடலை கையளித்த அவருடைய ஊழியர்களை அவர் தம் தூதரை அனுப்பி மீட்டருளினார். இதனை கண்ட மன்னன் தான் நிறுவிய பொற்சிலையும், தனது தெய்வங்களும் வீண் என்று உணர்ந்து அதிசயங்களை நடப்பித்த உண்மையுள்ள உன்னத கடவுளை மாத்திரம் வழிபடவும் அவருக்கு எதிராக பேசுவோர்கள், எந்த நாட்டவரானாலும், மொழியினை பேசுபவனானாலும் தண்டிக்கப்படுவர் இதுவே என் ஆணை (3:28). தீமை செய்தவரையும் மீட்டுச் சான்றாயினர். யோகாப் பயிற்சி வழி சூரிய நமஸ்காரம் பாடசாலைகளில் கட்டாயமாக்கப்படும் சூழலில் மும்பை மாநகராட்சிப் பள்ளிகளில் தடை விதிக்க ஐகோர்ட் மறுப்பு (தினகரன் 17-9-2016) தீமை செய்பவர்களின் மனம் மாற முழங்கால் யுத்தம் மட்டுமே பதில். வாழ்வு வழி சான்று பகர்வோம். இதுவே இறை மக்களில் இறைவனின் எதிர்பார்ப்பு. சான்றாக உன்னத கடவுள் உதவுவாராக .. ஆமென்.

**அருள்திரு. V. டேவிட் ராபி ஜேக்கப்**

08-10-2017 **மாற்றுத்திறன் படைத்தோர் ஞாயிறு**

## மாற்றுத்திறனாளிகள் : வாழ்வின் புனிதம்

**DIFFERENTLY ABLED : SANCTITY OF LIFE**

| | |
|---|---|
| வி.ப. 4:10-17 | 2 கொரி. 12:1-10 |
| தி.பா. 37 | யோவா 5:1-9 |

**"நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்".**
**2 கொரிந்தியர் 12:10**

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரும், உருவிலும், உடலமைப்பிலும், சொல்லிலும், செயல்திறனிலும் பிறரிடமிருந்து வேறுபட்டுள்ளார். ஒரு திறனில் குறைவுபட்டவர், இன்னொரு திறனில் நிறைவு பெற்றுள்ளார். மூளை வளர்ச்சி குறைந்தவரென்றும், காது கேட்கும் திறனில்லாதவரென்றும், ஆசிரியர் ஒதுக்கித்தள்ளிய தாமஸ் ஆல்வா எடிசன், மின்விளக்கு, கிராம போன் உட்பட 1093 பொருள்களைக் கண்டறிந்தார். இது விந்தையிலும் விந்தை அன்றோ!

பேரன்புடைய இறைவர், மாற்றுத்திறன் படைத்தோரை, உலகை மாற்றும் திறன் உள்ளோராய் மாற்றுருவாக்கம் செய்கின்றார். 2 கொரிந்தியர் 12:1-10-ன் படி, திருத்தூதர் பவுலடியாருக்கு இருந்த ஓர் வலுவின்மை, அவரை வன்மையாய் வருத்தியது. ஆண்டவரின் அளவற்ற அருளைப் பெற்று கொண்டதால், வலுவின்மை அவருக்குப் புனிதமாகவே தோன்றியது. முள்ளாகக் குத்திய அவரது வலுவின்மையே, அவரை முத்தாகவும் உருமாற்றம் செய்தது.

வலுவின்மையை எதிர்கொள்வது எங்ஙனம் என்பதை, திருத்தூதர் பவுலின் அணுகுமுறை சார்ந்து சிந்தனை செய்வோம்.

### *1. வலுவின்மையே பெருமை :*

"என் வலுவின்மையே எனக்குப் பெருமை" 2 கொரிந்தியர் 12:5.

வலுவின்மையைக் குறித்துத் தாழ்வு மனப்பான்மை கொள்வதும், பிறரது வலுவின்மையைப் பார்த்து அவர்களைத் தாழ்வாகக் கருதுவதும் மனிதரின் இயல்பு. இதற்கு நேர்மாறாக வலுவின்மையைப் பெருமையாகக் கருதுகிறார் பவுலடியார்.

பவுலடியார் குறிப்பிடும் முள்ளைக் குறித்து, பல கருத்துகள், திருமறை விளக்கவுரையாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. கண்களில் பார்வைக் குறைபாடு இருந்திருக்கலாம் என்பது ஓர் அனுமானம். கலாத்தியர் 4:13-15; 6:11 ஆகிய திருமொழிகள் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றன. எந்த வலுவின்மையாக இருந்தாலும், அவரது

இறைவேண்டலின் வழியாகக் கிடைத்த இறையருளே, அவரைப் பெருமை பாராட்டச் செய்தது. "... நான் என் வலுவின்மையை பற்றித்தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன்..." எனச் சான்று பகர்கின்றார் பவுலடியார். (2 கொரி. 12:9).

வலுவின்மை நம்மை சிறுமையுறச் செய்யும் சூழலில், அதைப் பெருமையாக நினைப்பது கடினமானதே. ஆனாலும் நமது பெலவீனங்களை பெருமையாக நினைத்தால் உடலும் உள்ளமும் வலுப்பெறும். வெட்கம் வெளியேறும் தாழ்வு மனப்பான்மை தானாகவே மறையும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஜோனி எரெக்சன் என்ற பெண்மணி தனது இளம்பருவத்தில் குதிரைச் சவாரி, டென்னிஸ், நீச்சல் போன்ற விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியவர். அவரது 17-வது வயதில் ஒரு துயரமான நிகழ்வு நிகழ்ந்தது. ஆழத்தைச் சரியாகக் கணிக்காமல், தண்ணீரில் குதித்ததால் ஏற்பட்ட விபத்தின் விளைவாக உடலின் செயல்திறன்களை இழந்தார். தொடக்கத்தில் அதிக மன உளைச்சல் அடைந்தாலும், இறையருளை வேண்டிப் பெற்றுக் கொண்ட அவர், பவுலடியாரைப் போன்று, தன் வலுவின்மையைக் குறித்துப் பெருமை பாராட்டுகின்றார். கடினப்பாடுகளை இன்முகத்துடன் எதிர்கொள்ளுகின்றார். இன்று, "மாற்றுத்திறன் பெற்றோருக்கான கிறிஸ்தவத் திருப்பணி" என்ற இயக்கத்தை நிறுவி, ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு வருகின்றார். "எனது வலுவின்மை மிகப்பெரிய செல்வம் போன்றது என்னை கிறிஸ்துவின் கரங்களில் விழச் செய்கின்றது" என்று தனது வலுவின்மையைக் குறித்து பெருமை பாராட்டுகின்றார் ஜோனி எரெக்சன்.

## *2) வலுவின்மையில் வல்லமை :*

"...வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" (2கொரிந்தியர் 12:9).

வலுவின்மையின் வேதனையுடன், இறைவேண்டல் ஏறெடுத்த பவுலடியாருக்கு, ஆண்டவர் வழங்கிய பதில்தான் இது. ஆண்டவரின் அருளைப் பெறுகின்ற போது, வலுவிழந்தோர் வல்லமையைச் சொந்தமாக்குகின்றனர்.

தொடக்கத் திருச்சபையில் ஆண்டவர் இயேசுவுக்கு அடுத்தபடியாக, அதிகச் சிறப்பிடம் பெற்றவர் பவுலடியார். அரிய, பெரிய பணிகளைக் கருத்துடன் நிறைவேற்றியவர். சீரிய சிந்தனையாளர், தலை சிறந்த இறையியலாளர், நற்செய்தியின் தூதுவர், எழுத்தாளர், பேச்சாளர் போன்ற அடைமொழிகளுக்குச் சொந்தக்காரர் பவுலடியார். வலுவின்மையுடைய அவர் இத்தகைய சிறப்புகளைச் சொந்தமாக்கக் காரணமாக இருந்தது, கிறிஸ்துவின் வல்லமையேயாகும். இறைவல்லமை

பெற்று அவர் எழுதிய கடிதங்கள் இன்றும் நல்வழி காட்டுகின்றன. அவரது திருப்பணியின் கனிகள் அளவற்றவை எனலாம்.

மோசே, விடுதலைப்பணிக்குக் கடவுளின் அழைப்புப் பெற்ற போது, தனது இயலாமையைக் கூறி விலகிவிட விரும்பினார். 'நாவன்மை அற்றவன்'. 'வாய் திக்கும்', 'நாவு குளறும்' என்று வலுவின்மைகளைப் பட்டியலிட்டார். ஆனால், கடவுள் விட்டுவிடவில்லை. "...நானே உன் நாவில் இருப்பேன், நீ பேச வேண்டியதைக் கற்பிப்பேன்" என்றார். (வி.ப. 4:12) இறைவல்லமையைப் பெற்ற மோசே, தனது வலுவின்மையின் மத்தியிலும் மாபெரும் விடுதலைத் தலைவராக உயர்ந்தார்.

வலுவின்மையுடன் போராடுவோர்க்கு, இந்த உலகில் உதவியும் ஊக்கமும் பல வடிவங்களில் கிடைத்தாலும், ஆண்டவர் அருளும் ஆற்றலும், ஆறுதலுமே, ஆக்கம் நிறைந்தவை ஆகும். நமது பிரச்சனைகளைவிட, இறைவல்லமை மிகப்பெரியது. எனவே, நாம் வலுவிழந்திருந்தாலும், இறையருளாலும், இறைவல்லமையாலும் புதுப் பெலன் பெறுகின்றோம்.

### *3) வலுவின்மையின் அருமை :*

"...வலுவின்மையிலும்...கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும் போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" (2 கொரி. 12:10). வலுவான ஆற்றல் படைத்தோரையும், நல்ல செயல்திறன் உடையோரையும் உலகம் கொண்டாடி மகிழுகின்றது. இறைவரோ, வலுவிழந்தோரை உயர்த்தி, அழகு பார்க்கின்றார். தம் திருப்பணியில் அவர்களை இணைத்து அகமகிழச் செய்கின்றார். ஆண்டவரின் இரக்கத்தில் இருக்கும் போது வலுவற்றிருக்கும்போதே, வல்லமை பெற்றிருக்கின்றனர். இது அருமையிலும், அருமையன்றோ!

பவுலடியாரின் வாழ்வில், அவரது வலுவின்மை, பலவிதங்களில் அருமையானதாக மாற்றம் பெற்றது. இறுமாப்பைக் களைந்து, தாழ்மையை அணிந்து கொள்ள வழிகாட்டியது. ஆண்டவரைத் தேடவும், இறைவேண்டல் செய்யவும், அவர் அருளைப் பெற்றுக்கொள்ளவும் உந்துதல் வழங்கியது. கிறிஸ்துவின் வல்லமையைப் பெறவும் ஊடகமாய் விளங்கியது. எனவே, பவுலடியாருக்கு அவரது பெலவீனமே, பெலமாக அமைந்துவிட்டது. பாவத்தின் சாபமே உடல் பெலவீனம் எனக் கருதப்பட்ட காலத்தில், பவுலடியார் அதை ஒரு புனிதமாக மாற்றியமைத்துவிட்டார்.

ஃபேனி கிராஸ்பி, குழந்தைப் பருவத்திலேயேப் பார்வையை இழந்தவர். தனது இயலாமையை நினைத்துக் கலங்காமல், பாடல்களை எழுதத் தொடங்கினார். "போற்றும், போற்றும்...", "இயேசுவை நம்பி பற்றிக்கொண்டேன்..." போன்ற பாடல்கள் உட்பட, ஏறத்தாழ 8000-த்திற்கு மேற்பட்ட பாடல்களை எழுதினார். அவர் தனது வலுவின்மையை

வெறுக்காமல், "எனக்கு நாளைய தினம் பார்வை கிடைக்கும் என்றால், நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஏனென்றால், ஆண்டவரைப் புகழ்ந்து பாடுகின்ற பாடல்களை இயற்ற, அது தடையாக இருக்கும். நான் விண்ணுலகம் சென்றவுடன் என் முதல் பார்வை, என் மீட்பரின் முகத்தையே பார்க்கும்", என்று உணர்வுப் பூர்வமாகக் கூறியுள்ளார்.

இறையன்பர்களே! வலுவின்மை நம்மில் இருந்தால், மனம் தளர வேண்டாம். இறைவனின் அருள் பெறுவோம். அவரது வல்லமை நம்மை வலுப்படுத்தும், நம்மை அகமகிழச் செய்யும். வாழ்வில் முன்னேறிச் செல்ல வழி வகுக்கும். அப்போது, வலுவின்மையும் புனிதமாகும். இறையருள் நம்மை வலுவாக்கட்டும்!

**திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு**

# தற்கால உலகில் இளைஞர்களின் ஆன்மீகம்

**SPRITUALITY OF THE YOUTH IN THE CONTEMPORARY WORLD**

தொ.நூ. 41:37-43 பிலி. 3:1-16
தி.பா. 111 மத். 19:16-22

**"...இறையாவி பெற்றுள்ள இவரைப் போல் வேறெவரையும் நாம் காண முடியுமோ?" தொ.நூ. 41:38**

சிலந்திப் பூச்சி சிறு உயிரினங்களை வேட்டையாடி உணவாக உட்கொள்ள முதலில் வலையைப்பின்னி இரைக்காகக் காத்திருக்கும். இதை அறியாத சிறு பூச்சிகள் வலையில் வந்து விழுந்தவுடன் வேகமாய் அருகில் சென்று ஒருவித திரவத்தைப் பாய்ச்சும். அதனால் வலையில் விழுந்த பூச்சிகள் மயக்க நிலைக்குச் சென்றுவிடும். உடனே தாமதிக்காமல் சிலந்தி தன் இழைகளால் அவற்றைக் கட்டித் தொங்கவிடும். பின்பு தேவைப்படும் போது அவைகளைக் கொன்று உணவாக உண்ணும்.

இன்றைய உலகம் மயக்கம் நிறைந்த போதை தரும் உலகம். இச்சையான சிந்தனை மற்றும் செயல்களால் அநேக இளைஞர்களைக் கட்டி வைத்துள்ளன. நன்மை தரும் நவீன உலகில் வாழ்ந்தாலும் இது பல தீமைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. வளர்ச்சி மற்றும் புதுமைகள் போன்றவையே நவீனத்துவத்தின் விழுமியங்கள். 'புதுமைகள்' என்ற பெயரில் சமூகத்தை உருக்குலைக்கும் ஊடகங்களும் நவீன உலகில் இடம்பெறுகின்றன. முகநூல், வாட்ஸ்-அப் போன்ற இணையதள சேவைகளைப் பயன்படுத்துவர்களில் 90% பேர் படித்தவர்கள். இவர்களில் 58% பேர் பெண்கள். இவர்கள் முழுநேரத்தையும் இதில் செலவிட்டு தங்கள் நண்பர் வட்டத்தை விரிவுபடுத்தி பெருங்குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பகுதியினர் இளைஞர்களே,

"நீ இளைஞனாய் இருப்பதினால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருத்தாதிருக்கட்டும்" (1 திமொ. 4:12) எனப் பவுலாரின் வசனத்தைக் கற்றும் பிறர் இழிவாக நினைக்கும் அளவுக்கு இளைஞர்களின் ஆன்மீகம் சில நேரங்களில் இயல்நிலை கடந்திருக்கின்றது. "இளமையின் நாட்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள்" (ச.உ. 11:9) என படித்தும் நவீனத்துவத்தின் தாக்கம் இளைஞர்களை முடங்கிப் போகச் செய்கின்றது. இதனால் ஆர்வமின்மை (lack of intrest), மறுத்தல் (Denaying), வருத்தமடைதல் (Saddness), நம்பிக்கையின்மை (hoplessness), தீய பழக்கம் (Bad behaviour), இடமாற்றம் (Displacement), கோப மனப்பான்மை (Agressivemind)

போன்றவை இளைஞர்களிடையே வெளிப்படுவதை உணரலாம். காரணம் ஆன்மீக இளையோட்டம் இளைஞர்களிடம் இல்லாமையே. இளைஞர்களிடம் ஆன்மீகம் தழைக்க இறைவனோடு இருத்தல் அவசியம். இளைஞர் இறைவனோடு இருந்தால் இறைவனும் இளைஞரோடு இருப்பார் (தொ.நூ. 39:2). இறைவன் யோசேப்போடு இருந்ததால், யோசேப்பில் வெளிப்பட்ட தெய்வீகத் தகவுகளால் இறையாவி யோசேப்பில் தங்கியது (தொ.நூ. 41:38). யோசேப்பில் கண்ட ஆன்மீகத்தை பார்வோன் பாராட்டினார். இறையாற்றல் யோசேப்பிடம் வெளிப்பட்டதற்கான நற்சான்றுகளை யோசேப்பின் வாழ்க்கை முறை வழியாகத் தியானிப்போம்.

***1) இளைஞர்களின் ஆன்மீகம் : தூய வாழ்வு :*** (தொ.நூ. 39:9 ஆ)

தாமரை இலையின் வேர் நீருக்குள் இருந்தாலும், அதனுடைய இலையும் பூவும் ஒருபோதும் தண்ணீரில் மூழ்குவதுமில்லை. அதேபோல் தண்ணீர் தன்மேல் ஒட்டுவதற்கு துளியளவும் சம்மதிப்பதுமில்லை. இளைஞர்களின் வெற்றிவாழ்விற்கான இரகசியம் இதுதான். பாவம் நிறைந்த உலகில் வாழ்கின்றோம் என்று சொல்லி பாவத்தோடு சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்பதையே இது இளைஞர்களுக்கு கற்றுத்தருகிறது. இஸ்மவேலரிடம் இருப்பது வெள்ளிக் காசுகளுக்கு விற்கப்பட்ட யோசேப்பு போத்திபாரின் வீட்டில் இருந்தார். அங்கு போத்திபாரின் மனைவியால் யோசேப்புக்கு சோதனை வந்தது. போத்திபாரின் மனைவி யோசேப்பை பாவத்துக்குட்படுத்த அழைக்கிறாள். யோசேப்பு போத்திபாரின் மனைவியால் வந்த பாவத்துக்கு இணங்காமல் தம்மைத் தூயவராகக் காத்துக் கொண்டார் (தொ.நூ. 39:9). யோசேப்பு தன்னோடு இருக்கும் இறைவனை நினைத்தார். ஆண்டவருக்கு அஞ்சினார். தமக்கு முன் நின்ற சோதனையை வென்றார். ‘தூய மனிதர் இவரே’ என்னும் திருமறை அடையாளத்திற்குச் சான்றானார்.

இருபதாம் நூற்றாண்டின் நடுவண் பகுதியில் ஆங்கில உலகின் புகழின் உச்சிக்கே சென்றவர் மர்லின் மன்றோ. பணம், புகழ், அழகு, அந்தஸ்து அனைத்தும் இருந்தும் நிம்மதியின்றித் தவித்தார். இவ்வுலகில் தன்னை உண்மையாய் நேசிக்க யாருமில்லை என ஏங்கினார். ஒருநாள் உலகப்புகழ் பெற்ற நற்செய்தியாளர் பில்லிகிரஹாம் மர்லின் மன்றோவின் ஆன்ம மீட்பைப் பற்றிப் பேச விரும்பினார். அதற்கு மர்லின் மன்றோ “நான் படப்பிடிப்பில் பிசியாக இருக்கிறேன். இப்போது பேச நேரமில்லை. பத்து நாட்கள் கழித்து தொடர்பு கொள்ளுங்கள்” என்றாராம். பத்து நாட்கள் முடிவதற்குள், தனது 36-ம் வயதில் தூக்க மாத்திரைகளை தின்று தற்கொலை செய்து கொண்டார் நீதி. 31:30. இறைபயம் இல்லாதவர் முடிவும் கிட்டத்தட்ட இப்படியே என எண்ணத் தோன்றுகிறது.

செல்லக்கூடாத இடங்களும் காணக்கூடாத காட்சிகளும், பார்க்கக் கூடாத படங்களும் நவீன உலகில் காத்திருக்கின்றன. தப்பித்தவறி

ஒருவர் பார்த்தாலோ கண்டாலோ அவை ஆழ் மனதில் ஏழு வருடங்கள் அழியாமல் பதிந்துவிடும் என ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர். இளைஞர்களே! உமது உடலும் உயிரும் இறைவன் அளித்துள்ள மாபெரும் அருட்கொடை, அதை அற்ப ஆசைக்கு விற்றுப்போடாமல், தூய்மையை அணிகலனாக்கி கடின உழைப்பையும், விடாமுயற்சியையும் ஆயுதமாக்கி, உண்மையையும் நேர்மையையும் குறிக்கோளாக்கி, இறைவனோடு இருத்தலையும் இறைப்பிரசன்னத்தையும் உணர்தலையும் அனுபவமாக்கி செயல்பட்டால் பார்வோன் யோசேப்பை பாராட்டினது போல் இறை பார்வையில் நாம் எப்போதுமே பாராட்டுக்குரியோராவோம்.

***2) இளைஞர்களின் ஆன்மீகம் : தியாக வாழ்வு :*** தொ.நூ. 39:20

"பிறர் வாழ வேண்டுமெனில் நான் சாக வேண்டும்" என்ற பாடல் இறையியலாளர் தாமஸ் தங்கராஜ் அவர்களால் இயற்றப்பட்டது. தியாக வாழ்வின் அவசியத்தை இப்பாடல் போதிக்கின்றது. பிறர்பால் ஊற்றெடுக்கும் கைமாறு கருதாத அன்பு, அடுத்தவர் துயர் தீர்க்க துடிக்கும் கருணை, வெறுப்பின் நிழல்படியாத பாசம், தன்னுயிர் போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் நிலை வேண்டும்.

தமிழில் தோகை விரித்த மயில் அகவியதைக் கண்டு போர்வை தந்ததும், துவண்டு விழுந்த முல்லைக் கொடி மலருக்கு தேர்கால் தந்ததும், வேகமாக ஓடும் தேரின் மணி ஓசையில் பூவில் தேன் உறிஞ்சும் வண்டினம் தடுமாறக்கூடாது என்பதற்காக மணியின் நாவை பிடித்த சங்ககாலத் தலைவனின் செயல்பாடும் பிற உயிரினங்கள் வாழட்டும் என்பதற்கென புறநானூற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

"எவ்வளவு நாள் நாம் இந்த உலகில் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல. நமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம்" என்கிறார் டாக்டர் தாமஸ் உல்கி. "நாடு உனக்கு என்ன செய்கிறது என்பதைவிட நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்பதை யோசி" என்றார் அமெரிக்க அதிபர் கென்னடி. பிறர்வாழ வழிவிடுவதே தியாக வாழ்வின் அடித்தளம். யோசேப்பு ஆண்டவருக்கு அஞ்சி உத்தமமாய் வாழ்ந்தார். தீமைக்கு விலகி நின்றார். உடல் பெலமும் முக அழகும் நிரந்தரமல்ல என்பதை நிதானித்தறிந்திருந்தார். தன் மேல் சுமத்தப்பட்ட வீண்பழி வேண்டுமென்றே இட்டுக்கட்டிய நிகழ்வு என்பதை போத்திபாரின் முன் யோசேப்பு நிரூபித்திருந்தால் போத்திபாரின் மனைவி தான் சிறைக்கு சென்றிருக்க வேண்டும். அவள் சிறைக்குச் சென்றால் போத்திபாரின் பிள்ளைகளுக்குத் தாயில்லை. அவர்கள் வாழட்டும் நான் சிறைக்கு செல்கின்றேன் என்ற முடிவுக்கு வந்தார் யோசேப்பு. செய்யாத குற்றத்திற்கு 13 ஆண்டுகள் சிறைவாசம் (தொ.நூ. 37:2; 39:20; 41:46). யோசேப்பின் சகிப்புத்தன்மையால் அவரது தியாகம் நிலைநாட்டப்பட்டது. யோசேப்பு இயேசுவுக்கு முன்னோடியானார். யோசேப்பை சகோதரர்கள்

ஏற்காததை போல் இயேசுவை ஏற்கவில்லை (யோ. 1:11; 5:43; 7:5). யோசேப்பை போல இயேசுவும் சோதிக்கப்பட்டார் (மத். 4:1-11; எபி. 2:18; 4:13). வெள்ளிக்காசுகளுக்கு இவரும் விற்கப்பட்டனர் (தொ.நூ. 37:28; மத். 26:14-16). இருவருமே உயர்த்தப்பட்டனர் (தொ.நூ. 41:37-43; கொலே. 2:15).

இன்றைய உலகம் இருப்பதை இழக்க மனமற்ற இளைஞனைப் போன்று (மத். 19:16-22), இருக்கின்றது. தான் தனக்கு என்ற எண்ணத்தில் தவழ்கின்றது. பெற்ற பிள்ளைக்கு கண்களில் பார்வை இல்லை என்பதைக் கண்ட தாய் தன் இரண்டு கண்களைத் தானமாக்கி பிள்ளை வாழட்டும் என்று தியாகத்தின் உறைவிடமாக்கிய தமிழ்ச் செல்வியின் பெயர் மண்ணிருக்கும் வரை மறைய வாய்ப்பில்லை. இளைஞர்களே! வாழ்வில் கிடைப்பது சிறுபகுதி. இளமைப்பருவம் சென்றால் திரும்ப கிடைக்காது. இருக்கும் காலத்தில் நேரத்தைத் தவறான செயல்களில் விரயம் செய்யாமல் பயனுள்ள வாழ்வுக்காக அர்ப்பணிப்பதே இளைஞர்களின் அர்த்தமுள்ள ஆன்மீகம்.

### *3. இளைஞர்களின் ஆன்மீகம் : தெய்வீக வாழ்வு* (தொ.நூ. 41:15,16)

'தெய்வீகம்' என்பது தெய்வ குணங்களை இயல்பாக்குவது. தெய்வ நிலைக்கு நம்மைச் சேர்க்க நினைப்பது. தெய்வமே முதன்மையானவர், மற்றவை அனைத்தும் புறம்பானவை என்ற முடிவில் வாழ்வது. யோசேப்பு கடவுளுக்கு பிரியமான மகன் (favored son), கீழ்படிதலுள்ளவர் (faithful steward), மறக்கப்பட்டவர் (forgotten one), மன்னிக்கும் புனிதர் (forgiving saint) என்றாலும் 'அனைத்தும் இறைவனே' என்று அர்ப்பணித்த நிகழ்வே (தொ.நூ. 41:15,16) தெய்வீக நிலைக்கு அழைத்து சென்றது என்பதே உண்மை.

ஒருவிசை பார்வோன் கண்ட சொப்பனத்துக்கு விளக்கம் தர எவரும் இயலாத சூழலில் யோசேப்பு பார்வோன் முன்பு நிறுத்தப்பட்டார். "நீ ஒரு கனவை கேட்டால் தகுந்த விளக்கம் கூறுவாய் என்று உன்னைப்பற்றி கேள்விப்பட்டேன்" (41:15) என பார்வோன் யோசேப்பை கேட்ட போது "நானல்ல, கடவுளே பார்வோனுக்கு நலமிகு மறுமொழி வழங்குவார்" (41:16) என யோசேப்பு பதில் தந்தார். தன்னை விட இறைவனே அனைத்தும் என்பதை வேற்று நாட்டு அரசர் முன் பிரகடனப்படுத்தினார் (First priority to God). தன்னை தாழ்த்தி இறைவனுக்கு முதலிடம் தந்தது யோசேப்பின் தெய்வீகக் குணத்தைக் காட்டிற்று. இதனால் கிடைத்த ஆசி "நீ என் அரண்மனைக்கு அதிகாரியாயிருப்பாய், உன்வாக்கின்படியே என் மக்கள் அடங்கி நடப்பர்" (தொ.நூ. 41:40). அதிகாரம், முத்திரை மோதிரம், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள், வீதியில் உலவ தேர்வண்டி இவையனைத்தும் அடிமை என விற்கப்பட்டு 13 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த யோசேப்புக்கு கிடைத்தன. அடிமையின் பெருமூச்சைக் கேட்பதும், உரிய பதில் செய்வதும்

இறைவனின் செயல் (தொ.நூ. 4:9; 16:13; வி.ப. 3:7). குரலற்றவர்களின் குரலாய், முகவரியற்றவர்களின் முகவரியாய், இல்லாமையிருப்போருக்கு இருக்கிறவராய், விழிம்பு நிலையிலிருப்போரை உயர்நிலைக்குக் கொண்டு வருபவராய் கடவுள் வெளிப்படுகிறார் என்பதே திருமறைக்கண்கூடு. இளைஞனே மேட்டிமை களைந்து, நமது வெற்றியில், வாழ்வில், கல்வியில், உயர்வில் நம்மையல்ல இறைவனைக் காண்போம். இவை அனைத்தும் எனது தகுதியினாலல்ல இறைவனால் என்பதை ஒத்துக்கொள்வோம்.

இறையன்பில் இருக்கும்போது இவ்வுலகு வாழ்வில் தடுமாற்றம் இருக்க இயலாது. பிறருக்காக வாழ முற்படும்போது தனக்கென எதையும் வைத்திருக்க முடியாது. இறை குணத்தில் வாழும்போது “தான்” எனச் சொல்ல முடியாது. இவற்றை அனுபவமாக்கினால் வண்டிக்கு அச்சாணி எப்படிமுக்கியமோ அதுபோல் இறையாசியால் இளைஞரும் வீட்டுக்கு, நாட்டுக்கு, சபைக்கு முதன்மையாவார்.

**அருள்திரு. அறிவர் S. வில்சன்**

22-10-2017

## இறையாளுகைக்காக கடினங்களை (இடர் வரவை) ஏற்றல்

**TAKING RISK FOR THE REIGN OF GOD**

எஸ். 8:1-17 பிலிப். 2:25-30
தி.பா. 12 மத். 10:37-42

**"...எளியோரின் புலம்பலையும் வறியோரின் பெருமூச்சையும் கேட்டு இப்பொழுதே எழுந்து வருகின்றேன்; அவர்கள் ஏங்குகின்றபடி அவர்களைப் பாதுகாப்பில் வைப்பேன் என்கிறார் ஆண்டவர்." திபா. 12:5**

உலகினைப் படைத்து, பண்படுத்திப் பாதுகாத்திட மனுகுலத்திடம் கொடுத்த கடவுள் அனைவரையும் ஆளுகிறவராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இறையாளுகை உலகில் முழுவதுமாக வெளிப்பட அவரால் படைக்கப்பட்ட முழுப் படைப்புகளும் இணைந்து அதினதின் கடமைகளை நிறைவேற்றிட வேண்டும். படைப்பின் மகுடமாகிய மனுக்குலத்தின் பொறுப்பு இறையாளுகையின் தகவுகள் வெளிப்பட உழைப்பதாகும். நீதி, நியாயம், நேர்மை, அமைதி நிறை முழுவாழ்வு ஆகியன இறையாளுகையின் தகவுகளாகும். "Shalom" என்கிற எபிரேய வார்த்தை இறையாளுகையின் நன்மையினை வெளிப்படுத்துகிறது. அனைவரும் எவ்வித ஒடுக்குதலுமின்றி அமைதியோடு வாழ்வது இறைவார்த்தையின் பொருள். எசாயாவின் கண்ணோட்டத்தில் இதனை நோக்கினால் "புதிய வானம் புதிய பூமியின்" வாழ்வாகும் (எசா. 65:17-25). இன்று கிறிஸ்தவ சமூகத்தில் இறையாளுகையின் தகவுகள் முற்றிலுமாக வெளிப்பட முடியாத நிலையுள்ளது. இறைமக்களின் சுயநல சிந்தனைகளும், வளமை சார்ந்த இறையியல் நம்பிக்கையும் இறையாளுகைக்கான இடர்வரவை அல்லது சவால்களை ஏற்பதற்குத் தடையாக உள்ளன. இச்சூழலில் இறையாளுகை உலகில் வெளிப்பட இன்று இறைமக்கள் ஏற்க வேண்டிய இடர்வரவை அதின் வாயிலாக பெற்றுக்கொள்கின்ற விளைவினையும் சிந்திப்பது சிறந்ததாகும். இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றிட ஆயத்தமாயிருப்பவர்கள் ஆண்டவருக்குப் பாத்திரவான்கள் அல்லது அவருக்கு உரியவர்கள் (மத். 10:37-39). கடவுளுக்கு உரியவராக வாழ்ந்து இடர்வரவை ஏற்க அவர் நம்மை அழைக்கிறார்.

### a) *இறைவனிடம் அன்புகூர்ந்து கடினங்களை (இடர் வரைவை) ஏற்றல் :* (மத். 10:37)

இயேசு தம்மோடிணைந்து பணி செய்வதற்குச் சீடர்களைத் தெரிவு செய்து பணி செய்ய அனுப்பின போது, இப்பணிவிடையில் சிறப்பாகச் செயல்படுவதற்கு தம்மிடம் அன்பு செலுத்திட வலியுறுத்துகிறார்.

இறையாளுகை அன்பின் பணிவிடை வாயிலாக வெளிப்பட வேண்டும். கடவுளிடம் அன்பு கூர்ந்தால் மட்டுமே அவரது ஆளுகைக்காக இடர்வரவை ஏற்றிட முடியும். இவ்வசனத்தின் இரண்டு உறவு நிலைகளைக்குறித்து பார்க்க முடிகிறது. பெற்றோர் - பிள்ளைகள் உறவு, மனுக்குலம் - இறை உறவு. பெற்றோர் பிள்ளைகளை நேசிப்பதைக் காட்டிலும், கடவுளை நேசிக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரிடம் காட்டும் அன்பிற்கும் மேலாக கடவுளிடம் அன்பு செலுத்த வேண்டும். ஏனென்றால் கடவுள் அன்புடையவர், நமது அன்பினையும் எதிர்பார்க்கின்றவர்.

“அன்பு” இடர்வரவை ஏற்றுக்கொள்வதற்கு அடிப்படையான ஒன்று. உலக உறவுகளைக் காட்டிலும் உன்னதரோடு உள்ள உறவை அதிகமாக நேசிப்பது சிறந்தது. உலகு சார்ந்த உறவுகளுக்கு முதன்மை கொடாதபோது வாழ்வில் கடினங்கள் வருவதுண்டு. ஆனால் அக்கடினங்களை ஏற்பது மிகவும் சிறந்தது. எஸ்தர் தனது வாழ்வில் அரசமேன்மை பெற்று அரண்மனையில் வாழ்ந்த நிலையில் தனது இனம் துன்புற்றபோது தனது வசதியினை முதன்மையாக எண்ணாமல் தனது இனத்தார் மீது அன்பு கூர்ந்து அழிவிலிருந்து பாதுகாத்தார். கண்கண்ட தன் சகோதரரிடத்தில் அன்பினை வெளிப்படுத்தி, அதன் வாயிலாக கடவுளோடு தான் கொண்ட அன்பின் முழுமையினை எஸ்தர் வெளிப்படுத்தினார். (எஸ். 8:1-7). 1 யோ. 3:16-யில் அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். ஆகவே கடவுளிடம் அன்பு கூர்ந்து இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றிடுவோம்.

### *2. இறைப்பணி நிறைவேற்றி கடினங்களை (இடர் வரவை) ஏற்றல் :* (மத். 10:38)

இறையாளுகையில் பங்கு பெற்றிட சிலுவையோடு கிறிஸ்துவைப் பின் தொடர வேண்டும். சிலுவையினை நாம் பலநிலைகளில் புரிந்து கொண்டாலும் சிலுவை என்பது கடவுள் நம்மிடம் கொடுத்துள்ள “பணி” அல்லது “பொறுப்பாகும்”. இறையாளுகையில் அவரவர் அவரது பணியினை நிறைவேற்றவேண்டுமென்பது நியதி. ஆகவே தான் இயேசு இவ்வசனத்தில் (மத். 10:38) “தன் சிலுவை” எனக் குறிப்பிடுகிறார். இறையாளுகை வெளிப்பட நம்முடைய பணிகளை நாமே நிறைவேற்ற வேண்டுமே ஒழிய, மற்றவர்களிடம் திணிக்கக் கூடாது. நாம் கடவுளோடு கொண்டுள்ள அன்பு நமது பணிவிடை வாயிலாக வெளிப்பட வேண்டும். அன்னை தெரசா அம்மையார் தான் கடவுளோடு கொண்டுள்ள அன்பினைத் தனது கடமையின் மூலமாக வெளிப்படுத்தினார். தொழுநோயாளிகளுக்கு உதவி செய்த நிலையில் தொழுநோயாளிகளின்

முகத்தில் இறைச்சாயலைக் கண்டார். இயேசு கிறிஸ்து தமக்காகச் சிலுவையினை ஏற்கவில்லை. இறையாளுகை இப்பூவியில் வெளிப்பட சிலுவையினைச் சுமந்து தமது பணியை நிறைவேற்றினார். சிலுவை கடினமான, வேதனையான ஒன்று. ஆனால் இக்கடினத்தை தமது வாழ்வினில் ஏற்று இறையாளுகை உலகில் மலரக் காரணமானார்.

தூய பவுலார் பிலிப்பியத் திருச்சபைக்கு எழுதும்போது அப்பகுதியில் சிறந்த பணிவிடையினை நிறைவேற்றி, இறையாளுகைக்காக இடர்வரவை தாமாகவே ஏற்றுக்கொண்ட, எப்பாப்பிரோதீத்துவை பற்றிக் குறிப்பிடும் போது, “... இறைப்பணியிலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் உயிரையும் எண்ணாமல் கிறிஸ்துவின் திருப்பணியின் பொருட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்” என எழுதுகிறார் (பிலி. 2:30). எப்போப்பிரோதீத்து தனது கடமைகளை நிறைவேற்றி இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்றார். தனது உயிரைக்கூட இழப்பதற்கு ஆயத்தமான நிலை. பழைய ஏற்பாட்டுத் திருமறைப்பகுதியில் எஸ்தரும் இதே நிலையில் இறையாளுகைக்காக தனது பணிவிடையினை நிறைவேற்றிட தனது உயிரை இழக்கும் நிலையில் இடர்வரவைச் சந்தித்தார். “சிலுவையின்றி சிங்காசனமில்லை”, “பாடுகளின்றி பாரினில் வாழ்வில்லை”. நம் சமுகத்தில் இறையாளுகையின் தகவுகள் வெளிப்பட அவரவர் தம்தம் கடமையினை நிறைவேற்றி இடர்வரவை ஏற்க ஆயத்தமாக வேண்டும்.

### *3. கடினங்களை (இடர்வரவை) ஏற்று இனிதுடன் வாழ்தல் :*

(மத். 10:39)

இறையாளுகைக்காக இடர்வரவை ஏற்பது இனிதுடன் வாழும் உன்னத நிலையினைத் தருகிறது. தனது உயிரைக் காக்க சுயநலம் சார்ந்து அதற்காக இடர்வரவை ஏற்பது பாராட்டப்பட வேண்டியதல்ல. சுயநலம் சார்ந்து வாழ்வது வாழ்வின் மேன்மையினை இழப்பதாகும். ஆனால் இறையாளுகை வெளிப்பட ஒருவர் தனது வாழ்வினை இழக்கக் கொடுப்பாரானால் தனது வாழ்வினையும் சமூக வாழ்வினையும் அதன் மூலம் காக்க முடியும். கடவுள் தமது சொந்தக் குமாரனை உலகிற்கு அனுப்பி இடர்வரவை ஏற்க ஒப்புக்கொடுத்ததால் உலகம் மீட்பினைப் பெற்றது. சிலுவை துன்புறும் வாழ்வின் அடையாளம். ஆனால் அதனை வாழ்வாக்கினால் இனிதுடன் வாழமுடியும். சிலுவையின்றி வாழ்வில்லை. இறையாளுகைக்காகச் சிலுவை சுமப்பது வாழ்வினைக் காக்கும் செயலாகும். “நான் செத்தாலும் சாகிறேன் என் இனம் காக்கப்பட வேண்டும்” என்ற உறுதிப்பாட்டுடன் எஸ்தர், அரசருக்கு முன்நின்றார். பொற் செங்கோல் நீட்டப்பட்டு அதைத் தொட்டால் அழிவில்லை. நம்பிக்கையோடு முன்னேறி வெற்றி கண்டார் (எஸ். 8:1-17). ஒரு இனம் காக்கப்பட்டது.

இன்று, இறையாளுகைக்காக ஒருவர் ஏற்றிடும் இடர்கள் அநேகர் இனிதுடன் வாழ்வதற்கு அடித்தளமாகிறது. நம் குமரி மண்ணில் கால்பதிக்க இடர்வரவை ஏற்று கடினமாகப் பணிசெய்த ரிங்கல் தௌபேயினால் நாம் இன்று இனிதுடன் வாழ்கிறோம். சமய, சமூக, பொருளாதார அடிமைத்தனங்களால் வேதனையுற்ற நம் முன்னோர் இறையாளுகையின் மக்களாக மாறிட மேலைநாட்டு அருட்பணியாளர்கள் பட்ட கடினங்கள் கணக்கில்லாதவை. இன்று நம்முடைய இறையாளுகையின் தகவுகள் வெளிப்பட முடியாமல் காணப்படும் சீர்கேடுகள், அடிமைத்தனங்கள் அகல தனிநபராக, குடும்பமாக, சமூகமாக, திருச்சபையாக இடர்வரவை ஏற்க ஆயத்தமாவோம். இறையாளுகை வெளிப்பட கடினமாக உழைப்போம். மக்கள் கனிவுடன் வாழ நாம் காரணமாவோம். இறையாசி நம்மனைவரோடும் இருப்பதாக.

**அருள்திரு. A. மகேர்ஷால் அஸ்பாஸ்**

29-10-2017 **சீர்திருத்த ஞாயிறு**

# பற்றுறுதியைத் திரும்பக் கண்டுபிடித்தலும் மீள்வாழ்வும்

**RE-DISCOVERING AND RE-LIVING THE FAITH**

2 குறிப். 34:8-21 தி.வெளி. 2:1-7
திபா. 46 யோவா. 2:12-22

**"ஆகையால் நீ எந்நிலையி-ருந்து தவறி விழுந்துவிட்டாய் என்பதை நினைத்துப்பார்". தி.வெ. 2:5**

கடவுளோடும் மனிதனோடும், இயற்கையோடும் நிலையான உறவை வைத்துக்கொள்வதே பற்றுறுதியாகும். இத்தகைய உறவுகளிலிருந்து மனிதன் விலகிச் செல்லும் போது உறவுகள் உடைபடுகின்றன. தொடர்புகள் அறுந்துவிடுகின்றன. அழிவுகள் தொடர்ந்து வருகின்றன. இந்நிலை திருமறையின் துவக்கத்திலிருந்து விவிலியம் நமக்கு நினைவுபடுத்தி மீண்டும், மீண்டும் பற்றுறுதியில் நிலைத்திருக்க அறிவுரை வழங்குகிறது. ஆதாம், ஏவாள் இருவரும் இறைவனோடும், இயற்கையோடும் அவர்களுக்குள்ளும் இருந்த நிலையான உறவிலிருந்து விலகிச் சென்ற போது ஏற்பட்ட அழிவுகளை நாம் மனித வரலாற்றில் அனுபவித்து வருகிறோம். இறைவன் மீண்டும் துண்டிக்கப்பட்ட உறவுகளைப் புதுப்பித்து பற்றுறுதியில் உறுதிப்படுத்த ஆண்டவர் இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பி நிலையான உறவை மனிதர்களோடும், இயற்கையோடும் ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்டவர் இயேசு ஏற்படுத்திய நிலையான உறவை தொடக்க கால திருச்சபை மக்கள் விட்டு தங்கள் சுயமான உறவுகளை விருப்பங்களை நிறைவேற்ற முன் வந்தார்கள். இத்தகைய போங்கு எபேசுத் திருச்சபை மக்களிடையே நிலவியிருந்தபோது தூய ஆவியார் திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர் வாயிலாக அத்திருச்சபை மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்த, பற்றுறுதியைத் திரும்ப முறையாக கட்டியெழுப்ப தம்முடைய ஆலோசனையை வழங்கியுள்ளார். சின்ன ஆசியாவின் தலைநகராய் விளங்கிய எபேசுப் பட்டணம். அக்காலத்தில் மிகப்பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான நகரமாக விளங்கியது. இதன் புகழுக்குக்காரணம் இதன் வர்த்தகமாகும். இங்கு ஆசிய, மற்றும் கிரேக்கச் சமய, சமூக, பண்பாட்டு கலப்பு இருந்தன. இங்கு தூய பவுலார் நீண்ட நாள்கள் தங்கி இருந்தார். பவுலார் திருக்கடிதங்களை இங்கு வைத்து எழுதியதாகக் கருதப்படுகிறது. ஏழு நட்சத்திரங்களைத் தமது வலக்கரத்தில் பிடித்துக்கொண்டிருக்கும் ஆண்டவரின் திருப்பெயரால் முதல் கடிதத்தை எபேசுத் திருச்சபைக்கு எழுதும்படி தூய ஆவியார்

திருவெளிப்பாட்டு நூல் ஆசிரியரிடம் குறிப்பிடுகிறார். திருச்சபையின் நடுவிலே உயிருள்ள, அசைவாடுகிற ஆண்டவர் இயேசு நடமாடித்திரிகிறார். ஆகவே எபேசுத் திருச்சபை பற்றுறுதி வாழ்விலிருந்து நழுவிப் போனதை நினைத்து மனந்திருந்தி மீண்டும் பற்றுறுதியில் நிலைத்திருக்கும்படி அறிவுறுத்துகிறார். பற்றுறுதியில் மீண்டும் நிலைத்திருக்க இருவகையான உண்மைகளை, தூய ஆவியார் எபேசுத் திருச்சபைக்குச் சொல்வதைப் போல இன்று நம் திருச்சபைகளுக்கு, பற்றுறுதியை மீண்டும் கட்டியெழுப்ப தூய ஆவியார் அறிவுறுத்துகிறார்.

## *1. பண்பு நெறிகளைப் பாராட்டும் இறைவன் :*

இறைவனின் திட்டப்படி வாழும் மனிதர்களை இறைவன் பாராட்டுவதைத் திருமறையில் நாம் சான்றாக அறிந்து கொள்ள முடிகிறது. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தார். நோவா இறைவனோடு நடந்தார் (தொநூ. 6:9). லோத் குடும்பத்தைப் பாதுகாக்க இறைவன் அவர்கள் மீது இரக்கம் வைத்தார். காரணம் அவர்களிடம் இருந்த விருந்தோம்பல் (தொநூ. 19:1-26). மோசே கடவுளின் இல்லத்தில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தார் (எபி. 3:2-5) யோபு மாசற்றவரும், நேர்மையாளருமாயிருந்தார். கடவுளுக்கு அஞ்சித் தீயதை விலக்கி வந்தார் (யோபு. 1:1). யோசியா மன்னராக முடிசூட்டப்பட்டபோது அவருக்கு எட்டு வயது. முப்பத்தியொரு வருடம் எருசலேமில் ஆட்சி செய்தார். இவர் கடவுளுடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் வலது இடது புறமாக விலகாமல் நடந்தார். (2 குறிப். 34:1-2). இதுபோல எபேசுத் திருச்சபையின் பற்றுறுதியாளர்கள் பற்றிய சில சிறந்த பண்புகளை தூய ஆவியார் பாராட்டுகிறார். என்னவெனில் உன் செயல்களையும், கடின உழைப்பையும், மனவுறுதியையும் நான் அறிவேன், தீயவர்களை உன்னால் சகித்துக்கொள்ள முடியாது என்பதும், திருத்தூதர்களாய் இல்லாதிருந்தும் தங்களை அவ்வாறு திருத்தூதர்கள் என அழைத்துக் கொள்ளுகிறவர்களை நீ சோதித்துப் பார்த்து, அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தாய் என்பதும் எனக்குத் தெரியும் (திவெ. 2:2). இது எபேசு திருச்சபையைக் குறித்து (மக்களை) தூய ஆவியார் வழங்கும் சாட்சியமாகும். மேலும், எபேசுத் திருச்சபைப் பற்றாளர்கள் மன உறுதியோடும், கிறிஸ்துவின் பொருட்டு துன்பங்களைச் சகித்துக் கொண்டார்கள். அவர்கள் மனச்சோர்வும் அடையவில்லை என்பதும் தூய ஆவியார் எபேசு மக்களைக் குறித்து வழங்கும் சாட்சியமாகும். திருமறையின் தொடக்கத்திலிருந்து இன்று வரை கடவுளுக்கும் மனிதர்களுக்கும் ஏற்புடையவர்களாய் வாழும் மனிதர்கள் இவ்வுலகில் இருந்துகொண்டேயிருக்கிறார்கள். அவர்களின் நற்செயல்களும், நற்பண்புகளும், பற்றுறுதி வாழ்வும் இறைனால் புகழப்பட்டு வருகின்றன.

இதற்கு திருமறையில் ஏராளம் சான்றுகளும் இருக்கின்றன. நம்முடைய வாழ்க்கைச் சூழலிலும், திருச்சபையிலும், சமூகத்திலும், நாட்டிலும் நல்லவர்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அவர்களை நாமும் பாராட்டுகிறோம். இறைவனும் அவர்களைப் பாராட்டுகிறார். நாமும் இறைவனால் புகழப்படும்படி வாழ அழைக்கப்படுகிறோம்.

## 2. பற்றுறுதியில் நிலைத்திருக்க அழைக்கும் இறைவன் :

இறைவனால் பாராட்டப்பட்ட மனிதர்கள் பற்றி நாம் அறிந்து கொண்டாலும் அதே சமயத்தில் அவர்களின் பற்றுறுதி வாழ்விலும், உலக வாழ்விலும் ஏற்பட்ட தவறுகளை இறைவன் எடுத்துக்காட்டத் தயங்கவில்லை என்பதையும் திருமறை நமக்கு எடுத்துரைக்கிறது. ஆபிரகாம் தொடங்கி நோவா, லோத், மோசே, யோசியா மற்றும் அனைத்து தேவ மனிதர்களின் குறைபாடுகளையும் திருமறை எடுத்துரைத்து அவர்களின் தவறுகளுக்காக மனம் வருந்துவதற்குரிய வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் தங்கள் தவறுக்காக மனம் வருந்தி மீண்டும் பற்றுறுதியில் இறைவனோடு இணைந்து வாழ்ந்தார்கள் என்பதையும் திருமறை நமக்கு எடுத்துரைக்கிறது. அதுபோல எபேசுத் திருச்சபையின் நற்பண்புகளை தூய ஆவியார் பாராட்டிப் பேசினாலும் அவர்களின் பற்றுறுதி வாழ்வில் இருந்த சோர்வை எடுத்துரைத்து அவர்களை மனமாற்றம் செய்ய வேண்டும் என்பதிலும் ஆர்வமாகயிருந்தார் (திவெ. 2:4-5) எப்படியெனில் எபேசுத் திருச்சபை மக்கள் திரிபுப் போதனைகளிலும், பேரரசர், வணக்கம், பிற தெய்வ வழிபாட்டில் நாட்டம், சமுக நிகழ்வு நாட்டங்களிலும் எபேசுத் திருச்சபை மக்களுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. மேலும் அந்தியோக்கியா நகரைச் சேர்ந்த யூத மதப்பிரிவிலிருந்து கிறிஸ்தவரான நிக்கோலா என்பவரின் அறிவுரையான யூத சமயக் கோட்பாடுகளையும் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளலாம் என கிறிஸ்தவ மக்களின் பற்றுறுதியை அசைக்கத் துவங்கினார். இயேசுவின் போதனைகளோடு யூத சமய போதனைகளையும் கலந்துவிட்டார். இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது "பழைய துரத்திகளில் புதிய இரசத்தை வார்த்து வைக்க வேண்டாம். அப்படி செய்தால் துரத்தியும், கிழிந்து விடும், இரசமும் சிந்தி விடும்". (லூக். 5:36, 38). ஆனால் நிக்கோலா இதற்கு முரணாகப் போதித்தார். உண்மையான இறைவன் மேல் வைக்கும் நம்பிக்கை பிறதெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகளை சாப்பிட விருந்துகளில் பங்கு பெறுவதும், பேரரசர் வணக்கம் மற்றும் பிற சமய, அரசியல் விழாக்களில் பங்கேற்பதாலே கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்தில் குறைவு ஏற்படாது என கூறி மக்களை கிறிஸ்தவ பற்றுறுதியிலிருந்து விலகிச் செல்ல தூண்டினார்கள். மேலும் அறிவு நெறிக் கேட்பாட்டினரும் கிறிஸ்தவர்கள் எல்லா நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதற்கும் தடையில்லை என கூறினர். மேலும் பொருளாதார மேம்பாட்டில் எவ்வளவு செல்வம் சேர்த்து சுக

போகமாகவும், ஆடம்பரமாகவும் வாழலாம். அது கடவுளின் ஆசீர்வாதம் எனக் கூறினார்கள். கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இருந்தால் மட்டும் போதும் எனப் போதித்தார்கள். இந்தப் போதனை எபேசுத் திருச்சபை மக்களுக்கு விருப்பமாக இருந்தது. இந்தச் சூழலில் தூய ஆவியார் எபேசு மக்களின் தவறான விசுவாசத்தை (பற்றுறுதியை) கண்டித்து, நான் உன்னிடம் காணும் குறையாதெனில் முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை. கிறிஸ்துவின் பெயரில் துன்பங்களை நீங்கள் சகித்துக் கொண்டாலும் அன்பின் செயல்களை நிறுத்திவிட்ட ஒரு திருச்சபை கிறிஸ்துவின் திருச்சபையாக இருக்க முடியாது. இயேசு கிறிஸ்துவோடும், அவருடைய மக்களோடும் உள்ள உறவை துண்டித்துவிட்டு, பெயரை மட்டும் கிறிஸ்தவர்கள் என்று வைத்துக் கொண்டு கிறிஸ்துவின் மீது உள்ள அன்பின் செயல்பாடுகளை விட்டுவிடுவது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரான செயலாகும். ஆகவே எபேசுத் திருச்சபை மக்கள் எந்நிலையிலிருந்து தவறிவிழுந்துவிட்டனர் என்பதை நினைத்துப் பார்த்து மனம்மாற்றம் பெற்று முதலில் திருச்சபை பின்பற்றிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருக்கும்படி அழைப்புக் கொடுக்கப்படுகிறது. இல்லையெனில் திருச்சபை கிறிஸ்துவின் திருச்சபையாக இருக்க இயலாது.

அன்பில்லாமல் ஒளியில்லை, நற்செய்தி இல்லை, கிறிஸ்து இல்லாமல் திருச்சபை இல்லை. நீ மனம்மாற தவறினால், நான் உன்னிடம் வந்து உனது விளக்குத் தண்டை அகற்றிவிடுவேன். அதாவது கிறிஸ்துவின் திருச்சரீரம் திருச்சபை என்ற பெயர் அற்றுப்போகும். வெறும் சபையாக மட்டும் இருக்கும். அது உயிர் இல்லாத சபையாகும். முழுச் சபைக்கும் நான் சொல்வதை ஒவ்வொரு தனிநபரும் கேட்க வேண்டும். கேட்க செவியுடையோர் திருச்சபைகளுக்கு தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும். மனம் திரும்புதல், தூய ஆவியார் உரைப்பதைக் கேட்டல், மற்றும் அன்பை நடைமுறைபடுத்தல், கிறிஸ்துவின் வார்த்தையில் திருச்சபையை வழிநடத்துதல் ஆகியவை கிறிஸ்துவின் பற்றுறுதிப் போதனையாகும். கடவுளின் தோட்டத்தில் உள்ள வாழ்வு தரும் மரத்தின் கனி என்பது கடவுள் படைப்பனைத்திற்கும் வழங்க விரும்பும் உண்மையான அன்பினை நடைமுறைப்படுத்தும் உயிருள்ள திருச்சபையாக சாட்சி பகர வேண்டும் என்பது தான். ஆகவே திருச்சபையும் அதன் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியும் வெளியரங்கமாக இருப்பதில் இறைவன் மகிழ்வதாகயிருந்தாலும், கிறிஸ்தவ திருச்சபையும், அதன் மக்களும் உயிருள்ள திருச்சபையின் மக்களாக விசுவாசத்தில் விழுந்துபோன நிலைகளை உணர்ந்து, கிறிஸ்தவ பற்றுறுதியை மீண்டும் கிறிஸ்துவின் அன்பில் கட்டியெழுப்பி, உயிருள்ள சாட்சிகளாக விசுவாசத்தில் நிலைத்து வாழுவோம். இறையாசி உங்களோடு இருப்பதாக.

**அருள்திரு. E. கென்றிதாசு**

05-11-2017

உலகத் திருமறைப்பள்ளி ஞாயிறு

# பற்றுறுதியில் வளர்த்தல்

**NURTURING IN FAITH**

| | |
|---|---|
| நீ.மொ. 23:15-26 | எபே. 6:10-18 |
| தி.பா. 127 | மத். 18:1-6 |

**"...ஆண்டவரிடம் எப்போதும் அச்சமுள்ளவனாயிரு". நீ.மொ. 23:17**

குழந்தைகளில் இறையரசிற்கான குணங்கள் இயற்கையாக இருப்பதை முதலாவது அறிந்தவர் ஆண்டவர் இயேசு. ஆகவே குழந்தைகள் இறையரசிற்குரியோர் என்றார். இந்த இறையரசிற்கான இலட்சணங்கள் பட்டுப்போகாதபடி உரமூட்டி வளர்த்தலே பற்றுறுதியில் பேணி வளர்த்தல் ஆகும். மரம் சரியான வளர்ச்சியையும், பலனையும் கொடுக்க பராமரித்தல், பண்படுத்துதல், தண்ணீர் இன்னும் பல காரணிகள் தேவை. பிள்ளைகள் பற்றுறுதியில் வளர்ந்திட இறைவேண்டல், திருமறை படித்தல், பகிர்தல், பொறுமை, அன்பு போன்றவை இருந்தால் ஆவியின் கனியுள்ள வாழ்வு வெளிப்படும்.

நீதி. 28:6-ல் கூறும் போது நல்வழியில் நடக்க பிள்ளையைப் பழக்கு முதுமையிலும் அவர் அந்தப்பழக்கத்தை விட்டு விட மாட்டார்.

நல்ல வழிகள் கடவுளிடமிருந்து வருகின்றன. கடவுளோடு எப்போதும் இணைந்து வாழ்ந்தால் வாழ்வில் நல்வழிகள் எப்போதும் வெளிப்படும். பிள்ளைகள் பற்றுறுதியில் பேணி வளர்க்கப்பட வேண்டும் திருச்சபை மட்டுமல்ல இல்லமும் முதன்மையானது. பெற்றோர் தங்களை ஆன்மிக ஆசிரியராக மாற்ற வேண்டும். "சிறுவர்களை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்துதல்" என்பதே திருமறைப்பள்ளியின் நோக்கம். திருடரானபின் திருத்துவது அல்ல. பரிசுத்த வாழ்வில் விலகாதபடி வாழ பற்றுறுதியில் பேணி வளர்த்தல் தேவை. எசாயா 1:2-ல் பேணி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் வளர்ந்து கடவுளுக்கு எதிரானார்கள் என்ற வேதனையை காணலாம். ஆகவே எப்படிப்பட்ட வளர்த்தலை ஆண்டவர் விரும்புகிறார் என்பதை அறிந்து பிள்ளைகளை வளர்த்தல் வேண்டும்.

## *1. விரும்கிற வழியிலல்ல விசுவாச வழியில் வளர்த்தல் :*

"தம்விருப்பம் போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள்
தாய்க்கு வெட்கக்கேட்டை வருவிப்பர்" நீதி. 29:15

விரும்புகின்ற வழிகள் எல்லாம் சரியானவைகள் அல்ல. நேரான வழிகளும் அல்ல. இன்று சிறுவர்கள் பலர் விரும்பும் வழிகள் விசாலமானவைகள். விசாலமான வழி கேட்டுக்கு நடத்துகிறது. (மத்தேயு 7:13,14).

லூக்கா 15:13 - இளையமகன் தெரிவு செய்த வழி விருப்பமான வழி

1 சாமு. 3:13 - ஏலியின் பிள்ளைகள் தெரிவு செய்த வழி அவர்கள் விருப்பமான வழி தந்தையும் நடத்தத் தவறினார்.

யோனா 1:3 - யோனா தர்ஷீஸ் சென்றது அவரது விருப்பமான வழி. தீமையின் வழிகளில் விலகிச்செல்ல விசுவாச வழியில் வளர்க்கப்பட வேண்டும்.

தி.பா. 105:19 - தீமைகளில் யோசேப்பைப் புடமிட்டது விசுவாச வழி.

தானி. 1:8,17 - தானியேல், மிஷாவேல், அனனியா, அசரியா ஆகியோரைத் தீட்டுப்படாமல் காத்தது விசுவாச வழி.

மத். 21:19 - சகேயு இயேசுவைப் பார்க்க விரும்பியது விசுவாச வழி.

சிறுவர் விரும்புகின்ற வழிகள் சுயநலமுடையதாக தீமையுடையதாக அமையாமல் உண்மையான விசுவாச வாழ்வின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமைய வேண்டும். பிள்ளைகளை அவர்களுக்கு விருப்பமான வழியில் நடத்துவதை விட ஆண்டவருக்கு விருப்பமான வழியில் நடத்துவது சிறப்பானது. கடவுளின் வழிகளைக் காத்து வந்தேன் என்கிறார் தாவீது. (2சாமு. 22:22). கடவுளின் வழி உத்ததமமானது, புடமிடப்பட்டது (2சாமு. 22:31) நமக்கு விருப்பமான வழி உயர்வு தரலாம். ஆனால், விழுந்தால் தூக்க உதவாது. விசுவாச வழி உயர்வைத் தருகின்றது (தி.பா. 37:23-34).

## *2. பழிசுமப்பவராக அல்ல பணிவிடை புரிபவராக வளர்த்தல் :*

"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்". மத். 27:25.

இயேசுவை சிலுவையிலறைய வேண்டும் என்று யூத மக்கள் சத்தமிட்டபோது பிலாத்து இயேசுவிடம் குற்றமில்லை என்றதுடன் இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் என்று பிலாத்து தன் கைகளை கழுவினார் (மத். 27:24). ஆனால் யூதர்கள் தங்கள் மீதும் தங்கள் பிள்ளைகள் மீதும் இரத்தப்பழி சுமரட்டும் என்று விரும்பினார்கள்.

மத். 14:8 - ஏரோதியாள், மகளை பாவத்திற்குத் தூண்டி யோவானின் தலையைப் பெற்றாள்.

1 அர. 21:7; 19:24 - 2அர. 10:7 - யேசபேல், ஆகாபின் பாவம் சந்ததியின் அழிவுக்கு வழிகாட்டியது.

1 குறிப். 22:10; 24:7 - அத்தாலியாள் அரசப் பரம்பரையை அழித்து தன் பிள்ளைகள் ஆலயத்தை தீட்டுப்படுத்த வழிகாட்டினார்.

பெற்றோரின் பாவ வாழ்வு பிள்ளைகளின் வளர்ச்சிக்குச் சுமையாக, பழியாக அமையக்கூடாது மத். 18:6. ஆண்டவரிடம் விசுவாசமாயிருக்கிற சிறுவர்கள் இடறிவிடாதபடி பெரியவர்கள் தங்கள் வாழ்வை முன் மாதிரியாக காத்துக் கொள்ளவேண்டும். பெற்றோர் கடவுளின் பதிலாளாக பிள்ளைகளை ஆண்டவரின் பணிவிடையாளர்களாக வளர்க்க வேண்டும்.

1 சாமு. 2:18 - சாமுவேல் ஆண்டவரின் பணிவிடையாளராக வளர்ந்தார்.

1 சாமு. 2:28 - சாமுவேலைப் பெற்றோர் ஆண்டவருக்கு ஒப்படைத்தார்கள்.

சிறுவர்கள் ஆண்டவரின் பணிவிடையாளர்களாக இயேசுவைப் போன்று ஆலயத்தில் ஆன்மீகத்தில் வளர்தலும் ஆவியில் வளர்தலும் சிறப்பானது. (லூக். 2:40; 46:52).

### *3. வாழும் காலத்திற்காக மட்டுமல்ல வரும் காலத்திற்காகவும் வளர்த்தல் :*

“இவ்வாறு அவர்கள் தங்களது வருங்காலத்திற்கென்று நல்லதோர் அடித்தளமாக இச்செல்வத்தைச் சேமித்து வைப்பதால் உண்மையான வாழ்வை அடைய முடியும்”. 1 திமொத். 6:19.

வாழும் காலம் பெலத்தின் மிகுதியால் எண்பது ஆண்டு (தி.பா. 90:10) என்று திருமறை கூறுகின்றது. உலக வாழ்வில் சிலருக்கு அதிகமாகலாம். ஆனால் வரும்காலம் நித்தியகாலம். வாழும் காலம் நிலையற்றது. வரும்காலம் நிலையானது. வாழும் காலத்திற்காக மனிதன் அதிகமாகத் திட்டமிடுகின்றான். வருங்காலத்திற்கான திட்டங்கள் என்ன? வாழும் காலத்தைக் கணக்கில் கொண்டு பிள்ளைகள் கல்வி, பணி போன்றவைகளில் வளர்க்கப்படுகின்றார்கள். வாழும் காலம் குறுகிய காலம் மட்டுமே, வரும் காலமான நித்திய வாழ்வு, இறையரசு குறித்த வளர்ச்சி தேவை.

லூக். 12:20 - நீ சேகரித்தவை யாருடையவைகள்?

மத். 19:22 - வருத்தத்தோடு சென்று விட்டார்.

இந்த இரண்டு திருமறைப்பகுதியிலும் வாழும் காலத்தை விரும்பி வரும் காலத்தை இழந்து போவதைக் காண முடிகின்றது. வாழும் காலம் மீது மிகுந்த எதிர்பார்ப்பு கடவுளில் வளரத் தடையாயிருக்கிறது.

எசா. 54:13 - உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர் தாமே கற்றுத்தருவார் உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்றுச் சிறப்புறுவர்.

1 திமொ. 3:4-12 - பிள்ளைகள் நல்லொழுக்கத்தில் வளர்க்கப்படடல்.

இ.ச. 4:10, 5:29 - என்றென்றும் நன்றாயிருக்க, கடவுளுடைய வழிகளில் போதித்து வளர்த்தல் வேண்டும்.

குறுகிய கால வாழ்வுக்கு கோடிக் கணக்கில் திட்டமிருக்கும் போது நிலையான வாழ்வுக்கு ஆன்மீகத் திட்டங்கள் என்ன? மத். 6:19,20; மண்ணுலகில் செல்வங்களை சேர்ப்பதை விட விண்ணுலகில் சேர்த்து வைப்பதே சிறப்பானது.

### *4. உன் பிள்ளையாக அல்ல இறை பிள்ளையாக வளர்த்தல் :*

நீ எனக்குப் பெற்ற உன் புதல்வர், புதல்வியரை அவற்றுக்குப் பலியிட்டாயே... எசே. 16:20.

என் புதல்வரையும் அவற்றிற்கு பலியிட்டாயே 16:21.

குழந்தைகள் என்னுடையவர்கள் என்ற எண்ணத்தைவிட குழந்தைகள் கடவுளுடையவர்கள் என்ற எண்ணம் நம்மில் உருவாக வேண்டும். பெற்றோர் பிள்ளைகள் மீது உரிமை பாராட்டுவதை விட கடவுளுக்கு அதிக உரிமையுண்டு. பெற்றோர் பிள்ளைகள் மீது காட்டுகின்ற அக்கறையை விட அதிக அக்கறை கொள்பவர் கடவுள். எனவேதான் இஸ்ரயேலர்கள் தாங்கள் தவறியது மட்டுமல்லாது வழி மரபினரையும் வழி தவறச் செய்து வேற்று கடவுளர்களை வழிபட்டு தீமைக்குள் தள்ளியதால் என் மகனைப் பலியிட்டாயே என எசேக்கியேல் மூலம் கடவுள் பேசினார். (23:7).

தி.பா. 127:4 - பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம். கடவுளின் பிள்ளைகளாக வளர்த்தல் கடவுளின் எதிர்பார்ப்பு.

நீ.த. 13:12 - பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் என்று கேட்டார்.

எபே. 6:4 - ஆண்டவருக்கு ஏற்ற முறையில் வளர்த்தல். என்னுடைய பிள்ளையாய் வளர்த்தல் அல்ல. கடவுளின் பிள்ளையாய் வளர்க்கப்பட வேண்டும். பெற்றோரின் எண்ணங்கள் எதிர்பார்ப்புகளில் பிள்ளைகள் வளர்வதை விட ஆண்டவரின் எண்ணங்களில் வளர்தல் சிறப்பானது.

வாழும் காலத்தை விரும்பி வரும் காலத்தை இழப்பது அபாயகரமானது. வாழும் காலமும், வரும் காலமும் கடவுளுடையதாய் அமைய பற்றுறுதியில் பேணி வளர்த்தல் தேவையானது. பணத்தினால் வளர்த்தல் அல்ல. வருமானத்திற்காக வளர்த்தல் அல்ல. வாழும் மாதிரிகளாய், விசுவாச விதைகளாக, வாழும் காலத்திற்கும், வரும்காலத்திற்கும் ஆன்மீக அடையாளங்களாக பற்றுறுதியில் பேணி வளர்ப்போம்.

**அருள்திரு. I. ரெஞ்சித் வேதகுமார்**

12-11-2017

ஒன்றிப்பு ஞாயிறு

# மண்பாண்டங்களில் செல்வம்

**TREASURES IN CLAY JARS**

| | |
|---|---|
| மீக். 6:1-8 | 2 கொரி. 4:7-15 |
| தி.பா. 106:1-12 | மாற். 4:26-29 |

**"இந்தச் செல்வத்தை மண்பாண்டங்கள் போன்றே நாங்கள் கொண்டிருக்கிறோம்." 2 கொரி. 4:7**

கொளுத்தும் வெயிலிலும் நீ மட்டும் எப்படி உள்ளேயும் வெளியிலும் ஜில்லென்று இருக்கியாய்? குளிர்ந்த நீரையும் எங்களுக்குத் தருகிறாய்?... என்று மண்பானையிடம் ஒருவர் கேட்டார்.

மண்பானை சொன்னது "என்னுடைய ஆரம்பமும் மண்தான். இறுதியும் மண்தான்". இதை நான் புரிந்து கொண்டிருப்பதால் தான் குளிர்ந்த நீரை உங்களுக்குத் தர முடிகிறது எனப் பதிலளித்தது.

யார் ஒருவர் தனது தொடக்கத்தையும் முடிவையும் உணர்ந்திருக்கிறாரோ அவரே வாழ்வில் வெற்றி பெற முடியும். அருட்பணியாளர் பவுல் மண்பாண்டமாம் உடல் கிறிஸ்துவின் நற்செய்தியால் உயர்வு பெற்றது என்று கூறுகின்றார். இந்த மண்ணால் உருவான உடல் (மண்பாண்டம்) எளிமையானது, உடையும் தன்மை கொண்டது, வலிமையற்றது, சாதாரணமானது. இந்த மண்பாண்டம் கிறிஸ்துவின் நற்செய்தி ஆகிய செல்வத்தால் நிரப்பப்பட்டு மேன்மை அடைகின்றது. இந்த நற்செய்தி கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்ப்பை உள்ளடக்கியுள்ளது.

மண், மனித வாழ்வின் மூலம் மண்ணைப் பிரிந்து வாழ்தல்,இயலாத ஒன்று. மண் மனிதனுக்கு பாதுகாப்பு, உணவு, உடை, உறைவிடம், சுமைகளையும் தாங்குகின்றது. நமது வாழ்வு, எத்தனை உயர உயரே பறந்தாலும் மண்ணில் காலூன்றிய வாழ்வாக இருந்திட வேண்டும். நாம் மண்ணானவர்கள் என்ற சிந்தனையை மனதில் பதித்துக் கொள்ளல் வேண்டும். அருட்பணியாளர் பவுல் நற்செய்தித் தொண்டாற்றியதைக் குறித்து பெருமை கொள்ளவில்லை, நற்செய்தியின் பொருட்டு சந்தித்த இன்னல்கள் நடுவிலும் மண்பாண்டமாம் உடலை மேன்மையடையச் செய்தது கிறிஸ்துவின் நற்செய்தி என்று பறைசாற்றுகின்றார்.

இறையாற்றலால், சாதாரணமான (Ordinary) மண் அசாதாரணமானதாக (Extraordinary) மாற்றப்படுகின்றது; இன்னல்கள் நடுவில் தேங்கிய நிலை (Passive) இயங்கிய நிலையாக (Active) மாற்றப்படுகின்றது.

## *1. இறையாற்றலால் சாதாரணம் அசாதாரணமானது :*

(2 கொரி. 4:17)

இறை வார்த்தை சாதாரணமான மண் பாண்டமான மனிதனை அசாதாரணமான செயல்களைச் செய்ய நடத்துகின்றது. எனவே, பவுல் இறைவார்த்தையாம் நற்செய்தியை செல்வம்/பொக்கிஷம்/சொத்து என்று கூறுகின்றார். பொதுவாக செல்வம் உடைமை, தங்கம், வெள்ளி, நிலம் சார்ந்த பொருளுடையது. இயேசு இவ்வுலகச் செல்வம் நிலையற்றது, விண்ணகச் செல்வத்தை எதிர் நோக்கச் சொல்கிறார். (மத். 6:19, மத். 19:21). பவுலோ நற்செய்தியையே ஒரு செல்வமாகக் கருதுகிறார். (2 கொரி. 4:7). இந்த ஆற்றல் மிகுந்த நற்செய்தியாகிய செல்வம் சாதாரணமான மண்பாண்டமாம் எங்களை அசாதாரண செயல்களைச் செய்ய நடத்தியது. எனவே பவுல், கிறிஸ்துவில் தான் "இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாம் மறைந்துள்ளது" (கொலோ. 2:3). இந்த நித்தியச் செல்வங்களை கொண்டிருப்பது அரசச் செல்வங்களைக் கொண்டிருப்பதிலும் மேலானது (எபி. 11:26).

இறைவார்த்தையாம் நற்செய்தி மண்பாண்டமாம் சாதாரணமான மனித உள்ளங்களில் விதைக்கப்படும் போது அசாதாரண செயல்களைச் செய்கின்றது. நற்செய்தியாம் விதை ஆற்றல் (சக்தி) உள்ளது. அது மனித உள்ளத்தில் வளர்ந்து கனி தரும், பிறரை வாழ வைக்கும். "முதலில் தளிர், பின்பு கதிர், அதன்பின் குதிர் நிறை தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது" இறைவார்த்தை ஒரு மனிதனில் செயலாற்றுவது இறையாற்றலே! "காற்றின் போக்கையோ, கருவுற்ற பெண்ணின் வயிற்றில் உயிர் வளரும் வகையையோ நீ அறிய இயலாது; அவ்வாறே அனைத்தையும் செய்கிற கடவுளின் செயல்களையும் உன்னால் அறிய முடியாது". (ச.உ. 11:5).

நற்செய்தியை உள்ளத்தில் சுமப்பவர் கடுகு விதைபோன்றவர், சிறிய ஆரம்பம், பெரிய மரமாக வளரும். உயிரினங்கள், இளைப்பாறும் ஆற்றல் உடைய விசுவாச மனிதர்கள் இவர்கள்.

மகாராசன் வேதமாணிக்கம், ரிங்கல்தெளபே-யால் விதைக்கப்பட்ட நற்செய்தியாம் இறைவார்த்தை வளர்ந்து பெரிய ஆலமரமாக இரண்டு பேராயங்களாக வளர்ந்துள்ளது. இது இறையாற்றலின் வெளிப்பாடே. சாதாரணமான நம் மக்கள் சமூகத்தில் அசாதாரணமான செயல்களை செய்கிறவர்களாக மாற்றப்பட்டனர்.

இறைவன் கரத்தில் நம்மைத் தரும் போது சாதாரணம் அசாதாரணமாகும். தாவீது கரத்தில் இருந்ததோ சாதாரண கூழாங் கற்கள், கவண். இறைவன் கரத்தில் தந்தார். அசாதாரண வெற்றி கண்டார். மோசேயின் கரத்தில் சாதாரண சிறிய கோல், இறைவன் கரத்தில் தந்தார். அசாதாரண செயல்கள் செய்யும் கருவி ஆனது. கிதியோன் கரத்திலிருந்த

சாதாரணமான பானை அசாதாரணமான வெற்றியைத் தந்தது. இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்தனர்; சாதாரண தண்ணீர் அசாதாரணமான இரசமானது.

நற்செய்தியாம் செல்வம் ஆண்டவர் நமக்குத் தந்த பரிசு. அவ்விதையாம் நற்செய்தி நம்மில் வளர நல்ல நிலமாவோம், விசுவாசமென்னும் உலகத்தை வெல்லும் ஆயுதத்தை பிடிப்போம் (1 யோ. 5:4) இறையாற்றலால் நம்மை இறைவன் அசாதாரணமான செயல்களைச் செய்யும் கருவிகளாக்குவார்.

## *2. இன்னல்களிலும் இயங்கச் செய்யும் இறைவன் :*

(2 கொரி. 4:8)

இங்கிலாந்து தேசம் காலனி ஆதிக்கத்தில் கொடி கட்டிப் பறந்த காலம் அது. இச்சூழலில் பல நெருக்கடிகளையும், பல நாடுகளின் நெருக்குதல்களையும், தாக்குதல்களையும் சந்தித்த போது அப்போதைய பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் “எவ்வளவு எதிர்ப்புகள் வரினும் இங்கிலாந்து அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியுடையதே” என்றார். அருட்பணியாளர் பவுல் நாங்கள் இன்னலுற்றாலும், குழப்பமுற்றாலும், துன்புறுத்தப்பட்டாலும், வீழ்த்தப்பட்டாலும் எங்களை இயங்கச் செய்வது கிறிஸ்துவின் சிலுவை மரணம் (கொரி. 4:8-10) என்கிறார்.

அவர் நம்மைப் போல் பாடுகளை ஏற்றுக் கொண்டவர் பாடுபடும் நமக்கு உதவி செய்ய வல்லவர். ஆகவே, இன்னல்கள் நடுவிலும் இயங்கச் செய்யும் இறைவனைத் துணையாகக் கொள்ளுவோம். நாம் களிமண்ணாலான சிறிய பாண்டங்கள். இந்த மண்பாண்டங்களில் விலையேறப்பட்ட பொக்கிஷமாம் நற்செய்தியைச் சுமக்கின்றோம். நம்முடைய மண்பாண்டங்களுக்கு பல நெருக்குதல், நற்செய்திக்கு எதிராக பல அழுத்தங்கள். இந்த அழுத்தங்கள் பல கீறல்களை, குறைவுகளை சில நேரங்களில் ஏற்படுத்துகின்றது. இந்த மண்பாண்டத்திற்கு அந்தச் சோதனைகள் என்னும் அலைகளைத் தாண்டி இயங்க, செயல்பட நம்மை இயேசுவின் சிலுவை மரணம் தூண்டுகின்றது.

பவுல் நற்செய்தியைச் சுமந்ததால் இடர், நெருக்கடி, வேதனை, அடிக்கப்பட்டோம், சிறையில் அடைக்கப்பட்டோம். குழப்பங்களில் சிக்கினோம், பாடுபட்டு உழைத்தோம், கண் விழித்திருந்தோம், பட்டினி கிடந்தோம் (2 கொரி. 6:4, 5). என்று பட்டியலிட்டு சந்தித்த “புயல்களை” தாண்டி பயணித்த அனுபவத்தை கூறுகின்றார். இன்னும் 2 கொரி. 11:23-27-ல் இன்னல்களை எடுத்துரைக்கின்றார். இத்தனை இன்னல்களை மேற்கொள்ள கிறிஸ்துவின் சிலுவை தூண்டுதலைக் கொடுக்கின்றது. இத்தனை இன்னல்கள் நடுவிலும் பவுல் கடவுளின் வார்த்தையைத் திரித்துக் கூறவில்லை. (2 கொரி. 4:3), மிகுந்த மன உறுதியோடு தாங்கி வருகின்றோம். (2கொரி. 6:4) என்று கூறுகின்றார்.

இன்னல்களற்ற வாழ்வை திருமறை கற்றுத்தரவில்லை. "கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர்". (2 திமொ. 3:12). யோசேப்பின் இறைபயம், தீமையை விட்டு விலகியது, அநீதிக்கு கூட்டு மறுத்த செயல்கள் இன்னல்களையே பரிசாக தந்தது. யோசேப்பின் வாழ்வு போராட்ட களங்களையே சுமக்கின்றது. இன்னல்கள் தொடத்ர் என்ற யூதாவின் ராஜாவுக்கு எதிராக பகைநாட்டவர்கள் ஒன்று சேர்ந்து இன்னல்கள் தந்தனர். இறை சமூகத்தைத் தேடினார் எங்களுக்கு வலிமை இல்லை என்று மனம் திறந்து மன்றாடினான். இன்னல்கள் நடுவிலும் துடிப்புடன் இயங்க ஆண்டவர் ஆற்றல் கொடுத்தார் (2 குறிப். 20).

"கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்வதற்கு மட்டுமல்ல அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கு அருள் பெற்றுள்ளீர்கள்" என்று பிலிப்பியச் சபைக்கு எழுதுகிறார் பவுலடிகளார் (பிலிப். 1:29-30). துன்பங்கள் நன்மையே பயக்கும் (1 பேதுரு 1:6-7), துன்பங்களில் மகிழுங்கள் (1 பேதுரு 4:12-13).

இறையன்பர்களே! வாழ்க்கைப் படகில், கல்லையும், முள்ளையும், ஆற்றலையும், நெருப்பையும் கடந்து செல்ல வேண்டிய கட்டாயம் வரும். இறைச் சமூகத்தை நாடுவோம், சிலுவையை நோக்குவோம், இன்னல்கள் நடுவிலும் இயங்க ஆண்டவர் ஆற்றல் தருவார்.

மண்ணிலே நம்மை உருவாக்கி, நற்செய்தியாம் செல்வத்தை நம்மில் தந்தவர், உடலாம் மண்பாண்டத்தை தூய ஆவியரின் வரங்களால் அலங்கரித்தவர். நம்மை அசாதாரணமான மனிதர்களாக வாழ, இன்னல்கள் நடுவிலும் செயல்பட அழைக்கின்றார். "ஆண்டவரே! நீரே எங்கள் தந்தை; நாங்கள் களிமண், நீர் எங்கள் குயவன்; நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகளே" (எசா. 64:8).

**அருள்திரு. C. கில்டன் தயானந்த்**

19-11-2017 | பெண் குழந்தை ஞாயிறு

# பெண் குழந்தைக்கு வருங்காலத்தை உறுதிசெய்தல்

**ASSURING FUTURE FOR THE GIRL CHILD**

2 அர. 5:1-5 | தி.ப. 12:11-17
தி.பா. 8 | மாற். 5:21-24, 34-43

**"சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம் த-த்தாகூம்" என்றார். அதற்கு, "சிறுமி உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு" என்பது பொருள். மாற். 5:41**

"மங்கையராய் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றார் கவிமணி. மங்கையராய் இப்புவியில் பிறக்கும் பெண்குழந்தைகளின் வாழ்வு, பிறப்பின் போதும், பிறந்த பின்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும், உமது (கடவுளின்) கையில் உள்ளது (தி.பா. 31:15), எங்கள் வாழ்நாள்களைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும் (தி.பா. 90:12) என்று திருப்பாடகர் மனிதர்களுடைய நிலையாமையைக் கூறுகிறார். வருங்காலங்களை அறிந்து கொள்ள இயலாத மனிதர்கள் வாழும் இந்தப் பூமியில் பெண்குழந்தைகளுக்கு ஏன் வருங்காலத்தை உறுதி செய்ய வேண்டும் என்கிற வினாவும் நம்முடைய மனதில் எழுகிறது. நாளைய தினத்தில் என்ன நடக்கும் எனத் தெரியாத மனிதர்களாகிய நாம் வருங்காலத்திற்காக, நல்வாழ்விற்காக வருங்கால வைப்புநிதி, ஷேம நலத்திட்டம் (Health Insurance) என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டுகிறோம். ஆனால் இறைச்சாயலில் படைக்கப்பட்ட (தொ.நூ. 1:27) பெண் குழந்தைகளின் வருங்காலத்தை உறுதி செய்வதில் தவறிவிடுகிறோம். பெண் குழந்தைகள் கருக்கொலை, பெண்சிசுக் கொலை, பாலியல் வன்முறை, குழந்தைத் திருமணம், அமில வீச்சு, வரதட்சணைக் கொடுமை போன்ற பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். ஆண் குழந்தைகளைப் போலவே, பெண் குழந்தைகளும் வாழப்பிறந்தவர்கள். அவர்களுக்கும் கனவுகள் இருக்கின்றன. அவர்களும் இறைத்திட்டத்தில் இணைந்து செயலாற்றக்கூடியவர்கள் என்பதை மறந்துவிடுகிறோம். யவீருவினுடைய மகளுடைய வாழ்வில் இயேசு கிறிஸ்து எங்ஙனம் அவளுடைய வருங்காலத்தை உறுதி செய்தார் என்பதை மாற்கு 5:21-24, 34-43 ஆகிய வசனங்களை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம்.

## *1. நிம்மதி இல்லாத நிகழ்காலம் :*

சமூகத்தில் புகழ்பெற்ற நிலையிலிருந்தவர் யவீரு. தொழுகைக்கூடத் தலைவர் ஒரு யூதர் (வ. 22). தன்னுடைய 12 வயது மகளுக்காக, திரளான ஜனக்கூட்டத்தின் (வ. 21) மத்தியில் இறை மகன் இயேசு கிறிஸ்துவின் காலில் வீழ்ந்து மன்றாடுகிறார். என் மகள் மரணத் தருவாயில் இருக்கிறாள். (வ. 23) என்று மரணத்தின் பிடியில், சாவின்

விளிம்பில் (She is at the Point of death) நின்ற மகளுக்காக வேண்டுதல் செய்கிறார். அவருடைய கோரிக்கையெல்லாம் அவள் ஆரோக்கியமடைய ஆண்டவர் வந்து அவள் மேல் கரங்களை வைக்க வேண்டும். அப்பொழுது பிழைப்பாள் என்பதே. வாழ்க்கை வாழ்வதற்கே! மானுடத்தைப் படைத்த ஜீவாதிபதியின் நோக்கமும், மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே. ஆனால் யாருமே விரும்பாத மரணம் தன் மகளுக்கு வரப்போகிறதென்று அறிந்து நிம்மதியில்லாதவராய், நிலைகுலைந்தவராய்க் காணப்படுகிறார். மரணத்திற்கும் தனக்கும் ஒரு அடி தூரந்தான் இருக்கிறது என்றார் தாவீது (I சாமு. 20:30). மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டன. துர்ச்சனப் பிரவாகம் என்னைப் பயப்படுத்தியது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. மரணக்கண்ணிகள் என் மேல் விழுந்தன (திபா. 18:4,5). இதுதான் யவீருவின் மகளுடைய நிலைமை. தன் மகள் மரணத்தைச் சமீபித்து விட்டாள் (She is near to death) என்று அவளுடைய பரிதாபமான நிலையைக் கூறி இயேசுவை அழைக்கிறார். தகப்பன் பெண்குழந்தைகளை அதிகமாக நேசிப்பது உலக நியதி. ஆனால் தன் அன்பு மகள் மரண அவஸ்தைப்படுவதைத் தாங்க இயலாதவராய், அவள் எப்படியும் ஆரோக்கியம் பெற வேண்டும் என்று முயற்சிகளை எடுக்கிறார். நாம் வாழும் இந்தக் காலத்திலும் பெண்களும், பெண்குழந்தைகளும் உயிரோடிருந்ததும் மரண வேதனைப்படுகிறார்கள். தாயின் கருவறை சிலருக்குக் கல்லறையாக மாறுகிறது. பெண் கருக்கொலை, பெண்சிசுக்கொலை என்று பல்வேறு மரண இக்கட்டுகளைச் சந்திக்கிறார்கள். பிறந்த பின்னும் பிராணனைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு பாதுகாப்பற்ற உலகிலே வாழும் போதே நடைபிணமாக, ஜீவனையும் கசப்பாக்குகின்ற நிலைமையில் (வி.ப. 1:14), எப்போது மரணம் தங்களைச் சமீபிக்கும் என்று நிம்மதியில்லாமல் வாழ்வா - சாவா போராட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிற்கு அருட்பணியாளராக வந்த ஜாண் ஸ்கடர் திண்டிவனம் பகுதியில், மருத்துவ இறைப்பணி செய்த போது, மகப்பேற்றின் போது மரண அவஸ்தையினால் பெண்கள் மரித்துப் போகிற அவல நிலையைக் கண்டு மனதுருகினார். அவர் மகள் ஐடா ஸ்கடர். ஆண் மருத்துவர் பிரசவம் பார்த்து பெண் பிழைத்தாலும் அவமானம் என்று அநேகப் பெண்களை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தனர். மரண அவஸ்தையிலிருந்து மீட்டு, தாயும், சேயும் உயிருடன் காப்பாற்றப்பட தன்னை அர்ப்பணித்ததின் விளைவே (CMC, Christian Medical College, Vellore)-யவீருவும் தன்னுடைய மகளுடைய மரண வேதனை மாற கரிசனையோடு ஆண்டவருடைய பாதத்தில் விழுந்து வேண்டினாரே, அப்படிப்பட்டதான கரிசனை நமக்கு உண்டா?

### *2. இழந்து போன இறந்தகாலம் :*

யவீருவின் வேண்டுதலைக் கேட்டு இயேசு கிறிஸ்துவும் அவரோடே கூடப்போனார் (வ. 24). அப்பொழுது 12 வருடமாகப் பெரும்பாடுள்ள ஒரு பெண் இயேசு கிறிஸ்துவின் ஆடையைத் தொட்டு

ஆரோக்கியமாகிற சம்பவம் நடைபெறுகிறது. அந்த நேரத்தில் யவீருவினுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள் என்ற துக்கச் செய்தியைச் சொன்னார்கள். மரண வேதனையிலிருந்த தன் ஒரே குமாரத்தி மரித்துப் போனாள் என்ற செய்தி எல்லாமே முடிந்துவிட்டது போன்ற ஒரு நிலைக்கு யவீருவைத் தள்ளியது. தன் வாழ்வில் 12 வருடமாக எல்லாமுமாக இருந்த மகளை இழந்துவிட்ட அவர் நிலைகுலைந்து போனார். எப்படியும் இயேசு கிறிஸ்துவை இல்லம் அழைத்துச் சென்று மகளைப் காப்பாற்றுவேன் என்றவருடைய மனதில் இருந்த நம்பிக்கை முழுவதும் அற்றுப் போனது. உயிரோடிருக்கிறவர்களிடம் மட்டுமே நம்பிக்கை இருக்கும். (Where there is life, there is hope). ஆனால் தன் மகளுடைய மரணம் தன்னுடைய நம்பிக்கையைச் சாகடித்துவிட்டது. இறைவனை அழைத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டதையும் நினைத்து வருந்துகிறார். ஆனால் தீய ஆவிகள் மேலும் (மாற். 1:23-28), பிணிகளின் மேலும் (மாற். 1:29-31, 34, 40-45), இயற்கையின் மேலும் (மாற். 4:34-51), ஏன் மரணத்தின் மேலும் (I கொரி. 15:54, 55) தனக்கு வல்லமையுண்டு என்பதைக் காட்டும் வண்ணமாக யவீருவினிடத்தில் அஞ்சாதே! நம்பிக்கையை மட்டும் விட்டுவிடாதீர்! என்று சொல்லுகிறார். இயேசுவின் வல்லமையினால் மரணத்திலும், உயிர்கொடுத்து நம்பிக்கையைத் தரமுடியும் என்பதை உறுதி செய்கிறார். (Where there is death, there is hope as well). இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார் (லூக். 19:10). எல்லாம் முடிந்து போனது என்ற துர்ச்செய்தியான "உம்முடைய மகள் இறந்துவிட்டாள்" என்பதை ஒரு சிலர் யவீருவிடம் சொல்லுகிறார்கள். பெண்களைப் பற்றி தவறான செய்திகளையும், வதந்திகளையும் பரப்புவதில் கரிசனையற்றவர்களாய்ச் செயல்படுகிறவர்களும் உண்டு. முடிந்து போனது, பெண் குழந்தையினுடைய வாழ்வு முடிந்து போனது என்ற நம்பிக்கையற்ற செய்தியைச் சொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? மகள் மரித்துப் போன போதும் அவரோடு தன்னை இணைத்துக் கொண்டு அவருக்கு நம்பிக்கை கொடுத்த இயேசு கிறிஸ்துவைப் போலிருக்கிறோமா?

கடவுளுக்குச் சேவை செய்தல் என்னும் நிலையில் தேவதாசிகளாகப் பெண்பிள்ளைகள் பயன்படுத்தப்பட்ட டோனாவூர் பகுதியில், ஆண்களின் இச்சைக்கு இரையான, சரீரத்தில் செத்திருந்த பெண் குழந்தைகளை, வாலிபப்பிள்ளைகளை மீட்க 'தாமரை மொட்டுகள்' என்ற அமைப்பை ஏற்படுத்தி செத்துப்போயிருந்தவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கிறவராகச் செயல்பட்டார் ஏமி கார்மைக்கேல் அம்மையார்.

### *3. வசந்தமான வருங்காலம் :*

மரண வேதனையிலிருந்தவள், மரித்துப் போன சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து அவளுடைய இல்லம் செல்கிறார். எல்லாம் முடிந்து போன சூழலிலும் யவீருவோடு, பேதுரு, யாக்கோபு, யோவானைக் கூட்டிக்கொண்டு செல்கிறார். மரணவீட்டில் அழுது புலம்புகிறவர்களைப் பார்த்து ஏன் இந்த அழுகை? ஏன் இந்த அமளி எனக் கேட்கிறார். (வ. 39). பிள்ளை

இறக்கவில்லை, உறங்குகிறாள் என்றார். அதைக் கேட்டவுடனே அங்கிருந்தவர்கள் நகைக்கிறார்கள். அவர்களுடைய இந்தச் செய்கை மரண வீட்டில் எப்படிச் சாத்தியமாயிற்று என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. எப்போது அடக்கம் நடைபெறும் என நினைத்தவர்களுக்கு இது சிரிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. துக்கவீடு என்ற எண்ணம் கூட அவர்களிடமில்லை. இன்றைய நாட்களிலும் பெண்குழந்தைகளைப் பரிகசிக்கிற ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள். ஆனால் இயேசு அந்தப் பிள்ளையின் பெற்றோர் மற்றும் சீடர்களோடு பிள்ளையிருந்த இடத்திற்குச் செல்லுகிறார் (வ. 40). அங்கு பிள்ளையின் கையைப் பிடித்து, தலித்தா, கூம் என்றார். அதற்கு, ‘சிறுமி உனக்கு சொல்லுகிறேன் எழுந்திரு’ என்பது பொருள். தலித்தாகூம் என்பது அரமேயச் சொல். இயேசு கிறிஸ்து எபிரேயம், கிரேக்கம், அரமேய மொழிகளை அறிந்திருந்தார். புதிய ஏற்பாட்டில் எப்பத்தா (மாற்.7:34), ரபூனி (யோ. 20:16), ஏலி ஏலி லெமா சபக்தானி (மத். 27:46). ஓசன்னா (மத். 21:9, 15) போன்ற அரமேயச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யவீரு இறைவனிடம் வேண்டிக் கொண்டபோது ஆரோக்கியம் பெற தன் பிள்ளை மீது கரங்களை வையும், அவள் பிழைப்பாள் (வ. 23) என்றார். இயேசு கிறிஸ்துவோ அவருடைய பிள்ளையின் கையைப் பிடித்து தூக்கிவிட்டது ஆச்சர்யப்படுத்தியிருக்கும் (வ. 41). கைதூக்கிவிடுதல் ஆற்றல்படுத்தலின் அடையாளம் (Sign of empowerment). ஆரோக்கியத்தை மட்டுமல்ல ஆற்றலையும் தந்து ஆகாரம் கொடுக்கச் சொல்லுகிறார். மரித்துப் போன அவளுக்கு மறுவாழ்வு கொடுக்கிறார். அவளுடைய வருங்காலத்தை வசந்த காலமாக்கி வசதி செய்கிறார். ஆகாரம் கொடுங்கள் எனச் சொல்லுவது அவளுடைய சரீரத்திற்குத் தேவையான பெலத்தைப் பூர்த்தி செய்யும்படியாகக் கூறுகிறார். உயிர் கொடுத்த இறைவன் உணவு கொடுத்து வாழ்வை வசந்த காலமாக்கி வருங்காலத்தை வளமாக்குகிறார்.

உலகிலேயே மிகக் குறைந்த வயதில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானைச் சார்ந்த மலாலா என்ற சிறு பெண், பெண் கல்வியை ஆதரித்து, அதனால் 2012-ம் ஆண்டு அக்டோபர் 9-ம் தேதி பேருந்தில் வந்த போது தலிபான் தீவிரவாதிகள் அவளைத் தலையில் துப்பாக்கியால் சுட்டனர். தலையில் குண்டு பாய்ந்து நினைவிழந்த நிலையில் உயிருக்குப் போராடி, உயிர் பிழைத்து லண்டனில் ஒரு பள்ளியில் படிக்கும் மலாலா தன் உயிரே போனாலும் பரலாயில்லை. பெண்கல்வி பெண்களின் முன்னேற்றத்திற்கு, எதிர்காலத்திற்கு ஏற்றத்தைத் தரும் எனப் போராடி வருகிறார்.

பெண் குழந்தைகளின் நிகழ்காலத்தை நிம்மதியாக்குவோம். மரித்துப்போயிருக்கும், சடலமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு மறு வாழ்வு கொடுத்து, பாதி வயதில் எடுத்துக் கொள்ளப்படாமல் (திபா. 102:24), பரிபூரணமாய் வாழ வருங்காலத்தை வசந்த காலமாக மாற்ற உறுதி செய்வோம்.

**முனைவர். ஷோபனா கின்சன்**

26-11-2017

# ஆண்டவரின் வருகைக்கான ஆயத்தம்

**PREPARING FOR THE COMING OF LORD**

ஒசே. 10:12-15 கொலோ. 4:1-6
தி.பா. 37 லூக். 12:35-40

**"...நீங்களும் ஆயத்தமாயிருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்." லூக். 12:40**

நடைபாதையிலே பெரிய கல் ஒன்று கிடந்தது. நடந்து செல்பவர்களின் பார்வையில் அது தென்படாமல் போகவில்லை. பலரும் கல்லை வசைபாடிக் கொண்டு பயணம் செய்தார்கள். கல் எதையும் கண்டு கொள்ளவில்லை. சிறப்புக் கலைஞரான மைக்கேல் ஆஞ்சலோ அந்தப்பக்கம் பயணம் செய்தார். கல்லைக் கல்லாகப் பார்த்த மக்களிடையே கல்லைக் கண்ணோடு பார்த்தார் மைக்கேல் ஆஞ்சலோ. ஒன்றுக்கும் உதவாத கல் அவரின் கைவண்ணத்தில், உளியின் ஓசையில் சிற்பமாக உயிர்பெற்றது. அரசர் தாவீதாக, கற்சிற்பம் பேசா காவியமாக நின்று, பாதையில் செல்வோரைப் பேசவைத்தது. ஒருவர் சிற்ப கலைஞரான மைக்கேல் ஆஞ்சலோவிடம் ஒரு கல்லை எப்படி இப்படியொரு கலை நுணுக்கமிகுந்த சிற்பமாக உருவாக்கினீர் என்றார். அதற்கு அவர் தேவையற்ற பகுதிகளை அகற்றி சீரமைத்து தேவையான பகுதிகளை மெருகூட்டினேன் என்றார்.

ஆண்டவரின் வருகைக்காய் இறைமக்களாகிய நாம் நம்மை ஆயத்தம் செய்தல் வேண்டும். வாழ்வில் அகற்ற வேண்டியவைகளை அகற்றி, அநீதியான சுயநலச் செயல்களை விடுத்து இறைக் கட்டளையின்படி வாழ்ந்து நம்மை சரிசெய்வது சிறப்பு ஆகும். மக்களின் சீர் குலைந்த வழிகளைச் செம்மைப்படுத்தி அவர்களின் மனங்களை மாற்றியமைத்து மெசியாவின் வருகைக்காய் மக்களை ஆயத்தம் செய்தார். திருமுழுக்கு முனிவர் யோவான். அதைப்போன்று ஆண்டவரின் வருகைக்காய் நம்மை ஆயத்தம் செய்ய இன்றைய இறை வாசகங்கள் தரும் அறைகூவல் என்ன என்பதைத் தியானிப்போம்.

## *1. வாழ்வைச் சீரமைத்தல் :*

தடகளப் போட்டியில் பங்கு கொள்ளுகிறவர்கள் தங்களைச் சிறப்பாக நெடுநாள் ஆயத்தம் செய்தால் மட்டுமே போட்டியில் பதக்கங்களைப் பெற்று பாராட்டுகளை பெற முடியும். அதைப் போன்று ஆண்டவரின் வருகைக்காய் ஆயத்தம் செய்கிறவர்கள் தங்கள் அநீதி நிறைந்த வாழ்வை சீரமைத்தல் வேண்டும். ஒசேயா இறைவாக்கினர் இஸ்ராயேல் மக்களுக்கு வாழ்வை சீரமைக்க அறைகூவல் விடுத்தார்.

வசனம் 9, 10 இல் இஸ்ரயேலர் கிபியாவிலே தங்கியிருந்த நாளிலிருந்து பாவம் செய்தனர். கிபியாவின் நாள் தீமைகள் நிறைந்த நாள் இங்கு கிபியா இரு நிகழ்வுகளை நினைப்பூட்டுகிறது. அ) சவுலை அரசராக திருநிலைப்படுத்தியது (1 சாமு. 10:26). ஆ) பாலியல் வன்முறையால் நடந்தப் போர் இவ்விரு நிகழ்வுகளும் இங்கு தொடர்புப்படுத்தப்படுகின்றன. மறுபடியும் இங்கே கடும் போர் ஏற்படும் என முன்னறிவிக்கப்படுகிறது. இப்போர் வேற்று நாட்டுப் படையெடுப்பால் ஏற்படும். அரசர் கொல்லப்படுவார். கிபியாவில் தொடங்கிய அரசு அங்கேயே முடிவுறும் என அறிவிக்கிறார் ஒசேயா.

எப்பிராயீம் பழக்கப்பட்ட புணையடிக்கும் பசுவுக்கு உருவகப்படுத்தப்படுகின்றது. எப்பிராயீம் முன்பு பணிவுடைய, கீழ்ப்படிதலுடைய நுகமின்றிப் புணையடிக்கும் பசுவாக இருந்தது. இப்போது இந்நிலை மாறுகிறது. எனவே எப்பிராயீம் மேல் நுகம் ஏற்றப்படும். எப்பிராயீம் மேல் நுகம் ஏற்றப்படக் காரணம், எப்பிராயீம் கொடுமையை விதைத்து தீவினையை அறுவடை செய்து பொய்மையின் கனிகளை உண்டார்கள். (இங்கு யாவேயின் குற்றச்சாட்டுகள் உழுதல், அறுவடை செய்தல், உண்ணல் ஆகியன ஆகும்) அரசர் கடவுளை நம்புவதற்குப் பதிலாக தம்முடைய ஆற்றலிலும், படைப்பலத்திலும் நம்பிக்கை வைக்கிறார். இப்போர் கடுமையான விளைவைக் கொண்டுவரும். எப்பிராயீம் நம்பிக்கை வைத்திருக்கின்ற அரண் அழிக்கப்படும். மக்கள் நாடு கடத்தப்படுவர். எனவே மனமாறி யாவேயிடம் திரும்பி வர அறிவுரை கூறப்பட்டது. அப்போது தரிசு நில மக்கள் தாகத்தை தணிக்க மழை வாக்களிக்கப்பட்டது. கடவுள் உயிரூட்டும் மழை நீரைக் கொடுப்பார். இந்த நீரைப் பெறுவதற்கு மக்கள் தங்கள் இதயமாகிய நிலத்தை தயாரிக்க வேண்டும். நேர்மையை விதைத்து, அன்பை அறுத்து, நிலத்தை பண்படுத்த வேண்டும். ஆக வாழ்வில் அநீதியான செயல்களை தவிர்த்து, சரிசெய்து ஆண்டவரின் வருகைக்கான ஆயத்தம் செய்தல் வேண்டும்.

## *2) வாழ்வில் காத்திருத்தல் :*

'காத்திருப்பவர் கடவுளைக் காண்கிறார்'. "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு" என்கிறது நாலடியார். உண்மை தான். தன் இரைக்காக நெடுநேரம் ஒற்றைக்காலில் காத்து நிற்கும் கொக்கு காத்திருந்ததின் பலனாக தன் உணவை கொத்தித் தின்னும். காத்திருத்தல் ஒரு சுகமான சுமை. ஆனால் இன்று காத்திருத்தலை சுகமாகக் கருதாமல், சுமையாக கருதுகின்றனர். காரணம் வாழும் சமுதாயம் Instant Culture-ஐ முக்கியத்துவப்படுத்துகிறது. அதன் பலனாக 6 மாதத்தில் விளைந்து கொடுக்க வேண்டிய அரிசியை 3 மாதத்தில் விளைய வைக்கின்றோம். ஆறு வருடத்தில் பலன் தர வேண்டிய தென்னையை மூன்று வருடத்தில் பலன் தர வைக்கின்றோம். காத்திருத்தல் இல்லாத காரணத்தால்

10 வயதிலே 40 வயதிற்குரிய நாற்காலியைத் தேடுகிறோம். 30 வயதிலே 60 வயதிற்குரிய முதுமையை சுமந்து கொள்கிறோம்.

எகிப்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள், சீனாய் மலை அடியிலே மோசேயின் வருகைக்காய் காத்திருந்தனர். இவ்வாறு காத்திருந்தவர்கள் கடவுளின் 10 கட்டளைகளையும், புதியதொரு வாழ்வையும் பெற்றனர். ஆனால் காத்திருத்தலை சுமையாக கருதி பொன் கன்றை அமைத்து வழிபாடு நடத்தியவர்கள் எல்லாம் வாளுக்கு இரையாகிப்போனார்கள் (வி.ப. 32:27). காத்திருத்தல் என்பது வெறுமனே காத்திருத்தல் அல்லது எதிர்பார்த்திருத்தல் என்பது பொருளல்ல. மாறாக நம் காத்திருப்பு 10 தோழியர் உவமையில், முன்மதிப்புள்ள 5 தோழியர் போல் அமையட்டும்.

லூக். 12:35-38 இல் திருமணத்திற்குப் போன தலைவர் திரும்ப வந்து காத்திராதபடி தங்கள் தலைவர் எப்போது வருவார் என்று அறியாவிடினும், அவர் வருகைக்காய் காத்திருந்தனர். தங்கள் தலைவர் திரும்பி எவ்வேளையில் வந்தாலும் அவருக்கு கதவை திறக்க பணியாளர் காத்திருக்க வேண்டும். ஆகவே விழித்திருந்தனர். உரோமையர் இரவை நான்கு சம பகுதிகளாக பிரித்து கணக்கிட்டனர். யூதர் இரவை மூன்று சம பகுதிகளாக பிரித்தனர். விளக்கு ஏற்றப்பட்டுத் தயாராக இருக்க வேண்டும் என்பது எப்போதும் ஆயத்தமாக, விழிப்பாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது. அவர் வருகைக்கு தவறாது காத்திருக்கும் பணியாளர் பேறு பெற்றவர்.

இறைமக்களாகிய நாம் நம்மையே தயாரித்து காத்திருந்தோம் என்றால், அவரின் வருகை நம்மை அழிவிலிருந்து மீட்கும் (1 தெச. 1:10). தூய பவுலார் தெசலோனிக்கேய மக்களுக்கு (1 தெச. 3:12-14) எவ்வாறு கடவுளின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார். விழித்திருத்தல், இறைவேண்டல் செய்தல், நல்லது செய்தல், அன்பு செய்தல் என்று அன்றாடச் செயல்களைக் கவனமாய்ச் செய்வதன் வழியாய் நாம் கடவுளின் வருகைக்கு நம்மையே ஆயத்தம் செய்ய முடியும் என்கிறார்.

### *3) வாழ்வில் விழித்திருத்தல் :*

விழித்திருத்தல் என்பது எப்போதும் தயாராயிருத்தல் என்பதாகும். தொடக்ககால திருச்சபையினர் உயிர்த்த கிறிஸ்துவின் வருகை விரைவில் நிகழலாம் என்று எதிர்பார்த்தனர். (1 தெச. 5:11). ஆனால் அதற்கு முன் இஸ்ரயேல் முழுவதும் அரசுக்குள் நுழைய வேண்டும் (உரோ. 11:23-29). கி.பி. 70 இல் எருசலேம் அழிக்கப்பட்டப்போது இது நிகழவில்லை. ஆகவே கிறிஸ்துவின் வருகை அறிய முடியாத வருங்காலத்தில் நிகழும் என்று நம்பினர். அதற்கு எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்று

எண்ணினர். திருடர் வரும் நேரம் இன்னதென்று ஒருவரும் அறிய முடியாது. அதுபோன்று மானிட மகன் வருகையும் இருக்கும் (1 தெச. 5:2). இச்சிறு உவமை ஆண்டவர் திரும்ப வரும் நேரம் எப்போது என்று நாம் அறிய முடியாது என்ற உண்மையை தெளிவுப்படுத்துகிறது. திருடன், வீட்டுக்கு எப்போது கன்னம் வைப்பான் என்று உறுதியாக கூற முடியாது. அதைப்போன்று கிறிஸ்துவின் வருகையை எதிர் பார்க்கிறவர்கள் எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்தார்.

மத். 25:1-13 இல் விழிப்போடும், அறிவோடும் இருந்த தோழியர் நள்ளிரவில் மணமகன் வந்தப்போது மணமகனுடன் செல்லும் வாய்ப்பு பெற்றனர். விழிப்பற்ற தோழியர் அந்த வாய்பை இழந்தனர். இறைப் போதனையை கேட்பதில் விழிப்பாய் இருந்த மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைப் பெற்றார். எனவே இறை வருகையை எதிர்நோக்கும் இறைமக்களாகிய நாம் அவர் வருகைக்காய் எப்போதும் விழிப்பாய் இருப்போம்.

கடவுள் மிகவும் பொறுமையுள்ளவர். அவர் காலம் தாழ்த்துகிறார். இறைமக்களாகிய நாம் அனைவரும் மனமாற்றம் பெற வேண்டும் என்பதை அவர் விரும்புகிறார் (1பேதுரு 3:9). நமக்காக காலம் தாழ்த்தும் ஆண்டவரிடம் சரணடைவோம். நம் வாழ்வை சீராக்கம் செய்வோம். அவர் வருகைக்காய் பாதையை ஆயத்தமாக்குவோம். புதிய விண்ணுலகத்தையும், புதிய மண்ணுலகத்தையும் எதிர்பார்க்கும் நாம் நம்மில் நிலவுகின்ற வேற்றுமைகள், வேறுபாடுகள், சுயநலங்கள், பேராசைகள் இவைகளில் மாற்றம் காண முயல வேண்டும். இந்த மாற்றம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். பதவி ஆசை கொள்ளாமல், ஆணவம் கௌரவம் தேடாமல், இறை மானிட விருப்பங்களை மானிட உறவுகளில் நிறைவு செய்யும்போது நாம் அனைவரும் இறை வருகைக்கான வழியை ஆயத்தம் செய்கிறோம்.

**அருள்திரு. S. அருள் ஜெபசிங்**

03-12-2017

## கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல்

**JOYFUL EXPECTATION OF CHRIST'S COMING**

எரே. 33 : 10-16 1 தெச. 3:6-13
திபா. 68 : 11-20 லூக். 1:39-45

**"நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக." 1 தெச. 3:13**

வருங்காலத்தைக் குறித்து பொதுவாக அனைவரும் கருத்தில் கொள்ளுவர். ஒரு குடும்பத்தில் குழந்தையொன்று பிறக்கிறது; குழந்தையின் எதிர்காலம் வளமாயிருக்க வேண்டும் என பெற்றோர் பல திட்டங்களை வகுத்து செயல்படுகின்றனர். பாடசாலைக்கு குழந்தையை அனுப்புவர்; வங்கிகளில் பிள்ளையின்பேரில் சேமிப்பர். தங்களுடைய வாழ்வு திடீரென மறைந்துவிட்டால் குடும்பமாகிய விளக்கு அணைந்து விடக்கூடாது என்பதற்காக ஆயுள்காப்பீட்டில் சந்தாதாரராகுவர். ஆனால் ஆண்டவருடைய வருகையைப் பற்றி பலர் கருத்தில் கொள்ளுகிறதில்லை. சர்வ வல்லமையுள்ள தந்தையாம் கடவுளின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற அருள் நாதர் இயேசு உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்பது நமது பற்றுறுதி அறிக்கையாகும். இறை இயேசுவின் வருகையைக் குறித்த விழிப்பும், அறிவுத்தெளிவும் நமக்குத்தேவை. இக்கண்ணோட்டத்தில் இறைஇயேசுவின் வருகையைத் தியானிப்போம்.

### *1. வஞ்சிக்கப்படாதிருங்கள்*

2தெச. 2:3 எவரும் உங்களை எவ்வகையிலும் ஏமாற்ற இடம் கொடாதீர்.
மாற்கு 13:6 பலர் என் பெயரை வைத்துக் கொண்டு "நானே அவர்" என்று சொல்லிப் பலரை நெறிதவறச் செய்வர்.

அருள்நாதர் இயேசு தமது வருகையைப் பற்றிய செய்தியைக் கூறும்போது பலர் தங்களை கிறிஸ்து என்று சொல்லி பலரை வஞ்சிப்பார்கள், விழிப்பாய் இருங்கள் என அறிவுறுத்தினார். தூய பவுலாரும் இயேசுவின் வருகையைக் குறித்த தெளிவான அறிவில்லாமலிருந்த தெசலோனிக்கேய சபையாருக்கு இயேசுவின் வருகையைக் குறித்த செய்தியினைச் சொல்லும்போது "எவரும் உங்களை எவ்வகையிலும் ஏமாற்ற இடம் கொடாதீர்" என குறிப்பிட்டார்.

கேரளாவில் ஒரு புது செழுமை நற்செய்தி இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இறந்தவர்களுக்கு நற்செய்தி அறிவித்தல்

என்னும் கொள்கை கொண்டவர்கள். வீடுகளில் சென்று இறந்தவர்களின் ஆவிகள் மோட்சம் போகாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அவைகள் மோட்சம் போக வேண்டும். அவைகளுக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும். எனவே வீடுகளில் இறந்தவர்களுக்காக ஆராதனைகள் நடத்த வேண்டும் என்பர். புதுமுறையில், புதிதாக ஒருவர் அருளுரையாற்ற ஆரம்பித்துவிட்டால்; ஒருவேளை நமது எதிர்காலத்தை எடுத்துரைத்துவிட்டால் அல்லது இறந்து போன நமது அன்புக்குரியவர்களோடு நாம் பேசுவதற்கு ஒருவர் வழி கண்டுபிடித்துவிட்டால், இவர்தான் கடவுளின் பிரதிநிதி எனக்கருதி அவரைப் பின்பற்றுவது சரியன்று. வரலாற்றில் திருச்சபை பல தலைவர்களைப் பின்பற்றினதின் விளைவாக வெகு அருகிலுள்ள ஆண்டவரைப் பின்பற்றுவதை விட்டுவிட்டது. தாங்கள் பின்பற்றின தலைவர்கள் மடியும் போது என்ன செய்வதெனத் தெரியாது பலர் தவிக்கிறார்கள். வருங்காலத்தைக் குறித்த நமது நம்பிக்கை வருகிற நமது ஆண்டவரிலா? அல்லது எவரோ ஒரு தலைவரிலா? அல்லது ஏதோ ஒரு குழுவிலா? சிந்திக்க வேண்டும். தூய பவுலார் “ஆவிக்குரியவரோ அனைத்தையும் ஆய்ந்துணர்வார். எவரும் அவரை ஆய்வுக்கு உட்படுத்த முடியாது” (1 கொரி. 2:15) என்றார். ஆவிக்குரியவர் என்பவர் ஆவிக்குரிய முதிர்ச்சியுடையவராவார். (1 கொரி. 2:6) ஆவிக்குரிய முதிர்ச்சியடைய அருள்நாதர் இயேசுவிடம் நேரடி தொடர்பை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆண்டவரிடம் நேரடித் தொடர்பை இழந்தோமானால் நங்கூரமில்லா மரக்கலமாக அல்லது கடல் அலையில் அகப்பட்ட துரும்பைப் போலாகிவிடுவோம். கண்மூடித்தனமாக சமயத்தலைவர்களைப் பின்பற்றாமல் விழிப்புடன், ஜெபத்துடன் இறை இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.

## *2. நாளையும் நேரத்தையும் குறிக்காதீர்கள்*

1 தெச. 5:2 திருடன் இரவில் வருவது போல ஆண்டவருடைய நாள் வரும் என்பதை நீங்களே திண்ணமாய்த் தெரிந்திருக்கிறீர்கள்.

ஆண்டவர் திரும்பவும் வருவார். எந்த வேளையும் வருவார். அவர் வரும் வேளையை மனிதர்களோ, வான் தூதர்களோ அறியார் (மாற்கு 13:32, 33). அட்வெந்து சபை தொடங்கின நாட்களில் அச்சபையினர் இறை இயேசு திரும்பி வரும் நாட்களைக்குறித்து எதிர்பார்த்திருந்தனர். அட்வெந்து சபையை நிறுவியவர் வில்லியம் மில்லர் என்பவராவார். இவர் அமெரிக்கா நாட்டைச் சார்ந்தவர். 1843, 1844 ஆம் ஆண்டுகளில் அருள்நாதர் இயேசு இறுதியாகத்திரும்பி வருவார் என தம் சபையாருக்கு மில்லர் அறிவித்தார். மக்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு வெகு நம்பிக்கையுடன் இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்தனர். தங்களுடைய உடமைகளை வெகுமதியாகவோ, விலைக்கோ மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் மில்லர்

குறித்த நாட்கள் மக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. அந்த சபையைச் சேர்ந்த ஒருவர் "ஆண்டவராகிய இயேசுவே வாரும், சீக்கிரமாய் வாரும்" என முழுமூச்சுடன் பிரார்த்தனை செய்தோம். இயேசுவோ வரவில்லையென எழுதினார். மில்லரும் தாம் செய்த தவற்றை ஒப்புக்கொண்டார். இனிமேல் ஆண்டவர் திரும்பிவரும் நாளைக் குறிக்க மாட்டேன் எனக்கூறினார். அந்த நாளோ, நேரமோ ஒருவருக்கும் தெரியாது. தந்தையாகிய கடவுளுக்கு மட்டும் தெரியும். ஆதலால் நாளையும் நேரத்தையும் குறித்து கவலைப்படவேண்டாம்.

### 3. பயப்படாதிருங்கள்

2 தெசலோ. 2:2 ஆண்டவருடைய நாள் வந்துவிட்டது என... யாராவது சொன்னால், நீங்கள் உடனே மனங்கலங்கி நிலைகுலைய வேண்டாம்; திகிலுறவும் வேண்டாம்.

வருகையின் காலத்தைக் குறித்து திகைத்துத்திண்டாட வேண்டாம். ஏனெனில் வருகையின் காலம் ஒரு வசந்தகாலம். அது அத்திமரத்தின் இளங்கிளைகள் புதுத்துளிர்களைவிடும் காலம்போன்றது. நியூசிலாந்தில் மிதமான தட்பவெப்பநிலை கொண்ட "டினிடன்" என்ற நகரில் எழில்மிக்கதோர் தோட்டம் இருக்கிறது. பல நாடுகளிலுள்ள மரங்களையும், படர் கொடிகளையும் அங்கு காணலாம். மூடு பனி நிறைந்த மிகக் குளிர் காலத்தில் அந்த மரங்களும், படர்கொடிகளும் காய்ந்து கட்டைகளைப் போல காட்சியளிக்கும். ஆனால் வசந்தகாலத்தில் கட்டைகளாய் தோன்றிய மரங்கள் புத்துயிர் பெற்று புதுத் துளிர்களும், பூக்களும் தோன்றி நறுமணம் வீசும். ஆண்டவருடைய வருகையும் வசந்த காலத்தைப் போன்று புத்துணர்வும், புதுப்பொலிவும், மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்கும். அதனால் ஆண்டவருடைய வருகையைப் பற்றி "மனங்கலங்கி நிலை குலைய வேண்டாம்; திகிலுறவும் வேண்டாம்".

### 4. ஆயத்தமாக இருங்கள்

நம் ஆண்டவர் இயேசு வரும் பொழுது நம் தந்தையாம் கடவுள் முன் நாம் குற்றமின்றித் தூய்மையாக இருக்க வேண்டும். (1 தெச. 3:13). அவ்விதம் நாம் இருப்பதற்கு செய்ய வேண்டியதென்ன? நமது வேலையை மட்டுமே பார்த்துக் கொண்டு, நமது சொந்தக்கையால் உழைத்து அமைதியாய் வாழ்வதில் நோக்கமாயிருக்க வேண்டும் (1 தெச. 4:11,12). வெளியூருக்குப் பயணம் சென்றிருப்பவர் போல அருள் நாதர் இயேசு சென்றுள்ளார். நமது பணிகளை குறிப்பிட்டுவிட்டுச் சென்றுள்ளார். அவர் நமக்குத் தந்துள்ள பணிகளைச் செம்மையாக, உண்மையாகச் செய்ய வேண்டும் (மாற்கு. 13:34).

நற்செய்திக் கூட்டங்களில் நன்கு அருளுரையாற்றும் ஒரு பேராசிரியைக் குறித்து கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார் ஓர் ஆயர். அந்த கல்லூரியில் படிக்கும் மாணவனைப் பார்த்து உனக்கு ஏதாவது ஆலோசனை தேவைப்பட்டால் அந்த அருளுரையாற்றும்

ஆசிரியரிடம்போ, அவர் உனக்கு வழிகாட்டுவார் என்றார். மாணவன் சொன்னான் ஐயா அவர் தனது பாடங்களை ஒழுங்காகவே நடத்தமாட்டார். அடிக்கடி மருத்துவவிடுப்பு எடுத்துக் கொண்டு ஊழியங்களுக்குப் போய்விடுவார். வகுப்பிற்கு வந்தாலும் தூங்கிக்கொண்டிருப்பார். கேட்டால் நேற்று முழு இரவு ஜெபத்திற்குப் போனேன் என்பார். இவர் எப்படி எனக்கு வழி காட்ட முடியும்? என்றான். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய இயலாதே. கடவுள் தந்த வேலையை ஒழுங்காக, உண்மையுடன் செய்வது முதன்மையான ஊழியம். கடவுள் நமக்குத் தந்திருக்கும் வேலை நலமான வேலை (எபே. 4:28) அதனை மனிதருக்கென்று செய்யாமல் கடவுளுக்கென்று மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும் (கொலோ. 3:24).

மேலும் இறை இயேசுவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் நாம் விழிப்புடனும் அறிவுத் தெளிவுடனும் இருக்க வேண்டும் (1 தெசலோ. 5:6) விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கு அருள்நாதர் இயேசு தந்த போதனை பத்து தோழியர் உவமையாகும் (மத். 25:1-13). இந்த உவமையில் இரு உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. (1) கடைசிநிமிடத்தில் நாம் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாது. (2) வாழ்க்கையின் நேரிய நெறிகளை நாம் கடன்வாங்க முடியாது. கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல; தூய வாழ்வுக்கே அழைத்தார் (1 தெச. 4:7). எனவே நம்முடைய பாவங்களையும் துர்க்குணங்களையும் கடைசி காலம் வரைக்கும் சேமித்து வைக்காமல் இப்பொழுதே அவைகளை நம்மைவிட்டு வேறுபடுத்தி நம்மைக்கழுவிச் சுத்திகரித்துக் கொள்வது உத்தமம். J.P. Morgan (1837-1913) அமெரிக்க நாட்டின் வரலாற்றில் வாழ்ந்த ஓர் உத்தமர் ஆவார். 1893 மற்றும் 1907 ஆகிய கால கட்டத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் பணப் பட்டுவாடா செய்தவர். அவர் சொன்ன ஓர் உண்மை; நான் எனது ஆன்மாவை முழு நிச்சயத்தோடு எனது மீட்பருடைய கரங்களில் அர்ப்பணித்துவிட்டேன். அவர் என் ஆத்துமாவை மீட்டு, தமது விலையேறபெற்ற இரத்தத்தால் கழுவி கடவுளின் அரியணையில் என் ஆத்துமாவை குற்றமற்றதாக அறிமுகப்படுத்துவார். (I commit my soul into the hands of my saviour full of confidence that, having redeemed it and wished it with his precious blood, He will present it faultlessly before the throne of my heavenly Father).

கிறிஸ்துப் பிறப்புப் பண்டிகைக்கு முன்வரும் நான்கு வாரங்கள் “Advent” காலமென அழைக்கப்படுகிறது. இக்காலம் கிறிஸ்துவின் வருகையைப் பற்றி சிந்திக்கும் காலம். இக்காலத்தில் விழிப்புடனும் அறிவுத்தெளிவுடனும் இருப்போமாக.

**அருள்திரு. A. வில்லியம்தாமஸ்**

| | |
|---|---|
| 10-12-2017 | திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு & விவி□ய ஞாயிறு |

## இறைவாக்கு : நமது பாதைக்கு வெளிச்சம்

**WORD OF GOD : LIGHT TO OUR PATH**

| | |
|---|---|
| எசா. 55:6-13 | கலாத். 1:11-17 |
| திபா. 119:105-112 | லூக். 1:57-66/67-80 |

**"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!". (திபா. 119:105)**

இறைவாக்கு மானிட வாழ்வில் இருள் அகற்றி, ஒளியை தரக்கூடியதாகக் காணப்படுகிறது. இருள் நிரம்பிய உலகில் திருவாக்கு தரும் ஒளியில், அருள்தரும் வாழ்க்கையை நோக்கி பயணிக்க வாரீர் என்று அழைக்கிறார் கவியரசராகிய தாவீது. வாழ்வின் எல்லா நிலையிலும் நம்மை திடப்படுத்தி நிலைநிறுத்தும் இறைவாக்கு குறித்து, பீர்மென் என்ற இறையிலாளர், "கூண்டில் அடைக்கப்பட்டு வளர்க்கப்படும் பறவை ஒன்று விடுதலைக்காக ஏங்கி நிற்கின்றது. அதற்கு இரவில் கதவுகள் திறக்கப்பட்டு விடுதலை கிடைக்கிறது. ஆனால், பறவையால் விடுதலையை அடையவோ, அனுபவிக்கவோ முடியவில்லை. ஏனெனில் ஒளி இல்லை. மாறாக இருள் நிரம்பியிருந்தது. ஆனால் ஒளியை அதற்கு காண்பித்த போது பாதையைக் கண்டு விடுதலை பெற்று வெளியே வந்து சிறகடித்து ஒளியின் பாதையில் பறந்து கனியுள்ள மரம் தேடி சென்றது. அது போல இருளின் சிறையில் இருக்கும் மானிடருக்கு, இறைவாக்கு விடுதலையைத் தந்து பயணிக்க வெளிச்சத்தையும் வாழ்க்கையையும் தருகின்றது" என்கிறார். யோவான் 1:9-ல் இயேசு கிறிஸ்து ஒளியருளும் வாக்காக வெளிப்படுத்தப்படுகிறார்.

"ஒளியை இருள் சிறிதும் மேற்கொள்ள முடியாது". இயேசு கிறிஸ்து உண்மையான ஒளியாக இருக்கிறார். தம் அன்பின் வழியாக ஒளியை ஒளிரச் செய்கிறார். அந்த வெளிப்பாடு தம் சீரிய வார்த்தையின் வழியே மனித குலத்தை வழிநடத்த ஒளிர்ந்து ஒளியூட்டுகிறார். இந்த வார்த்தையாகிய ஒளியைப் பெற்று பாதை வழியே செல்லும் போது பாதுகாப்பாய் பயணிக்க முடியும். பாதைக்கு ஒளியாம் இறைவாக்கின் தன்மையை திருமறையினின்று தியானிப்போம்.

### *1) இறைவிருப்பத்தை நிறைவேற்றுகிறது :* (எசா. 55:10-11)

இறைவனின் விருப்பம் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் நிறைவேற்றப்படுகிறது என்பதை எசாயா இறைவாக்குரைத்தார். எசா. 55:10, 11-ல் விளை நிலங்களில் விதைக்கப்படும் விதை, அதற்குரிய பலனை கொடுக்காமல் திரும்பிச் செல்வதில்லை. மழை பயிரை முளைக்கச் செய்து அறுவடை அளிப்பது போல் கடவுளின் வார்த்தையும் அவர்

விருப்பத்தை நிறைவேற்றுகிறது எனக் கூறுகின்றார். இறைவனின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளை மனிதன் பெற்றுக் கொள்ளும் போது, மனிதனின் விருப்பமானது செயல்படுத்தப்படுகிறது. இறைவனின் திட்டம் மனிதனின் வாழ்வில் நிறைவேற்றப்படுகிறது. பவுல் கலா. 1:15, 16-ல் இறைவன் தன் விருப்பத்தை நிறைவேற்ற தன்னை தெரிந்தெடுத்து திருநிலைப்படுத்தி புற இனத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கும் கருவியாக்கினார் என கூறி இறைவிருப்பத்தை தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறார். இறைவிருப்பத்திற்கு இசைந்து தன்னை ஒப்படைத்த பவுல் கலா. 2:20-ல் இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் எனக் கூறி இறைவாக்கை அறிவிக்கிறார்.

இறைவாக்கு மனிதனின் வாழ்வில் தன்னலத்தைத் துறந்து, இறை விருப்பத்தை நிறைவேற்றத் தூண்டுகிறது.

***2) இறை இரக்கத்தைத் தருகிறது :*** (லூக்.1:58)

இறைவனின் இரக்கம் மனிதரின் வாழ்வில் ஆறுதலைக் கொடுக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. இந்த இரக்கம் இறைவார்த்தையினால் தான் வெளிப்படுத்தப்படுகிறது என்பதை எலிசபெத்துவின் வாழ்விலிருந்து அறியமுடிகிறது. லூக். 1:13-ல் வானதூதரால் இறைவனுக்கு எலிசபெத்துவின் கணவராகிய செக்கரியாவுக்கு உரைக்கப்படுகிறது. உம் மனைவி உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தி, கருவுற இயலாத நிலையில், முதிர்ந்த வயதில் ஆறுதலாகவும், இறைவனின் இரக்கத்தை எதிர்பார்ப்பதாகவும் காணப்படுகிறது. நான் ஆண்டவருக்கு அடிமை எனக்கூறிய மரியா, எலிசபெத்துவை வாழ்த்தி, வயிற்றிலிருந்து பிள்ளை மகிழ்ச்சியால் துள்ளுமளவிற்கு இறைவாக்கு ஆற்றல் நிறைந்ததாக உள்ளது. லூக். 1:58-ல் எலிசபெத்துவின் வாழ்வில் இறைவனின் இரக்கம் பெரிதானது என்பதைக் கேள்விப்பட்டு, எல்லோரும் இணைந்து மகிழ்கின்றனர். காரணம், இறைவன் இரக்கமுள்ளவர், அவர் வாக்கு இரக்கமளிக்கிறது.

வெறுமையான வாழ்க்கைச் சூழலில், இயலா நிலையில், வலுவிழந்த நிலையில் இறைவாக்கு உயிராற்றலின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

***3) இறை அனுபவத்தில் நிரப்புகிறது :*** (லூக். 1:78, 79)

இறையவரோடு உள்ள உறவு மனிதனின் வாழ்வில் புதுப்புது அனுபவங்களை வெளிப்படுத்துகிறது. எந்தச் சூழலில் மனிதன் வாழ்ந்து வந்தாலும், அவன் இறை வாக்கை தன் வாழ்வில் பெற்று, இறைவனோடு உறவினை ஒன்றிக்கும் வேளையில் புது அனுபவங்கள் வாழ்வில் துளிர்கின்றன. லூக். 1:78,79-ல் இடறியவர்கள், இன்னல்களையேற்றோர்,

இறப்பின் பிடியில் இருந்தோர் ஒளியைப் பெறுவதற்காக விடியலானது மக்களைச் சந்தித்து இறை அனுபவத்தோடு இணைக்கிறது. எசாயா 9:2-ல் "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" என இறைவாக்கினர் மக்கள் பெற்ற இறை அனுபவத்தை உரைக்கிறார். எனவே இறையவரோடு இணைந்து இறைவாக்கைப் பெற்று இறை அனுபவத்தோடு வாழ்வோம்.

இறைவாக்கு வெளிச்சமாக மனிதனின் வாழ்வில் செயலாற்றி, இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறதாயும், இரக்கத்தைத் தருவதாயும் அமைந்து இறை அனுபவத்தில் நிரப்புகிறது. எனவே இறைவாக்கின் பாதையில் தடம்புரளாமல் பயணிப்போம்! இறைவனை இறைவாக்கினால் பிறருக்கும் அனுபவமாக்குவோம்.

**அருள்திரு. O. ரிச்சர்டு சுவர்னா**

17-12-2017

திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

# மீட்பின் நல் எதிர்நோக்கு

**HOPE OF SALVATION**

செப். 3:14-20 | 2 பேதுரு 3:8-13
திபா. 43 | மத். 1:18-23

**"கடவுளின் நாளை எதிர்பார்த்து அவர் நாளை விரைவுபடுத்த வேண்டும்".**
**2 பேதுரு 3:12a**

கிறிஸ்தவ திருச்சபையை கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கும் சமூகம் என்று அழைப்பதுண்டு. ஏனெனில் இயேசு கிறிஸ்து யோவா 14:3-ல் "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" என்று கூறியுள்ளார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் விண்ணேற்றம் அடைந்த போது இரண்டு வெண்ணுடை அணிந்த இருவர் சீடர்களிடம் வந்து "இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றம் அடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" என்றார். (தி.ப. 1:11 b) இவற்றின் அடிப்படையில் அவரது வருகையே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் கொண்டுவந்த மீட்பின் நிறைவேறுதலாக இருக்கும் என நம்பினர். எனவே திருச்சபை தொடங்கின காலம் தொடங்கி இந்த எதிர்பார்ப்பும் திருச்சபையோடு இணைந்துவிட்டது. அந்த எதிர்பார்ப்பின் தொடக்க நிலைதான் திருச்சபையில் காணப்பட்ட பொதுவுடைமை சமுதாயம் (தி.ப. 4:32-35). பவுலாரின் கடிதங்களிலும், திருத்தூதுவப் பேதுருவின் கடிதங்களிலும் இக்கருத்தைக் காண்கிறோம். (1 தெச. 4:13-18, 2 பேதுரு. 3:1-13) இதன் தொடர்ச்சியாக கிறிஸ்து பிறப்பு பண்புகளை கொண்டாட ஆயத்தமாகும்போது திருச்சபை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், இணைத்து சிந்தித்தது. கிறிஸ்து பிறப்பு பண்டிகையைக் கொண்டாட ஆயத்தப்படுகிற நாமும் இந்த எதிர்நோக்கின் சிறப்புகளைக் குறித்து தியானிப்போம்.

## ***1) புது உறவின் பிணைப்பு :*** மத். 1:23

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்ததையே மத்தேயும் கோடிட்டுக் காட்டுகிறார். (ஏசாயா 7:14-ல்) மேசியா வருகை பற்றிய இறைவாக்கைக் குறித்து விளக்கும் மத்தேயு "இம்மானுவேல்" என்ற பெயரை குறிப்பிடுகிறார். அதன் பொருள் "கடவுள் நம்முடன் இருக்கிறார்"என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இந்த சிந்தனையின் வாயிலாக கடவுள் தம்மோடு ஒன்றித்து உரையாடி, உறவாடுகிறார் எனும் கருத்து அழுத்தம் பெறுவதை அனுபவத்தின் வாயிலாக அறிந்து கொள்கிறோம். யோவா 1:14a-லும் வாக்கு மனிதர்

ஆனார். அவர் நம்மிடையே குடிகொண்டார் என்கிறார். கடவுளைக் குறித்து தெளிவற்ற நிலையிலிருந்த சமூகத்தில் இயேசுவின் வருகை குறித்த செய்தி நம்பிக்கையை ஏற்படுத்தியது. மேலும், கடவுள் மனிதனாக மனிதரை மீட்பதற்காக தம்மையே தந்தார் என்கின்ற செய்தியும் நற்செய்தியாக உலகிற்கு தரப்பட்டது. அந்த நற்செய்தியின் நிறைவே இயேசுவுடன் என்றும் வாழும் சிறப்பான அனுபவத்தை பெற்றுக் கொள்வதாகும். யோவா 14:3 b-ல் "... அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" என்ற செய்தியை கூறுகிறார். உலகின் முடிவைக் குறித்து திருவெளிப்பாடு நூல் கூறும்போதும் "கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது"என்று கூறுகிறது (தி.வெளி. 21:3) அங்கு கடவுள் எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருப்பார். (தி.வெளி. 21:22-26) அங்கு ஒரு குறைவும் இராது என்று அந்த நாளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். செப்பனியா 3:15, 17-ம் கடவுளின் நாள் பற்றி கூறும் போதும் கடவுள் நம்முடன் இருப்பதே பெரும் மகிழ்ச்சியின் நிறைவு என்கிறார்.

***2) புது படைப்பின் தொடக்கம் :*** 2 பேதுரு 3:13

கிறிஸ்துவின் வருகை புதியவானம், புதிய பூமியின் தொடக்கமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்த போது இந்த உலகின் சமய சமூக அமைப்புகளை மாற்றி அமைத்தார். இறைவனின் நீதி முழுமையாக மனித சமூகத்தில் நிறைவேற அவரது போதனைகள் புதிதானவைகளாக இருந்தது. (மத். 5:21-48). இது புதிய சமுகத்தின் தொடக்கம். பேதுரு இந்த புதிய சமுகத்தின் முழு நிறைவாக இயேசுவின் இரண்டாம் வருகையைக் காண்கின்றார். அதற்காக மனித சமுகத்தை ஆயத்தப்படுத்துவதே திருச்சபை முன் வைக்கப்பட்டுள்ள முக்கியமான பொறுப்பாகும். எசாயா இறைவாக்கினர் இந்த புதிய சமூகம் குறித்து காட்சி காணும் போது ஏசா. 11:1-9 வரையுள்ள பகுதியில் கடவுள், தனது நேர்மை, நீதியுள்ள ஆட்சியை இந்த உலகில் நிலை நிறுத்தும்போது கொடிய குணமுடைய அனைத்து மக்களும் தங்கள் கொடிய குணத்தை விட்டு குழந்தைகள் போன்ற சாந்தமான மக்களுடன் இணக்கமாக வாழும் நாட்கள் வரும் என்பதை விலங்குகளின் தலைமையை பயன்படுத்தி புரிய வைக்கிறார். இந்த புதிய சமூகம் பிறருக்கு தீங்கு செய்யாத மகிழ்ச்சி நிறைந்த சமூகமாக இருக்கும். இதுவே மீட்பின் நிறைவாகவும் அமையும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலே தொடங்கிய கடவுளின் மீட்பின் செயல் அவரது இரண்டாம் வருகையிலே முழுமைபடுகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் கடவுள் திருச்சபையின் முன்பாக வைத்திருக்கின்ற சவால் அனைவரையும் விடுதலையின் வாழ்வுக்கு நேராக வழிநடத்துவதாகும். (2 பேதுரு 3:9). அனைவரும் மீட்கப்பட வேண்டுமென்ற கடவுளின் திட்டத்தின் பங்காளிகளாக செயல்படுவோம். இந்த நோக்கத்தோடு தான் பாவத்திலும்

அநீதமான அடிமைத்துவத்திலும், சமய, சமூக நெருக்குதல்களிலும், நிலை தடுமாறிக் கொண்டிருந்த நம்மை மீட்கவும், வாழ்வின் நம்பிக்கையை வழங்கவும், மேலைநாட்டு அருட்தொண்டர்கள் இறையவராய் அனுப்பப்பட்டு நம்மிடம் வந்து மீட்பின் உன்னத பணியை நிறைவேற்றினர். ஆகவே நாம் பேரொளியின் வாழ்வின் சிறப்பினை பெற்றுக் கொண்டோம். அந்த ஒளியில் அகவிருள் அகற்றப்பட்டு, அறிவொளி ஏற்றப்பட்டு ஆவியின் மேன்மை நிலையைப் பெற்றுள்ளோம். இந்த சிறப்பில் மீட்பின் நல் எதிர் நோக்கில் பணி தொடருவோம். இயேசு கிறிஸ்துவில் பெற்ற உறவின் பிணைப்பில் மகிழ்ந்து, இவ்வுலகில் மாற்றுருவாக்க பணியாம் புத்தாக்கப்பணியில் புது ஆற்றலுடன் முன்னேறுவோம், இறையாட்சியின் நறுமணத்தை அனுபவிப்போம்.

**அருள்திரு. S. விக்டர் ஞானராஜ்**

24-12-2017 **திருவருகைக்கால நான்காம் ஞாயிறு**

## பேருவகை கொள்ளுங்கள் ஆண்டவர் அண்மையில் உள்ளார்

**(REJOICE THE LORD IS NEAR)**

| | |
|---|---|
| செக். 2:6-13 | 1 தெச. 5:12-24 |
| தி.பா. 50:1-15 | யோவா 16:16-24 |

**"மகளே சீயோன்! அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்; வந்து உன் நடுவில் குடிகொள்வேன் என்கிறார்." செக். 2:10**

இஸ்ராயேல் மக்கள் எதிரிகளின் ஆக்கிரமிப்பால் கடினப்பட்டு சேர்த்து வைத்த பொருளை பாதுகாக்கவும், உணவை சமாதானத்தோடு உண்ணவும் இயலாத நிலையில் தள்ளப்பட்டனர். சோர்வு நிறைந்தவர்களாய் துரோகம் இழைத்தவர் நடுவில் நம்பிக்கையோடு வாழ இயலாத நிலையில் என்ன நடக்கும்? எப்படி வாழ்வது? என்ற அழுத்தத்தால் உறக்கமின்றி இன்னல்களுக்குள்ளாயினர். பாதுகாக்க வேண்டிய தலைவர்கள் தங்களுடைய பாதுகாப்பையே நாடி நின்றனர். இறை இல்லப் பணியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இச்சூழலில் தான் செக்கரியா இறை வாக்கினர் இடி முழக்கமாய் எழும்பினார். மக்கள் மனதில் தெளிவைத்தர ஆன்மீக அனலூட்ட ஆண்டவரால் எழுப்பப்பட்டார் மக்களை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் நாள்கள் வரும் என்றார். எப்படிப்பட்ட நாட்கள்? இறைவனே அதற்கு நெருப்பு அரணாயிருந்து தம் மக்களை எதிரிகளின் பிடியிலிருந்து விடுதலையாக்குகிறார், இதோ வந்து உங்கள் நடுவில் குடி கொள்வேன். பண்டிகை நாட்களில் பற்றாளர் இறைவனின் பாதுகாவலின் கீழ் பயமின்றி குடியிருக்கும் அனுபவம் எவ்வளவு பாக்கியமானது எசாயா 7:14 - லும் லூக். 1:31-லும் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார் இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவை பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் என்று பெயரிடுவார், நடுவில் வந்து குடியிருப்பவர் இம்மானுவேலர் நம்மோடு இருக்கவும் நமது தேவைகள் நிறைவேறவும் இறைவனால் தரப்பட்ட கொடையே இயேசு கிறிஸ்து. இறைவன் நம்மோடும் நாம் இறைவனோடும் ஒன்றியிருக்கும் போது நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள் என்ன?

### *1. இறைப்பாதுகாப்பு :* செக். 2:10

என்னை அனுப்பியவர் படைகளின் ஆண்டவர் என்று அறிந்து கொள்வீர்கள். இறைவன் பல பெயர்களில் அறியப்படுபவர். அதில் ஒன்று அவர் படைகளின் ஆண்டவர் ஆகும். உலக நாடுகளின் அச்சுறுத்தலாக விளங்குவது எதிரிகளிடமிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்பது. உணவு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்குவதை விட பாதுகாப்புக்கு அதிகம் செலவு செய்த போதும் தீவிர வாதத் தாக்குதலைத் தவிர்க்க முடியவில்லை. ஆகவே நம்மைக் காக்க நம்மிடையே வந்தார் மேய்ப்பர்களைச் சந்தித்த தூதன் அவர்களை நோக்கி அஞ்சாதீர் என்றார்.

நற்செய்தியாகவும் அரணாகவும் படைகளின் ஆண்டவர் பிறந்துள்ளார், என்ற மகிழ்ச்சியின் செய்தியை அறிவித்தார். நெருக்கங்களிலும், நெருக்கடிகளிலும் நிலை தடுமாறும் அனைவரையும் பாதுகாக்கும் மீட்பராக இயேசு கிறிஸ்து முன்னிலை பெறுகிறார். எந்தக் கடின சூழலிலும் நம்மைப் பாதுகாக்கும் அரண் அவரே.

## *2. இறைத்தூய்மை :*

மீட்பர் நம்மிடையே குடியிருக்கும் போது கிடைக்கும் வெளிப்படும் சிறப்புக் கொடையே தூய்மையாகும். பவுல் தெசலோனிக்கேயா சபைக்கு கடிதம் எழுதும் போது அமைதி அருளும் கடவுள் தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவார். இவ்வசனம் நமக்கு அறிவுறுத்துவது இதயத்தின் ஆழத்திலுள்ள தூய்மையும், நற்குணங்களையும் நல்நோக்கங்களையும் குறிக்கிறது, மீட்பர் நம்மிடையே குடியிருக்கும் போது உள்ளத்தில் தூய்மை பிறக்கிறது. நற்குணங்கள் வெளிப்படுகின்றன. நல்நோக்கங்கள் உலகைப் புதுப்பாதையில் நடத்திச் செல்ல உதவும். கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ தீர்மானித்தார்கள். பரிசுத்தவான்களும், குற்றமற்றவர்களும், நீதியுள்ளவர்களுமாயிருக்க வேண்டும் என்று உறுதியாய் போதிக்கப்பட்டிருக்கிறது, லூக். 1:49-ல் மரியாள் நம்மிடையே பிறக்கும் மீட்பரைக் குறித்து தூயவர் என்பதே அவர் பெயர் எனக் குறிப்பிட்டுள்ளார். செக். 2:13 அவர் தம் புனித இடத்திலிருந்து எழுந்தருளினார், என்பதிலிருந்து அவர் குடியிருக்கும் இடம் தூய்மையானது என அறிய முடிகிறது. மீட்பரான ஆண்டவர் நம் உள்ளத்தில் குடியிருக்க வேண்டுமெனில் தூய்மையை அலங்காரமாக்கிக் கொள்வோம்.

## *3. இறை மகிழ்ச்சி :*

செக். 2:10 மகளே, சீயோன் அகமகிழ்ந்து ஆர்ப்பரி மீட்பர் நம்மிடையே பிறக்கப் போவதால் அச்சம் வேண்டாம் ஆர்ப்பரித்துப் பாடு என அழைப்பு விடுக்கிறார். இதனால் எதிரிகளிடமிருந்து வந்த அச்சுறுத்தல்கள் அகலும் யாராலும் எடுத்துப் போட முடியாத மகிழ்வை இறைவன் அருளுவார். யோ. 16: 22 -ல் உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கி விட முடியாது எனத் தெளிவுபடுத்துகிறார். எசாயா இறை வாக்கினர் வரப் போகும் மீட்பரால் மக்கள் பெறும் அனுபவத்தை எடுத்துரைக்கிறார், எசா. 12:3-ல் மீட்பரும் ஊற்றுகளிலிருந்து நீங்கள் அக மகிழ்வோடு தண்ணீர் முகந்து கொள்வீர்கள். லூக். 1:47 -ல் மரியாள் உலக மீட்பரை உலகிற்கு தர கருவுற்ற போது ஆண்டவரே எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைந்து எனது மனம் பேரு வகை கொள்கின்றது. எனக்குறிப்பிட்டு மகிழ்வான உள்ளத்தை வெளிப்படுத்துகிறார்.

மீட்பர் நம்மிடையே குடியிருக்கும் போது நிறைவான பாதுகாப்பும் தூய வாழ்வும் நிறைந்த மகிழ்ச்சியும் அனுபவமாகின்றன. மீட்பரின் பிரசன்னத்தால் நிறைந்த இறைப் பாதுகாப்பும் எவராலும் பிரிக்க முடியாத மகிழ்ச்சியும் பெறுவோம். முடிவில்லா மகிழ்ச்சி பெற இறைவன் அருள் புரிவாராக.

**அருள்திரு. J. ஞானதாஸ்**

24-12-2017

CHRISTMAS EVE

# கடவுள் நம்மிடம் வருகிறார்

**"GOD COMING TO US"**

| | |
|---|---|
| மீக். 5:1-9 | தி.வெ. 21:1-5 |
| தி.பா. 89:19-29 | யோவா 1:1-14 |

**"நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும் இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்; அவர் தோன்றும் வழி மரபோ ஊழி ஊழிக்காலமாய் உள்ளதாகும்." மீக். 5:2**

பெத்லகேம், வரலாற்று நாயகனைத் தந்த வரலாற்றுச் சிறப்பு மிகுந்த பகுதி. சிறிய பகுதி ஆனால் ஆளப்போகிறவர் தோன்றுவார் என்று தீர்க்கர் உரைக்கிறார். பெத்லகேம் எப்படிச் சிறப்பு வாய்ந்தது எனப் பார்ப்போம். இஸ்ரயேலர் மேசியாவின் வருகையை எதிர்பார்த்தனர். இஸ்ராயேலை ஆளப்போகின்றவர் பெத்லகேமில் இருந்து வருவார். தாவீதின் வம்சத்திலிருந்து வருவார் என்று உரைக்கப்பட்டது. பெத்லகேம் எப்படி சிறப்பு வாய்ந்தது என்பதைத் தியானிப்போம்.

## *1) பெத்லகேம் : வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம்*

பெத்லகேம் சிறிய பகுதி ஆனால் மிகப்பெரியவரை இந்த அகிலத்திற்கு தந்த பகுதி. இஸ்ரயேலில் சிறிய பகுதியாக இருந்தாலும், மகிமையை, எதிர்காலத்தைத் தருகிற பகுதி.

i) எருசலேமின் தெற்குப் பகுதியில் 5 மைல் தூரத்தில் பெத்லகேம் உள்ளது. இது எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் கி.மு. 1250 இல் நீதி தலைவர்கள் காலத்தில் பெத்லகேம் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

ii) பெத்லகேம் என்பதின் பொருள் "அப்பத்தின் வீடு" மீக்கா இதனை மறுபெயராக "எப்ராத்தா" என்கிறார். இதன் பொருள் "பழங்கள் மிகுந்த இடம்". இதன் பொருளும் இறைவார்த்தையும் ஒத்துப்போகிறது. யோவா 6:35, "வாழ்வு தரும் உணவு நானே" தி.பா. 109:9. "பசியுற்றோரை நன்மையால் நிரப்புவார்."

iii) பெத்லகேம் முதன் முதலில் தொ.நூ. 35:16-20 அறிமுகப்படுத்தப்படுகிறது. யாக்கோபு கானானுக்கு நேராகப் பயணம் செய்த போது ராகேல் இறந்து போகிறார். துன்பமும், துக்கமும் நிறைந்த பகுதியாகக் காட்டப்படுகிறது. அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வேதனையை மாற்றி மகிழ்வை ஏற்படுத்துகிற பெத்லகேமில்.

iv) இப்சான் பெத்லகேமை சார்ந்தவர் நீதித்தலைவராக விளங்கினார். நீதி. 12:8-10.

v) ரூத்தின் வாழ்வில் இந்த பெத்லகேம் மூலமாகதான் அருளும், கிருபையும், அன்பும், அரவணைப்பும், குடும்பமும், அனைத்தும் கிடைக்கிறது.

vi) மேய்ப்பனாகிய தாவீது பெத்லகேமில் உள்ளவர் தான். சாமானியனாகிய தாவீதைச் சரித்திரம் படைக்கச் செய்தார். I சாமு. 16:1-13. இயேசு கிறிஸ்து மேய்ப்பராக நம்மிடம் வந்தார்.

vii) தாவீது ஏக்கத்துடன் பெத்லகேம் தண்ணீரைக் கேட்கிறார். கொடுக்கப்பட்டது. 2 சாமுவேல் 23:14-16.

பெத்லகேம் சிறியதாய் இருந்தாலும் பெரிய காரியங்களை செயல்படுத்தியது. இறைமகன் பிறந்தார் (லூக். 2:1-20). எனவே சாதாரண பெத்லகேம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய் மாறியது.

## 2. பெத்லகேம் : இறைத்திட்டம் நிறைவேறின இடம்

மீக்கா மூலமாக இறைத்திட்டம் அறிவிக்கப்படுகிறது. “இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடம் இருந்து தோன்றுவார்”.

i) பாவத்தில் வாழ்ந்த மனிதன் (தொ.நூ. 3:15) எகிப்தில் அடிமையாய் வாழ்ந்த மனிதர்கள் (வி.ப. 12) உணவும், தண்ணீரும் கொடுத்து தேற்றினார். இதோடு இறைவாக்குரைப்பவர்கள் மூலமாகவும் இறைத் திட்டத்தை நிறைவேற்றினார். ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளார். (எசா. 9:6) அதோடு அவர் துன்பத்தை ஏற்றுக்கொள்வார் (எசா. 53:1-6) மீக்காவும், இறைவன் திட்டத்தை நிறைவேற்ற வருகிறார் என்று உரைக்கிறார்.

ii) இறைவனுக்கு ஒரு தூய திட்டம் இருக்கிறது. (எபே. 1:5; 2 பேது. 1:20) இறைமகன் இவ்வுலகில் கடந்து வரப்போகிறார் என்பதைக் குறிப்பிடுகிறார்.

iii) மானிடரின் மகனாகவும் இவ்வுலகில் கடந்து வந்து மனிதனைப்போல் வாழ்ந்து, சிலுவை ஏற்றுக்கொண்டு, சிலுவையில் அறையப்படுவர் என்பதை மனித வாழ்வோடு இணைத்து இறைவனின் திட்டம் இருந்தது.

இறைவன் திட்டத்தை உருவாக்கி, செயல்பட வைத்து முழுமையடையச் செய்கிறார்.

## 3. பெத்லகேம் : இறைமகனைத் தந்த இடம்

மீக்கா சொல்கிறார். “அவர் தோன்றும் வழி மரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும்”. பெத்லகேமில் பிறப்பவர் சதாரண மனிதர் அல்ல மாமனிதர். பெத்லகேமில் பிறக்கிறவர் உலகனைத்துக்கும் உன்னதர் என்பதை குறிப்பிடுகிறார்.

i) பெத்லகேம் வரலாறு அதிசயத்தை ஏற்படுத்தும் வரலாறு. தொழுநோய் குணமாதல், பார்வையடைதல், மாற்றுத் திறனுடையவர் குணப்படுத்துதல், அனைத்தும் பெத்லகேமில் நடைபெறுகின்றன. கிறிஸ்துவின் பிறப்பின் பிற்பாடு, அவரது இறைபலத்தால் நடைப்பெறுகிறது.

ii) பெத்லகேமில் இறைவன் மனிதராக உருவெடுத்தார். யோவான் 1:1-14, பிலி. 2:5-8.

இறைமகனாகவும், மானிட மகனாகவும் இப்பூமியில் இயேசு கிறிஸ்து வந்தார்.

iii) இறைமக்களுக்காய் ஏழையானார் (2 கொரி. 8:9)

பெத்லகேம் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். இறைத்திட்டத்திற்காய் ஒப்படைத்த இடம். இறைமகனை தந்த இடம். இறைவன் நம்மிடம் வருவதற்கு பெத்லகேம் இறைவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டது. இறைமகன் நம்மிடம் வர நாம் தகுதியுடையவரா? சிந்திப்போம்.

**அருள்திரு. G.N. ராஜகுமார்**

# கிறிஸ்துப் பிறப்பு : அமைதியின் அரசருக்கான இடத்தைக் கண்டறிதல்

**CHRISTMAS : FINDING SPACE FOR THE PRINCE OF PEACE**

எசா. 9:2-7 எபே. 1:3-14
தி.பா. 85:8-13 லூக். 2:1-14

**"...அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்".** லூக். 2:10

காட்டுப் பகுதியில் சிறு பெண் ஒருத்தி தன் பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாளும் இச்சிறுமி தங்கியிருக்கும் குடிசைக்கு அருகே வேகமாக ஒரு புகைவண்டி (ரயில்) ஓடி மறைவது வழக்கம். புகைவண்டி வேகமாக ஓடி மறைவதால் அச்சிறுமியினால் அந்தப் புகை வண்டியைக் குறித்து முழுமையான காட்சியினைக் காண இயலவில்லை. ஆனால் அச்சிறுமி என்றாவது ஒருநாள் இந்தப் புகைவண்டி என் வீட்டின் முன் நிற்க வேண்டுமென்று தன் உள்ளத்துக்குள் சொல்லிக் கொள்வாள்.

திடீரென ஒருநாள் அச்சிறுமி ஆச்சரியப்படும் வகையில் அந்த புகைவண்டி அருகிலிருந்த புகைவண்டி நிலையத்திற்கு பச்சை ஒளி அடையாளத்திற்காக (green signal) காத்திருக்கும் வகையில் தன் வீட்டின்முன் நின்றது. அதைக்கண்ட சிறுமியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேகமாக புகை வண்டிக்குள் ஏறினாள். ரயில் இஞ்சினை உற்று நோக்கினாள். பயணிகள் அறையில் சென்று அங்கிருந்தவற்றை உற்று நோக்கினாள். இருக்கைகளில் அமர்ந்து பார்த்தாள். இவ்வாறு புகைவண்டி அவ்விடத்தை விட்டு புறப்படும் வரை அதில் அமர்ந்திருந்து புகை வண்டியைக் குறித்த எண்ணங்களை இன்பமான அனுபவமாக அனுபவித்தாள். கிறிஸ்துப் பிறப்பும் இச்சிறுமியின் ரயில் குறித்த அனுபவத்தைப் போன்று அனுபவிக்க வேண்டிய ஒன்றே. கிறிஸ்துப் பிறப்பை அனுபவமாக உணரும் போதுதான் இறைவாக்கினர் எசாயாவின் காட்சியில்கண்ட கிறிஸ்துவை அமைதியின் அரசனாக "Prince of Peace) இன்று நம் வாழ்வில் காண இயலும். கிறிஸ்துபிறப்பு அனுபவமாகக்காண வலியுறுத்தும் இந்த அருளுரை வாயிலாக அமைதியின் அரசனை நம் வாழ்வில் அனுபவமாக்க முயல்வோமாக.

## *1) அமைதியின் அரசர் இருளகற்றும் காரணர்*

இயேசுவின் பிறப்பை முன்னறிவிக்கும் எசாயா தீர்க்கர் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்... (9:4) எனக் குறிப்பிடுகிறார். இத்திருமறைப் பகுதியினை நன்கு புரிந்திடவேண்டுமானால்

அதன் பின்னணியம் குறித்த அறிவு தேவை. யூதரின் தென்னாடாகிய யூதாவுக்கு வரவிருந்த அழிவின் காரணம் என்னவெனில் அந்நாடு இறைவனுக்குப் பணியாது, அவர்மீது நம்பிக்கை இழந்து ஒளி இழந்து பாவ நிலையே என எசாயா உணர்ந்தார். எனவே அந்நாட்டு மக்களை நேர்மையுடனும் நீதியுடனும் வாழும்படி அழைக்கின்றார். கடவுளின் மக்கள் கீழ்ப்படியாது போனால் அவர்களுக்கு இருளும், அழிவுமே காத்திருக்கிறது என எச்சரித்தார். ஆயினும் தாவீதின் வழி மரபில் தோன்றவிருக்கும் அமைதியின் அரசரால் அனைத்துலகமும் அமைதியும் ஒளியும் பெறும் என எசாயா முன்னறிவிக்கின்றார் (எசாயா 9:7).

மனித வரலாற்றில் இருள் நிறைந்த காலம் ஒன்று இருந்தது என்பதனை தொடக்க நூல் ஆசிரியர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார்.

மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது "...ஒளி தோன்றுக!" என்றார்; ஒளி தோன்றிற்று. (தொ.நூ. 1:2, 3) பாவத்தால் ஒளியிழந்து ஒழுங்கற்றிருந்த வரலாற்றினை ஒளிரச் செய்ய இறைவன் வரலாற்றில் திட்டமிட்டார். இதனைக் குறித்து எசாயா இறைவாக்கினர் குறிப்பிடும் போது "... ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்..." அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும் (எசாயா 9:6) என்கிறார். அமைதியின் அரசர் அனைத்துலக மக்களின் இருளையும் அகற்றும் ஆண்டவர். யோவான் நற்செய்தியாளர் இக்கருத்தினை "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது" (யோவான் 1:9) என வலியுறுத்தி ஒளியாக வந்திட்ட அமைதியின் அரசரைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

பெத்தலகேம் மேய்ப்பர்கள் இரவில் தங்கள் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்த வேளையில் அமைதியின் அரசராம் ஒளி வீசும் ஆண்டவரின் சந்திப்பை லூக்கா தெளிவுபடுத்துகின்றார். "... ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது..." (லூக். 2:9).

யாக்கோபு 1:17-ல் "நல்ல கொடைகள் அனைத்தும்... மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல" என குறிப்பிட்டு ஒளியின் வாழ்வுகள் இறைவனிடமிருந்தே வருவதால் ஒளியின் வாழ்வில் இணைந்து அமைதியின் அரசரை இப்பண்டிகைக் காலங்களில் காண முயல வேண்டும் என்ற சிந்தனை இவ்விடம் வலுப்பெறுகிறது.

இயேசுவின் காலத்தில் ரோமர் முன்வைத்த அமைதியானது இரத்தம் சிந்துதல் மற்றும் இராணுவ ஆற்றல் இவற்றின் மீது கட்டப்பட்டதாக அடக்குமுறை சார்ந்த இருளடைந்த அமைதி நிலையாகும். ரோம எழுத்தாளர் TACITUS என்பவர் (Peace without the power of weapon doesnot exist, the power of weapon does not exist without pay to soliders and that pay does not exist without tribute). ஆயுதத்தின்

ஆற்றல் இல்லாத அமைதி நிலை நிற்க முடியாது. ஆயுதத்தின் சக்தி போர் வீரர்களுக்குப் பணம் கொடுக்க முடியாவிட்டால் நிலை நிற்க முடியாது. மேலும் அந்தப்பணம் கப்பம் செலுத்தாமல் நிலை நிற்க முடியாது. இவ்வாறு ரோமர் கால இருள் நிலை இங்கு விளக்கப்படுகின்றது. எனவே பண்டிகைக் காலங்கள் குடியும் குடிலுமல்ல மாறாக மனிதனின் இருளகற்றும் நன்மைப்பணியாக அமைந்திட வேண்டும். (யோவா 3:20, 21)

## *2. அமைதியின் அரசர் எளியோரின் தோழர்*

லூக். 2:7-ல் அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார்... என்கிறார் லூக்கா. துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார். அமைதியின் அரசரின் பிறப்பிடம் மாளிகையல்ல, மாடடையும் குடில் தாழ்மையின், எளிமையின் அடையாளமான முன்னணை. கடவுள் தம்மை மனிதருடன் ஒன்றுபடுத்தவே மனிதகுமாரனாக, அமைதியின் அரசராக முன்னணையில் கிடத்தப்பட்டார். விடுதலையாளராக மேசியா வருவார் என யூதர் நம்பினர். இந்த மேசியா எருசலேமிலிருந்து தோன்றுவார் என யூத சமயத் தலைவர்கள் உரைத்தனர். ஆனால் மீக்கா 5:2-ன் படி பெத்லகேம் என்ற சிற்றூரில் தோன்றுவார் எனக் கூறப்பட்டபடி தாழ்மையான சிற்றூரில் ஏழைக் கோலமாய்த் தோன்றினார். ஒருவர் இதனைக்குறித்து son of God was born into this world not as a prince but as a pauper, மனிதகுமாரன் அரசாகப் பிறக்கவில்லை, மிகவும் ஏழ்மையாய்ப் பிறந்தார் என்கிறார். பொதுவாக மனிதன் தாழ்மை நிலையை விரும்புவதில்லை.

“இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றும்
ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்

செல்லாது அவன் வாயின் சொல்” என்று தமிழரிடையே பதிந்த சிந்தனையும் உண்டு. ஆனால் மனு உருவேற்ற இறைமகனோ தாழ்வில் இருப்போரை அதிகம் நினைக்கின்றார். அன்றைய சமூகத்தின் தாழ்நிலையிலிருந்த மேய்ப்பர்களுக்குத்தான் இயேசுவின் பிறப்பு முதன் முதல் அறிவிக்கப்பட்டது. (லூக். 2:10) இயேசுவின் காலத்தில் மேய்ப்பர்கள் ஒன்றுமில்லாதவர்கள், தூய்மையற்றவர்கள் என முத்திரைக் குத்தப்பட்டவர்கள். இவர்கள் திருடர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் ஓய்வு நாளின்றி ஓயாமல் உழைத்தனர். ஒருவர் மேய்ப்பனாகப் பிறந்ததினால் நீதிமன்றம் சென்று சாட்சி கூற முடியாது. இத்தகைய நிலையில் உள்ள மேய்ப்பர்கள் இயேசுவின் பிறப்பில் முதன்மை பெற்றனர்.

இப்பண்டிகைக் காலங்களில் நம் நிலை என்ன? அமைதியின் அரசராக எளியோரின் தோழராக பிறந்திட்ட இயேசுவிற்கும் நாம் தரும் இடம் என்ன? “ஆசீர்வாதம்” என்ற சிந்தனையில் கிறிஸ்தவத்தைப்

பார்க்கும் நாம் ஏழ்மை, வறுமை என்பது கடவுளின் சாபம் என எடுத்துக் கொள்கிறோமா? மாறாக தமது நாசரேத்தூர் அறிக்கையில் எளியவர்க்கு நற்செய்தி (Good News to the poor) என்று தம் பணியைப் புரிந்து நன்மை செய்தவராய் பணிபுரிந்த கிறிஸ்துவைப் பின்பற்றி எளியோருக்காய்ப் பணிபுரிகின்றோமா? அழகிய ஆலயங்கள், இனிமையான வழிபாடுகளில் மகிழ்ச்சியுறும் நாம் கண்களின் குழிவிழுந்து, அரைகுறை ஆடையுடன் நம்முன் இப்பண்டிகைக் காலங்களில் நிற்கும் ஏழைகளுக்கு நாம் கூறும் பதில் தான் என்ன? கடவுளைத் தேடுவோர் மனிதனை மறந்து விட்டதால் நாம் இனி மனிதர்களைத் தேடவே ஊக்கமளிக்க வேண்டும். “மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்வதையெல்லாம் எனக்கே செய்தீர்கள்”. மத். 25:40 என்ற மறைவாசகத்தின் கருத்தை இல்லங்களில் நினைவு கூருவோமாக “Money was a dangerous way of freezing peoples hands, eyes, lips and hearts” பணமானது ஆபத்து மிகுந்த வழியில் மக்களுடைய கைகள், கண்கள், உதடுகள் மற்றும் உள்ளங்களை உறையச் செய்து விடுகிறது என குறிப்பிட்ட பேராயர் Dom Kelda Camara-வின் கூற்றிக்கிசைய செல்வ நாட்டத்தை விட்டு விட்டு, நம்மை மகிழ்விக்கும் ஆடம்பரங்களைத் தவிர்த்து முன்னணையை பிரதிபலிக்கும் எளியவர்க்காய் இப்பண்டிகைக் காலங்களில் உழைப்போமாக.

குளிர்கால இரவு நேரத்தில் ஒரு பிச்சைக்காரர் சாலை ஓரத்தில் குளிரால் நடுங்கிய நிலையில் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார். வழிப்பயணி ஒருவர் சில ரூபாய்களை அவருக்குக் கொடுக்க, பிச்சைக்காரர் அதனை வாங்க மறுத்து, பதிலாக போர்வை ஒன்றைக் கேட்டான். அவருக்கு அது கொடுக்கப்பட்டது. ஒருவாரம் கழித்து அந்த வழிப்பயணி மீண்டும் அந்தச் சாலை ஓரத்திற்கு வந்தபோது அப்பிச்சைக்காரர் குளிரால் நடுங்கிய நிலையிலேயே காணப்பட்டார். அவர் கோபத்துடன் அவரிடம் விசாரிக்க ஐயா, பாருங்கள் அதோ அந்த மூலையில் என்னைவிட பாதிக்கப்பட்டவருக்கு நீங்கள் தந்த போர்வையைக் கொடுத்தேன், அவர் நன்றாய் தூங்குகிறார் என்றார். இத்தகைய பணிவிடையே முன்னணையின் நற்செய்தி. ஏமிகார் மைக்கேல் அம்மையார் ஒருமுறை “The cross always stands near the manger” என்றார்கள். சிலுவை எப்போதும் முன்னணைக்கு அருகில் நிற்கின்றது. நாமும் முன்னணைக்குத் திரும்பி பாடுகளை ஏற்றுப் பணிபுரிய நம்மை அர்ப்பணம் செய்வோமாக.

**அருள்திரு. W. ஸ்டேன்லி ஜோண்ஸ்**

31-12-2017

**கிறிஸ்துப் பிறப்புக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு**

# குடும்பம் கடவுளின் அருட்கொடை

**FAMILY AS GOD'S GIFT**

யோசு. 24:14-22 — எபே. 3:14-21

தி.பா. 128 — மாற். 3:31-35

**"...விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்கு காரணமாயிருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன்". எபே. 3:14**

குடும்பம் கடவுள் உலகில் ஏற்படுத்தின ஓர் அமைப்பு. மனுக்குலத்திற்கு அவர் கொடுத்த ஆசிகளுள் முக்கியமானது. கடவுள் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணராயிருக்கிறார். குடும்ப வாழ்விற்கு அடித்தளமாகச் செயல்படுகிற கடவுள், குடும்பங்கள் சுயநலம் சாராமல், குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் தங்களது சுயநலன்களை வெறுத்து, வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றாக இசைந்து, நல்வாழ்விற்காய் ஒருவரையொருவர் வாழ்த்தி, துன்பங்களில் ஒருவருக்கொருவர் துணையாயிருந்து, கவலைகளில் ஒருவருக்கொருவர் ஆறுதலாயிருந்து, தலையாகிய கிறிஸ்துவை முன்னிலைப்படுத்திச் செயல்பட வேண்டுமென விரும்புகிறார். கடவுளின் அருட்கொடையான குடும்ப வாழ்வு சிறந்திட எருசலேம் திருப்பயணப் பாடலாகிய திருப்பாடல் 128 பல உண்மைகளைக் கற்றுத் தருகிறது. இத்திருப்பாடல் குடும்ப வாழ்வினை மையப்படுத்தி, செழிப்பான அல்லது வளமான குடும்ப வாழ்வினையும் குடும்ப வாழ்வில் கிடைக்கும் அமைதியினையும் (நீண்ட அமைதியான வாழ்வு) அதின் விளைவையும் தெளிவுபடுத்துகிறது. குடும்பம் கடவுளின் அருட்கொடை எனச் சிந்திக்கையில் ஏன் இன்றும் கடவுளின் அருட்கொடையான குடும்ப வாழ்வில் இடையூறுகள்? விரிசல்கள்? முறிவுகள்? எனும் கேள்விகள் எழுகின்றன. இச்சூழலில் 128 ஆம் திருப்பாடல் சார்ந்து கடவுளின் அருட்கொடையாகிய குடும்ப வாழ்வில் அமைதியும் அறனும் நிலைத்திட என்ன செய்ய வேண்டும் எனச் சிந்திப்பது சிறந்தது.

## *1. கடவுளின் வழியினில் பணிந்து வாழ்தல் :* (தி.பா. 128:1)

"ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்".

ஆண்டருக்கு அஞ்சுதல், அவர் வழிதனில் நடத்தல் ஆகியவை குடும்பவாழ்வில் ஆசி பெறுவதற்கான அடித்தளம். ஆண்டவருக்கு அஞ்சுதல் என்பது பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில்

கடவுளைத் தண்டிக்கிறவராக எண்ணிப் பயப்படாமல், ஆண்டவர் முதன்மையானவர், குடும்பங்களை இணைக்கின்றவர் என்ற நிலையினில், அவருக்குரிய மரியாதையினை, முதலிடத்தினைக் குடும்ப வாழ்வில் கொடுப்பதாகும். மட்டுமல்ல ஆண்டவரிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழுப்பலத்தோடும் அன்பு கூருதலாகும். (இ.ச. 6:5). இன்றைய பழைய ஏற்பாட்டுத் திருமறைப்பகுதியில் அவரது அடியவர்கள் அவருக்குப் பயந்து அவரை உண்மையும், உத்தமுமாய் பின்பற்றி பணிந்து வாழ அழைப்புத் தரப்படுகிறது. (யோசு. 24:14). ஏன் பின்பற்ற வேண்டுமென்றால் முதலில் மக்கள் அலைந்து திரிந்து சொந்த இடமின்றி வாழ்ந்தனர். ஆனால் ஆண்டவர் குடும்பமாக ஓரிடத்தில் தங்கி வாழ்வதற்கு அவர்கள் பண்படுத்தாத தேசம், கட்டாத பட்டணம், ஆகியவற்றை கொடுத்து அதனில் குடியமர்த்தியுள்ளார். அதோடு அவர்கள் நடாத திராட்சைத் தோட்டங்களின் பலனையும், ஒலிவ தோப்புகளின் பலனையும் புசிக்கக் கொடுத்துள்ளார் (யோசு. 24:13). ஆகவே கடவுளின் அருட்கொடையான குடும்ப வாழ்வினை ஆசியாகப் பெற்று அவரது வழியில் பணிந்து வாழ்ந்து அவரைப் பின்பற்றிட வேண்டும். இன்றும் நமது குடும்பங்கள் நமது முயற்சியினால் வடிவமைக்கப்பட்டதன்று, கடவுளின் ஆசியினால் அமைக்கப்பட்டது. ஆகவே குடும்ப வாழ்வினில் உலகு சார்ந்தவைகளுக்கு காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து அவைகளைப் பணிந்து வாழாமல், கடவுளுக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவரைப் பின்பற்றி, கற்பனைகளை நன்மையுண்டாக கைக்கொண்டு வாழ்ந்திட வேண்டும் (இ.ச. 10:12, 13).

### *2. கடவுளின் ஆசியில் மகிழ்ந்து வாழ்தல் :* (தி.பா. 128:4)

“ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பர்”.

குடும்ப வாழ்வில், கடவுளின் வழியினில் பணிந்து வாழ்கின்றவர் அவரது ஆசியில் மகிழ்ந்து வாழ முடியும். குடும்ப வாழ்வில் மகிழ்ந்து வாழ கடவுள் அருளுகின்ற ஆசிகள் எவை? எனச் சிந்தித்தால் உழைத்து வாழ்ந்து உழைப்பின் பலனை உண்ணுதல், நற்பேறும் நலமும் பெற்று வாழ்தல், இல்லத்தில் துணைவியர் கனிதரும் திராட்சைக்கொடி போலவும், உண்ணும் இடத்தில் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போலவும் இருத்தலாகும் (தி.பா. 128:2,3). கடினமாக உழைத்தும் உழைப்பின் பலனை பெறமுடியாமலும், உண்ண முடியாமலும் இருப்போர் உண்டு. குடும்ப வாழ்வில் கணவன், மனைவி, பிள்ளைகள் என அனைவரும் உழைத்து குடும்பங்களைக் கட்டுவது மகிழ்வின் அனுபவம். மெய்யான திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவோடு (யோவா. 15:1) இணைந்து கொடியாகச் செயல்பட வேண்டும். குடும்ப வாழ்வு செடிக்கு ஒப்பானது. அங்கத்தினரில் அனைவரும் கொடிகளே. செடியில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் கொடிகளாய் இணைந்து வாழ்ந்து நறுமணம் வீசும் வாழ்வே கடவுளின் ஆசியில் மகிழ்ந்து வாழும் அனுபவமாகும்.

குடும்ப வாழ்வில் குழந்தைகள் கடவுள் அருளும் ஆசிகளாலும் (தி.பா. 127:3). இப்பிள்ளைகள் நீடித்து வளர்ந்து நற்கனிகளைக் கொடுக்கும் ஒலிவ மரக்கன்றுகளாக திருப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இக்கன்றுகள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு, பண்படுத்தப்படும் போது குடும்பங்களில் அலங்காரமாகத் திகழ்கின்றனர். பிள்ளைகள் இந்நிலையில் வளர்வதற்கு குடும்பங்களில் பிள்ளைகளுக்கு இறைவார்த்தைகளைப் போதித்தல், அவைகளைக் குறித்துப் பேசுதல், கைகளில் அடையாளமாகக் கட்டுதல் வீட்டு நிலைகளிலும், வாசல்களிலும் எழுதி வைத்தல் போன்றவை தேவையானதாகிறது. (இ.ச. 6:4-9). குடும்பங்களில் இறைவார்த்தைகள் முக்கியத்துவம் பெற்றால் குடும்பங்கள் இறையாசியில் மகிழ்ந்து வாழ முடியும். ஆகவே குடும்ப வாழ்வில் அனைவரது ஒருங்கிணைந்த கடினமான உழைப்பு, கடவுளில் நிலைத்திருந்து கனிகொடுத்தல், இறைவார்த்தையினைக் கற்று, ஏற்றுக் கொண்டு அதின் சாரத்தில் வாழ்தல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திடல் வேண்டும்.

### *3. கடவுளின் உறவினில் நிலைத்து வாழ்தல் :* (தி.பா. 128:6)

"... இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!".

குடும்ப வாழ்வினில் கடவுளின் ஆசியினில் மகிழ்ந்து வாழ்கின்றவர் அவரது உறவில் என்றென்றும் நிலைத்து வாழ முடியும். திருமறையில் கிறிஸ்துவை மணவாளனாகவும் திருச்சபையினை மணவாட்டியாகவும் சித்தரித்து மணவாளனாகிய கிறிஸ்து மணவாட்டியாகிய திருச்சபையை நம்மோடு சேர்க்க வருவார். அவரது திருமண விருந்தில் பங்கேற்க அனைவரும் ஆயத்தமாக இருக்க வேண்டுமெனப் படிக்கிறோம். இது கடவுளது உறவினில் அவரது அடியவர் அனைவரும் நிலைத்திருப்பர் என்பதை உணர்த்துவதாகும். இஸ்ரயேலர் எருசலேமின் வாழ்வினை நலம் நிறைந்த வாழ்வாக எண்ணினர். எருசலேம் ஆன்மீக மையம், ஆலயம், தொழுகை, இறை உறவு போன்றவை முக்கியப்படுத்தப்பட்டது. அதோடு அமைதியின் இடமாகவும், அமைதி அருளும் ஆண்டவரை வழிபடும் இடமாகவும் கருதப்படுகிறது. எருசலேம் இறைவனோடுள்ள உறவினை மையப்படுத்தும். பண்டிகைக் காலங்களில் இஸ்ரயேலர் எருசலேம் நோக்கி பவனியாக வரும்போது இப்பாடலைப்பாடி தங்களது உறவினைப் புதுப்பித்தனர். இறைவனோடுள்ள உறவினைப் புதுப்பித்து அதில் நிலைத்து வாழ்ந்திட குடும்பமாய் இறைவனை சேவிப்பது அவசியம். இதனைத்தான் பல்சமயச் சூழலில் யோசுவா நானும் என் வீட்டாரும் ஆண்டவரையே சேவிப்போம் எனக் குறிப்பிடுகிறார் (யோசு 24:15). இறை உறவில் நிலைத்து வாழ்வதற்கு குடும்பமாய் இறைவனை சேவிக்க தனது குடும்பத்தை யோசுவா மாதிரியாக்குகிறார். யோசுவாவின் சான்றினைக் கேட்ட மக்கள்,

நாங்களும் ஆண்டவரையே சேவிப்போம். ஏனென்றால் அவரே எங்களது ஆண்டவர் என்றனர் (யோசு. 24:18). இறை உறவில் நிலைத்து வாழ்கின்ற குடும்பங்கள், தங்களைச் சார்ந்தவர்களையும் அத்தகைய வாழ்வுக்குள் நடத்துகின்றனர்.

குடும்ப வாழ்வில் அங்கத்தினராக இருந்த இயேசுவும் தமது பெற்றோருடன் 12 வயதில் பண்டிகை முறைமையின்படி இறையுறவில் நிலைத்து வாழ்ந்திட எருசலேமுக்குப் போனார் (லூக். 2:41,42). குடும்ப வாழ்வின் உயர்வுக்காகத் தகப்பனாரோடு இணைந்து உழைத்தார். ஒலிவ மரக்கன்றினைப் போல ஞானத்தில் வளர்ச்சியில் தேவ கிருபையில் வளர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராக வாழ்ந்தார். பரந்த விரிந்த குடும்ப உறவுக்கு அடித்தளமாக தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகின்றவரே எமது குடும்ப அங்கத்தினர் என்றார் (மாற். 3:31-35). இயேசு கிறிஸ்துவின் மாதிரியினைப் பின்பற்றி நல்ல குடும்ப உறவுகளைக்கட்டி, குடும்பம் கடவுளின் அருட்கொடை என்பதை உண்மையாக்கி வாழ்வோம். இறையாசி நம்மனைவரோடும் இருப்பதாக.

**அருள்திரு. A. மகேர்ஷால் அஸ்பாஸ்**

| 31-12-2017 | ஆண்டு நிறைவுத் தொழுகை |
|---|---|

## நன்றிப் படையலோடு ஆண்டவரிடம் வாருங்கள்
**COME TO THE LORD WITH THANKS GIVING !**

| | |
|---|---|
| 2 சாமுவேல் 6:1-15 | கொலோ. 3:12-17 |
| திபா. 91 | லுக்கா 17:11-19 |

**.....நன்றியுள்ளவர்களாயிருங்கள்** கொலோ. 3:15

பயணத்தின் நிறைவினில் வெற்றிகரமாக கடந்து வந்ததை எண்ணி உள்ளம் மகிழ்வதுண்டு. பாதைகளில் சந்தித்த சில நிகழ்வுகள் நம்மைத் தடுமாறச் செய்திருந்தாலும் பயணத்தின் இலக்கை நிறைவு செய்திட்ட நிம்மதியில் எழுகின்ற மகிழ்ச்சி புதிய பயணத்திற்கும் நம்மை ஊக்கப்படுத்துவதாக அமைகின்றது. வாழ்க்கை என்னும் பயணத்தில் 2017 எனும் வருடத்தை புதிய தீர்மானங்களோடும் வாக்குத் தத்தங்களோடும் தொடங்கி வருடத்தை நிறைவு செய்து 2018 க்கான பயணத்திற்கு ஆயத்தப்பட்டு அமர்ந்திருக்கிறோம். விதவிதமான கொண்டாட்டங்களோடு புதிய விடியலை வர வேற்க உலகமே ஆயத்தப்படும் இந்தத் தருணம் இறைச் சமூகத்தில் அமர்ந்து கடவுளை சேவிப்பதை விட மேலான பேறு மற்றொன்றிலும் இல்லை, வருட நிறைவையும் புதிய வருடத்தின் துவக்கமும் சங்கமிக்கிற இத்தொழுகையில் நமது மனம் சுமந்து நிற்கிற பண்புகள் எது என்பது பரிசோதனை செய்திட கிடைத்திருக்கும் தருணமாக இதனைக் கருத வேண்டும் கடவுளின் சமூகத்தில் எவ்வித எண்ணத்தோடு வந்திருக்கிறோம், கடந்து வந்த பாதைகளில் நாம் பெற்ற அனுபவங்களின் வழியாக ஏற்பட்ட கோபம், பகை பொறாமை, சண்டை, மார்க்க பேதம், பதவி வெறி... ஆகியவைகளை விட்டு ஆண்டவரிடம் நன்றியுடன் வர வேண்டும்.

இத்தொழுகை கடவுளுக்கு நாம் நன்றி செலுத்தும் தொழுகையாக அமைந்திடல் வேண்டும். நாம் எழுந்து பிரகாசிக்க திருமறை கற்றுத் தரும் வாழ்வியலின் அடிப்படையில் வாழ நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

### *1. இடறிடாமல் உடனிருந்து நடத்தினதற்காக நன்றியறிதல் :*

(2 சாமுவேல் 6:14,15)

கடவுளின் உடனிருப்பை இஸ்ரயேலருக்கு உணர்த்தியதில் உடன்படிக்கை பேழைக்குத் தனிச் சிறப்பு உண்டு, பாலை நிலத்தில் பயணம் செய்த போது அனைத்து மக்களுக்கு முன் சுமந்து செல்லப்பட்டது. (எண் 10:33) பாலை நிலப் பயணத்தில் எதிர்ப்போரையும் (யோசுவா 3:3) எதிர்த்து நிற்பவற்றையும் (யோசுவா 6:11) வெற்றி கொண்ட தருணங்களிலெல்லாம் உடன்படிக்கைப் பேழை உடன் இருந்திருக்கிறது.

மேலும் இறைத் திருவுளத்தைக் கேட்டு அறியும் இடமாகவும் இருந்தது கானான் நாட்டில் இஸ்ரவேலர் நிலையாக வைக்கப்பட்டது பெலியஸ்தியருக்கு எதிராக நடந்த போரில் பெலிஸ்தியர் இஸ்ரவேலரை வென்று பேழையைக் கவர்ந்து சென்றனர். (1சாமு. 4:10-11) பெலிஸ்தியரிடம் பேழை இருந்த போது அவர்கள் விரும்பாத செயல்கள் நடைபெற்றன. (1 சாமு. 5:3). தொற்று நோய்கள் பரவ ஆரம்பித்தன. இதனால் இஸ்ரயேலரிம் பேழை திரும்ப அனுப்பட்டது. (1 சாமு 6:1) அங்கும் அதே நிலை நீடித்தது. (1 சாமு 6:19) பெலிஸ்தியருடனான தோல்வி, தொற்று நோய் இவைகளால் இஸ்ரயேலர் உடன்படிக்கைப் பேழையின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். ஆனால் தாவீது பேழையை எருசலேமில் கொண்டு வருகிற முயற்சியில் வெற்றி பெறுகிறார். உடன்படிக்கை பேழை கடவுளின் உடனிருப்பைத் தந்து கொண்டிருக்கிறது என்ற தாவீதின் தளராத நம்பிக்கையே அதனை எருசலேமில் கொண்டு வரத் தூண்டியது. எனவே தான் அரசனான தனது தகுதியைப் பாராமல் கடவுளுக்கு முன்பாக நன்றியை வெளிப்படுத்தினார். (2சாமு. 6:14).

கடவுளின் உடனிருப்பே நம்மை கடந்த காலமெல்லாம் நடத்தி வந்திருக்கின்றது, கடவுளின் பிரசன்னத்தை உணர்த்துவபற்றை உதாசீனப்படுத்தி பொருட்படுத்தாத நேரங்கள் இஸ்ரயேலரைப் போன்று நமக்கும் வாய்த்திருந்தன என்பதை மறுக்க முடியாது, கடவுளின் உடனிருப்பை உதாசீனப்படுத்திய தருணங்களுக்காக மன்னிப்பை வேண்டி உடனிருந்து காத்து நடத்தும் கடவுளுக்கு அரசராகிய தாவீது படைத்த நன்றியைப் போன்று ஏற்புடைய நன்றி படையலாக நமது வாழ்வை அர்ப்பணிப்போம்.

### *2. இறை அழைப்பில் உறுதிப்படுத்தினதற்காக நன்றியறிதல் :*

(கொலோ. 3:12)

ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்ற தனது நிறுவனத்திலிருந்து அழைப்பினை பெறும் ஒருவர், ஆரம்ப நிலையில் மகிழ்ச்சியடைவதை விடவும் பணியை நிறைவேற்றிய பின் ஏற்படும் மகிழ்ச்சி தான் சிறப்பானது என்பதை நாம் அறிவோம். அந்த மகிழ்ச்சியின் பின்னணியில் பணியை நிறைவேற்ற எடுத்துக் கொண்ட அயராத உழைப்பும் தடைகளிலும் தளர்ந்திடாத உறுதியும் இருக்கும். அழைப்பிலே (பணியிலே) உறுதியாயிருப்பது தான் வெற்றியின் இரகசியம், வெற்றியின் வெளிப்பாடே மகிழ்ச்சி. மகிழ்ச்சியின் மறு வடிவமே நன்றியறிதல்.

கொலோசேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் நீங்கள் கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் அவரது அன்பிற்குரிய இறைமக்கள் (கொலோ. 3:12) என்கிற அழைப்பும், நன்றி செலுத்துங்கள் என்ற ஆலோசனையும் (கொலோ. 3:17) பவுலரால் அருளப்படுகிறது. அழைப்புக்கும், நன்றியறிதலுக்கும் இடைப்பட்ட பகுதி தான் போராட்டமான நிலை. ஏனென்றால் அழைப்பிலே உறுதியாய் நிற்பதற்கு எதிரான சூழல்கள் வருவதுண்டு அந்தச் சூழல்களிலும் ஆண்டவருக்காக நிலைத்திருக்க

கடவுள் அளிக்கிற கிருபைகளுக்காக நன்றியறிதலோடு வாழவேண்டும். கடவுளின் அழைப்பிலே நிலை நிற்கவும், பாதை மாறாது பயணிக்கவும் இறைவனது நடத்துதலுக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் வாழ்வோம். அழைப்பிலிருந்து விலகி பாதை மாறி பயணித்த அனுபவங்களுக்காக மனம் வருந்தி திருந்துவோம்.

## *3. இரக்கத்தால் இரங்கினதற்கு நன்றியறிதல் :*

(லூக்கா 17 : 15)

ஊருக்குள்ளே மொத்த பேருக்குள்ளும் எத்தனையோ பேருக்குத் தொழு நோய் இருந்திருக்கலாம். ஆனால் அத்தனை பேரிலும் பத்துப்பேர் மட்டுமே இயேசுவைச் சந்திக்கிறார்கள். அந்தச் சந்திப்பு இரங்கும், இரங்கும் என அபயமிட்ட ஏக்கத்தின் குரலாகவே வெளிப்பட்டது. ஆசாரியர்களுக்கு அவர்களை காண்பிக்க கட்டளையிடுகிறார். காண்பிக்க புறப்படும் போது பத்துப்பேரும் சுத்தமாகிறார்கள். பத்துபேரில் ஒருவன் மட்டுமே அதுவும் சமாரினாயிருந்தவன் மட்டுமே தான் நலமானதைக் கண்டு. திரும்பி வந்து ஆண்டவரை மகிமைப்படுத்துகிற நிகழ்வு நன்றியறிதலைக் குறித்த மனித மனங்களின் நிலையைப் பிரதிபலிக்கின்றது. இயேசுவின் கேள்வியே நம்மிடையேயும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. சுத்தமானவர் பத்துப் பேர் அல்லவா, மற்ற ஒன்பது பேர் எங்கே? . . . சுத்தமானவர்களின் வரிசையில் நிச்சயம் நாமெல்லாரும் இடம் பெற்றவர்கள். ஏனெனில் சமூகத்தில் புரையோடிக் கிடந்த அழுக்குகளாலும் அவலட்சணங்களாலும் புதையுண்டு கிடந்த நம் அகமும், புறமும் கழுவப்பட்டு அவரது விலையேறப் பெற்ற உதிரத்தால் மீட்டார் இயேசு கிறிஸ்து. ஆகவே சுத்தமானவரின் வரிசையில் நமக்கு இடமில்லையென்பதற்கே இடமில்லை. ஆனால் நாமெல்லாரும் சிந்திக்க வேண்டியது சுத்தமான பத்துப் பேரில் நன்றி செலுத்த திரும்பிய சமாரியனைப் போல இல்லை. நன்றி மறந்த மற்ற ஒன்பது பேரோடு அணிவகுக்கின்றோமோ. உள்ளத்திலிருந்து சொல்ல உந்தப்படுகிறோம்

இரக்கத்தால் இரங்கிய இறைவனுக்கு நன்றியறிதலே நம்மில் எதிர் பார்க்கப்படுவதாகும். சுத்தமான பத்துப் பேரில் சமாரியனைப் போல கடவுளை மகிமைப்படுத்தி இரக்கத்தை ஈந்த இறைவனுக்கு நன்றிப் படையலோடு நம்மை வெளிப்படுத்துவோம். நலமானதைக் கண்டும் கடவுளுக்கு நன்றி செலுத்த தவறிய தருணங்களுக்காக மனம் வருந்துவோம்.

நன்றியுணர்வு கடந்த காலத்திற்கு அர்த்தம் கொடுக்கிறது. நிகழ்காலத்தில் அமைதியைத் தருகிறது. வருங்காலத்திற்கு வெளிச்சம் வீசுகிறது. வருங்காலம் நன்றியுள்ள நமது வாழ்வால் வெளிச்சமாகட்டும்.

**அருள்திரு. R. ஐசக் மெரின் சிங்**

# தவக்கால அருளுரைகள்

08-03-2017

**தவக்கால இரண்டாம் புதன்**

## "கல்வாரியும் சீட்டுப்போடுதலும்"

**(CALVARY AND GAMBLING)**

யோவான் 19:23,24

> **"என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப்போட்டார்கள்"**
> **யோவான் 19:24**

இயேசு கிறிஸ்துவை ரோம போர்ச் சேவகர்கள் சிலுவையில் அறைந்தபின் அவருக்கு முன்பாகவும், அவருடைய தாய் மற்றும் அனைத்து மக்களுக்கு முன்பாகவும் இயேசுவின் ஆடைகளைப் பங்கிட்டு அதற்காகச் சீட்டுபோட்டார்கள் என்பதே இப்பகுதியின் செய்தி.

சீட்டுப்போடுதல் என்பது தெரிவு செய்தல் என்ற அர்த்தத்தில் நடைபெறும் நிகழ்வாகும். சிலுவையில் அறையப்படும் நபரின் ஆடைகளை, அதை நிறைவேற்றும் நபர் / அதிகாரி பெற்றுக்கொள்ளலாம் என்பதே மரபு. இங்கேயும் நான்கு பேர் நின்று அதைப் பங்கிட்ட பின் யாருக்கு எந்தப் பங்கு என்று முடிவு செய்வதற்காக சீட்டுப் போட்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் லேவி. 16:8-10 பகுதியில் ஆடையைத் தெரிவு செய்வதற்காக சீட்டுப் போட்டார்கள். நீதி. 18:18 இல் சீட்டுப்போடுதல் விரோதங்களை ஒழித்து நல்ல தெரிவை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. எனவே சீட்டுப்போடுதல் ஒரு பெரிய பின்னணியத்தை கொண்டிருந்தாலும் கல்வாரியில் போடப்படும் சீட்டு மற்றெல்லாவற்றையும் விட வித்தியாசமாகவும், விசித்திரமாகவும் காணப்படுகிறது.

உரியவர் உயிரோடிருக்கும்போது அவரின் அனுமதி இல்லாமல் உடமைகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கும் நிகழ்வு பழைய ஏற்பாட்டு சீட்டு போடுதலுக்கு எதிரானதாகும். இப்படிப்பட்ட சூழலில் இயேசுவின் ஆடையைப் பங்கிடுவதற்காக சீட்டுப் போடுதல் சில உண்மைகளை கற்றுத் தருகிறது.

### *1. உயிரைக் கொடுக்க வந்தவரின் உடையில் திருப்தியடைந்த சேவகர்கள் :* (யோவா 19:23)

உடை மனிதனுக்கு முக்கியமானதாகும். இயேசுவின் ஆடை ஒரே அங்கியாக காணப்பட்டது. இது முதன்மை குருவின் ஆடைக்கு ஒத்ததாகக் காணப்பட்டது என ஜோஸிபஸ் குறிப்பிடுகிறார். ஒருவர் சிலுவையில் அறையப்படும் போது அவர் அணிந்திருந்த ஆடைகளை மாற்றி அவர்களுக்குப் போர்வீரர்கள் வேறு ஆடையைக் கொடுப்பார்கள். ஆனால் இயேசுவுக்கு நடந்த நிகழ்வே விசித்திரமாகக் காணப்படுகிறது. எப்படியெனில் லூக். 23:10,11 வசனங்களில் ஏரோதும் அவரது

போர்ச்சேவகரும் சேர்ந்து இயேசுவை நிந்தித்து அவருக்கு மினுக்கான ஆடையை உடுத்தி அவரைக் கேலி செய்தனர்.

ஆனால் பங்கிட்டது மினுக்கான ஆடையல்ல. இயேசுவின் சொந்த ஆடை. இயேசுவின் பாடுகளையும் அவரின் சாந்தமான குணத்தையும், நடைபெறும் எல்லா நிகழ்வுகளையும், கண்ட பின்னரும் அவரை அறிந்து கொள்ள இயலாத சேவகர்கள் அவருடைய ஆடைக்காகச் சீட்டுப் போட்டார்கள்.

உலகத்திற்காக எல்லாவற்றையும் தியாகமாகக் கொடுத்த ஆண்டவரின் உடைகள் சேவகர்களை ஈர்த்தன. முதன்மை குரு உடுத்தும் ஆடைக்கு ஒப்பான ஆடையை ரோமப் போர்ச் சேவகர் உடுத்துவது கூடாத காரியம். ஆனால், தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது (தி.பா. 22:18). ஆடை என்பது ஒரு மனிதனின் வெளிப்புறத் தோற்றத்தைத் தீர்மானிக்கின்றது. இந்தச் சேவகர்கள் சித்திரத்தையலாடையான இயேசுவின் உடையைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முயற்சி செய்தனர். ஆனால் அதை விட மேலான தியாகத்தையும், தெய்வீகத்தையும் உணரத் தவறிவிட்டனர். தம்மையே தருவதற்காக இயேசு வந்தார். ஆனால் சேவகர்களோ அவருடைய உடையிலே தங்களைத் திருப்திபடுத்திக் கொண்டார்கள். இயேசுவின் வேதனையும், தாயின் கண்ணீரும் இவர்களுக்குப் பெரிதாகப்படவில்லை. மாறாக அவரது அங்கியிலேயே பிரியம் கொண்டனர்.

### *2. மீட்பை உணராமல் மேட்டிமையில் திருப்தியடைந்த சேவகர்கள் :* (யோ. 19:24)

இயேசுவின் பாடு மரண நிகழ்வை கவனித்த அத்தனை மக்களும் ஆச்சரியப்பட்டார்கள். குறைந்த அனுபவமே இருந்த சீமோன் அவருக்காகச் சிலுவையைச் சுமந்தான். ஆனால், விசாரணை, சிலுவைப்பாடுகள் என அத்தனை நிகழ்வையும் நேரில் கண்ட சேவகர்களால் அதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

லூக். 23:33-36 வசனங்களில் ஆடையைப் பங்கிட்டபின் அவரைப் பரியாசம் செய்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இயேசுவின் வேதனையும், தாயின் கண்ணீரும், சுற்றிலும் நடைபெறும் அசாதாரண நிகழ்வுகளும் சேவகர்களை ஒன்றும் செய்யவில்லை. அவர்களின் மனம் தங்கள் மேட்டிமையிலே உறுதியாயிருந்தது. ஆடையைப் பங்கிடுதல் தங்களது உரிமை என்ற எண்ணத்திலே சுற்றிலும் நடைபெறுவதைப் பார்க்க அவர்களின் கண்கள் இருளடைந்திருந்தன. உரோமைச் சேவகன் என்ற பெருமையும் அதிகாரி என்ற ஆணவமும் அவர்களைக் கட்டிப்போட்டது.

சேவகர்களின் இந்நிகழ்வு நம்மோடு தொடர்புடையதாகும். தம்மையே தந்த ஆண்டவரின் செயல்பாட்டை மறந்து நமது,

ஆதாயத்திற்காக அவரை நாம் விரும்புவது போல சித்தரித்து நாம் திருப்திப் படுகிறோம். அவருடைய மீட்பின் திட்டத்தை உணராமல் நம்மில் மேட்டிமை கொள்கிறோம்.

ஆண்டவருடைய மீட்பின் திட்டம் நம்மில் தொடர்ந்து செயல் வடிவம் பெறுகிறதா என்பதைச் சிந்திப்போம். இன்று திருச்சபையில் இயேசு கிறிஸ்து காட்டிய முதன்மையான மதிப்பீடுகளான நீதி, இரக்கம், விசுவாசம் போன்றவைகட்கு முக்கியத்துவம் தராமல் ஆன்மிகம் சார்ந்த செயல்பாடுகளை வியாபாரப் பொருளாக்குவது கிறிஸ்துவுக்கும், திருமறைக்கும் விரோதமானது. திருச்சபை வணிகக் கூடமோ அல்லது காசுக்கடையோ அல்ல. அது எல்லா மக்களின் இறைவேண்டலின் வீடு. இதை உணர்ந்து உலகுக்குரியவைக்காக அல்ல, மேலானவைகளை நாடுவோம்.

**திரு. C. மோகன்**

15-03-2017 தவக்கால மூன்றாம் புதன்

## கல்வாரியும் சாபமும்

**CROSS AND CURSE**

கலாத். 3:10-14

**"...மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்." கலாத். 3:13**

கலாத்தியாவிலுள்ள திருச்சபைகளில் போதனைகளை வழங்குகிற பல ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் அருள்நாதர் இயேசுவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சமயம் சார்ந்த சடங்குகளுக்கும், போதனைகளுக்கும் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், திருச்சட்டத்திலுள்ளவைகள் யாவையும் தனது வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்றும், இவைகளை செய்தால் மட்டுமே இறைவனுக்கு ஏற்புடையவர்களாக மாற இயலும் என்றும் போதித்தார்கள். இவ்வாசிரியர்களும் வாழ்வில் இயேசு கிறிஸ்துவுக்கல்ல, திருச்சட்டம் சார்ந்து உடல் உழைப்புக்கே இன்றியமையாத இடம் கொடுத்தார்கள். இத்தகையச் சூழலில் தூய பவுலார் கலாத்திய இறைமக்களிடம் கூறுகிறார், "இறைப்பற்றினூடாய் நேர்மையுடையோர் வாழ்வு பெறுவர்". ஆனால், திருச்சட்டத்தினூடாய் மக்கள் சாபத்தை வருவித்துக் கொள்வர். இச்சாபத்தின் கூலி மரணம். அவர்கள் மரத்தில் தூக்கப்பட வேண்டும். எனவே, தவறிழைக்காத மீட்பரேசு தம்முள் பாவத்தை ஏற்றுக்கொண்டு தம்மைச் சாபமாக்கி, கல்வாரிக்கு ஒப்புக் கொடுத்தார். திருமறைச் சான்றோடு மீட்பின் திட்டம் என்ன என்பதைத் தியானிப்போம்.

### *1) சாபத்திற்குள்ளாக்குகிற திருச்சட்டம் :* (கலாத். 3:10-12)

திருச்சட்டத்திற்குள் சாபமும் அடங்கியுள்ளது என்று இத்திருவசனங்கள் கூறுகின்றன. இம்மறை வாக்குகளில் வருகிற சாபம் (Curse) என்ற வார்த்தையின் கிரேக்கப்பதம் "Ketaram" (Means, "to be condemned and doomed to punishment by the righteous judgement of God"). "கடவுளின் நீதித்தீர்ப்பில் தண்டனைக்கு உரியவர்கள் என தீர்ப்பிடப்பட்டவர்கள் அல்லது தண்டனை விதியைப் பெற்றவர்கள். திருச்சட்டத்தில் உள்ளவைகள் யாவையும் சற்றும் பிசகாமல் செயல்முறைப்படுத்த வேண்டும்". இல்லையேல் இச்சட்டத்தை மீறியவர்களாவர். அதற்கான தண்டனையையும் பெற வேண்டும். மோசே இஸ்ரயேலருக்கு கடவுளது கட்டளையாக, "இன்று நான் உங்களுக்கு விதிக்கும் அனைத்துக் கட்டளைகளையும் கடைப்பிடியுங்கள்" (இ.ச. 27:1).

இவைகளை கடைப்பிடிப்பதில் கருத்தின்றியிருந்தால், இந்தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து உன்னில் தங்கும். (இ.ச. 28:15). "இச்சாபத்துக்கான கூலி சாவு (உரோ. 6:23). இத்திருச்சட்டத்திலுள்ளவைகள் யாவையும் நடைமுறைப்படுத்துவதால் வாழ்வு பெறுவர்" (கலா. 3:12). ஆனால் இறைப்பார்வையில் எவராலும் இத்திருச்சட்டத்திலுள்ள யாவையும் செயலாக்கம் செய்வது மிகவும் அரிது, எவராலும் கூடாது. ஆகையால் இச்சட்டத்தை மீறுவது பாவம், சாபம், அதற்கான அபராதமாக அல்லது கூலியாக மரணத்தை ருசித்தாக வேண்டும்.

இப்படியிருக்க, கடவுளை அடைவதற்கு அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட வழி, "நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்" (கலாத். 3:11). திருமறை தெளிவுபடுத்துவது எவரும் இறைப்பார்வையில் திருச்சட்டத்தின்படி வாழ்ந்து அவருக்கு ஏற்புடையவராக இயலாது. ஆனால், கடவுள் அன்புள்ளவர், நேர்மையாளர். அவர் இறைமக்களின் நம்பிக்கையினை கருத்தில் கொண்டு நீதிமான்களாக ஏற்றுக்கொள்கிறார். காரணம், திருச்சட்டம் சார்ந்த செயல்களால் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை. ஆதலால் நம்பிக்கையால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆகுமாறு கிறிஸ்து இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு வாழ நாம் ஆயத்தப்படுவோம்.

***2) மீட்பளிக்கிற கல்வாரி நாதர் :*** (கலாத். 3:13)

"... நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார்".

மீட்பர் திருச்சட்டத்திலுள்ள முழுமையையும் வாழ்வில் செயல்படுத்தினார். அவரில் பிழை என எதுவுமில்லை. அபராதமும் அவசியமில்லை. ஆகையால் கடவுளுக்கு முன் நேர்மையாளராக நிற்கவும், நிலைவாழ்வு கோருவதற்கான உரிமையும் அவருக்கு உண்டு. ஆனால், மீட்பரேசு இவ்வுரிமைகளைத் தமக்கென்று கேளாது, மனுக்குலத்தை சாபத்தினின்று மீட்கும் பொருட்டாய் இம்மக்களுக்காகக் கேட்கிறார். மக்களின் சாபங்களை தமக்குள்ளே ஏற்றுக்கொண்டு அளப்பரிய அன்பினூடாய் தம்மையே சாபமாக்கி நம்மை மீட்டுக்கொண்டார். மீட்டுக் கொண்டார் (redeemed) என்ற வார்த்தைக்கு கிரேக்கப் பதம் "exegorasen" ("to buy back or to buy from or to ransom"). "திரும்ப வாங்குவது, அல்லது கிரயத்துக்கு விடுவிப்பது". இயேசு நாதர் மனுக்குலத்தைச் சாபத்திலிருந்து மீட்கும்படி நமக்குப் பதிலாக தம்மையே விலையாக, கிரயமாகக் கொடுத்து சாவிலிருந்து மீட்டுக்கொண்டார். இ.ச. 21:22, 23, "சாவுக்கு ஏதுவான பாவம் செய்தவர் சாகடிக்கப்பட்டபின் அவரது பிணத்தை ஒருமரத்தில் தொங்கவிடு... ஏனெனில் தொங்கவிடப்பட்டவர் கடவுளால் சபிக்கப்பட்டவர்". இங்ஙனம் அனைவரும் திருச்சட்டத்தினூடாய் சபிக்கப்பட்டவர்களாகி மரண தண்டனைக்கு

உரியவர்களாக மரத்தில் தூக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், கல்வாரியின் நாதர் இயேசு மனுக்குலத்தின் சாபத்தை தம்முள் ஏற்றுக்கொண்டு பாவமறியாதவர் சாவுக்கேதுவான தண்டனைக்காக தம்மையே சாபமாக்கினார். அதற்கான அபராதத்தை நமக்கு பதிலாகச் செலுத்தும் நோக்கோடு அன்பின் வெளிப்பாடாய் கல்வாரி மரத்தில் தூக்கப்பட ஒப்புக்கொடுத்து நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார். எபே. 1:5 இல் கடவுள் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன் குறித்து வைத்தார். நாம் மீட்பரேசுவை ஏற்றுக்கொண்டு இறைப்பற்றுடன் இறைவனிடம் உறவு கொண்டு வாழ்வோம்.

**திரு. Z. ஜாண் சாமுவேல் ஸ்டாலின்**

22-03-2017

தவக்கால நான்காம் புதன்

## கல்வாரியும் ஏற்றுக்கொள்தலும்

**(CALVARY AND ACCEPTANCE)**

யோவா. 6:34-40

**“தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் என்னிடம் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளி விடமாட்டேன்.” யோவா. 6:37**

இயேசுநாதரின் வாழ்வு சார்ந்த பணிகள் அனைத்தும் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவோரையும், ஒதுக்கப்படுவோரையும் புறம்பே தள்ளிவிடாமல் அவர்களைத் தம் பக்கம் ஏற்றுக் கொள்ளுவதாகவே அமைந்திருந்தது. இயேசுவின் ஏற்றுக்கொள்ளுதல் என்பது இருக்கிற நிலையில் இருந்து அப்படியே நம்மை ஏற்பது. திருமறை இதனை இயேசுவின் கலிலேயா தொடங்கி கல்வாரி வரையிலும் கற்றுத் தருகிறது. தந்தை தமது திருக்குமாரனை இந்த மண்ணில் அனுப்பியதற்கான முதன்மையான நோக்கமே உலகும் மானுடமும் அழிவுறாது பாவத்திலிருந்து மீட்படைய வேண்டும் என்பது தான். பாவிகளை மீட்கவே கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார் (I திமொ. 1:15) என்ற வார்த்தை தந்தையின் திருவுளத்தை உறுதிப்படுத்துகிறது. கல்வாரியில் தம்முயிரைத் தந்த இயேசு கிறிஸ்து நம்மை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறார் என்பதைத் தியானிப்போம்.

### *1. உறவைத் தந்து ஏற்றுக் கொள்ளும் ஆண்டவர் :*

கல்வாரி மலையில் சாபத்தின் அடையாளமாக அமைந்த சிலுவை மரம் ஆண்டவரின் அருளினால் உறவின் அடையாளமாக உருமாறியது. இரண்டு மரத்துண்டுகளின் இணைப்புதான் சிலுவை. இந்த இணைப்பு உறவின் செய்தியையே உலகிற்கு உரைக்கிறது. இச்சிலுவையில் உள்ள கிடைமட்டத்துண்டு மனிதருக்கும், மனிதருக்கும் இடையேயான உறவினைக் காட்டுகிறது.

“தாமே துன்புற்று பகைமையை அழித்தார்” சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஓருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கி இப்படிச் செய்தார் சிலுவையில் இரண்டு கரங்களும் இழுத்து கட்டப்பட்ட இயேசுவின் நிலை, உலகோரை இருகரம் நீட்டி புதிய உறவிற்குள் வாருங்கள் என அழைப்பதாய் அமைகிறது.

கடவுளுக்கு தூரமானவர்கள் எனச் சமூகத்தினரால் சுட்டிக் காட்டப்பட்டோரை, சமீபமாய் கூட்டிச் சேர்த்தார் (எபே. 2:12, 13). மேலும் கடவுளின் வீட்டார், தந்தை மகன் என்கின்ற புதிய உறவினை நமக்களித்து

மனிதரிடையே உள்ள பகையை சிலுவையில் அழியச் செய்து, இருதிறத்தாரையும் ஒரே உறவில் இணையச் செய்தார்.

கல்வாரியில் கரைபுரண்டோடிய உதிரத்தின் பெருந்துளிகளால் கனிந்த இயேசுவின் உறவு உயர்வானது.

## 2) உயிரைத் தந்து ஏற்றுக் கொள்ளும் ஆண்டவர் :

உலகையும், உலகில் உள்ள அண்டசராசரங்கள் அனைத்தையும் உருவாக்கிய இறைவன் மண்ணகத்தில் மனிதனான போது தலைசாய்ப்பதற்கு இடமில்லாமற் போனது. உரிமையாளரான இயேசுவுக்கு இந்த உலகம் உடைமையாக்கிக் கொள்ள எதையும் அளிக்கவில்லை. உடுத்தியிருந்த உடையைக் கூட உரிந்து எடுத்து பங்கிட்டுக் கொண்டனர். இந்நிலையில் இயேசுவுக்கென்று உடைமையாய் இருந்தது அவரது உயிர் மட்டுமே. அதையும் மானுடத்திற்காகக் கையளித்து நம்மை ஏற்றுக் கொண்டார்.

தம் திருப்பணியின் தொடக்க முதல் கல்வாரி வரை, எவரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசு கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது. சமூகமும், சமயமும் பல்வேறு அளவீடுகளை முன் வைத்து புறக்கணித்த, ஒடுக்கின மக்களை (ஆயக்காரர், பாவிகள், நோயுற்றோர், ஏழைகள்) இயேசு கிறிஸ்து எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றுக்கொண்டார். இந்த ஏற்றுக் கொள்தலின் பணியைத் தம் கடைசி மூச்சுவரை நிறைவேற்றினார் என்பதற்கு மனம்மாறிய கள்வனே சான்று.

கல்வாரி ஏற்றுக்கொள்தலின் இடம். கடவுள் பாவத்தில் விழுந்துபோன மக்களை கிறிஸ்துவின் வழியாக மீண்டும் ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதற்குச் சான்று பகரும் இடம். ஆகவே நாம் கிறிஸ்துவின் பொருட்டு சமூக, சமய எல்லைகளைக் கடந்து கடவுளின் மக்களாக எல்லோரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். திருச்சபை ஏற்றுக் கொள்தலின் இடமாக, அனைத்து மக்களும் ஒன்றிணையும் இடமாக மாற்றம் பெற வேண்டும். உறவையும், உயிரையும் தந்து எல்லோரையும் ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவுக்கு நாம் சாட்சியாகத் திகழவேண்டும்.

அருள்திரு. **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

29-03-2017

தவக்கால ஐந்தாம் புதன்

## கல்வாரியும் சகிப்புத்தன்மையும்

**THE CALVARY AND TOLERANCE**

1 பேது 2:13-23

**பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை: துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை: நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார். 1பேது 2:23**

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய நாவல் புத்துயிர்ப்பு (Resurrection) என்பதாகும். இந்த நாவலை அவர் எழுதுவதற்கு ஓர் அகக் காரணம் உண்டு. 1898 ஆம் ஆண்டு டுகோபார்ஸ் (Dukhobors) எனப்பட்ட மக்கள் ரஷ்யாவிலிருந்து வெளியேறி கனடாவில் அகதிகளாகத் தஞ்சம் புகும் நிலை ஏற்பட்டது. அம்மக்களின் பொருளாதாரத் தேவைக்காகவே இந்நாவலை அவர் எழுதினார்.

ஏன், ஒரு கூட்ட மக்களின் பொருளாதாரத் தேவைக்காக புகழ்பெற்ற எழுத்தாளர் ஒரு நாவலை எழுத வேண்டும்? அதற்குக் காரணம் டுகோபார்ஸ் மக்களின் அன்பும், சகிப்புத்தன்மையும், வாழ்க்கை முறையுமேயாகும். டுகோபார்ஸ் மக்கள் அடிப்படையில் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கிறிஸ்தவர்களில் தனித்துவமிக்கவர்களாக விளங்கினர். எந்நிலையிலும் வன்முறையோ, கொலையோ கூடாது, மனிதரில் உயர்வு தாழ்வு கிடையாது, இராணுவ சேவை கூடாது. ஏனென்றால் இராணுவம் சமாதானத்திற்கு எதிரானது. அகிம்சை, எளிமை, தூய சிந்தை இவையே டுகோபார்ஸ் மக்களின் வாழ்க்கைச் சித்தாந்தமாகும். டுகோபார்ஸ் மக்களின் அன்பையும், சகிப்புத்தன்மையையும் விளக்க ஒரு நிகழ்வு சொல்லப்படுகிறது.

ஒருமுறை கசாக்கியப் படைவீரன் ஒருவன், டுகோபார்ஸ் மக்களில் ஒருவனை நாள் முழுவதும் சாட்டையால் அடிக்கிறான். மறுநாளும் வந்து அவ்வண்ணமே செய்கிறான். அப்போது அந்தக் கசாக்கியப் படைவீரனிடம், அடி வாங்கியவன், உனக்குச் சரியான ஓய்வு இல்லை. என்னிடம் கொஞ்சம் பழங்கள் இருக்கின்றன. நீ அதைச் சாப்பிட்ட பிறகு வந்து என்னை அடிக்கலாம் என்கிறான். அந்த அளவுக்குச் சகிப்புத் தன்மையும், அன்பும் உடையவர்களாக டுகோபார்ஸ் விளங்கினர். இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்களில் ஒருவரான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, உலகம் போற்றும் அகிம்சை எனும் வாழ்வியல் முறையைத் தான் அறிந்து கொள்ள அகத்தூண்டுதலாயிருந்தது (Inspiration) லியோ டால்ஸ்டாய் என்று குறிப்பிட்டுள்ளார். லியோ டால்ஸ்டாயைப் பெரிதும் கவர்ந்தது டுகோபார்ஸ் மக்களின் வாழ்க்கை முறையாகும். டுகோபார்ஸ் மக்கள்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தே இந்த அன்பையும் சகிப்புத் தன்மையையும் கற்றுக் கொண்டனர்.

திருத்தூதரான பேதுரு தனது முதலாம் திருமுகத்தில் துன்பத்தின் உச்சத்தில் இருந்த முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு, துன்புறும் கிறிஸ்துவின் முன்மாதிரியை உதாரணமாகக் காட்டி சகிப்புத்தன்மையுடன் வாழ அழைக்கிறார் ( 1 பேது 2 : 18-23 ). சகிப்புத் தன்மை என்பது தனக்கு மாறானதை, தான் விரும்பாததை பொறுத்துக் கொள்ளும் அல்லது ஏற்றுக் கொள்ளும் இயல்பாகும். அத்தகைய இயல்பைத் தான் ஆண்டவர் தம் மானுட வாழ்வின் தொடக்கம் முதல் கல்வாரிவரை கையளித்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கல்வாரி அனுபவம், சகிப்புத் தன்மையின் உச்சம் என்றால் மிகையாகாது. அநீதியான துன்புறுத்தலிலும் இயேசு கிறிஸ்து எப்படி அதைச் சகித்துக் கொண்டார், அவருடைய பதிற்செயல் என்ன என்பதை இன்றைய திருமறைப் பகுதி சார்ந்து கற்றுக் கொள்வோம்.

***1. பணிந்திருந்தல் :*** (1 பேது 2 : 13-18)

புனித பேதுரு இப்பகுதியில், நாட்டில், சமூகத்தில் கிறிஸ்தவர்களின் பொறுப்புகளையும், கடமைகளையும் பற்றிப் பேசுகிறார். இக்கடிதம் எழுதப்பட்ட போது கிறிஸ்தவர்கள் ஆளுவோராலும், அதிகார வர்க்கத்தாராலும் பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆட்சியாளர்களாலும் அதிகாரம் உடையவர்களாலும் அநீதி இழைக்கப்பட்ட போது கிறிஸ்தவர்கள் அத்தகையோர் மீது கசப்புணர்வும் வெறுப்புணர்வும் கொண்டனர். சகிக்க முடியாச் சூழலில் எதிர்த்துப் போரிட்டால் என்ன? என்பது போன்ற சிந்தனைகள் எழுந்தன. இந்நிலையில் பேதுரு, எல்லா மனித அமைப்புகளுக்கும் தலைவர்களுக்கும், ஆள்வோருக்கும் ஆண்டவரின் பொருட்டுப் பணிந்திருக்க வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை என அறிவுரை வழங்குகின்றார்.

இங்கு ஒரு கேள்வி எழுவது இயல்வு. அப்படியானால் தீமை செய்கின்ற அநீதியை விளைவிக்கின்ற, அமைதியின்மையை ஏற்படுத்துவோருக்கு எதிராகவும் இப்படி எதிர்வினையாற்றினால் ஏற்புடையதாகுமா? அதற்கு பேதுருவே, பதில் தருகிறார், நல்லவர்களுக்கும் கனிந்த உள்ளமுடையோருக்கு மட்டுமல்ல முரட்டுக் குணம் உள்ளவர்களுக்கும் பணிந்திருக்க வேண்டியது பணியாளர்களின் கடமை (1 பேது 2 : 18) என்கிறார்.

1 பேது 2 : 18 இல் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டு வேலையாளர்கள் என்பதன் கிரேக்க வார்த்தை ‘Oiketai’. இதன் பொருள் வீட்டில் பணிபுரியும் அடிமைகள் (Household Slaves or Domestic Slaves) என்பதாகும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், உரோமைப் பேரரசில் ஆறு கோடிக்கும் மேற்பட்ட அடிமைகள் இருந்ததாக வில்லியம் பார்களே என்னும் திருமறை அறிஞர் குறிப்பிடுகின்றார். அடிமைகள் மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, இறை வல்லுநர்களாக,

உதவியாளர்களாக எனப் பல்வேறு பணிகள் புரிந்து வந்துள்ளனர். ஆனால் இவர்கள் எல்லாரைக் காட்டிலும் வீட்டு வேலை செய்யும் அடிமைகளின் நிலை வருந்தத்தக்கது. மனிதர்கள் பொதுவாக இல்லத்தில் செய்யத் தயங்கும் வேலைகளை (Menial Tasks) அடிமைகளை வைத்தே செய்தனர். அடிமை என்பவர் ஓர் உயிருள்ள கருவி அவ்வளவுதான். அத்தகைய கொடுந்துன்பத்திலும் தங்கள் தலைவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் பணிந்திருக்க வேண்டும். துன்பத்தைச் சகிக்க வேண்டும் என அறிவுரை வழங்குகிறார்.

அடிப்படைவாதச் (Fundamentalism) சிந்தனைகள் மேலோங்கி நிற்கும் காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். புதிய கல்விக் கொள்கை, பொது சிவில் சட்டம், தாய்மதம் திரும்புதல், மாட்டுக் கறி உண்ணுதல் கூடாது. ஆலய ஆராதனைகளுக்கும், பணிகளுக்கும் தடை போன்ற ஆதிக்கச் சமயச் சார்புடைய தீமையான சிந்தனைகள் செயல்வடிவம் பெற்றுவரும் சூழலில் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் எதிர்ப்பு உணர்வும் பகைமை உணர்வும் பெருகுவதைத் தவிர்க்க முடியவில்லை. இத்தகைய நிலையில் தீய உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல் சகிப்புத் தன்மையோடு நாம் நடந்து கொள்ளவேண்டும். நல்லவர்களுக்கும் கனிந்த உள்ளமுடையோருக்கும் மட்டுமல்ல முரட்டுக் குணம் உள்ளோருக்கும் பணிந்திருக்க வேண்டும். ஏனென்றால் நாம் அநியாயமாகத் துன்புறும் போது கடவுளை மனத்தில் கொண்டு அதைப் பொறுமையோடு ஏற்றுக் கொண்டால் அதுவே கடவுளுக்கு உகந்ததாகும் (1 பேது 2:19, 20). இயேசு கிறிஸ்து இதைவிட தீவிரமான சமய அடிப்படைவாதிகளின் வாயிலாக, தீயோரின் வாயிலாக வந்த துன்பங்களைச் சகித்து நமக்குமுன்மாதிரி காட்டியுள்ளார் (1 பேது 2 : 21).

***2. பழிவாங்காதிருத்தல் :*** (1 பேது 2: 23)

ஒவ்வொரு செயலுக்கும் சமமான எதிர்வினை உண்டு (For every action, there is an equal and opposite reaction) என்பது இயற்பியல் குறித்த நியூட்டனின் மூன்றாவது விதியாகும்.

ஆனால் கிறிஸ்தவம் எதிர்வினையை அல்ல மாறாக எதிரியைத் தன்வயப்படுத்தும், கவர்ந்து கொள்ளும் சகிப்புத் தன்மையைப் பெரிதும் வலியுறுத்துகின்றது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே இதற்குச் சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார். பழிக்கப்பட்ட போது பதிலுக்குப் பழிக்கவில்லை ; துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை ; நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார் (1 பேது 2 : 23). ஆண்டவர் எவற்றையெல்லாம் கற்பித்தாரோ அவற்றை கல்வாரி வரை கடைப்பிடித்தார். உரிமை மறுக்கப்பட்டபோதும் பரிகசிக்கப்பட்டபோதும், ஏளனப்படுத்தப்பட்டபோதும் பழிவாங்க எண்ணாமல் அவற்றைப் பொறுமையோடு சகித்துக் கொண்டார்.

ஆண்டவர், சகிப்புத்தன்மை குறித்து நமக்கு வழங்கியிருக்கும் கற்பிதங்களில் முதன்மையானவை மூன்று. ஒன்று, உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் (மத் 5:39). நமக்கு எதிரே நிற்பவரின் வலக்கன்னத்தில் அறைவது இயலாத ஒன்று. இடது கையாலோ அல்லது புறங்கையாலோ தான் அறைய முடியும். இடதுகையால் ஒருவரை அறைவதும், புறங்கையால் அறைவதும் இழிவாகக் கருதி தாக்குவதன் அடையாளமாகும். ஒருவர் நம்மை இழிவாகக் கருதி தாக்கினால் அதைவிட இகழ்ச்சிக்கு நம்மை ஒப்படைக்க வேண்டும்.

இரண்டு, உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்புபவருக்கு உங்கள் மேலுடையையும் எடுத்துக் கொள்ள விட்டுவிடுங்கள் (மத். 5 : 40). நமது உடைமையை அநியாயமாக எடுத்துக் கொள்ள விரும்புவோருக்கு அதை விட அதிகமாக நாமே முன்வந்து தந்துவிட வேண்டும்.

மூன்று, எவராவது உங்களை ஒரு கல்தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல்தொலை செல்லுங்கள் (மத் 5:41). உரோமைப் படைவீரர்கள், அவர்களது சுமையைச் சுமக்க யாரையாவது கட்டாயப்படுத்தினால் ஒரு மைல் தொலை அதைச் சுமக்கு வேண்டும் என்பது எழுதப்படாச் சட்டம் ( மத் 27 : 32 ). சுமக்க மறுத்தால் தண்டனைக்கு ஆளாக நேரிடும். இத்தகைய தீமையை எதிர்த்தே செலோத்தேயர் போன்ற குழுக்கள் போரிட்டு வந்தனர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ, ஒரு மைல்தூரம் நடக்கக் கட்டாயப் படுத்துவோருடன் இரண்டு மைல் தூரம் நடக்கக் கற்பிக்கின்றார்.

இம்மூன்று கற்பிதங்களுமே பழிவாங்குதலைத் தவிர்த்து சகிப்புத் தன்மையை வெளிப்படுத்த அழைக்கிறது. நமது வாழ்வில் தீங்கிழைப்பவர்பால் பொறுமை கொண்டு, நம்மை வேதனைப் படுத்துபவர் மீது வெறுப்பு கொள்ளாமல் கிறிஸ்தவப் பொறுப்புடன் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

சகிப்புத்தன்மை என்பது ஆற்றல் வாய்ந்தது. அது செயலற்று இருப்பதன்று; மாறாக, நேர்மையான வழியில், கிறித்தவப் போதனைகளுக்குட்பட்டுச் செயல்படக் கூடிய காலம் கனிவதற்காகக் காத்திருப்பதாகும் என்றார் பேராயர் புல்டன் ஷீன்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து எல்லாத் துன்பங்களையும் ஏற்று, சகித்து தம்வேளை வரும்வரை காத்திருந்தார். ஆகவே தான் கடவுள் அவரைச் சிலுவை வாயிலாக மகிமைப்படுத்தினார். இறைமக்களாகிய நாம், இத்தவக்காலத்தில் கல்வாரியின் வெளிச்சத்தில் கிறிஸ்துவின் சகிப்புத்தன்மையைக் கற்றுக் கொண்டு, எவரையும் பழிவாங்க எண்ணாமல் பணிவோடு நடந்து ஆண்டவருக்குச் சான்றுபகர்வோம்.

**திரு. B. சாம் ஜெபசிங்**

05-04-2017

தவக்கால ஆறாம் புதன்

# கல்வாரியும் அறைகூவலும்

**CALVARY AND CHALLENGE**

மத். 16 : 21-28

**"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" மத். 16 : 24**

ஜெர்மன் இறையியலாளரான டீட்ரிச் போன்ஃஹாபர் இரண்டாம் உலகப்போரின் போது கைது செய்யப்பட்டு பச்சன்வால்ட் (Buchenwald) என்னுமிடத்திலுள்ள சித்ரவதை முகாமில் (Concentration Camp) அடைக்கப்பட்டார். அவருக்கு மரண தண்டனைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து கொலை முகாமுக்கு (Extermination Camp) மாற்றப்பட்டார். 1945 ஏப்ரல் 8 ஆம் நாள், உயிர்ப்புப் பெருவிழா முடிந்த மறுஞாயிறு போன்ஃஹாபர் தான் அடைக்கப்பட்டிருந்த முகாமில் மற்ற கைதிகளுக்காகத் தொழுகை நடத்தினார். "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்ற இறைவாக்கை (எசா. 53:5) அடிப்படையாகக் கொண்டு அருளுரையாற்றத் தொடங்கினார். அருளுரையாற்றிக் கொண்டிருக்கும்போது இராணுவ அதிகாரிகள் இருவர் வந்து குறுக்கிட்டு போன்ஃஹாபரை தம்முடன் வர உத்தரவிட்டனர். தன்னோடிருந்தவர்களிடம் விடைபெற்றுப் பிரியும் போது அவர் சொன்னது, "உங்களுக்கு வேண்டுமானால் இது முடிவாக இருக்கலாம். ஆனால் எனக்கு இது வாழ்வின் ஆரம்பம்" என்று கூறி இன்முகத்துடன் சென்றார். மறுநாள் காலை தூக்கிலிடப்பட்டார். வாழ்வின் இறுதிவரை கிறிஸ்தவ சீடத்துவ அழைப்பிலும், விசுவாசத்திலும், உறுதியாக நின்றார்.

கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வு என்பது சவாலானது. சுய வெறுப்பும், சிலுவை சுமத்தலும் கிறிஸ்தவ சீடத்துவத்தின் அடிப்படைகளாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது கல்வாரி அனுபவத்தின் வாயிலாக சீடத்துவத்திற்கு அறைகூவல் விடுக்கின்றார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அறைகூவலுக்கு நம்முடைய பதிற்செயல் என்ன என்பதை இன்றைய திருமறைப்பகுதியிலிருந்து தியானிப்போம்.

### ***1. அறைகூவலை அறிதல் :*** (மத். 16:23)

எந்தவொரு சிறப்பான செயலை நிறைவேற்றுவதற்கும் அதைக் குறித்த முழுமையான அறிதலும் திட்டமிடுதலும் அவசியம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூட சீடத்துவத்திற்கு அத்தகைய அறிதலும் திட்டமிடுதலும் இன்றியமையாதவை என வலியுறுத்தியுள்ளார். (லூக். 14:25-33) ஆண்டவர் இவ்வுலகுக்குத் தாம் அனுப்பப்பட்டதன்

நோக்கத்தையும் அது சார்ந்த தெய்வீகத் திட்டத்தையும் நன்கு அறிந்திருந்தார். ஆகவே தான் தம் சாவைக் குறித்து துணிவுடன் அவரால் முன்னறிவிக்க முடிந்தது. ஆனால் ஆண்டவரால் அழைப்புப் பெற்ற அவருடைய சீடர்கள், அத்தகைய அறிதலும் புரிதலும் இன்றி இருந்தனர்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய மீட்பின் பணிகுறித்தும் அவ்வப்போது தடுமாற்றமுடையவர்களாகவே சீடர்கள் காணப்பட்டனர். ஆகவே தான் பேதுரு, ஆண்டவரிடம் இது உமக்கு நடக்கக் கூடாது என்கிறார். பேதுருவின் இச்செயல் அவருடைய அறியாமையைக் காட்டுகின்றது. எனக்குப் பின்னாகப் போ சாத்தானே என்று ஆண்டவர் பேதுருவைக் கடிந்து கொள்ளுகின்றார்.

மத். 4:10 இல் அலகையிடம், ஆண்டவர் என்னைவிட்டு அகன்று போ என்கிறார். இங்கு பேதுருவிடமோ, எனக்குப் பின்னாகப் போ என்கிறார். அதாவது, ஆண்டவரைக் குறித்த அறியாமையும், ஊனுடல் சார்ந்த சிந்தையும் இறைத்திட்டத்திற்குத் தடையானவை என்று பேதுருவுக்கு உணர்த்துகின்றார். ஆரிகன் என்ற இறையியலாளர் மத். 16:23 ஆம் வசனத்திற்குத் தரும் விளக்கம் என்னவென்றால், "பேதுருவே, உனது இடம் எனக்குப் பின்னால் இருக்கிறது. எனக்கு முன்னால் அல்ல. இதுவே நீ என்னைப் பின்பற்றுவதற்கான நான் தேர்ந்து கொண்ட வழி. மாறாக நீ விரும்புகிற வழியில் என்னை நடத்த எத்தனிக்காதே" என்று குறிப்பிடுகின்றார். எனக்குப் பின்னாகப் போ என்பது எனக்குப் பின் சென்று என்னைக் குறித்து முழுமையாக அறிந்து கொள் என்பதாகும்.

கிறிஸ்துவின் சீடர்களாக நாம் சான்றுள்ள வாழ்வுக்கு அழைப்புப் பெற்றுள்ளோம். கிறிஸ்துவின் சிலுவைத் துன்பத்தின் வாயிலாக அவரைக் குறித்து நாம் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் சீடத்துவத்தின் ஆழத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலும்.

### ***2. அறைகூவலுக்கு அடிபணிதல் :*** (மத். 16:24-25)

சீடத்துவத்தின் சாரம் அடைவது அல்ல, இழப்பது தன்னலம் துறத்தலும், சிலுவை சுமத்தலும் கிறிஸ்தவ அடிபணிதலுக்கு அடையாளமாகும். தற்காலத்தில் மனிதன் எப்படியாகிலும் வாழ்வை அடைவதற்கு பல பிரயத்தனங்களை மேற்கொள்ளுகிறான். பொருளின் மூலமாக ஆஸ்தியின் மூலமாக வாழ்வை அடைய முயற்சி செய்கிறான். ஒரு போதும் உலகப் பொருள்களால் வாழ்வை அடைவது கூடாத செயலாகும். வாழ்வை அடைவதற்கு இயேசு கிறிஸ்து காட்டும் வழி அவருடைய அறைகூவலுக்கு அடிபணிவதாகும். அதாவது ஆண்டவருக்காக நம்மை இழப்பது தான் வாழ்வை அடைவதற்கான வழி என்கிறார். Wired Magazine என்கிற இதழில் சமீபத்தில் ஒரு கட்டுரை

வெளியிடப்பட்டிருந்தது. அக்கட்டுரையில் ஒரு மனித உடலின் மதிப்பு 45 மில்லியன் டாலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனித உடலின் எலும்பு மஜ்ஜைகள், (Bone Marrow) கணையம், நுரையீரல், சிறுநீரகம், இருதயம் போன்ற உறுப்புகளின் மருத்துவச் சந்தை மதிப்பை வைத்து இம்மதிப்பு கணக்கிடப்பட்டுள்ளது. உடல் உறுப்புகளில் சில பழுதடைந்தால் மாற்று உறுப்புகளை மருத்துவத்தால் பொருத்திவிட முடியும். ஆனால் வாழ்வுக்கு (ஜீவனுக்கு) ஈடாக மருத்துவத்தால் எதையுமே தர முடியாது. வாழ்வை அடைவதற்கு ஒரே வழி, கிறிஸ்துவுக்காக அதை இழப்பதுதான். அப்போது நித்திய காலமாய் நம் வாழ்வைக் காத்துக் கொள்ள முடியும்.

இத்தவக்காலத்தில் கிறிஸ்துவின் கல்வாரி அனுபவம் நமக்கு விடுக்கும் அறைகூவலை முழுமையாக அறிந்து அதற்கு நம்மை ஒப்படைத்து வாழ்வை சொந்தமாக்கிக் கொள்வோம்.

**திரு. J. யாபேஸ்**

# அலட்சியமான பார்வையாளர்

**SPECTATORS OF INDIFFERENCE**

மத். 27:32-37

**"பின்பு அங்கே உட்கார்ந்து காவல் காத்தார்கள்." மத். 27:36**

இயேசுவைக் குறித்து எழுதப்பட்ட வார்த்தைகளுள் மிகவும் வேதனை அளிக்கும் வார்த்தைகள் யோவானின் நற்செய்தியின் முதல் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை". (யோவான் 1:11) என்ற வார்த்தைகள் மிகவும் வேதனையை தரும் வார்த்தைகள். இயேசு பிறந்தபோது பெத்லகேமில் அவருக்கு இடமில்லை. இயேசு வளர்ந்த போது நாசரேத்தில் அவருக்கு இடமில்லை. இயேசு மரிக்கும் போது எருசலேமில் அவருக்கு இடமில்லை. இவைகள் அனைத்தும் இயேசுநாதர் எந்த அளவிற்கு அலட்சியம் செய்யப்பட்டார் என்பதற்கான ஆதாரங்களாக இருக்கின்றன. இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்ட போது சிலுவையைச் சுற்றி பலதரப்பட்ட மக்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களுள் மத்தேயு 27:36-ல் சொல்லப்படும் ஒரு குழுவினர் அலட்சியத்தின் பார்வையாளர்களாக நாம் புரிந்து கொள்ளமுடியும். மிகப்பெரிய மீட்பின் செயல் நடந்தபோது அந்தச் செயலையும், அந்தச் செயலை வேதனையோடு ஏற்றுக்கொண்ட இயேசுவையும் அலட்சியம் செய்த இம்மனிதர்களைக் குறித்து தியானிப்போம்.

### *1) அலட்சியம் இலட்சியத்துக்குத் தடை :*

"ஒரு சிறு துவாரம் ஓடத்தைக் கவிழ்விக்கும்
ஒரு சிறு பாவம் உன்னை அழிக்கும்" என்று பக்தன் ஒருவன் தனது பாடல் வரிகளில் எழுதுகின்றார். படகில் ஒரு சிறு துவாரம் எற்பட்டால் அதை உடனடியாக சரி செய்ய வேண்டும். ஆனால் அதை அலட்சியம் செய்தால் நிச்சயமாக அந்த துவாரம் பெரிதாகி இறுதியில் படகு எங்கு செல்ல வேண்டுமோ அங்கு செல்ல முடியாமல் பாதியிலேயே அமிழ்ந்து விடும். சிலுவையின் அடிவாரத்தில் குழுவாக இருந்து இயேசுவையும் அவரது சிலுவையையும் அலட்சியம் செய்த இந்த அலட்சியப் பார்வையாளர்களும் இந்த ஓடத்திற்குச் சமம். இவர்களிடம் காணப்பட்ட தவறு என்னவென்றால் அலட்சியம் (indifference). சிலுவையில் நடைபெற்ற மாபெரும் செயலை கண்டும், அந்த செயல் எதற்காக என்று அறிய முயற்சி செய்யாதவர்கள். வாழ்க்கையில் எந்த ஒரு லட்சியமுமின்றி பிறரின் துன்பத்திவ் மகிழ்கின்றவர்கள் இவர்கள்.

இன்றைய திருச்சபையும், விசுவாசிகளும் கூட பல நேரங்களில் இந்த அலட்சியமான பார்வையாளர்களுக்கு ஒப்பாகவே இருக்கின்றனர். எதிலும் அலட்சியம், கிறிஸ்துவுக்காக வாழ்வதும், கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பின்பற்றுவதுமே இறந்தவர்களின் லட்சியமாக இருக்க வேண்டும். ஆனால் இன்று இறை வார்த்தைகளை சிந்திப்பதிலும், அதைப் பின்பற்றுவதிலும், நாம் அலட்சியமாக இருக்கின்றோம். குடும்பங்களில் நாம் ஏற்படுத்தும் பிரிவினை சண்டைகள், திருச்சபை பணிவிடைகளில் நாம் ஏற்படுத்தும் வாக்குவாதங்கள், பகைமை உணர்வுகள், எத்தனையோ அருளுரைகளையும், அறிவுரைகளையும் கேட்ட பின்னும் மனம்மாறாத நிலை. இவை அனைத்தும் நாமும் கிறிஸ்துவையும் அவரது சிலுவையையும் அலட்சியம் செய்த அலட்சிய பார்வையாளர்களுக்கு ஒப்பாகவே இருக்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு நாதர் கூறிய உவமைகளுள் மிகச்சிறந்த உவமை ஐசுவரியவான் லாசரு உவமை. இந்த உவமையில் ஐசுவரியவான் செய்த மிகப்பெரிய தவறு லாசருவை கண்டுகொள்ளாமல் அலட்சியம் செய்தது தான். ஐசுவரியவான் லாசருவை தன் வீட்டில் அனுமதித்திருந்தாலும், எலும்புத் துண்டுகளை உண்ண கொடுத்திருந்தாலும், லாசருவின் வாழ்க்கையின் உயர்வுக்காக எந்த முயற்சியும் செய்யாமல் அலட்சியமாகவே இருந்தான். இன்றைக்கும் சமூகத்தில் வலுவிழந்த, வாழ்விழந்த மக்களைக் கண்டு கொள்ளாமல் அவர்களது துன்பத்தின் காரணத்தை கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருப்பது ஐசுவரியவானின் முடிவிற்கு சமமாகிவிடும். எனவே ஐசுவரியவானைப் போலவும், சிலுவையின் அருகில் வெறுமனே உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்த அலட்சியப் பார்வையாளர்களைப் போலவும் எல்லாவற்றிலும் அலட்சியமாயிராதபடி கிறிஸ்து காண்பிக்கும் இலட்சியத்தோடு வாழ இந்த தபசு நாட்களில் நம்மை அர்ப்பணிப்போம்.

### *2) அலட்சியம் மீட்சிக்குத் தடை :*

பிறந்து ஆறு மாதத்தில் தன் பார்வையை இழந்த பின்னும் இறைவார்த்தைகளை கேட்டு கற்று மிகப்பெரிய பாடல் எழுத்தாளராக, 9000-க்கும் அதிகமான ஞானப்பாடல்களை எழுதியவர்தான் அமெரிக்கப் பாடலாசிரியர் ஃபானி. J. க்றாஸ்பி என்னும் அம்மையார் ஆவார். அவரது மிக பிரசித்திப் பெற்ற பாடல்தான் "To God be the Glory" என்ற பாடல் அந்த பாடலில் ஒரு சரணம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

"சம்பூரண மீட்பை சம்பாதித்தனர்
தம் வாக்கை அன்பர்கருள்வேன் என்றனர்
எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்
அந்நேரமே மன்னிப்புண்டாம் இயேசுவால்".

இதுதான் உண்மை எந்த பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால் "அந்நேரமே", அந்த நொடிப்பொழுதே மன்னிப்பை தந்து மீட்பளிப்பவர்.

இயேசு கிறிஸ்து. ஆனால் இந்த படைவீரர்கள் தங்களுடைய அலட்சியமான செயல்பாடுகளால் அந்த மீட்பை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்தனர். அவர்களுடைய அலட்சியமே அவர்களின் மீட்சிக்குத் தடையாக மாறிவிட்டது. மீட்பு சாதாரணமாக கிடைப்பது அல்ல, அது மாபெரும் பாடுகளைக் கடந்துதான் கிடைப்பது என்பதை இயேசுவின் காயங்களும் அவரது வேதனைகளும் வெளிப்படுத்தியது. ஆனால் இந்த படைவீரர்கள் மீட்பின் முக்கியத்துவத்தை கடுகளவும் உணராமல் அங்கே சுமந்து வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தனர். "They only sat and watched".

கிறிஸ்தவர்களாகிய நமக்கு மனம் மாற எத்தனை வாய்ப்புகள் தரப்பட்டுள்ளது. அருளுரைகளுக்கு பஞ்சமில்லை, நற்செய்தி கூட்டங்களுக்கு பஞ்சமில்லை, ஆன்மீக பயிற்சிகளுக்கு பஞ்சமில்லை. ஆனால் நமது அலட்சியத்தின் நிமித்தமாக இன்றும் மீட்பின் மாண்பை உணராமல் வாழ்கின்றோம். தவக்காலங்களில் மிக முக்கியமான சிலுவைத் தியானத்தை வருடந்தோறும் நடத்துகிறோம். இயேசுவின் ஏழு வார்த்தைகளை வருடந்தோறும் தியானிக்கிறோம். சிலுவை தியானத்தில் துக்க முகமாய் நாம் பங்கு பெறத் தவறுவதே இல்லை. ஆனால் நாம் செய்யும் தவறு என்ன? எல்லாவற்றையும் பார்த்துவிட்டு எந்த மாற்றமுமின்றி சொல்வதுதான். எப்படிப் படைவீரர்கள் இயேசுவின் பாடுகளைப் பார்த்தும் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லையோ, அதைப்போலவே இன்றும் இயேசுவின் பாடுகளை தியானிக்கும் நம்மிலும் எந்த மாற்றமும் நிகழவில்லை. ஏனென்றால் நாம் வெறும் பார்வையாளர்களாக மாறிவிட்டோம். ஒவ்வொரு தவக்காலத்தையும் அலட்சியம் செய்துவிட்டோம். இந்த தவக்காலம் எல்லாத் தவக்காலத்தையும் போன்று அலட்சியமாக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. அதுதான் ஆண்டவரின் விருப்பமும் கூட. இயேசு நாதருக்கு சிலுவை கொடுத்த வலியை விட, ஆணிகள் கொடுத்த வலியை விட, சாட்டை அடிகள் கொடுத்த வலியை விட, முள்முடி கொடுத்த வலியை விட, காறி உமிழ்தல் கொடுத்த வலியை விட மிகவும் தாங்க முடியாத வலி என்னவென்றால் "அலட்சியம்" (indifference). ஆம் உடல் ரீதியாக இயேசுவின் காயங்கள் கொடுத்த வலியைவிட தம்மைப் புரிந்துகொள்ளாமல் தமது அழைப்பை அலட்சியம் செய்யும் நம்மைக் குறித்த ஏக்கம்தான் ஆண்டவருக்கு வேதனை தருவதாக இருக்கின்றது.

எனவே இந்த தவக்காலத்தை பல்வேறு நிலையிலிருந்து பார்க்கும் நம் ஒவ்வொருவரும் இயேசுவின் மீட்பைப் பெற நம்மை அர்ப்பணிப்போம். அவரது பாடுகளை அலட்சியம் செய்யாதபடி அந்த பாடுகள் கற்றுத்தரும் உண்மையை நம் வாழ்வின் உடைமையாகவே ஏற்று மனம்மாறிய இறைமக்களாய் வாழ்வோம்.

**திரு. Y. சுஜின்ராஜ்**

10-03-2017

தவக்கால இரண்டாம் வெள்ளி

## இகழும் பார்வையாளர்

**DESPISING SPECTATOR**

மாற். 15:29-32

**"அவ்வாறே தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர்களுடன் சேர்ந்து அவரை ஏளனம் செய்து, பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க முடியவில்லை என்று தங்களிடையே பேசிக் கொண்டார்கள்." மாற். 15:31**

நகரில் வலம் வரும் ஒரு நாட்டின் அரசனை நாட்டு மக்களும், பணியாளர்களும் வணங்கி கௌரவிப்பார்கள். மகிமையின் ராஜா, யூதாவின் சிங்கம் - இறைமகனாம் இயேசு சிலுவைப் பாதையில் வலம் வருகிறார். அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளாத மனிதர்கள் அவரது எதிர்ப்பாளர்களாகி அவரை இகழ்ச்சி செய்தனர். ஒருவரை இகழ்தல் என்பது தரக்குறைவாக மதிப்பீடு செய்து அவரை மரியாதை செய்யாமல் அவமானப்படுத்துவதும், அவர்மீது வெறுப்பை வெளியிட்டு மனதை காயப்படுத்தி வார்த்தைகளாலும், செயல்களாலும் இழிவாக நடத்துவதாகும். ரோமப் பாரம்பரியத்தில் விழாக்காலங்களில் இகழ்ச்சி என்பது ஒரு பகுதியாக அமைந்தது, யாரையாவது அவமானம் செய்து அபிநயக்கூத்தாடுவது வழக்கமாக இருந்தது. இயேசு நாதருக்கு நேர்ந்த நிகழ்வு அவரையும், போதனைகளையும் ஏற்காமல் புறக்கணித்ததன் அடையாளமான வலுக்கட்டாயமான வன் செயலாகும். அரண்மனையிலிருந்த சுமார் 600 பேர்களடங்கிய போர்ச் சேவகரது கூட்டம், இயேசுவுடன் சிலுவையில் தொங்கிய கள்வர்கள், ஆட்சியாளர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள் மற்றும் வழிப்போக்கர்கள் போன்றோர் இயேசு நாதரை இகழும் மக்களாயினர். இகழ்தல் இறைவருக்கு விரோதமான செயல் என்பதை திருமறை சார்ந்து சிந்திப்போம்.

### *1. இகழ்தல் அறிவற்றோரின் செயல் :*

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது மட்டுமல்ல, தமது மானுட வாழ்வு முழுவதும் அவரை எதிர்ப்போரால் பரியாசமும் நிந்தையும் அடைந்தார். எப்போதும் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்த இயேசுவுக்குச் சத்திய சோதனை. பிதாவின் சித்தம் நிறைவேற்ற தம் ஜீவனையே கொடுத்து மனுக்குலத்தை மீட்க வந்தவருக்கு எதிர்ப்பும், நிந்தனைகளும் குவிகின்றன. அவரை வெறுத்த அனைவரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் அவரை எள்ளி நகையாடினார். ஒரு பாவமும் அறியாத இயேசுவை, படை வீரர்கள் ஆளுநரின் மாளிகையில் வைத்து செந்நிற ஆடை உடுத்தி முள்முடி பின்னி, தலையில் வைத்து அடித்து அவர்மீது துப்பி, அவர் முன் முழந்தாளிட்டு வணங்கியும், வாழ்த்தியும் ஏளனம் செய்தனர். பின்னர் தரையில் இழுத்து சென்று, சிலுவையைச் சுமக்கச் செய்து, இரண்டு மரண தண்டனை கைதிகள் நடுவே சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினார்கள். பிலாத்தும், 'இவர்

யூதரின் அரசன்' என்று எழுதிய பலகையை சிலுவையின் மீது தொங்கவிடச் செய்து அவரை இழிவுபடுத்தினான். இவர்கள் இயேசுவை இப்படி இகழ்ந்ததால் உண்மையிலேயே இயேசு கிறிஸ்து யார் என்பதையும் அவர் எதற்காக பூமியில் வந்தாரென்பதையும் அறியும் வாய்ப்பை இழந்தனர். நீதிமொழிகளின் ஆக்கியோன் சொல்லுகிறார் "பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்" (நீதி. 14:6). தனிமனித வாழ்விலே, குடும்பங்களிலே, திருச்சபையிலே, சமூகத்திலே - இன்று நன்மை செய்வோர் இகழப்படுவதும், நிந்திக்கப்படுவதும் சகஜமான ஒன்றாகிவிட்டது. இச்சூழலில் எவரையும் இகழ்வாகக் கருதாமல் எல்லோரும் கடவுளால் சமமாகப் படைக்கப்பட்ட மக்கள். ஆகவே யாரும் உயர்வு தாழ்வு கருதாமல் அனைவரையும் மதிப்புடனும் அன்புடனும் நடத்த வேண்டும். அதுவே ஞானமுள்ள செயல். பிறரை இகழ்வதற்குக் காரணமாயிருக்கிற வீண் பெருமையையும் ஆணவத்தையும் விட்டொழித்து அறிவுடையோராய் வாழ்வோம்.

## *2. இகழ்தல் தளையைக் கடினப்படுத்தும் :*

மத். 27:42(a)-ல், "மற்றவர்களை ரட்சித்தான்" என்ற வாசகத்தை இயேசு நாதருக்கு எதிரிகளாயிருந்த பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பர் அனைவரும் மொழிந்தனர். இந்த வார்த்தைகள் அவரின் வெற்றி வாழ்வுக்கும், அவர் பூமியில் வந்ததன் நோக்கத்தை நிறைவேற்றியதற்கும் சான்று பகர்ந்துள்ளன என்று தைரியமாகக் கூறலாம். "தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ள திராணியில்லாதவன்" என்ற வார்த்தைகள் அவர்களது அறியாமையைச் சுட்டுகின்றன. ஏனெனில், பிறரைக் காப்பாற்றுவதைத் தங்கள் லட்சியமாகக் கொண்ட எவரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் துணியவே மாட்டார்கள். இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ளாமல் சமயத்தலைவர்கள் இகழ்ந்ததாக நினைத்து மகிழ்ந்தார்கள். இயேசு நாதரோ பிதாவின் சித்தப்படி சிலுவை சாவைத் தெரிந்தெடுத்து, தம் உயிரையே கொடுத்து மனுக்குலத்தை மீட்க வந்தார். சிலுவையே மனுமக்களைக் காப்பாற்றும் இயேசுவின் வாழ்க்கையின் சிகரம்.

ரோமர்களால் அடிமைகளுக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் இழிந்த தண்டனையே சிலுவையிலறைதலாகும். இயேசுவோ மக்களின் மீட்புக்காக இதை ஏற்றுக் கொண்டார். உரோமையரின் பார்வையில் சிலுவை இழிவின் சின்னமாக இருந்தாலும் உண்மையில், அது மீட்பின் சின்னம். உரோமையரின் பார்வையில் சிலுவை, குற்றவாளியைத் தொங்கவிடும் மரம். ஆனால் உண்மையில் சிலுவை, பாவ அடிமைத்தளை அறுந்து போகுமிடம். இதை உணராதோர் சிலுவையில் தொங்கிய இயேசுவை இகழ்ந்து தங்கள் தளையைக் கடினப்படுத்திக் கொண்டனர் (எசா. 28:22).

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையினடியில் நின்றோரில் அவரை இகழ்ந்தோர், அவருடைய மீட்புச் செயலைப் புரிந்து கொள்ளாமல் போயினர். இதனால் தெய்வீக மீட்புத் திட்டத்தைக் குறித்த அறிவின்றி தங்கள் பாவ அடிமைத்தளையைக் கடினப்படுத்திக் கொண்டனர். இகழ்தல் இறைவனுக்கு விரோதமான செயல், அறிவற்ற செயல் என்பதை உணர்ந்து எல்லோரையும் மதித்து வாழ்வோம்.

**திரு. J. யாபேஸ்**

17-03-2017 **தவக்கால மூன்றாம் வெள்ளி**

# அன்பின் பார்வையாளர்

**(SPECTATOR OF LOVE)**

மத். 27:55-56

**"க-லேயாவி-ருந்து இயேசுவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்து வந்த பல பெண்களும் அங்கிருந்தார்கள்." மத். 27:55**

இயேசு நாதருக்கு ஊழியம் செய்யும்படி கலிலேயாவிலிருந்து அநேக பெண்கள் எருசலேமுக்கு வந்திருந்தனர். அவர்கள் தங்கள் பொருளாலும், உதவிகளாலும் இயேசுவையும் அவரோடிருந்தவர்களையும் பராமரித்தார்கள். இச்சூழலில், இயேசுநாதர் கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டபோது, அவரது ஆண் சீடர்களெல்லாரும் பயந்து எருசலேமை விட்டு ஓட்டம் பிடித்து தங்கள் சொந்த இடமான கலிலேயாவுக்குச் சென்றார்கள். ஆனால் கலிலேயாவைச் சார்ந்த பெண் சீடர்கள் இயேசு நாதர் கைதுசெய்யப்பட்டதும் பதறி ஓடாமல் சிலுவைப் பாதையிலும், கல்வாரியின் அடிவாரத்திலும் ஆண்டவரோடு இறுதிவரை உடனிருந்தார்கள். இந்தப் பெண்கள் இறையன்பால் ஈர்க்கப்பட்டவர்கள், அன்பின் பார்வையாளர்களாய் இயேசுவுடன் கூடவே தொடர்ந்த இவர்களிடம் கிறிஸ்தவ சீடத்துவத்துக்கான சீரிய பண்புகளைப் பார்க்கலாம்.

## *1. தெளிந்த லட்சியம் :*

சீடராக மாறவிரும்பும் எவரும் தாம் பின்பற்றப் போகும் கொள்கையினை நேசித்து அதனைப்பற்றிய அறிவுப்பூர்வமான, உணர்வுப்பூர்வமான ஒரு தெளிவினைப் பெறவேண்டும். பின் தொடர்வது என்பது தேர்ந்து கொண்ட தெளிவான லட்சியத்தினை அடைய முன்னோக்கி நடைபோடுவதாகும். "மனந்திரும்புங்கள், இறையாட்சி சமீபமாயிருக்கிறது" என்ற இயேசு நாதரின் ஆரம்ப அழைப்பும், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று பின்பற்றுவதற்கும் இறையரசில் நுழையவும் இறைமகனாம் இயேசுவே வழி என்று தெளிந்த லட்சியத்தினை இயேசுவின் சீடர்களில் குறிப்பாக பெண்கள் சரியாகப் புரிந்து கொண்டனர்.

யூத சமய, சமூக வாழ்வில் பெண்கள் இரண்டாவது குடிமக்களாக நடத்தப்பட்டனர். ஒவ்வொரு யூத ஆண்மகனும் ஜெபிக்கும்போது, "தோத்தரிக்கப்பட்ட ஆண்டவரே, என்னை நீர் ஒரு புற இனத்தானாகவோ, ஓர் அடிமையாகவோ, ஒரு பெண்ணாகவோ படைக்காமல் ஓர் ஆணாகப் படைத்ததற்காக உம்மைப் போற்றுகிறேன்" என்று ஜெபிப்பான். இன்னும் யூதப் பாரம்பரியக் கூற்றுப்படி ஆண்பிள்ளைகளே சிறப்பான ஆசிகளாகக்

கருதப்பட்டனர். இப்படிப்பட்ட பார்வைகள் கொண்ட சமூகத்தில் வாழ்ந்த இப்பெண்கள் தங்களுக்கென்று தூரக்காட்சி பெற்றது சிறப்பானதே. இவர்கள் தேர்ந்து கொண்ட சீடத்துவம் எளிதான ஒன்று அல்ல. ஒன்றை இழந்தால் தான் மற்றொன்றைப் பெறமுடியும் என்ற அறிவுத்தெளிவும் இயேசு நாதரை மனதார அன்பு செய்யும் உணர்வுப்பூர்வமான தெளிவும் கொண்டவர்களாய் சிலுவை நாதர் இயேசுவைத் தயக்கமின்றிப் பின்பற்றினார்கள்.

## *2. துணிந்த அர்ப்பணம் :*

சீடத்துவம் ஒரு ஆபத்தான பாதை, தெளிவான லட்சியத்தை தெரிவு செய்தோர்க்கு அதை அடைய துணிவுடன் கூடிய அர்ப்பணம் தேவை. "ஒருவன் தன் ஜீவனை வெறுக்காவிட்டால் எனக்குச் சீடனாய் இருக்கமாட்டான்" தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீடனாயிருக்கமாட்டான் என்று பகிரங்கமாய், கடுமையான வழிகாட்டுதல்களை இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்குக் கொடுத்தார். சீடர் - இதை நிறைவேற்ற எதையும் இழக்கவும் துணியவும், பின்னிட்டுப் பார்க்காது சவால்களைச் சந்திக்கும் அர்ப்பணமும் வேண்டும்.

தங்கள் தலைவர் கைது செய்யப்பட்டார் என்று கண்ட ஆண் சீடரெல்லாரும் பயந்து போய் சிதறி ஓடிய வேளையிலும் இயேசுவையே பின்செல்வோம் என்ற தீர்க்கமான முடிவில் துணிவுடன் முன்னேறினர் பெண் சீடர்கள். சிலுவைச் சாவு தம் தலைவரை ஒன்றும் செய்ய முடியாது, தாம் சொன்னபடியே 3-ம் நாளில் உயிருடன் எழுவார் என்ற இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கையுடன் நிலைத்திருந்தனர். இந்த எதிர்நோக்கை ஊக்குவிக்கவே உயிர்த்தெழுந்த இயேசுவும் முதன்முதலாகப் பெண்களுக்கே காட்சியளித்து கனப்படுத்தினார். இன்றும் கிறிஸ்துவுக்காய்ப் பாடனுபவித்து தொடர்ந்து சிலுவை சுமப்போரை இறைவன் கனப்படுத்துவார்.

## *3. தடை தாண்டிய பயணம் :*

லட்சியத் தெளிவோடும், துணிவோடும் தொடர விரும்புவோர் லட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து பயணம் செய்வார்கள். இவர்களுக்குப் பல தடைகள் வர வாய்ப்புண்டு. ஆனால், உண்மையான சீடர்கள் எந்தத் தடைகளையும் தாண்டிச் செல்வார்கள்.

கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வு விசாலமாக, விருப்பம் போல் நடக்கும் பாதை அன்று, மாறாக அது கரடுமுரடான பாதை. நிறைவாழ்வுக்கு இட்டுச் செல்லும் பாதை, குறுகலானதும், வாசல் இடுக்கமானதுமாகும் என்று அறிவுறுத்தினார் இயேசு நாதர். யூதச் சமூகமோ ஆணாதிக்கச் சமூகமாகக் காணப்பட்டதால் லட்சியம் தீவிரம் கொண்ட பெண்கள் தடை தாண்டி பயனளிப்பது கடினமானது. ஆனால், இயேசு நாதரைப் பின்பற்றி வந்த

கலிலேயப் பெண்கள் எத்தடைகளையும் பொருட்படுத்தாது இயேசுவுடன் முன்னேறிச் சென்றனர்.

"எனக்காக உன் ஜீவனை கொடுப்பாயா?" (யோ. 13:38) என்று பேதுருவைப் பார்த்து கேட்டார் இயேசு. அவனோ இயேசு நாதரைத் தூரத்திலே பின்தொடர்ந்து, மறுதலித்து பின் ஓடியே போனான். ஆனால், சமூகத்தில் தரம் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்ட பெண்கள் அவருக்காக என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று சிலுவையின் பின்னே போகத் துணிந்தனர். தொடர்ந்து பயணிக்க நம் விசுவாச வாழ்வில் தடைகளைக் கண்டு தடுமாறுகிறோமா?

'இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன் நான்

பின் நோக்கேன் நான்' என்ற பக்தனின் வரிகளில் வரும் அறைகூவல் ஒவ்வொரு நாளும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. நம் அருள் நாதர் இயேசுவில் எவ்வளவு அன்பு செய்கிறோம் என்பதிலே அதன் பதில் அமைகிறது. நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமாகிய இயேசுவின் மீது கண்களைப் பதிய வைத்து தடைகளைத் தாண்டி பொறுமையோடு தொடருவோம்.

**திரு. J. யாபேஸ்**

24-03-2017

தவக்கால நான்காம் வெள்ளி

## மாற்றுருவாக்கத்தின் பார்வையாளர்

**(SPECTATOR OF TRANSFORMATION)**

மத். 27:50-54

**“இவர் உண்மையாகவே இறைமகன்.” மத். 27:54**

கொல்கதா மலை மேட்டிலே, சிலுவை சாவினை இயேசு நாதர் சந்தித்துக் கொண்டிருந்த வேளையிலே, தம் பணி பொறுப்பின் காரணமாய், நடந்த அனைத்து நிகழ்வுகளிலும் பார்வையாளராயிருந்து நூற்றுக்கதிபதி மாற்றுருவாக்கம் பெற்ற நிகழ்வினை நற்செய்தியாளர்கள் தெளிவாக பதிவு செய்துள்ளனர். நூற்றுக்கதிபதி ஒரு ரோம குடிமகன், யூதர்களை பொறுத்தவரை ஒரு வேற்றினத்தார் நூறு வீரர்களைக் கொண்ட படையின் தலைவர். நூற்றுக்கதிபதியின் ரோம படையின் முதுகெலும்பாக காணப்பட்ட இவர்களது பொறுப்பு என்னவென்றால், பணியிடத்திலும், போர்க்களத்திலும் ஒழுங்கை நிலை நிறுத்துவதும், ஆயுதங்களை ஆய்வு செய்வதும், பாசறையிலும், களத்திலும் 100 பேர் கொண்ட படையை தலைமையேற்று நடத்துவதும், உதவிப்படைகளை நடத்தவும் பணிக்கப்பட்டிருந்தார்கள். பொலிபியஸ் என்ற வரலாற்றாசிரியர் நூற்றுக்கதிபதிகளை குறித்து எழுதுகையில், அவர்கள் ஆணையிடும் அதிகாரமுடையவர்களாகவும் தளர்வின்றிப் பணிபுரிவோராகவும், நம்பகத்தன்மையுடையோராகவும், மரிக்கவும் ஆயத்தமுடையோராகவும் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இப்படி அதிகாரமிக்க மனிதராகவும், பார்ப்போர் அச்சமுறும் தோரணையும் கொண்ட ஒரு நூற்றுக்கதிபதி எப்படி மாற்றம் பெற்ற மனிதனாகிறார் என்பதை இங்கே காண்போம்.

### *1) வாழ்வில் சந்திக்கும் அசாதாரணமான நிகழ்வுகள் மாற்றுருவாக்கத்திற்கு வித்திடுகின்றன :* (மத். 27:50-52)

நூற்றுக்கதிபதி தன் பணிக்காலத்தில் இதுவரை சந்தித்திராத சில நிகழ்வுகளை கல்வாரிச் சிலுவையினருகில் நிற்கையில் கண்டனர். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுநாதர் உரத்த சத்தமாய் கத்தி உயிர் விட்டார். எருசலேம் ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. நிலநடுக்கம் ஏற்பட்டது. பாறைகள் பிளந்தன, கல்லறைகள் திறந்தன, இறந்தோர் பலர் உயிருடன் எழுந்தனர். 3 மணிநேரம் எங்கும் இருள் மூடியது. கதிரவன் ஒளி கொடுக்காததால் எங்கும் அமைதி நிலவியது. இந்த நிகழ்வுகளைக் கண்ட நூற்றுக்கதிபதியும், போர் வீரர்களும் மலைத்துப் போய் நின்றார்கள். இயேசு நாதரின் சிலுவை மரணத்தை நிறைவேற்றும் அதிகாரம் பெற்ற

நூற்றுக்கதிபதி ஆச்சரியம் தாங்காமல் பிரமித்து போனார். ரோமப் பேரரசரை கடவுளாக வணங்கியும், அரசரின் அதிகாரத்தை பெற்று யாருக்கும் பயமின்றி, துணிவுடன் இதுவரை வாழ்ந்த நூற்றுக்கதிபதி நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சினார். அவருக்குள் உண்டான அச்சம், இறை அச்சம் என்று கொண்டால் அதுவே அவரது நம்பிக்கை மாற்றத்திற்கு வித்திட்டது எனலாம். தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்ததும், இது சார்ந்த நிகழ்வுகள் அனைத்தும் இனி எப்போதுமே இறைமக்கள் கடவுளை தைரியமாக அண்டிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையை அவருக்குள் உருவாக்கியது.

மனிதர்கள் தங்கள் வாழ்வில் பெரும் செல்வாக்குடையோராய், அதிகாரமுடையோராய் இருந்தாலும் நம்பிக்கை இழந்து போகச் செய்யும் சம்பவங்கள் வாழ்வை சூழும்போது செய்வதறியாது திகைக்கின்றனர். வாழ்வுக்கு எதிர்கால நம்பிக்கையைத் தரும் இறைமகனைத் தமதாக்கிக் கொள்ள முன்னோக்கிச் செல்வதே மாற்றுருவாக்கமாகும்.

இன்னும் இறைப்பற்றாளர்களான நம் வாழ்வில் பிரச்சனைகளில்லாப் பயணம் - கடவுளைத் தேடாத, இறையச்சமற்ற, இறை நம்பிக்கையற்ற ஒன்றாக மாறிவிடுகிறது. ஆனால் வாழ்வில் திடீரென்று ஏற்படும் அசாதாரண நிகழ்வுகளான இழப்புகள், விபத்துகள், நஷ்டங்கள், தோல்விகள், பிரிவுகள் போன்றவைகளால் நம் நம்பிக்கை அசைவுற்று, எதிர்காலம் கேள்விக்குறியாகும் போது என்ன செய்வோம்? நம் வாழ்வை கவ்விக்கொள்ளும் அச்சம். இறையச்சமாக மாற்றுருவாக்கம் பெறுமானால் சிலுவை நாதர் இயேசு, சாவைச் சிலுவையில் வென்றவர், எல்லாவித பயத்தையும் நீக்கி, நம்பிக்கையூட்டி வெற்றி வாழ்வு தந்திடுவார்.

### 2) வாழ்வில் சந்திக்கும் மனிதர்கள் மாற்றுருவாக்கத்திற்கு வழிகாட்டுகிறார்கள் : (மத். 27:54)

நூற்றுக்கதிபதி தன் வாழ்நாளில் தன்வாழ்வையே திருப்தியாக்கும் ஆற்றலை இயேசு நாதரில் கண்டுகொண்டார். இயேசுவை சிலுவையில் அறைந்துவிட்டு அவருக்கு நேர் எதிரே நின்று கொண்டு நடந்தவைகளையும், நடப்பவைகளையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார். நூற்றுக்கதிபதி பலகட்ட விசாரணை, அலைக்கழிப்புகளில் அமைதியாய் ஏற்றுக்கொண்ட இயேசுவின் பண்புகளையும், தம்மை வாரினால் அடிப்பவர்களையும், எள்ளி நகையாடியவரையும், சித்திரவதை செய்தவரையும் கனிவுடன் நோக்கிய பார்வையையும், அனைவரையும் மன்னித்து, கள்வனுக்கும் பரதீசில் வாய்ப்பளித்து, அன்னைக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்த அனைத்து செயல்களையும், அன்பின் வார்த்தைகளையும் கூர்ந்து கவனித்து வந்தார் நூற்றுக்கதிபதி. யாரை தன் தலைவராகக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கும் தருணம் வந்தது. அரசரிடும்

ஆணைகளும், கர்ஜிக்கும் தோரணைகளும், தடபுடலான வணக்கங்களும் - சிலுவையில் தொங்கும் இயேசு நாதருக்கு முன் அர்த்தமற்றவையாய்த் தோன்றின.

தான் பின்பற்றி வந்த மார்க்கம் எங்கோ தவறிப்போயுள்ளது என்பதையும், உண்மையான இறைமகன் இயேசுவே என்பதையும் மனதார உணர்ந்தவர் இயேசுவின் வாழ்வும், பாடு மரணமும் தான் பின்பற்றுவதற்குரிய அரிய தகவுகளைக் கொண்டதாக நூற்றுக்கதிபதி கண்டு, “இவர் மெய்யாகவே இறைமகன்” என்று கூறி, தான் வாழ்வு மாற்றம் பெற்றதை அறிக்கையிட்டார். அந்த நூற்றுக்கதிபதியின் பெயர் ‘லாங்கினஸ்’ என்றும், அவர் பிற்காலத்தில் இரத்த சாட்சியாக மரித்தார் என்றும் பாரம்பரியங்கள் கூறுகின்றன.

மேகம் போன்ற திரளான சாட்சிகளாய் நமது முன்னோர், மிஷனெறிகள், இறைப்பணியாளர்கள் நம் வாழ்வின் மாற்றுருவாக்கத்திற்கு வித்திட்டுச் சென்றுள்ளனர். இன்று நம்மைச் சந்திக்கின்ற மனிதர்களும் நம்மில் இறைச் சாயலைக் காணவும், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். மாற்றம் நிகழ வேண்டும். அதற்காக நம் வாழ்வில் சிலுவை நாதர் இயேசுவின் வாழ்வாலும், பாடு மரணத்தாலும் பெற்ற மீட்பின் வாழ்வைச் சொந்தமாக்கி புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழ வேண்டும். நம் வாழ்வு எப்படியுள்ளது?

ஒரு நூற்றுக்கதிபதி, அதிகாரமுடையவராய், வேறுபட்ட நம்பிக்கை சார்ந்து வாழ்ந்தவர், அவர் சந்தித்த அசாதாரண நிகழ்வுகளும், இயேசு நாதரும் புது வாழ்வு வாழ அறை கூவல் விடுத்த போது மாற்றுருவாக்கம் பெற்றது போன்று, இன்றும் இயேசு நாதரின் பாடுமரணங்களைச் சிந்திக்கும் காலத்தில் கல்வாரி காட்சிகள் நமக்கும் மாற்றத்திற்கான அழைப்பு விடுக்கின்றது. என்ன பதில் கொடுக்கப்போகிறோம்? நூற்றுக்கதிபதி போல் மாற்றம் பெற்ற புதுவாழ்வு வாழ இறைவன் துணைபுரிவாராக.

**திரு. J. யாபேஸ்**

31-03-2017

தவக்கால ஐந்தாம் வெள்ளி

## வ□யின் பார்வையாளர்

**SPECTATOR OF PAIN**

லூக். 23:39-43

**"நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே". லூக். 23:41**

பேராயர் ஃபுல்டன் ஷீன் சொன்னது, ஆண்டவரை அறியாமலும், உணராமலும் பாவத்தில் உழன்று, பின்னர் மனம்மாறி கிறிஸ்துவுக்குச் சான்றாக வாழ்வதால் வரும் இன்னல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு எப்போதும் வார்த்தைகளால் விவரிக்க முடியாக மகிழ்ச்சியோடிருந்த பலரை என் வாழ்வில் சந்தித்திருக்கிறேன். அத்தகையோரில் என்னைப் பெரிதும் கவர்ந்தது தொழுநோயால் வேதனையுற்றுக் கொண்டிருந்த ஜமைக்கா நாட்டுப் பெண்மணி ஆவார். தொழுநோயின் தாக்கத்தால் தன் கைகளையும் கால்களில் பாதியையும் இழந்தவர். தன் உடலில் மா"ரணத்தை" அனுபவித்துக் கொண்டு மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். இதற்கு வலிமிகுந்த தருணத்திலும் மகிழ்ச்சியோடு கடவுளைப் பாடிக் கொண்டேயிருந்தார். தொழுநோய் என் உடலைத் தின்றாலும் உயிர்ப்பில் ஆண்டவர் அருளும் மகிமையான உடலைப் பெறுவேன் என அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். இப்பெண்மணி தன் வேதனையையும் வலியையும் துயரமாக அல்ல தான் அடையப் போகும் உயரத்துக்கான தடமாகப் பார்த்தார். வலியும் வேதனையும் மானுட வாழ்வின் சவால்கள். அவற்றை நாம் எப்படி அணுகுகிறோம், மேற்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து தான் நம் வாழ்வின் போக்கு உறுதிசெய்யப்படுகிறது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் தாங்கொண்ணா வேதனையையும், வலியையும் உடலளவிலும், மனத்தளவிலும் அனுபவித்தார். ஆண்டவரோடு சிலுவையிலறையப்பட்டவர்களும் துன்பப்பட்டனர். இவர்கள் எப்படி கிறிஸ்துவின் வேதனையைப் புரிந்து கொண்டனர் என்றும் தங்களின் வலியை எப்படி எதிர்கொண்டனர் என்றும் திருமறைச் சார்ந்து தியானிப்போம்.

### *1. வலியை வழியாகக் கண்டார்*

கல்வாரியில் இயேசு கிறிஸ்துவோடு இருபுறமும் கலகக்காரர் இருவர் சிலுவையில் அறையப்பெற்றனர். தங்களின் விடுதலையை, உரிமையை வன்முறை வழியாகப் பெற முயன்றவர்கள் இவர்கள். தொடக்கத்தில் இருவருமே இயேசு கிறிஸ்துவை இகழ்ந்தனர் (மத். 27:44).

தங்களின் துன்பத்திற்கும் வலிக்கும் காரணம் அவர்கள் தேர்ந்து கொண்ட வழி என்பது அவர்களுக்குத் தெரியும். தங்கள் நோக்கம் நிறைவேறாததால் சிலுவையிலிருந்து எல்லோரையும் இகழத் தொடங்கினர். கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த செனெகா (Seneca) என்கிற மெய்யியலாளார் சொல்கிறார், “சிலுவையிலறைப்படுவோர் முதலில் தங்கள் பிறந்த நாளைச் சபிப்பர், பின்னர் தங்களைச் சிலுவையில் அறைந்தோரை, அவர்களின் அன்னையரை மற்றும் அங்கு கூடியிருக்கும் அனைவரையும் சபிப்பர்”. உரோமை மெய்யியலாளரான சிசெரோ, “அக்காலத்தில் சிலுவையில் அறைப்படுபவர்களின் கொடூரமான நிந்தனையைத் தவிர்க்க அவர்களின் நாக்கை முதலில் அறுத்தெறிவது வழக்கம்” என்று கூறுகிறார்.

அப்படித்தான் கலகக்காரர் இருவரும் மற்றவர்களை ஏன் இயேசு கிறிஸ்துவையும் கூட நித்தித்தனர். ஆனால் அவர்களில் ஒருவர், சிலுவையில் இயேசு கிறிஸ்து அனுபவிக்கும் வேதனைகளையும் வலியையும் பார்க்கிறார். இத்தகு துன்பத்தின் உச்சத்திலும் சாந்த சொரூபியாக, அன்பின் வடிவமாக, மன்னிப்பின் மகுடமாக விளங்கும் அவரின் மானுட மாட்சியைக் காண்கிறார். வலியைக்கூட மகிழ்ச்சியாக மாற்றும் அவரின் மகத்துவத்தைக் காண்கிறார். ஆகவே ஆண்டவரை நிந்தித்த மற்ற கலகக்காரரைக் கடிந்து கொள்கிறார். நாம் தண்டிக்கப்படுவது முறையே, நம் செயல்களுக்கேற்ற தண்டனையைப் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே (லூக். 23:40-41). குற்றமற்றவராயிருந்தும் இத்தண்டனையை எதற்காக? யாருக்காக? அவர் அனுபவிக்க வேண்டும் எனச் சிந்திக்கின்றார். எல்லாம் உலகக்திற்காக, மக்களுக்காக, எனக்காக என்பதைப் புரிந்து கொள்கிறார்.

C.S. லூயிஸ் என்ற இறையியலாளர் சொல்லுகிறார், “நமது மகிழ்ச்சியில், கடவுள் மென்மையாக நம் காதில் கிசுகிசுக்கிறார். நமது நெருக்கடிகளில் அவர் நம்மோடு பேசுகிறார். நம்முடைய வலியில் அவர் கூக்குரலிடுகிறார்”. (God whispers to us in our joys, speaks to us in our difficulties and shouts to us in our pain) எரேமியா இறைவாக்கினர், “என் மகளாகிய மக்களுக்கு ஏற்பட்ட முறிவு எனக்கே ஏற்பட்டதாகும். நான் துயருருகிறேன்” (எரே. 8:21) என மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனையில் கடவுளும் பங்கு கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமக்காக அல்ல, பிறருக்காக வலியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவின் மனப்பாங்கு அக்கலகக்காரரிடம் மாற்றத்தை ஏற்படுத்தியது. வலியின் மிகுதியால் கூடி நின்ற எல்லோரையும், கூடவே கிறிஸ்துவையும் நிந்தித்த மற்ற கலகக் காரரைப் போலல்லாமல் சிலுவையில் தனக்கு நேரிட்ட வேதனையின், வலியின் வாயிலாக கிறிஸ்துவைப் புரிந்து கொண்டார். தனது வேதனையை வலியாகக் கருதாமல் கிறிஸ்துவை நெருங்குவதற்கு, அவரோடு ஒப்புரவாகுவதற்கு, நிலைவாழ்வின் வாக்குறுதியைப் பெறுவதற்குரிய வழியாகக் கண்டார்.

வலி, கடவுளின் வல்லமை. நம்மில் வெளிப்படுவதற்கான வழி (2 கொரி. 12:9). வலியை வாழ்வின் தடையாகக் காணாமல் வாழ்வைச் சீர்ப்படுத்தும், இறையுறவில் நம்மை ஆழப்படுத்தும் வழியாகக் கொள்ள வேண்டும். Pain is God's Megaphone to rouse a deaf world என்னும் C.S. லூயிஸ் என்வரின் வரிகள் நினைவில் கொள்ளத்தக்கவை.

## *2. அவமானத்தை வெகுமானாகக் கருதினார்*

சிலுவையிலறைப்படுதல் என்பது மிகவும் கொடூரமான ஒரு தண்டனை. அது அவமானத்தின் உச்சமாகக் கருதப்பட்டது. மரத்திலே துக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்கிற வார்த்தையிலிருந்து அதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆகவே தான் உரோமை அரசாங்கம் தன்னுடைய குடிமக்களுக்கு இத்தகைய தண்டனையை வழங்குவதில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவை அவமானப்படுத்தும் நோக்கில் அவருக்கு சிலுவை தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் ஆண்டவரோ, தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு இழிவைப் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டு அவமானத்தை வெகுமானமாகக் கருதினார்.

பெர்சிய அரசன் ஒருவன், தன் நாட்டில் வாழ்ந்த அறிஞர் மூவரை அழைத்து இந்த வாழ்க்கையின் மிகப் பெரிய துயரமும் அவமானமும் எது என்று கேட்டான்?

கடனாளியாயிருப்பதும், அதைத் தீர்க்க வழியும், வசதியும் இன்றி இருப்பதும் தான் இந்த வாழ்க்கையின் மிகப்பெரிய அவமானமும் துயரமும் என்றார் முதலாம் அறிஞர்.

இரண்டாம் அறிஞரோ, நோயுற்றிருப்பதும், அதை நலமாக்க முடியாமல் இருப்பதும் தான் வாழ்க்கையின் மிகப்பெரிய துயரமும் அவமானமும் என்றார்.

மூன்றாமவர் சொன்னார், அரசரே, இவர்கள் சொன்னதெல்லாம் வாழ்வின் மாபெரும் துயரமும் அவமானமும் அல்ல. இந்த வாழ்வின் மாபெரும் துயரமும் அவமானமும் என்னவென்றால், "வாழ்வின் இறுதிக்கு வந்துவிட்ட பிறகு, இதுவரை வாழ்வைப் பயனுள்ளதாகக் கருதி வாழாமல் வீணாகக் கழித்துவிட்டோமே என உணர்வதுதான் வாழ்வின் மிகப்பெரிய துயரமும் அவமானமுமாகும்" என்றார்.

சிலுவையில் கிறிஸ்துவோடு அறையப்பெற்று மனம்மாறிய கலகக்காரர் அத்தகைய துயரத்தையும் அவமானத்தையும் சிலுவையில் அடைந்தார். சிலுவையில் அறையப்படுவதே அவமானம். அதுவும் உடன் சிலுவையில் தொங்கி கொண்டிருக்கும் ஒருவரிடம் உமது அரசு வரும்போது அடியேனை நினைத்தருளும் என வேண்டுவதை உச்சபட்ச அவமானத்தைத்தான் பிறர் கருதியிருப்பர்.

கலகக்காரர் எனக் குற்றம் சாட்டப்பட்டு, சிலுவைத் தண்டனை பெற்று அவமானத்தை அனுபவிக்கும் வேளையில், இந்த அவமானத்தை வெகுமானமாக மாற்றும் வழியை கிறிஸ்துவிடம் கற்றுக் கொண்டார் (எபி. 12:2). இந்த அவமானத்தை வெகுமானமாக மாற்ற கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று, தன்னை அவருக்கு அடியவராக அர்ப்பணித்தார்.

அவமானம் இருவழிகளில் நமக்கு வருவதுண்டு. ஒன்று நமது தவறான செயல்களால் நமக்கு ஏற்படுவது, இரண்டாவது ஆண்டவருக்காக நாம் அடைவது. ஆனால் இந்த இரண்டு வகையான அவமானங்களையும் வெகுமானமாக மாற்ற ஒரே வழி கிறிஸ்துவே. நமது தீமையான செயல்களை ஆண்டவரிம் ஒப்புக்கொண்டு, ஒப்புரவாகி, பாவத்தில் சிறிதுகாலம் இன்புறுவதை விட கடவுளுக்காக இகழ்ச்சியுறுவதே மேலான செல்வம் என நாம் கருத வேண்டும் (எபி. 11:24-26). அத்தகைய வாழ்வுக்கு கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுவதாக.

**திரு. B. சாம் ஜெபசிங்**

# நம்பிக்கையின் பார்வையாளர்

**SPECTATOR OF FAITH**

யோவா. 19 : 39-41

**"...நிக்கதேம் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார்." யோவா. 19 : 39-41**

ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவரிடம் போய், "மகனே, நீ இன்று திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்" என்றார். அவர் மறுமொழியாக 'நான் போக விரும்பவில்லை' என்றார். ஆனால் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு போய் வேலை செய்தார். அவர் அடுத்த மகனிடமும் போய் அப்படியே சொன்னார். அவர் மறுமொழியாக, நான் போகிறேன் ஐயா! என்றார். ஆனால் போகவில்லை. இந்தக்கதை இயேசு நாதர் தம்மைச் சூழ்ந்த மக்களைப் பார்த்துச் சொன்னது. இந்தக் கதையில் வரும் இளைய மகனைப் போன்று சொல்லியும் செய்யாதவர்கள் இயேசுவின் சீடர்களில் பலர். குறிப்பாக "நான் உம்மோடே இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒரு போதும் மறுதலிக்க மாட்டேன்" என்ற பேதுருவும் உள்ளடங்குவார். ஆனால் தந்தையின் விருப்பத்தை முதலில் செய்யாவிட்டாலும் இறுதியில் நிறைவேற்றிய அந்த மூத்த மகனைப் போன்றவர்தான் நிக்கதேம். சீடர்களெல்லாரும் சிலுவைப்பாதையில் ஓடி ஒளிந்து கொண்டனர். ஆனால் இயேசுவின் போதனைகளால் கவரப்பட்டு அதை ஏற்றுக் கொண்டு, சமூகத்தில் தனக்கு இருந்த பரிசேய அடையாளத்தின் நிமித்தமாக, இயேசுவை வெளிப்படையாகப் பின்பற்றாமல் மறைமுகமாகப் பின்பற்றி ஒரு நம்பிக்கையுள்ள சீடனாக வாழ்ந்தவர் இந்த நிக்கதேம்.

நிக்கதேம் என்ற கிரேக்கப் பெயருக்கு "மக்களின் வெற்றியாளர்" (Conqueror of the People) என்று பொருள். யோவான் நற்செய்தியில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும் இவர், ஒரு பரிசேயர், சனகெரிப் மன்றத்தில் ஓர் உறுப்பினர், யூதர்களை ஆட்சி செய்யும் அதிகாரம் உடையவர். இயேசுவின் போதனைகள், அற்புதங்கள், போன்றவற்றைக் கேட்டு அவருடைய மறைமுகமான சீடராக வாழ்ந்தவர். ஒரு சீடருக்கு இருக்க வேண்டிய நம்பகத்தன்மை உடையவர். அத்தகைய நிலையிலே இயேசுவின் சிலுவை மரணத்தின்போது இவர் ஒரு நம்பிக்கையுள்ள பார்வையாளராக இருக்கிறார். இந்த நிக்கதேம் எத்தகைய பண்புடையவர் என்பதைச் சிந்திப்போம்.

### 1. நீதிக்காகப் பரிந்து பேசிய நிக்கதேம் :

யோவான் நற்செய்தியாளர் நிக்கதேமைக் குறித்து மூன்று இடங்களில் பதிவு செய்துள்ளார். முதலாவதாக யோவான் 3:1-21 வரையுள்ள வசனங்களில் இயேசுவை இரவு வேளையில் வந்து சந்தித்து உரையாடுகின்ற ஒரு நிகழ்வு. இரண்டாவதாக யோவா. 7:50-52 இல் இயேசுவுக்காகத் தன்னோடுள்ள மற்ற பரிசேயர்களிடம் பரிந்து பேசும் நிகழ்வு. மூன்றாவதாக, இயேசுவின் உடலை அடக்கம் செய்யும் நிகழ்வு (யோவா. 19:40). இந்த மூன்று நிகழ்வுகளுள் இரண்டாவது நிகழ்வு, நிக்கதேமின் ஓர் அரிய குணாதிசயத்தை வெளிப்படுத்துகின்றது. இயேசு நாதருடைய அற்புதங்களையெல்லாம் கவனித்த நிக்கதேம் ஒருமுறை பரிசேயர்களோடு கூட நின்று கொண்டிருந்தபோது மக்கள், "வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே" என்றும் "மேசியா இவரே" என்றும் கூறினர். இதைக் கேட்ட தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அதை நம்பாமல் இயேசுவைப் பிடிக்க விரும்பினார்கள். அப்போது பரிசேயக் கூட்டத்தினரைப் பார்த்து குறுக்கிட்ட நிக்கதேம், "ஒருவருடைய வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது அவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?" (யோவா. 7:51) என்று கேட்டார். இங்கே நிக்கதேம் காரணமின்றி இயேசு தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காக அந்த சனகெரிப் மன்றத்தினரிடம் இயேசுவுக்காகப் பரிந்து பேசுவதைப் பார்க்கின்றோம். இந்தப் பகுதியில் நிக்கதேமின் தைரியம், பிறருக்காகப் பரிந்து பேசும் இயேசுவைப் போன்ற நல்ல குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறது. நீதி என்பது அனைவருக்கும் உரியது. "The dead cannot cry out for justice. It is a duty of the living to do so for them". இறந்தவர்கள் நீதிக்காக கூக்குரலிட முடியாது. நீதிக்காக குரல் கொடுப்பது, வாழுகின்றவர்கள் அவர்களுக்காக செய்ய வேண்டிய ஒரு கடமை என்று லூயிஸ் புஜோல்ட் கூறுகின்றார். இன்றைக்கும் அநீதிகள் மலிந்த சமூகத்தில் வாழும் நாம் நீதிக்காகப் பரிந்து பேசவும் குரல் கொடுக்கவும் நிக்கதேமின் வாழ்வு நமக்கு மாதிரியாக உள்ளது.

### 2. நிலைத்து நின்ற நிக்கதேம் :

இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர் (மத். 24:13) என்று இயேசு நாதர் தமது சீடர்களிடம் கூறினார். இந்த அன்பின் கட்டளைக்கு ஒரு புது மாதிரியை கொடுத்தவர் நிக்கதேம். ஹுப்பொமோனே (Upomone) என்கிற கிரேக்க வார்த்தை "நிலையான" என்று பொருள்படும். "Steadfastness" என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையான ஒரு வார்த்தை "Immovable". இந்த வார்த்தையின் அர்த்தம் 'அசையாத' அல்லது 'மிக உறுதியான' எனப் புரிந்து கொள்ளலாம். ஒரு கட்டிடம் அசையாமல் இருக்க வேண்டுமானால் அதன் அடித்தளம் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். அந்த வகையில் நிக்கதேம் பல

சூழலில் இயேசுவின் போதனைகளைக் கேட்டு ஒரு நல்ல உறுதியான அடித்தளத்தோடு காணப்பட்டார். நிக்கதேம் இயேசுவை இரண்டாவது முறை சந்தித்தபோது நீதிக்காகப் பரிந்து பேசினார். (யோவான் 7:51). அப்போது அங்கிருந்த மறைநூல் அறிஞர்கள் நிக்கதேமிடம் "நீரும் கலிலேயரா என்ன?" என்று கேள்வி கேட்டு அவரை அவமானம் செய்தனர். இத்தகைய அவமானங்களை அடைந்த நிக்கதேம் மீண்டும் இயேசுவை மறைமுகமாகப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால் நிக்கதேம் அந்த அவமானங்களைப் பொறுத்துக்கொண்டது மட்டுமல்லாமல் இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் அவரது உடலை அடக்கம் செய்யத் துணிந்தது தான் இயேசுவுக்காக எந்த அவமானத்தையும் ஏற்க முடியும் என்ற நிலைப்புத் தன்மையை தெளிவுபடுத்துகின்றது.

யூத பாரம்பரியத்தில் ஒரு ஆதரவு இல்லாத மனிதன் இறந்தால் கூட அவனது உடலை அடக்கம் செய்யும் சடங்கு மிகப் பிரம்மாண்டமாக இருக்கும். ஆனால் நிக்கதேம் இயேசு ஆதரவற்றவர் என்பதால் அல்ல. அவருடைய நம்பிக்கையாளராக உடலை அடக்கம் செய்ய மிகவும் அதிக செலவீனத்தை ஏற்றுக்கொண்டார். குறிப்பாக இறந்தவர்களின் உடலில் சுற்றுவதற்கான துணியும் நறுமணத்தைலமும் சமூகத்திலே உயர்ந்தவர்களுக்கும், நீதிமான்களக்கும் மட்டுமே தரப்படும். ஆனால் சிலுவையில் அறைப்பட்ட ஒருவருக்கும் விலை உயர்ந்த துணியோ, நறுமணப் பொருட்களோ தரப்படுவது இல்லை. இங்கே நிக்கதேம் இயேசுவை ஒரு நீதிமானாக நம்பி ஏற்றுக்கொண்டார். ஆகவே தன்னிடமுள்ள விலை உயர்ந்த நறுமணப் பொருட்களால் இயேசுவின் உடலை அடக்கம் செய்தார். இந்தச் செயல் வெறும் சடங்காச்சாரத்தை மட்டும் நிக்கதேம் கடைப்பிடித்தார் என்ற காட்டவில்லை. மாறாக எந்த அளவிற்கு இயேசுவின் போதனையிலும் இயேசுவைக் குறித்த நம்பிக்கையிலும் நிலைத்து நின்றார் என்பதைத் தெளிவுப்படுத்துகின்றது.

இந்தத் தவக்காலங்களில் கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்துச் சிந்திக்கும் பற்றுறுதியாளர்களாகிய நாமும் நிக்கதேம் போன்று நீதிக்காகப் பரிந்து பேசுகின்றவர்களாகவும், இறுதிவரை கிறிஸ்தவ நம்பிக்கையில் நிலைத்து நிற்பவர்களாகவும் வாழ முயற்சி செய்வோம்.

**திரு.Y. சுஜின்ராஜ்**

# சிலுவை திருமொழிகள்

## சிலுவையில் மலரும் மன்னிப்பு

திருமறைப்பாடம் : லூக். 23:32-34

**"தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை." லூக். 23:34**

1940 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் நாள் நடைபெற்றுக்கொண்டிருந்த இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனி இங்கிலாந்தின் மீது கடுமையான வான்வெளித்தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் கம்பீரமாய் உயர்ந்து நின்ற பேராலயம் ஒன்று இடிந்து தரைமட்டமானது. பேராலயத்தில் வழிபட்டு வந்த இறைமக்களோ வேதனையுற்றனர். மறுநாள் இறை மக்கள் இணைந்து இடிந்த பேராலயத்தில் சரிந்து நின்ற உத்திரம் இரண்டினை ஒன்றாக இணைத்தனர். அதுவோ சிலுவை வடிவத்தைத் தந்தது. இந்தச் சிலுவையில் இரண்டே வார்த்தைகளை அகிலம் போற்ற அற்புதமாய் எழுதினர், "தந்தையே மன்னியும்" (Father Forgive). இயேசுவில் வெளிப்பட்ட மன்னிப்பின் நறுமணத்தை வார்த்தையில் வடித்து அவனிக்கு வீசச் செய்தனர்.

மன்னிப்பு என்பது மண்ணில் வாழும் மனிதனின் அவசியமான தேவையும், கடவுளின் அதியுயர்ந்த சாதனையுமாகும் என்றார் Horace Bushnell. அதைத்தான் இயேசு நாதர் தமது சிலுவையில் செய்து காட்டினார். மன்னிப்புக்கெல்லாம் மகுடமாகவும், மாதிரியாகவும் விளங்குவது இயேசு நாதர் சிலுவையின் அடிவாரத்தில் கூடியிருந்தோர்க்கு அளித்த மன்னிப்பு தான். இயேசுவின் உள்ளத்திலிருந்து எழுந்த இந்த மன்னிப்பு என்ற வார்த்தையின் பொருளைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

### *1. வேதனையின் உச்சத்தில் ஓர் அமைதியின் வார்த்தை :*

சிலுவை மரத்தில் தாங்கொண்ணா வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருந்த இயேசுவின் உள்ளத்திலிருந்து கனிந்த முதலாம் வார்த்தை கேட்போரைத் தம்வயப்படுத்துவதாயும் அவர்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாயும் அமைந்துள்ளது. கடினமான சூழலிலும் கலங்கிப் போகாத இயேசுவின் இதயத்தில் இளையோடிய ஒப்பற்ற அமைதியே இவ்வார்த்தையின் வெளிப்பாடாகும். வார்த்தைகளால் விளக்க இயலாத வேதனையின் உச்சத்தில் ஒரு மனிதனின் இதயத்தில் அமைதி நிழலாடும் என்றால் அது சாத்தியமாகாத ஒன்று. ஆனால் இயேசுவோ தம்மைக் காயப்படுத்திய கல்மனது கொண்டோரையும் பழிதீர்க்க எண்ணாமல் பரிவுடன் பார்த்து பரமனிடம் வேண்டுதல் செய்கின்றார். சாட்டையால் அடித்து. ஈட்டியால் உருவக் குத்தி, கசப்பு கலந்த காடியை குடிக்கக் கொடுத்து சித்ரவதைகள் பல சந்தித்தும் அவரில் இருந்த அமைதி சற்றேனும் அருகிப் போகவில்லை. தந்தையால் அருளப்பட்ட அமைதியின் நிறைவால் அனைத்து வேதனைகளையும் இன்முகத்தோடு ஏற்று இச்சிறிய வேண்டலால் அமைதியினை வெளிக்கொணர்ந்தார்.

## 2. வெறுப்பின் உச்சத்தில் ஓர் அன்பின் வார்த்தை :

இயேசு நாதரின் வாழ்வும் பணியும் ஒருபோதும் மண்ணக மக்களைப் பாழ்ப்படுத்தவில்லை. மாறாக பண்படுத்தியது. வாழ்வதற்கான வழிமுறைகளையும், நிலை வாழ்வை அடைவதற்கான சித்தாந்தத்தையும் சாந்தமாகக் கற்றுக் கொடுத்த இயேசுவைப் புறந்தள்ளியவர்களும், வெறுத்தவர்களும் பலர். இயேசு நாதரின் வார்த்தையால் நலமடைந்தவர்களும், ஆறுதல் மற்றும் ஆனந்தம் அடைந்தவர்களும் கூட அவரை வெறுத்து விசாரணையில் ஒரு சேரச் சொல்லுகின்றனர், இயேசுவை சிலுவையில் அறையும், பரபாசை விடுதலை செய்யும். தம்மை வெறுத்த மனிதர்களிடம் எந்தக் காழ்ப்புணர்ச்சியும், கோபமும், மூர்க்கமும் வெளிக்கொணராமல் பரிவும், பாசமும் கொண்டார். வாய் திறந்து வசைபாடியவர்கள் கை நீட்டி அடித்தும் கூட தம் அன்பின் வார்த்தையால் அவர்களை அணைத்தார். பகையையும், வெறுப்பையும் அன்பால் தான் முடிவுக்கு கொண்டுவர இயலும் என்ற உண்மையினை ஊருக்கும், உலகுக்கும் உரக்கச் சொன்ன இயேசு அன்போடு வேண்டுகிறார், தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று தெரியவில்லை.

## 3. தீமையின் உச்சத்தில் ஓர் மன்னிப்பின் வார்த்தை :

ஒருவரும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள், தீமைக்கு நன்மை செய்யுங்கள் என்ற இயேசுவின் அழுத்தம் நிறைந்த சொற்கள் சிலுவையில் வடிவம் பெற்றது. சீடர்களோடு இரவு விருந்தை ஏற்கும் போது காட்டிக் கொடுத்த யூதாசின் பாதங்களை இயேசு நாதர் தமது கருணைக் கரங்களினால் கழுவி ஆடையினால் துடைத்தார். தந்தையே, இவர்களை மன்னியும் என்ற இயேசுவின் இந்த இறைவேண்டலுக்கு உட்பட்டவர்கள் யார்? தொடக்க நாட்கள் முதல் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர், திருச்சட்ட அறிஞர், நாட்கள் செல்ல செல்ல சேர்ந்து சதி செய்து இத்தீயச் செயலை நிறைவேற்றிய சமயத் தலைவர்கள், இவர்கள் இடும் நாடகம் அனைத்தும் இவர்களது தந்திரத்தால் விளைந்தவை என அறிந்தும் எந்தத் தயக்கமும் இன்றி தமது பதவியைத் தற்காக்க தவறாக தீர்ப்பிட்ட பிலாத்து, அரசக் கட்டளையை நிறைவேற்றுகிறோம் என்ற தோரணையில் ஆண்டவரின் ஆடைகளைப் பங்கு போட்டுக் கொண்ட போர் வீரர்கள், கூடி நின்று கூக்குரலிட்ட மக்கள் என இத்தனை தீமைகளையும் இத்தரையில் தயக்கமின்றி இழைத்தவர்களுக்காய் தந்தையிடம் மனமுருகி மன்னிக்க வேண்டுகிறார்.

தமக்குத் தீமையிழைத்தவர்களை மன்னிப்பது என்பது மனித மனதுக்குக் கடினமான ஒன்று. ஆனால், இயேசு நம்மை மன்னிக்க அழைக்கிறார். ஆசை, கோபம், கனவு காண்பவன் பேசத் தெரிந்த மிருகம்; அன்பு, நன்றி, கருணை கொண்டவன் தெய்வச் சாயலுடைய மனிதன் என்றார் கவிஞர் கண்ணதாசன். அன்பும், கருணையும், நன்றியுணர்வும் பூத்துச் சொரியும் மனித மனங்களில்தான் மன்னிக்கும் மனோபாவம் மணம் பரப்பும். அடுத்திருப்பவர் தவற்றை எவர் மன்னித்து ஆண்டவர் இயேசுவை மகிழ்விக்கிறாரோ அவருடைய தவற்றை இறைமகனார் மன்னித்து நிலை வாழ்வினை அளித்து மகிழ்விக்கிறார்.

**திரு. R. ஜெஸ்பேள் ராபின்**

## சிலுவையில் வெளிப்படும் மீட்பு

லூக். 23 : 39-43

**"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்." லூக். 23:43**

பரதீஸ் என்றால் - தோட்டம், அல்லது நந்தவனம் என்பது பொருள். அழகான இளைப்பாறுகின்ற ஓர் இடம் தான் இந்த பரதீஸ். வெளி. 2:7. ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருச்சத்தின் கனியை புசிக்க கொடுப்பேன். அப்படியென்றால் பரதீசு என்பது இளைப்பாறுகின்ற ஓர் நந்தவனம் அல்லது தோட்டம் என்பது புலப்படுகிறது.

அந்த நந்தவன வாழ்வை ஓர் கள்வன் பெற்றுக்கொள்ளுகிறான்.

### *1. யார் இந்த கள்வன்?*

ஏரோதினுடைய அரசாட்சியின்போது சுமார் 40,000 பேர் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் அநேகர் பிழைக்க வழியின்றி வழிப்பறியில் ஈடுபட்டனர். இவர்கள் ரோம ஆட்சிக்கு எதிராக கலகமும் செய்து வந்தனர். வரலாற்று ஆசிரியர் யெசபியஸ் கூறும்போது "எருசலேமிலிருந்து எரிகோவுக்கு புறப்பட்ட மனிதனை குற்றுயிராக்கிய கள்வர்களுள், இந்த இரு கள்வரும் இருக்கலாம்" என்கிறார். அதோடு, "நாம் நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் என்ற கள்வனின் வார்த்தை, அவன் கடுங்குற்றம் புரிந்தவன் என்பதை நிரூபணம் செய்கிறது". மத்தேயு நற்செய்தியாளர் (மத். 27:44-ல்) இரு கள்வரும் இயேசுவை நிந்தித்ததாக குறிப்பிடுகிறார்.

இறைவனை மறுதலித்து நிந்தித்த இந்த கள்வன் திடீரென்று இயேசுவிடம், அடியேனை நினைத்தருளும் என்று சொல்வதற்கான காரணம், இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த முதலாம் வார்த்தை - அந்த வார்த்தை அவனை நெகிழ வைத்தது. அவன் நெஞ்சை பதறவைத்தது. மற்ற கள்வனிடம் கூறுகின்றான், நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். ஆனால் இந்த இயேசுவோ தவறேதும் புரியாமலே தண்டனைக்குட்பட்டிருக்கிறார். இந்த உணவு அவன் உள்ளத்தில் மாற்றத்தை உருவாக்கியது.

இந்த கள்வன் குற்றம் புரிந்தவன் தான். ஆனாலும் தன்னை உணர்ந்து கொள்கிறான். "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்" என்ற வார்த்தை இவன் பிழைகளை உணர்ந்தவன் என்பதை சுட்டிக்காட்டுகிறது. "அடியேனை நினைத்தருளும்" என்ற வார்த்தை இவனது மனமாற்றத்தையும், மறுவாழ்விற்காக ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

தன்னை உணர்ந்து, மறுவாழ்வினை எதிர்நோக்கிய கள்வனுக்கு இறைவன் கொடுத்த பதில் "இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிலிருப்பாய்".

## *2. இந்த நந்தவன வாழ்வை இவன் பெற்றுக் கொள்ள காரணம் என்ன?*

1. தவறினால் தான் ஆனால் தன்னை உணர்ந்து கொண்டான்.
2. நிந்தித்தவன் தான் ஆனால் நிதானித்து அறிந்தான்.
3. திருடினவன் தான் ஆனால் திருந்தி கொள்ளுகிறான்.

ஒருவன் இப்படி இருக்க இன்னொரு கள்வனோ இயேசு அற்புதம் செய்து என்னை விடுவிப்பார் என நினைத்தான். இவர் ஒரு கிறிஸ்துவா என சோதித்தும் பார்க்கிறான். மட்டுமல்ல தீய உலக வாழ்வை மறுபடியும் அனுபவிக்க விரும்பினான். ஆகவே அந்த நந்தவன வாழ்வை அடைய முடியவில்லை.

ஆனால் தன்னை உணர்ந்தவனோ அவரிடம் ஒரு ராஜ்ஜியம் உண்டு. அந்த ராஜ்ஜியத்தில் துன்பமற்ற வாழ்வு உண்டு என நம்பினான். கிறிஸ்துவில் இறைவனை கண்டான். நல்லவர்கள் பரதீசுக்கு போகிறார்கள். கெட்டவர்கள் பாதாளத்திற்கு செல்கின்றனர். தி.வெ. 2:7-ல் கடவுளின் தோட்டத்தில் உள்ள வாழ்வுதரும் மரத்தினுடைய கனியை வெற்றி பெறுவோருக்கு உண்ணக் கொடுப்பேன். ஆக, பரதீசு - பாக்கியம் கிடைப்பது அரிதான காரியம். அந்த சிறந்த பாக்கியம் இக்கள்வனுக்கு கிடைத்திட காரணம் இறைவனின் பேரன்பு.

தி.பா. 19:12-ல் தாவீது கூறுகிறார், "தம் தவறுகளை உணர்ந்து கொள்பவர் யார் தாம்? என்று கிறிஸ்தவர்களாகிய நாம் நம் பிழைகளை உணர்ந்து மன்னிப்பை கேட்கின்றோமா, இல்லை நான் நீதிமான்தான் என்ற இறுமாப்புடன் இருக்கின்றோமா?" இயேசு கூறினார். மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என்று நாமும் இந்த பரதீசு வாழ்விலே பங்குபெற, நம்மை தாழ்த்தி கிறிஸ்துவிடம் அர்ப்பணிப்போம்.

**திரு. R. ஐசக் புருசிலி**

# சிலுவையில் உருவாகும் ஒன்றிப்பு

யோவான் 19:23-27

**"...அம்மா, இவரே உம் மகன்....இவரே உம் தாய்..." யோவான் 19:26,27**

கடவுள் மனிதத்தை படைப்பிலேயே உறவினைக் கொண்டு பிணைத்திருக்கின்றார். உணர்வுகள் உறவுகளை உரமூட்டி வளர்க்கின்றன. அதிவேக அதி நவீன உலகில் மனிதர்கள் பல சூழ்நிலைகளில் உறவுகளை பராமரிக்க மறந்து போகின்றார்கள். தன் தாய்க்கு துயரத்தை கொடுப்பவர் அறிவற்றவர் என்று நீதி 10:1 சொல்கிறது பிள்ளைகள் மீது பெற்றோருக்கும் பெற்றோர் மீது பிள்ளைகளுக்கும் கடவுள் பல பொறுப்புகளை தந்திருக்கின்றார். தாயின் மீது மகனுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்வு என்ன என்பதை இயேசு கிறிஸ்து சிலுவை திருமொழி மூன்றின் வழியாக உணர்த்துகின்றார்.

சிதைந்து போன உள்ளத்தோடு சிலுவை அடிவாரத்தில் நிற்கும் தன் தாயை பார்த்து அம்மா இவரே உம் மகன் என்றும் தன் அன்பான சீடன் யோவானை பார்த்து இவரே உம் தாய் என்றும் சொல்லும் இறைமகனின் வார்த்தை வெளிகாட்டும் பொறுப்புணர்வினை சிந்திப்போம்.

## *அரவணைப்பு :*

இயல்பாகவே நம் ஆண்டவர் உடைந்துபோன உள்ளத்தோரை அரவணைப்பார். எடுத்துக்காட்டாக நாயினூர் கைம்பெண் ஒரே மகனை இழந்து வேதனைப்பட்டு கொண்டிருந்த போது அவர்மீது பரிவுகொண்டு அழாதீர் (லூக்கா7:13) என்று சொல்லி அரவணைத்தார். எந்த தாயும் தன் மகன் துன்புறுவதை பொறுத்துக்கொள்ளமாட்டார். இங்கே சிலுவை அடிவாரத்தில் நின்றுகொண்டு இயேசு கிறிஸ்துவை கோலில் அற்பணிக்க சென்றபோது எருசலேமில் இருந்த சிமியோன் உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவி பாயும் (லூக். 2:33) என்ற வார்த்தை நிறைவேறியதை நினைத்து துயருறுகின்றார். இயேசுவின் தாய் மரியாள். சிலுவையில் அறைய கொண்டு போகும்போது மாரடித்து புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களைப் பார்த்து எருசலேம் மகளிரே உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள் (லூக் 23:28) என்று இயேசு கிறிஸ்து கூறினார். இங்கே மரியாள், தன் மகன் துன்புறுவதை பார்த்து வேதனையோடு அழுது கொண்டிருக்கின்றார். அப்பொழுது இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து தன் தாயை பார்த்து அம்மா இவரே உம் மகன் என்ற ஒப்பற்ற அரவணைப்பின் வார்த்தையை கூறுகின்றார்.

பிள்ளைகளின் பாசம் கலந்த ஒரு வார்த்தையால் பிள்ளைகளின் அரவணைப்பிற்காக ஏங்கும் பெற்றோரை பல இடங்களில் பார்க்க கூடும். உணர்வுகளை மதித்து உடைந்திருப்போரை அரவணைக்குதலை கிறிஸ்து சிலுவை வழியாய் காட்டுகிறார். காயப்பட்ட மனதிற்கு அரவணைப்பு முதலுதவி போன்றது. இயேசு தன் தாயை அம்மா இவரே உம் மகன் என்ற வார்த்தையினால் அரவணைத்தார்.

***அக்கறை கொள்ளுதல் :***

அரவணைத்த ஆண்டவர் தாய் மீது அக்கறை கொண்டவராய், தாயின் தொடர்ந்துள்ள வாழ்க்கை சீராய் அமைய தன் அன்பான சீடனை பார்த்து இவரே உம் தாய் (யோவான் 19:27) என்று கூறி தன் தாயின் தொடர்ந்து உள்ள வாழ்க்கை சீராய், சரியாய் அமைவதற்கு உறுதி செய்கின்றார். எந்த தாயும் மகனின் பிரிவை தாங்கி கொள்ள மாட்டார். மகன் தனக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பார். ஆனால் பிதாவின் சித்தம் கிறிஸ்து மரணம் என்னும் பாத்திரத்தில் பங்கு பெற்று தான் ஆகவேண்டும் என்று இருந்தது. எனவே தன் தாயை தனக்கு மிகவும் அன்பான சீடனிடம் கவனிக்கும்படி ஒப்புக் கொடுக்கின்றார்.

இயேசு கிறிஸ்துவை கைது செய்த போது மற்ற சீடர்கள் எல்லாரும் சென்றனர். இருப்பினும் பேதுருவும், யோவானும் இயேசுவை பின் தொடர்ந்தனர். ஆனால் பேதுரு தடுமாறின போது சிலுவை வரை தன்னோடு வந்த அன்பான சீடன் யோவானின் அன்பை பார்த்து அக்கரையோடு தன் தாயை கவனிக்கும் பொறுப்பை கொடுக்கின்றார். கடமைக்காக தாயின் மீது அக்கரை கொள்வோருக்கு கிறிஸ்து தனக்கு மிகவும் அன்பான சீடனை தன் தாயை கவனிக்குமாறு கொடுத்து கடைமைக்கும் மேலானது பொறுப்புணர்வு என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இயேசு கிறிஸ்து உள்ளம் உடைந்திருந்த எல்லாரையும் அரவணைத்தார். திக்கற்று நிற்கும் எல்லார் மீதும் அக்கரை கொண்டார். எனவே கிறிஸ்துவை பின்பற்றும் நாமும், நம் குடும்பம் என்னும் குறுகிய வட்டத்தை தாண்டி சமுதாயத்தில் நலிவுற்றோரை அரவணைத்து அவர்கள் மீது அக்கரை கொள்ளும் பொறுப்புணர்வை சிலுவை வழியாக பெற்றுக்கொள்வோம்.

**திரு. V.M. விஜய் ஜாண்**

நான்காம் திருமொழி

## சிலுவையில் கதறும் பிரிவு

மத்தேயு 27:45 - 50

**“என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்? என்று உரத்த குரலில் கத்தினார்.” மத்தேயு 27: 46**

இயேசு சிலுவையிலிருந்து கூறிய 4-ம் வார்த்தை கைவிடப்பட்ட சூழலில் கதறும் குரலாக நற்செய்தியாளர்கள் பதிவு செய்துள்ளார்கள். இயேசு தந்தையாகிய இறைவனால் கைவிடப்பட்டாரா? இது அடிக்கடி நமக்குள் எழும் கேள்வி. மறுபுறம் பிற சமய நம்பிக்கை உடையவர்களால் இயேசுவின் இறைத்தன்மை குறித்து கேள்வி கேட்கும் இடமும், நம்ப மறுக்கும் இடமும் இதுவாகும். இங்கு இயேசு இறைவனால் கைவிடப்பட்டாரா? எப்படி? என்பதைப் புரிய அதற்கு முன் ஏற்பட்ட இருளை (மத். 27:45) நாம் சிந்திக்க வேண்டும். இருள் என்றால் ஓர் உறவின் தடை என புரிந்து கொள்ளலாம். அதாவது கடவுளின் மகன் என்ற உறவில் இருந்தவர் 2 கொரி 5:21, எசாயா 53:66 இன் படி நமது பாவத்தை ஏற்று பாவ நிலையின் ஒட்டு மொத்த அடையாளமானார். எசாயா 9:2-ல் காரிருளில் நடந்த மக்கள் என்ற வார்த்தை பாவத்தை இருள் என வர்ணிக்கிறது. எனவே மானிடர் செய்த பாவத்தை ஏற்ற போது அவருக்குள் ஏற்பட்ட இருள் தந்தைக்கும், மகனுக்கும் ஓர் உறவின் தடையை ஏற்படுத்துகிறது. பூமியில் ஏற்பட்ட இருள் மண்ணுலக மக்கள் இயேசுவைக் கைவிட்டு தங்கள் மீட்பரையும் துன்புறுத்தி, இப்படிப்பட்ட இருளைத் தான் ஆதாயமாகத் தெரிவு செய்கிறார்கள் என்ற எச்சரிப்பை உணர்த்தி காட்டுகிறது. இந்நிலையில் இயேசு இந்த வார்த்தையை உரத்த குரலில் கதறினார். இது கைவிடப்பட்ட நிலையின் குரலா? அப்படியானால் யார் கைவிட்டது? என்பதையும், இந்தக் குரலில் ஏற்படும் உறவின் முழுமையையும் குறித்து நாம் சிந்திப்போம்.

### *1. உறவின் உடைவால் ஏற்பட்ட கதறல் :*

மனிதரால் கைவிடப்பட்ட இயேசுவை, சிலுவையில் நாம் பார்க்கலாம். உறவுகளைச் சுற்றித் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இயேசுவும் உறவுகளைத் தேடி தான் இந்த உலகத்திற்கு வந்தார். அதை நண்பர் என்ற ஆழத்தில் வெளிப்படுத்த முற்பட்டார். யோவா 15:15 -ல் உங்களை நான் நண்பர்கள் என்பேன் என்றார். காரணம் 15:13-ல் தன் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. எனவே நண்பர் என்ற உறவு உயிர் கொடுக்கும் உறவு. இந்த உறவைத் தான் இயேசு மனிதரோடு பகிர முற்பட்டார், பகிர்ந்தார். ஆனால்

நடந்ததோ வேறு . . . நற்செய்தியாளர்கள் இயேசுவைக் குறித்து கூறும் செய்தி மனிதர்களால் இயேசு அடிக்கடி கைவிடப்பட்டார் என்பதாகும்.

மாற்குவில் அவருடைய உறவினர் அவரைக் கைவிட்டனர். அவரோடு வந்தவர்கள் அவரைக் கைவிட்டனர், இறுதியில் சீடர்களும் அவரைக் கைவிட்டனர், நெஞ்சுக்கு நெருக்கமான பேதுரு நேராகத் தெரியாது என மறுதலித்தார். மக்கள் கூட்டம் சமயத் தலைவர்களோடும், அரசோடும் சேர்ந்து ஏளனம் செய்து அவரைக் கைவிட்டனர். இந்தக் கைவிடப்பட்ட வலியின் உச்சத்தில், உறவின் உடைவில் இந்த வார்த்தையைக் கூறி கதறுகிறார். கைவிட்டது மனிதர்கள், உறவை உடைத்து பாவத்தைச் சுமத்தியது மனிதர்கள். ஆனால் இயேசு மனிதரிடத்தில் ஏன் கைவிட்டீர்கள் என்று கேட்க வில்லை மாறாக இறைவனை நோக்கி கேட்கிறார். காரணம் இயேசுவின் முழு நம்பிக்கையும் இறைவனில் இருந்தது. ஒரு பிள்ளை அறியாமல் சுடும் நெருப்பில் கை வைக்கிறது. கையில் நெருப்பு பட்டதும் அய்யோ, அம்மா என அழைக்கிறது. அய்யோ நெருப்பே என அழைக்கவில்லை. காரணம் குழந்தையின் முழு நம்பிக்கையும் அம்மா என்பது தான். பேதுரு கடலில் அமிழ்ந்தார். ஐயோ, கடலே, என அழைக்கவில்லை. மாறாக ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என அழைத்தார். இயேசுவும் மனிதரால் ஏற்பட்ட உறவின் உடைவில் நின்று நம்பிக்கையுடன் தன் தந்தையிடம் கதறுகிறார். இந்தக் குரல் சிலுவையில் நிறுத்தப்பட்ட குரல் அல்ல. பாடுபடும் அனைத்து மனித குலத்திற்கும் நம்பிக்கை ஒளி தருவதற்கான குரல். எங்கே மக்கள் கைவிடப்படுகிறார்களோ, எங்கே ஏழைகள் ஒடுக்கப்படுகிறார்களோ, எங்கே நீதி மறுக்கப்படுகிறதோ, எங்கே அன்பு போலியாகிறதோ அப்போது அவர்கள் வாயிலிருந்து ஒலிக்கும் குரல் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என்பதாகும். ஏன்? ஏழைக்குள் இருப்பது இயேசு தானே. எனவே இயேசு இவர்கள் சார்பில் இந்தக் குரலைத் தெரிவிக்கிறார். எனவே பாவத்தினால் இயேசுவையும், சுய நலத்தால் ஏழைகளையும் துன்புறுத்தும் போது இந்த உறவின் உடைவின் குரல் இன்றும் கேட்கிறது. எனவே இயேசு கூறிய இந்த வார்த்தை மனிதரோடு கொண்ட உறவின் உடைவால் ஏற்பட்ட கதறல் ஆகும். கைவிட்டது மனிதர்கள், அழைப்பதோ இறைவனை. ஏனென்றால் கடைசி வரை கைவிடாதவர் அவரன்றோ.

## *2. உன்னதரிடம் உறவைத் தேடும் கதறல்*

காயங்களின் வேதனை, உறவுகள் தந்த சோதனை, கடவுளின் முகம் மறைக்கப்பட்ட அவலம் இவை மூன்றையும் சந்திக்கும் இயேசு அபயமிடுகிறார். இறைவனிடம் என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்? இங்கே இயேசுவின் கடவுள் உறவினைப் புரிய முடிகிறது. கைவிடப்பட்ட உணர்விலும் நெருக்கமான உறவினராக இயேசு நோக்கிப் பார்க்கிறார். நேற்று இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கும் படிச்

செய்யும் ஆயினும் உம் திருவுளமே நிறைவேறட்டும் என வேண்டிய இயேசு, இப்போது அது நீங்காமல் தொடரும் போதும் தம் நம்பிக்கையில் மாற்றம் இல்லாமல் இறைவனிடமே மீண்டும் அடைக்கலம் தேடுகிறார். இறைவா, என அழைக்காமல், “என் இறைவா” என உரிமையோடு அழைத்து உறவினைத் தேடிக் கதறுகிறார்.

இயேசு எழுப்பிய கதறல் ஒலி, உதவி கேட்டு எழுப்பிய கதறல் அல்ல. மாறாக பயங்கர நெருக்கடியிலும் கடவுளை விடாது பற்றிக் கொள்ளும் ஒருவரது நம்பிக்கையின் குரலாகும். ஓர் உறவினை வலிந்து பற்றிக் கொள்ளும் கதறுதலாகும். இன்றும் பல நிலைகளில் கைவிடப்படுகிறோம். உலகில் இது தான் மிகப் பெரிய கொடுமையும் கூட. ஆனால் நாம் யாரிடம் உறவைத் தேடுகிறோம். இயேசு சிலுவையிலிருந்தும், வாழ்வில் கைவிடப்படும் நிலைகளில் இறைவனை நெருக்கமாகத் தேடவே கற்றுத் தருகிறார்.

மனிதர் உறவை உடைத்து இயேசுவைக் கைவிட்டனர். ஆனால் இயேசுவோ இறைவன் மீது பற்றுக் கொண்டு புது உறவினைச் சொந்தப்படுத்துகிறார். திருமுழுக்கில் தந்தை கூறியது என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இந்த வார்த்தையின் உறவை மைந்தராகிய இயேசு கைவிடாமல் பின்பற்றிய போது சிலுவையின் அடியில் நின்ற ரோம நூற்றுவர் தலைவர், “இவர் உண்மையாகவே இறைமகன்” என்றார் (மத். 27:54). ஆம், அவர் இறைமகன் என்ற பெயரை, உரிமைக்காகவே உன்னதரிடம், என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கதறினார். நாமும் பாவத்தால் அவரைக் கைவிடாமல், இறை உறவினை வாழ்வு சூழலில் தொடர்ந்து பற்றிக் கொண்டு பயணிப்போம். இறைவனின் மகன், மகள் என்ற பெயரை உறவினால் சொந்தப்படுத்துவோமாக.

**திரு. Y. ஜெயசிங்**

ஐந்தாம் திருமொழி

## சிலுவையில் தென்படும் தாகிப்பு

யோவா. 19 : 28,29

**“அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு தாகமாய் இருக்கிறது என்றார்” யோவா 19:28**

இயேசு கிறிஸ்து சிலுவையினின்று நின்று மொழிந்த ஐந்தாம் திருமொழி “தாகமாய் இருக்கிறது” என்பது ஆகும். பயங்கரமான வேதனையின் உச்சத்தில் இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைதான் இது. இவ்வார்த்தையினை கேட்ட உரோமை நாட்டுப் படைவீரன் ஒருவன் கடற்காளானை காடியில் தோய்த்து அவருக்குக் குடிக்கக் கொடுக்கின்றான். அதனை வாங்கிய சிறிது நேரத்தில் இயேசு தம்முடைய ஆவியை கடவுளிடத்தில் ஒப்படைக்கின்றார்.

“தாகமாயிருக்கிறேன்” என்று இயேசு கிறிஸ்து சொன்ன ஐந்தாம் திருமொழியை யோவான் ஆசிரியர் மட்டும் தனது நற்செய்தி நூலில், பதிவு செய்கிறார். தன் சரீரப்பிரகாரமான தாகத்தினை உணர்ந்த இயேசு இங்கு தாகமாயிருக்கிறேன் என பிரகடனம் செய்கின்றார். தண்ணீர் மனித வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது. தண்ணீர் வாழ்வின் முக்கிய ஆதாரம். தண்ணீர் இல்லையேல் வாழ்க்கையே இல்லை என்பது உண்மை. மனிதன் ஆரோக்கியமாய் வாழ தண்ணீர் அவசியம் தேவை.

கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு ஆயிரம் பெலிஸ்தியரைக் கொன்று யூதா மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்த சிம்சோம் களைப்பினால் கடவுளிடம் தான் தாகத்தால் செத்து பெலிஸ்தியரின் கையில் விழப்போவதாகக் கூறி தண்ணீருக்காக வேண்டினார். கடவுள் தண்ணீர் கொடுத்து சிம்சோனுக்கு புத்துயிர் கொடுத்தார் (நீத. 15:15-19). இறை மைந்தர் இயேசு கிறிஸ்துவும் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தண்ணீருக்காக தாகமாயிருந்த இரண்டு நிகழ்வுகளின் வாயிலாக சிந்திப்போம்.

### *1) அவலங்களை அகற்றும் தாகம் :* யோவா 4:4-8

i) சமாரியா வழியாக கலிலேயாவுக்கு பயணப்பட்ட இயேசு கிறிஸ்து, நண்பகல் வேளையில் சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊரில் வந்து, யாக்கோபின் கிணற்று ஓரத்தில் அமர்ந்தார். அங்கு தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும் எனக்கேட்டார் (யோவா 4:4-8).

ii) இரவில் கைது செய்யப்பட்டு, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு, மறுநாள் சிலுவையில் அறையப்பட்ட நிலையில் உடல் களைப்பு, வேதனையுடன் “தாகமாய் இருக்கிறது” என்று கூறினர்.

தாகமுடன் இருப்பவர்க்கு தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீர் தர மறுப்பவன் மூடன் என்பது இறைவாக்கு (எசா. 32:6).

இயேசு கிறிஸ்துவை மனித நிலைக்கு அப்பாற்பட்ட ஒருவராகக் காண்பதே உயர்வான ஆன்மிக அனுபவமாகத் தோன்றினாலும், இயேசு கிறிஸ்து நம்மைப் போன்று சரீரத்தில் வந்தார் என்றும், நம்மைப் போல சரீரப் பிரகாரமாக அனேகம் சோதனைகளைச் சந்தித்து அவனியோரின் அவலங்களை அகற்றி தமது தாகத்தினை வெளிப்படுத்தினார். இது உண்மையான ஆன்மிக அனுபவமாகிறது.

**2) அகவாழ்வைப் புத்தாக்கம் செய்யும் தாகம் :** (எபி. 2:14)

யோவான் ஆசிரியர் “தாகமாயிருக்கிறேன்” என்ற வார்த்தையை தன்னுடைய நற்செய்தியில் குறிப்பிடுவதற்கு முக்கியக் காரணம், இயேசு நம்மைப் போன்று சரீரத்தில் வாழ்ந்து, நம்மைப் போன்று சரீரத்தில் பாடுகளைச் சகித்தார் என்பதை விளக்குவதற்குத்தான். இரத்தம் எல்லாம் வெளியேறிவிட்ட நிலையில் தாகத்தை உணர்ந்து, இயேசு தாங்கிக் கொள்ள முடியாமல் “தாகமாயிருக்கிறேன்” என்கிறார்.

“பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார்” (எபி. 2:14).

தாகமாயிருக்கிறேன் என்று மிகுந்த வியாகுலத்தில் சொல்ல வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? அவரில் உள்ள “ஆத்தும தாகமே” அதற்கான காரணமாக இருந்தது, அழிந்து கொண்டிருக்கும் மனுக்குலத்தை மீட்டு அழியாமைக்குள் நடத்தவும், பாவத்தின் பிடியில் சிக்கி உழலும் மக்களை கரை சேர்க்கவுமே அவரது ஆத்துமா தணியாத தாகம் கொண்டிருந்தது. இப்படி நாம் ஒவ்வொருவரின் ஆத்துமத் தாகத்தையும் உண்மையான நிலையில் தணிப்பதற்காக இயேசு தமது பாடுகளின் உச்சநிலையில் தாகமாயிருந்து கதறவேண்டியது கட்டாயமானது. இன்றும் தரணியில் அமைதியிழந்து, நிம்மதியிழந்து வாழ்வோர் வாழ்வு பெற விண்ணக வாழ்வின் நிதியை நம் அருகில் வைத்துள்ள ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்ப்போம். “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வரக்கடவன்” என்ற இயேசுவின் சத்தத்தைக் கேட்டு ஆன்மிகப் புத்தாக்கத்தைப் பெற்றுப் புதுமையாவோம்.

**அருள்திரு. T.P. சலீம் தங்ககுமார்**

ஆறாம் திருமொழி

# சிலுவையில் நிறைவேறும் பணி முடிப்பு

யோவா. 19:29-30

**"...எல்லாம் நிறைவேறிற்று." யோவா. 19 : 30**

புகழ்பெற்ற இத்தாலி நாட்டு சிற்பி Michael Angelo, உரோமை நகரில் Sistine Chapel-ல் செதுக்கிய சிற்பங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. அவரைப் பற்றி நினைக்கும் போது அவருடைய சிற்பங்கள் நினைவுக்கு வருகின்றன. இருப்பினும் அவர் முடித்த சிற்ப வேலைகளைக் காட்டிலும் பணி முடியாத சிற்பங்கள் அதிகமாய் உள்ளது. அவரால் தன்னுடைய பணியை முழுமையாய் நிறைவு செய்ய முடியவில்லை.

புதிய ஏற்பாட்டில் ஒருமையில் (Singular) உள்ள ஒரே ஒரு வார்த்தை "telestai" (finished) ஆகும். இந்த வார்த்தை வீரம் நிறைந்த வார்த்தை. தன்னுடைய பணிநிறைவினை ஒப்புகொள்ளுகின்ற ஒரு வார்த்தை பகட்டாய் அல்லாமல் தெளிவாய் இயேசு சிலுவையில் மொழிந்த வார்த்தை.

Caesar-னுடைய முக்கியமான மூன்று வார்த்தைகள் Vini, Vidi, Vici (வினி, விடி, விஸி) "I came, I saw, I conquered" (நான் வந்தேன், கண்டேன், வென்றேன்). இந்த வார்த்தைகள் வீரம் நிறைந்ததும், தீவிரம் நிறைந்ததுமாய் இருப்பதுபோல், இயேசு மொழிந்த வார்த்தையும் வீரமும், தீவிரமும் நிறைந்ததாய் காணப்படுகின்றது.

மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்களின்படி இயேசு காடியை வாங்கி குடித்த பிற்பாடு வெற்றி முழக்கத்தோடு முடிந்தது என்றார். பரிசேயர்கள், சதுசேயர்கள், ஏரோதியர்கள், ரோமர்கள் மற்றும் அவருடைய சீடர்கள் இந்த வார்த்தையைக் கேட்டபோது ஆச்சரியப்பட்டார்கள்.

'Telestai' (முடிந்தது) என்பது, இயேசுவின் காலத்தில் அன்றாடம் பேச்சு வழக்கிலிருந்த வார்த்தை. ஒரு வேலைக்காரன், தன்னுடைய எஜமான் அவனிடத்திலே ஒப்புவித்த கடினமான வேலையைச் செய்து முடிக்கின்ற போது Telestai என்பான். எல்லாக் கடினப்பாடினையும் நான் மேற்கொண்டு என்னுடைய பணியை நிறைவு செய்தேன் என்பது பொருள்.

யூதர்கள் பலி செலுத்துவதற்காக எருசலேம் ஆலயம் செல்லுகின்றபோது, அவர்கள் கொண்டு செல்கின்ற பலிப்பொருளை பிரதான ஆசாரியன் ஆராய்ந்து பார்த்து telestai என்பார். உங்களுடைய காணிக்கை அங்கீகரிக்கப்பட்டது என்று பொருள். ஓர் ஓவியர் அல்லது சிற்பி தன்னுடைய பணியை முடிக்கும்போது telestai என்று கூறினார். ஆனால் இங்கு இயேசு முடிந்தது என்று சொல்லுகின்ற போது நாம் புரிந்து கொள்ளுகின்ற உண்மைகள் என்ன?

## 1. ஒப்புரவாகுதல் முடிந்தது :

ஒப்புரவாகுதல் என்ற வார்த்தை உறவு சார்ந்த வார்த்தை. உறவுகளிலே வீழ்ச்சி ஏற்பட்டு பிரிவினைகள் வருகின்ற போது மீண்டும் உறவுநிலை புதுப்பிக்கப்படுவதற்காக ஒப்புரவாகிக்கொள்ளுகிறார்கள். பாவத்தினால் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே காணப்பட்ட இடைவெளி நம்முடைய கீழ்ப்படியாமையின் நிமித்தம் இறைவனோடு துண்டிக்கப்பட்ட உறவுகள், மீண்டும் இயேசுவின் மூலம் ஒப்புரவாக்கப்பட்டு இறைவனோடு தம்மை இணைத்த பணியை நிறைவு செய்து முடிந்தது என்றார்.

இறைவன் இவ்வுலகை மிக அழகாகப் படைத்து, மனிதர்கள் இசைவோடும், சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்று விரும்பினார். ஆனால், மனிதன் பாவம் செய்து இறைவனை விட்டு தூரம்போக பாவம் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த இந்தப் பிளவு இயேசுவின் ஒப்புரவாகுதல் மூலமாக மனிதர்களை இறைவனோடு இணைத்த பணி முடிந்தது என்றார்.

## 2. இரட்சிப்பு முடிந்தது :

ஆங்கிலத்தில் புனித வெள்ளி Good Friday என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இயேசு நமக்கு நல்லதை இந்த நாளில் செய்தார். நமக்காக அவர் வலியை, அவமானத்தை, ஏற்றுக்கொண்டு, அவமானச் சிலுவையை இரட்சிப்பின் சின்னமாய் மாற்றினார். இங்கு இயேசுவின் முடிவில்லாத அன்பினை நாம் காண்கிறோம். அந்த அன்பு நம்மை இரட்சித்தது. இந்த இரட்சிப்பின் பணியை நிறைவு செய்து முடிந்தது என்றார்.

ஜெர்மன் நாட்டில் சிறுவன் ஒருவனுக்காக தன் உயிரைத் தியாகம் செய்த போதகர் ஒருவருடைய கதை. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட இளம் போர்வீரன் ஒருவன் தன்னுடைய குடும்பநிலையைப் போதகரிடத்திலே கூற அவனுக்குப் பதிலாக, போதகர் தண்டனையை ஏற்றுக் கொண்டார். அன்பின் நிமித்தமாக இப்படிப்பட்டவர்கள் அசாதாரணமான செயல்களைச் செய்கின்றனர். கிறிஸ்துவின் அன்பு நம்மை இரட்சித்த அன்பு, இந்த இரட்சிப்பின் பணியை நிறைவு செய்து இயேசு முடிந்தது என்றார்.

ரோமர் 5:8, 10 வசனங்களின் படி “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (8)”.

“நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (10)”.

இயேசு முடிந்தது என்று சொல்லுகின்ற போது, தம் பணியை முடித்தார். நாம் பணியைத் தொடர அழைக்கிறார்.

**அருள்திரு. E. சேம் ஜெபசிங்**

ஏழாம் திருமொழி

# சிலுவையில் முழுமையடையும் ஒப்படைப்பு

திருமறைப்பாடம் : லூக் 23:44-47

**"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன். . . " லூக் 23:46**

நான்காயிரம் ஆண்டுகால யூத வரலாற்றில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைத் தவிர்த்து சாகும் தருவாயில் சொல்லப்பட்ட மூவரின் வார்த்தைகள் முதன்மைபடுத்தி, திருமறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் முறையே, யாக்கோபு, மோசே, ஸ்தேவான் ஆவர். சாகும் தருவாயில் பலர் அவர்தம் வார்த்தைகளைப் பேசியிருந்தாலும் திருமறையில் இம்மூவரின் வார்த்தைகளைக் போல வேறு எவருடைய வார்த்தைகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படவில்லை. ஒரு தனிமனிதனின் பெயர் ஒரு சமூகத்தின் பெயராக மாற்றம் பெறுவது யாக்கோபுவிலிருந்துதான். ஆகவே யாக்கோபு இஸ்ரவேலரில் முதல்வராக அறியப்படுகிறார். வாழ்வுக்கான சட்டங்களை கடவுளிடமிருந்து பெற்றுத் தந்தவர்களில் முதல்வர் மோசே. இரத்த சாட்சிகளில் முதல்வர் ஸ்தேவான். இம்மூவரின் வார்த்தைகளுமே இறை-மனித உறவின் வரலாற்றில் மேன்மைமிக்கச் செய்தியாய் அமைந்துள்ளன.

ஆனால் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து மரிக்கும்போது சிலுவையில் மொழிந்த வார்த்தைகள் இம்மூவரின் வார்த்தைகளைக் காட்டிலும் முதன்மையானதும் மனுக்குலம் அனைத்திற்கும் வாழ்வளிப்பதுமாயிருக்கிறது. அவை இறக்கும் தருவாயில் பேசப்பட்ட ஒரு மனிதனின் இறவா வார்த்தைகள்.

அந்த இறவா வார்த்தைகளின் வரிசையில் இறுதியாக ஆண்டவர் மொழிந்தது தான், "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்பதாகும். பேராயர் புல்டன் ஷீன் இந்த ஏழாம் திருமொழியை ஆறாம் திருமொழியோடு ஒப்பிட்டுப் பின்வருமாறு கூறுகின்றார். "ஆறாம் திருமொழி ஆண்டவர் பூமிக்கு அளித்த பிரியாவிடை. ஏழாம் திருமொழி விண்ணகத்தில் அவருடைய நுழைவாயில்" (Jesus' Sixth word was a farewell to earth; His Seventh word was his entrance into Heaven). இந்த ஏழாம் திருமொழியின் வாயிலாக ஆண்டவர் நமக்குக் கற்றுத்தருவனவற்றைத் தியானிப்போம்.

### *1. வாழ்வு உடமையாளரிடமே கையளிக்கப்பட வேண்டும்*

படைப்பின் வரலாற்றில் கடவுள், மனிதனை நிலத்தின் மண்ணால் உருவாக்கி அவன் நாசியில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர்

உள்ளவனானான் (ஜீவாத்துமாவானான்) (தொ. நூ.2:7). உயிர், கடவுள் மனிதருக்கு வழங்கிய மாபெரும் பரிசு ஆண்டவர் இயேசு கிறிஸ்து இதை நன்கு அறிந்திருந்தார்.

ஆண்டவரை சிலுவையில் அறைவதன் வாயிலாக அவரை ஒழித்து விடலாம் என்று அவருடைய பகைவர் எண்ணினர். ஆகவேதான் தண்டனையின் தருவாகிய சிலுவை மரத்தை அவருக்கென்று ஆயத்தம் செய்தனர். ஆனால் ஆண்டவரோ தண்டனையின் தருவையே தந்தையின் திருவுளம் நிறைவேற்றும் கருவியாக மாற்றிக் கொண்டார். இதன் வழியாக தம்மைச் சிலுவையின் வாயிலாக ஒழித்துவிட முடியும் என்ற பகைவரின் தவறான எண்ணத்தை வெளிப்படுத்தி கடவுள் தந்த மாபெரும் பரிசாகிய வாழ்வை அவர் நோக்கம் நிறைவேற்றப் பயன்படுத்தி முடிவில் அந்த வாழ்வைத் தந்தையிடமே ஒப்படைக்கின்றார்.

ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் என்ற தமது வார்த்தையை இறுதிவரை மெய்பித்துக் காட்டினார் (மத். 10:28). கடவுளே வாழ்வின் நாயகர், ஆகவே அவர் தந்த வாழ்வை எவரும் அழித்துவிட முடியாது என்பதை இந்த ஏழாம் திருமொழியின் வாயிலாக நமக்குக் கற்பிக்கின்றார்.

ஆண்டவர் தம்மைப் பிலாத்துவிடமோ அல்லது பிலாத்து ஆண்டவரைச் சிலுவைச் சாவுக்கோ ஒப்படைத்தார் என்று கூறுவது ஒருபோதும் சரியன்று. கடவுளே வாழ்வின் நாயகர் என்பதை அறிந்திருந்த இயேசுகிறிஸ்து மனிதரிடமல்ல, நியாயமாய்த் தீர்ப்பு வழங்கும் கடவுளிடம் தம் உயிரை ஒப்படைக்கின்றார் (I பேது. 2:23).

ஆகவே, இந்த ஏழாம் திருமொழி சாகப்போகிறோமோ என்கிற வேதனையில், விரக்தியில் வெளிப்பட்ட வெற்றுக் குரல் அன்று; சிலுவைச் சாவின் வாயிலாகத் தாம் சம்பாதித்த விடுதலையை விளம்பும் வெற்றியின் குரல்.

உலகில் நாம் எதிர்கொள்ளும் வியாதிகளானாலும், விபத்துகளானாலும், மரணமானாலும் எதைக்குறித்தும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் நமது வாழ்வு கிறிஸ்துவோடு கூட கடவுளுக்குள் மறைந்திருக்கின்றது (கொலோ. 3:3) எனும் நம்பிக்கையை இந்த ஏழாம் திருமொழி வாயிலாக ஆண்டவர் நமக்குக் கற்பிக்கின்றார்.

## *2. வாழ்வு உன்னத பொறுப்பாண்மையை நினைவூட்ட வேண்டும்*

ஆண்டவர் இந்த ஏழாம் திருமொழி வாயிலாக தம் வாழ்வைக் குறித்த தம்முடைய பொறுப்பாண்மையை வெளிப்படுத்துகிறார். இளைய மகன் தன் தந்தையின் ஆஸ்தியில் தனது பங்கைப் பொறுப்பற்ற முறையில் அழித்துப் போட்டுவிட்டு வெறுங்கையனாக தன் தந்தையிடம் திரும்பி வருகின்றான்.

ஆனால் இறைமகனோ, தந்தை தமக்குத் தந்த அனைத்து வளங்களையும், வரங்களையும், வாழ்வையும் தந்தையின் நோக்கம் நிறைவேற செலவு செய்துவிட்டு வெறுங்கையுடன் அன்று உலக மீட்பை சம்பாதித்த வெற்றி வீரராக தந்தையிடம் திரும்புகின்றார்.

மண்ணினின்று வந்த உடல் மண்ணுக்கே திரும்புமுன்னும் கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்புமுன்னும் உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை என்கிறார் சபை உரையாளர் (பிரசங்கி) (ச. உ. 12:7). படைப்பாளருக்கு பொறுப்பாண்மை மிக்கவராய் இருக்க வேண்டியது படைக்கப் பெற்றவரின் கடமை. இப்பொறுப்பாண்மையையே இயேசுகிறிஸ்து தம் ஏழாம் திருமொழியில் வெளிப்படுத்துகின்றார்.

ஆண்டவர் கெத்சமனேயில் தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல ; உம் விருப்பப்படியே நிகழட்டும் என மன்றாடினார். மத்தேயு ஆண்டவர் "முகங்குப்புற விழுந்து" (மத். 26:39) மன்றாடினார் எனவும் மாற்கு, "தரையில் விழுந்து" (மாற். 14:35) எனவும் லூக்கா "முழந்தாள்படியிட்டு" மன்றாடினார் (லூக். 22:41) எனவும் பதிவு செய்துள்ளனர். இதற்கு மத்தேயும், மாற்கும் "epesen"என்னும் கிரேக்க வார்த்தையைத் "தரையில் விழுதல்" என்பதைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர். இதன் வேர்ச்சொல் "pipto"என்பதாகும். இதன் பொருள்,

i. to descend from a higher place to a lower.

ii. to descend from an erect to a prostrate position

அதாவது உயர்நிலையிலிருந்து தாழ் நிலைக்கு இறங்கி வருதலைக் குறிக்கின்றது. முழங்காற்படியிடுதல் என்பது தாழ்மையையும், ஒப்படைப்பையும் குறிக்கின்றது. தரையில் ஆண்டவர் தாழ விழுந்தார் என்பது தமது தெய்வீக மேன்மைகளைத் துறந்து தாழ்மையை ஏற்றார் என்பதையும் முழங்காற்படியிடுதல் அவருடைய அர்ப்பணத்தையும் வெளிப்படுத்துகிறது.

ஆகவே ஆண்டவர் சிறைபிடிக்கப்பட்டதும், சிலுவையில் அறையப் பெற்றதும் பகைவரின் சூழ்ச்சியாலும் உரோமை அரசின் படைவலிமையாலும் அல்ல, தெய்வீகத் திட்டத்தை பூர்த்தி செய்ய தாமாக முன்வந்து தம்மைக் கையளித்தார்.

ஆண்டவர் தம் உயிரைக் கையளிப்பது குறித்து தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (யோவா. 10:17,18). ஆண்டவர் தம் வாழ்வு முழுவதும் தந்தையின் பெருநோக்கை நிறைவேற்றி சாகும் தருவாயிலும் தம் பொறுப்பாண்மையை வெளிப்படுத்தி தம்மைக் குறித்து கடவுளுக்குக் கணக்குக் கொடுத்து உலகின் ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்வைக் குறித்து கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்னும் உண்மையை இந்த ஏழாம் திருமொழி வாயிலாக உரக்கக் கூறுகின்றார்.

இறைத்தொண்டர் A. தாமஸ் கெம்பிஸ் என்பவர் "கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருத்தல்" (Imitation of christ) என்ற தமது நூலில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ்க்கை முழுவதும் பின்பற்ற வேண்டிய இரு கட்டளைகளைத் தருகின்றார்.

1. இன்றே வாழ்வின் இறுதிநாள் என எண்ணி இயன்றளவு நன்மை செய்ய வேண்டும்.

2. பூமியில் வாழும்போதே விண்ணகத்தை அடைந்து வல்ல கடவுளின் முன் வாழ்வதாக எண்ணிக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தியானித்துக் கொண்டிருக்கும் நாம் துக்கமான முகங்களோடு தொழுகையை முடித்துக் கொள்ளாமல் வாழ்வுக்குத் திருத்தம் ஏற்படுத்தும் திடமான முடிவுகளை எடுக்க வேண்டும். கடவுளே நம் வாழ்வின் நாயகர், ஆகவே நம் வாழ்வைக் குறித்து கடவுளுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டும் எனும் சிந்தையோடு வாழ நம்மை ஒப்படைப்போம்.

திரு. C. ***ஜீவ ஜெயகிங்சிலி***

# புதிய மாத தொடக்கத் தொழுகை அருளுரைகள்

01-02-2017

**புதிய மாத நன்றித் தொழுகை**

## இரகபோத்து : எல்லையை விரிவாக்கும் கடவுள்

தொநூ. 26 : 33

**"ஆண்டவர் நம் எல்லையை விரிவுபடுத்தியுள்ளார். நாம் வளர்ச்சியுறுவோம்."**
**தொநூ. 26 : 22**

180 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சில் சோபியா என்றொரு பெண் இருந்தாள். அவளுக்கு கணிதம் கற்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகம் இருந்தது. ஆனால் அக்காலத்தில் பெண்கள் கல்லூரிக்குச் சென்று கல்வி கற்க தடை இருந்தது கணிதத்தின் மீது தீராத ஆர்வம் கொண்ட சோபியா. தம் சகோதரர்கள் கணிதம் கற்பதை மறைந்திருந்து பார்த்து தானும் கணிதத்தை கற்றுக் கொண்டாள். பின்னர் சோபியா பல்கலைகழகத்தில் இணைந்து படிக்க விரும்பி பிரான்ஸ் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்தாள். பெண்கள் கல்வி கற்க இருந்த தடையைக் காரணம் காட்டி சோபியாவின் விண்ணப்ப மனுவை நிராகரித்தது பல்கலைகழகம். தடையைப் பார்த்து மனம் தளராமல் ஆண்களைப் போன்று தன் தோற்றத்தை மாற்றிய சோபியா ஆண்பெயரில் பல்கலைகழகத்தில் சேர்ந்து வீட்டில் இருந்த படியே கணிதம் கற்று முதலிடத்தில் தேர்ச்சியடைந்தாள். பதக்கம் பெற பல்கலைக் கழகத்திலிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. அந்த விழாவில் சோபியா உண்மையைச் சொன்னாள். அவளது பட்டத்தையும், பதக்கத்தையும் பல்கலைகழகம் திரும்ப பெற்றுக் கொண்டது. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகி நோய்வாய்ப்பட்டு மரித்துப் போனாள் சோபியா........ காலம் மாறியது. 100 ஆண்டுகளுக்கு பிறகு எந்த பல்கலைகழகத்தில் சோபியாவுக்குப் படிக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதோ அதே பல்கலைகழகத்தின் நுழைவாயிலில் சோபியாவுக்குச் சிலை வைக்கப்பட்டது. அதே சோபியாவின் பெயரில் கணித மேதைகளுக்கு பிரான்சு அரசு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. ஆக, தடை என்பது நிரந்தரமல்ல. அது மாறக்கூடியது. அத்தடைகளை மாற்ற ஆண்டவர் கிருபைதருகிறார் என்பதனை ஈசாக்கின் வாழ்வின் வழியாகப் புரிந்து கொள்ளலாம்.

ஈசாக்கு கேராருக்கு வந்து குடியேற நினைத்தார் ஆனால் தடைக்கு மேல் தடை. முதல் துரவை வெட்டுகிறார் பெலிஸ்தியர் எதிர்க்கிறார்கள். இரண்டாவது துரவை வெட்டுகிறார் மேய்ப்பர்கள் தடை செய்கிறார்கள். பிரான்சில் சொந்தமண்ணில் சோபியா உயர்த்தப்பட்டது போல ஈசாக்குக்கும் எங்கு தடை செய்யப்பட்டாரோ, அதே மண்ணில் அவர் எல்லையை விரிவுபடுத்தி அவரை ஆசீர்வதிக்கிறார் ஆண்டவர்.

ஆண்டவருடைய அருள் இருக்கும் போது நாம் எந்த இடத்தில் தலைகுனிந்தோமோ, அந்த இடத்தில் நம்மை உயர்த்துவார். எந்த இடத்தில் தடை செய்யப்பட்டாமோ அதே இடத்தில் கனப்படுத்தப்படுவோம். யோசேப்பை எந்தச் சகோதரர்கள் அவமானப்படுத்தினார்களோ அதே சகோதரர்கள் முன் ஆண்டவர் உயர்த்திக் காட்டினார். அதைப் போன்றுதான். ஈசாக்கும் அவர் விரட்டப்பட்ட கொரார் பூமியிலே அவரது எல்லையை விரிவுபடுத்தி அவரை ஆசீர்வதிக்கிறார். எத்தனை சிறப்பான ஆண்டவர் அவர்! ஆம் ஈசாக்கை ஆசீர்வதித்த ஆண்டவர் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

**ஈசாக்கு ஆசீர்வாதங்களைப் பெற என்ன செய்தார் :**

***1. தாக்கத்தை தவிர்த்தார் :*** தொ.நூ. 26:22

....அதை குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை.

கேரார் பூமியில் மொத்தம் 4 துரவுகளை வெட்டினார் (26:15,19,21,22) முதல் மூன்று துரவுகளை வெட்டியபோது ஒவ்வொரு துரவுக்கும் ஒவ்வொரு குழு சொந்தம் கொண்டாடியது. கடினப்பட்டு வெட்டியது ஈசாக்கு. ஆனால், மற்றவர் அதை உரிமை பாராட்டிய போது. வார்த்தையாலோ மனதாலோ அவர்களிடம் தர்க்கம் பண்ணாமல் விட்டுக் கொடுத்து. விலகிச் செல்கிறார். தர்க்கம் பண்ணாமல் விலகி சென்றபடியால் ஈசாக்கின் எல்லையை விரிவுபடுத்தி ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். சண்டைகள் ஆசீர்வாதத்தைக் கொண்டு வராது (கலாத். 5:19,20,21) எனவே சண்டை ஆரம்பிக்கும் முன் அதனை விட்டுவிடு (நீதி. 17:14). அதைத் தான் ஈசாக்கு செய்தார். தர்க்கம் புரியாமல் விலகிச் செல்கிறார். தர்க்கம் செய்ய வாய்ப்பு இருந்தும் தவிர்த்துச் சென்ற மொர்தகாய் உயர்த்தப்பட்டார். ஆக, சண்டையைத் தவிர்ப்பதும் நீதிமன்றம் ஏறாமல் இருப்பதும் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள். முன்னேற வேண்டுமானால் யாரிடமும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது.

***2. உறவை வளர்த்தார் :*** (தொ.நூல் 26:29,30)

ஈசாக்கு யாருக்கு விருந்து கொடுத்தார்? யார் அவரை விரட்டினார்களோ அவர்கள் தம் அண்டை வந்தபோது அவர்களைப் புறக்கணியாமல் ஏற்றுக் கொண்டு விருந்தும் கொடுத்தார். இந்த நல்ல பண்பு தான் அவருடைய ஆசீர்வாதத்திற்கு இரண்டாவது காரணமாகும். தன்னைத் தடுத்தவர்களை, தன்னை விரட்டினவர்களை. மனதில் வைத்து அவர்களைப் பழிவாங்க நினைக்காமல், உணவு கொடுத்து உபசரிப்பது மிகவும் சிறப்பான பண்பு அல்லவா! பகைமையை அகற்று (சீராக். 28:6) என்பது சீராக்கின் போதனை. உங்கள் பகைவரையும் நேசியுங்கள் என்பது (லூக். 6:27,29) இயேசுவின் போதனை. இவைகளை ஈசாக்கின் வாழ்வில் புரிந்து கொள்ளலாம். ஒரு நாள் சாவியைப் பார்த்து சுத்தியல் கூறியது.

உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். ஆனால் சீக்கிரம் திறந்து விடுகிறாயே, அதெப்படி? அதற்கு சாவி சொன்னது, நீ என்னை விட பல சாலிதான். அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால் நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன் என்றதாம். இங்கும் ஈசாக்கு அடுத்தவர் தலையில் அடிக்காமல் எதிரியின் இதயத்தை தொடுகிறார். எனவே ஈசாக்கின் தடை ஆண்டவரால் விலக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகிறார்.

நம் வாழ்வின் தடைகளை, தோல்விகளை நினைத்து நாம் ஏன் கலங்க வேண்டும்? தடைகளைத் தாண்டும் பெலனை இறைவன் நமக்கு தந்திருக்கிறார். ஓடும் நீரோடையில் தண்ணீரைப் பாருங்கள். அழகாக ஓடும் தண்ணீர் மண்மேட்டைக் கண்டால் என்ன செய்கிறது? தயங்குகிறதா? இல்லை எது தன்னைத் தடுத்ததோ அதை சுற்றி வளைக்கிறது. அந்த மேட்டை கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கடிக்க முயற்சிக்கிறது. நிறைவில் மேட்டை மூழ்கடித்து தம் வெற்றிப் பயணத்தைத் தொடர்கிறது. தடைகள் என்பது நிரந்தரம் அல்ல. அது மாறக்கூடியது. சோபியா அதே மண்ணில் தடையைத் தாண்டி உயர்த்தப்பட்டது போல. ஈசாக்கு தடைசெய்யப்பட்ட கேரார் பூமியில் ஆண்டவரால் உயர்த்தப்பட்டார். நாம் எந்த இடத்தில் தடைசெய்யப்பட்டோமோ அதே இடத்தில் உயர்த்தப்படுவோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

**அருள்திரு. P. இராஜா ஸ்டாலின்**

01-03-2017 **புதிய மாத நன்றித் தொழுகை**

## பெராக்கா : கண்ணீரைக் களிப்பாக்கும் கடவுள்

தி. பா. 84 : 1 - 7

**“வறண்ட பாக்கா பள்ளதாக்கை அவர்கள் கடந்து செல்கையில் அது நீரூற்றுகள் உள்ள இடமாக மாறுகின்றது; முதல் பருவ மழை அதனை நீர்நிலைகள் நிறைந்த இடமாக்கும்.”** தி.பா. 84:6

இப்பாடல் ஒரு திருப்பயணப் பாடல் என அறிந்து கொள்ள முடிகின்றது. உடன்படிக்கைத் திருவிழா அன்று எருசேலம் திருக்கோயில் முற்றத்தில் இப்பாடல் பாடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

திருப்பணி ஒருவர் அல்லது ஒரு குழு தங்கள் பயணத்திலே எதை எதிர் நோக்கிப் பயணித்தார்களே அதைக் கண்டு கொண்ட மகிழ்ச்சியோடு பாடப்பட்ட பாடல் தான் இத்திருப்பாடல். அதாவது ஆதவனைக் கண்ட தாமரையைப் போல அவர்கள் உள்ளம் மகிழ்ந்து பாடும் பாடல்.

வாழ்க்கை ஒரு பயணம் இந்தப் பயணத்தில் வறண்ட அனுபவங்கள், கண்ணீர் பள்ளதாக்குகள் உண்டு, இருந்தாலும் அவைகளை நீரூற்றாகவும் செழிப்பானதாகவும் மாற்றும் படைகளின் ஆண்டவரின் ஆற்றல் எவ்வளவு அருமையானது என்ற செய்தி இப்பாடலின் மையச் செய்தி.

இரண்டு உண்மைகளை இந்தத் திருப்பாடல் சார்ந்து புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

### *1. பாக்காவின் பள்ளதாக்கு :*

அழுகையின் பள்ளதாக்கு என்று படிக்கிறோம். அழுகையின் பள்ளதாக்கை உருவ நடந்து என்கிறார் பாடல் ஆசிரியர்.

நாம் பயணிக்கும் வழித்தடங்கள் கூட மேடு, பள்ளம் நிறைந்தது. ஒரு மேடு இருந்தால் ஒரு பள்ளம் இருக்கும். பள்ளத்தில் படு குழியில் பயணம் செய்ய மாட்டேன் என்றால் நாம்செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல முடியாது. அது போல வாழ்க்கை என்னும் பயணத்தில் மேன்மைகள் மட்டுமே வர வேண்டும் பள்ளத்தாக்கின் அனுபவம் வேண்டாம் என்று தள்ளி விட முடியாது. பாக்காவின் வறண்ட அனுபவத்தையும் உருவ நடந்து செல்லும் ஆற்றலைக் கடவுள் தருவார்.

தி.வெ. 4:1 யோவானுக்குத் தரிசனமாகத் தரப்படும் வார்த்தை... இங்கே ஏறிவா...என்பது துன்பத்தின் உச்ச கட்டத்தில் சிக்கித்தவித்த யோவானுக்கும் முதல்நூற்றாண்டு கிறிஸ்துவின் அடியார்களுக்கும் கொடுக்கப்படும் அறைகூவல். பாடுகளுக்குத் தப்பிச் செல்லும் பாதை அல்ல;

பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த வாசல் பாடுகளின் ஊடே நடந்து ஏறிச் செல்லும் வாசல். ஆம்! அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து பாக்காவின் பள்ளத்தைக் கடந்து செல்லும் அனுபவம்.

அன்பர்களே! நம் பற்றுறுதிப் பயணத்திலும் பாக்காவின் அனுபவங்கள். எப்படிக் கடப்பேன் எப்படி உருவ நடப்பேன் என்ற அங்கலாய்ப்பின் அனுபவம். ஆனால் திறந்த வாசலாய் ஆண்டவர் இயேசு கிறிஸ்து (வெளி. 4:1) வாழ்வு வழங்க காத்து நிற்கின்றார், ஆம்! பள்ளத்தாக்கின் அனுபவம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அதே நேரம் பள்ளத்தாக்கின் அனுபவம் நிரந்தரம் அல்ல, அது தற்காலிகம்.

**2. பெராக்காவின் நீருற்று :** திபா. 84:6

அழுகையின் பள்ளதாக்கை உருவ நடந்து அதை நீருற்றாக்கிக் கொள்கிறார்கள் என்கிறார் பாடல் ஆசிரியர்

நீருற்றுக்கள் உள்ள இடம் இறைவனின் ஆவியைச் சுட்டும் வெளிப்பாடு (ஏசா 41 : 17 - 18, திபா 107 : 33) எபிரேய குலத்தில் பெராக்கோத் என்றால் குளங்கள் என்றும் பெராக்கோத் என்றால் ஆசி என்றும் பொருள்படும், நீருற்றுகள் இறைவனின் ஆசிகளை வெளிப்படுத்துகின்றன, இறைவன் அருளும் வாழ்வை நமக்கு அடையாளப்படுத்துகின்றன.

யூதர்களின் மன்னர் யோசபாத்துக்கு எதிராகப் பல நாட்டு அரசர்கள் ஒன்று சேர்ந்து படையெடுத்த போது பெரும் படையை எதிர்ப்பதற்கு படை வலிமையும் மன வலிமையும் இல்லாத யோசபாத் மனித உதவியைத் தேடாமல் கடவுளைத் தேடி வருகின்றார். யூதா நாடெங்கும் உண்ணா நோன்பைக் கூறி அறிவிக்கிறார். நாட்டு மக்கள் மன்னனோடு இணைந்து இறைவனிடம் முறையிட்டார்கள். தொடர்ந்து நடந்தது என்ன? யோசபாத் வெற்றி பெற்றார். வெற்றியைக் கொண்டாட ஓர் இடத்தில் மக்கள் எல்லாரும் கூடி கடவுளுக்கு நன்றி சொல்லித் துதித்தார்கள். அந்த இடத்திற்கு யோசபாத் பெராக்கா என்று பெயர் வைத்தார், அதன் பொருள் நன்றிப் பள்ளதாக்கு ஆகும். ஆம்! பெராக்கா, கடவுள் நமக்கு நன்மை செய்தார். அழுகையை அகற்றினார். அக்களிப்பைத் தந்தார் என்பதன் அடையாளம்.

அன்பர்களே ! நாம் கடந்து வந்த நாட்கள் பாக்காவின் அனுபவமாகிய கண்ணீரின் பள்ளத்தாக்கின் அனுபவங்களாக இருந்தாலும் நாம் எதிர் கொள்ளப்போகும் புதிய மாதம் நமக்கு பெராக்காவாக, நீருற்றின் அனுபவமாக, மகிழ்வின் அனுபவமாக விளங்க ஆண்டவர் நமக்கு அருள் செய்வார். ஆம், புதிய மாதம் வறண்ட நிலையிலிருந்து வாழ்வாக இருக்கட்டும். அழுகையிலிருந்து அக்களிப்பாக இருக்கட்டும். பாக்கா விலிருந்து பெராக்காவாக இருக்கட்டும். ஆமென்!

**அருள்திரு. S.M. டேனியல் தேவதாசன்**

## பெத்தேல் : உடனிருப்பை உணர்த்தும் உன்னதர்

தொ.நூ. 35:1-7

**"நீ எழுந்து பெத்தேலுக்குப் போய்....அவ்விடத்தில் ஒரு ப-பீடத்தை எழுப்பு"**
**தொ.நூ. 35:1.**

நம்பிக்கையுடன் புதிய மாதத்தில் பயணிக்கும் நாம் அனைவரும் கடவுளுக்கு மாட்சியைப் படைத்து இன்றைய சிந்தனைக்கு ஒருமுகப்படுவோம். இயேசுவை உளமாரப் போற்றுவோம். இன்றைய தியானப் பகுதியில் யாக்கோபு பெற்றுக் கொண்ட கட்டளையைக் குறித்தே குறிப்பிடப்பட்டுள்ளது. தந்தையை ஏமாற்றி , சகோதரனாகிய ஏசாவை ஏமாற்றி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட யாக்கோபு, பெயர்செபாவை விட்டு புறப்பட்டு ஆரானுக்குப் பயணித்தார். (தொநூ. 28:10) இந்தப் பயணத்தின் போது கடவுள் யாக்கோபைச் சந்திக்கிறார். இந்நிலையில் தான் யாக்கோபு தன் வருங்கால வாழ்வைக் குறித்த இறைத்திட்டத்தை அறிந்து கொள்கிறார். யாக்கோபு இறை அச்சமுள்ள குடும்பத்தில் வளர்ந்து வந்த போதிலும் கடவுளோடுள்ள தனிப்பட்ட நெருக்கமான உறவு பெற்ற இடம் பெத்தேல். யாக்கோபின் வாழ்க்கைப் பயணத்திலே பெத்தேல் சிறப்பான இடம் பெற்றது. எனவே தான் யாக்கோபு பெத்தேலுக்குப் போகவும் அங்கே பலிபீடம் கட்டவும் அழைக்கப்பட்டார்.

பெத்தேலுக்கும் யாக்கோபுக்கும் இடையேயான மூன்று உறவு நிலைகளை இப்பகுதியிலிருந்து அறிந்து இந்த உறவு நிலையின் வழி உன்னதராம் கடவுளின் உடனிருப்பை யாக்கோபு எவ்வாறு உணர்ந்து கொண்டார் என்பதையும் கற்றுக் கொள்ள தூய ஆவியார் நமக்குத் துணை செய்வாராக.

### *1.பெத்தேல் : இறை தரிசனம் பெற்ற இடம் :* தொ. நூல் 35:1

......உனக்கு தோன்றிய இறைவனுக்கு.......தரிசனமற்றவனாய், குறிக்கோள் அற்றவனாய் வருங்காலத்தை குறித்த குழப்பத்தோடு பயணப்பட்டபோது சொப்பனத்தின் வழி உன்னதரின் உடனிருப்பை அறிந்து கொண்டார் யாக்கோபு. கடவுளும் யாக்கோபும் சந்தித்த இடமே பெத்தேல். நம்பிக்கையற்ற நிலையில் சோறப்புற்று படுத்திருந்தவர், தெளிவாக (தொ. நூல் 28:12-12) தன் வாழ்க்கையையும் வருங்காலத்தையும் குறித்து வெளிப்படுத்தின கடவுளின் கிருபையின் குரலை கேட்டார். பெத்தேலில் தனது வாழ்வைக் குறித்த கரிசனையோடு தன்னோடு பேசின கடவுளடைய குரலைக் கேட்டதினால் இறை பிரசன்னம் அவ்விடத்தில் உள்ளதை கண்டு கொண்டார் (தொ. நூல் 28). இது என்

ஆண்டவருடைய இரக்கத்தையும் என் வாழ்வை குறித்த தரிசனத்தையும் பெற்ற இடம் என்பதை அறிந்து அறிக்கை செய்தார்.

### 2. பெத்தேல் - இறை வேண்டல் கேட்கப்பட்ட இடம் :

(தொட. நூல் 35:3)

எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து....அமைதியான வாழ்வில் அலைகள் மோதி அலசடிப்படுகிற போது தான் நம்மில் பலர் தேவனிடத்தில் முறையிடுகிறோம். யாக்கோபும் தனது வாழ்வின் ஆபத்து நிறைந்த வேளையில் தான் பொருத்தனையோடு ஜெபிக்கின்றார். (தொ.நூல் 28: 20:22) கடவுளோடு யாக்கோபு செய்துகொண்ட மூன்று பொருத்தனைகளை காண்கிறோம்.

(1) ஆண்டவரே எனக்கு கடவுளாயிருப்பார் :
(தொ.நூல். 28: 21) Jehovah Would be my God

(2) நான் நினைவுத் தூணாக நாட்டிய இந்தக் கல்லே கடவுளின் இல்லமாகும்.
This stone, which I have set up for a Pillar, Shall be God's House.

(3) நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன்.
In all that you give me I will give a full tenth to you.

ஆபத்து நேரிட்டபோது ஏறெடுக்கப்பட்ட பொருத்தனையின் விண்ணப்பம் ஆண்டுகள் கடந்தபோது மறக்கப்பட்டு போனது. எனவே மறக்கப்பட்ட பொருத்தனையை நினைவுபடுத்தி அதனை நிறைவேற்றவே மீண்டும் பெத்தேலுக்கு செல்ல யாக்கோபு கட்டளை பெற்றார்.

### 3. பெத்தேல் - இறை பாதுகாப்பு பெற்ற இடம் :

(தொ.நூல் 35:3 (b)

......நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த தேவனுக்கு...... கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கிறேன் கண்ணீரோடு கர்த்தாவே நன்றி சொல்கிறேன். என்ற நன்றிப் பாடலினை போன்று யாக்கோபு கடவுளுடைய இல்லமாகிய பெத்தேலில் ஆண்டவரின் துணையினைப் பெற்றதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார். பெற்றோரோடோ உடன் சகோதரனனோடோ கடந்து சென்ற போது தான் பெத்தேலிலே உன்னதரின் உடனிருப்பை உணர்ந்தது மட்டுமல்லாது நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக்கைவிட மாட்டேன் (தொ.நூல் 28:15 (6)) என்ற நம்பிக்கையின் வார்த்தையையும் பெற்றார். துணை வேண்டும் தகப்பனே உலகிலே என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே, இது ஆண்டவரின் பணிவிடைக்காரரான எமில் ஜெபசிங் அவர்களின் பாடல் வரிகள்.

பெத்தேலில் யாக்கோபு தரிசனம் பெற்று தனது வேண்டுதலுக்கு பதில் பெற்றது மட்டுமல்லமல், அவரது பாதுகாப்பையும் பெற்ற தன்னோடு உடனிருக்கும் உன்னதரை உணர்ந்தார்; அறிந்தும் கொண்டார். நீ எழுந்து பெத்தேலுக்குப் போ என்ற கட்டளையை யாக்கோபு பெற்றது போன்று புதிய மாதத்திற்குள் பயணிக்கும் நாமும் மீண்டும் கடவுளுடைய இல்லத்தில் இறைபிரசன்னத்திற்குள்ளாய் அழைக்கப்படுகின்றோம். நாமும் வாழ்க்கை சுமையினை அவரது திருவடியில் இறக்கி வைத்து அவருடன் பயணிப்போம். இன்பமான அனுபவங்களால் இறை மேன்மையை அனுபவித்து மகிழ்வோம். இறை தரிசனமும், இறை வேண்டல் கேட்கப்படும் என்ற நம்பிக்கையும் இறை பாதுகாப்புக்கு நம்மை ஒருமுகப்படுத்துவதாக.

**அருள்திரு. P. சாம் பிளஸ்சிங்**

01-05-2017 **புதிய மாத நன்றித் தொழுகை**

## கில்கால்: நிந்தையை நீக்கும் கடவுள்

யோசுவா. 5 : 9 - 12

**"ஆண்டவர் யோசுவாவிடம் இன்று எகிப்தியரின் பழிச் சொல்லை உங்களிடமிருந்து நீக்கிவிட்டேன் என்றார். ஆகவே அந்த இடம் இந்நாள் வரை கில்கால் என்று அழைக்கப்படுகின்றது." யோசுவா 5:9**

இறையியல் அறிஞர் தாமஸ் அக்குவினாஸின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி. அவருக்கு 16 வயது நடக்கும் போது குருவானவராகப் படிக்கும் பொருட்டு குரு மடத்தில் சேர முயற்சி செய்தார். பெற்றோர் இதை விரும்பாமல் தடுக்க முயன்றனர். அவரோ அதற்கு உடன்படாமல் தனது ஆர்வத்தில் உறுதியாக இருந்தார். அவர் குரு மடம் போகாமலிருக்க என்ன செய்வது? என்று அவருடைய பெற்றோர் யோசித்தனர். ஒரு முறை அவரை ஒரு குகைக்குள் அடைத்து அவரது மனதை மயக்கி அவர் நோக்கத்தைத் திசை திருப்புவதற்காக ஒரு பெண்ணை உள்ளே அனுப்பினர். தாமஸ் அக்குவினாஸோ கொஞ்சமும் சோதனைக்கு இடம் கொடுக்காமல் அந்தக் குகையை வெளிச்சமூட்டுவதற்காக ஓர் ஓரமாக எரிந்து கொண்டிருந்த நெருப்பிலிருந்து ஒரு விறகுக் கட்டையை எடுத்து அப்பெண்ணை வெளியே துரத்தினாராம்.

பிரச்சனைகள் மனிதராகிய நம்மை ஆட்டிப்படைக்கும் கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடலாகிய உலகில் வாழ்வாகிய கட்டு மரத்தில் பயணம் செய்யும் போது பிரச்சினையாகிய புயல்கள் நம்மை நிலை தடுமாறச் செய்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம், கடன் சுமை, தொழில் பிரச்சினை, வறுமை போன்ற பொருளாதாரம் தொடர்பான பிரச்சினை, சந்தேகம், புரிந்து கொள்ளாமை, பொறாமை, பகைமை உணர்வு, போட்டி உணர்வு, பழி வாங்குதல், தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கையின்மை, பயம், கோபம் போன்ற துன்பங்கள் மனுக்குலத்தை சந்திக்கின்ற போதெல்லாம் இத்துன்பங்களிலிருந்து எப்படி விடுபடுவது என வழி தெரியாமல், விழி பிதுங்கி வீழ்ந்து கிடக்கும் மானிடரை ஆண்டவர் கில்காலுக்கு வாருங்கள் என அழைக்கிறார், ஏனென்றால் கில்கால் நிந்தைகளை நீக்கும் இடம் ஆகும்.

'கில்கால்' என்பதற்கு 'கற்களின் வட்டம்' என்பது பொருள். யோர்தானுக்கும் எரிகோவுக்கும் இடையே கில்கால் அமைந்துள்ளது. இஸ்ரயேலர் ஆயியையும் எரிகோவையும் தாக்குமுன் இங்கே கூடாரம் அடித்துத் தங்கினர். யோர்தானிலிருந்து கொண்டு வந்த பன்னிரெண்டு கற்களை யோசுவா இங்கு நாட்டினார் (யோசுவா 4:19 - 20) கடவுள் நிந்தையைப் புரட்டிப் போட்டதால் இவ்விடத்திற்கு 'கில்கால்' என பெயர் வந்தது. கில்காலின் அனுபவத்தை பெற அழைக்கும் ஆண்டவர் நம்மில் எதிர்பார்ப்பவை எவை?

***1) அழுக்கற்ற வாழ்வு :*** யோசுவா 5:2-9

கில்காலுக்குள் வந்த இஸ்ரயேலர் அனைவருக்கும் யோசுவா விருத்தசேதனம் செய்தார் எனத் திருமறையில் எழுதப்பட்டுள்ளது. விருத்தசேதனம் என்பது பழங்கால மக்கள் கடைப்பிடித்து வந்த சுத்திகரிப்பின் சடங்கு ஆகும். தொடக்க நாட்களில் இச்சடங்கு வாலிபப் பருவம் அடையும் போது செய்யப்பட்டது. பிற்காலத்தில் பிறந்த எட்டாம் நாளில் செய்யப்பட்டது (விப. 4:24 - 26). இதை ஒரு சமயச் சடங்காக மக்கள் கருதினர். பாஸ்காவை புசிக்கிறவன் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டியது அவசியமாய் இருந்தது (யாத் 12:43-48). தொ.நூ. 17 : 9 - 14 இல் இது உடன்படிக்கைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது, மொத்தத்தில் விருத்தசேதனம் தூய வாழ்வை வெளிப்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை, அழுக்கில்லாத தூய வாழ்வுடன் கில்காலுக்கு வரவும் அதன் வழி நிந்தைகள் நீங்கப் பெற்று வாழவும் ஆண்டவர் இப்புதிய மாதத்தில் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

***2) அர்ப்பண வாழ்வு :*** யோசுவா 5:4

இஸ்ரயேலர் எகிப்தில் இருக்கும் போது விருத்தசேதனம் செய்து கொண்டனர். ஆனால் அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வரும் வழியில் செய்து கொள்ள வில்லை. திருநாடாகிய கானானுக்குள் செல்வதற்கு முன் தங்களைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும் பொருட்டாக கில்காலில் விருத்தசேதனம் செய்தனர். எனவே விருத்த சேதனம் என்பது கடவுளுக்குத் தங்களை அர்ப்பணம் செய்வதற்கு அடையாளமாகவும் செய்யப்பட்ட ஒன்று என்பதும் உண்மையே. அர்ப்பண வாழ்வு என்பது கடவுளைத் தவிர தன்னுடைய வாழ்வில் மேலானது எதுவுமேயில்லை. அவரை விட அவசியமானது எதுவுமில்லை. அவருக்கு நம்மை அர்ப்பணம் செய்தால் அவர் நமக்குத் தேவையானவை அனைத்தையும் செய்வார் என்பதாகும்.

தன்னுடைய சுய விருப்பம், தன்மயச் சிந்தனை முதலியவற்றை முழுமையாக ஒதுக்கி வைத்து இறைவனது கையில் தன்னை அர்பபணம் செய்தவர் ஆபிரகாம். இந்த அர்ப்பணமே அவரைத் தொலை நாட்டிற்குப் போகச் செய்தது. வயதான காலத்திலும் வாரிசு கிட்டும் என்ற நம்பிக்கையைத் தந்தது. அவ்வாறே இறை மகன் இயேசுவின் பாதத்தில் முழுமையாக அர்ப்பணம் செய்த மற்றொரு நபர் மத்தேயு. தனது பணம் கொழிக்கும் பதவியை விட்டு விட்டு இயேசுவின் அழைப்பை ஏற்று அவரைப் பற்றிக் கொண்ட மத்தேயுவின் அர்ப்பண வாழ்வு அவரைச் சீடராகவும் இயேசுவின் இரத்த சாட்சியாகவும் மாற்றியது. அர்ப்பண வாழ்வுடன் கில்காலுக்கு வரவும் அதன் வழி நிந்தைகள் நீங்கப் பெற்று வாழவும் ஆண்டவர் இப்புதிய மாதத்தில் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

கறைகளைக் கழுவும் இறைவன் பாதம் நம்மை அழுக்கில்லா வாழ்வுடன் அர்ப்பணம் செய்வோம். நிந்தைகள் அனைத்தும் நீங்கிப் போகும் நிறைவான வாழ்வைப் பெறுவோம்.

**அருள்திரு. J. நேச பிரின்ஸ்**

01-06-2017 **புதிய மாத நன்றித் தொழுகை**

## ஏன்கோரே : புத்துயிர் அளிக்கும் கடவுள்

நீ.த. 15:9-20

**“...திரும்ப அவர் புத்துயிர் பெற்றார். அவ்விடத்தை ‘ஏன்கோரே’ என அழைத்தார்.” நீ.த. 15:19.**

புதிய மாதத்தின் தொடக்கம் பல கேள்விகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சென்ற மாதத்தில் நாம் சந்தித்த தோல்விகள், ஆபத்துக்கள், வியாதிகள் போன்றவை நம்மை நெருக்கினாலும் புதிய மாதத்தில் கடவுளின் ஆற்றல் இவற்றை மேற்கொள்வதற்காக புத்துயிரை நமக்கு தரும் என்கிற நம்பிக்கையை இன்றைய திருமறைப்பகுதி நமக்கு கற்றுத்தருகிறது.

“வேதனை இல்லாமல் வெற்றி இல்லை” என்று சொல்லுவார்கள். ஆம் வெற்றி பெற வேண்டுமென்றால் வேதனைகளை தாங்குகிற சகிப்புத் தன்மையும், கடவுளின் ஆற்றலும் நமக்கு மிகவும் அவசியமாகும்.

கடவுளால் முன்குறிக்கப்பட்டு தமது மக்களாகிய இஸ்ரயேலரை பெலிஸ்தியரின் கைகளிலிருந்து விடுவிக்க தெரிந்து கொள்ளப்பட்டவனே சிம்சோன் (நீ.த. 13:5).

கடவுளின் ஆவி அவனில் இருந்த படியினால் அவன் மகா ஆற்றல் பெற்றிருந்தான். அந்நாட்களிலே இஸ்ரயேலர் மக்களின் பெரிய ஆயத்தமாக, சத்துருவாக இருந்தவர்கள் பெலிஸ்தியர் ஆவர். வலுவான படைபலம், போர் செய்வதற்கான ஆற்றல், தலைமைத்துவம் போன்றவை பெலிஸ்தியர்களின் கூடுதல் பெலமாகும். ஆனால் இஸ்ரயேலர்களிடையிலோ இவை குறைவாக காணப்பட்டது. குறிப்பாக இம்மக்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான தலைவர்களும் இல்லை. எனவே எதிரிகளை எதிர்கொள்வது என்பது மிகவும் கடினமாகவே காணப்பட்டது. இச்சூழலில் தான் சிம்சோன் கடவுளால் தெரிவு செய்யப்பட்டு இஸ்ராயேல் மக்களின் தலைவராகவும், பாதுகாவலராகவும் 20 ஆண்டுகள் செயல்பட்டான். வலிமை பெற்றிருந்த சிம்சோனின் வாழ்விலும் ஆபத்துக்கள் நிறைந்திருந்தன என்றாலும் கடவுளின் ஆற்றல் அவனுக்கு புத்துயிரை தந்து அவனை தொடர்ந்து செயல்படத் தூண்டியது என்பதை தொடர்ந்து சிந்திப்போம்.

### *1. ஆபத்திலிருந்து தப்புவிக்கும் கடவுள் :* நி.த. 15:18,19

கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன், தனது அழைப்பை மறந்து, பெற்றோருடைய மறுப்பையும் தவிர்த்து பெலிஸ்திய பெண்ணை

தன் மனைவியாக்கி கொண்டான். (14:1-8). பெண் வீட்டுக்கு வந்த தன் தந்தைக்கு விருந்து கொடுத்தான். அந்த விருந்து நிகழ்வின் போது அங்கிருந்த 30 பேரிடம் ஒரு போட்டி ஏற்படுகிறது. அது ஒரு விடுகதையாகும். (4:12) இந்த போட்டி பிரச்சினையாகி பின்னர் ஒரு பகையாக மாறிவிடுகிறது. இதன் பலனாக சிம்சோன் முப்பது பேரையும் கொன்று அவர்களின் ஆடைகளை தன்னோடு போட்டியிட்டவர்களுக்கு கொடுத்துவிட்டு கோபத்தோடே தன்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டான்.

திருமணமான சில நாட்களிலேயே ஒரு பெரிய பகை உண்டாகி தன் மனைவியை அவளுடைய வீட்டிலே விட்டுவிட்டு தன் தகப்பன் வீட்டிற்கு சிம்சோன் சென்றுவிட்டான். வேற்று இனத்தவனுக்கு தன் மகளை கொடுத்தோமே, இனி அவன் திரும்பி வருவதில்லை என்று அவளை அவள் தகப்பன் வேறொருவனுக்கு மறுமணம் செய்து கொடுத்துவிட்டான். இதை அறிந்த சிம்சோன் தன் மனைவியின் நிலையை அறிந்து கோபமுண்டாகி முன்னூறு நரிகளைப் பிடித்து அவைகளின் வால்களில் தீமூட்டி பெலிஸ்தியரின் முற்றிய பயிர்களிடையே அனுப்பினான். அவை தானியங்களையும், முற்றிய பயிர்களையும், திராட்சை ஒலிவத் தோட்டங்களையும், வயல்களிலும், கதிர்கட்டுகளிலும் விட்டு அவற்றை அழித்து எரித்தன. 15:5-ல் "வெள்ளாண்மை" என்பது வயலில் நிற்கும் கதிரை குறிக்கிறது (Standing Grain). எனவே கோபமடைந்த பெலிஸ்தியர், சிம்சோனின் மனைவி மற்றும் மாமனாரை தீயிட்டு எரித்து கொன்றனர். இதை தாங்கி கொள்ள முடியாத சிம்சோன் அவர்களுக்கு எதிராக எழும்பியபோது, பெலிஸ்தியருக்கு பயந்த யூத மக்கள், அவனைக் கட்டி பெலிஸ்தியரிடத்தில் ஒப்படைத்தார்கள். அவனோ கழுதையின் பச்சைத் தாடை எலும்பை எடுத்து அதினாலே ஆயிரம் பெலிஸ்தியரை கொன்று போட்டான். மரித்தவர்கள் சிம்சோனுக்கு மட்டுமல்ல, இஸ்ரவேலருக்கும் எதிரிகளானார்கள். இந்நிலையில் சிம்சோன் தாகமடைந்து களைத்துப் போனான். பெலனற்றுப் போன சிம்சோன் கடவுளை நோக்கி முறையிடத் துவங்கினான். சிங்கத்தைக் கொன்றவன், முப்பது பேரைக் கொன்றவன், பெலிஸ்தியத்திலுள்ள விளை நிலங்களை அழித்தவன், ஆயிரம் பேரை தனிமனிதனாக நின்று கொன்றவன் ஆபத்திலே சிக்கிப்போனான். சிம்சோனின் சோர்வு நிச்சயமாகவே எதிரிகளை சந்தோஷப்படுத்தியிருக்கும். தங்கள் கூட்டத்தையே அழித்த சிம்சோனை பிடிப்பதற்கான வாய்ப்பு எதிரிகளுக்கு கிடைத்ததை உணர்ந்த சிம்சோன் இப்போது கடவுளிடம் உதவிக்காக முறையிடுகிறான். கடவுள் லேகியிலுள்ள பள்ளத்தை பிளக்கப்பண்ணினார் (15:19).

நீரூற்றை காண்பிக்கவில்லை, மாறாக பள்ளத்தை பிளக்கப்பண்ணினார். தண்ணீருக்காக அலையவில்லை. தண்ணீர் அவனைத்தேடி வந்தது. இதுதான் கடவுளின் ஆற்றல். தண்ணீரைக்

குடித்த போது அவன் பிழைத்தான் (He revived) எனவே சிம்சோன் அந்த இடத்திற்கு என்ககோரே என்று பெயரிட்டான். (ENHAKKORE - Spring of the one Calling) "கூப்பிடுகிறவனுடைய நீரூற்று" என்று பொருள் கொள்ளலாம். சிம்சோனின் ஆபத்திலிருந்து கடவுள் அவனை தப்புவித்து புத்துயிர் கொடுத்தார்.

***2) புதிய ஆற்றலை தரும் கடவுள் :*** நீ.த. 15:20

"பெலிஸ்தியரின் காலத்தில் அவர் இருபது ஆண்டுகள்" நீதித்தலைவராக விளங்கினார்.

மனைவியை இழந்த சோகம், மனைவியை பெலிஸ்தர் கொலை செய்த கோபம் போன்றவை சிம்சோனின் கோபத்திற்கு காரணங்கள். ஒருவேளை சிம்சோன் தனக்காக பெலிஸ்தரை கொன்றான் என நாம் சிந்தித்தாலும் இஸ்ரயேலரை பாதுகாக்க ஒரு ஆற்றல் நிறைந்த தலைவன் எழும்பிவிட்டான் என்கிற செய்தியை பெலிஸ்தருக்கு தருவதாகவே இந்நிகழ்வு கூறப்படுகிறது. கருவில் இருக்கும்போதே தெரிந்துகொள்ளப்பட்ட சிம்சோன், தாய், தகப்பனுடைய ஒழுக்கமான, பக்தியான வாழ்வை அறிந்திருந்தான். என்றாலும் பெற்றோருடைய வார்த்தையை அலட்சியப்படுத்தி பெலிஸ்தரோடு தனது உறவை ஏற்படுத்துவதாக நிகழ்வுகள் கூறப்பட்டிருந்தாலும் இவற்றின் முடிவுகள் அனைத்தும் பெலிஸ்தரின் அழிவையே காட்டுகின்றன. பெலிஸ்தர் தங்களுக்கு எதிராக படையெடுத்து வந்தவுடனே பயந்து போய் யூதா மக்கள் சிம்சோனை கட்டி கொண்டு சென்றார்கள். ஆனால் அவனோ கடவுளின் ஆவியின் ஆற்றலால் ஆயிரம் பெலிஸ்தரை கொன்றான். இந்நிகழ்வின் இறுதியில் தாகமடைந்து, பெலனிழந்து சோர்ந்து போய், காணப்படுகின்றான். இதுவரை கடவுளின் ஆற்றலால் எதிரிகளை வீழ்த்தியவன் இப்போது சோர்ந்துபோய், பயந்துபோய் ஆண்டவரை நோக்கி வேண்டுகிறான். தன்னுடைய கோபம், தன்னுடைய வலிமையை சார்ந்திருந்த சிம்சோன் இப்போது தளர்வற்ற நிலையில் கடவுளின் ஆற்றலுக்காக வேண்டுகிறான். சிம்சோனின் வேண்டுதல் சிறப்பானது. எப்படியெனில், தான் கடந்து வந்த பாதைகளையும், கடவுள் நடத்தி வந்த பாதைகளையும் எண்ணிப்பார்த்து, தன்னைத்தாழ்த்தி கடவுளிடம் வேண்டுகிறான். இங்கே பெலிஸ்தரை தன்னுடைய எதிரியாக கூறாமல் விருத்த சேதனமில்லாத மக்களிடத்தில் நான் சாக வேண்டுமா என்று கேட்கிறான். கடவுள் இவனுக்கு புதிய ஆற்றலை கொடுத்து இருபது வருடம், அவனை இஸ்ரயேலருக்கு நீதி வழங்கும் பேற்றைக் கொடுத்தார். (15:20).

இருபது வருடம் என்பது மிகப்பெரிய காலகட்டம். பெலிஸ்தரை கண்டு பயந்து, ஒதுங்கிப்போய் இருந்த இஸ்ரயேலர் இருபது வருடம் தைரியமாய் வாழவும், தலைநிமிர்ந்து நிற்கவும் சிம்சோனை கடவுள் பயன்படுத்தினார்.

மரண தருவாயில் சென்றவன் கடவுளால் புதிய ஆற்றலை பெற்றான். இது சிம்சோனுக்கு புதிய நம்பிக்கையையும் புதிய வேகத்தையும் தந்தது. மரணத்தருவாயிலும் கடவுளால் புதிய ஆற்றலை தரமுடியும் என்கிற விசுவாசத்தை தந்தது.

கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட நமக்கும் இந்நிகழ்வு ஒரு சவாலே! கடவுள் நம்மை காண்கிறார் நம்மோடிருக்கிறார் என்பதை வாழ்க்கையில் அனுபவிக்கிற நாமும் பல சூழ்நிலைகளில் ஆபத்துகளில் சிக்குவது உண்டு. 'ஏன்கேகோரே' என்கிற வார்த்தை நம்மோடு தொடர்புடையதாகும். எதிர்பாராத இழப்புகள் நம்மையும் சோர்வடையச் செய்கின்றன. தண்ணீரே இல்லாத பள்ளத்தாக்கைத் திறந்து, தண்ணீரை வரச்செய்து சிம்சோனின் தாகத்தை தீர்த்த ஆண்டவர் இப்புதிய மாதத்திலும் நம்முடைய ஆபத்துகளிலிருந்து தப்புவித்து நம்மை காப்பார். எல்லாமே முடிந்ததென்று சோர்ந்து போயிருக்கிற வேளையில், நீ வெகுதூரம் ஓட வேண்டும் என்று சிம்சோனை இருபது வருடம் இறைப்பணி செய்ய ஆற்றல்படுத்திய கடவுள் நமக்கும் புதிய ஆற்றலைத் தருவார். வாழ்க்கையின் தோல்விகளை மறந்து வெற்றியை தரும் கடவுளை பற்றிக்கொள்வோம்.

சவால்களை எதிர்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்துவோம். புத்துயிர் அளிக்கும் கடவுள் தாமே இப்புதிய மாதத்தை நமக்கு ஆசீர்வதித்து தருவாராக, ஆமென்.

**திரு. C. மோகன்**

01-07-2017 **புதிய மாத நன்றித் தொழுகை**

## மிஸ்பா : கண்காணிக்கும் கடவுள்

தொ.நூ. 31:43-54

**"... ஆண்டவர் நம்மைக் கண்காணிப்பாராக! என்று சொல்- அதற்கு மிஸ்பா என்று பெயரிட்டான்." தொ.நூ. 31:49.**

முற்பிதாக்களில் ஒருவரான ஈசாக்கின் பிள்ளைகள் ஏசா, யாக்கோபு என்பவர்கள். இளையமகனான யாக்கோபு தன் சகோதரராகிய ஏசாவுக்கு தந்தையால் அருளப்பட வேண்டிய ஆசியை ஏமாற்றி, அபகரித்து சகோதரனுக்குப் பயந்து தன்னுடைய வீட்டைவிட்டு வெளியேறி மாமனாகிய லாபானின் இல்லத்திற்கு வந்து தங்கி அவரது புதல்வியர் இருவரையும் திருமணம் செய்து கொள்கிறார். உழைப்பினால் அனேக உடைமைகளுக்கு உரியவராக மாறுகிறார். நாட்கள் செல்லச் செல்ல லாபானின் மனம் முன்பு போல இல்லை என்பதை கண்டு கொண்டார். இதனை தொ.நூ. 31:2-ல் காண்கிறோம்.

கடவுளின் கட்டளையின்படி தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பி தன் மனைவியர், பிள்ளைகள், மிருக ஜீவன்கள், உடமைகள் எல்லாவற்றோடும் இரகசியமாகச் சொந்த நாட்டிற்குத் திரும்புகிறார். இதனை அறிந்த லாபான் தனது உறவினர்களோடு சென்று கிலேயாத் என்னும் மலைப்பகுதியில் யாக்கோபைச் சந்திக்கிறார். இவர்கள் இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்த நிலையில் அவர்கள் இருவரும் ஓர் உடன்படிக்கை செய்துகொள்கிறார்கள். அந்த உடன்படிக்கை என்னவெனில், நாம் ஒருவரையொருவர் விட்டு பிரிந்தபின், நீ என் குமாரத்திகளைத் துன்புறுத்தினால் ஆண்டவர் எனக்கும் உனக்கும் நடு நின்று கண்காணிக்கக்கடவர், நம்முடனே ஒருவரும் இல்லை; பார் தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி என்று சொன்னபடியால், அது மிஸ்பா என்னும் பேர்பெற்றது. (தொ.நூ. 31:49, 50) இந்நிகழ்வு நமக்கு கற்றுத்தருகின்ற உண்மைகள் கடவுள் நமக்கு நினைப்பூட்டுகின்றவைகளாக உணர்ந்து ஏற்றுக்கொண்டோமெனில் இந்த புதியமாதத்திற்கு அது ஆசீர்வாதமாக அமையும்.

### I. *துன்புறுத்தாதே - கடவுள் கண்காணிக்கிறார் :*

(தொ.நூ. 31:49)

"நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என் குமாரத்திகளைத் துன்புறுத்தி" லாபான் யாக்கோபிடம், நாம் ஒருவரைவிட்டு ஒருவர் தூரமான பகுதியில் இருக்கும் நிலையில்

உன்னோடு இருக்கின்ற என்பிள்ளைகளுக்குத் துன்பங்களைக் கொடுத்து அவர்களைத் துயரப்படவைக்காதே. நீ ஒன்றை நினைவில் கொள், கடவுள் நடுநின்று கண்காணிக்கிறார் எனக் கூறுகின்றார். இன்று அதிகமான மனிதர்கள் கடவுள் முன்னிலையில் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி பிறருக்குத் துன்பங்கள் கொடுக்கிறவர்களாகவே இருக்கின்றார்கள். கணவன் மனைவியைத் துன்புறுத்துவது, மனைவி கணவனைத் துன்புறுத்துவது, பெற்றோர் பிள்ளைகளைத் துன்புறுத்துவது, பிள்ளைகள் பெற்றோரைத் துன்புறுத்துவது, மாமியார் மருமகளைத் துன்புறுத்துவது, மருமகள் மாமியாரைத் துன்புறுத்துவது, சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் துன்புறுத்துவது, மேலும் சமூகத்தில் உடன் வாழ்கிறவர்களைத் துன்புறுத்துவது. இதுபோன்ற செயல்களை ஊடகங்கள் வழியாக அதிகமாகப் பார்க்கிறோம். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் வாழ்ந்தபோது துன்பங்கள் கொடுக்கப்பட்டன. வி.ப. 3:7 இல் கடவுள் சொன்னது அவர்களது உபத்திரவத்தை பார்க்கிறேன். அவர்கள் வேதனைகளை அறிகிறேன். மேலும் சவுல், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும்போது “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே” (தி.ப. 9:5) என்கிறார். நாம் பிறருக்குக் கொடுக்கும் நேர்முக மற்றும் மறைமுகத் துன்பங்கள் அனைத்தையும் கடவுள் கண்காணிக்கிறார் என உணர்ந்து வாழ்வோம்.

## II. *நெறிதவறாதே - கடவுள் கண்காணிக்கிறார் :*

(தொ.நூ. 31:49)

லாபான் யாக்கோபுவினிடத்தில் சொல்கிறார், நீ வேறுபெண்களைத் திருமணம் செய்யக் கூடாது. அன்றைய காலத்தை அறியும்போது ஒருவர் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். அதாவது பலதாரமணம் இருந்த காலம். லாபான் தன் புதல்வியர் இருவரையும் திருமணம் செய்து கொடுத்துவிட்டுச் சொல்லுகிறார். இனி இதற்கு மேலும் வேறு திருமணம் வேண்டாம் என்கிறார். இன்று ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை இருந்தும் ஏமாற்றிப் பலரைத் திருமணம் செய்யும் மனிதர்கள் இருக்கிறார்கள். கடவுள் முன்னிலையில் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி மனிதர் துணிச்சலோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாம் கடவுளின் அருளால் வாழ்ந்து வருகிறோம். வாழ்க்கை நெறி பல உண்டு. இந்த நெறிமுறைகளை மீறி வாழ்கிறோம். யாரும் பார்க்கவில்லையென்று நெறிதவறி வாழக்கூடாது; ஏனெனில் கடவுள் நம்மைக் கண்காணிக்கிறார்.

யோசேப்பு, எகிப்திலே போத்திபார் வீட்டில் அடிமையாக இருக்கிறார். அவரது நெறியுள்ள வாழ்வினால் மேன்மை பெறுகிறார். போத்திபாரின் மனைவி யோசேப்பை அடைய விரும்புகிறாள். இத்தருணத்தில் யோசேப்பு, (தொ.நூ. 39:9) “நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, கடவுளுக்கு விரோதமாய்ப் பாவம்

செய்யலாமா?'' எனக் கேட்கிறார். யோசேப்பு நெறி தவறவில்லை. திருமறை தெளிவாக நமக்கு வாழ்க்கைக்குரிய நெறியைக் கற்றுத்தருகிறது. நாம் தனிமனித ஒழுக்கம், இல்லற ஒழுக்கம், சமூக ஒழுக்கம் இவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் நம்மை நாமே ஏமாற்றி, கணவன் மனைவியை ஏமாற்றி, மனைவி கணவனை ஏமாற்றி, சமூகத்தில் தீமையான குணங்களோடு வாழக்கூடாது. ஒழுக்கமுள்ள, அதாவது நெறியுள்ள வாழ்வு வாழ வேண்டும். கடவுள் நம்மைக் கண்காணிக்கிறார்.

### III. *சாட்சிகளே இல்லை - கடவுள் கண்காணிக்கிறார் :*

(தொ.நூ. 31:50)

''நம்முடனே ஒருவரும் இல்லை; பார் கடவுளே எனக்கும் உனக்கும் சாட்சி''.

லாபான் யாக்கோபிடம் நாம் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தாலும் நாம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு எவ்விதமான சாட்சியும் இல்லையென்று எண்ணி உடன்படிக்கையை விட்டு விடக்கூடாது. ஏனெனில் கடவுளே நமக்கு சாட்சி. இந்த உடன்படிக்கைக்கு மனித சாட்சி இல்லை, ஆனால் கடவுள் சாட்சி. இன்று நாம், பல நேரங்களில் பல தீர்மானங்கள் எடுத்துக் கொள்கிறோம். நாம் செய்து கொண்ட தீர்மானங்களுக்கு யாரும் சாட்சியாக இல்லையென்றாலும், கடவுள் சாட்சியாய் இருக்கிறார். நாம் சாட்சிகளாக வாழ்கிறோமா என்பதை கண்காணிக்கும் ஆண்டவராய் இருக்கிறார். இன்று கண்காணிப்பு கேமரா (CCTV Camera) கூட அது வைக்கப்பட்டிருக்கும் இடத்தை மட்டும் கண்காணிக்கிறது. ஆனால் கடவுள் அப்படியல்ல, அகிலத்தையும் கண்காணிக்கிறார். நீ.மொ. 15:3 இல் ஆண்டவரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது. ஆம் கடவுள் அனைவரையும் கண்காணிக்கிறார். நமது வாழ்விற்கு கடவுளே சாட்சியாக இருக்கிறார்.

கடவுள் நம்மை கண்காணிக்கிறார் என்பதை உணர்ந்து பிறருக்கு துன்பங்கள் கொடுக்காமல், நல்ல வாழ்வு வாழ்ந்து, நம் ஒவ்வொருவரின் வாழ்விற்கும் கடவுளே சாட்சி என்ற உறுதியோடு புதிய மாதத்தை தொடங்குவோம்.

**அருள்திரு. J. ஸ்டீபன்**

01-08-2017

புதிய மாத நன்றித் தொழுகை

## ஷாலோம் : நல்வாழ்வருளும் கடவுள்

திபா. 122

**"... நல்வாழ்வு இருப்பதாக." திபா. 122:7**

நவ நாகரீகமான உலகில் மக்கள் விரும்புவது எல்லாம் நலமாக வாழ வேண்டும் என்பதே. ஏனென்றால் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான இடைப்பட்ட காலம் தான் வாழ்க்கை. இந்த வாழ்வு பல நிலைகளில் அமைகிறது. பாடுகள், வேதனைகள், இழப்புகள், இயலாமைகள், இடையூறுகள் பல நேரங்களில் மனிதனை வாட்டி வதைக்கின்றது. இதனூடே மகிழ்வான அனுபவங்களும் பல நேரங்களில் உண்டு. மகிழ்ச்சி வருகின்ற போது கடவுள் இருக்கின்றார், செயல்படுகின்றார், வாழ்வு தருகின்றார் என்றும், துன்பங்களைக் கடந்து செல்லும் போது ஏதோ கடவுள் கைவிட்டு விட்டார், வாழ்வு தொலைந்து விட்டது எனவும் புலம்புகின்றோம், எப்போதும், எல்லாச் சூழலிலும், கடவுளின் உடனிருப்பை நாம் உணர்ந்து கொண்டால் அவர் தரும் நல்வாழ்வை நாம் பெற்று அனுபவிக்கலாம் எனத்திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார்.

தரப்பட்ட திருமறைப் பகுதியான திபா 122 திருப்பயணிகளின் பேரானந்தத்தையும், ஆசையையும் விளக்கும் சீயோன் பாடலாகும். இஸ்ரயேல் மக்கள் எருசலேம் செல்வதும், இஸ்ரவேலர் அனைவரையும் இணைக்கும் சக்தியாக எருசலேம் நகர் இயங்குவதையும் இப்பாடலில் காணலாம். இப்பாடல் சிறையிருப்புக்குப் பிற்பட்ட காலத்தில் எழுந்ததாகும். தொடர்ந்து தரப்பட்ட திருமறைப்பகுதியின் வழியாக எப்படி கடவுள் நல்வாழ்வு அருளுகின்றார் என்பதைத் தியானிப்போம்.

### *1. ஆலயத்தில் அமர்வதால் ஏற்படும் நல்வாழ்வு :*

கடவுளின் இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பு எனக்கு அக மகிழ்வைத் தந்தது எனத் திருப்பாடலாசிரியர் பாடலின் முதல் வரியில் குறிப்பிடுகின்றார். ஆண்டவரின் இல்லமான ஆலயம் மனதிற்கு மகிழ்வைத் தரும் இடம் எனக் குறிப்பிடுகின்றார்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'
'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'

போன்ற முதுமொழிகளுக்குகேற்ப ஆயிரம் நாள்களிலும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது. என திபா. 84:10-ல் திருப்பாடலாசிரியர் கூறுகிறார். ஆண்டவரின் ஆலயம் பெரும் மகிழ்வைத்தரும் ஓர் அற்புத இடம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

பிள்ளையில்லாதவர் என்ற பட்டத்தோடு வேதனையில் உச்சத்தில் வாழ்வு கசந்த நிலையில் அன்னாள் என்ற பெண்மணி நாடி தேடிய இடமோ ஆலயம். ஆலயம் சென்று அமர்ந்து அன்னாளே தன் வேதனையை புலம்பி, அழுது, மன்றாடி கொட்டினாள். நடந்தது என்ன? அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து சாமுவேல் எனப் பெயர் சூட்டி ஆண்டவர் பணிக்கென அர்ப்பணித்து குடும்பமாக மகிழ்ந்தார் என 1 சாமுவேல் 2:1-ல் படிக்கின்றோம். 18 ஆண்டுகள் சிறிதளவும் நிமிர்ந்து பார்க்க முடியாத நிலையில் நிமிர முடியாதிருந்த பெண்ணை இயேசு ஆலயத்தில் கண்டு ஆபிரகாமின் மகள் என்று அழைத்து, அற்புத சுகம் கொடுத்தார். இதை லூக்கா 13:11 - ல் படிக்கிறோம். ஆலயம் நல்வாழ்வு தரும் இடம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இன்றைய நவ நாகரீக உலகில் நாம் வாழும் சமூகத்தில் பெருவாரியான குழந்தைகள் ஆலயம் இன்றி வாழ்கின்றனர். காரணம் பெற்றோர் பிள்ளைகளை ஆலயத்திலிருந்து தூரப்படுத்துகின்றனர். கல்வியைக் காரணம் காட்டி திருச்சபையை மறந்து விடுகின்றனர். பள்ளிக்கூடப்படிப்பு என்ற பெயரில் குழந்தைகள் விரட்டியடிக்கப் படுகின்றனர். இதனால் ஆலய விருப்பத்தை இழந்து விடுகின்றனர். ஆலயத்தை மறப்பதால் வழி தவறி தீய பழக்கங்களில் பிள்ளைகள் சிக்குண்டு சீர்குலைந்து போய் விடுகின்றனர். உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்.......என அறிந்து கொள்கிறோம். எனவே நாமும் நல்வாழ்வைப் பெற குடும்பமாக ஆலயம் சார்ந்து வாழ்வேம்.

## *2. அமைதியை விரும்புவதால் ஏற்படும் நல்வாழ்வு :*

வன்முறை தீவிரவாதச் செயல்களும், வளர்ந்து வரும் இன்றைய உலகில் அமைதி வாழ்விற்கான ஏக்கம் ஒரு தொடர் தேடலாகவே உள்ளது. அமைதிக்கான எபிரேயமொழிச் சொல் “ஷாலோம்” ஆகும். இதன் பொருள் உடல் நலமும், வளமான வாழ்வும் நீதியும் வளமையும் மானிடம், படைப்பு இவைகளோடு இறைவன் கொண்டுள்ள நல்லிணக்கமாகும். அமைதி என்ற சொல் வாழ்த்துதலாக யூதர்களுக்கிடையே பயன்படுத்தப்பட்டுள்ளது. அழிக்கும் ஆயுதங்கள் பயனுள்ள விவசாயக் கருவிகளாக மாறும் போது அமைதி உருவாகும். இது இறைவாக்கினர் எசாயா கண்ட கனவாகும்.

எருசலேம் அமைதியின் நகரம். ஆனால் இன்றைய சூழலில் 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் காவல் காக்கும் சூழலில் இருக்கிறது. அவ்வப்போது குண்டுகளின் சத்தமும் முழங்குகின்றன. இந்த எருசலேமில் அமைதி நிலைக்க இறை வேண்டல் செய்யுங்கள் என்றும் உங்களுக்குள்ளும் வாழ்விடங்களிலும் அமைதி நிலவ வேண்டும் என தி.பா. 122 : 6-9 குறிப்பிடுகிறார். அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் என இயேசு நாதர் மத்தேயு 5:9-ல் குறிப்பிடுகிறார்.

இயேசுவின் பிறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறை நிகழ்வுகள் 2 வயதுக்குட்பட்ட பெத்லகேம் குழந்தைகளின் பிஞ்சுத் தலைகள் உருண்டு விழுந்தன. பெண்கள் எல்லாம் அழுது புரண்டனர். அரியணை ஆட்டம் காணாமல் இருக்க இத்தகைய அட்டகாசங்களை எல்லாம் அதிகார வேட்கையில் அரங்கேற்றினார் ஏரோது. ஆனால் எசாயா 9:6-ல் இயேசுவை அமைதியின் அரசர் என குறிப்பிடுகிறார். யோசேப்பும், மரியாவும் கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆன்மீக வாதிகளாக, கடவுளின் அடியார்களாக வாழ்ந்து இயேசுவின் அமைதிப் பணியைத் தொடர முன்மாதிரியாகத் திகழ்ந்தனர்.

அன்பர்களே, நாமும் நம்முடைய வாழ்வில் ஆலயம் அமர்ந்து, ஆண்டவரைப் பணிந்து ஆன்மீகச் சிந்தையுடன் அமைதியை விரும்பும் மக்களாக இம்மண்ணில் தொடர்ந்து பயணிப்போம் என உறுதி கொள்வோம். நல்வாழ்வு பெற்று மண்ணிலும், விண்ணிலும் ஆண்டவருக்கு உகந்தோராய் வாழ்வோம். ஆமென்.

**அருள்திரு. K. பிறின்ஸ் குமார்**

01-09-2017

புதிய மாத நன்றித் தொழுகை

## யாவேயீரே : கடவுள் பார்த்துக் கொள்வார்

தொ.நூ. 22:1-18

**"...ஆபிரகாம் அந்த இடத்துக்கு யாவேயீரே என்று பெயரிட்டார். ஆதலால் தான் மலையில் ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்று இன்று வரை வழங்கி வருகிறது." தொ.நூ. 22:14**

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாக இருப்பது ஆண்டவர் மீது நாம் வைக்கும் நம்பிக்கை (விசுவாசம்) ஆகும். ஆண்டவர் மீது நாம் வைக்கும் நம்பிக்கை அமைதி தருகிறது (எசா. 26:3). அன்றாட வாழ்வில் நன்னலம், பொருளாதாரம், பிள்ளைகளின் கல்வி, எதிர்கால வாழ்வு எனப் பல தேவைகள் உள்ளன.

இன்றைக்குரிய திருமறைப் பாடத்தில் கடவுளின் பாதுகாப்பை நம்புவதற்குத், துணையாக தொ.நூ. 22:1-18 வரும் நிகழ்ச்சியாக. ஆபிரகாம் குறிப்பிடத் தக்கவர். ஆபிரகாம் என்றால் "விசுவாசிகளின் தகப்பன்" எனப் பொருள். முற்பிதாக்களில் ஒருவர். தந்தை தேராகு, இவர்கள் கல்தேயர் நாட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தனர். 99 - ஆம் வயதில் கடவுள் ஆபிரகாமை "நான் காண்பிக்கும் தேசத்திற்குப் போ" என்ற கட்டளைக்கு கீழ்ப்படிந்து புறப்பட்டார். ஆபிரகாம் ஒரு செல்வந்தர், கடவுளிடம் அசைக்க முடியாத விசுவாசம் கொண்டவர். அவருடைய விசுவாசம் கடவுளை அவர்பால் பிரியம் கொள்ளச் செய்தது. கடவுளால் அழைக்கப்பட்டபோது சாராள் வழியாக இவருக்கு வாரிசு இல்லை. ஆனாலும் கடவுளின் வாக்குறுதியின்படி பல இனங்களுக்கும் தான் தந்தையாவோம் என்பதை நம்பினார். அப்படியே ஆனார். அப்படியே கடவுள் ஈசாக்கை மகனாகக் கொடுக்கிறார். யூதக் கலாச்சாரத்தில் ஆண்மகன் பிறப்பது ஆசீர்வாதம் என்ற நம்பிக்கை இருந்தது. கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். முதிர்வயதில் கடவுள் தந்த பிள்ளை ஈசாக்கை மோரிய மலையில் தனக்கு எரிபலியாகக் கேட்கிறார். யூதக் கலாச்சாரத்தில் கடவுளின் காட்சி உயர்வாகக் கருதப்பட்டது. ஆபிரகாம், கடவுள் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையின் வாழ்வைச் சிந்திப்போம்.

### *1. உறுதியான விசுவாசத்தினால் - புதிய நம்பிக்கை பிறக்கிறது :* (தொ.நூ 22:1-5)

கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கையோடு பலிக்குரிய ஆயத்தங்களைச் செய்கிறார். பலி செலுத்த பறவைகள், விலங்குகள் பயன்படுத்தப்பட்டன (வி.ப. 12:5, 29:1, லேவி. 21:12) குறையில்லாத

சுத்தமானவைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. கடவுள் ஆபிரகாமின் மகனைப் பலியாகக் கேட்கிறார். கடவுளுக்குரியதை கடவுளுக்குக் கொடுப்பது தான் முறை என்று ஆபிரகாம் காலை எழுந்து தமது கழுதையில் சேணமிட்டு, தனது இரண்டு வேலையாட்களோடு, மூன்று நாள் பயணம் செய்து மோரியா மலையின் அடி வாரத்தில் தனது வேலையாட்களைக் காத்திருக்கச் செய்து "நானும், பையனும் அவ்விடம் சென்று பலியிட்ட பின் உங்களிடம் திரும்பி வருவோம் என்று கடவுள் மீது வைத்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்" (தொ.நூ. 22:5).

ஆபிரகாமும் ஈசாக்கும் செல்லும் போது பலிக்குரிய ஆடு எங்கே என்று கேட்கின்ற போது தெளிவாக "கடவுள் பார்த்துக் கொள்வார்" (தொ.நூ. 22:14). ஆபிரகாமைக் கடவுளின் தொண்டராகவும், கடவுளின் வாக்குத்தத்தத்தை நம்புகிறவர் என்பதை வெளிப்படுத்துகிறார்.

அன்னாளின் நம்பிக்கையான வேண்டுதலை கடவுள் கேட்டு சாமுவேல் என்னும் மகனை கொடுக்கிறார் (I சாமு. 2)

உறுதியான விசுவாசம் புதிய நம்பிக்கை பிறக்க வழிவகுத்தது. நம்பிக்கையுடன் வாழ்வோம்.

### *2) உறுதியான விசுவாசம் - புதிய வழிகாட்டுகிறது :*

(தொ.நூ. 22:6-18)

வாக்குத்தத்தத்தில் அருளப்பட்ட ஒரே மகனை பலியிடுவது என்பது வேதனைக்குரியது தான். ஓர் ஆட்டுக்கடா இனி வரும் என்ற எண்ணம் இல்லாமலே பலிபீடத்தை அமைத்து அதில் விறகுக் கட்டைகளை அடுக்கி பின் தன் மகன் ஈசாக்கைக் கட்டி பலிபீடத்தின் மேல் இருந்த விறகுக் கட்டையின் மேல் கிடத்தி மகனை வெட்டுவதற்காகக் கத்தியை எடுத்தார். அப்பொழுது, ஆண்டவரின் தூதர் வானத்திலிருந்து ஆபிரகாமே என்று அழைத்து பையன் மேல் கையை வைக்காதே உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்பொழுது நான் அறிந்து கொண்டேன் என்றார். ஆபிரகாம் தன் கண்களை உயர்த்திப் பார்த்த போது முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயை கண்டு அதைப் பிடித்து மகனுக்குப் பதிலாக எரிபலியாக்கினார். ஆபிரகாம் அந்த இடத்திற்கு யாவாயீரே என்று பெயரிட்டார்.

- ♦ யோபு கடவுளின் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்து வெற்றி காணுகின்றார் (யோபு. 4:1-14).
- ♦ சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய நண்பர்கள் கடவுளின் மீது நம்பிக்கை வைத்து துன்பச் சூழலில் வெற்றி கண்டார்கள்.

- ♦ நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர் (உரோ. 1:17).
- ♦ கடவுள் மீது நாம் நம்பிக்கை வைக்கிற போது நமது தேவைகளைச் சந்திக்கிறார் (மத். 6:25-33)

இன்றைய உலகில் பல்வேறு சவால்கள் நடுவில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடவுள் பார்த்துக் கொள்வார் என்று கூறிவிட்டு அமைதியாக வாழ்வதல்ல. மாறாக இந்தப் புதிய மாதத்திலே ஆபிரகாமைப் போல கடவுளுக்குக் கீழ்ப்படிந்து சுயநலம் களைந்து செல்வச் செருக்குடன் வாழாமல் கடவுளின் திருத்திட்டத்திற்கு அர்ப்பணித்து கடவுளில் ஒன்றித்து வாழும் போது நமது தேவை எதுவாயிருந்தாலும் நம்பிக்கையுடன் கடவுளிடம் கூற வேண்டும். நமது தேவைகளை அவர் அறிவார், பலனையும் அருளுவார். நாம் குறைவுபடுகிறபோது கடவுள் பலமும், அறிவும் தந்து எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க உதவுகிறார். எனவே நம்பிக்கையுடன் முன்னேறி கடவுளின் பாதுகாப்பை பெறுவோமாக!

**அருள்திரு. C.S. வெஸ்லி ஜெபராஜ்**

01-10-2017

**புதிய மாத நன்றித் தொழுகை**

## யாவேராஃபா : நலம் அருளும் கடவுள்

வி.ப. 15:22-27

**"... நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்." வி.ப. 15:26**b

கடவுளின் ஆற்றல் நிறைந்த வழிநடத்துதலைக் கண்டபோதும் இஸ்ரயேலர், சிறு சிறு கடினங்களைச் சந்தித்த போது முறுமுறுத்தனர். அவர்களது பாலை நிலப் பயணத்தில் நல்ல பாடங்களைப் பயிற்றுவித்து, பக்குவப்படுத்த விழைந்த கடவுள் 'மாரா' என்ற இடத்திலும், அத்தகையதொரு அனுபவத்தை வழங்கினார். பவர் மொழியாக்கத்தில் மேற்குறிப்பிட்டுள்ள தியான வசனத்தினை "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" எனப் படிக்கிறோம். 'பரிகாரம்' என்பதற்கு நிவர்த்தி செய்தல், கடந்து செல்லுதல், காப்பாற்றுதல், மாற்று உபாயம் செய்தல் என்ற அர்த்தங்கள் உண்டு. எனவே, கடவுள் இத்தகைய நிலைகளில் செயல்பட்டு தம் மக்களை காப்பாற்றுகிறார் என்பதைப்புரிந்து கொள்ளலாம். கடவுள் இரக்கத்துடன் அருளும் இப்புதிய மாதத்தில் அவரது ஆசிமிகு வாக்குகளைச் சிந்தனை செய்வோம்.

### *1) வெறுமையில் கடவுளின் நிறைவு :*

"அங்கு தண்ணீர் எதுவுமே தென்படவில்லை" (வி.ப. 15:22 b)

மூன்று நாட்கள் சூர்பாலை நிலத்தில் பயணம் செய்த இஸ்ரயேலர், தண்ணீரை தேடிக்கொண்டே வந்தனர். ஆனால் தண்ணீரில்லாத வெறுமையையே அவர்கள் கண்டனர். வாழ்வில் வெறுமை பொறுமையிழக்கச் செய்துவிடுகிறது. இந்தப் பொறுமையிழப்பால் முறுமுறுக்கிறோம். கடவுளை வெறுக்கிறோம், மறக்கிறோம். கடவுள் வெறுமையில் நிறைவு தரவல்லவர் என்பதை நாம் உணர்ந்திடல் வேண்டும்.

மாராவில் சென்ற போது அங்கு தண்ணீர் இருந்தது. இந்த காட்சி கண்களுக்கும், மனதுக்கும் நிறைவு தரும் ஓர் அனுபவம் தான். ஆனால் உங்கள் கண்கள் பார்த்தறியும் நிறைவு நிறைவல்ல; உங்கள் மனம் எதிர்நோக்கும் நிறைவு நிறைவல்ல என்பதை கடவுள் உணர்த்த விரும்புகிறார். இருப்பதில் இறைவனின் செயல்பாட்டுக்கு இடம்தருதலே நிறைவினை ஏற்படுத்தும் என்பது கடவுள் நமக்கு உணர்த்தும் உண்மையாகும் (யோவான் 6:5-13).

### *2) சிறுமையில் கடவுளின் செழுமை :*

தண்ணீரைக் கண்டபோதும் பருக முடியாத சிறுமை (வி.ப. 15:23) கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன போது இஸ்ரயேலரின் உள்ளக்குமுறல் மேலும் அதிகரித்தது. நாங்கள் எதைத்தான் குடிப்போம்?

என மக்கள் மோசேக்கு எதிராக முணுமுணுத்தனர் (வ. 24). கடவுள் சிறுமையில் செழுமையையும், கசப்பில் இனிமையையும் வழங்க வல்லவர். பரிகாரம் பரமனுக்குச் சாதாரணம். ஆண்டவரை நோக்கி அபயக்குரல் எழுப்பிய மோசேயிடம் ஒரு மரத்துண்டை காண்பித்து, அதை தண்ணீரில் எறிந்து விடக்கூறினார். இப்போது கசப்பு நீர். சுவை மிகுந்த நீராய் மாறிவிட்டது. பரிகாரமாகிய மரத்துண்டு அங்குதான் இருந்தது. மோசேக்கும், மக்களுக்கும் அது புரியவில்லை. நாம் வாழ்வில் சந்திக்கும் சிறுமைகளுக்கான பரிகாரம் நம் அருகில் உள்ளது. அதை அறிந்து கொள்ள ஆண்டவரை நாடி அவரிடம் மன்றாட வேண்டும். வாழ்வில் மகிழ்ச்சி என்பது எங்கிருந்தோ வாங்கிக்கொண்டு வருவதல்ல; அது நம்மிடம் உள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள்வதும் பாழாக்கிவிடுவதும் நம்மைப் பொறுத்தது தான். கடவுளின் கருணையால் கசந்த நீர் கனிந்த நீராய் மாறியது. நம் வாழ்வில் சிறுமைகளைப் போக்கி செழுமை தர, கசப்பை இனிமையாக்க இம்மாதத்தில் இடையறாது கடவுளைத் தேடுவோம்.

### *3) வியாதியில் கடவுளின் விடுதலை :*

"... கொள்ளை நோய்கள் உன் மேல் வரவிட மாட்டேன்"
(வி.ப. 15:26).

நோய்கள் நமது உடல் நலத்தை மட்டுமல்ல, உளநலத்தையும் பாதிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் நோய் பெருக்கம் அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கைச் சமநிலைப் பாதிப்பினாலும், பல்வேறுபட்ட மாசுக்களினாலும், பொருத்தமற்ற உணவுப் பழக்கங்களாலும், உடற்பயிற்சி குறைவினாலும், உணவுகளின் நச்சுத்தன்மையினாலும் நோய்கள் வந்துவிடுகின்றன. ஒருவரது நோய் பாதிப்பு அவரைச் சார்ந்த அனைவரையும் பாதிக்கிறது. மன அமைதியின்மை, பொருளாதார நெருக்கடி போன்றவை இதன் விளைவுகளாக இணைந்து கொள்கின்றன. நோய்கள் நம்மிடம் குடிபுக இடம் தராமல் உடல்நலம் பேணுவதும், சுற்றுச்சூழலைப் பேணுவதும் நமது பொறுப்பாகும். அதையும் தாண்டி நோய் பாதிப்புகள் வரும்போது மருத்துவ உதவி பெறுதல் அவசியமானதே. ஆயினும் எல்லா நலமும் வழங்கும் பரிகாரியான கடவுளை நாடுதல் மிகவும் அவசியமானதாகும். வாக்குறுதி வழங்கி வழிநடத்தும் கடவுள் நமது நோய்களில் நலமருள்வார். தமது உடல்நலப் பாதிப்பிற்காக ஆண்டவரிடம் மன்றாடிய தூய பவுலாருக்கு தம் ஆற்றலால் தாங்குவதாக கடவுள் வாக்குரைத்தார் (2 கொரி. 12:9).

நலமருளும் கடவுளை இப்புதிய மாதத்தில் தினந்தோறும் தேடுவோம். அவர் வழங்கும் நிறைவையும், செழுமையையும், விடுதலையையும் நிறைவாகப் பெற்று மகிழ்வோமாக.

**அருள்திரு. R. ஸ்டான்லி நேசராஜ்**

## ஷெமா : செவி கொடுத்து செழிப்படைய அழைக்கும் கடவுள்

இச. 6:3-9

**"இஸ்ரயேலே அவற்றிற்குச் செவிகொடு.... பாலும், தேனும் நிறைந்து வழியும் நாட்டில் நீ நலம் பல பெற்று மேன்மேலும் பெருகுவாய்." இச. 6:3**

இறைமக்கள் என அடையாளமிடப்பட்ட இஸ்ரயேலர் இறைவன் வாக்கருளிய பசுமைநாட்டை நோக்கிய பயணத்தின் கடைசியில் கானானை நெருங்கும் நேரத்தில் நாற்பதாண்டு பயணத்தை நினைப்பூட்டி, கடவுளுக்கு பணி செய்யக் கொடுத்த திருச்சட்டங்களையும், உடன்படிக்கையையும் நினைவுறுத்துகிறார். இதனை யூதர்கள் ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் மனப்பாடமாக கூறி வருகின்றனர். இதனை 'ஷேமா' என அழைத்தனர். இதன் பொருன் 'பெருங்கட்டளை' என்பதாகும். இந்த பெருங்கட்டளைக்கு செவிக்கொடுத்து செழிப்படைய கடவுள் அழைக்கிறார் என்பதை இன்றைய திருமறைப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.

இந்த புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நேரத்தில் செழிப்பைத் தர ஆயத்தமாயிருக்கிற கடவுள் எவைகளை நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பதை சிந்திப்போம்.

### *1. ஆண்டவரை அறிந்து கீழ்ப்படிய வேண்டும் :*

(இச. 6:4) "இஸ்ரயேலே, செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர்".

உலகில் முதல் பாவம் இறை வார்த்தைக்கு கீழ்ப்படியாமையால் ஏற்பட்டது. எனவே கடவுள் தம் மக்களுக்கு அழைப்பு விடுத்து தாம் ஒருவரே ஆண்டவர் என்பதை தெளிவுபடுத்துகின்றார். மனிதன் சூழ்நிலைகளைக் கண்டு மாறுபடுபவன். தங்களுக்கென்றே கன்றுக்குட்டி வடிவமைத்து வழிப்பட துணிந்தவர்கள் (விப. 32:1-9). மாறி பயணிக்க துணிந்தவர்கள். பாலைவனத்தில் போதனைகளை புரியாமல் சோதனைகளை ஏற்றுக்கொள்ளாமல் மனமுடைந்தவர்கள் (எண். 21:46). கடவுள் எம்முடன் இருக்கிறார் என்பதை உணர்த்தப்பட்டும் உணராதவர்கள். ஆண்டவர் ஒருவரே, அவர் அண்மையில் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்வோம்.

ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து இறை ஆசியைப் பெறுவோம்.

## 2. ஆண்டவரிடமும் முழுமையாய் அன்பு கூர வேண்டும்:

(இச. 6:5) “உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக”.

இறைவன் மோசேயின் வழியாய் தம் மக்களுக்குக் கொடுத்த முதலாம் கட்டளை இதுவே. உன் கடவுளாகிய ஆண்டவரிடம் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் அன்பு கூர வேண்டும் என்பதே. கடவுள் நமக்கு செழுமையை தர விரும்புகிறார், முழுமையை எதிர்பார்க்கிறார். அன்பு கூர்தல் என்பது ஏதோ தேவைக்காக அல்ல. அது அடிமனதின் ஆழத்தில் பதிந்து வெளிப்படுகின்ற ஒன்று.

அன்பு, செல்வம், வெற்றி மூன்றும் இணைந்து ஒரு இல்லத்தின் கதவை தட்டுகின்றன. கதவை திறந்து பார்த்தால் மூவர் வெளியே நின்றனர். தங்களை அறிமுகப்படுத்தினர். எங்களில் யார் உள்ளே வரவேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள் என்று கூற கணவனும் மனைவியும் அன்பை உள்ளே வர அனுமதித்தனர். மகிழ்ந்த மூவரும் இணைந்தே அந்த இல்லத்தில் நுழைந்தனர். அப்படியானால் அன்பு உள்ள இடத்தில் செல்வம், வெற்றி உண்டு. குடும்பத்தில் குறைவு இல்லை. செல்வமும் வெற்றியும் பெறுகின்றனர்.

கடவுள் நமக்கு செழுமையை தர விரும்புகின்றார். எனவே நாம் கடவுளிடமும், நம்மோடு வாழ்கின்ற மக்களிடமும் நம் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் அன்புகூர அழைக்கப்படுகின்றோம்.

## 3. ஆண்டவரின் கட்டளைகளை போதிக்க வேண்டும்

நீ அவற்றை உன் பிள்ளைகளின் .... பேசு (இச. 6:7).

திருவார்த்தைகள் காலத்தால் அழியாத பொக்கிஷங்கள். அவைகள் உடன்படிக்கையின் அடையாளங்கள் எனவே கடவுளின் கட்டளையை உள்ளத்தில் பதித்து அவைகளை பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல்ல வேண்டும்.

பிள்ளைகள் வருங்காலத்து தூண்கள். வருங்காலத்தின் சிற்பிகள். அவர்களுக்கு கடந்து வந்த பாதைகளை குறித்த அறிவை புகட்ட வேண்டியது பெற்றோரின் கடமை. எனவே ஆண்டவரின் கட்டளைகளை போதித்தல் வேண்டும்.

அதாவது மூதாதையர்கள் எகிப்திலே அடிமைகளாய் பார்வோனால் ஒடுக்கப்பட்டனர். மோசேயின் வழியாய் ஆண்டவர் அற்புதங்கள் அடையாளங்களை செய்து வழிநடத்தினார். மூதாதையருக்கு கொடுப்பேன் என ஆணையிட்டு வாக்கருளியபடியே

செழுமை தேசமாகிய கானானை கொடுத்தார் என்பதை பிள்ளைகளுக்கு நினைப்பூட்டி வளர்ப்பது அவசியம் என்பதைக் கடவுளால் போதிக்கப்பட்டனர் (இச. 6:21-22).

இறைமக்கள் என்னும் அடையாளத்தோடு கானானை நெருங்கும் நேரத்தில் இறைவார்த்தைகள் நினைவூட்டி தாங்கள் மாத்திரமல்ல, தங்கள் தலைமுறை தோறும் இறைவனுக்கும் இறைவார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே கடவுளின் திட்டம். இதை செயல்படுத்தும் போது இறைவன் நம்மை செழிப்படையச் செய்வார்.

அன்பர்களே! இறைவார்த்தையை ஏற்றுக்கொண்ட மக்கள் கானானில் கண்டவைகள் அனைத்தும் கொழுமையும், செழுமையுமானவை. இறை வார்த்தைகளை நினைவுறுத்தும் இறைவன் செழிப்புள்ள வாழ்வை அனுபவிக்க அழைக்கின்றார். நாம் கடந்து வந்த பாதையில் கரடுமுரடுகளும் கலக்கங்களும் இருந்தாலும் இந்த புதிய மாதத்தில் ஆண்டவரை அறிந்து அவருக்கு கீழ்ப்படிந்து, ஆண்டவரிடம் முழுமையாக அன்பு கூர்ந்து, கட்டளைகளை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து வாழ்வில் புதுமைகளை அனுபவிக்க இறை ஆற்றலோடு முன்னேறுவோம்.

**திரு. P. லிபின் ஜாஸ்பர்**

01-12-2017

புதிய மாத நன்றித் தொழுகை

## ஷெக்கினா : மாட்சியை வெளிப்படுத்தும் கடவுள்

யோவான் 1 : 14-18

**“வாக்கு மனிதர் ஆனார் ; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்.”**

**யோவா. 1:14**

ஷெக்கினா என்னும் எபிரேயச் சொல்லின் அடிப்படையான பொருள் குடியிருத்தல் (Dwelling) என்பதாகும். இறைவனின் தெய்வீக உடனிருப்பு (Divine Presence of God) என்பது மேற்கண்ட சொல் சுட்டும் பொருளின் நீட்சி. இதனையே இறைமாட்சி என்கின்றோம். ஷெக்கினா எனும் சொல் நேரடியாக விவிலியத்தில் பயன்படுத்தப்படவில்லை எனினும், இச்சொல் சுட்டும் பொருளில் இறைமாட்சி விவிலியம் முழுவதும் பரவிக்கிடக்கிறது.

சீனாய் மலையினில் இறைச் சட்டங்களைப் பெற்றுக்கொள்ள மோசே ஏறியபோது ஆண்டவனின் மாட்சி மலையினில் தங்கியது. இவ்விறைமாட்சி பற்றி எரியும் நெருப்பு போன்று இறைமக்கள் கண்களுக்குத் தெரிந்தது (விப. 24:15-17). சந்திப்புக் கூடாரத்தின் திருவுறைவிடத்தில் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டபோதும் சந்திப்பு கூடாரம் இறைமாட்சியால் நிரப்பப்பட்டது (விப. 40:34). உடன்படிக்கைப் பேழை சீயோனின்று திருக்கோயிலுக்கு சாலமோனால் கொண்டு வரப்பட்டபோதும் இறை இல்லம் இறைமாட்சியால் நிரம்பியது (1 அர. 8:10,11).

பழைய ஏற்பாட்டினில் பெரும்பாலும் இறைமாட்சி ஒளி, நெருப்பு மற்றும் மேகம் போன்றவை வழியாய் வெளிப்படுத்தப்படுகின்றது. புதிய ஏற்பாட்டினில் இவ்விறைமாட்சி மனித உரு எடுத்த இறைமகன் இயேசுவில் முழுமையாய் வெளிப்படுகின்றது. இதை யோவான் நற்செய்தியாளர். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் எனும் நிலையினில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார் (யோவா. 1:14) என்கின்றார்.

### *1. நம்மிடையே குடிகொண்ட இறைமாட்சி :*

வாக்கு மனிதரானார் ; நம்மிடையே குடிகொண்டார் (யோவா. 1:14). இப்பகுதியில் குடிகொண்டார் என்னும் சொல்லுக்கு பயன்படுத்தப்படுகின்ற கிரேக்க சொல் “எஸ்கனோசன்” என்பதாகும். இதன்பொருள் ஷெக்கினா எனும் எபிரேய சொல்லுக்கு இணையானது. கூடாரத்தை ஏற்படுத்துதல் (Set up a tent) என்பது இதன் பொருளாகும். இயேசுவின் மானிட பிறப்பு இறைமாட்சியே என்பதனை இது தெளிவுபடுத்துகின்றது.

மனிதர்களுடன் நெருங்கி வாழ தொடர்புகொள்ள, உதவிசெய்ய இறைமாட்சி இயேசுவாய் வெளிப்பட்டு இருக்கின்றது. இம்மாட்சி மாளிகையினை விடுத்து எளிமையாய் கூடாரத்தை நாடி வந்திருக்கின்றது. இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பர். அவரே அவர்களுக்கு கடவுளாய் இருப்பார் (திவெ. 21:3 ) என்பது இங்கே உண்மையாயிருக்கிறது.

ஜோசப் டாமியன் 19 ம் நூற்றாண்டின் அருட்தொண்டர். ஹவாய் தீவினில் தொழுநோயாளிகளுக்கிடையே இறைப்பணியாற்றியவர். தியாகமும் அன்பும் உடைய வாழ்க்கையினை வாழ்ந்து காட்டியவர். ஒரு நாள் காலை தொழுகைக்கு முன்பு தற்செயலாய் வெந்நீர் துளிகள் இவர் காலில் விழுந்தது. எந்த உணர்வும் ஏற்படவில்லை. ஐயமுற்ற இவர் மீண்டும் காலில் வெந்நீர் விட்டு பரிசோதித்தார். உணர்ச்சியின்மையைக் கண்டு தனக்கும் தொழுநோய் என்பதனை உறுதிப்படுத்தினார். அன்றைய தொழுகையின் அழைப்பினிலே தான் வழக்கமாக பயன்படுத்தும் என் உடன் விசுவாசிகளே (My fellow belivers) என்னும் சொற்றொடருக்கு பதிலாய் என் உடன் தொழுநோயுடையோரே (My fellow lepers) என்றார். அப்போது அதன் உட்பொருளை எவரும் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஜோசப் டாமியனோ தொழுநோயாளிகளிடம் தொழுநோயாளியாய் தன்னை அடையாளப்படுத்துவதில், வாழ்வதில் மனநிறைவு கொண்டார்.

இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார், அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்...... இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள் (மத் 1 : 22 23 ).

தனிமை உயர்வுகளும், தடுமாற்றங்களும் வாழ்வினில் எழும் சூழல்களில் இயேசுவின் இறைமாட்சி நம்முடன் உண்டு என உணர்ந்து உறுதியடையலாம்.

### *2. நம்விழிகளில் தென்படும் இறைமாட்சி*

அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் (யோவா. 1:14 )

காண இயலாத கடவுளை, இறைமாட்சியாய் இம்மண்ணில் வந்த இயேசுவில் கண்டு மகிழலாம் என்பது யோவானின் கருத்தாக இருக்கின்றது. இக்கருத்தினை கடவுளை யாருமே என்றுமே கண்டதில்லை தந்தையின் நெஞ்சுக்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார், (யோவா. 1:18 ) எனும் வரிகள் வழியாகவும் தெரிவிக்கின்றார் யோவான்.

இடையரும், ஞானியரும் இறைமாட்சியின் செய்தியினைக் கேட்டது மட்டுமின்றி கண்டு உணர்ந்து அனுபவமாக்கிக் கொண்டனர்.

வானதூதர் இடையர்களுக்கு மீட்பர் பிறந்திருக்கின்றார் எனும் நற்செய்தியினைத் தந்தார் (லூக்கா 2:11). வானதூதர் வார்த்தையினை ஏற்றுக்கொண்ட இவ்விடையர்கள் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தை இயேசுவினைக் கண்டார்கள் (லூக்கா 2:16) மகிழ்ந்து மனநிறைவோடு பாடல் பாடிக்கொண்டே திரும்பிச் சென்றனர்கள் (லூக்கா. 2:20).

விண்மீன் இறைக்குழந்தை பிறந்திருக்கும் செய்தியினை ஞானியர்க்குத் தந்தது (மத். 2:2). குழந்தையைத் தேடி புறப்பட்டனர் ஞானியர். குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டனர். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கி, மனநிறைவோடு பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப்போளமும் காணிக்கையாய் தந்தனர் (லூக்கா 2:11).

வானில் இடி மின்னல், பயந்து ஓவென்று அழுதது சின்னக்குழந்தை ஒன்று. பக்கத்து அறையினில் இருந்த தாயோ நான் உன் அருகினில் இருக்கின்றேன் பயப்படாதே என்று குரல் தந்தார். குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. மாறாக, மீண்டும் வீறிட்டு அழுதது. மிக விரைவாய் குழந்தையின் அருகினில் ஓடி வந்தாள் தாய். தாயினை கண்டு கட்டி அணைத்து அழுகையை நிறுத்தி சிரித்தது குழந்தை.

மாசந்தோஷம் மா கெம்பீரம்
மாந்தர் நாமெல்லாருக்கும்
மாட்சியுறும் காட்சி காண
வாரும் பெத்லகேமுக்கு

காண இயலும் இறைமாட்சியினை கண்டு மனநிறைவு அடைவோம்.

## முடிவுரை

இறைத்தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது. (கொலோ. 2:9) இயேசுவில் கண்ட இறைமாட்சி, இறைவன் என்பது கற்பனையல்ல அது நிஜம், கடவுள் என்பது கொள்கையல்ல இது உண்மை என்பதனை உலகினுக்குச் சொல்கிறது.

தொடக்கத்தில் கடவுளுடன் கடவுளாய் இருந்து, குழந்தையாய் மரியாள் மடியினில் தவழ்ந்து, ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து, வளர்ந்து, மக்களுடன் நடமாடி, பேசி, போதித்து மீட்பராய் சிலுவையில் மாண்டு மீண்ட இயேசுவாம் இறைமாட்சி அற்புதமானது.

நம்மிடையே வந்த இம்மாட்சியின் அருகினில் செல்வோம். கண்குளிரக் கண்டு ஆனந்தமடைவோம். எல்லா நிலையிலும் இவ்விறைமாட்சிக்கு சாட்சிகளாவோம்.

**அருள்திரு. T. சுதிர்**

# சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்

தேர்வு நாள்

## ஆண்டவரே வெற்றி தருவார்

நீ.மொ. 21:20-31

**"வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே." நீ.மொ. 21:31**

நம் நாட்டின் இன்றைய கல்வி முறையில் தேர்வு என்பது ஒரு மனிதனின் எதிர்கால வாழ்வை தீர்மானிப்பதாக அமைகிறது. போட்டி நிறைந்த உலகில் கல்வி நிறுவனங்கள் மாணாக்கர்களை மதிப்பெண் இயந்திரங்களாகவே மாற்றிவிட்டது. அத்தகைய நெருக்கடியில் மாணவர்கள் தேர்வைக்குறித்து அதிக பதற்றம் அடைகின்றனர். 17-03-2008 நாளைய "The Times of India" இதழின் ஆய்வறிக்கையின்படி, 2007-ம் ஆண்டில் 5857 மாணவர்கள், அதாவது நாளொன்றுக்கு 16 பேர் தேர்வு பதற்றத்தினாலே தற்கொலை செய்கிறார்கள். பிரிட்டன் நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பினரின் (NSPCC) ஆய்வறிக்கையின்படி, தேர்வு பதற்றத்தை தணிக்க ஆற்றுப்பணியை நாடுகிறவர்களின் எண்ணிக்கை 2000 ஆக அதிகரித்துள்ளது. இத்தகைய பதற்றம் நிறைந்த தேர்வு நாளாகிய இன்று தேர்வில் கலந்துகொள்ள ஆயத்தப்படும் மாணவர்களாகிய நமக்கு, ஆண்டவர் வெற்றி தருகிறார். ஆண்டவர் தரும் வெற்றியை சுவைக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திப்போம்.

### *1. ஆயத்தப்படுங்கள்* - நீமொ. 21:31a

தமிழகத்தின் பழைய அரண்மனைகளிலுள்ள வெண்பிரகாரங்களைப் பார்த்தால், தரையில் சுட்ட செம்மண்ணால் செய்யப்பட்ட ஓடுகள் பதிக்கப்பட்டிருக்கும். ஆனால் ஆங்காங்கே 3 அங்குலத்திற்கு 3 அங்குலம் என்ற வகையில் சிறு சிறு குழிகள் 6 அங்குல ஆழத்தில் காணப்படும். அவை எதற்கென்றால், அரசர்கள் போருக்காக ஆயத்தப்படும் போது, தாங்கள் பயன்படுத்தும் குதிரைகளை, அந்தக் குழிகளில் கால் சிக்கிக் கொள்ளாதவாறு பயிற்றுவிப்பார்கள். இப்படிப் பயிற்றுவிக்கப்பட்ட குதிரைகளை பயன்படுத்தி எளிதாக வெற்றி பெறுவார்கள்.

போரிலே வெற்றி வேண்டுமானால் குதிரை சரியாக ஆயத்தமாக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். ஆயத்தமாக்கப்படாத குதிரை மிக விரைவில் சோர்வடைந்துவிடும், போரிலும் தோல்வி ஏற்படும். மத்தேயு 25:1-13-ல் காணப்படும் பத்து தோழியர் உவமையில், மணமகனை எதிர்கொள்ளச் சென்ற மணமகளின் தோழியர் பத்து பேரில், முன்மதியுடைய ஐந்து பேர் மட்டுமே கலசங்களில் எண்ணெயுடன் ஆயத்தமாகச் சென்றார்கள். ஆயத்தமாய் இருந்தவர்கள் மட்டும் மணமகனோடு திருமண

மண்டபத்திற்குள் புகுந்தனர் (மத். 25:10). ஆண்டவர் தரும் வெற்றியை சுவைக்க நாம் ஆயத்தமாக்கப்பட வேண்டியது அவசியம். எனவே அன்பு மாணாக்கர்களே, தேர்வில் கலந்துகொள்ளச் செல்கிற நாம், முன்மதியுடைய ஐந்து தோழியரைப் போல, எப்போதும் ஆயத்தமாயிருப்போம், வெற்றி பெறுவோம்.

### *2. ஆண்டவரிடம் கேளுங்கள்* - யாக். 1:5

ஞானத்தின் உறைவிடம் ஆண்டவர். தேர்வுக்காக ஆயத்தப்படும் பல மாணாக்கருடைய புலம்பல் எனக்கு படித்தாலும் புரியவில்லை, "எனக்கு படித்தாலும் நினைவில் நிற்கவில்லையே" என்பதாகும். இப்படி ஞானத்தில் குறைவுபட்டிருக்கிறவர்களுக்கு யாக்கோபு தரும் அறிவுரை யாக் 1:5-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஆண்டவரிடம் கேட்கும் போது, அவர் நமக்கு நிறைவான ஞானத்தைக் கொடுப்பார்.

ஆண்டவரிடம் வேண்டுவதன் விளைவைக் குறித்து லூக். 11:9-13-ல் நாம் காணலாம். "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" (லூக். 11:7). "கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்" (லூக். 11:8). ஆண்டவரிடம் நாம் எதைக் கேட்கிறோமோ, அதைப் பெற்றுக்கொள்கிறோம். நம்முடைய வாழ்வில் நாம் பலவற்றை பெற்றுக்கொள்ள முடியாததற்கு காரணம், நாம் ஆண்டவரிடம் கேட்காதபடியினாலே. I அர 3:1-15, II குறி. 1:3-12 ஆகிய பகுதிகளில், சாலமோன் அரசனின் ஞானத்திற்கான மன்றாட்டு இடம் பெற்றுள்ளது. அவர் ஆண்டவரிடம் இஸ்ராயேல் மக்களுக்கு நீதி வழங்குவதற்கு தேவையான ஞானத்தை ஆண்டவரிடம் கேட்கிறார் (I அர. 3:9), ஆண்டவர் அவருக்கு ஞானத்தை மட்டுமல்ல, தேவையான அனைத்தையும் கொடுத்தார் (I அர. 3:12, 14). எனவே அன்பு மாணாக்கர்களே ஆண்டவரிடம் ஞானத்தை கேட்போம். வெற்றி பெறுவோம்.

### *3. ஆண்டவரை நம்புங்கள்* - யாக். 1:6

தேர்வு எழுதச் செல்கின்ற மாணாக்கர்களுக்கு மிகுந்த நம்பிக்கை தேவை. ஆனால், "நான் படித்த கேள்வி வருமா?", "நான் வெற்றி பெறுவேனா?" என்ற அவ நம்பிக்கையோடு தேர்வுக்குச் செல்கிற மாணவர்கள் அநேகர். ஆனால் ஆண்டவரிடம் மிகுந்த நம்பிக்கை கொள்ள வேண்டியதன் தேவையை யாக்கோபு வலியுறுத்துகிறார்.

இயேசு சபித்த அத்திமரம் பட்டுப்போனதைப் பார்த்து வியந்த சீடர்களிடம், "நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்" என்றுக் கூறினார். இயேசு (மத். 21:22) நம்மிடம் நம்பிக்கை தேவை. நம்பிக்கையோடு நாம் கேட்கிறதை ஆண்டவர் தருவார். தேர்வில் கலந்து கொள்ள செல்லும் போது, ஆண்டவர் நமக்கு வெற்றி தருவார் என்ற ஐயப்பாடு இல்லாத

நம்பிக்கையோடு செல்ல வேண்டியது அவசியம். சகோதரன் இலாசருவை இழந்து கலக்கமுற்றிருந்த மார்த்தாவிடம் இயேசு “நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என்றார்” (யோவான் 11:40). எனவே ஆண்டவரை நம்புவோம், வெற்றி பெறுவோம்.

அன்பு மாணவச் செல்வங்களே! இன்று தேர்வு நாள், இது நம் வருங்கால வாழ்வை தீர்மானிக்கும் நாள். இந்த நாளிலே தகுந்த ஆயத்தத்தோடு, ஆண்டவரிடம் ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு, ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையோடு தேர்வில் கலந்து கொள்வோம். “ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்; நீங்கள் அமைதியாயிருங்கள்” (வி.ப. 14:14) என்ற இறைவாக்கின்படி, ஆண்டவர் நமக்காய் போரிட்டு, நமக்கு வெற்றி தருவார்.

**திரு. D.S. எபனேசர் சாமுவேல்**

## ஞானிகளை 'ஞானி'யாக்கும் ஞானம்

நீ.மொ. 3:1-8

**"உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக்கொள்ளாதே." நீ.மொ. 3:7**

இன்றைய மாணவர்கள் ஞானிகள் மட்டுமன்று தன் அறிவின் களஞ்சியங்கள், அறிவாற்றலின் அடையாளங்கள் என்றெல்லாம் சான்றோர்கள் புகழாரம் சூட்டுகின்றனர்.

இப்படிப்பட்ட பெருமைக்குரிய ஞானவான்களாகிய இளையோர், மாணவர் ஏன் சாதிக்கத் தவறுகின்றனர்? ஏன் போதைகளுக்கு அடிமையாகின்றனர்? ஏன் தொலைத் தொடர்பு சாதனங்களாகிய தொலைக்காட்சி, இணையதளம், அலைபேசி ஆகியவற்றில் வரும் நிகழ்ச்சிகளுக்கும், பொய்யான உறவுகளுக்கும், கேளிக்கை விளையாட்டுகளுக்கும் அடிமையாகி தங்கள் உடலையும், மனதையும் கெடுத்து வருங்காலங்களில் குடும்ப உறவுகளையும் சிதைக்கின்றனர்.

அதற்கு காரணம், என்னவெனில் அவர்கள் "இதயத்தில் மடமை ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதைக் கண்டித்து திருத்தும் பிரம்பால் அகற்றி விடலாம்" என்று நீதிமொழிகள் 22:15-ல் படிக்கலாம். இந்த வசனத்தின் அடிப்படையில், பிரம்பாகிய கண்டிப்பினால், ஏன் ஞான அறிவுரைகளால் நிச்சயம் அந்த மடமையை அகற்றி விடலாம். நமது மாணவர் சமுதாயம் ஞானிகள் தான். ஆனால் அந்த ஞானத்தை வெளிக்கொணரத் தடையாய் இருக்கும் மடமைகளைக் குறித்து திருமறை வெளிச்சத்தில் ஆராய்ந்தால், நிச்சயம் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றேன்.

**1) சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நிற்பது மடமை :** (நீதி. 3:5,6)

அறிவாற்றல் என்பது ஒவ்வொரு மாணவர்க்கும் உண்டு. அதன் சதவீதம் மாணவர்களுக்கு மாணவர் மாறலாம். ஆனால் அது நிச்சயம் அனைவருக்கும் உண்டு. அதை நம்பியே, அதைச் சார்ந்தே தான் மாணவர்களின் படிப்பும், அது சார்ந்த சாதனைகளும் நிகழ்கின்றன. ஆனால், அறிவாற்றலைச் சார்ந்து வாழ்வது குறித்து நீதிமொழிகள் ஆக்கியோன் சொல்லுகிறார், நீதி. 3:5, 6 வசனங்களில், "முழு மனதோடு ஆண்டவரை நம்பு; உன் சொந்த அறிவாற்றலை சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்துச் செய். அப்பொழுது அவர் உன் பாதைகளை செம்மையாக்குவார்".

ஏன் நீதிமொழிகளின் ஆக்கியோன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து இருக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்?

i) **நமது அறிவு குறைவானது**

I கொரி. 13:9-ல் படிக்கிறோம், நமது அறிவு "அரைகுறையானது". நாம் நமது அறிவைச் சார்ந்து எதையாகிலும் செய்தால் நிச்சயம் அது நிறைவைத் தருவதில்லை, அது குறைவானதே.

நமது அறிவைச் சார்ந்து வாழ்வது என்பது பலமில்லாத, அறுந்து போகக் கூடிய நிலையிலுள்ள கயிற்றுப் பாலத்தில் நடந்து ஆற்றைக் கடக்க முற்படுவதற்குச் சமம். ஆகவேதான் நீதிமொழிகள் ஆக்கியோன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து இருக்க வேண்டாம், மாறாக என்றும் மாறாத கடவுளைச் சார்ந்து, யாக். 1:5-ல் சொல்லப்பட்டது போல, முகம் கோணாமல் யாவருக்கும் தாராளமாய் ஞானத்தைக் கொடுக்கும் கடவுளை நம்பி, சார்ந்து வாழ்வோமானால் நிச்சயம் நமது கல்வி மிகவும் ஆசீர்வாதமாக அமையும்.

**ii) நம்மாலே நமது பாதைகளைச் செம்மைப்படுத்த முடியாது**

நமது வாழ்வின் பாதைகளை நம்மாலே செம்மைப்படுத்த முடியாது. ஆண்டவராலே மட்டும் அது முடியும். ஏனென்றால், அவர் நமக்கு முன்பாக நடந்து சென்ற வாழ்வின் பாதை அது. அதன் ஏற்றத்தாழ்வுகளை மாற்ற என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரைகளை அவரால் மட்டுமே நமக்கு தர முடியும். எனவே ஆண்டவரைச் சார்ந்து வாழ்வதே நமது வாழ்வுக்குச் சரியானது. இதை நீதிமொழிகள் 2:6-ல் வாசிக்கிறோம். "நீ எதைச் செய்தாலும் ஆண்டவரது மனத்தில் வைத்துச் செய், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார்".

மாணவச் செல்வங்களே, கடவுளை நம்பி வாழும் போது, தினமும் அவர் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி வாழும் போது, ஆண்டவர் நாம் பயணிக்கும் பாதைகளைச் செம்மையாக்குகிறார். அப்போது நாம், நமது படிப்பிலும், வாழ்விலும் ஜெயமாக வாழுகின்றோம்.

"இதைப் பலமான சுவரின் மீது சாய்வுடன் வைக்கப்பட்டுள்ள ஒரு ஏணிக்கு ஒப்பிடலாம்". அதனைச் சாய்வாக வைத்தாலும், சுவர் மிகவும் வலிமையாக இருப்பதால் அது தாங்கிக் கொள்ளும், நாமும் வாழ்வின் ஏணிகளில் ஏறி உயர்வை பெறலாம்.

## 2. நீ உன்னை ஞானியென்று எண்ணுவது மடமை (நீதி. 3:6,7,8)

யாரும் இந்த உலகில் எல்லாரும் அறிந்த ஞானிகள் அல்ல. ஆனால் இன்றைய மாணவர் சமுதாயம் எப்போதும் தங்களை மேன்மையாகவே நினைக்கின்றனர். தங்களை ஞானியென்று நினைத்துக் கொண்டு, சில பாடங்களை மட்டும் படித்து முடித்துவிட்டாலே எல்லாம் தெரியும் என்ற மமதையில் சுற்றித் திரிகின்றனர். அந்த மமதையில் தான்

பெற்றோரிடம் எனக்கு எல்லாம் தெரியும் என்று எதிர்த்து பேசுகின்றனர். ஆசிரியர்களைக் கேலி கிண்டல் செய்து அவர்கள் அறிவுரைகளைக் கேட்காமல், மனம் போன போக்கில் வாழ்ந்து அநேக தீமைகளுக்கும் காரணமாகின்றனர். விளைவு, குறைந்த மதிப்பெண். நல்ல மதிப்பீடுகள் இல்லா வாழ்வு எனத் தரம் தாழ்ந்து போகின்றனர். இவர்களைத் தான், நீதிமொழிகள் ஆக்கியோன் நீதி. 3:7-ல் கண்டிக்கின்றார். "உன்னை நீ ஞானி என்று எண்ணிக் கொள்ளாதே; ஆண்டவருக்கு அஞ்சித் தீமையை அறவே விலக்கு".

மேலும், ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வது என்பது இப்போதைய மாணவர் சமூகத்துக்கு முதன்மையானதாக இல்லை. ஏன்? அவர்கள் பெற்றோரைக் கண்டு அஞ்சுவதில்லை, பெரியோரைக் கண்டு அஞ்சுவதில்லை. ஆசிரியர்களை கண்டும் அஞ்சுவதில்லை. அச்சம் இல்லை என்றால் நிச்சயம் வாழ்வினைக் குறித்த கரிசனை இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், கடவுளுக்கு அஞ்சி வாழ்தலே ஞானத்தை தரும். அந்த ஞானமே வாழ்வின் விளக்கு.

இன்னும் சொல்லப்போனால், தங்களை ஞானிகள் என நினைப்பதால் தான், பலவித தீமையான காரியங்களுக்கு அவர்கள் அடிமைகளாகி வாழ்வையே இழக்கின்றனர். போதைப் பொருட்களுக்கும், பலவித தீமையான உறவுகளுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகி தங்களையே அழிக்கின்றனர். ஏன்! சகமாணவர்களின் அழுத்தத்தால் சக மாணவர்களையும், ஆசிரியர்களையும் கூட கொல்லும் அளவுக்கு வெறித்தனமாக செயல்படுகின்றனர். 2012-ம் ஆண்டு சென்னையில் 10-ம் வகுப்பு மாணவனால் கொலை செய்யப்பட்ட மகேஸ்வரி என்ற ஆசிரியையின் கொலை சம்பவம் இதற்கு சரியான எடுத்துக்காட்டு. இப்படிப்பட்ட மாணவர்கள் யாருக்கும் அஞ்சாமல் வாழும்போது தீமை புரிகின்றனர். தீமை செய்தபின்பு நானா செய்தேன் என்று கதறி அழுகின்றனர். இதெல்லாம், இறை அச்சம் இல்லாததாலும், தங்களை ஞானி என எண்ணி மேட்டிமை கொள்வதாலும் ஏற்படுவது அல்லவா?

மேலும் தங்களை ஞானி என்று எண்ணும் போது ஏற்படும் மிகப்பெரிய தீமை என்னவென்றால், மனமேட்டிமை, பிறரைத் தாழ்வாகப் பார்க்கச் செய்யும். தன்னை யாராலும் கேட்க முடியாது, கண்டிக்க முடியாது என்ற மேட்டிமையின் எண்ணம் முடிவில் தங்களையும், தங்களை சுற்றியிருப்பவர்களையும் அழிக்கக் காரணமாகிறது. இதைக் கண்டிக்கும் நீதிமொழிகள் ஆக்கியோன் 3:34-ல் "செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்" என்கிறார்.

ஆம்! தாழ்மையுள்ளவர்களுக்கே கடவுளின் கருணை கிடைக்கும்; பெருமையுள்ளவர்கள் கடவுளின் இகழ்ச்சியினை பெறுவர். தாழ்வான

இடத்திலே தான் ஞானம் இருக்கும். அறிவிலிகள் தான் ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தது போல காண்பிப்பார்கள். ஞானிகளோ ஆண்டவருக்குப் பயந்து தீமையை விட்டுவிலகி உயர்வையும் மகிமையையும் அடைவார்கள். ஏனென்றால் ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம்.

அன்பான மாணவச் செல்வங்களே புதிய ஒரு கல்வி ஆண்டில் அடியெடுத்து வைக்க ஆயத்தமாகும் உங்களுக்கு ஆண்டவர் அருளும் ஆலோசனை, ஞானிகளாகிய நீங்கள் 'ஞானி'யாகும் ஞானம் பெற உங்களிடம் இருக்கும் மடமையாகிய "சொந்த அறிவாற்றலை நம்புவது தங்களை ஞானி என எண்ணி" வாழ்வது போன்றவைகளைக் களைந்தால் உங்களுக்குள்ளே மறைந்திருக்கும் ஞானமாகிய ஒளி ஒளிர்ந்திடும், அது பொன்னாக மிளிரும். நீங்களும் ஞானிகள் எனப் போற்றப்படுவீர்கள். ஞானமே விளக்கு! ஞானமே சிறந்தது!

**திரு. வின்சிலோ G. ஷேபர்**

# கொடுங்கள் கொடுக்கப்படும்

| | |
|---|---|
| தொ.நூ. 4:1-4 | 2 கொரி. 8:1-15 |
| தி.பா. 24 | லூக். 6:31-38 |

**"கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்." லூக்கா 6:38**

இன்று சங்க விழா இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சங்கமமாகி ஏழை எளியோர்க்கு உதவிகள் செய்யும் விழா சங்க விழா. ஆனால் இன்று அது சடங்காச்சாரமாகி விட்டது.

இன்றைய திருமறைப்பகுதி இறைமகன் இயேசு கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட ஒரு பகுதியாகும். தாராளமாய்க் கொடுக்கிறவர்கள் பலன்களைத் தாராளமாய்ப் பெறுவார்கள். பிறருக்கு எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவினால்தான் நமக்கும் திரும்ப அளக்கப்படும். நாம் நமது உடைமைகளை செல்வத்தை தாராளமாக பகிர்ந்து கொடுக்கும் போது நிறைவான மகிழ்ச்சி நமக்கு கிடைக்கிறது. நாம் எதை நம்மிடம் வைத்துக் கொள்கிறோமோ அதை இழந்து விடுகிறோம். எதைக் கொடுக்கிறோமோ அது நம்முடையதாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்து சொன்னார் "கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்". நாம் எப்படிக் கொடுத்தால் நமக்கு கொடுக்கப்படும் என்பதை இரு குறிப்புகளில் தியானிப்போம்.

## *1) மனப்பூர்வமாகக் கொடுக்க வேண்டும் :*

"அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்ட போதும் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள்" (2 கொரி. 8:2)

மாசிதோனியா (மக்கதோனியா) திருச்சபை மக்கள் அசாதாரண முறையில் இறை அருளை வெளிப்படுத்தி காண்பித்ததை இறைமக்கள் அனைவரும் அறிய வேண்டும் என்று பவுலார் விரும்பினார். எனவே அதை எடுத்துக்காட்டாக விளக்குகின்றார். அவர்கள் இறைவனின் அருளைப் பெற்றிருந்ததை உதாரத்துவமாகக் கொடுத்ததினால் வெளிப்படுத்திக் காண்பித்தார்கள். இத்திருச்சபை மக்கள் கடுமையாகச் சோதிக்கப்பட்டார்கள். ஆனால் எருசலேமில் வாழ்ந்த இறை அடியார்களின் துன்பம் குறித்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போது

மிகவும் வள்ளன்மையோடு வாரி கொடுத்தார்கள். அவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு தாங்களாகவே மனமுவந்து கொடுத்தார்கள். ஏன் அளவிற்கு மிஞ்சியே கொடுத்தார்கள். வற்புறுத்தவோ, நயந்து பேசவோ, புகழ்ந்து பேசி வற்புறுத்தவோ அவசியமில்லாதபடி, மனமுவந்து கொடுத்தனர். இந்த மாதிரியை கொரிந்தியரும் கடைப்பிடிக்க தூய பவுலார் விரும்பினார்.

மாற். 12:42-44, லூக். 21:1-4 ஆகிய பகுதிகளில் படிக்கும்போது இயேசு கிறிஸ்து காணிக்கை பெட்டியின் அருகில் அமர்ந்திருந்தார். செல்வந்தர்கள் தங்கள் காணிக்கைகளை காணிக்கை பெட்டியில் போடுவதைக் கண்டார். வறுமையில் வாடிய ஒரு ஏழைக் கைம்பெண் இரண்டு காசுகளை காணிக்கைப் பெட்டியில் போடுவதைக் கண்டார். உடனே அவர் இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும் விட மிகுதியான காணிக்கை போட்டிருக்கிறார் என உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கைப் போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையும் மனப்பூர்வமாக கொடுத்துவிட்டார் என்று மெச்சிப் பேசினார்.

2 கொரி. 9:7-ல் "மனப்பூர்வமாய் கொடுப்பவரே இறைவனின் அன்புக்கு உரியவர்" என தூய பவுலார் குறிப்பிடுகின்றார்.

அன்பர்களே! நாம் மனப்பூர்வமாக கொடுத்து இறை ஆசியை பெற்றுக்கொள்வோம். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்.

### *2) சுய நலமின்றிக் கொடுக்க வேண்டும் :*

"இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன" (யோவா 6:9).

கொடுக்க சுயநலம் இருக்கக் கூடாது. ஏனெனில் சுயநலம் கொடுக்கவிடாது. யோவா 6:1-13-ல் இயேசு கிறிஸ்து கலிலேயக் கடலைக் கடந்து மறுகரைக்குச் சென்றார். மக்கள் பெருந்திரளாக அவரைப் பின் தொடர்ந்தார்கள். இயேசு கிறிஸ்து மலையின் மேல் ஏறி தம் சீடரோடு அமர்ந்தார். நிமிர்ந்து பார்த்தார். மக்கள் பெருந்திரளாக அவரைத் தேடி வந்தனர். இவர்கள் உண்பதற்கு அப்பம் எங்கிருந்து வாங்கலாம் என்று பிலிப்புவிடம் கேட்கிறார். அந்திரேயா இங்கே ஒரு சிறுவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உள்ளன என்று கூறினார்.

இதில் அச்சிறுவனின் ஈகை பாராட்டப்பட வேண்டியது ஆகும். தனது பெற்றோர் தனக்காகக் கொடுத்தனுப்பிய உணவை, தனக்கு இல்லாவிட்டாலும் கவலை இல்லை. பிறர் பயன் பெறட்டும் என்று சுயநலம்

இன்றி தாராளமாகக் கொடுத்தான். புகழ் பெற்றான். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்யக் காரணமானான். அனைவரும் உண்டு திருப்தியானபின் பன்னிரண்டு கூடை நிறைய மீதியாக இருந்தன.

தொ.நூ. 4:1-4-ல் காயீன் ஆபேல் சகோதரர்கள். இருவரும் உழைத்தார்கள். காயீன் விவசாயம் செய்தார். ஆபேல் மந்தை மேய்த்தார். இருவரும் கடவுளுக்குக் காணிக்கை படைத்தனர். காயீன் தனது விளை பொருட்களில் சிலவற்றை படைத்தார். ஆபேல் தனது மந்தையில் கொழு கொழுவென்றிருந்ததை படைத்தார். கடவுள் சுயநலமின்றி மனப்பூர்வமாக கொடுத்த ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டார். ஆனால் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்று நாம் எப்படி காணிக்கை படைக்கிறோம். நமது விளை நிலங்களில் அல்லது செல்வத்தில் முதற்பலனை அல்லது அதிகமானதை, செழிப்பானதைப் படைக்கின்றோமா? அல்லது கடை நிலையில் இருப்பவற்றை படைக்கிறோமா? சிந்திப்போம். கடவுளுக்கு, ஏழைகளுக்கு, நம்மோடு வாழ்கின்ற மக்களுக்குக் கொடுக்கும் போது சுயநலம் இருக்கக் கூடாது. சுயநலம் இல்லாமல் கொடுப்பவர்களுக்குக் கடவுள் கடைசி நியாயத்தீர்ப்பின் போது பலன் கொடுக்கிறார். கொடுக்காதவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படுகிறது (மத். 25:31-46).

எனவே நாம் பக்தனோடு இணைந்து

சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே என்னில் தாரும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் நின் திரு இரத்தத்தாலே
கறைநீங்க இருதயத்தை

என்று வேண்டுதல் ஏறெடுத்து சுயநலத்தை மாற்றி வள்ளன்மையோடு கொடுக்க முற்படுவோம். நாம் கொடுத்ததை ஆண்டவர் திரும்ப கொடுப்பார்.

அன்பர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்து “கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்றார். நாம் கொடுப்பதை மனப்பூர்வமாகக் கொடுப்போம். சுயநலமின்றிக் கொடுப்போம். இறை ஆசியைப் பெற்றுக்கொள்வோம். இந்தச் சங்க விழா அதற்கு உதவியாக இருக்கட்டும்.

**அருள்திரு. R. டேவிட் ஜெபசிங்**

# நன்றியுடன் கொண்டாடுவோம்

லேவி. 23:9-14

**“உங்கள் சார்பாக ஏற்கத் தக்கதாக, குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை, ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவர் திருமுன் ஆரத்திப் ப-யாக்குவார்.” லேவி. 23:11**

பண்டிகைகள் இஸ்ராயேல் மக்களின் சமூகத்தோடும், ஆன்மீகத்தோடும் மிகவும் தொடர்புடையவையாகும். பண்டிகை என்பதற்கு “Hag” என்கிற எபிரேய பதம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வீட்டில் குடும்பத்துடன் கொண்டாடுவது, அனைவரும் சேர்ந்து பொது இடங்களில் கொண்டாடுவது என அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புகால பண்டிகையும் (Harvest Festival), சேர்ப்புக் கால பண்டிகையும் (Festival of Inguthering) நன்றி கூறும் பண்டிகைகளுக்கும், இந்நாட்களில் மக்கள் ஒன்றாக கூடித் தங்களது பண்பாட்டை பகிர்தல், கூட்டுறவு ஏற்படுத்துதல், திருமண நிச்சயம், பிரச்சனைகளுக்கு தீர்வு, போருக்கான ஆயத்தம் மற்றும் தங்களது கலாச்சார நிகழ்வுகளையும் செயல்படுத்துவார்கள்.

விவசாயம், மேய்த்தல் போன்றவை இவர்களது முழுமையான தொழில்கள். ஆகிப் மாதத்தில் (மார்ச் - ஏப்ரல் ஆரம்பம்) இவர்கள் தங்கள் முதற்பலன்களை கடவுளுக்கு காணிக்கையாக படைப்பர். பார்லி, கோதுமை போன்ற தானியங்களே அதிகமாகக் காணிக்கையில் இடம் பெறும்.

கோடைகால அறுவடையாக பழவகைகளே அதிகம் கிடைக்கும். திராட்சை, பேரீச்சம்பழம், அத்திபழம், மாதுளை, ஒலிவ மர பழம் போன்றவற்றை காணிக்கையாக படைப்பார்கள். எனவே முதற்பலன் பண்டிகையின் போது தானியங்களும், சேர்ப்பின் பண்டிகையின் போது பழவகைகளையும் நன்றி காணிக்கையாகப் படைப்பார்கள்.

இந்த பண்டிகைகளானது வெறும் கூட்டுறவை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் கடவுளின் செயல்பாட்டை நினைவு கூர்ந்து நன்றி கூறும் செயல்பாடாகும்.

### *1) கடவுளின் கொடையை நினைவு கூரும் பண்டிகை :*

(லேவி. 23:10)

கொடை (Gift) அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. இங்கே கடவுளின் கொடையானது இஸ்ராயேல் மக்களின் வாழ்வில்

நம்பமுடியாத ஆச்சரியமாக காணப்படுகிறது. (இ.ச. 8:7, 8) வசனங்களில் கடவுள் இஸ்ராயேல் ஜனங்களுக்கு வாக்குரைத்த கானான் தேசத்தின் செழிப்பை விவரிக்கிறார். அடிமையாக சாந்தும், செங்கலும் செய்து, சுமந்து கொண்டிருந்த இஸ்ரவேலருக்கு இது மகிழ்ச்சியான செய்தியாகும். மேய்த்தல் தொழிலை செய்து வந்த இஸ்ரவேலர் எகிப்தில் கட்டிட வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டார்கள். தங்களுக்கு பழக்கமில்லாத வேலை என்றாலும், அடிமைகளைப் போல கட்டாய வேலைச் செய்ய நிர்பந்திக்கப் பட்டார்கள். இந்நிலையில் நீரூற்றுக்களும், தானியங்களும், செல்வமும் நிறைந்த கானான் தேசம் இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது கடவுளின் மாபெரும் கொடையாகும். செழிப்பான சூழல், நல்ல காலநிலை, நல்ல விளைச்சல், நல்ல வருமானம் இவை அனைத்தும் கடவுள் இஸ்ராயேலருக்கு அருளின மாபெரும் கொடையின் வெளிப்பாடுகளே.

கடவுளின் சமூகத்தில் செல்லும்போது காணிக்கைகளோடு செல்வது சிறப்பானதாகும். லேவி. 23:10-ல் கானான் தேசத்தில் செல்லும்போது அறுவடைக்கு ஆயத்தமான பயிரை (வெள்ளாண்மை) அறுவடை செய்து அதின் முதல் கதிர்கட்டை, ஆசாரியனிடத்தில் கொண்டுச் செல்ல வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆசாரியன் அதை கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்துவான்.

இந்நிகழ்வில் ஒரு சிறப்பு உண்டு. அதென்னவெனில், தாங்கள் பயிரிடாத, தாங்கள் பாதுகாக்காத, தங்களுக்கு உரிமையில்லாத பலனை கடவுள் தமது பிள்ளைகளுக்கு கொடுக்கிறார். இதை சிந்திக்கும் போது உரிமையற்றதை எப்படி உரிமை கொண்டாட முடியும் என்று சிந்திப்பதை விட நாம் எண்ணாததையும் கடவுள் நமக்கு தருவார் என்றே சிந்திக்க வேண்டும். எதிரியின் கையில் அடிமையாக வாழ்ந்த மக்களை விடுதலை பெறச் செய்து, தங்களதுச் சொந்த கலாச்சாரத்துக்கே (தொழில்) கொண்டு வந்து அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

இதை சிந்திக்கும் போது நமது விவசாயமும் நமது பலன்களும் நினைவில் வருகின்றன. கடவுள் தமது பிள்ளைகளுக்கு எண்ணாத நன்மைகளை கொடுக்கிறார். நாமோ தந்த கடவுளை மறந்து கொடையை (Gift) மட்டும் பெரிதாக எண்ணுகிறோம்.

நமது பலன்களும், நமது ஆசீர்வாதங்களும் நமக்குரியதல்ல அது கடவுள் நமக்கு கொடையாக தந்தது.

### 2) கடவுளின் அன்பை நினைவு கூரும் பண்டிகை :

(இ.ச. 8:10)

அன்பிற்கும் (love), கொடைக்கும் (gift) ஒற்றுமை உண்டு என்றாலும் இவை இரண்டும் வேறுபட்டவைகளே! அன்பில்லாமல் கொடை இல்லை. கடுமையான கோடையில் விலங்குகளைப் போல

கடினப்படுத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களின் மீது கடவுள் கொண்ட அன்பின் வெளிப்பாடுதான் “விடுதலை”. தமது பிள்ளைகளுக்காக கர்த்தர் செயல்படுத்துகிறார். உணவிற்காக எகிப்தியரிடம் கையேந்த வேண்டும். ஊதியத்திற்காக எகிப்தியரிடம் கையேந்த வேண்டும். ஆனால், இப்போது செழிப்பான தேசத்தில் கடவுள் இவர்களை கொண்டுவிடுகிறார். (இ.ச. 8:7-11) வரையுள்ள பகுதியில், அது செழிப்பான தேசம் என்றும், உணவுக்கு பஞ்சமில்லாத தேசம் என்றும், செல்வத்திற்கு குறைவில்லாத தேசம் என்றும் கூறப்பட்டுள்ளது. இது கடவுளின் அன்பின் வெளிப்பாடே! அடிமை எஜமானாக உயர்த்தப்படுகிறான். வெறுமை முழுமையாக மாற்றப்படுகிறது. இந்த அன்பை என்றென்றும் நினைவு கூர வேண்டும் என்று கடவுள் கட்டளையிடுகிறார் (இ.ச. 8:11).

கடவுளின் அன்பை அனுபவிக்கும் நாம் அதை நினைவு கூர வேண்டும் என்பது கட்டாயமாகும். ஒரு நன்மையை அனுபவிக்கும்போது அதன் காரணத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது. எகிப்தில் அடிமையாக இருந்த வேளையில் இஸ்ராயேலர் தங்களது மொழி, கலாச்சாரம், இறைநம்பிக்கை போன்றவற்றை இழந்தனர். சொந்த தேசத்திற்கு திரும்புதல் அல்லது விடுதலை என்பதை அவர்களால் சிந்திக்கவே முடியவில்லை. ஆனால் கடவுள் அவர்களுக்காக செயல்பட்டார்.

கானான் தேசத்தில் மகிழ்ச்சியோடு விவசாயம் செய்யும் போதும், செழிப்போடு வாழும் போதும் கடவுளின் அன்பை நினைவு கூர வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

இன்றையச் சூழலில் நமது பண்டிகைகள் எப்படிக் கொண்டாடப்படுகின்றன என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். அர்த்தமற்ற ஆடம்பரங்களும், நன்றியற்ற சடங்காச்சார காணிக்கைகளும் புறக்கணிக்கப்பட வேண்டும். அடிமையைப் போல வாழ்ந்த நம்மை கடவுள் மீட்டுக் கொண்டார், நமக்கு புது வாழ்வு தந்தார் என்பதையும் சிந்திக்க வேண்டும். வாக்குரைக்கப்பட்ட கானான் தேசம் இஸ்ராயேலரின் கற்பனையைக் காட்டிலும் உயர்வாயிருந்தது. இதே போன்ற அனுபவங்களைதான் நாமும் நமது வாழ்வில் அனுபவிக்கின்றோம். கடவுளின் சமூகத்தில் நன்றியோடு, மனநிறைவோடு வருவது மிகவும் அவசியமாகும்.

கடவுள் நமக்கு தந்த வாழ்வு, நல்ல வாழ்க்கை, தேவையான ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் நன்றி கூற வேண்டும். கடவுளின் கொடையை, கடவுளின் அன்பை நினைவு கூர்ந்து வாழ்வோம். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**திரு. C. மோகன்**

## இறைவன் திருவுடலாகிய திருச்சபை

2 குறி. 7:1-10 தி.ப. 2:1-10
திபா. 11 லூக். 17:12-15

"ஆண்டவர் தம் தூய கோவி-ல் இருக்கின்றார்." திருபாடல் 11:4

ஆலயம் ஆண்டவரை உணர்வுபூர்வமாக போற்றுதற்குரிய இடம். ஆண்டவர் நம் வாழ்வில் செயல்படுகிறவராக இருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளும் இடமாகவும் நாம் நம்மை பக்குவப்படுத்துதற்குரிய இடமாகவும் இருக்கிறது. இறையில்லத்தில் குடிபுகுவோர் இறை பிரசன்னத்தை அனுபவிக்கவும், இறை அறிவை பெறவும் இறை ஆவியில் நிரப்பப்படவும் சுக வாழ்வில் ஆலயத்திலிருந்து பெறும் அனுபவம் என்ன என்பதை தியானிப்போம்.

### 1. இறைப்பிரசன்னத்தை அனுபவிக்கும் இடம் : 2குறி. 7:1

ஆண்டவரின் மாட்சி கோவிலை நிரப்பியது.

சாலோமன் இறைவனை நோக்கி மன்றாடிய நிலையில் ஆண்டவரின் மாட்சி கோயிலை நிரப்பியதை காண்கிறார். இறை மாட்சியை உணர்ந்த இஸ்ரவேல் மக்கள் தரையில் முகங்குப்புற வீழ்ந்து கடவுளை வழிபட்டார்கள். ஆண்டவர் நல்லவர். அவரது பேரன்பு என்றென்றும் உள்ளது என்று இசைக்கருவிகளை இசைத்து இறை பிரசனத்தை உணர்ந்தவர்களாய் இறைவனை துதித்து பாடினார்கள். தி.பா. 52:8 தாவீது இறை பிரசனத்தை உணர்ந்தபோது இறை இல்லத்தில் இறைவனின் பந்தியைச் சுற்றிலும் காணும் பச்சையான ஒலிவமரக் கன்று போல் இருக்கின்றேன். இறைவன் பேரன்பில் எப்போதும் நம்பிக்கை கொள்ளுகிறேன் என்றும் தான் இறைப் பிரசனத்தை அனுபவிக்கும் இடமாகவும் தனது வாழ்வில் கண்டவற்றை விவரித்து காட்டுகின்றன. நாமும் இறைஇல்ல நாளை நினைவுகூர்ந்து இறைப்பிரசனத்தை அனுபவிக்கும் இடமாகவும் கண்டு இறை அருளைப் பெற்று இறையாட்சிக்கு உரியவர்களாகவும், என்றென்றும் வாழ ஒப்படைப்போம்.

### 2. இறை அறிவு பெறுகின்ற இடம் : இ.ச. 32:7

உன் தந்தையிடம் கேள் அவர் உனக்கு அறிவிப்பார். பெரியோரிடம் கேள் அவர்கள் உனக்கு சொல்வர். இஸ்ராயேல் கடவுளின் வீட்டார் போற்றுதற்குரியவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். அடிமைத்தனத்திலிருந்து மோசே மீட்டுக்கொண்டு வருகையில் பாலை நிலப் பயணம் கடினம் நிறைந்த நிலையில் கடவுளின் வீட்டார் என்பதை

மறந்து செயல்பட்டார்கள். மோசே மதிகெட்ட மக்களே ஆண்டவர் அளிக்கும் கைமாறு இதுதானா உங்களைப் படைத்து உருவாக்கி நிலைநிறுத்தியது இறைவன் அல்லவா என்று அறிவுறுத்துகின்றார். 1 சாமுவேல் 3-ஆம் அதிகாரத்தில் சாமுவேல் இறை அறிவை பெறுகின்ற இடமாக இறை இல்லத்தைக் காண்கிறார். சாதாரணமானவர் இறை அறிவை பெற்றபோது சாதனையாளராகின்றார். நாமும் இறை அருளை பெறுகின்ற இடமாய் இறை இல்லத்தில் ஒன்றிணைந்து இறை அறிவைப் பெறுவோம்.

### *3. இறை ஆவியில் நிரப்பப்படுகிற இடம்* : தி.ப. 2:1,4

இறை இல்லம் இறை ஆவியில் நிரப்பப்படுகிற இடம். பெந்தக்கோஸ்தே நாள் வந்தபோது ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடி வந்தார்கள். அவர்கள் அமர்ந்து இருந்த இல்லம் முழுதும் சத்தம் ஒலித்தது. அவர்கள் தூய ஆவியாரால் ஆட்க்கொள்ளப்பட்டார்கள். இறை இல்லத்தில் ஒருமனதாய்க் கூடி இறைவேண்டல் ஏறெடுக்கும்போது தூய ஆவியாரால் நிரப்பப்படுகிறார்கள். நாமும் இறை இல்லத்தை இறை ஆவியில் நிரப்பப்படுகின்ற இடமாய் நம் வாழ்வில் காண்போம். இறையரசின் முன் சுவையாளர்களாவோம்.

**அருள்திரு. P. நெல்சன்**

D.M.P.B. ஞாயிறு

## தூய ஆவியாரின் செயல்கள்

தி.ப. 1:1-8

**"...உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்."**
**தி.ப. 1:8**

இஸ்ரவேலர்களின் வாழ்வில் மூன்று பெரு விழாக்களில் ஒன்றான கிரேக்க மொழியில் பெந்தக்கோஸ்தே நாள் என்று அழைக்கப்படுகின்ற இந்நாள் "கடந்துச் செல்லுதல்" என்னும் பாஸ்கா விழாவிற்குப்பின் ஐம்பதாம் நாளில் கொண்டாடப்பட்டது. வேளாண்மைச் சார்ந்து தொடங்கப்பட்ட இவ்விழா (வி.ப. 23:16, எண். 28:26, வி.ப. 34:22, லேவி. 23:15) தந்தையாம் கடவுள் இஸ்ரவேலரோடுச் செய்த உடன்படிக்கையினை நினைவு கூரும் நாளாக மாறி (வி.ப. 19:1-16). பின் தூய ஆவியாரை கொடையாகப்பெற்று (தி.ப. 2:3), இம்மண்ணுலகின் புதிய உடன்படிக்கையின் தொடக்க விழாவாக மாறியது.

கிறிஸ்தவராகிய நாம் கொண்டாடுகின்ற இந்த ஐம்பதாம் நாள் பண்டிகையாகியப் பெந்தேகோஸ்தே நாள் என்பது தூய ஆவியாரின் திருநாளாகவேக் கொண்டாடப்படுகிறது.

யோவேல் தீர்க்கத்தரிசி முன்னுரைத்ததும் (யோவேல் 3:18), திருமுழுக்கினர் யோவான் (மாற்கு 1:8), இயேசு கிறிஸ்து அறிவித்ததுமான (தி.ப. 1:4) தூய ஆவியார் இந்நாளில்தான் திருத்தூதுவர்களுக்கு வழங்கப்பட்டார்.

### தூய ஆவியாரை பெற்றுக் கொண்டவர்களின் செயல்பாடுகள்

***1) இறைச்சான்றாளர்களானார்கள் :*** (தி.ப. 1:8)

தூய ஆவியினை பெற்றுக்கொண்டவர்களால் நிச்சயமாக உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்து சான்று கூறாமல் அமைதலாக இருக்க முடியாது. யோவான் 10:16-ல் இத்தொட்டிலைச் சேரா வேறே ஆடுகளும் எனக்கு உள்ளன. அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும். அவைகள் என் குரலுக்கு செவி கொடுக்கும், அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்று கிறிஸ்து கூறிய நம்பிக்கையின் பணியினைச் செய்யவேண்டும்.

தூய ஆவியினை பெற்றுக்கொண்ட திருத்தூதர் பணியாளர்களும், ஆதித்திருச்சபையினரும் இப்பணிகளையேத் தங்கள் பிரதானப் பணியாக மேற்கொண்டனர். தி.ப. 2:5-11-ல் புறவினத்தார் அனைவரும் கேட்கிறவிதமாக அவர்களுடைய பாஷைகளில் பேசி அருட்பணிகளை துவங்கினார்கள்.

தி.ப. 4:8, பேதுரு தூய ஆவியினால் நிறைந்து ஜனத்தின் அதிகாரிகளுக்கும் இஸ்ரவேலின் மூப்பர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கத் துவங்கியதை குறித்து கூறுகின்றது.

தி.ப. 4:31-33 தூய ஆவியினால் நிரப்பப்பட்டபோது தைரியமாக தேவ வசனத்தை பிரசங்கித்தார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்து சாட்சி கொடுத்தார்கள். இதனால் தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகியது (தி.ப. 6:7).

முதன்மை குருவால் இயேசு என்னும் நாமத்தை குறித்து சாட்சி கூற கூடாது என்று எச்சரிக்கப்பட்ட பின்பும் அவர்களால் நற்செய்தி அறிவிப்பதை நிறுத்த முடியவில்லை (தி.ப. 5:28).

இவ்விதமாக பெந்தக்கோஸ்தே நாளில் அருளப்பட்ட தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்டவர்களால் அமைதியாக இருக்க முடியவில்லை. அதனாலேயே இன்று இயேசு கிறிஸ்துவின் திரு உடலாகிய திருச்சபைகள் பூமியின் கடைசி மட்டும் பெருகியிருக்கின்றது.

தூய ஆவியினை பெற்றுக்கொண்டவன்(ள்) என்று கூறிக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் தூய ஆவியானவரின் திருநாளை கொண்டாடிக்கொண்டிருக்கின்ற நாம் திறனாய்வு செய்து சான்றாளர்களாகிடுவோம்.

### *2) இறை வேண்டலில் உறுதியுடனிருந்தார்கள் :*

தூய ஆவியினைப் பெற்றுக்கொண்ட சீஷர்கள் முழுமையாக தங்களை ஆண்டவருக்கென்று ஒப்புக்கொடுத்து இறைவேண்டலில் தரித்திருந்தார்கள். பணிவிடைக்காரர்கள் மூலமாக இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் அருள் செயல்களும் அடையாளங்களும் நடக்க வேண்டும் என்றும், பணிவிடைக்காரர்கள் இறைவார்த்தையை முழுதைரியத்தோடேப் பிரசங்கிக்க வேண்டும் என்றும் இறைவேண்டல் செய்தார்கள் (தி.ப. 4:30).

தங்களுடைய உபத்திரவங்களிலே ஜெபித்தார்கள் (தி.ப. 7:59).

அடுத்தவர்களும் தூய ஆவியினைப் பெறவேண்டும் என்று கூறி ஜெபித்தார்கள் (தி.ப. 8:16).

சீடர்கள் துன்பப்படுகிறபோதும், சிறைக்கு சென்றிருந்தபோதும் சபையார் உருக்கமாக இறைவேண்டலிலே தரித்திருப்பார்கள் (தி.ப. 12:5,12).

இவ்வாறாக எல்லா சூழ்நிலைகளிலும் ஜெபித்ததை இன்னும் அதிகமாக நாம் வேதாகமத்தில் பார்க்க முடியும்.

தந்தை மைந்தன் தூய ஆவியினால் நாமத்தினால் திருமுழுக்கு பெற்ற நாம் அருட்பணிக்களங்களுக்காக, புதிய விசுவாசிகளுக்காக,

அருட்பணியாளர்களுக்காக, வழி நடத்துகின்ற தலைவர்களுக்காக திருச்சபைக்காக, இறைவேண்டல் செய்ய உறுதி கொள்வோர் அப்போஸ்தலர்கள் மற்றும் திருச்சபையாரின் ஜெபங்கள் அனைத்தும் கேட்கப்பட்டது. நமது ஜெபங்களும் கேட்கப்படுமல்லவா!!!

***3) இறைவாக்கை அறிவிக்க அற்பணித்தார்கள் :*** (தி.ப. 2:44,45)

தி.ப. 2:38-ல் நீங்கள் மனம் மாறுங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். இதைக்கேட்டு ஆயிரக்கணக்கில் இயேசுக்கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தூய ஆவியின் வரத்தை பெற்றுக்கொண்ட மக்கள் தங்கள் சுயத்தைப் பாராமல் தங்களுடைய ஆஸ்திகளையும் கூட விற்று ஒவ்வொருவருக்கும் தேவையான அளவிற்கு பகிர்ந்து கொடுத்து மகிழ்ச்சியோடு வீடுகள் தோறும் ஜெபிப்பதிலும், அப்பம் பிட்குதலிலும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி கடவுளைத் துதித்துக் கொண்டிருந்தார்கள் (தி.ப. 44:47). அவர்களுக்குள் ஏழை, பணக்காரன் என்ற எந்த வித்தியாசங்களும் இருக்கவில்லை.

தூய ஆவியினைப்பெற்றவர்கள் நற்செய்தியின் பொருட்டு சிறைக்கு செல்லவும் (தி.ப. 4:37), அடிக்கப்படுவதற்கும், தங்களுடைய இன்னுயிரை கொடுக்கவும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள் (தி.ப. 7:60).

நாமும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்கு பெற்றவர்கள்தானே!!! நம்மிடம் சுயம் காணப்படுகிறதா என்பதை ஆராய்ந்து நற்செய்திக்காக நாம் இதுவரை எதை இழந்திருக்கிறோம்? நமது பெருமைகள்? நமது ஆடம்பரங்கள்? நமது, நான் என்ற அகங்காரங்கள்? நமது உடைமைகள்? உண்மையில் தூய ஆவியினை பெற்றுக்கொண்டவர்கள் நான் என்ற சுயத்தை வெறுத்து நற்செய்திப் பணியில் முழுமையாவோம்.

இன்றைக்கு பெந்தக்கோஸ்தே திருநாளை DMPB நாளாக அனுசரித்து வருகின்ற அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு என்னும் நமது பேராயத்தின் ஒரு பேரியக்கம் தூய ஆவியின் பெலத்தோடு சாட்சிகளாக மாறி, ஜெபத்துடனும், தன்னலமற்ற கொடைகள் மற்றும் தியாகத்தாலும் தமிழ்நாட்டின் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மட்டுமல்லாது வட இந்தியாவின் பல பகுதிகளிலும் சென்று ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்றி வருகின்றது. அதற்கென்றே இறைசான்றாகி இறைவேண்டலில் உறுதியுடனிருந்து நம்மை அற்பணிப்போம்.

**அருள்திரு. S. காட்வின் பேலிஸ்**

N.M.S. ஞாயிறு

## அருட்பணியின் தகவினைத் தக்க வைப்போம்

2 அர. 7:3-10 மாற்கு 16:15-18
தி.ப. 2:37-41

**"அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள்." தி.ப. 2:41**

அருட்பணி 'Mission' என்ற ஆங்கில வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த வார்த்தை கிரேக்க மொழியில் 'அப்போஸ்டோலோ' (Apostello) 'பெம்போ' (Pempo) என்கிற பதத்திற்கு பொருத்தி பார்க்கும் போது அனுப்புதல் (Send) என்று மொழிப் பெயர்க்கப்படுகிறது. அருட்பணி படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைச்சாற்ற ஆண்டவர் அனுப்புகிறவராகவும் தாமே வெளிப்படுகிறவருமாக இருக்கிறார். நம் தேசிய அருட்பணி இயக்கம் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதில் முக்கியமானவர்கள் பேராயர் அசரியா, பால், கென்ஸ்மேன் ஆகியோர் ஆவார். தேசிய அருட்பணி இயக்கத்தரிசனம் இந்தியா கிறிஸ்துவுக்காக என்பதாகும். இயேசு கிறிஸ்துவில் நற்செய்தியை இந்தியர்கள் இந்திய பொருளாதாரம் இந்திய பாரம்பரிய வழிமுறைப்படி வழங்குதல் என்பது நோக்கமாக கொண்டிருக்கிறது. இயக்கத்தில் ஐந்து வித பணிகள் 1) அருட்பணி அறிவித்தல், 2) சமூக சேவை, 3) ஆசிரம பணி, 4) அருப்பணியாளர்களை தெரிந்தெடுத்து பயிற்றுவித்தல், 5) பத்திரிக்கை செய்தி வெளியிடல்.

தேசிய அருட்பணி இயக்கம் நாளடைவில் தேசிய அருட்பணி இயக்கம் இந்தியா என்று பெயருடன் அருட்பணியினை செய்து கொண்டிருக்கிறது என்பதை அருட்பணி ஞாயிறு ஆகிய இன்று அருட்பணி நம் வாழ்வை எவ்விதம் செயலாற்றுகிறது என்பதை தியானிப்போம்.

### *1) அருட்பணி வாழ்வை அர்த்தமாக்குகிறது :* தி.ப. 2:41

மக்கள் அநியாயம் என்னும் இருளில் மூழ்கி வாழ்க்கை என்ன என்பது புரியாமல் அர்த்தமற்ற நிலையில் வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்தோருக்கு அடிப்படை தேவைகளை சந்தித்து அருட் செய்தியினை வழங்கியது. அதன் வழியாக வாழ்வு அர்த்தமாக்கப்பட்டது. தி.ப. 2:41-ல் பேதுரு நற்செய்தி அறிவித்த பொழுது, அறியாமையில் இருந்த பற்பல மக்கள் நற்செய்தி அளித்து வாழ்வை அர்த்தமாக்கி கொண்டார்கள். இன்னும் முடக்கப்பட்டு கிடப்போராய், அறியபடாதோராய் வாழ்வின் அர்த்தம் புரியாதவராய் அலங்கோலமாய் வாழ்கிறவர்களுக்கு அருட்பணியால் வாழ்வை அர்த்தமாக்கி கொள்ள முற்படுவோம்.

**2) அருட்பணி வாழ்வில் அச்சம் நீக்குகிறது :** தி.ப. 11:19

அந்தியோகியா பட்டணம் ஆண்டவரைக் குறித்து அறியப்பட்டிருந்தது. திருத்தொண்டர் ஸ்தேவானின் மரணத்தை தொடர்ந்து ஏற்பட்ட துன்புறுத்தலால் அச்சமுற்று சிதறி போனார்கள். ஆண்டவரைக் குறித்து அறிந்த அருட்தொண்டர்கள் யூதருக்கு அருட்செய்தியை அறிவித்தனர். சைப்பிரசு, சீரேன் ஆகிய இடங்களை சேர்ந்த சிலர் அந்தியோகியாவில் கிரேக்கருக்கு இயேசு கிறிஸ்துவை பற்றி நற்செய்தியை அறிவித்தனர். ஆண்டவரின் கைவன்மயை பெற்றிருந்தார்கள். பெருந்தகையான அச்சமுற்றிருந்த மக்கள் நம்பிக்கை கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர். வாழ்வில் அச்ச நிலையோடு சிதறிப்போயிருந்தோர்க்கு நம்பிக்கையுடன் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் வாழ்வில் அருட்பணி அச்சம் நீக்கியது. அச்ச நிலையோடு இருப்போருக்கு அருட்பணி நம்பிக்கைதந்து அச்சம் நீக்குகிறது.

**3) அருட்பணி வாழ்வை அர்ப்பணிக்கத் தூண்டுகிறது :**
தி.ப. 2:37,38

அருட்பணி அர்த்தமாக்கி அச்சம் தவிர்த்து அர்ப்பணிக்கச் செய்கிறது. தி.ப. 2-ல் பேதுரு நற்செய்தி அறிவித்ததை கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டவர்களாகி நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். நீங்கள் மனம் மாறி உங்கள் பாவங்களிலிருந்து திரும்பி திருமுழுக்கு பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியை கொடையாக பெறுவீர்கள் என்று கூறிய போது தங்கள் வாழ்வை அர்ப்பணித்து திருமுழுக்கு பெற்றார்கள். அருட்பணி வாழ்வை அர்ப்பணிக்க தூண்டியது. நமது வாழ்விலும் இத்தகைய தகவுகளோடு முன்னேறி அர்ப்பணிப்போம்.

அருட்பணி நம் வாழ்வை அர்த்தமாக்குகிறது. நம் வாழ்வில் அச்சம் நீக்குகிறது. வாழ்வை அர்ப்பணிக்க தூண்டுகிறது. இதை உணர்ந்து நம்மை அருட்பணிக்கென அர்ப்பணித்து, ஜெபித்து கொடுத்து முன்னேறிச் செல்வோம். இறை ஆசி பெறுவோம்.

**திரு. J. பிரபின் செல்வமணி**

# விழாக்கால அருளுரைகள்

## சிறுபிள்ளைகளை தடுக்க வேண்டாம்

மாற். 10:13-16

**"இயேசு...சிறுபிள்ளைகள் என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள்..." மாற்கு 10:14**

குடும்பத்தை அழகுபடுத்தி ஆனந்தம் அடைய செய்யும் கடவுளின் அருட்கொடைகள் தான் குழந்தைகள். "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம். மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில்" (தி.பா. 127:3). ஆண்டவர் ஆசியாய் வழங்கி இருக்கும் குழந்தைகளை கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளோடு திருமறையின் பாதையில் வழிநடத்த வேண்டிய கடமை பெற்றோருக்கும், திருமறைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் உண்டு. வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு தடைகளாய் இல்லாமல் படிகற்களாய் பயனுள்ள வாழ்விற்கு உறுதுணையாய் இருக்க வேண்டும்.

பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பம் ஒன்றில் தாயும், இரண்டு பிள்ளைகளும் ஆலய தொழுகைக்கு செல்வது வழக்கம். வேலைக்கு சென்று வரும் தந்தை வீட்டில் இருப்பார். ஒருநாள் தொழுகை முடித்து வீட்டிற்கு வரும்போது தந்தை தொலைகாட்சி பார்த்து கொண்டிருந்தார். குழந்தைகளும் இதனை கவனித்தனர். சில ஆண்டுகள் சென்ற பின்னர் ஓர் ஞாயிற்றுக்கிழமை தாய் தன் பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்த போது ஒரு குழந்தை சொன்னதாம், "இன்று ஒரு நாள் மட்டும் பள்ளிக்கூடத்தில் விடுமுறை, ஆகவே நான் வீட்டில் இருந்து ஓய்வெடுத்து கொண்டு தந்தையோடு கூட தொலைகாட்சி பார்க்கிறேன்" என்று. இன்று அநேக குடும்பங்களில் வளரும் சிறுபிள்ளைகளை தடுக்க வேண்டாம் என்று கூறின சிந்தனையை சரியாய் புரிந்து கொண்டு நாம் செய்ய வேண்டிய கடமைகளை தியானிப்போம்.

### *வரவிடுங்கள்*

சிறு பிள்ளைகளை இயேசு தொடர வேண்டும் என்று சிலர் தங்கள் குழந்தைகளை இயேசுவிடம் கொண்டு வந்தனர். யூத பாரம்பரியத்தில் குழந்தைகளும், பெண்களும் அற்பமாக எண்ணப்பட்டாலும் யூத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை யூத ரபிமார்களிடம் ஆசி பெற்று கொள்ள கொண்டு வருவது வழக்கம். அப்படி இயேசு கிறிஸ்து தொட்டு ஆசீர்வதிக்கும்படி குழந்தைகளை கொண்டு வந்த பெற்றோர்களை சீடர்கள் அதட்டினார்கள். இயேசு இதனை கண்டு கோபம் கொண்டு, சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களை தடுக்காதீர்கள் என்று சொன்னார். மத்தேயு 18:14-ல் இந்த சிறுபிள்ளையை போல தம்மை

தாழ்த்தி கொள்பவரே விண்ணரசில் மிக பெரியவர் என்று சீடர்களுக்கு மாதிரியாக முன்னிறுத்தினார். அப்படிப்பட்ட ஆற்றல் கொண்ட குழந்தைகளை ஆண்டவரின் ஆற்றல் காண ஆலயத்திற்கு வர விடுங்கள், தடை செய்யாதிருங்கள்.

தடை எங்கே தொடங்குகிறது என சிந்திக்கும் போது பள்ளிப்பாடம் மட்டும் பயனுள்ளது என நினைக்கும் போது ஆண்டவரிடம் வர தடை போட்டு Tution, Coaching Class-க்கு அனுப்பி விடுகிறோம். பதவிகள் பறிபோகும் போது பரமனை தேட பிள்ளைகளுக்கு தடை போட்டு வீட்டிலேயே இருந்து விடுகிறோம். போட்டித் தேர்வுகளிலே பரிசு கிடைக்க தவறிய காலங்களில் திருமறைப் பள்ளிக்கு இனி போக வேண்டாம் என தடை போடுகிறோம். சுயநலத்திற்காக பிள்ளைகளை கடவுளிடம் வருகிறதற்கு தடை செய்யாமல் பார்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. இயேசுவின் பெற்றோர் இயேசுவை ஆலயத்திற்கு வரவிட்டதினால் தான் 12-ம் வயதில் ஆலயத்தில் ஆயர்கள் நடுவில் அமர்ந்திருந்து கற்றுக் கொண்டார்.

### வளரவிடுங்கள்

கருவில் இருந்து பூவுலகில் வந்து குழந்தை வளர்வதை காண்பதில் பெற்றோருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டு. சந்திர மண்டலத்தில் மனிதன் எப்போது காலடி எடுத்து வைத்தான் என்பதை விட தன் குழந்தை எப்போது முதல் அடி எடுத்து வைக்கும் என வளரும் குழந்தையை காண்பது ஆனந்தம். வளர்ச்சி என்பது உடல், அறிவு, ஆன்மீகம் சார்ந்து இருக்க வேண்டும். கிறிஸ்தவ நெறிமுறையான ஒழுக்கம், அன்பு, பொறுமை, தாழ்மை, நிறைந்த பண்புகளோடு வளர வேண்டும். பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கி சமுதாயத்தில் தலைசிறந்த மனிதர்களாக மாற்றிவிடும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. எபேசியர் 6:4-ல் "தாய் தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்து திருத்தி அறிவு புகட்டி, வளர்த்து வாருங்கள்" என்று.

தோட்டத்தில் நடப்படுகின்ற செடியினை அடிக்கடி பிடுங்கி பார்த்தால் அது வளராமல் மடிந்து போகும். அது போல தான் அடிக்கடி பிள்ளைகளை கோபப்படுத்தி, கட்டாயப்படுத்தும்போது அது வாழ்வில் வளர்வதற்கான தடையாய் மாறுகிறது. I சாமுவேல் 3-ம் அதிகாரத்தில் அன்னாள் சாமுவேலை சீலோ ஆலயத்தில் ஆசாரியராக இருந்த ஏலியினிடத்தில் கொண்டு விடுகிறார். சாமுவேல் இறைச்சத்தம் கேட்டு ஆலயத்தில் வளர்ந்தார். "சாமுவேல் வளர்ந்தான்; ஆண்டவர் அவனோடு இருந்தார்" (I சாமுவேல் 3:19). சாமுவேலைப் போல ஆண்டவரின் சமூகத்தில் பிள்ளைகள் வளர வேண்டும். திருமறைப்பள்ளியின் வழியாக சொல்லப்படுகின்ற இறை வசனத்தின்படி வளர வேண்டும். "ஆண்டவரே! பேசும், உம் அடியான் கேட்கிறேன்" என்ற இறை அனுபவத்தோடு பிள்ளைகள் வளர தடை செய்ய வேண்டாம்.

## வழி காட்டுங்கள்

சாலையின் ஓரத்தில் இருக்கும் வழிகாட்டு குறியீடுகள் பயணிகள் தவறி போய் விட கூடாது என்பதற்காக, பிள்ளைகள் சரிவர பாதையில் பயணிக்க வழிகாட்டிகளாய் பெற்றோரும், திருமறைப்பள்ளி ஆசிரியர்களும் இருக்க வேண்டும். வயலில் நாற்றை நட்டுவிட்டு காலம் கடந்த பின்பு தண்ணீர் பாய்ச்சி பயனில்லை. அதுபோல தான் குழந்தை பருவத்தில் கண்டித்து, தண்டித்து நல்வழி காட்டி வளர்க்கவில்லை என்றால் வளர்ந்த பின் வழிகாட்டினால் போதும் என்று நினைப்பது பயனில்லாமல் போகும். நீதிமொழிகள் 22:6-ல் "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்". தன் குழந்தைகளை கடிந்து கொள்ளாமல் விட்டதால் ஏலியின் பிள்ளைகள் மேல் சாபம் வந்தது.

பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியை காட்டுவதும், அவர்கள் நல்வாழ்விற்கு அடித்தளமாக அமைவதும் பெற்றோர் மற்றும் ஆசிரியரின் முன்மாதிரியான வாழ்க்கையாகும். ஆனால் இன்று அநேக பெற்றோரும், திருமறைப்பள்ளி ஆசிரியர்களும் தவறான மாதிரிகளை காண்பித்து பிள்ளைகளின் வளர்ச்சிக்கு தடைகளாக மாறிவிடுகிறார்கள். டாக்டர் பில்லி கிரகாம் ஒருநாள் காலை வேளையில் வீட்டின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருக்கும் போது பனிபடர்ந்த பாதையின்மீது மனித காலடி தடம் ஒன்று கண்டார். அந்த காலடி தடத்தின் மீது சிறு குழந்தை ஒன்று தன் கால் அடிகளை வைத்து நடந்து வரும் காட்சி கண்டார். அவர் கூறும் போது "பிள்ளைகள் பெற்றோரின் அடிச்சுவடுகளில் பின் தொடருகிறார்கள். பெற்றோரின் வார்த்தைகளும், செயல்பாடுகளும் வாழ்க்கை முறைக்கு ஏற்றதாக இல்லாமல் முரண்படும்போது அது பிள்ளைகளை பாதிக்கிறது."

"குழந்தைகளே! திருமறையின் ஒவ்வொரு பக்கங்களையும் என் கண்ணீரால் நனைத்திருக்கிறோம். நீங்கள் அதிலே விலையுயர்ந்த முத்துக்களை காண்பீர்கள்" என்று சீகன்பால்க் ஐயரின் தாய் தன் பிள்ளைகளை போதித்து வளர்த்தார்கள். "என் பிள்ளைகள் உண்மைக்கேற்ப வாழ்ந்து வருகிறார்களெனக் கேள்விப்படுவதைவிட மேலான பெருமகிழ்ச்சி எனக்கு இல்லை". (3யோவான் 4). ஈன்ற போது கிடைக்கும் மகிழ்சியை விட சான்றோன் என கேட்கும் போது ஒரு தாய் அதிக மகிழ்ச்சியடைகிறாள். அந்த மகிழ்ச்சியின் அனுபவத்தை பெற ஆண்டவருடைய ஆசிகளை குழந்தைகள் பெற வேண்டும். ஆகவே சிறு பிள்ளைகளுக்கு தடைகளாய் இல்லாதபடி குழந்தைகளை ஆண்டவரிடம் வர விடுவோம்; ஆண்டவரின் ஆலயத்தில் களங்கமில்லா திருவசனத்தில் வளரவிடுவோம். ஆண்டவரின் பிள்ளைகளாய் வாழ நல்ல மாதிரிகளாய் இருந்து நல்வழியில் நடக்க வழி காட்டுவோம்.

**திரு. C. ஜெபக்குமார்**

# இளம் முயற்சியாளரின் நம்பிக்கை, பற்றுறுதி, முயற்சி

## THE HOPE, FAITH AND EFFORT OF A YOUNG ENDEAVOURER

I சாமுவேல் 17:32-50

**"...இந்த பெலிஸ்தியனை எதிர்த்து போரிட உன்னால் இயலாது, நீயோ இளைஞன். ஆனால் அவனோ தன் இளவயது முதல் போரில் பயிற்சியுள்ளவன்." Iசாமுவேல் 17:33**

ஆபிரகாமோடு அபிமலேக்கு பெயர்செபாவில் உடன்படிக்கை செய்துவிட்டு தன் படைத்தலைவனோடு திரும்பி சென்று நெடுங்காலம் குடியிருந்த ஒரு நாடு பெலிஸ்தியர் நாடு (தொடக்க நூல் 21:32-34). இஸ்ரவேலர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தப்பட்ட போது பெலிஸ்தியர் நாட்டு நெடுஞ்சாலை தான் நேர் வழி என்றாலும் ஆண்டவர் இம்மக்கள் பெலிஸ்தியரின் போரைக் கண்டு மனம் தளர்ந்து எகிப்திற்கு திரும்பி விடுவார்கள் என்று பாலைநிலம் வழியாக செங்கடலுக்குப் போகச் செய்தார் (விடுதலைப்பயணம் 13:17-18). Robert Drews என்பவர் பெலிஸ்தியர்களை "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில்" வாழ்ந்த இஸ்ரவேலர் அல்லாதவர்கள் என்று கோடிட்டுள்ளார். (On the basis of the LXX'S regular translation into "allophyloi". Robert Drews states that the term "Philistines" means simply "non-Israelites of the Promised Land" when used in the context of Samson, Saul and David). ஆகவே இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் அடிப்படையாக இடத்திற்காகவும், பல விதமான உரிமை போராட்டங்களுக்காகவும் போர் நடைபெற்று வந்தது.

சாமுவேல் இஸ்ரவேலருக்கு ஆண்டவரின் இறைவாக்கினராக நியமிக்கப்பட்டு (1 சாமுவேல் 4:20), இறைவாக்கினராக இருந்த காலகட்டத்திலும் பெலிஸ்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் போர் நடைபெற்று வந்தது. பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலரை தொடர்ச்சியாக வீழ்த்தி வந்தனர் (I சாமுவேல் 4:2-10; 7:7). ஆனால் சாமுவேல் இஸ்ரவேலருக்காக ஆண்டவரிடம் மன்றாடிய விண்ணப்பம் இஸ்ரவேலர் பெலிஸ்தியரைத் தோற்கடித்தனர். சாமுவேலின் வாழ்நாள் முழுவதும் ஆண்டவரின் துணை இருந்ததின் விளைவாக பெலிஸ்தியரின் கையிலிருந்து இஸ்ரவேலர் தங்கள் எல்லைப் பகுதியினை மீட்டுக் கொண்டனர் (Iசாமுவேல் 7:8-14). இஸ்ரவேலரின் முதல் மன்னராக சவுல் அபிஷேகப்படுத்தப்பட்டார். தொடர்ந்து இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் நீண்ட நாட்களாக பல்வேறு தருணங்களில் போர் நடைபெற்று வந்தது (I சாமுவேல் 13:14).

ஒரு தருணத்தில் சவுலின் மகன் யோனத்தானின் வீரச்செயலால் பெலிஸ்தியர் தோல்வியை தழுவினர் (I சாமுவேல் 14:14). ஆனாலும் சவுலின் வாழ்நாள் இறுதிமட்டும் இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் கடும்போர் நடைபெற்று வந்தது (I சாமுவேல் 14:52).

இச்சூழ்நிலையில் சவுலிடமிருந்த ஆண்டவரின் ஆவி விலகி அவன் துன்புற்ற நிலையில் வாடிக்கொண்டிருந்தான். அவன் துயர் நீங்கி நலமடைய யாழ் வாசிக்க அழைத்து வரப்பட்டவனே ஈசாயின் 8-வது மகனாகவும், சாமுவேலால் திருப்பொழிவு செய்யப்பட்டு ஆடு மேய்த்துக்கொண்டிருந்தவனாகிய தாவீது (I சாமுவேல் 16:13, 16:23). பெலிஸ்தியரோ எருசலேம் நகரத்திலிருந்து தென்மேற்கு திசையில் 27 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள யூதாவிலுள்ள சோகசோ என்கிற இடத்தில் இஸ்ரவேலருக்கு எதிராக ஒன்று திரண்டனர். இது இஸ்ரவேலருக்கு சொந்தமான இடம். பெலிஸ்தியர்கள் எபேசு தம்மில் முகாமிட்டு இஸ்ராயேலரை தாக்கி வந்தனர். இந்த பெலிஸ்தியர்கள் தங்கள் முழுப்படை பெலனையும் ஒன்று சேர்த்து இஸ்ரவேலருக்கு எதிராக பயன்படுத்தாமல் அனைத்து படைபலத்தையும் உள்ளடக்கியவராகவும், பெலசாலியாகவும் போர் புரிவதில் வல்லவருமாகிய காத்து நகரை சேர்ந்த கோலியாத் என்னும் வீரனை (I சாமுவேல் 17:4-7). இஸ்ரவேலருக்கு எதிராக பெலிஸ்தியர் களம் இறங்கினர். சவுலோடு தாவீதின் சகோதரர்கள் பெலிஸ்தியரை எதிர்த்து போராட போருக்கு சென்றிருந்தனர். ஆனால் தாவீதோ சவுலை விட்டு விலகி மறுபடியும் பெத்லேகேமில் தனது தகப்பனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். ஈசாய் தன் மகன்களுக்கு உணவு கொண்டு செல்லும்படியாக தாவீதை போர் நடைபெறும் இடத்திற்கு அனுப்பினார். அங்கு கோலியாத் 40 நாள் இரவு பகல் இஸ்ரவேலருக்கு எதிராக தொடர்ந்து சவால் விடுத்தும் வந்ததை தாவீது கேட்டு அதைக்குறித்து விசாரித்தான். அப்போது தாவீதின் மூத்த சகோதரன் எலிபாயு தாவீதை கண்டித்தான். ஆனால் தாவீது அதைப் பொருட்படுத்தாது இஸ்ரவேலருக்கு தைரியமூட்டி பெலிஸ்தியனுக்கு எதிராக போர் செய்ய போகிறேன் என்று கூறினான் (I சாமுவேல் 17:17-32). அப்போது சவுல் தாவீதை பார்த்து கூறுகிறான், "... இந்த பெலிஸ்தியனை எதிர்த்து போரிட உன்னால் இயலாது. நீயோ இளைஞன் ஆனால் அவனோ தன் இளவயது முதல் போரில் பயிற்சியுள்ளவன்" (I சாமுவேல் 17:31). இரண்டு இளைஞர்கள் ஒருவன் கோலியாத், இன்னொருவன் தாவீது இங்கே கோடிட்டு காட்டப்படுகின்றனர். பலமுள்ளவன், பலவீனன், திறமையுள்ளவன், திறமையற்றவன், பயிற்சியுள்ளவன், பயிற்சியற்றவன் என்பது போன்று பல்வேறு வித்தியாசங்கள் இங்கே வெளிப்படுத்தப் படுகின்றது. ஆனால் தாவீதோ இச்சந்தேகங்கள், குழப்பங்கள், தடைகள் எல்லாம் மேற்கொண்டு இஸ்ரவேலருக்கு பெலிஸ்தியர் மூலமாக நடைபெற்று

வந்த பல நூற்றாண்டு போரிலிருந்து மீட்பையும் குறிப்பாக அனைவரும் பயந்து கலங்கி கொண்டிருந்த கோலியாத்தை சாதாரண கவண் மற்றும் சிறிய கவனால் மேற்கொள்கிறான். சவுல் தாவீதை குறித்தும், அவனது தோற்றத்தையும், பின்னணியத்தையும் வைத்து அளித்த மதிப்பீடு தவறானதாக மாறி, தாவீது ஒரு இளைஞனாக வெற்றி காண அவனில் காணப்பட்ட நம்பிக்கை, பற்றுறுதி, முயற்சிகள் என்ன என்பதையும் சிந்திப்போம்.

### 1. பெற்றோருக்கு கீழ்படிந்து பணிவிடைகளை நிறைவேற்றிய இளைஞன் : (A Obedient Young Boy)

தாவீது தகப்பனார் அழைக்கும் போதெல்லாம் கீழ்படிந்தவர் (I சாமுவேல் 16:12). தகப்பனார் தாவீதை சவுலின் அரண்மனைக்கு அனுப்பும்படியான நிர்பந்தம் ஏற்ப்பட்ட போது தகப்பனாரின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். (I சாமுவேல் 16:1920). தகப்பனார் இல்லத்தின் கடமைகளை நிறைவேற்ற சொல்லும் போது மறுக்காமல் அதை நிறைவேற்றினார் (I சாமுவேல் 17:17-20). இது இன்று ஒரு இளைஞருடைய அடிப்படை வெற்றிக்கான முதற்படி. பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது என்பது எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது (எபேசியர் 6:4). பெற்றோருக்கு கீழ்படிதல் இளையோர்களுக்கு பல வெற்றிகளை காண, உயர்வுக்கு நேராக வழி நடத்தப்படுவதற்கு உதவும்.

### 2. பல திறமைகளை வளர்த்த இளைஞன் : (Equipped with Various Skills)

கவண் பயன்படுத்துவதில் திறமையுள்ளவர்கள் பென்னியமீன் கோத்திரத்தார் (நீதிதலைவர்கள் 20:16). ஆனால் யூதா கோத்திரத்தை சார்ந்தவர்களோடு தாவீது நட்புறவு ஏற்படுத்தியதோடு அவர்கள் கலை திறமைகளை கற்றுள்ளார். தாவீதின் சகோதரர்கள் இவரை ஆடுமேய்க்க மாத்திரமே வாய்ப்பளித்தனர் (I சாமுவேல் 17:28-29). ஆனால் தாவீதை பெலிஸ்தியனாகிய கோலியாத்தை வீழ்த்தும் திறமையை உள்ளடக்கியவனாக காணப்பட்டான். இசை கலை ஓர் முக்கிய கலை. இசை நோயுற்றவர்களும் மன அமைதியில்லாதவர்களுக்கு உற்ற நண்பனாக காணப்படுகிறது. சவுல் இச்சூழலில் அகப்பட்டபோது தாவீதை அழைத்து இசைமீட்டி ஆறுதலை காணச் செய்தனர் (I சாமுவேல் 16:23). திருமறையில் திருப்பாடகர் தாவீதின் பாடல்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இலக்கிய வரலாற்றில் சிறந்த இலக்கியமாகவும் இடம் பெற்று உள்ளது என்றால் சாதாரண ஆடை மேய்க்கும் பணியோடு தன்னை இசை மீட்டுதல் மற்றும் பாடல் எழுதுவதில் அதிக திறமையுள்ளவராக மெருகேற்றி உலகத்திற்கு அடையாளம் காட்டியுள்ளார். 25-11-2016 தினதந்தி நாளிதழ்

பக்கம் 13-ல் தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் இளையோர் 82.36 லட்சம் என்று தமிழக அரசு தகவல் அளித்துள்ளது. இளையோர் இன்று இவ்வித சவாலை மேற்கொள்ள தங்கள் திறமைகளை பல்வேறு துறைகளில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### *3. தன் திறமையில் நம்பிக்கையுடைய இளைஞன் :*

(Confident in His Ability)

சவுல் தாவீதை போருக்கு இயலாதவன் என்றும் கோலியாத்தை போருக்குரிய பயிற்சியை பெற்றுள்ளவன் என்று கூறியபோது தனக்குள் இருக்கிற திறமைகளை தன் அனுபவங்களோடு ஒப்பிட்டு சவுல் புரிந்துக்கொள்ளும் விதத்தில் வெளிப்படுத்தினார். மாத்திரமல்ல, தனக்கு பழக்கமானவைகளையும், தன்னால் அணிய இயலாத போர் உபகரணங்களையும் தெளிவாக எடுத்துக்கூறி தன் திறமையில் தனக்கு இருக்கும் பெரிய நம்பிக்கையை அனைவரும் புரிய வைத்து வெற்றிகண்டார் (I சாமுவேல் 17:33-39). இன்று இளையோர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், தங்களால் இயன்ற திறமையை வெளிப்படுத்த முயலும் நம்பிக்கையில் உறுதியாயிருக்க வேண்டும்.

### *4. தெரிந்தெடுப்பதில் துல்லியம் காட்டிய இளைஞன் :*

(Accuracy in Selection)

கோலியாத்தை எதிர்க்கொள்ள புறப்பட்ட போது அவனுக்கு கொடுக்கப்பட்ட ராணுவ தளவாடங்களைக் காட்டிலும் தனது வெற்றிக்குரியதை கவனமாக தெரிந்தெடுத்தான். சாதாரண ஐந்து கூழாங்கற்களைத் (I சாமுவேல் 17:40). தேர்ந்தெடுத்தலும் தன் வெற்றிக்கு அது உதவும் என்கிற துல்லியம் அவனது தெரிந்தெடுத்தலில் காணப்பட்டது, வெற்றியும் கண்டான். ஆனால் இன்று இளையோர் பல சுக போக மோகத்தில், கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்க்கை துணை தெரிவுச்செய்வதில் துல்லியமில்லாமல் பணத்துக்கும், புகழுக்கும் அடிமையாகி இன்று வெற்றியுள்ள வாழ்வுக்கு கடினப்படுகின்றனர். வாழ்வின் ஒவ்வொரு நிலைகளை தெரிந்தெடுப்பதிலும் இளைஞர்கள் துல்லியமாக இருக்க வேண்டும்.

### *5. ஆண்டவரை சார்ந்து முன்னிலைப்படுத்திய இளைஞன் :*

(Giving Priority to God in all the Endeavour)

சவுலிடம் தன்னை தப்புவிப்பது தன் திறமையோ பலமோ அல்ல என்பதை எடுத்துக்கூறி ஆண்டவரை சார்ந்து இம்முயற்சியில் தாவீது ஈடுபடுவதை தெளிவுப்படுத்தினார் (I சாமுவேல் 17:37). கோலியாத் தாவீதின் தோற்றத்தையும், தாவீதின் ஆண்டவரையும் ஏளனப்படுத்தினபோது கோலியாத்திடம் அவன் இகழ்ந்துக் கொண்டிருக்கும் ஆண்டவரின்

நாமத்திலேயே கோலியாத்தை எதிர்த்து வந்ததை வெளிப்படையாக, தைரியமாக, தீர்க்கமாக கூறி ஆண்டவர் மேல் தான் கொண்டுள்ள அளவற்ற பற்றையும், நம்பிக்கையும் வெளிப்படுத்தி தனக்குள் குடியிருக்கிற ஆண்டவரின் வல்லமையினை பறைசாற்றி வெற்றிக்கண்டான்.

## *நிறைவுரை :*

இளையோர்கள் வீரரின் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர் (திருப்பாடல்கள் 127:4) என்பதை திருமறை உறுதியாக கற்றுதருகிறது. ஆனால் இளையோர்கள் தங்கள் வெற்றிக்கு தங்களை ஆயத்தப்படுத்தி, துல்லியமான முயற்சிகளை மேற்கொண்டு ஆண்டவரை சார்ந்து வாழாவிடில் வெற்றி கடினமாக மாறிவிடும். இளைஞனாகிய தாவீதின் சில மாதிரிகளை பின்பற்றி சில நூற்றாண்டு தோல்விகளை வெற்றியாய் மாற்றிய வண்ணம் இளையோர் தங்கள் அழகான கனத்துக்குரிய வாழ்வை கிறிஸ்துவுக்குள் வெற்றியாய் மாற்றுவோம்.

**அருள்திரு. R. டட்ஸ் ஞான றாபி**

## தெபோரா

நீதித்தலைவர்கள் 4:1-5:31

**"எழுந்திடு! தெபோரா! எழுந்திடு! பாடல் ஒன்று பாடு!" நீதி. 5:12**

மோசேயின் மரணத்துக்குப் பின் இஸ்ரயேலரை யோசுவா வழி நடத்தினார். யோசுவா இறந்தபின் இஸ்ரயேலரை வழிநடத்த சரியான தலைவர்கள் இல்லை. அவ்வப்போது பல நீதித்தலைவர்களை ஆண்டவர் ஏற்படுத்தினார். ஆனால் இஸ்ரயேல் மக்கள் நீதிதலைவர்களின் சொல்லைக் கேளாமல் ஆண்டவரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். ஒரு நீதித்தலைவர் மரணமடைந்ததும் அந்நிய வழிபாடுகளைப் பின்பற்றி தங்கள் முன்னோர்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்தார்கள். (நீதி. 2:19) நீதித்தலைவரான ஏகூத் மரணமடைந்தபின்பு இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால் கடவுள் அவர்களை யாபீன் என்னும் கானானியருடைய அரசரின் கையில் ஒப்புக் கொடுத்தார். அவனுடைய படைத்தளபதிக்கு சிசெரா என்று பெயர். அவனுக்குத் தொள்ளாயிரம் இருப்பு ரதங்கள் இருந்தன. அவன் இஸ்ரயேல் புத்திரரை 20 வருடம் கொடுமையாய் நடத்தினான். மக்கள் சமாதானமற்ற நிலையில் வாழ்ந்தனர். அவர்கள் ஆண்டவரை நோக்கி முறையிட்டனர். கருணை உள்ளம் கொண்ட கடவுள் இஸ்ரயேலரை விடுவிக்க இஸ்ரயேலின் தாயாக தெபோராளை எழுப்பினார். தெபோராள் என்பதன் பொருள் 'தேனீ' என்பதாகும்.

### *தெபோராள் ஓர் நீதித் தலைவர்*

இஸ்ரயேலின் 4-வது நீதித் தலைவரான தெபோராள். நாட்டுப் பற்று மிகுந்தவர். இவர் லபிதோத்தின் மனைவி. பேரீச்ச மரத்தின் கீழ் குடியிருந்தவர். அங்கே இஸ்ரயேல் மக்கள் அவரிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள் (நீ.த. 4:4, 5) அந்நாட்களில் இஸ்ரயேலை ஆட்சி செய்ய தலைவர்கள் இல்லாததால் மக்களின் அவலநிலையைக் கண்டு ஒதுங்கி விடாமல் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்க நீதித் தலைவராக முன்வந்தார். இஸ்ரயேலரின் நிம்மதியற்ற வாழ்வுக்கு முடிவுகட்ட தெபோராள் விரும்பினார்.

### *தெபோராள் ஓர் இறைவாக்கினர் :*

பெண்களையும் கடவுள் இறைவாக்கினர்களாகப் பயன்படுத்தினார். தெபோராள், மிரியாம், உல்தாள், நொவதியாள், அன்னாள், பிலிப்பு என்னும் சீடரின் 4 குமாரத்திகள் ஆகியோர் பெண்

இறைவாக்கினர்கள் ஆவார்கள். கடவுளை தெபோராளோடு போருக்குத் தலைமையேற்றுச் செல் என்று பேசினார். எதிரியான சிசெராவை ஒரு பெண்ணின் மூலமாக அழிப்பேன் என்றும், போரின் வழிமுறைகளையும் அவருக்குப் போதித்தார். எனவே தெபோராள் நப்தலியில் உள்ள கேதேசியிலிருக்கிற அபினோகாமின் மகனாகிய பாராக்கை அழைத்து, பதினாயிரம் பேரை கூட்டிக்கொண்டு தாபோர் மலைக்குப் போகும்படியாகவும், அங்கே யாபீன் அரசருடைய படைத்தளபதியாகிய சிசெராவுடனும், அவனது வீரர்களுடனும் போரிடப் பண்ணும்படியாகவும் கடவுள் கட்டளையிட்டார் என்றும் கூறினார். (நீ.த. 4:6)

தெபோராள் இறைவாக்கினராக இருந்தபடியால் பாராக் அவரது வார்த்தையை நம்பிக் கீழ்ப்படிந்தார். ஆனால் பாராக் ஒரு நிபந்தனையை கூறுவதைக் காண்கிறோம். 'நீ என்னோடே வந்தால் போவேன். என்னோடே கூட வராவிட்டால் நான் போகமாட்டேன்' என்றார். (நீ.த. 4:8) இறைவாக்கினராகிய அவர் அவ்வப்போது அளிக்கும் ஆலோசனையை அறிந்து செயல்படவே பாராக் தெபோராளை அழைத்தார். ஏனெனில் தனக்கு எதிராக வருவது சாதாரண படையல்ல. சிசெராவின் படை பெலத்தது. அந்தப் பெரிய படைக்கு முன் பாராக்கின் படை என்ன செய்ய முடியும். கடவுளின் ஆலோசனைப்படி நடந்தால் மட்டுமே வெற்றி பெறமுடியும் என்பதை அறிந்த பாராக், தெபோராளை போருக்கு தன்னுடன் வர அழைத்தார்.

## *தெபோராள் தலைமைத்துவப் பண்புடையவர் :*

நீ.த. 4:9, 10 இதுவரை தலைமைப் பொறுப்பேற்று நியாயம் விசாரித்த அவர் இப்போது போருக்குத் தலைமை தாங்குகிறார். அவர்கள் போருக்கு ஆயத்தமாகிற செய்தியை சிசெரா அறிந்தவுடன் அவரும் அவருடைய சகல படைகளும் தாபோர் மலையின் அடிவாரத்தில் இருக்கும் சீசோன் பள்ளத்தாக்குக்கு வந்தனர்.

நீ.த. 4:14-23 கடவுள் இஸ்ரயேலருக்காக போரிட்டார். இஸ்ரயேலர் வெற்றி பெற்றனர்.

## *தெபோராள் ஒரு சிறந்த பாடகர் :*

பழைய ஏற்பாட்டில் மரியாளும், தெபோராளும் சிறந்த பாடகர்களாக விளங்கினர். தெபோராள் போரில் வெற்றி பெற்றதும் கடவுளைப் போற்றிப் பாடினார். (நீ.த. 5) தங்கள் உயிரை எண்ணாமல் போர்க்களத்தில் துணிச்சலோடு போர் செய்த அனைவரையும் குறித்துப் பாடினார். கடவுளில் அன்பு கூருகிறவர்கள் வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக் கடவர்கள் (நீ.த. 5:31) என்று பாடினார். தெபோராள் மங்கியெரிந்த திரியாக அல்ல. வல்லமையோடே உதித்த சூரியன். ஒரு தெபோராள் வல்லமையாக எழும்பின படியால் 40

வருடங்கள் நாடு அமைதியாய் இருந்தது. இஸ்ரயேலர் சமாதானத்தோடு வாழ்ந்தார்கள். கடவுள் தனக்குக் கொடுத்த நியாயம் விசாரிக்கும் அறிவு, இறைவாக்குரைக்கும் வரம், தலைமைத்துவப்பண்பு, பாடல் பாடும் வரம் எல்லாவற்றையும் சமுதாயத்துக்காகப் பயன்படுத்தினார். தெபோராளைப் போல நாமும் துன்பப்படும் மக்களுக்காக பணி செய்ய நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

எஸ்தர் யூதகுல மக்கள் அழிந்து போகாத படி அவர்களை பாதுகாக்க தன்னுடைய உயிரையே துச்சமாக்க கருதினார். (எஸ்தர் 4:16). யூதகுல மக்களை பாதுகாத்தார்.

**அருள்திரு. பேபி கமலா ஜஸ்டஸ்**

## இறைப்பற்றாளர் கொர்நே□யு

**CORNELIUS: A DEVOTED MAN**

தொ. நூல் 22:1-14 தி.ப. 10:1-12
திபா. 32 லூக். 4:16-20

**"அவர் இறைப்பற்றுள்ளவர்; தன் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர்; மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர்; இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தவர்''.** திப 10:2

யார் இந்த கொர்நேலியு? இவர் இத்தாலி தேசத்தை சார்ந்த ஒரு ரோம போர் வீரர். இவர் நூற்றுக்கு அதிபதி. புதிய ஏற்பாடு வரலாற்றில் புறஜாதியாரில் வந்த முதல் கிறிஸ்தவர். தேவபக்தியில் வளர்ந்த மனிதர் என்று திருமறை சுட்டிக்காட்டுகிறது.

அனைத்து மக்களுக்கும் ஓர் ஆசை உண்டு. நான் வளர வேண்டும், மேலும் வளர வேண்டும். சிலர் வாழ்க்கையிலே இதனை குறிக்கோளாக முன்வைத்து செயல்படுவார்கள். எதிலே வளர வேண்டும்? சிலருக்கு கல்வியிலே வளர வேண்டும், சிலருக்கு தொழிலிலே வளர வேண்டும், சிலருக்கு வேலையிலே வளர வேண்டும், சிலருக்கு அரசியலிலே வளர வேண்டும், சிலருக்கு விளையாட்டிலே வளர வேண்டும். இப்படியாக ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒன்றில் நான் வளர்ந்து கொண்டே போக வேண்டும் என்று நினைத்து அதற்கென்றே தங்களுடைய முயற்சிகளை செயல்படுத்துவார்கள்.

ஓர் நாள் ஒரு தாயார் தன்னுடைய 4-வயது மகளை கல்விக்கூடத்திற்கு தன்னுடைய நான்கு சக்கர வாகனத்தில் தன்னுடைய இருக்கைக்கு அருகாமையில் இருக்கவைத்து அழைத்து சென்றார். தாயார் ஓர் மருத்துவர். ஆகவே தன்னுடைய Stethoscope அருகாமையில் இருந்தது. தன்னுடைய மகள் அதனை தன் கையில் எடுத்து விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த தாயார் மனதிலே எண்ணினார், தன் மகள் வளர்ந்து என்னைப்போல் ஒரு மருத்துவர் ஆக வேண்டும். இப்படியாக இன்று சமூகத்தில் வாழ்கின்ற அனைவரும் நான் வளர வேண்டுமென்று உலக காரியங்களில் அதிக நாட்டம் கொண்டு செயல்படுகிறார்கள்.

கொர்னேலியுவின் வாழ்வு மாறாக இறைப்பற்றில் வளருகின்ற மனிதராக காணமுடிகிறது. இவர் வாழ்வில் இறைப்பற்றில் வளருவதற்கு காணப்பட்ட நற்பண்புகள் எவைகள் என தியானிப்போம்.

### *1. இறை அச்சத்துடன் வாழ்ந்தார் :* (10:2)

......... தன் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர் கொர்னேலியு நூற்றுக்கதிபதி. தான் மட்டுமல்ல தன் குடும்பத்தார் அனைவரும் கடவுளுக்கு பயந்து நடந்தார்கள். கொர்னேலியு இறைப்பற்றில் வளருவதற்கு கடவுள் பயப்படுகிற பயம் முக்கியமாக அமைந்தது.

ஆபிரகாம் கடவுளுக்கு பயந்து நடந்த மனிதர் என்று கடவுள் சாட்சி கொடுத்தார். தன் ஒரே மகனை கடவுளுக்காய் பலியிடும் நேரத்தில், நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன் (தொ நூ 22:12) என்று கூறினார். அஞ்சுபவனாய் காணப்பட்டபடியால், தன் கண்களை உயர்த்திப் பார்த்தபோது முட்செடியில் கொம்பு மாட்டிகொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாவை கண்டு, அதைப் பிடித்து தம் மகனுக்கு பதிலாக பலியிட்டார். (தொ. நூ. 22:13) மேலும், கவியரசர் தாவீது கூறுகையில் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர் எவரோ, அவருக்குத் தாம் தேர்ந்து கொள்ளும் வழியை அவர் கற்பிப்பார். (தி.ப. 25:12) ஆபிரகாம் கடவுளுக்கு அஞ்சி நடந்தபடியினால் ஆபிரகாம் நடக்க வேண்டிய வழியைக் கடவுள் கட்டினார் என்பது தெளிவாகிறது.

இன்று மனிதனின் அறிவு பெருக்கத்தினாலே கடவுளுக்கு பயப்படுதல் குன்றிப்போய் தன்னுடைய பதவி, அதிகாரம், ஆணவம் என்று சுயம் சார்ந்த செயல்பாடுகள் மேலோங்கி மனிதனுக்கிடையே அன்பு, ஐக்கியம் இல்லாத நிலை உருவாகி சகோதர, சகோதரிகளுக்கிடையே கூட ஒற்றுமையில்லாமல் பகை, வைராக்கியம், பிரிவினை மேலோங்கி காணப்படுகிறது. கொர்னேலியுவை திருமறை வரலாற்றுப் பின்னணியில் ஆராயும்போது ரோம பட்டாளத்திலே ஆறு வகையான நூற்றுக்கதிபதி குழுக்கள் இருந்தன. 80 பேர் கொண்ட குழு முதல் 480 பேர் வரை கொண்ட குழு காணப்பட்டன. கொர்னேலியு ஒரு பெரும் கூட்டத்திற்கு அதிபதி என்று அறியப்படுகிறது. அப்படியென்றால் அவர் ஒரு உயர்ந்த அதிகாரமுள்ள பதவியை தன்னகத்தே கொண்ட மனிதர். இவர் கடவுளுக்கு பயந்து வாழ்ந்தபடியினால் தானும் தன் குடும்பத்தாரையும் இறைவனுக்கு பயந்து இறை பக்தியில் வளரச் செய்ய முடிந்தது.

### *2. இறை பண்பில் நற்செயல் செய்தார் :* (10:2)

மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர்

கொர்னேலியு மக்களுக்கு உதவிகளை செய்து வந்தார். இஸ்லாமிய மதத்தில் ஓர் இஸ்லாமியர் தன் வாழ்வில் செய்ய வேண்டிய முக்கியமான ஐந்து காரியங்கள் உண்டு. அதனை ஐந்து தூண்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அதில் மூன்றாம் தூண் ஷகத் என்று சொல்வார்கள். இது ஓர் இஸ்லாமியர் தன்னுடைய வாழ்நாளில் கண்டிப்பாக தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்தல் அவசியம்.

நாகரீக பெருக்கத்தினாலே தன்னுடைய அயலகத்தான் யார் என்று தெரியாத நிலையில், தானும் குடும்பமும் என்று மற்றவர்களைக் குறித்து எந்த அக்கரையுமில்லாமல் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். திருமறை கற்றுத் தருகிற உண்மை என்னவெனில், நற்செயல் புரிவதற்காக கிறிஸ்துவால் படைக்கப்பட்டிருக்கிறோம். (எபே 2:10)

இயேசு நாதரின் நாசரேத் அறிக்கையில், லூக்கா4:18,19) ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலையடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். இயேசு நாதரின் வாழ்வும் பணிவும் தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்தவைகளாகவே அமைந்தது.

கொர்னேலியுவின் வாழ்வு சமுதாயத்தில் உயர்ந்த நிலை உடையதாக காணப்பட்டது. திருமறை வரலாற்றுப் பின்னணியில் ஆராயும் போது ரோம பட்டாளத்திலே மிகவும் உயர்ந்த அதிகாரியாக காணப்பட்டவர் என்று அறிகிறோம். அப்படியென்றால் அவர் ஒரு வார்த்தை சொன்னால் உடனே அவருக்கு உதவிகள் செய்யும்படி வீரர்கள் உண்டு. ஆனால் கொர்னேலியு கடவுளுடைய பார்வையில் கடவுளுக்கு பயப்பட்டவர் மட்டுமல்ல தன்னுடைய நிலையை தாழ்த்தினார்.

வில்லியம் கேரி அருட்பணியாளர் 1761 ஆகஸ்ட் 17-ஆம் நாள் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தார். இவர் சிறுவயதிலே எதையும் கடினமாக முயன்று முடிப்பவர். தன்னுடைய பதினான்காம் வயதிலே இலத்தீன், கிரேக்கம், டச்சு, பிரெஞ்சு ஆகிய மொழிகளிலும், அறிவியல், வரலாறு பாடங்களிலும் புலமை பெற்றிருந்தார். இவர் தனது 28-வது வயது வரையும் செருப்பு தைக்கும் தொழில் செய்தவர். பின்னர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு, இந்தியாவில் மேற்கு வங்காள மாநிலத்தில் வந்து கடவுளுக்கு பயந்து இறைப்பணி செய்தார். இறைவனின் துணையோடு திருமறை மொழிபெயர்ப்பு பணியை திறமையாக செய்ததோடு செராம்பூர் பல்கலைகழகத்தையும் உருவாக்கினார்.

இவரின் வளர்ச்சியில் பொறாமை கொண்ட பலர் உயர் அதிகாரிகள் இவரை கனவீனப்படுத்த நினைத்து ஒரு பெரிய கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து அதற்கு இவரையும் பேச வைத்தார்கள். பின்னர் பேசிய அதிகாரி வில்லியம் கேரியை கனவீனப்படுத்த எண்ணி வில்லியம் கேரி காலணி தைத்தவர் என்றார். உடனே வில்லியம் கேரி எழுந்து நான் செருப்பு தைக்கும் தொழில் செய்யவில்லை மாறாக கிழிந்த செருப்புகளை தைத்தவன் என்று தன்னை தாழ்த்தினார். ஆனால் கடவுள் வில்லியம் கேரி வழியாக ஒரு பெரிய பல்கலைகழகத்தை உருவாக்கும் அளவுக்கு உயர்த்தினார்.

கொர்னேலியுவும் கடவுளுக்கு பயப்பட்டவர் மட்டுமல்ல தன்னுடைய நிலையை தாழ்த்தி தேவையிலிருக்கிற மக்களுக்கு தானதருமங்களை செய்தபடியினால் இறைபக்தியில் வளர முடிந்தது.

### *3. இடைவிடாது மன்றாடினார் :* (தி.ப. 10:2)

இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தார்.

இறைவேண்டல் ஒரு மனிதனுடைய வாழ்வில் மிகவும் இன்றியமையாத ஒன்று. இறைவேண்டல் இல்லாத வாழ்வு கூரையில்லாத இல்லத்திற்கு சமம் என்பார்கள். தானியேலின் வாழ்வு வெற்றியாய் மாறுவதற்கு அவருடைய இறைவேண்டல் வாழ்வு முக்கியமாக காணப்பட்டது. தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, நாள்தோறும் மூன்று வேளையும் தன் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்துவார். (தானி. 6:10). தானியேல் இறைவனோடு கொண்டிருந்த உறவிலே இறைவேண்டலிலே உறுதியாக காணப்பட்டார்.

இன்று நம்முடைய வாழ்வில் இறைவனோடுள்ள இறைவேண்டல் உறவு எவ்வாறு காணப்படுகிறது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியினாலே அதற்கேற்றார்போல் ஓடிக்கொண்டிருக்கிறோமே தவிர இறைவனோடுள்ள இறைவேண்டல் உறவில் வளருவதில் பின்னுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். சங்கீதக்காரன் சொல்லுகிறபோது காலை நண்பகல் மாலை வேளைகளில் நான் முறையிட்டு புலம்புகிறேன். அவர் என் குரலைக் கேட்டருள்வார் (திபா. 55:17). உண்மையாகவே நாம் செய்யும் ஒவ்வொரு விண்ணக்கத்திற்கும் பதில் உண்டு. ஆகவேதான் தாவீது தன் திருப்பாடலில் சொல்லும்போது .......என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

கொர்நெலியு ரோம படையில் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தவர். அப்படியென்றால் அவர் கல்வியாளராகவே தான் இருந்திருக்க முடியும். அப்படியாக உயர்வு நிலையிலிருந்த நூற்றுக்கதிபதி கடவுளுக்கு முன்பாக எப்போதும் விண்ணப்பத்திலே தரித்திருந்தபடியினால் இறைபக்தியில் வளர முடிந்தது. இறைபக்தியில் வளர நாமும் கடவுளுக்கு பயந்து, தேவையிலிருக்கிறவர்களுக்கு உதவிகள் செய்து எப்போதும் இறைவேண்டலில் தரித்திருக்க இறைவன் உதவி செய்வாராக.

அருள்திரு. R. **ஷினோ இயேசுதாஸ்**

# "இணைந்து போற்றுங்கள்"

திருமறைப்பாடம் : திபா. 100

**"அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்." தி.பா. 100:1**

இசை மனித உணர்வுகளில் ஒன்று. இசையை விரும்பாத மனிதர்கள் இவ்வுலகில் இல்லை. "பாடல் பாடி பிணி போக்கலாம்" என்பது முன்னோர் கூறிய கூற்று. இசைக்கு வியாதிப் போக்கும் ஆற்றல் உண்டு. மனிதன் கண்டு அஞ்சும் உயிரினங்களில் ஒன்று பாம்பு. அந்த பாம்பையே மயக்குவது இசை. இசையில் கலந்த பாடல்கள் எப்படிப்பட்ட உள்ளத்தையும் உருக்கும். மனித வாழ்வுக்கு ஏற்ற சூழ்நிலைக்குத் தக்க அமைத்துக் கொள்ளலாம். இவ்வுலகில் மக்கள் இறைவனை போற்றுவதற்கும் இசை பயன்படுத்தப்படுகின்றது. கவியரசர் தாவீது கூறும்பொழுது (தி.பா. 100:1-ல்) "அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்" என கூறுகிறார்.

இணைந்து இறைவனைப் போற்றும்படி அழைக்கின்றார். நாம் இணைந்து இறைவனைப் போற்றுவதால் நம் வாழ்வில் நமக்கு கிடைக்கும் பலன் என்ன என்பதை திருமறையின் அடிச்சுவட்டினின்று சிந்திப்போம்.

### *1) இணைந்து போற்றுதல் வெற்றியின் அடையாளம்* : (யோசு. 6:16)

நம்பிக்கை இழந்துபோன இஸ்ரயேல் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாய் யோசுவா மக்களை ஒன்றுபட அழைக்கின்றார். காரணம் ஒருமனம் இல்லாவிட்டால் தோல்வி ஏற்படும். எனவே இஸ்ரயேல் மக்கள் ஒன்றுபட்டு அவர்கள் கூடி எக்காளம் ஊதி மதிலை சுற்றி வருகையில் யோசுவா மக்களை ஆர்ப்பரியுங்கள் என்று மக்களை அழைத்தான். இதனால் பட்டணம் அவர்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் இணைந்ததினால் வெற்றிகண்டார்கள். இன்று ஆலயத்தில் நாம் பாடகர் குழுவாக இணைந்து, ஆண்டவரை போற்றும் பொழுது ஆண்டவரின் வெளிப்படுதல் நிறைவாக அமைகின்றது. தொழுகையில் கலந்து கொள்கின்ற மக்கள் நம்பிக்கை கொண்டு வாழ்வில் வெற்றி காண்கின்றார்கள்.

### *2) இணைந்து போற்றுதல் இறை பிரசன்னத்தின் அடையாளம் :* (தி.ப. 16:25)

இணைந்து இறைவனை போற்றும் போது அவரது பிரசன்னத்தை உணர முடிகின்றது. ஆதாரமாக பார்க்கும்போது தி.ப. 16-ல் பவுலும் சீலாவும் ஆண்டவருடைய வார்த்தையை கூறிக்கொண்டிருக்கையில் அவர்களை மக்கள் சிறைபிடித்து அவர்கள் ஆடைகளை அகற்றி, துன்புறுத்தி சிறையில் அடைத்த போது அவர்கள் இணைந்து இறைவனை போற்ற

ஆரம்பித்தார்கள். அவ்வாறாக அவர்கள் இணைந்து பாடி துதித்த பொழுது, சிறைச்சாலை அதிரும் படியாக கடவுளின் பிரசன்னம் வெளிப்பட்டது. அவர்களில் அனேகர் இறை பிரசன்னத்தை கண்டு இரட்சிக்கப்பட்டார்கள். (தி.ப. 16:31-33). திருச்சபை பாடகர் குழு இறைவனை இணைந்து போற்றுவது தொழுகைக்கு அழகு சேர்ப்பது மட்டுமல்ல. அவரது பிரசன்னத்தையும் உணர செய்கின்றதாக காணப்படுகின்றது.

வேதநாயகம் சாஸ்திரியாரின் பதினோராம் வயதில் ஒருநாள் மாலை வேளையில் அவரது தந்தை, தாயில்லாத தமது மகன் படியாமல் விளையாட்டாகக் காலங்கடத்தி கெட்டழிகிறானே என மிகவும் வருந்திக் கடவுளிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அப்போது உலாவிக் கொண்டிருந்த சாஸ்திரியார் தந்தையின் அருகில் சென்று ஐயா, உயரேப் பார்த்து கவலையுடன் பேசிக் கொண்டிருக்கிறீர்களே காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு தந்தை, உனக்காகத்தான், நான் வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறேன். உனக்காக நான் அனேக சுவடுகளை சேர்த்து வைத்துள்ளேன். நீயோ படியாமல் நடக்கின்றாயே என்று கேட்டார். அதற்கு, மகன் ஐயா எனக்கு படிப்பு வருமா என்று கேட்டார். அதற்கு தந்தை "நீ கவனித்து படித்தால் கடவுள் உன் கண்களை திறப்பார். நீ படித்து கெட்டிக்காரன் ஆகலாம்" என்றார்.

1785 ஆம் ஆண்டில் பாளையங்கோட்டைக்கு வந்த ஐரோப்பியக் கிறிஸ்தவரான சுவாட்ஸ் ஐயர், சாஸ்திரியாரின் பக்தியையும் பண்பையும் கண்டு அவரை தம்முடன் தஞ்சைக்கு அழைத்து சென்றார். 4 ஆண்டுகள் திருமறையையும் கிறிஸ்தவ போதனைகளையும் தெளிவாக கற்றார். சாஸ்திரியாருக்கு 1815 ஆம் ஆண்டு ஜுன் 1 ஆம் நாள் சாஸ்திரியார் என்னும் பட்டம் கிடைத்தது. இது அப்போதைய Doctor of Divinity என்னும் ஆங்கில பட்டத்திற்கு ஒப்பானது. சாஸ்திரியாகி வாழ்வில் அவர் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்தபடியினால் அவர் தனது மனதோடு இணைந்து இறைவனை போற்றும்படி அழைக்கிறார்.

"பாடித் துதி மனமே பரனை கொண்
டாடித் துதி தினமே"

என்று எந்த ஒரு காரியமும் தனித்து செய்வதை விட இணைந்து செய்வது பலனைக் கொடுக்கும். தனித்து ஒரு மனிதன் பாடுவதைவிட நான்கு அல்லது அதற்கு மேற்பட்டோர் இணைந்து பாடுவது இன்னும் அழகூட்டும். எனவே, திருச்சபையின் பாடகர் குழு இணைந்து இறைவனை போற்றும்போது அது தொழுகைக்கு அழகூட்டுகின்றது. இறை மக்களுக்கு நம்பிக்கையின் மூலம் வெற்றி கொடுக்கின்றது. இறைமக்கள் இறை பிரசன்னத்தை உணர செய்கின்றது. நாம் இணைந்து தொழுவோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமேன்.

**திரு. S. பிளஸ்ஸின்**

## இரக்கம், இதயத்தி□ருந்து கரங்களுக்கு செல்லட்டும்

திருமறைப்பாடம் : மத் 5:1-11

**"இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்."** மத் 5:7

எளிமையான வாழ்விலும் மகிழ்ச்சியோடு வாழலாம் என்று வாழ்ந்து காட்டியவர் கன்ஃபூசியஸ் என்ற தத்துவ ஞானி. தவறான வழிகளில் செல்வம் சேர்த்து ஆடம்பர வாழ்வு வாழ்வது வீணானது என்று சாடினார். "எனக்கு கொஞ்சம் உணவும், குடிக்க தண்ணீரும் போதும்; தூங்குவதற்கு மெத்தையோ, கட்டிலோ, தலையணையோ தேவையில்லை என் கைகளைத் தலையில் மடித்து வைத்துக் கொண்டே நான் தூங்கி ஓய்வு பெறுவேன். தவறான வழியில் சேர்த்த பணமும், புகழும் காற்றால் சென்று மறையும் மேகங்களை போல நிலைத்து நிற்காமல் மறைந்து விடும் என்கிறார். கன்ஃபூசியஸ். எளியோரின் தோழமையுடன் வாழ்ந்தார் என்கிறது அவரது வரலாறு.

இன்றைய உலகில் எளியோராய் அலைந்து திரியும் மக்கள் ஏராளம். பசி, பஞ்சம், கல்விகற்க முடியாத சூழல் நோயுற்றோர் ஓரங்கட்டப்பட்ட மக்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலச்சூழலில் எளியோர் ஆண்டு விழாவை ஆசரிக்கிற நாம் இயேசு நாதர் கற்றுத்தரும் எளிய வாழ்வைக் கற்று எளிய வாழ்வுக்குரியோரை சமச்சீர் வாழ்வுக்குரியோராய் இணைத்து வாழ இறைவன் விரும்புகிறார். இந்நிலையில் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பு என்ன என்பதை தியானிப்போம்.

### *1. எளியோரின் நலன் காப்போம் :*

. . . இரக்க செயல்கள் புரிவதிலும் அவர் முற்றிலும் ஈடுப்பட்டிருந்தார் (தி ப 9 : 36b)

யோப்பா நகரில் நன்மைகளை, இரக்க செயல்களை செய்து வந்த பெண் சீடர் தபித்தா என்ற என்ற தொற்காவின் ஆதரவு நிறைந்த வாழ்க்கை எளியவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியை தந்தது. எளியோரின் நலன் மீது கரிசனை கொண்டதாக தொற்காவின் வாழ்வு காணப்பட்டது.

தொற்கா இறந்த பிறகு தான் அவளது ஆதரவு நிறைந்த வாழ்வு சான்று பகருகிறது. எளியோரை ஆதரித்ததன் வழி உயிரோடு எழுந்து இறைவனால் மேன்மைப்படுத்தப் படுகிறாள். எளியோரின் நலனை காத்த அன்னை தெரசா, "இறக்கத்தான் பிறந்தோம், அதுவரை இரக்கத்தோடு இருப்போம்" எனக் கூறி எளியோரின் நலன் காக்க நம்மையும் அழைக்கிறார்.

இந்த சமூகத்தில் ஏழைகள் எளியவர்கள் ஆதரிக்கப்படாத சூழல் காணப்படுகிறது. இச்சூழலில் நம் பேராயத்திலும் எளியோர் நலத்திட்டங்கள் வழி ஆதரித்து வருவது சிறப்பான ஒன்று. எளியவரை நினைத்து, அவர்கள் நலன் காப்போம்,

## *2. எளியோரை ஆதரிப்போம் :*

. . . ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார் (லூக்கா 16:23)

லூக்கா 16-ம் அதிகாரத்தில் இரண்டு விதமான மனிதர்கள் காட்டப்படுகிறார்கள். விலையுயர்ந்த ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்த செல்வர் மற்றொருவன் உடல் முழுவதும் புண்ணாய் இருந்து ஏழையாய் வாழ்ந்த இலாசர். இலாசர் ஆதரவு இழந்த நிலையில் தன் பசியையாற்ற செல்வரை நாடி செல்கிறான். ஆனால் எதிர் பார்த்த அரவணைப்பு உலக வாழ்வில் கிடைக்கவில்லை. இந்நிலையில் இறந்து வானதூதரால் ஆபிரகாமுடைய மடியில் அரவணைக்கப்படுகிறான் (லூக்கா 16:22).

நம்முடைய பேராயமும் எளியோர் மீது கரிசனை கொண்டு எளியமக்களாகிய மாற்றுத் திறனாளிகளுக்காக பாடசாலைகளை ஏற்படுத்தி அரவணைப்பது சிறப்பானது.

புகழ்பெற்ற வயலின் கலைஞர் நிக்கோலே பாகானினி ஒரு சமயம் தெருவோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையோரத்தில் ஒரு சிறுவன் ஒரு வயலின் வைத்துக் கொண்டு தன்னால் இயன்றமட்டும் அதிலிருந்து இசைத்துக்கொண்டு மக்களிடம் ஏதாவது உதவிச் செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தான். பாகானினி அவனை பற்றி விசாரித்தார். உண்மையில் அவன் தன்னுடைய நோயுற்ற தாய்க்கு மருத்துவம் செய்யவும், தன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு உணவு வழங்கவும் இப்படி உழைப்பதாக தெரிய வந்தது. பாகானினி விரைந்து அந்த சிறுவனிடம் சென்று அவன் கையிலிருந்த வயலினை வாங்கி அற்புதமான சில பாடல்களை இசைத்தார். மக்கள் ரசித்தார்கள். பிறகு தனது தொப்பியை மக்கள் மத்தியில் வீசினார். கூடியிருந்த மக்கள் பணத்தை போட்டார்கள் தொப்பியில் பணம் நிரம்பி வழிந்தது. அதைச் சிறுவனிடம் கொடுத்து எளிய உதவியை செய்து விட்டு எந்த சலனமுமின்றி அமைதியாக நகர்ந்தார் பாகானினி.

இறை மகன் இயேசு கிறிஸ்துவும் பிறமக்கள் மீது ஆழ்ந்த கரிசனையுடையவராக இருக்கிறார். அனைவரும் எளியோரை நினைவு கூர வேண்டும், உதவ வேண்டும் என விரும்புகிறார் அந்த உதவியை தான் இறைவனுக்கு நாம் செய்வதாக கூறுகிறார் (மத் 25: 40)

இரக்கமுள்ளவர் பாக்கியவாளர்
இரக்கத்தை யவர் பெற்றிடுவார்
ஏழையோர்க் கிரங்கி யீயுந் தயாளர்
ஏழைகள் பிதாவினால் வாழ்வார்

என்று பாடிய கீர்த்தனை கவிஞர். டி. அருளானந்தம் அவர்களின் பாடல் வரிகளை மனதில் கொண்டு இலவசமாய் பெற்றோம், இலவசமாய் கொடுப்போம் என்ற உணர்வோடு வாழ்ந்து வாழ்வில் இரக்கத்தை வெளிப்படுத்துவோம்.

வலுவிழந்து வாழ்வு போராட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் எளியோரில் நாம் காணும் மகிழ்வொலியும், களிப்போசையுமே ஏற்றமிகு வாழ்வுக்கு நம்மையும் நடத்தும் என்பதில் எந்தவொரு மாற்று சிந்தனைக்கும் இடமில்லை. எளியோரின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்ற உயர்ந்த நோக்கினில் நாமும் தன்னலம் துறந்து நற்பணியை தொடருவோம். அதுவே இறையரசின் எழுச்சிமிகு கட்டமைப்புக்கு ஏற்புடையதாக அமையும். இரக்கம் இதயத்திலிருந்து கரங்களுக்கு செல்லட்டும். அதுவே இறையவரின் கரிசனையாக நம்மில் மலரட்டும்.

**திரு. M.R. மில்ட்டன் மார்க்**

## வாசித்து சிந்தியுங்கள்

2 திமொத்தேயு 4:9-13

**"நூல்களையும்... எடுத்துவா"** 2 தீமொத். 4:13b

'Visit Many god book, but live in the Bible' (பல புத்தகங்களுக்கு சொல்லுங்கள். ஆனால் வேதத்தில் வாழுங்கள்) என்றார் பிரசங்கங்களின் இளவரசன் என்று அழைக்கப்படுகிற சார்லஸ் சபர்ஜன். "ஒரு நாகரிகத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஒப்பானதுதான் நூலகங்களை சிதைக்கும் காரியம்" என்று 2012-ல் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டவர் சந்துரு!! பிரசங்கிகளின் இளவரசன் சபர்ஜன் குறைந்தது வாரத்திற்கு ஆறு புத்தகங்களாவது படிக்கிறவர். புத்தகங்கள் மனிதரை பண்படுத்துகிறது. மனநிலையில் மாற்றத்தை கொண்டு வருகிறது. வாசிப்பு பழக்கம் இல்லாத மனிதன், வாசிக்கபடாத மனிதனாக மாறிவிடலாம்.

இன்று திருமறையின் வழியாக இரு குறிப்புகளை தியானிப்போம்.

### *1) வாழ்க்கையை மாற்றும் வாசிப்பு*

இரண்டாம் முறையாகத் தீமொத்தேயுவுக்கு, பவுல் தம் வாழ்வின் இறுதி கட்டத்தில் மீண்டும் ஒருமுறை சிறையில் அடைக்கப்பட்ட போது ஓர் கடிதம் எழுதினார். அதில் (2 தீமொத்தேயு 4:13) "நூல்களையும் எடுத்துவா" என்கிறார். சார்லஸ் சார்ஜன் இதற்கு விளக்கம் கொடுக்கும் போது, "முப்பது வருடங்களாக பவுல் பிரசங்கித்த போதிலும், அவருக்கு இன்னும் புத்தகம் தேவைப்பட்டது. நல்ல அனுபவசாலிதான் ஆனாலும் புத்தகம் தேவைப்பட்டது. புதிய ஏற்பாட்டில் பல எழுத்துக்களை அவர் எழுதினாலும் அவருக்கு புத்தகம் தேவைப்பட்டது" என்கிறார்.

மனம் வளர வேண்டும் என்றார் இறையியலாளர் கார்டன் மெக்டொனால்ட். அவருடைய அனுபவத்தில் ஒன்றை 'Ordering your private world' (உங்கள் தனிப்பட்ட உலகத்தை ஒழுங்காக்குங்கள்) என்ற புத்தகத்தில் சொல்லும் போது, "டானியேல் வெப்ஸ்டரின் வாழ்க்கை சரிதையை நானும் என் மனைவியும் ஒரு பழைய புத்தக கடையில் வாங்கினோம். புத்தகத்தின் அட்டை பாகம் கிழிந்த நிலையில் காணப்பட்டதால், அது வாசிக்கப்பட்ட புத்தகம் என நினைத்தோம். ஆனால் வீட்டில் சென்று பார்த்த போது அச்சகத்தார் பிடியிலிருந்து தப்பித்த பக்கங்கள், வெட்டாத பக்கங்களாக பல இருந்ததை பார்க்க நேரிட, இது படித்த புத்தகம் போல் ஒரு பிம்பத்தை தான் கொடுத்தது என புரிந்து கொள்ள முடிந்தது. அகேனமாக இந்த புத்தகத்தை போல தான்

மனிதர்கள் பலர் பழகக்கூடிய புத்தகங்களாக காட்சியளிக்கிறார்கள். பிம்பத்தை கொடுக்கிறார்கள். வாழ்க்கையின் உள்ளே, தனிப்பட்ட பக்கங்கள் பிறரால் வாசிக்க முடியாத, வெட்டாத, பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை இல்லாத நிலையாக இருக்கிறது" என்றார். புத்தகங்கள் சிந்தனையை மழுங்கின நிலையிலிருந்து கூர்மைப்படுத்துகிறது, வாழ்க்கையின் திசைகளை மாற்றுகிறது, திருப்பத்தை தருகிறது. எனவே நல்ல புத்தகங்களை வாசித்து வாழ்வில் மாற்றம் பெறுவோம்.

## *2) சிந்தனைக்கு தீனிபோடுங்கள்*

வீடுகளில் எந்தக் கணவன் மனைவிக்கும் இருவரும் சேர்ந்தோ, இருவரில் ஒருவர் தனித்தோ தொலைக்காட்சி பார்ப்பதில் யாருக்கும் எந்தச் சிக்கலும் இல்லை. அதே வீடுகளில் கணவனோ, மனைவியோ ஒரு மணிநேரம் புத்தகம் வாசிப்பது பல குடும்பங்களில் இன்றைக்கு சிலாக்கியமான காரியம் இல்லை.

"புத்தகங்கள் இல்லாத அறை என்பது ஆன்மா இல்லாத உடலைப் போன்றது என்று சொல்கிறார் ரோமானியச் சிந்தனையாளர் மார்கஸ் டுலியாஸ் சிசரோ". "எப்போதெல்லாம் நீங்கள் ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கிறீர்களோ, அப்போதெல்லாம், உலகின் ஏதாவது ஒரு பகுதியில் அதிக வெளிச்சம் நுழையும் வகையில் ஒரு கதவு திறக்கிறது! என்கிறார் அமெரிக்க எழுத்தாளர் வெரா நஸாரியன்". "நீங்கள் ஒரு நல்ல புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் படித்து மடித்ததும் உங்களின் மனதில் ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டதைப் போன்ற உணர்வுக்குக் கட்டாயம் ஆட்படுவீர்கள் என்கிறார் டால்ஸ்வீன்னி அமெரிக்க எழுத்தாளர்".

தி இந்து, ஜன் 6, 2016 செய்தியில் ஒன்று. "இன்னும் இரண்டு ஆண்டுகளில் இணையம் மூலம் வாங்கப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கும் புத்தக விற்பனையின் சதவீதம் 75% மீதம் உள்ள 25% விற்பனை தான் கடைகளில் நடக்கும் என்று தெரிகிறது". வழக்கமாய் நாம் உலகத்தைப் பார்ப்பதிலிருந்து வேறு விதமாய் இந்த உலகத்தை பார்ப்போம் என்பதில் சந்தேகமில்லை.

2015-ம் அருளுரை கையேட்டில், நூலக ஆண்டுவிழா செய்தியின் கடைசி வரிகளை மறுபடியும் பதிவு செய்கிறேன். "உலகிலே பல புத்தகங்கள் அழிந்தாலும், அழிக்கப்பட்டாலும் கடவுளால் உருவாக்கப்பட்ட திருச்சட்டநூல் அல்லது திருமறை அதிலுள்ளதெல்லாம் நிறைவேறாதவரை அழியாது (மத். 5:17, 18, நம் வாழ்க்கை பலரும் வாசிக்க விரும்பும் சிறந்த புத்தகமாக இருப்பதாக".

பரப்புவோம் இந்த ஸ்லோகனை (சிந்தைக்கு தீனி போடுங்கள்)

**திரு. எஸ். ஆர்தர் பெனடிக்ட்**

## பிறரோடு ஒப்பீடு செய்யாது மன்றாடுவோம்

லூக்கா 18:9-14

**"பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார்."** லூக்கா 18:14

பரிசேயர் ஒருவரும் வரிதண்டுபவர் (ஆயக்காரர்) ஒருவரும் இறைவேண்டல் செய்ய சென்றது பற்றியும், இதில் வரிதண்டுபவரின் இறைவேண்டல் மட்டுமே கேட்கப்பட்டது என்றும் லூக்கா 18:9-14 வரையுள்ள திருமறைப்பகுதியில் இயேசு ஆண்டவர் சொல்லுகிறார். பரிசேயரின் இறைவேண்டல் ஏன் கேட்கப்படவில்லை? அவர் நேர்மையாளர்தானே; வாரத்தில் இருமுறை நோன்பிருப்பவர்தானே; வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுப்பவர்தானே; அப்படியானால் அவர் செய்த தவறு என்ன என ஆழ்ந்து நோக்கும்போது, நமக்கு கிடைக்கும் பதில் என்னவென்றால் அவர் மற்றவர்களோடு தன்னை ஒப்பீடு செய்து, தன்னை நேர்மையாளர் என காட்டிக் கொண்டதேயாகும். கொள்ளையர்களோடும், நேர்மையற்றவர்களோடும், விபச்சாரம் செய்பவர்களோடும், வரிதண்டுபவர்களோடும் ஒப்பிட்டு தன்னை நேர்மையாளர் என நிலைநாட்டுகிறார்.

ஒருவர் தன்னை மற்றவர்களோடு ஒப்பீடு செய்து, தன்னை மேலானவராக, நேர்மையாளராக எண்ணுவது எவ்வளவு மோசமான செயல் என்பதை இயேசு இந்நிகழ்வு வழியாக சுட்டிக்காட்டுகிறார். இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள்; நிறை குறைகளைக் கொண்டவர்கள். இதை உணராது ஒருவர் மற்றவர்களோடு ஒப்பீடு செய்வது தேவையற்ற வீண்விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறது என்பதே இயேசு ஆண்டவர் சுட்டிக் காட்டும் செய்தி ஆகும்.

ஒப்பீடு செய்வதில் இருவகைகள் உண்டு. ஒன்று நம்மைப் பிறரோடு ஒப்பீடு செய்து உயர்வாகவோ, தாழ்வாகவோ எண்ணுவது இரண்டாவது, நம்முடன் இருப்போரை, மற்றவர்களோடு ஒப்பீடு செய்து அவர்களை எடை போடுவது. பல பெற்றோரும் ஆசிரியர்களும் செய்யும் மிகப் பெரிய தவறு இது. தந்தை ஒருவர் தன் மகனிடம் "உன் வயதில் ஆபிரகாம் லிங்கன் எவ்வளவு நன்றாக, சுறுசுறுப்பாகப் படித்தார் தெரியுமா? நீயும் இருக்கிறாயே! மிகப் பெரிய சோம்பேறி" என்று திட்டினார். மகனோ கொஞ்சமும் சளைக்காமல் "ஆபிரகாம் லிங்கன் என் வயதில் சுறுசுறுப்பாக படித்தது ஒருபுறம் இருக்கட்டும், உங்கள் வயதில் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆகிவிட்டாரே! நீங்கள் மட்டும் ஏன் இவ்வாறு

இருக்கிறீர்கள்?'' என்று ஒரு போடு போட்டானாம். இந்த இரண்டு வகையான ஒப்பீடுகளுமே தவறானவை. தேவையற்ற பல விளைவுகளைக் கொண்டுவரும் என உளவியலாளர்கள் சொல்லுகின்றனர்.

## *1) ஒப்பீடு செய்வதினால் ஏற்படும் தீமைகள் :*

ஒருவர் தன்னைவிட தாழ்நிலையில் இருப்பவர்களோடு தன்னை ஒப்பீடு செய்யும் போது அவர் ஆணவம் கொள்ளத் தொடங்குகிறார். பரிசேயர் செய்த தவறும் இதுதான். பல நல்ல செயல்களை பரிசேயர் செய்திருந்தாலும், அவரது ஆணவத்தின் காரணமாக அவை கடவுள் முன் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. இப்படி ஆணவத்துடன் செயல்படுவோர் கடவுளுக்கு ஏற்புடையோராக இருக்க முடியாது. ஆணவத்துடன் நாம் இறைவேண்டல் செய்யும் போது நம் வேண்டுதல் இறைவனிடம் சென்று அடையாது என்பதையே இன்றைய திருமறைப்பகுதி சொல்லுகிறது. இதற்கு மாறாக, தாழ்மை உள்ளோரின் இறை வேண்டல் ஆயக்காரரின் இறை வேண்டலைப் போல இறைவனிடம் விரைந்து செல்லத்தக்கதாயிருக்கிறது. எனவே ஆணவத்தோடு அல்ல தாழ்மையோடு மன்றாட முயலுவோம்.

## *2) தாழ்வு மனநிலை :*

பிறரோடு நம்மை ஒப்பீடு செய்யும் போது நாம் ஒப்பீடு செய்கிற நபர் நம்மை விட மேலானவராக இருந்தால் அது நமக்கு தாழ்வு மனநிலையை கொண்டு வந்துவிடும். நம்மிடம் இது இல்லையே, அது இல்லையே என்று சொல்லி அவற்றிற்காக ஏங்கத் தொடங்கிவிடுகிறோம். ஒரு காட்டில் ஒரு மனிதன் தன் குடும்பத்தினரோடு தங்கி நிறைவான வாழ்க்கை நடத்திவந்தான். காட்டில் கிடைத்தவற்றைக் கொண்டு அவன் குடும்பத்தினர் தங்களது தேவைகளை நிறைவு செய்து மனதிருப்தியுடன் வாழ்ந்தனர். இச்சூழலில் அவ்வீட்டிற்கு அருகில் செல்வந்தர் ஒருவர் இடம் வாங்கி வீடு கட்டத்தொடங்கினார். புதிய கார், நவீன மின்சாதனப் பொருள்கள் பல பொருட்களை வீட்டில் கொண்டு வைத்தார். மன நிறைவாக வாழ்ந்து வந்த அவர்கள், தங்களது குடும்பத்தைச் செல்வந்தரின் குடும்பத்தோடு ஒப்பீடு செய்து கவலைப்படத் தொடங்கினார். தாழ்வு மனநிலை அவர்களைத் தாக்கியதால் மனநிறைவு அவர்களை விட்டு அகன்று போயிற்று.

## *3) பொறாமை :*

பிறரிடம் உள்ளவை நம்மிடம் இல்லையே என்று நினைக்கும் மனிதர் அவற்றைப் பெற முயலுகிறார். அந்த முயற்சிகள் பலனளிக்காத போது மற்றவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்களை அழிக்கவும் முயலுகின்றார். தஞ்சை அருகே நடந்த ஒரு நிகழ்வு. சிறுவன் ஒருவன் தனது தங்கையோடு பள்ளிக்கூடம் சென்று வருவது வழக்கம். ஒருநாள்

பள்ளிக்கூடம் சென்று வரும்போது அவன் மட்டும் தனியே வந்தான். தங்கை எங்கே என கேட்ட போது "தெரியாது" என பதில் சொன்னான். ஆனால் தேடிப்பார்த்த போது அந்தச் சிறுமி ஒரு கிணற்றில் செத்துக் கிடந்ததைக் கண்டனர். அந்த சிறுவனிடம் இதுபற்றிக் கேட்டபோது அவன் சொன்ன தகவல் என்னவென்றால் நன்றாக படிக்கும் தங்கையோடு அவனை ஒப்பீடு செய்து தந்தை அடிக்கடி திட்டுவாராம். தனது தங்கையினால் தானே எனக்கு திட்டு விழுகிறது என்று எண்ணிய சிறுவன் தன் தங்கையை கிணற்றருகில் அழைத்துச் சென்று உள்ளே தள்ளி விட்டானாம்.

ஒப்பீடு செய்தல் ஓர் பாவச் செயல். ஒப்பீடு செய்வதால் ஆணவம் என்னும் தீச்செயல், தாழ்வு மனநிலை என்னும் தீச்செயல், பொறாமை என்னும் தீச்செயல் மானிடரில் குடியேறுவதால் அவர்களின் இறைவேண்டல் இறைவனிடம் சென்று சேரமுடியவில்லை. எனவே ஒப்பீடு செய்தலை இன்றே விட்டு விலகி, இறைவேண்டல் வழி இறையாசியுடன் வாழ முயலுவோம்.

**அருள்திரு. J. நேச பிரின்ஸ்**

## தென்னிந்தியத் திருச்சபை வரலாறு

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.

(யோவான் 17:21)

### *ஐக்கிய திருச்சபையின் நோக்கம்*

தென்னிந்திய திருச்சபையின் தொடக்கம் ஒரு நீண்ட மரபினை உடையதாக இருந்தாலும் ஏறக்குறைய எழுபது வருட தொடர் முயற்சியாலும், அயராத உழைப்பினாலும், இறை வேண்டுதலினாலும் கிறிஸ்தவ வரலாற்றில் யாருமே எதிர் பாரத நிகழ்வு தென்னிந்திய திருச்சபையின் தேற்றத்திருநாள் உலக வரலாற்றையே உலுக்கிய மாபெரும் நிகழ்ச்சி ஆகும். இதன் உருவாக்கத்திற்கு பலர் சிறந்த பங்களிப்பினைக் கொடுத்தார்கள். இந்த ஐக்கிய திருச்சபைக்காக மிக வலுவான நான்கு சபை பிரிவுகள் ஒன்று சேர்த்தன. அதாவது: ஆங்கிலிக்கன், மெதடிஸ்ட், பிரஸ்பிட்டேரியன் மற்றும் காங்கிரிகேஷனல். இவைகள் போராயராகளுகையும் பேராயரில்லாத ஆளுகையும் ஏற்றுக்கொண்ட சபைகளாகும். ஆக, தென்னிந்திய திருச்சபையின் தோற்றம் திருச்சபை வரலாற்றில் நடந்த மாபெரும் நிகழ்வு ஆகும்.

### *கிறிஸ்தவத்தின் வருகை :*

கிறிஸ்தவம் எப்படி பழமையானதோ அது போன்றே இந்திய கிறிஸ்தவமும் பழமையானது, வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வுப்படி கிறிஸ்தவம் முதல் முதலாக இயேசுவின் சீடர்களின் ஒருவரான புனிதத் தோமாவால் (கி.பி. 52) கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் இரண்டு முறை ஏற்பட்ட சீரிய கிறிஸ்துவர்களின் இடம் பெயர்தலால் (கி. பி. 4 மற்றும் 9 - ம் ஆம் நூற்றாண்டு) தென்னிந்தியாவில் குறிப்பாக கிறிஸ்தவம் வலு பெற்றது. புனித பிரான்சிஸ் சேவியர் (1542) அவர்களுடைய வருகையின் காரணத்தால் அப்போதைய திருவிதாங்கூர் கடற்கரைப் பகுதியில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை தளிர் விட்டு எழத் துவங்கியது. தொடர்ந்து 18-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் சீர்திருத்த திருச்சபை இந்தியாவில் வேருன்றியது.

### *திருச்சபையின் மறுமலர்ச்சி :*

கத்தோலிக்கத் திருச்சபையில் (15,16,17 நூற்றாண்டுகளில்) தொடர்ச்சியாக ஏற்பட்ட புரட்சியின் விளைவாக புதிதாக சீர்திருத்த திருச்சபை என்கிற அமைப்பு உருவாகியது. இதனால் உலகெங்கும் நற்செய்திப் பரவுதலின் முக்கியத்துவம் மேலைநாட்டுக் கிறிஸ்தவர்களின் மனதில் உருவானது. முதல் சீர்திருத்த திருச்சபை அருட் பணியாளர் சீகன்

பால்க் ஐயர் ஜூலை 9,1706-இல் தரங்கம்பாடியில் கால் பதித்ததால் இந்தியாவில் சீர்திருத்த கிறிஸ்தவம் வேகமாக பரவத் தொடங்கியது. இந்த காலகட்டத்தில் டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு அருட்பணியாளர்கள் வரத் தொடங்கினர்.

## *ஆன்மீக எழுச்சி :*

கிறிஸ்தவ சமய வளர்ச்சி ஒரு திருப்பு முனையாக பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய கண்டத்தில் ஏற்பட்ட ஆன்மீக எழுச்சி அமெரிக்க கண்டத்திலும் பரவியதால் பல அருட்பணி இயக்கங்கள் தோன்றின. இளைஞர்கள் தங்களை அருட்பணியாளர்களாக அற்பணித்து பல நாடுகளுக்குச் சென்றனர். இதனால்: Society for Promoting Christian Knowledge (1701, SPCK) பாப்திஸ்து மிஷனரி சொசைட்டி (1792, BMS) லண்டன் மிஷினரி சங்கம் (1975, LMS) கிறிஸ்தவ மிஷனரி சங்கம் (1799. CMS), Religious Tract Society (1799), American Board of Commissioners for Foreign Mission (1810) Basel Evangelical Mission (1815), வெஸ்லின் மெதடிஸ்ட் மிஷனரி சொசட்டி (1817, WMS), நற்செய்தி அறிவிப்புக் கழகம் (SPG) சென்னை பைபிள் சங்கம், மருத்துவ சங்கம் YMCA கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் மற்றும் திருமறைப் பள்ளி போன்ற பல சங்கங்கள் தோன்றி அருட் பணியை துரிதமடையச் செய்தன.

## *இந்தியாவில் அருட்பணி :*

இந்தியாவில் அருட்பணி செய்து வந்த அருட்பணியாளர்கள் தங்களுக்குள்ளேயே பிரிவுகளை வளர்த்துக் கொண்டனர். தங்கள் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இந்திய கிறிஸ்தவர்கள் கடைபிடிக்க கட்டாயப்படுத்தினார். இந்திய கிறிஸ்தவர்களும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறுவதை விட ஆங்கிலிக்கன், மெதடிஸ்ட், பிரஸ்பிட்டேரியன் மற்றும் பாப்திஸ்து காங்கிரிகேஷனலிஸ்ட் என்று கூறுவதையே பெருமையாக கருதினார். அத்துடன் அருட்பணி இயக்கங்களும் கிறிஸ்தவர்களை திருடும் பழக்கமும் அதிகரித்து வந்தன.

### *அருட்பணி இயக்கங்கள் ஒன்றிப்பதற்கான காரணங்கள்:*

அருட்பணி இயக்கங்கள் தங்களுக்குள்ளே கொள்கை கோட்பாடுகளை உருவாக்கி தங்கள் எல்லைகளை பாதுகாக்க நினைத்ததால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்பவுதில் சிக்கல் ஏற்பட்டது. எனவே அருட்பணி இயக்கங்களைஒன்றிப்பதற்கான எண்ணங்கள் உருவானது, இதற்கு ஜாண் வெஸ்லி மற்றும் சார்லஸ் வெஸ்லி இவர்களின் ஞானப் பாடல்கள் புத்தெழுர்ச்சியாக இருந்தது. இக்காலக்கட்டத்தில் இங்கிலாந்து திருச்சபைகள் நெருங்கிய ஐக்கியத்திற்குள் வரத் தொடங்கியது. இந்நிலையில் Student Volunteer Movement (SVM) வேறுபாடான சபை பிரிவுகளை ஒன்றிணைக்கப்

பாடுபட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அருட்பணி இயக்கங்கள் மாநாடுகள் நடத்த தொடங்கியது.

**பேராயர் V.S அசரியா அவர்களின் எழுச்சிமிக்க உரைகள்**

எடின்பரோ மாநாட்டில் அசரியா பேசும் போது, திருச்சபையின் ஒருமைப்பாடு காலத்தின் கட்டாயம் அதற்காக களமிறங்க வேண்டிய தருணம் இதுவே. இந்தியத் திருச்சபையை பொறுத்த வரையில் எங்களுக்கு ஒரே திருச்சபை வேண்டும். அது இந்தியத் திருச்சபையாக இருக்க வேண்டும். எங்களை பிரித்து வைத்த நீங்களே இணைத்து வைக்க வேண்டும் என்றார். டெல்லி கல்லூரி முதல்வர் S.K. ருத்தா பேசும் போது எங்களுக்கு சொந்தமான இந்தியத் திருச்சபையை கொடுங்கள். அப்பொழுது நாங்கள் அதற்கென்று உழைப்போம். அதற்காக சாகவும் துணிவோம். இந்நிலையில் இந்தியாவில் இளம் கிறிஸ்தவ வாலிபர் சங்க அருட்பணியாளராக தீவிரமாக பணியாற்றி வந்த ஜார்ஜ் ஷெர்வுட் எடி என்னும் அசரியாவின் நெருங்கிய நண்பர் அருட்பணியில் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஓருங்கிணைப்புக்கான முயற்சியில் ஈடுபட்டார். மேனாட்டு மோகத்தில் மயக்கமுற்றிருந்த இந்தியத் திருச்சபை தன்னாட்டு மயமாக்கப்பட வேண்டுமென்றும் இந்தியர்களுக்கு இந்திய மூலதனங்களை கொண்டு, இந்திய பாணியில் அருட் பணியாற்ற வேண்டுமென்றும் அசரியா பெரிதும் முயன்றார். திருச்சபை பல்வேறு மேலை நாட்டு அருட்பணி இயக்கங்களின் மரபுகளை பின்பற்றி துண்டுபட்டு கிடப்பதால் கிறிஸ்தவ சாட்சியத்தை விசனப்படுத்தியதாக உணர்ந்த அசரியா ஐக்கிய திருச் சபையை உருவாக்க பெரிதும் பாடுபட்டார்.

## *அருட்பணி மாநாடுகள் :*

எடின்பரோ (1910) தரங்கம்பாடி (1919) லாம்பத் மாநாடு (1920இ 1930) நாக்பூர் (1923) லொளசானோ (1927) ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற அருட்பணி மாநாடுகளில் இந்திய பிரதிநிதகள் கலந்துக் கொண்டு ஒற்றுமை திருச்சபைக்கான காட்சியை எடுத்துரைத்தனர். மாகாண மற்றும் உள்ளூர் திருச்சபை ஒற்றுமைக்காக பல அருட்பணி மாநாடுகள் நடத்தினர். அதாவது: மேற்கு வங்காளத்திற்காக கல்கட்டாவிலும் (1855), வட மேற்கு பகுதிக்காக பெனாறஸிலும் (1857), தென்னிந்தியவிற்காக ஊட்டியிலும் (1858), பஞ்சாப் மாகாணத்திற்காக லாகூரிலும் (1862) நடைபெற்றது. முதல் பரந்த போது அருட்பணி மாநாடு (1872) அலகாபாத்தில் நடைபெற்றது. இதில் 138 அருட்பணியாளர்கள் கலந்த கொண்டனர். இது இந்திய தேசியம், இந்தியத் தலைமைத்துவம் இவற்றை உருவாக்கியது. இதன் தொடர்ச்சியாக மருத்துவர் ந.பழனி ஆண்டி அவர்கள் National Church of India என்கின்ற அமைப்பினை உருவாக்கினர்.

கல்கத்தாவில் (1868) Bengal Christian Association உருவாக்கப்பட்டது. அதை தொடர்ந்து India Native Christian Alliance (1871)

பாம்பேயில் துவங்கப்பட்டது, இந்த அமைப்புகள் இந்திய கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் குறைவாக உள்ளதால் ஒரு ஒற்றுமையை உருவாக்கப்பாடுபட்டது லண்டனில் நடைபெற்ற நூற்றாண்டு அருட்பணி மாநாட்டில் (1888) Church of Christ in India என்ற தலைப்பில் தன்னாட்டு மயமாக்குதல், சுய உதவி, சுய ஆளுகை பற்றி விவாதிக்கப்பட்டது, இதிலிருந்து ஒரு விரிவான ஒற்றுமையை விரிவாக்க விவாதிக்கப்பட்டது, தென்னிந்திய அருட்பணியாளர் சங்கம் (1897) உருவாக்கப்பட்டது. இதன் மூலம் மெட்ராஸ், பெங்களூர், கொடைக்கானல், குன்னூர், ஊட்டி ஆகிய இடங்களில் மாநாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து 1900- இல் மெட்ராஸ் அருட்பணி மாநாட்டில் 150 அருட்பணியாளர்கள் 45 அருட்பணி இயக்கங்களிலிருந்து கலந்து கொண்டனர். இவை மொத்தமுள்ள 3,50,000 கிறிஸ்தவ மக்களின் சார்பில் கலந்து கொண்டனர். இது ஒரு தெளிவான சபைகளின் ஐக்கியத்திற்கான காட்சியைக் கொடுத்தது. இதனால்YMCA (1890), Christian Literature Missionary Society இந்திய அருட்பணி இயக்கம் (IMS 1903)மற்றும் தேசிய அருட்பணி இயக்கம் (NMS,1904) போன்றவைகள் உருவாகின. இதற்காக V.S. அசரியா K.T. பால் ய.சான்றியாகோ A.J. அப்பாசாமி, ஆகியோர் மிக முக்கியமானவர்கள். இதனால் அமைப்பு ரீதியாக (Organisation) ஐக்கியம் உள்ளது.

## ஐக்கியத் திருச்சபைக்கான காட்சி :

கூட்டாட்சி ஐக்கியம் (1901, Federal Union) பிறிஸ்பிட்டேரியன் அருட்பணிக்கும் (Presbyterian – South India), American Arcot Mission, United Free Church of Scotland Missions - க்கும் இடையே ஏற்பட்டது. தொடர்ந்து 1904 - இல் மதுரா Congregational Churches of the American Mission ஜாப்னா மற்றும் LMS தென் திருவிதாங்கூர் ஒருமித்த கூட்டாட்சி ஐக்கியத்தில் சேர்ந்தன. இது ஒரு பரந்த ஐக்கியத்தை Presbyterian மற்றும் Congregationalists சபைகளுக்கிடையே ஏற்படுத்தியது. அதன் விளைவாக 24 ஜீலை 1908 - இல் South Indian United Church (SIUC) முறையாக அமைக்கப்பட்டது. SIUC என்பது Arcot Mission, United Free Church of Scotland Mission (UFCSM), LMS, America Board of Commissioners for Foreign Missions (ABCFM) இவை Presbyterian Utßm Congregational மரபுகளை உள்ளடக்கிய கலவையாகும். இதில் சில கிறிஸ்தவர்கள் சேருவதற்கு தயக்கம் காட்டினார்கள்.

## ஐக்கியத் திருச்சபைக்கான கூட்டங்கள் :

மெட்ராஸ் பேராயர் கேன்றி வேயிட் கெம் மற்றும் பம்பாய் பேராயர் எட்வின் ஜேம்ஸ் பால்மரும் இந்தியத் திருச்சபையின் பாதுகாப்பிற்கு பேராயராளுகை முறை தான் நல்லது என நினைத்து முறையாக அறிவிக்கப்படாத திருச்சபை ஐக்கிய கூட்டம் ஒன்று தரங்கம்பாடியில் (மே 1919) நடைபெற்றது. இதில் லுத்தரன், மெதடிஸ்ட், ஆங்கிலியக்கன்

மற்றும் SIUC அங்கத்தினர் கலந்துக் கொண்டனர். மேலும் அசரியா மற்றும் சான்றியாகோ முக்கிய பங்கு வகித்து புகழ் பெற்ற தரங்கம்பாடி அறிவிப்பை வெளியிட்டனர். அதில் கடந்த காலத்தில் நடைபெற்ற பிளவுகளுக்காக நாம் வருத்தப்பட்டு இயேசுவின் திருவுடலாகிய திருச்சபையை ஒரே தெரியக்கூடிய திருச்சபையை உருவாக்க வேண்டும் எனக் கூறினார். 1925 - இல் Methodist Church இந்த பேச்சு வார்த்தைகளில் துணை குழுக்களை ஏற்படுத்தியது, இந்நிலையில் இங்கிலாந்து பாரளுமன்றத்தில் (A government report on India during 1929 -1930) இந்திய திருச்சபைகளில் ஒளிரும் ஐக்கியத்திற்க்கான நிலையை எடுத்துரைக்கப்பட்டன.

தொடர்ந்து திருச்சபை கோட்பாடுகள் சார்ந்த பல வேறுபாடுகள் குறித்த விவாதங்கள் நடைபெற்றன. பேராயராளுகையை ஏற்றுக் கொள்வது பற்றியும், ஆயர் அருட் பொழிவு மற்றும் தூய நற்கருணை வழிபாடுகள் பற்றி நீண்ட விவாதங்கள் நடந்தன. நிறைய இறையியல் சார்ந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. இதில் ஆங்கிலிக்கன் பேராயர்கள் அசரியா, மெட்ரேபேதலிட்டன்ற போஸ் வெஸ்ட் கோட், ஆர்ச்பிஷப் வில்லியம் டெம்பிள் ஆகியோர் ஆரோக்கியமான முடிவுகளை எடுத்தனர். இதனால் Anglicans மனம் சார்ந்து அருட் பொழிவு செய்யப்பட்டவர்களில் போரயாளுகை அல்லாதவர்களின் கரங்களிலிருந்து நற்கருணை பெறலாம் என சம்மதித்தனர். எனவே கூ ட்டு நற்கருணை தொழுகை 1932 பெப்ரவரி 15 முதல் 18 வரை Weslyan Synod Hall மெட்ராஸில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கஹஹ் அங்கத்தினர் ஆயர்கள், பேராயர்கள் (Methodist, Prebyterian, Congregationlis and Anglicans) கலந்துக் கொண்டனர். இது ஒரு மிகப் பெரிய ஐக்கிய பேச்சு வார்த்தையின் முன்னேற்றமாகும்.

## கூட்டுக் குழுக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் :

முதல் கூட்டுக் குழு 1929 - லும் அதனை தொடர்ந்து பல கூட்டுக் குழுக்கள் நடைபெற்றது. அதன் பின்னர் 1941 - இல் கூட்டுக் குழு ஐக்கியத்திற்கான ஏழாவது திட்டத்தினை நிறைவாக கொண்டு வந்தது. இந்த பேச்சு வார்த்தையில் சபைகள் தங்கள் ஒப்புதலை கொடுத்தது. 1941-இல் Methodist Church ஐக்கியத்திற்கான சாதகமான வாக்கினை செலுத்தி கூட்டுக் குழுவின் சட்டத்திற்கு சாதகமாக வாக்களித்தது, இந்நேரத்தில் SIUC நடத்திய 8 கவுன்சில்களில் 5 கவுன்சில்கள் ஐக்கியத்திற்கு சாதகமாக வாக்களித்தது. 1945 -ல் General Council of the Church of India, Burma and Ceylon நாக்பூரில் நடந்தது, இதில் நான்கில் மூன்று பகுதியினர் ஐக்கியத்திற்கு சாதகமாக வாக்களித்தனர் செப்டம்பர் 1946 - இல் ஆங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர்கள் மெட்ராஸ், டோர்கல், திருநெல்வேலி, திருவிதாங்கூர் மற்றும் கொச்சின் பேராயர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டனர், அதில் ஐக்கியத்தில் சேரக்கூடிய திருச்சபைகள் தங்கள் விருப்பத்தை தெரிவிக்க எழுதினர். இதனை

தொடர்ந்து SIUC இன் பொது மன்றம் 1946 - இல் தாம்பரத்தில் நடைபெற்றது. அதில் அமைப்பு ரீதியாக ஐக்கியத்தில் இணைவது என தீர்மானிக்கப்பட்டது. 1948 ஜனவரியில் General Council of the Church of India, Burma மற்றும் Ceylon இணைந்தது. ஆகஸ்ட் 1947 - இல் இந்தியா சுதந்திரம் பெற்று சுதந்திர போராட்டம் முடிவுக்கு வந்தது. இதே போன்று ஐக்கிய திருச்சபைக்கான பேச்சு வார்த்தைகளும் நிறைவு பெறக் கூடிய சூழ்நிலை வந்தது. தென்னிந்திய ஐக்கியத்தில் ஒவ்வொன்றாக இணைய முழு சம்மதத்தையும் தெரிவிக்க தொடங்கியது.

### தென்னிந்தியத் திருச்சபை உருவாக்கம் :

தென்னிந்திய திருச்சபை செப்டம்பர் 27, 1947-இல் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, இலங்கை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மாபெரும் ஐக்கியத் திருச்சபை உருவானது. மகாப்பெரிய இந்த நிகழ்வானது மெட்ராஸ் புனித ஜார்ஜ் பேராலயத்தில் வைத்து நடைபெற்றது. தென்னிந்திய திருச்சபை துவங்கும் போது 14 பேராயங்கள் காணப்பட்டது. அயராது உழைப்பிற்கு பின் 24 பேராயங்கள் உருவெடுத்துள்ளது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு திராவிட மொழிகள் பேசப்படுகின்றன. பொது மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

### முடிவுரை :

வேறுபாடான மரபுகளை களைந்து பல சபை பிரிவுகள் ஒன்றித்து தென்னிந்திய திருச்சபை (CSI) உருவான போது உலகம் அனைத்திலும் அது ஒரு முதல் முன் மாதிரி ஐக்கியத் திருச்சபையாக்கப்பட்டது. தென்னிந்திய திருச்சபையின் தோற்றம் தொடக்கத்தில் ஏற்பட்ட பெந்தேகோஸ்தே அனுபவத்திற்கு பின் கிறிஸ்தவ வரலாற்றில் நடந்த மாபெரும் நிகழ்வு ஆகும். தென்னிந்திய திருச்சபையில் உறுப்பினராயிருப்போரில் பெருவாரியோர் இந்தப் பெரும் பேறுக்காக மகிழ்கிறார்கள்.

That They all May Be One

**அருள்திரு. K. பிறின்ஸ் குமார்**

# 2017 Theme
# Pilgrimage Towards Forgiveness and Reconciliation



கீழகல்குறிச்சி ஆலய திருப்பீடம்

## பேராயர் சிந்தனைகள்

உலகத்தைப் பதப்படுத்துகின்ற உப்பு நீ
உப்பு சுவைதர ஒருவர் பயன்படுத்தவேண்டும்
நாம் சுவைதர ஆண்டவரால் பயன்படுத்தப்படவேண்டும்
சிலுவை அவமானமல்ல வெகுமானம்
நான்கில் ஒன்று அல்ல நானே வழி என்றார் இயேசு.

- Rt.Rev. Dr G. தேவகடாட்சம்

வெளியீடு
தொடர்புத்துறை
கன்னியாகுமரிப் பேராயம்

C.S.I,. Press,Mtm